# ருத்ரநேத்ரா

தெலுங்கில்:
எண்டமூரி வீரேந்திரநாத்
தமிழில்: கௌரி கிருபானந்தன்

# ருத்ரநேத்ரா

தெலுங்கில்:
எண்டமூரி வீரேந்திரநாத்
தமிழில்: கௌரி கிருபானந்தன்

# 1

“சார்!” என்றாள் அவள் தயங்கிக்கொண்டே. “நேரமாகிவிட்டது.”

பூஷணம் கண்களைத் திறந்தார். ஜன்னல் திரைச்சீலையின் இடுக்கு வழியாய் விழுந்த வெயிலுக்கு அவர் கன்னத்தில் லிப்ஸ்டிக் கரை மின்னியது.

அது ஒரு சின்ன அறை. கம்பார்ட்மெண்ட் போன்று இருந்தது. ஆனால் அதில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தனித்தன்மை இருந்தது. நடுவில் வட்ட வடிவத்தில் இருக்கும் கட்டில் மீது இருக்கும் நீலவண்ண காஷ்மீர் படுக்கை விரிப்பு, கீழே இருந்த ஜப்பான் தரைவிரிப்புடன் மேட்ச் ஆக இருந்தது.

கட்டிலுக்கு பக்கத்திலேயே இருந்த பிளவர் வேஸில் அன்றுதான் சுவிட்சர்லாண்டில் மலர்ந்த ஸ்னோ மலர்கள் இருந்தன. அந்த பூக்கள் ஜூரிச்சில் மாற்றப் பட்டிருந்தன.

பூஷணம் எழுந்து ப்ரிஜ்ஜிலிருந்து தண்ணீர் பாட்டில் எடுத்து இரண்டு மடக்கு குடித்தார். அந்த அறையை ஒட்டி குளியலறை இருந்தது. பாத்டப் நோக்கிப் போகும் முன் செகரெட்ரி வந்து அவருடைய டர்கி கவுனை நீக்கினாள்.

அவர் பெரும் ஆகிருதி கொண்டவர். ஆறடி உயரம் இருப்பார். காதருகில் தலைமுடி சிறிது நரைத்து இருந்தது அவ்வளவுதான். வயது ஐம்பது. அந்தப் பக்கம் திரும்பி இருந்தார். பரந்த முதுகு தென்பட்டுக் கொண்டிருந்தது.

“ஷல் ஐ பேத் யு சர்?” பணிவுடன் கேட்டாள்.

“நோ தாங்க்யூ” என்றபடி அவர் பாத்டப்புக்குள் இறங்கினார். இளம்சூட்டில் இருந்த நீரில் கலந்து இருந்த பாரிஸ் லவ் நறுமணத்தை நுகர்ந்தபடி இரண்டு நிமிடங்களில் குளியலை முடித்தார்.

அவருடைய செகரெட்ரி சூட் எடுத்து தயாராக வைத்திருந்தாள். அவர் அதை உடுத்திக்கொண்டு போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். ஜன்னல் திரைச்சீலையை விலக்கி வெளியில் பார்த்தார்.

அங்காங்கே மேகங்கள் தொலை தூரத்தில் தென்பட்டுக் கொண்டிருந்தன. வேகமாய் பின்னால் நகர்ந்து கொண்டிருந்தன.

“ஜின் சர்?”

அவருக்கு மாலையில் ஜின் குடிப்பது வழக்கம். ஆனால் இந்த முறை, “வேண்டாம் தேநீர்” என்றார்.

அவள் கொஞ்சம் தயங்கி, “இந்தியன்?” என்று கேட்டாள்.

“இல்லை. சைனீஸ் டீ.”

அவர் பழக்க வழக்கங்கள் எப்போது எப்படி இருக்குமோ அவருக்கே தெரியாது. அவள் பக்கத்தில் இருந்த வராண்டாவுக்குள் போனாள். பின்னால் கதவு சாத்திக்கொண்டது.

நியூயார்க் கேஸ் சம்பந்தப்பட்ட கோர்ட் பேப்பர்களை படிக்க தொடங்கினார். அதில் முக்கியமாக எதுவும் இல்லை. வெற்றிக்கு சம்பந்தப்பட்ட உற்சாகம் அது. சற்று நேரம் படித்துவிட்டு அந்த பேப்பர்களைப் பக்கத்தில் போட்டுவிட்டு எதிரே இருந்த இருக்கையின் மீது கால்களை வைத்துக்கொண்டு சிகாரை பற்ற வைத்தார்.

நான்கு பேர் உட்கார்ந்து கொள்வதற்கு வசதியாக இருக்கைகள் இருந்தன. நடுவில் இருந்த டீபாய் மீது அன்றைய தினத்து வெளிநாட்டு நாளேடுகள் இருந்தன. நியூயார்க் டைம்ஸ், லண்டன் ஹெரால்ட் போன்றவை. நியூயார்க் டைம்ஸ் முதல் பக்கத்தில் இடது புறம் இருந்த செய்தியின் மீது அவர் பார்வை விழுந்தது.

மெலிதாக சிரித்துக் கொண்டார்.

*****

விமான நிலையத்து கிரவுண்ட் கண்ட்ரோலருக்கு பைலட்டிடமிருந்து அனுமதிக்காக வயர்லெஸ் செய்தி வந்தது.

“வெதர் கிளியர் ஆக இருக்கு. நீங்கள் இறங்கலாம்” என்றார் அனுமதி கொடுத்து விட்டு.

பொழுது போக்குவதற்காக அருகில் வந்து உட்கார்ந்து இருந்த ஆஃப் ட்யூட்டி ஆபீசர் கேட்டார். “இப்போ எந்த விமானம் இருக்கு?”

“ஏர் இந்தியா இல்லை. சார்டர்ட் பிளையிட்.”

“சார்டர்ட் பிளையிட்டா?” வியப்புடன் கேட்டார். “சொந்தமாக விமானம் வைத்துக் கொண்டிருக்கும் ஆள் யார்?”

“பூஷணம்! ஃபார்மா ஸ்யூடிகல் இண்டஸ்ட்ரியலிஸ்ட்.”

வானத்தில் தொலைவில் மினுக் மினுக்கென்று விமானம் சிறிய புள்ளியாய் தென்பட்டுக் கொண்டிருந்தது.

*****

அவள் டீ கொண்டு வந்து கொண்டு வந்தாள்.

“இன்னும் எத்தனை நேரம்?” என்று கேட்டான்.

“இன்னும் ஐந்து நிமிடங்கள் சர்” என்றாள். அவன் ஜன்னல் திரைச் சீலையை விலக்கி திரும்பவும் பார்த்தான். மேகங்களுக்கு இடையே விமான மெதுவாக இறங்கி கொண்டிருந்தது. கீழே நகரம் தென்பட்டுக் கொண்டிருந்தது.

நகரத்தின் வடக்கு பகுதியில் இருந்த இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் மேலிருந்து விமானம் இறங்கிக் கொண்டிருந்தது. அந்த எஸ்டேட்டில் நான்கில் ஒரு பங்கு பேக்டரிக்கள் அவருடையவைதான்.

உயரமான பேக்டரி குழாய்லிருந்து கரிய நிறத்தில் புகை காற்றில் கலந்து மறைந்து கொண்டிருந்தது. புகையிலை புழுக்களை கொல்லும் இன்டாஜின் 5 மருந்து உற்பத்தி செய்யும் பேக்டரி அது.

அவர் ஜன்னல் திரைச்சீலையை மூடிவிட்டு பேப்பரை கையில் எடுத்துக் கொண்டார்.

செகரெட்ரி வந்து அவர் காலி செய்து விட்ட கோப்பையை எடுத்துச் சென்றாள். பைலட்டின் குரல் மைக்கில் பணிவுடன் ஒலித்தது.

“சர்! மேலும் இரண்டு நிமிடங்களில் நாம் இறங்கப் போகிறோம்.”

அவர் எழுந்து கட்டில் அருகில் சென்றார். அந்த அறைக்கும், பைலட்டின் காபினுக்கும் இடையே ஒரு சிறிய அறை இருந்தது. அதில் அவர் பி.ஏ. எயிடீ உட்கார்ந்து இருந்தான். பின்பக்கம் வாஷ்பேசின் அருகில் அவன் செகரெட்ரி கண்ணாடியில் பார்த்தபடி லிப்ஸ்டிக் சரி செய்து கொண்டிருந்தாள். சிவப்பு ஸ்கர்ட்டில் வெண்மையான அவள் உடல் மின்னிக் கொண்டிருந்தது.

ஜூரிச் லிருந்து இந்தியாவுக்கு ஏறக்குறைய எட்டு மணி நேரம் பயணம். நியூயார்க் லிருந்து கிளம்பி, ஜூரிச் சென்று சுவிஸ் வங்கியில் தன் வேலையை பார்த்துக்கொண்டு தாய் நாட்டுக்கு வந்து கொண்டிருந்தார். நியூயார்க் கோர்ட்டில் சாதித்த வெற்றி அவரை நல்ல மூடில் வைத்தது. அதனால் ஆறு மணி நேரமாக அவர் செகரெட்ரி திக்குமுக்காடி விட்டாள். சரியான உறக்கம் இல்லை.

அவருடைய பிரைவேட் கெஸ்ட் ஹவுஸ் மாடல் போலவே அந்த விமானத்தின் உள் பகுதி டிசைன் செய்யப் பட்டிருந்தது. சிறிய பெட்ரூம். முதலில் லவுஞ்ச. பின்னால் உணவு ஏற்பாடுகள், அவர் சம்பந்தப்பட்ட ஆட்கள் உட்கார்ந்து கொள்வதற்கு பக்கத்திலேயே இன்னொரு அறை.

அங்கு சூழ்நிலை ஒருமுறை உள்ளே நுழைந்த பிறகு அது விமானம் என்று நினைவுக்கு வராதபடிக்கு இருக்கும். பல பிரச்சினைகளை அப்போதைக்கப்போது மறந்து போகும் விதமாக ஏற்பாடு செய்து கொள்வது அவர் பழக்கம் அவருக்கு ஒரே மகள். அவள் பிறந்ததுமே மனைவி இறந்து விட்டாள்.

அந்த வேதனையை மறந்து போகும் விதமாக அவ்வப்பொழுது மாறிக்கொண்டு இருக்கும் அவர் மகள்

வயதை ஒற்ற புது புது செகரெட்ரிகள் செயல்பட்டு வந்தார்கள். லாயர்கள், டாக்டர்கள், அகௌண்டன்ட் எல்லோரும் அவருடைய பிரச்சனைகளை பகிர்ந்து கொள்வார்கள். அவர் செகரெட்ரியின் சம்பளம் மாநில கவர்னருடைய சம்பளத்தை விட இருமடங்கு என்பது உண்மை.

விமானம் தரையைத் தொட்டு சிறிய குலுக்கலுடன் நிற்பதற்கு ஆயத்தமாகி கொண்டிருந்தது.

அவர் எழுந்து கொண்டிருந்த போது பார்வை மற்றொரு முறை "நியூயார்க் டைம்ஸ்" நாளேட்டில் இடது பக்கத்தில் இருந்த செய்தியின் மீது படிந்தது.

"இந்திய மருந்து கம்பெனி எஜமானி பூஷணத்தின் மீது

நியூயார்க் ஃபெடரல் கோர்ட் கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது."

என்று தலைப்பு இருந்தது. அவர் இதழ்கள் மீது முறுவல் அப்படியே இருந்தது. அதற்குள் விமானம் நின்றது. "நோ ஸ்மோகிங்" என்ற விளக்கு அணைந்து விட்டது. அவர் தீக்குச்சியை பற்ற வைத்தார். ஆனால் சிகரெட்டை பற்ற வைப்பதற்காக அல்ல. நியூயார்க்லிருந்து இந்தியாவுக்கு வரும் வழியில் நடுவில் ஜூரிச்சில் நின்ற போது இந்தியாவுக்கு அண்டையில் இருக்கும் ஒரு வெளிநாட்டிலிருந்து வந்த வாழ்த்து தந்தியை எரித்து விடுவதற்காக.

அந்த தந்தியில், "நீங்கள் சாதித்த வெற்றிக்கு வாழ்த்துக்கள்." ஏஜெண்ட் க்யூ" என்று இருந்தது.

அந்த காகிதம் முழுவதும் எரிந்து சாம்பலாகும் வரையில் பொறுத்திருந்து பிறகு தன்னுடைய பிரைவேட் விமானத்திலிருந்து இறங்கினார் பூஷணம். இந்திய நாட்டிற்கு எதிரியான அந்த நாட்டின் ஏஜெண்ட் அனுப்பிய தந்தி தன்னிடம் இருப்பது நல்லது இல்லை. எந்த கோணத்திலும் சட்டத்திற்கு பிடிபட்டு விடாமல் இருப்பது அவருக்கு கை வந்த கலை.

*****

விமானம் நின்றதும் அதன் அருகில் வந்து நின்ற ரோல்ஸ் ராயிஸ் காரில் ஏறாமல், ஏர்போர்ட் லௌஞ்ச் வரையில் நடந்து போய்க் கொண்டிருந்த அவரை செகரெட்ரி வியப்புடன் பார்த்தாள்.

காரணம் முதலில் புரியவில்லை. இரண்டு நிமிடங்களுக்கு பிறகு தெரிந்தது.

விமான நிலையத்து லௌஞ்சில் பத்திரிக்கை நிருபர்கள் இருந்தார்கள். அவர் தன்னுடைய வெற்றியை இந்தியாவில் ஒவ்வொரு பத்திரிகையும் வெளியிட வேண்டும் என்று விரும்பினார். அதற்காகத்தான் தானே அவர்களிடம் சென்று கொண்டிருந்தார்.

பூஷணத்திற்கு பத்திரிக்கைகளுடன் நல்லுறவு இருந்து வந்தது. யாரை எப்படி வசப்படுத்திக் கொள்ள வேண்டுமோ அவருக்கு நன்றாகவே தெரியும். முறுவலுடன் கையை உயர்த்தினார். கேமராக்கள் கிளிக் என்றன. இறுதி கேமரா கிளிக் என்ற வரையில் கையை உயர்த்தியே வைத்து பிறகு இறக்கினார்.

“உங்கள் மீது கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டதில் எப்படி உணருகிறீர்கள்?”

கேள்விகள் தொடங்கி விட்டன.

“இறுதி வெற்றி தர்மத்திற்கு தான்.” முறுவலுடன் பதில் சொன்னார்.

“தனிப்பட்ட பகைமையினால்தான் உங்கள் மீது அமெரிக்காவில் குற்றம் சாட்டப்பட்டது என்று நீங்கள் கருதுகிறீர்களா?”

“வளர்ந்து வரும் மனிதன் மீது எல்லோருடைய பார்வையும் இருப்பது சகஜம் தானே.”

“அமெரிக்கன் ஆஸ்பத்திரிகளுக்கு நீங்கள் ஏற்றுமதி செய்த மருந்துகளில் கலப்படம் இருக்கிறது என்ற விஷயத்தை பற்றி தங்களுடைய கருத்து என்ன?

“அந்த கலப்படம் எங்கள் பேக்டரியிலோ, இந்தியாவிலேயே நடக்கவில்லை. மிகவும் மதிப்பு வாய்ந்த ஏற்றுமதி அது. அதை விரும்பாத வெளிநாட்டு கம்பெனிகளின் ஊடுருவல் அதில் இருப்பதாக கருதுகிறேன்.”

பூஷணம் முறுவலுடன் சொல்லிக் கொண்டிருந்தார். நாளைய முக்கியச் செய்திகளாக இவை பிரசுரிக்கப்படும் என்று அவருக்கு தெரியும். முந்தைய நாள் மாலையில் நிருபர்களுக்கெல்லாம் ஸ்காட்ச் பார்ட்டி வழங்கப்பட்டது.

பூஷணம் போன்ற தொழிலதிபர் இந்தியாவுக்கு பெருமை சேர்ப்பவர். அவருடைய பெருமைக்கு மசியைப் பூசவேண்டும் என்பது சிலரின் முயற்சி. அரசாங்கத்தில் ஊடுருவல் கூட இருக்கக்கூடும். எத்தனை கேசுகள் அநியாயமாக ஜோடிக்கப்பட்டாலும் அவரை கொஞ்சமும் அசைக்க முடியாது. இவ்விஷயத்தை விமான நிலையத்தில் நிருபர்கள் நேரில் கணடுவிட்டார்கள்...

போன்ற செய்திகள் மறுநாள் பேப்பரில் பிரசுரிக்கப் படுவதற்கு தயாராகி கொண்டிருக்கின்றன என்று அவருக்குத் தெரியும்.

“பாரத நாடு என்னுடையது. இதன் முன்னேற்றத்திற்காக, தொழில் நுட்ப வளர்ச்சிக்காக எனது உயிர் இருக்கும் வரையில் உழைத்துக் கொண்டிருப்பேன் என்று சொல்ல விரும்புகிறேன்” என்றார் கைகளை கூப்பியபடி, இனி கிளம்புகிறேன், வந்த வேலை முடிந்து விட்டது என்பது போல்.

“கலப்பப்படம் உங்கள் கம்பெனியில் நடக்கவில்லை என்று சொன்னீங்க. வெளிநாட்டு கோடவுனில் நடந்ததா?” யாரோ நிருபர் கடைசியாக கேட்டான்.

“ஆமாம். முன்பே சொன்னேன் இல்லையா. நாங்கள் இங்கிருந்து அனுப்பி வைத்த பிறகு வெளிநாட்டில் நடந்தது.”

“குண்டூர் ஜில்லா பருத்தி மற்றும் புகையிலை மருந்துகளின் கலப்படம் கூட வெளிநாட்டில் நடந்ததா?”

திடுக்கிட்டு அரைநொடியில் சுதாரித்துக் கொண்டார் பூஷணம். கடைக்கண்ணால் அந்த நிருபரை பார்த்தார். இளைஞன்! இருபத்தைந்து வயது இருக்கக்கூடும். உற்சாகம் இருந்ததே தவிர அனுபவம் தென்படவில்லை.

“புகையிலை மருந்துக் கலப்படம் என்ன?”

“பல மருந்துகளை தயாரித்து வருவதால் ஒருக்கால் நீங்கள் மறந்து போயிருக்க கூடும். இன்டாஜின் -5 புகையிலை கிருமி நாசினியை பற்றி கேட்கிறேன். அது உங்கள் தயாரிப்புதான்.”

“இன்டாஜின் -5 மிகவும் பெயர் பெற்ற கிருமி நாசினி.”

“சில ஆயிரக்கணக்கான விவசாயிகள் தம் சகலத்தையும் அடமானம் வைத்து போட்ட புகையிலை பயிர், இந்த பூச்சிகளால் காலணாவுக்கு பிரயோஜனம் இல்லாமல் போய் விட்டது.”

“ஆமாம். மிகவும் துரதிர்ஷ்டகரமான சம்பவம் அது.”

“சில குடும்பங்கள் ஒட்டுமொத்தமாக தற்கொலை செய்து கொண்டன.”

“அவர்களுக்கு என்னுடைய அழ்ந்த இரங்கல்.”

“ஆனால் மிஸ்டர் பூஷணம்! அவர்கள் பயன்படுத்தியது உங்கள் இன்டாஜின் -5.”

“அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?”

“விவசாய அதிகாரியின் அறிக்கை! இதைப் பாருங்கள். உங்கள் மருந்தை பயன்படுத்தியதால் கிருமிகள் நாசம் ஆகாமல் போனதுடன் மேலும் பெருகியதாக எழுதி இருக்கிறார்கள்.”

களுக்கென்று யாரோ சிரித்தார்கள். பூஷணம் தொலைவில் இருந்த பி.ஏ.வின் பக்கம் பார்த்தார். அவன்

நிருபர்களுக்கு இடையே வழியை ஏற்படுத்திக்கொண்டு அருகில் வர முயற்சி செய்து கொண்டிருந்தான். நிருபர்கள் மளமளவென்று எழுதிக் கொண்டிருந்தார்கள்.

“அந்த அறிக்கையை நான் படிக்கவில்லை. அரசாங்கத்திடமிருந்து என்னிடம் வந்ததும் பரிசீலிக்கிறேன்.”

“அது வந்து சேருவதற்கு ஒரு வருடம் ஆகும்.”

“அது என் தவறு இல்லை.” சிரித்தபடி அங்கிருந்து நகர முயன்றார்.

“உங்களுக்கு சுவிஸ் வங்கியில் கணக்கு இருக்கிறதா?”

பாம்பை மிதித்துவிட்டது போல் நின்றுவிட்டார் பூஷணம். அவர் முகத்தின் நிறம் மாறியது.

“இந்த சந்தேகம் உங்களுக்கு ஏன் வந்தது?” சிரிக்க முயன்றார்.

“நியூயார்க் லிருந்து வரும் வழியில் நீங்கள் ஜூரிச்சில் ஹால்ட் செய்தீர்கள் என்று, இங்கே விமான நிலைய அதிகாரியிடம் விசாரித்த பொழுது தெரிந்தது.”

“என் செகரெட்ரிக்கு ஸ்னோ மலர்கள் என்றால் விருப்பம். அதனால் ஜூரிச்சில் சிறிது நேரம் தங்கினோம்.”

“உங்கள் செகரெட்ரியை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மாற்றுவதில் உள் அர்த்தம் ஏதாவது இருக்கிறதா?”

அவர் முகம் சிவந்து விட்டது. நிருபர் வருத்தப்படுவது போல் முகத்தை வைத்துக்கொண்டான்.

“ஐ யாம் சாரி சர். அவள் விரும்பிய மலர்களுக்காக மட்டுமே விமானத்தை நிறுத்தி இருக்கிறீர்கள் என்றால், அவள் இனி பர்மனென்ட் செகரெட்ரியா? இல்லை மற்றவர்களை போல் இரண்டு வருடங்களில் போய் விடுவாளா என்று சந்தேகம்.”

“இது என்னுடைய பர்சனல் விஷயம்.”

“இதுவரையில் உங்கள் பர்சனல் செகரெட்ரியாக வேலை பார்த்த பதினாறு பெண்களில் ஒன்பது பேர் வேலை போன இரண்டு மாதங்களுக்குள் ஏதோ விதமாக இறந்து போனார்கள். இதைப்பற்றி உங்களுடைய விளக்கம்?”

பி.ஏ. அதற்குள் முன்னுக்கு வந்து, “சார்! உங்களுக்கு அவசரமான அப்பாயின்ட்மென்ட் இருக்கிறது. மறந்து விட்டீர்களா?” என்று பரபரப்புடன் அங்கிருந்து அழைத்துச் சென்று காரில் ஏற்றிவிட்டான்.

“யாரவன்?” காரில் ஏறிக்கொண்டே கேட்டார் பூஷணம்.

“கரஸ்பாண்டென்ட் சார்.”

“இரண்டாவது அருண்சௌரி என்று நினைத்து விட்டான் போலும். கொஞ்சம் கவனி.”

பி.ஏ. நின்றுவிட்டான். கார் நகர்ந்தது. பூஷணத்தின் அருகில் செகரெட்ரி அமர்ந்து இருந்தாள்.

“அந்த பையன் யாரோ ரொம்ப புத்திசாலியாய் இருக்கிறான் இல்லையா?” என்றார். அவள் பதில் எதுவும் பேசவில்ல, என்ன சொன்னால் எந்த ஆபத்து வந்து விடுமோ என்று.

“என்னைப் பற்றி நிறைய துப்பறிந்து இருக்கிறான். சுவிஸ் வங்கி கணக்கு, புகையிலை மருந்து, அறிக்கைகள், விமான நிலையத்தில் விசாரணை நிறையவே விவரம் சேகரித்து வைத்திருக்கிறான்.” யோசித்துக் கொண்டே சொன்னார்.

புதிதாக வரும் செகரெட்ரிக்கள், இறந்து போகும் பழைய செகரெட்ரிக்கள், ரகசியங்கள் தெரிந்த பெண்களை உயிருடன் விட்டு வைக்காமல் இருப்பது... இவற்றை பற்றியும் அந்த நிருபர் நிறைய விவரங்களை சேகரித்து இருக்கிறான். அதைப்பற்றி தன் பாஸ் ஏன் பேசவில்லை?

அந்தப் பெண் அப்படி நினைக்கவில்லை அப்படி யோசிப்பதற்குக் கூட பயந்தாள்.

கார் மெதுவாக போகத் தொடங்கியது. பூஷணத்தின் வீட்டின் முன்னால் வலதுபுறம் மக்கள் கும்பலாக கூடி இருந்தார்கள்.

“என்ன ஆச்சு டிரைவர்?” கேட்டார்.

“ஆக்சிடெண்ட ஆகியிருக்கும் போலிருக்கு சார்.”

அந்த பக்கத்திலிருந்து போலீஸ்காரரர் ஒருவர் பரபரப்புடன் வந்து கொண்டிருந்தார். பூஷணத்தை பார்த்ததும் சல்யூட் செய்தார். “சாரி சார். இந்தப் பக்கம் ட்ராபிக் க்ளோஸ் செய்திருக்கிறோம். ஸ்கூட்டர் ஆசாமி இறந்து விட்டான். ஹிட் அண்ட் ரன் கேஸ்.”

கார் பின்பக்கம் திரும்புவதற்காக நகர்ந்து கொண்டிருந்தபோது தன் வீட்டின் முன்னால் நின்று கொண்டிருந்த பி.ஏ.வைப் பார்த்தார். அவன் லேசாக தலையை உயர்த்தி குறிப்பாக உணர்த்தினான்.

“பாவம்! இறந்து போனது யாரு?” போலீஸ்காரரிடம் கேட்டார்.

“ஏதோ பத்திரிகையின் கரெஸ்பாண்டென்ட் சார். இளைஞன், வயது அதிகம் இல்லை. உங்கள் வீட்டின் முன்னால் இறந்து போனதால் உங்களுக்கு இந்த அசௌகரியம் ஏற்பட்டு விட்டது.”

“அதனால் என்ன? இந்த பக்கம் ரூட் பிளாக் ஆகி விட்டது. அந்தப் பக்கமாக போகிறேன். அவ்வளவுதானே.”

கார் வேகத்தை எட்டியது. அவன் பக்கத்தில் இருந்த செகரெட்ரி கல்லாகச் சமைந்து விட்டாள். கூடியிருந்த மக்களின் கால்களுக்கு நடுவிலிருந்து அந்த பையனின் உடல், தலையிலிருந்து வழிந்த இரத்தம் அவளுக்கு தென்பட்டது.

“கொஞ்சம் பாரு” என்று பூஷணம் கொடுத்த குறிப்பு, அவர் காரில் தன் வீட்டுக்கு வருவதற்குள், அந்த கரெஸ்பாண்டென்ட் எந்தப் பக்கம் போவான் என்ற விசாரணை நடந்து, விபத்துக்காக லாரி ஏற்பாடு, பூஷணத்தின் குறிப்பு அமல் படுத்தப் படுவது…

அவளை திகைப்பில் ஆழ்த்தி விட்டன. தன் எஜமானி எவ்வளவு பெரிய ஆள் என்று அவளுக்குப் புரிந்தது.

அவருடைய பெருமையில் தனக்குத் தெரிந்தது கால் பங்குதான் என்று அவளுக்கு தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால் தன்னுடைய பாய் பிரெண்டிடம் அந்த மாலை வாய தவறி பேசி இருக்க மாட்டாள். தன் கையால் தானே மரணத்தை வரவேற்று இருக்க மாட்டாள்.

*****

இந்தியாவுக்கு இரண்டாயிரம் மைல் தொலைவில் .. அதே நாளில்...

பாகிஸ்தான் ஜெனரல் இயாசத் கான் தன்னுடைய இருக்கையில் பொறுமையின்றி நெளிந்தான். ராணுவ அதிகாரி சோயப் அஹ்மத், செகண்ட் லெப்டினென்ட் கரீமுல்லா பேக், டிபென்ஸ் அறிவுரையாளர் ரெஹமான் அவனைச் சுற்றிலும் உட்கார்ந்து இருந்தார்கள்.

நாட்டின் ஜனாதிபதி விமான விபத்தில் இறந்து போன பிறகு அந்த நாட்டில் சூழ்நிலையில் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்தன ஜனநாயகம் வருவதில் ராணுவத்திற்கு கொஞ்சமும் விருப்பம் இல்லை. அத்துடன் கூப் நடந்தது. ஜெனரல் இயாசத் கான் பதவிக்கு வந்தான்.

இறந்து போன ஜனாதிபதி அளவுக்கு புத்திசாலி இல்லை தற்போதைய ஜெனரல் இயாசத் கான். ஆப்கான் பெயரைச் சொல்லி அமெரிக்காவின் உதவியைப் பெற முடியவில்லை. ரஷ்யாவுடன் பகைமை இல்லாமல் பார்த்துக்கொள்ள தெரியவில்லை.

நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து கொண்டிருந்தது. எல்லாவற்றையும் விட முக்கியமாக ஒடுக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மக்களுக்கு இடையே கலவரத்தை தூண்டி விட்டுக் கொண்டிருந்தன. எங்கே பார்த்தாலும் ஜனநாயகத்தின் பெயர் ஒலித்துக் கொண்டிருந்தது. இந்த சமயத்தில்

மக்களின் கவனத்தை திசை திருப்ப ஒரே ஆயுதம் யுத்தம்!

இந்திய நாட்டு எல்லை பிரதேசத்தில் கலவரத்தை உண்டாக்கி போர் சூழ்நிலையை உருவாக்கினால் தவிர தன்னுடைய அதிகாரத்திற்கு ஆபத்து வருவது நிச்சயம்.

ஆனால் இதில் இன்னொரு ஆபத்து இருக்கிறது. இன்னும் பத்து வருடங்கள் போனாலும் (அணுகுண்டு தயாரிக்கப்பட்டால் அது வேறு விஷயம்) இந்திய ராணுவத்தை எதிர்கொள்வது கஷ்டம். ஏறக்குறைய நான்கு மில்லியன் ராணுவ வீரர்கள் கொண்ட அந்த ராணுவ தளத்தை ஏதோ ஒரு விதத்தில் பலவீனமடைய செய்தால் தவிர போர் பற்றி அறிவிப்பு செய்ய முடியாது. அதற்கும் முன்னால் அந்த நாட்டின் ராணுவ திறமையை எடைபோட வேண்டும். அந்த வேலைக்குத் தகுந்தவன் ஏஜெண்ட் க்யூ ஒருத்தன் தான்.

ஜெனரல் இயாசத் கான் மற்றொரு முறை இருக்கையில் நெளிந்தான்.

ஏற்கனவே கால்மணி நேரம் கடந்து விட்டது. ஏஜெண்ட் க்யூ இன்னும் வர வில்லை. ராணுவ உயர் அதிகாரி, ஜனாதிபதி, நாட்டையே கட்டுபடுத்த கூடிய சர்வாதிகாரியை பதினைந்து நிமிடங்கள் காத்திருக்க வைக்க கூடிய நபர் ஏஜெண்ட் க்யூ கதவைத் திறந்துகொண்டு அப்பொழுதுதான் உள்ளே வந்தான். அப்போது நேரம் ஆறுமணி பதினைந்து நிமிடங்கள் ஆயிற்று.

ஒரு அமெரிக்க பெண்ணுக்கும், பட்டான் ஒருவனுக்கும் பிறந்தவன் ஏஜெண்ட் க்யூ. உண்மையான பெயர் யாருக்கும் தெரியாது. ஆப்கானிஸ்தானில் சோவியத்தின் முக்கியத்துவத்தை குறைப்பதற்காக நடந்த ஆபரேஷன் ரெஸ்க்யூவை வெற்றிகரமாக முடித்ததிலிருந்து அவனை ஏஜெண்ட் க்யூவாக குறிப்பிட்டு வந்தார்கள்.

ஆறரை அடி உயரம். புலியை விட சுறுசுறுப்பான கண்கள். அந்த கண்களில் புத்திசாலித்தனம், அதையும்

மிஞ்சிய வீரம், இறுகிய இதழ்களுக்கு பின்னால் பிடிவாதம் அவனுடைய அணிகலன்கள். அவன் முகத்தில் எந்த உணர்வுகளும் தென்படாது. எதிராளியின் மரணத்தை கூட முறுவலுடன் பார்ப்பது அவன் வழக்கம்.

“உட்கார் மிஸ்டர் க்யூ. நீ அரைமணி நேரம் தாமதமாக வந்திருக்கிறாய்.”

அவன் உட்காரும் போது டிபென்ஸ் அறிவுரையாளர் சொன்னான்.

“ஆமாம். அவசரமாக ஜூரிச்சுக்கு ஒரு தந்தி கொடுக்க வேண்டி இருந்தது. இந்திய நாட்டைச் சேர்ந்த பூஷணத்திற்கு” என்றான்.

செகண்ட் லெப்டினென்ட் கரீமுல்லா பேக் ஏளனமாய், “ஜனாதிபதியின் அழைப்பை விட அந்த தந்திதான் முக்கியமாகி விட்டதா?” என்று கேட்டான்.

“ஒரு விதமாகச் சொல்லப் போனால் அப்படித்தான் சார்” என்றான் க்யூ. அவன் வார்த்தைகளில் அலட்சியம் இல்லை. ஆனால் லேசான முறுவல் இருந்தது. “இங்கே நாமெல்லோரும் கூடி இருப்பது இந்திய நாட்டின் ராணுவத்தை எப்படி பலவீனப்படுத்துவது என்று திட்டம் தீட்டுவதற்காக. அதற்கு சரியான ஒரே ஒரு ஆயுதம் பூஷணம்.”

ராணுவ அதிகாரிகள் நான்கு பேரும் திடுக்கிட்டார்கள். தமக்கு மட்டுமே இந்த கூட்டத்தின் விவரங்கள் தெரியும் என்று இதுவரையில் அவர்கள் நினைத்திருந்தார்கள். அவன் அப்படிச் சொன்னதும் அவர்களுக்குள் கலவரத்தை ஏற்படுத்தியது.

இயாசத் கான் கலவரத்தை மறைத்துக்கொண்டே, “மிஸ்டர் க்யூ! அதற்கு ஐந்து நிமிடங்கள் போதும். மேலும் இருபத்தைந்து நிமிடங்கள் தாமதமாக வந்திருக்கிறாய்” என்றான்.

“ஆமாம் சார். இன்று இரவு உங்கள் மீது நடக்கப் போகும் சதியின் விவரங்களைத் தெரிந்து கொள்வதில் தாமதமாகி விட்டது.”

குண்டு விழுந்தது போல் நால்வரும் அதிர்ந்து விட்டார்கள்.

“வாட் ஆர் யு டாக்கிங்?” ஜெனரல் கேட்டான்.

“உங்கள் அசிஸ்டென்ட்ஸ் மூவரின் ஒருத்தன் இன்று இரவு ராணுவத்தில் புரட்சியை ஏற்படுத்த திட்டம் தீட்டி இருக்கிறான், உங்களைக் கொல்லுவதின் மூலமாக.” அமைதியான குரலில் சொன்னான் க்யூ.

ஆர்மி சீஃப், டிஃபென்ஸ் அட்வைசர், செகண்ட் லெப்டினென்ட் கரீமுல்லாவின் உடல்கள் வியர்வையால் நனைந்து விட்டன. ஜெனரல் இயாசத் கானின் கை அவசர சமயத்தில் உபயோகிக்கும் பட்டனை நோக்கிப் போயிற்று. அதைப் பார்த்து திடீரென்று கரீமுல்லா பேக் இருக்கையை விட்டு மின்னல் வேகத்தில் எழுந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த புரட்சித் தலைவன் ஜெபியிலிருந்து துப்பாக்கியை எடுத்தது, ஜெனரல் இயாசத் கானை குறி பார்த்தது நடந்து விட்டது.

“டாம்!” என்ற சத்தத்துடன அந்த அறையின் சுவர்கள் அதிர்ந்தன.

கரீமுல்லா பேக் மூட்டையைப் போல் தரையில் சரிந்தான்.

எப்பொழுது எடுத்தானோ தெரியாது. அவனை விட வேகமாய் பிஸ்டலை எடுத்து ஏஜெண்ட் க்யூ அவனை சுட்டு விட்டான். சரியாக இரு புருவங்களுக்கு நடுவில் குண்டு துளைத்துக்கொண்டு பாய்ந்ததில் அந்த இடத்திலேயே மரணமடைந்தான் அந்த புரட்சித் தலைவன்.

“தாங்கயூ ... தாங்க்யூ மிஸ்டர் க்யூ” என்றான் இயாசத் கான்.

“இட்ஸ் ஆல்ரைட் சர்.”

பிணத்தை அப்புறப்படுத்த ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. மீதி இருவரும் அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை. யுத்தத்தில் எத்தனையோ அனுபவம் இருந்த அவர்களை இந்தத் திடீர் நிகழ்வு

பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஏஜெண்ட் க்யூவை அற்புதமான மனிதனை பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்து விட்டார்கள்.

“போய் வருகிறேன் சர். இன்று இரவு இந்தியாவுக்கு செல்கிறேன். சில நாட்களில் நாம் இந்தியாவுடன் வலிய சண்டையை தூண்டி விடப் போகிறோம். சில மாதங்களில் அது யுத்தமாக மாறப் போகிறது. தயாராக இருங்கள்”

கதவைத் திறந்துகொண்டே அவன் முடித்தான். “ஜெயிப்பதற்காக.”

## 2

இந்தியா...

ஆகஸ்ட் 22, திங்கட் கிழமை.

கிரைம் இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்மென்ட் டைரக்டர் தன் அறையில் எரிச்சலுடன் நடைபயின்று கொண்டிருந்தார். அவருடைய எரிச்சலுக்கு காரணம் இல்லாமல் இல்லை. பூஷணத்தை எப்படி ஜெயில் கம்பிகளை எண்ண வைப்பது என்று அவர் யோசித்துக் கொண்டிருந்தார். ஒரு மணி நேரத்திற்கு முன்னால் அவர் தன்னுடைய அலுவலகத்திற்கு மூன்று வெவ்வேறு டிபார்ட்மென்ட் லிருந்து சம்பந்தபப்ட்ட உயர் அதிகாரிகளை வரவழைத்தார். நாட்டின் இறக்குமதியை மேற்பார்வையிடும் அதிகாரி, டிரக் கன்ட்ரோலர், ஹோம் செகரெட்ரி.

பூஷணத்தின் இறக்குமதி சரக்குகளை, நாட்டில் அவருடைய விற்பனைப் பொருட்களை தாம் எந்த விதமாகவும் தடை செய்ய முடியாது என்றும் முதல் இரு அதிகாரிகளும் தம் இயலாமையை வெளிப்படுத்தினார்கள். ஹோம் செகரெட்ரியும் இதே கருத்தைதான் சொன்னார். ஏற்கனவே பூஷணத்தை ஃபெரா, மீசா வின் கீழே இரண்டு முறை அரெஸ்ட் செய்திருக்கிறார்கள். இன்னும் ஒரு முறை அந்த முயற்சி செய்தால் அவர் அரசாங்கத்தின் மீது கோடி ரூபாய்க்குக்

குறையாமல் மானநஷ்ட வழக்கு போடக் கூடும் என்றும், தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் கூட பிரச்சனையை எழுப்பக் கூடும் என்றும், அவரை எந்த விதமாகவும் எதுவும் செய்ய முடியாது என்று ஹோம் செகரெட்ரி தெரிவித்தார்.

கிரைம் இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்மெண்ட் சீஃப் டைரக்டர் பகீரதனின் எரிச்சலுக்கு அதுதான் காரணம்.

“இன்சல்ட் ... இன்சல்ட்” என்று புலம்பிக்கொண்டே பகீரதன் டி.வி.யை ஆன் செய்தார். செய்திகள் வந்து கொண்டிருந்தன. வெந்த புண்ணில் வேலை பாய்ச்சியது போல் பூஷணம் விமான நிலையத்தில் கொடுத்த ஸ்டேட்மெண்ட் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. “இது தன்னுடைய தாய்நாடு என்றும், இந்த நாட்டிற்காக உயிரையும் கொடுக்க தயாராக இருப்பதாகவும், அமெரிக்காவில் கேசு தள்ளுபடி செய்யப்பட்டு தாய் நாட்டிற்கு திரும்பி வந்த பூஷணம் நிருபர்களிடம் தெரிவித்தார்” என்று செய்தி வாசிப்பாளர் சொல்லிக்கொண்டு போனார்.

ஒரு கிரிமினல் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டதோடு அல்லாமல், அது ஒரு மாபெரும் வெற்றியாக நாடு முழுவதும் பிரச்சாரம் செய்து கொள்வதற்கு அரசாங்கத்திற்கு சம்பந்தபட்ட தொலைகாட்சியைப் பயன்படுத்திக் கொள்வது!

ஏதோ ஒரு சாக்கு வைத்துக்கொண்டு அண்டையில் இருக்கும் எதிரி நாட்டிற்கு அடிக்கடி போய் வருவது, இந்த நாட்டை பிறந்தவீடாக பயன்படுத்திக்கொண்டு தன்னுடைய வேலைகளை தொடருவது....

டிபார்ட்மெண்டின் இயலாமைக்கு எடுத்துகாட்டு இது.

இனியும் பொறுத்துக்கொள்ள முடியாமல் இண்டர்காமில் செகரெட்ரிக்கு ஏதோ குறிப்பைத் தரப் போனவர் ஒரு நிமிடம் தயங்கினார். தான் எடுத்துக் கொண்டிருக்கும் இந்த முடிவு சரியானது தானா என்று யோசித்தார்.

பிரதமரின் மீது கொலை முயற்சிகள், இன்டர்போல் ஒற்றர் நிறுவனங்களை செயலிழக்கச் செய்வது போன்ற சர்வ தேச கேசுகளைத் தவிர சாதாரண கேசுகளில் பங்கு எடுத்திராத ஸ்பெஷல் சீக்ரெட் ஏஜெண்டிடம் இந்த உள்நாட்டு விவகாரத்தை ஒப்படைப்பது சரிதானா என்று.

“வெளியில் இருக்கும் பாம்பை விட உள்ளே இருக்கும் புழு ஆபத்தானது” என்று நினைத்து ஒரு முடிவுக்கு வந்தவராய் இண்டர் காமில் செகரெட்ரியிடம், “ஏஜெண்ட் நேத்ராவை கூப்பிடு” என்றார்.

*****

விசாலமான ஹால்.

தரையில் கோடுகள் கட்டம் போட்டது போல் இருந்தன.

ஒரு பக்கம் பாக்ஸிங் பேக்கை வைத்துக்கொண்டு ஒரு ஆள் பஞ்ச் கொடுத்துக் கொண்டிருந்தான். சிலர் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். ஒரு மூலையில் சிறிய காபி பார் இருந்தது. சிலர் அங்கே நின்றபடி ஸ்நாக்ஸ் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். இண்டர் போலின் பயிற்சிக் கூடம் அது. சுவற்றுக்கு ஐந்தடித் தொலைவில் ஒரு ஸ்டாண்ட் இருந்தது. அதன் மீது ஒரு காகிதம், நடுவில் சிறிய கறுப்புப் புள்ளி சுற்றிலும் வளையமாய் கோடுகள் இருந்தன.

சிறிய பிஸ்டல் சத்தம். காகிதத்தின் மீது இருந்த கறுப்புப் புள்ளியைத் துளைத்துக்கொண்டு புல்லெட் போயிற்று.

பிறகு வரிசையாய் மூன்று முறை பிஸ்டல் சத்தம் கேட்டது. வேடிக்கை என்னவென்றால் அந்த காகிதத்தின் மீது வேறு எந்த இடத்திலும் ஓட்டை விழவில்லை.

மிகச் சிலருக்குத்தான் அந்த வித்தை கைவசமாகி இருக்கும். முதல் புல்லெட் துளைத்த ஓட்டையிலிருந்தே மற்ற புல்லெட்களை ஷூட் செய்வது.

“கங்கிராட்ஸ்!” என்றான் பாஸ்கர் அருகில் வந்துகொண்டே. பாஸ்கர் கையில் அவன் ஷூட் செய்த

காகிதம் இருந்தது.

அவன் சிரித்துவிட்டு சும்மா இருந்தான். நிச்சயமாக அது திருப்தியை அளித்த ஷூட்டிங்.

அவன் உயரம் ஐந்தடி எட்டு அங்குலம். சிறுத்த இடை, மேலே விசாலமாய் பரவிய மார்பு. எந்தக் கேள்விக்கும் நகைச்சுவையாய் பதிலளிக்கும் ஸ்பானடேனியடி. இவை எதுவும் இல்லை அவனுக்கு வசீகரம் ஏற்படுத்துபவை, அவன் கண்கள்!

தாய் தந்தை அவனுக்கு பொறுத்தமான பெயரைத்தான் சூடி இருந்தார்கள். நேத்ரா!

பாஸ்கர் கேட்டான். “இன்றைய பேப்பரை படித்தாயா?”

“படித்தேன்.”

இன்டர்போலுக்கு எல்லா வெளிநாட்டு பேப்பர்களும் வரும்.

“ஏஜெண்ட் க்யூ ஜனாதிபதியைக் காப்பாறிய விதம் ரொம்ப த்ரில்லிங் ஆக இருக்கு இல்லையா?”

நேத்ரா உடனே பதில் அளிக்கவில்லை. யோசிப்பது போல் சொன்னான். “விதம் வரை நன்றாகத்தான் இருக்கிறது. பகைவனின் கையில் ஆயுதம் வெடிக்கும் முன்பே அவன் புருவங்களுக்கு நடுவில் சுடுவது. ஆனால் அதுபோன்ற சூழ்நிலையில் கையும், மூளையும் ஒரே சமயத்தில் வேலை செய்ய வேண்டும். அந்தப் பரபரப்பில் அந்த ஏஜெண்டுக்கு யோசிக்கும் திறன் குறைந்திருக்கும் என்பது என் சந்தேகம்.”

“ஏன் அப்படி?”

“சுடுவது என்றால் தோள்மீதோ, கையின் மீதோ சுட்டு இருக்கலாம் இல்லையா? ஒரு புரட்சிக்காரனை கொல்லுவது மிகவும் சுலபம். ஆனால் அவனை உயிரோடு பிடித்து இருந்தால் அவன் பின்னால் யார் யார் இருக்கிறார்கள் என்று தெரிந்திருக்கும் இல்லையா?”

பாஸ்கர் வெட்கமடைந்தான். “உண்மைதான். அவ்வளவு தூரம் யோசிக்கவில்லை. அவன் சுட்ட விதத்தைப் படித்து த்ரில் ஆகி விட்டென்” என்றவன் சற்று நிறுத்தி, “நீயும் ஏஜெண்ட் க்யூவும் மோதிக்கொண்டால் எப்படி இருக்குமோ பார்க்க வேண்டும் என்பது என்னுடைய நெடுநாளைய விருப்பம். நேத்ரா! நீ புத்திசாலிதான். ஆனால் அவன் நிச்சயமாக உன்னைவிட பலம் வாய்ந்தவன்” என்றான்.

“ஆமாம். பட்டான் இனத்தைச் சேர்ந்தவன் இல்லையா?” சுருக்கமாகச் சொன்னான் நேத்ரா.

“உனக்கு ஏஜெண்ட் க்யூவின் மீது நல்ல அபிப்பிராயம் இல்லை போல தோன்றுகிறதே?” என்றான் பாஸ்கர் முறுவலுடன்.

“உன் கேள்வி எனக்குப் புரிகிறது. ‘நீ உன் நாட்டை எந்த அளவுக்கு நேசிக்கிறாயோ அவன் தன்னுடைய நாட்டை அந்த அளவுக்கு நேசிக்கிறான். அவன் மீது உனக்கு ஏன் இவ்வளவு பகைமை?’ இதுதானே உன் கேள்வி. இதே கருத்தை ஏற்கனவே இரண்டொரு முறை வெளிபடுத்தி இருக்கிறாய்.”

பாஸ்கர் தலையை அசைத்தான். நேத்ரா யோசனையுடன் சொன்னான்.

“நான் என் நாட்டை காப்பாற்றுவதற்காக என் தொழிலை நேசிக்கிறேன். அவன் தன் எதிரி நாட்டை நாசமாகுவதற்காக தன் தொழிலை நேசித்து வருகிறான்.”

“எனக்குப் புரியவில்லை.”

“என்னுடையது டிபென்சிவ் ரோல். எதிரி நாட்டின் அணைக்கட்டுகளை தகர்க்கச் சொல்லி நம் அரசாங்கம் என்னை அனுப்பி வைப்பதாகச் சொன்னால் ஒருக்கால் நான் என் வேலையை ராஜினாமா பண்ணுவேனாய் இருக்கும். அவனுடையது அபென்சிவ் ரோல். ஒரு லட்சம் இந்தியர்களை கொல்லும் திட்டத்தை அவன் அரசாங்கம் அவனிடம் ஒப்படைத்தால் சந்தோஷமாக அந்த வேலையை ஏற்றுக்கொள்வான். அதுதான் வித்தியாசம்.”

“அது தவறு என்கிறாயா?”

“நிச்சயமாக தவறுதான்.”

“நேத்ரா! எதிர் காலத்தில் உன்னைப் போல் நான் சீனியர் ஏஜெண்ட் ஆகலாம். இண்டர்போல் விஷயமாக வெளிநாடுகளுக்கு போக நேரலாம். ஒரு ஆபரேஷனை முடிப்பதற்காக அந்த நாட்டில் சில அப்பாவிகளைக் கொல்ல வேண்டி வரலாம். அது தவறு என்கிறாயா?”

“எது தவறு எது தவறு இல்லை என்பது மனதிற்கு சம்பந்தப்பட்டது. வெளிநாட்டு தூதரகத்தில் நாம் திருடுவதற்காக போனபோது அங்கே வேலை செய்பவன் நம் கண்ணில் படலாம். அவனைக் கொல்லுவது மனிதத்தன்மை அல்ல. ஆனால் கொல்லவில்லை என்றால் அந்த நாட்டில் யுத்தம் உருவாகும் சூழ்நிலைக்கு வழிவகுக்கலாம். நான் சொன்ன அணைக்கட்டு உதாரணத்திற்கும் உன் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.”

“என்ன படித்திருக்கிறாய் நேத்ரா நீ?”

நேத்ரா சிரித்தான். “ரொம்ப குறைவுதான். பி.ஏ. ஹிஸ்டரி.”

“பின்னே இந்த லைனில் எப்படி வந்தாய்?”

“என் தாத்தாவின் எண்ணம் இது. என் இரண்டாவது வயதில் என் தந்தை இறந்து விட்டார். தாத்தாதான் என்னை வளர்த்தார். ராணுவத்தில் பணி புரிந்தவர். இந்தக் காலத்து மனிதர்கள் அவரைப் பார்த்து நிறைய கற்றுக்கொள்ள வேண்டும். முக்கியமாக தாய் மார்கள்! குழந்தைகள் நர்சரி பள்ளியில் படிக்கும் நாட்களில் தொடங்கி அவர்களை டாக்டராகவோ, இஞ்ஜினியராகவோ ஆக்கும் அரக்கத்தனமான முயற்சியில் படிப்பைத் தவிர மற்ற வழிகளை எல்லாம் மூடி விடுவார்கள். குழந்தைக்கு பத்து மதிப்பெண்கள் குறைந்து போனால் பிரளயம் வந்தாற்போல் அழுது தீர்க்கும் பாட்டியை திட்டித் தீர்ப்பார். மேலோட்டமாக பார்க்கும் போது சின்ன விஷயமாக இருந்தாலும்,

மனரீதியான வளர்ச்சிக்கு துணை புரியும் விதமாக காரியங்களை செய்து வந்தார்.”

“எப்படிப்பட்ட காரியங்கள்?”

“கோடை விடுமுறையில் வெளி ஊர்களுக்கு அனுப்புவது. அது திருப்பதியாக இருக்கலாம். காஷ்மீராகவும் இருக்கலாம். அத்தனை சிறிய வயதில் தன்னையொற்ற பசங்களுடன் வெளி ஊர்களுக்குப் போவது சிறுவனுக்கு தன்னம்பிக்கையைக் கொடுக்கும். இப்படித்தான் யோசிப்பார் அவர். சிறுவயதிலேயே கராத்தே கற்றுக்கொடுத்தார். பட்டப்படிப்பு முடிந்ததும் இந்த வேலை கிடைத்த போது என்னைவிட அதிகமாக அவர்தான் சந்தோஷப்பட்டார்.”

“உனக்கு சந்தோஷமாக இல்லையா?”

நேத்ரா சிரித்தான். “அந்த நாட்களில் சீக்ரெட் ஏஜெண்ட் என்றால் மகிழ்ச்சி தரக்கூடிய சில கட்டுக்கதைகளை நம்பி வந்தேன். அந்த தவறான கருத்துக்கள் எல்லாம் வேலையில் சேர்ந்த சில நாட்களிலேயே நீங்கி விட்டன. தவறு என்னுடையது அல்ல. கற்பனை படைப்புகளைத் தரும் எழுத்தாளர்களுடையது” என்றவன் இறுதியில், “உன்னைப் போல்” என்று முடித்தான்.

பாஸ்கர் சிரித்தான். அவன் சமீபத்தில்தான் எழுதத் தொடங்கி இருக்கிறான். நான்கைந்து படைப்புகள் வெளியாகி இருந்தன. புதிதாக இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த எல்லா இளம் எழுத்தாளர்களைப் போலவே அவன் உலகமே எழுத்துகளாக இருந்தன. மாலை ஆனதுமே அந்த உலகத்திற்குள் போய் விட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருபான். ஒரு கப் தேநீர் குடித்துவிட்டு இரவு வெகு நேரம் வரையிலும் நண்பர்களுடன் வெட்டியாய் பேசிக்கொண்டிருப்பது அவனுடைய பொழுது போக்கு. அவனுக்கு ஒரு தங்கை இருக்கிறாள். பெயர் கல்யாணி. கண்பார்வை இல்லாதவள். இருவரும் அனாதைகள்தாம். இருவரையும் கஜபதி ராவ் ஆதரித்து வளர்த்தார்.

வாழ்க்கையிடமிருந்து அவன் இன்னும் பாடம் எதுவும் கற்றுக்கொள்ளவில்லை. தொழிலில் இன்னும் காலை ஊன்றி கொள்ளவில்லை. அந்த சமயத்தில்தான் விதி கொடூரமாக பழி வாங்கி விட்டது.

அவன் ஏதோ சொல்ல வந்தான்.

அதற்குள் அஹோபிலா அங்கே வந்தாள். அவள் டிபார்மென்ட் ரிகார்ட் செக்ஷனில் வேலை பார்த்து வருகிறாள். அளவுக்கு அதிகமான உயரம். உயரத்திற்கு ஏற்ற பருமன். சுபாவத்தில் நல்லவள்.

“டைரக்டர் அழைக்கிறார் போலும் நான் வருகிறேன்.” நேத்ரா சொன்னான்.

“டைரக்டர் உன்னைத்தான் அழைக்கிறார் என்று எப்படி தெரியும்?”

“ரிகார்ட் செக்ஷனுக்கு கொஞ்சமும் சம்பந்தம் இல்லாத வேலைக்காக தானே நேரில் வந்தாள் என்றால் எனக்காகத்தான் இருக்கும்.” முறுவலுடன் சொன்ன நேத்ரா அவளருகில் சென்றான்.

*****

பகீரதன் பின்னால் சாய்ந்து உட்கார்ந்து, “உட்கார்” என்றார். “என்ன? நேற்று காரை வேகமாக ஒட்டி போலீஸ் கேஸில் மாட்டிக்கொண்டாயாமே?”

நேத்ரா உள்ளங்கையைப் பார்த்தபடி உட்கார்ந்தான்.

“உன் பக்கத்தில் உட்கார்ந்து இருந்த அழகான பெண் யார்?”

“உண்மையிலேயே நீங்கள் பெரிய ஆள்தான் சார். இந்த டிபார்ட்மென்ட் டைரக்டர் என்றால் உங்களைப் போல் இருக்க வேண்டும். இங்கே நாற்காலியில் உட்கார்ந்தபடியே, எங்கேயோ போலீசார் என் காரை பிடித்ததையும், பக்கத்தில் பெண் ஒருத்தி இருந்த விஷயத்தையும் தெரிந்து கொண்டீர்கள் என்றால் ஹேட்ஸ் ஆஃப் டு யு.”

“நான் கேட்ட கேள்விக்கு பதில் அது இல்லை நேத்ரா.” நிதானமாகச் சொன்னார் பகீரதன்.

“போலீசாருக்கு அந்தப் பெண் யாரென்று தெரிவதில் எனக்கு விருப்பம் இல்லை சார். மதிப்பும் மரியாதைக்குரிய குடும்பத்தில் இருந்து வந்த பெண். என்னுடன் சேர்ந்து சுற்றுகிறாள் என்று தெரிந்தால் அவள் உயிர் கூட போய் விடலாம்.” பயந்து விட்டாற்போல் நடித்துக்கொண்டே சொன்னான்.

“பெண்களை அழைத்துக்கொண்டு ஊர் சுற்றுவதைப் பார்த்தால், நீ ரொம்ப ஓய்வாக இருப்பது போல் தெரிகிறது. ஏதோ ஒரு கேஸை உன்னிடம் ஒப்படைத்தால் தவிர லாபம் இல்லை.”

“நீங்கள் இந்த டாபிக்கை எடுத்தபோதே என் மீது ஏதோ நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு தொடக்கம் என்று தெரியும். கொடுங்கள், பரவாயில்லை. நேற்று மாலை இறந்து போன ஸ்கூட்டர் இளைஞனின் விபத்தைப் பற்றி விசாரணை நடத்தச் சொல்றீங்களா? இடதுபக்கம் போய்க் கொண்டிருந்தவனை பின்னாலிருந்து லாரி வந்து இடித்து விட்டது என்றால், அந்த கயவனை பிடித்து சட்டத்தின் கையில் ஒப்படைத்தால் தான் நம் டிபார்ட்மென்ட் நாட்டுக்கு சேவை செய்தது போல்.”

“நீ ஒன்றும் குத்திக் காட்ட வேண்டியது இல்லை நேத்ரா. அவ்வளவு சின்ன கேஸை உன்னிடம் ஒப்படைக்கப் போவதில்லை. பூஷணத்தை உனக்குத் தெரியும் இல்லையா?”

“தெரியாமல் என்ன? ஃபெரா கேஸில் அவர் அரசாங்கத்தை வெற்றி பெற்று விட்டார் இல்லையா?”

“அவரை எப்படியாவது சிறை பிடிக்க வேண்டும். அது பர்சனல் கேசு. எப்படி பிடித்தாலும் கோர்ட் வரையிலும் வந்ததும் தப்பித்துக் கொள்கிறார். உன்னைப் பொறுத்தவரை இது சின்ன கேசு. ஆனால் எனக்காகவாவது நீ இந்த கேஸை டேக்கப் செய்யணும்.”

“எந்த புற்றில் எந்த பாம்பு இருக்கிறதோ தெரியாது. ஸ்கூட்டர் விபத்தில் இறந்து போன நிருபரின் கேஸை டேக்கப் செய்தாலும் பூஷணத்தைப் பிடிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.”

“நீ என்ன சொல்ல வருகிறாய்?”

“எதுவும் சின்ன கேசு இல்லை என்று சொல்கிறேன் சர். விமான நிலையத்தில் பூஷணத்தை எதிர்த்து கேள்வி கேட்ட இளைஞன்தான் அவன். வீட்டுக்குப் போய் சேரும் முன்பே பூஷணத்தின் வீட்டு வாசலில் பிணமாய் மாறியது விசித்திரமாக இல்லையா? அந்த நிருபர் ரொம்ப ஸ்மார்ட். பூஷணம் ஜூரிச்சில் தங்கியதைப் பற்றி தெரிந்து கொண்டான். வங்கி கணக்கு விஷயமும்.”

“பூஷணத்திற்கு சுவிஸ் வங்கியில் கணக்கு இருப்பது நமக்கும் தெரியும்தானே. நிரூபிக்கத்தான் முடியவில்லை.”

“நமக்குத் தெரிந்திருப்பது வேறு. நம்மை போல் அதிகாரமும், அரசாங்க உதவியும் இல்லாத ஒரு நிருபர் தனக்கு இருந்த புத்திசாலித்தனத்தில், தொழில் மீது இருந்த பற்றுதலில் தெரிந்து கொள்வது வேறு. அப்படிபட்டவன் இறந்து போனான் என்றால் வருத்தமாக இருக்கிறது. மேலும் பூஷணத்திற்கு எத்தனையோ மருந்து கம்பெனிக்கள், ரிசெர்ச் பண்ண லாபரேட்டரிக்களும் இருக்கு. அப்படியும் அவன் தோட்டத்திற்கு அடிக்கடி கெமிகல்ஸ், பல விதமான ஆசிட்ஸ் எதற்காக போகின்றன? அங்கே ஏதாவது பரிசோதனை சாலை தொடங்கி இருக்கிறானா? தெரிந்துகொள்ள வேண்டும்.”

டைரக்டர் பகீரதனின் கண்கள் அகல விரிந்தன. “இதை எல்லாம் நீ அப்போது கண்டு பிடித்தாய்?”

“இன்வெஸ்டிகேட்டிங் ஜர்னலிஸ்ட்டாக இருப்பவன் அத்தனை விஷயங்களை தெரிந்து வைத்திருக்கும் போது, குற்ற பரிசோதனையை தொழிலாக, மனதிற்கு பிடித்த வேலையாக நினைக்கும் நான் கண்டுபிடிப்பதில் என்ன இருக்கிறது?” என்றான் நேத்ரா. “எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் என்னவென்றால், ஜூரிச்சில்

இருக்கும்போது அவனுக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. அதில் இருந்த விஷயம் என்னவென்று தெரியாது. ஆனால் அது இந்தியாவிலிருந்து மட்டும் வந்தது இல்லையாம்."

"மை காட்! இதையெல்லாம் உன்னிடம் சொன்னது யார்?" கேட்டார் பகீரதன்.

நேத்ரா சங்கடப்படுவது போல் பார்த்துவிட்டு, இனி தப்பாது என்பது போல், "முழங்காலுக்கு ஒரு அங்குலத்திற்கு மேல் மச்சம் இருக்கும் பெண்களால் மனதில் எதுவும் மறைத்து வைத்துக்கொள்ள முடியாது" என்றான்.

"யார் அந்தப் பெண்?"

"பூஷணத்தின் செகரெட்ரி." சிரித்தான் நேத்ரா.

பேசுவதற்கும் தெம்பு இல்லாதவர் போல் பகீரதன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"தன்னிடம் வேலைப் பார்க்கும் பெண்களை சொந்த மனைவியைப் போல் பார்த்துக்கொள்வது அவர் வழக்கம். தேவைக்கு அதிகமாய் ரகசியங்கள் தெரிந்து விட்டது என்று நினைத்த போது ஏதாவது ஒரு சாக்கு வைத்துக்கொண்டு வேலையை விட்டு நீக்கி விடுவார். ஒரு மாதத்திக்கு முன்னால் இந்தப் பெண் எனக்கு கோவில் அருகில் அறிமுகம் ஆனாள். அன்று இரவு பாருக்குப் போனோம். அன்று இரவு தான் மச்சம் விஷயம் தெரிந்தது, பூஷணத்தின் செகரெட்ரி என்று தெரிந்ததும் ஆர்வம் அதிகரித்தது. நேற்று அமெரிக்காவிலிருந்து வந்ததுமே அந்தப் பெண் உற்சாகத்துடன் விமான நிலையத்தில் நடந்த விஷயங்களை, பூஷணம் தன்னுடைய பி.ஏ. இடம் 'அந்த நிருபரின் விஷயத்தைக் கொஞ்சம் கவனி' என்று சொன்னது, நிருபரின் மரணம் எல்லாம் விலாவாரியாக சொல்லிக் கொண்டிருந்த போது ஓவர் ஸ்பீட் என்ற குற்றத்தில் போலீசார் பிடித்து விட்டார்கள்."

"இதற்குப் பின்னால் இவ்வளவு கதை இருக்கிறதா?'

“பார்த்தீர்களா சார். நானேதோ பெண்களின் பின்னால் சுற்றிக்கொண்டு இருப்பதாக நினைத்து விட்டீர்கள். வேலை சார். எந்த பெண்ணின் பின்னால் எந்த ரகசியம் இருக்கிறதோ என்று..”

“முழங்காலில் மச்சத்தைத் தேடிக்கொண்டு இருப்பாய்.” நிறைவு செய்தார்.

நேத்ரா பதில் சொல்லவில்லை. அதற்குள் அஹோபிலா உள்ளே வந்தாள்.

“பூஷணத்தின் செகரெட்ரி தன் வீட்டில் தற்கொலை பண்ணிக் கொண்டு விட்டாளாம் சார்” என்றாள் உள்ளே வந்து கொண்டே.

இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். அந்த அறையில் நிசப்தம் பரவியது. வேதனை கலந்த நிசப்தம். அதுவரையிலும் உற்சாகமாக இருந்த சூழ்நிலை முற்றிலும் மாறிவிட்டது. நேத்ரா பொறுமையின்றி தலையை அசைத்தான். அவன் கண்கள் சிவந்தன.

“பூஷணத்திற்கு தன் செகரெட்ரியின் புதிய நட்பு பற்றி தெரிந்து விட்டிருக்கும். தவறு முழுவதும் என்னுடையதுதான்.” தனக்குதானே சொல்லிக் கொண்டான்.

“இரண்டு கொலைகள். எதையும் நிரூபிக்க முடியாது நம்மால்” என்றார் பகீரதன் மேஜையில் கையால் குத்திவிட்டு.

நேத்ரா எழுந்து நின்றான். “ஓ.கே. சார். இந்த கேஸை நான் எடுத்துக் கொள்கிறேன். இது எவ்வளவு சிறிய கேசாக இருந்தாலும் சரி, அந்த பூஷணத்தை கம்பியை எண்ண வைக்கிறேன்” என்றான்.

அவர்கள் நினைத்தது போல் சிறிய கேஸ் இல்லை இது.

## 3

When the whole world is fast a sleep

I wake up from my sound sleep
To see you, the stars hurriedly line-up
The sky eagerly sheds its coudy make-up
The stars whisper, “he is here Hurry up my dear”
I hesitate for a while,
The rose give an encouraging smile
Sky and the moon,
Force me to speak up soon
Suddenly up I wake
Its already day Break
Emotion and devotion,
The two doors of my world close behind,
“There is still another night”
To a dejected self I remind,

ஐந்து நிமிடங்கள் ஆயிற்று அவளுக்கு அந்த கவிதையை எழுத. அவளுக்கு ஆங்கிலத்தில் நல்ல புலமை இருந்தது. அழகான வார்த்தைகளில் எண்ணங்களை வெளிப்படுத்துவது தனித் திறமை.

அவள் படித்துக் கொண்டிருந்தது கெமிஸ்ட்ரியாக இருந்தாலும் இந்த ரசனை அவளுக்கு எப்படியோ வந்து சேர்ந்து விட்டது. அவள் பெயர் அம்சரேகா.

தான் எழுதிய கவிதையை மற்றொரு முறை படித்துக் கொண்டிருந்த போது மெல்லிய முனகல் கேட்டது. முதலில் அவளால் தன் காதுகளை தானே நம்ப முடியவில்லை. ஆனால் சந்தேகம் மட்டுமே அப்படியே இருந்தது.

சுற்றிலும் உயரமான மதில் சுவர். நடுவில் பெரிய தோட்டம். மரங்களுக்கு நடுவில் பழைய கட்டிடம். அங்கே ரொம்ப நாளாக நடமாட்டம் இல்லாதது போல்

தென்பட்டது. முன் பகுதியில் காய்ந்த இலைகள், குச்சிகள், குப்பை பரவி இருந்தன.

அவள் பங்களாவை நோக்கி நடந்தாள்.

அவ்வப்பொழுது பறவையின் கத்தலைத் தவிர எங்கும் நிசப்தம். அந்த நிசப்தத்தில் அவள் காலடிச் சத்தம் மேலும் பலமாக கேட்டுக் கொண்டிருந்தது.

அம்சரேகா பங்களாவை நெருங்கி விட்டாள். முன் பக்கம் குப்பையாக இருந்தாலும் பின் பகுதில் வாகனத்தின் டயர் அடையாளங்கள் இருந்தன. அவள் அந்தப் பக்கமாய் நடந்தாள். அங்கே கதவுகளை சாத்தி குறுக்கே கட்டையை வைத்து ஆணி அடித்து விட்டார்கள். உள்ளே போக வழியில்லை.

அவள் குனிந்து இடுக்கு வழியாய் பார்த்தாள். உள்ளே விளக்கின் வெளிச்சம் தென்பட்டது.

அதற்குள் ஒரு ஆள் உள்ளே இருந்து தான் இருந்த பக்கத்தை நோக்கி வருவதை கவனித்தாள். சட்டென்று பக்கத்தில் நகர்ந்துகொண்டாள். அவளுக்கு வியப்பு ஏற்படும் வகையில் அவன் வந்து அந்தக் கதவைத் திறந்து கொண்டு வெளியே போய் விட்டான். மரக்கட்டையால் குறுக்கே ஆணி அடித்தாற்போல் தென்பட்ட கதவு திறப்பதற்கு வசதியாக இருந்தது.

அவள் தயங்காமல் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள்.

அப்படி நுழைவதால் அவள் வாழ்க்கையின் பெரியதொரு திருப்பத்திற்கு அடிக்கல் நாட்டுவிழா நடந்தது.

*****

அந்த ஆசாமி டிரைவர் உடையில் இருந்தான். முகத்தில் பயம் வெளிப்படையாய் தென்பட்டுக் கொண்டிருந்தது. அவசரமாய் பப்ளிக் போன் பூத்க்குள் நுழைந்து ஒரு நம்பருக்கு டயல் செய்தான்.

வெகு சிலருக்குத்தான் அந்த நம்பர் தெரியும். நேராக பூஷணத்தின் முதலாவது பி.ஏ. வுக்கு அந்த நம்பர் போகும்.

மறுமுனையில், “ஹலோ” என்று கேட்டதும், “சார்! நான்தான் டேவிட் பேசுகிறேன்” என்றான் பதற்றத்துடன்.

பி.ஏ. வியப்புடன், “யார்?” என்றான்.

“நான்தான் சார். டிரைவர் டேவிட் பேசுகிறேன். அவசரமாய் சாரிடம் பேசணும். நேரம் அதிகம் இல்லை.”

ரொம்ப அவசரமாய் இருந்தால் தவிர அந்த நபருக்கு போன் வராது. பி.ஏ. தாமதம் செய்யாமல் பூஷணத்திற்கு கனெக்ஷன் கொடுத்தான். டேவிட் சாதாரண டிரைவர் இல்லை. இருந்தாலும் அந்த நம்பருக்கு போன் செய்து பேசும் அதிகாரம் அவனுக்கு இல்லை. இருந்தாலும் செய்தான் என்றால்... பி.ஏ. எண்ணிக்கொண்டான்.

புகையிலை அறிக்கை உள்ளது உள்ள படியே அரசாங்கத்திற்குப் போய் சேராமல் யார் யாரை எப்படி திருப்திப் படுத்த வேண்டுமோ தன் பைனான்ஸ் செகரெட்ரியிடம் பேசிக் கொண்டிருந்தார் பூஷணம். அந்த நேரத்தில் போன் வந்ததும் எரிச்சலுடன், “ஹலோ!” என்றார்.

“சார்...சார்... நான் டேவிட் பேசுகிறேன். சின்னம்மா தோட்டத்திற்குள் போயிருக்காங்க.”

முதலில் அவருக்குப் புரியவில்லை. புரிந்ததுமே அவர் முகத்தில் இருந்த எரிச்சல் மாயமாயிற்று. அதிர்ச்சி ஒருபுறம், பதற்றம் மறுபுறம் சேர்ந்து கொண்டன. அவர் அந்த அளவுக்கு பதற்றம் அடைந்தது அதுதான் முதல் தடவை. தன் செகரெட்ரி அமெரிக்காவிலிருந்து வந்த அன்று மாலையில் நேத்ராவுடன் தென்பட்டாள் என்று தெரிந்த போதுகூட அவர் கலவரம் அடையவில்லை. நிதானமாய் அவள் தற்கொலைக்கு திட்டம் தீட்டினார். ஆனால் இது சின்ன விஷயம் இல்லை. மகளுக்கு சம்பந்தப்பட்டது.

“எப்படி நடந்தது இது?” கடினமான குரலில் கேட்டார்.

“நம் தோட்டம்தானே. போகலாம் என்று சொன்னாங்க. வேண்டாம் என்று நான் எவ்வளவு சொன்னாலும் கேட்டுக்கொள்ள வில்லை.”

“நான் உடனே கிளம்பி அங்கே வந்து கொண்டு இருக்கிறேன். இதற்குள் சின்னம்மா மாடி கட்டிடம் பக்கம் போகாமல் பார்த்துக்கொள். ரொம்ப பிடிவாதம் பிடித்தால் நினைவு தப்ப வைத்தாலும் பரவாயில்லை. அவள் மட்டும் அந்த பக்கம் போகக் கூடாது. புரிந்ததா?” போனை வைத்துவிட்டு எழுந்து கொண்டார்.

*****

உயரமான சுவரைப் பார்த்தான் நேத்ரா.

உள்ளே தோட்டத்தின் மேல்புறம், மரத்தின் இலைகள் தெளிவாக தென்பட்டுக் கொண்டிருந்தன. தோட்டத்தில் எந்த அரவமும் இருக்கவில்லை. இருந்தாலும் அவன் தன் பரிசோதனையை தோட்டத்திலிருந்து தொடங்க நினைத்தான். மதில் சுவருக்கு மேலே இருந்த கம்பியில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது. சுவரின் உள் பக்கம் அகழி போல் இருந்தது. கம்பியைத் தொட்டதும் ஷாக் அடித்தது,

நேத்ரா கையில் இருந்த கயிற்றை காற்றில் உள்பக்கமாய் வீசி அது மரத்தில் சிக்கிக் கொண்டது என்று நம்பிக்கை வந்ததும், அதன் உதவியுடன் மேலே ஏறினான். வலது பக்கம் செக்யூரிடீ ரூம் இருந்தது. ஐந்தாறு நாய்கள் காவல் காத்துக்கொண்டிருந்தன. கார்டுகள் இருந்தார்கள். மரங்களுக்கு இடையே தொலைவில் கட்டிடம் தென்பட்டது.

அந்தப் பக்கமாய் நிசப்தமாக நடந்து கொண்டிருந்த நேத்ரா கவனக் குறைவாக இரு மரங்களுக்கு இடையே கட்டியிருந்த மெல்லிய கம்பியில் மோதிக்கொண்டான். அவ்வளவுதான்! அந்த எல்லை முழுவதும் அலாரம் சத்தம் எதிரொலித்தது.

# 4

“நான் உடனே அங்கு வந்து கொண்டிருக்கிறேன்” என்று பூஷணம் சொல்லிக்கொண்டு இருந்த போதே டிரைவர் டேவிட்க்கு வியர்த்துக் கொட்டியது. விஷயம் ரொம்ப சீரியஸ் என்று உணர்ந்து கொண்டான். அவன் பூஷணத்திற்கு மிகவும் நம்பிக்கையானவன். பூஷணத்தின் பர்சனல் ஏ கேடகிரி அசிஸ்டென்ட். அவனுக்கு தோட்டத்திற்குள் என்ன நடக்கிறது என்று தெரியாது. ஏதோ நடக்கிறது என்று மட்டும் தெரியும். இவ்வளவு சீரியஸ் என்று தெரியாது.

டெலிபோனை வைத்துவிட்டு தொட்டத்திற்குள் வேகமாக ஓடி வந்தான். கார்டுகள் அவன் பதற்றத்தைப் பார்த்து ஏதோ ஆபத்து வந்து விட்டது என்று நடுங்கி விட்டார்கள். சாதாரணமாக இருந்தால் ஏ கேடகிரி அசிஸ்டெண்டுகளுக்கு தோட்டத்திற்குள் நுழைய அனுமதி இல்லை. ஆனால் பூஷணத்தின் மகளும் காரில் இருந்ததைப் பார்த்ததும் அவர்களால் எதுவும் சொல்ல முடியவில்லை.

டிரைவர் ஓட்டமாய் மரத்தின் அருகில் வந்தான். அங்கே அம்சலேகா இருக்கவில்லை. அவள் எழுதிய காகிதம் மட்டும் இருந்தது.

அவன் பதற்றம் அதிகரித்தது.

அதற்குள் அவன் தோளில் கை ஒன்று படிந்தது. திடுக்கிட்டு பின்னால் திரும்பினான். எதிரே பாஸ்!

“எங்கே என் மகள்?”

“இதுவரையிலும் இங்கேதான் இருந்தாங்க சார். உங்களுக்கு போன் பண்ணுவதற்காக போன போது இங்கிருந்து போயிருப்பாங்க போலிருக்கு. இதோ சின்னம்மா எழுதிய காகிதம்.” விளக்கம் சொல்வது போல் சொன்னான்.

“எனக்கு வேண்டியது எப்படி நடந்தது என்ற விளக்கம் அல்ல. என் நடந்தது என்பதற்கான விளக்கம்.

அந்த கிணற்றின் அருகில் போய்ப் பார்.” நிதானமாய் சொன்னார்.

டேவிட் முன்பின் யோசிக்காமல் கிணற்றின் அருகில் ஓடினான். பூஷணம் நிசப்தமாக பிஸ்டலுக்கு சைலென்ஸரை பொருத்தினார். டேவிட் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். கிணற்றுச் சுவரின் விளிம்பைப் பிடித்துக்கொண்டு உள்ளே இருட்டில் கண்களை சுருக்கி தேடிக் கொண்டிருந்தான். பின்னாலிருந்து பிஸ்டல் வெடித்தது. அவன் பிடித்துக் கொண்டிருந்த இரும்பு கம்பி நழுவி கிணற்றுக்குள் சரிந்து விட்டான். தொடர்ந்து அவன் முனகல் சத்தம் கேட்டது.

“இரண்டு நாட்கள் வரையில் அந்த இருட்டிலேயே இரு டேவிட். உயிரோடு இருந்தால் வெளியில் எடுக்கிறேன். நீ செய்த காரியத்துக்கு அதுதான் தண்டனை” என்று சொல்லிவிட்டு பூஷணம் பங்களாவை நோக்கி நடந்தார்.

அப்பொழுது கேட்டது அலாரத்தின் சத்தம்.

மின் அதிர்ச்சி தாக்கியது போல் அவர் அப்படியே நின்றுவிட்டார். முதல் முறையாய் அந்த தோட்டத்தில் அலாரம் ஒலித்திருக்கிறது. அரசாங்கத்தின் பார்வை தன் மீது இருப்பது தெரியும். இருந்தாலும் உள்ளே வந்தது யார்? அரசாங்கத்தின் ஆளாக இருந்தால் ரகசியமாக வருவதற்கு வாய்ப்பு இல்லை. முன்கூட்டியே தனக்கு தெரிந்திருக்கும்.

அலாரம் சத்தம் கேட்டதும் கார்டுகள் பொசிஷனுக்கு வந்தார்கள். நாய்கள் நாலா பக்கமும் ஓடுவதற்கு தயாராக இருந்தன. ஆனால் பூஷணம் சீஃப் கார்டுக்கு நில் என்பது போல் சைகை செய்தார்.

“யாரோ உள்ளே வந்திருக்கிறார்கள் சார்.” பதற்றத்துடன் சொன்னான் செக்யூரிட்டி அதிகாரி.

“நான் மகளை அழைத்துக்கொண்டு போகும் வரையில் நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம். இங்கு

இவ்வளவு செக்யூரிட்டி இருப்பதாக மகளுக்கு சந்தேகம் வரக் கூடாது” என்று பங்களாவை நோக்கி நடந்தார். உண்மையில் செக்யூரிட்டிக்குக் கூட உள்ளே என்ன நடக்கிறது என்று தெரியாது.

அதே சமயத்தில் பங்களாவுக்குள் அடியெடுத்து வைத்த அம்சலேகா கண் முன்னால் தென்பட்ட காட்சியைப் பார்த்து வாயடைத்து நின்றுவிட்டாள்.

அவள் நின்று இருந்த படிகளுக்குக் கீழே தரை மாளிகையில் விசாலமான ஹால் இருந்தது. ஒரு மூலையில் வெள்ளை மாஸ்க் அணிந்து சிலர் பரிசோதனை பண்ணிக் கொண்டிருந்தார்கள். அது இல்லை அவளை திகைக்க வைத்தது. ஹாலுக்கு நடுவில் ஐந்தாறு பிணங்கள் இருந்தன.

மீன் மார்கெட்டில் குவித்து வைத்திருப்பது போல் அந்த உடல்கள் ஒன்றின் மேல் ஒன்றாக கிடந்தன. ஒவ்வொன்றாய் ஸ்ட்ரெக்சரின் மேல் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. ஆஸ்பத்திரியில் இருப்பது போல் வெள்ளை நிற உடை அணிந்திருந்த நபர்கள் அந்த உடல்களை வெளியே கொண்டு போய் சேர்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நபரின் உடல் மேஜைமீது கிடத்தப்பட்டிருந்தது. அந்த உடலிலிருந்து இரண்டு ஒயர்கள் கார்டியோகிராமுடன் இணைக்கப் பட்டிருந்தன. அவன் இதயத்தின் துடிப்பு அந்த மிஷினில் புள்ளியாய் பயணித்துக் கொண்டிருந்தது.

அதற்குள் அந்த ஆசாமியின் அருகில் நின்று டாக்டரைப் போல் பரிசோதித்துக் கொண்டிருந்த நபர் தன் முகத்தில் இருந்த மாஸ்க்கை நீக்கியதும் அம்சலேகாவுக்கு தூக்கி வாரிப் போட்டது. அவள் ஒரு பெண்.

தன்னுடைய அக்காவை அந்த நிலையில் அந்த இடத்தில் பார்க்கப் போகிறோம் என்று அம்சலேகா ஊகித்திருக்கவில்லை.

அவள் அம்சலேகாவை விட நானகைந்து வருடங்கள் பெரியவள். அவள் அணிந்து கொண்டிருந்த வெள்ளை நிற கோட் அவளை ஒரு விஞ்ஞானியாக பறைச்சாற்றிக் கொண்டிருந்தது. அவள் கண்களில் ஞானம் மிளிர்ந்து கொண்டிருந்தது. கண்களுக்குக் கீழே இருந்த கருவளையங்கள் வேதனையை, களைப்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. எல்லாவற்றையும் விட இனம் தெரியாத ஏதோ பழி உணர்வு அவளிடம் தென்பட்டுக் கொண்டிருந்தது.

அவள் பெயர் சுவர்ணரேகா. அவள் அங்கிருந்து நகர்ந்து கண்ணாடி கூண்டுகளுக்கு அருகில் சென்றாள். வரிசையாக இருந்த கண்ணாடிக் கூண்டுகளில் பத்து முயல்கள் இருந்தன. அவள் குடுவைக்கு மேலே இருந்த மூடியைத் திருகியதும் அவற்றுக்கு பொருத்தியிருந்த பைப் லைன் லிருந்து கியாஸ் அந்த கூண்டுகளுக்குள் சென்றது. மெதுவாக ஒவ்வொரு முயலின் சலனம் ஒடுங்கிவிட்டது. வரிசையாய் புல்லெட்ஸ் தாக்கியதும் ஒவ்வொரு படை வீரனும் தரையில் சரிந்து விட்டது போல் முயல்கள் ஒன்றையடுத்து ஒன்றாய் இறந்து போனதை அமசரேகா திகைப்புடன் பார்த்தாள்.

அதற்குள் அவளுக்கு முன்னால் நிழல் ஒன்று நீளமாக பரவியது. அவள் இன்னும் திகைப்படைந்த நிலையில் இருக்கும் போதே தோளில் கை ஒன்று படிந்தது. வீலென்று அலறப் போனவள் வலுகட்டாயமாக அடக்கிக் கொண்டாள். காரணம்! எதிரே தந்தை நின்று கொண்டயுர்ந்தார்.

“என்னம்மா? இங்கே வந்து நிற்கிறாய்?”

“அப்பா! இங்கே ... இங்கே என்ன நடக்கிறது நேரு தெரியுமா?”

பூஷணம் சிரித்தார். “ஒன்றுமே நடக்கவில்லையம்மா. பயங்கரமான கேன்சர் நோயை குணமாக்கும் சிகிச்சை முறையைப் பற்றி அக்கா பரிசோதனை செய்து வருகிறாள். அவ்வளவுதான்.”

“ஆனால்... இந்த ஆட்கள்?” என்றாள், பிணம் போல் இருந்த மனிதர்களை காண்பித்துக்கொண்டே.

“எப்படியும் சில நாட்களில் இறந்து போகவிருக்கும் கேன்சர் நோயாளிகள். மீதி விஷயங்களை வெளியில் போய் பேசுவோம். இவர்களை தொந்தரவு செய்வானேன்?” என்று பங்களாவுக்கு வெளியே அழைத்து வந்தார்.

சரியாய் அதே நேரத்திற்கு அங்கே வந்த நேத்ரா மரத்தின் மறைவிலிருந்து அவர்களைப் பார்த்தான்.

பூஷணத்தின் செகரெட்ரி காரில் தன்னிடம் சொன்ன விஷயம் நினைவுக்கு வந்தது. “அவருடைய மகளும் ரிசெர்ச் செய்து வருகிறாள். எதைப்பற்றி என்று தெரியாது. மிக ரகசியமாக நடந்து வருகிறது” என்று.

தொலைவில் இருந்ததால் அவர்கள் பேசுவது அவன் காதில் விழவில்லை. உள்ளே இருந்து மனித உடல்களை எடுத்து வந்து வேனில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த நிமிடமே அவர்களை அரெஸ்ட் செய்ய வைக்கலாம். ஆனால் சாட்சியங்கள் போதாது. முழு வீச்சில் ரெயிட் நடத்தப்பட வேண்டும். அதைவிட முன்னதாக அந்த பரிசோதனை என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டும். அந்த உடல்கள் உயிரோடு இருப்பவையா இல்லையா என்று தெரிய வேண்டும். உயிரில்லாத உடல்கள் மீது அவர்கள் பரிசோதனை செய்து வந்தால் தான் அனாவசியமாக வெளிப்பட்டு விடுவான். அவர்களுக்கு சிறிய அளவில் தண்டனை போதாது.

அவன் யோசனையில் மூழ்கி இருந்த போது வேன் அருகில் அம்சரேகா தந்தையிடம் கேட்டுக்கொண்டிருந்தாள். “வெளியில் பூட்டியிருப்பது, உள்ளே பரிசோதனைகள் நடப்பது இதெல்லாம் என்ன அப்பா?”

பூஷணம் பெருமூச்சு விட்டார். “உலக நன்மைக்காக செய்யும் சில காரியங்களுக்கு மறைவு தேவை. எதிர்காலத்தில் நாங்கள் இந்த மருந்தைக் கண்டுபிடித்தால் எங்களுக்கு நோபல் பரிசு

கிடைக்கலாம். ஆனால் இப்படி அனுமதி இல்லாமல் பரிசோதனை நடத்துவது தெரிந்தால் அரசாங்கம் சும்மா இருக்காது. அதனால்தான் நம் தோட்டத்தை தேர்ந்தெடுத்து இருக்கிறோம்."

நேத்ரா ஜேபியிலிருந்து வாக்கி டாக்கியை எடுத்தான். ஒரு மைல் தொலைவில் பகீரதன் இருக்கும் இடத்தில் மணி அடித்தது. ஸ்பீக்கரை ஆன் செய்து, "ஹலோ!" என்றார்.

"ஏஜெண்ட் நேத்ரா பேசுகிறேன். பூஷணத்தின் தோட்டத்தில் அவன் மகள் சந்தேகத்திற்கு உரிய சூழ்நிலையில் பரிசோதனைகளை செய்து வருகிறாள். மீதி விஷயங்களை நேரில் வந்து சொல்கிறேன்" என்று வாக்கி டாக்கியை நிறுத்தினான்.

எந்த நிமிடமும் ஏஜென்டின் உயிர் போகலாம். அதனால் தாம் கண்டுபிடித்தவரையில் அவ்வப்பொழுது மேலிடத்திற்கு தெரிவித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

நேத்ரா வாக்கி டாக்கியை ஜேபியில் வைத்துக் கொண்டிருந்த போது பூஷணம் மகளை காரில் ஏற்றிவிட்டுக் கொண்டிருந்தார். அவர்களின் உரையாடல் நேத்ராவின் காதில் விழவில்லை.

"இந்த விஷயத்தை இங்கேயே மறந்து விடுகிறேன் என்றும், யார் கட்டாயப் படுத்தினாலும் சொல்ல மாட்டேன் என்றும் சத்தியம் செய்து கொடு அம்மா."

"ஒரு நல்ல காரியத்திற்காக நீங்கள் செய்து கொண்டிருப்பதை நான் எதற்காக வெளியில் சொல்லப் போகிறேன் அப்பா?"

"இருந்தாலும் நீ சத்தியம் செய்து கொடுத்தால் தவிர எனக்கு திருப்தியாக இருக்காதும்மா."

"அப்படியே ஆகட்டும் அப்பா. யாரிடமும் சொல்ல மாட்டேன். இது சத்தியம். சரிதானே?"

கார் நகர்ந்தது. அந்த கார் கேட்டை தாண்டியதுமே சீஃ ப் செக்யூரிட்டி, "ப்ரோசீட்" என்றான். நாய்கள்

களத்தில் இறங்கின. கார்டுகள் வேகமாக ஓடிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று அங்கே சூழ்நிலை மாறிவிட்டது. “ஒவ்வொரு அங்குலமாக தேடுங்கள்.” கத்தினார் பூஷணம்.

திடீரென்று அவ்வளவு பரபரப்பு எதற்காக வந்ததோ நேத்ராவுக்கு புரியவில்லை. சிறிய தோட்டம் அது. நாய்களிடமிருந்து தப்பித்துக் கொள்வது அசாத்தியம். கார்டுகளும் பயிற்சி பெற்றவர்கள் போல் தென்பட்டார்கள். அம்சலேகா அங்கிருந்து கிளம்புவதற்காகத்தான் அவர்கள் காத்திருந்தார்கள் என்று அவனுக்குத் தெரியாது.

அலாரம் ஒலித்த இத்தனை நேரம் கழித்து அவர்கள் தேட துவங்கியது அவனுக்கு வியப்பை அளித்தது.

மரணம் துரத்திக்கொண்டு வருவது போல் தோன்றியது. கார்டு ஒருவன் நாயக்ளுடன் இந்தப் பக்கமே வந்து கொண்டிருந்தான். அவற்றின் வேகத்தைக் கட்டுபடுத்துவதற்கு அவன் மிகவும் பிரயாசைப் பட்டு கொண்டிருப்பது சங்கிலியை அவன் பிடித்துக் கொண்டிருந்த முறையிலிருந்தே தெரியவந்தது. வேற்று ஆள் இருப்பதை மோப்பம் பிடித்து விட்டது போல் பாய்ந்து வந்து கொண்டிருந்தன.

கார்டுகள் மரத்தை நோக்கி துப்பாக்கியால் சுட ஆரம்பித்து விட்டார்கள். அடர்த்தியான கிளைகள், இலைகள் கொண்ட மரம் அது. ஒரு ரவுண்ட் சுட்டு முடித்து நிறுத்திவிட்டு, கார்டு ஒருவன் மரத்தில் ஏறத் தொடங்கினான்.

இதற்கு இடையே பிணங்களை வேனில் ஏற்றி முடித்தாகி விட்டது. பூஷணம் வேன் பக்கத்திலேயே நின்று இருந்தார். கார்டு ஒருவன் அவரிடம் ஒரு கயிற்றைக் கொண்டு வந்து காண்பித்தான்.

நேத்ரா பயன்படுத்திய கயிறு அது. அதனைப் பார்த்ததும் பூஷணத்தின் புருவம் முடிச்சேறியது. சாதாரண திருடர்கள் பயன்படுத்தும் கயிறு அல்ல அது. மின்சாரத்தை ஷார்ட் சர்க்யூட் செய்து, ஹூக்கைக்

கொண்டு எத்தனை கனத்தை வேண்டுமானாலும் தாங்கக் கூடிய கருவி.

வந்தது சாதாரண திருடன் இல்லை என்று தெரிந்ததும் வேன் டிரைவரிடம் “உடனே கிளம்பு” என்று அவசரப்படுத்தினார். அந்த பிணங்கள் இல்லையென்றால் சாட்சியம் இல்லை என்பது போல்தான். பிறகு வந்தவனை சாவகாசமாய் தேடித் பிடித்து விடலாம். கொன்று காக்கைக்கும், கழுகுக்கும் இரையாகப் போடலாம்.

வேன் கிளம்பி விட்டது.

அதன் மேல் பகுதியின் இருந்த நேத்ரா அதனுடனே கிளம்பிப் போய் விட்டான் என்று அங்கே இருந்தவர்களுக்குத் தெரியாது. மரத்தின் மீது இன்னும் தேடிக் கொண்டிருந்தார்கள்.

கட்டிடத்தின் மீதிருந்து வேன் மீது குதித்த நேத்ரா வண்டி கிளம்பியதும் அதன் மேல் இருந்த இரும்பு கம்பியைப் பிடித்துக் கொண்டான். வேன் குழிகளில் ஏறி இறங்கிய போது உடல் குலுங்கிக் கொண்டிருந்தது. ஒரு கையால் இரும்புக் கம்பியைப் பிடித்துக்கொண்டே வாக்கி டாக்கியில் பகீரதனுடன் பேசினான். நடந்ததை எல்லாம் தெரிவித்தான்.

“உடனே அந்த தோட்டத்தை ரெயிட் பண்ண வைக்கிறேன்.” பகீரதன் சொன்னார்.

“பயன் இருக்கும் என்று தோன்றவில்லை. அங்கே உங்களுக்கு ஒரு கெஸ்ட் ஹவுஸ் தவிர வேறு எதுவும் இருக்காது. முன்கூட்டியே யோசிப்பதில் நம்மை விட பூஷணம் ரொம்பவும் அட்வான்ஸ்.”

“நீ எங்கிருந்து பேசுகிறாய்?”

“பிணம் போல் கிடக்கும் மனித உடல்களை சுமந்து செல்லும் வேன் மேல் பகுதியில்.” வாக்கி டாக்கியை நிறுத்திவிட்டு சுற்றிலும் பார்த்தான் நேத்ரா. மறுமுனையில் பகீரதன் இன்னும், “ஹலோ ஹலோ” என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

சின்ன மலைக்கு பக்கத்திலிருந்து வேன் போய்க் கொண்டிருந்தது. பக்கத்திலேயே நதி பாய்ந்து கொண்டிருந்தது. இந்த மனித உடல்களை எங்கே எடுத்துச் செல்லப் போகிறார்கள் என்று யோசித்துக் கொண்டு இருக்கும் போதே வானத்தில் சிறிய புள்ளி ஒன்று தென்பட்டது. அவன் கை இரும்பு கம்பியின் மீது முறுக்கேறிக் கொண்டது. கூர்மையான அவன் பார்வைக்கு அது என்ன வென்று உடனே புரிந்து விட்டது. ஹெலிகாப்டர்!

இந்தக் கேசு மேலும் சிக்கலாகி கொண்டிருப்பது போல் நேத்ராவுக்கு தோன்றியது.

ஹெலிகாப்டர் நின்றதும் வேனுக்குப் பின்னால் காரில் வந்து கொண்டிருந்த பூஷணம் இறங்கி அதன் அருகில் சென்றார். மலைக்கும், சாலைக்கும் இடையே இருந்த சிறிய இடத்தில் இறங்கியது அது. நேத்ரா மூச்சை அடக்கிக்கொண்டு அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தான். இதற்குள் ஒரு ஆள் அதிலிருந்து இறங்கினான்.

ஹெலிகாப்டர்லிருந்து இறங்கிய அந்த நபரைப் பார்த்து நேத்ரா சிலையாகி விட்டான்.

ஏஜெண்ட் க்யூ!

இந்தியாவின் மையப் பகுதியில், இரண்டாம்பேருக்கு தெரியாமல், எல்லையைக் கடந்து இவ்வளவு தூரம் வந்திருக்கும் ஏஜெண்ட் க்யூ! ஒன்றோடு ஒன்றை இணைத்துப் பார்த்தான் நேத்ரா. ஜூரிச்சில் பூஷணத்திற்கு தந்தி அனுப்பிய நபர் இவனாகத்தான் இருக்க வேண்டும்.

வெளிநாட்டு ஒற்றனை நம் நாட்டில் பார்த்ததைவிட, பூஷணத்துடன் சேர்ந்து பார்த்தது அபஸ்ருதியாய் தோன்றியது நேத்ராவுக்கு. மிக மோசமான ஆபத்து ஏதோ வர இருப்பது போல் மனம் எடைபோட்டுக் கொண்டிருந்தது.

அவர்கள் இருவரும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். பூஷணம் ஏஜெண்ட் க்யூவிடம் வேனை சுட்டிக்காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். அவன் தலை அசைத்து விட்டு பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

நேத்ரா வாக்கி டாக்கியை ஜேபியிலிருந்து எடுக்காமலேயே பட்டனை அழுத்தினான். எதுவும் பேசாமல் பட்டனை அழுத்தினால், தான் எங்கே இருக்கிறோம் என்று அது குறிப்பை காட்டும் என்றும், சீஃப் அதைப் பார்த்ததுமே உடனே கிளம்பி வருவார் என்றும் அவனுக்குத் தெரியும். சத்தம் போடாமல் பிஸ்டலை எடுத்து, எதிர்பாராத வேகத்துடன் அவ்விருவருக்கு இடையே போனான்.

அந்த திடீர் நிகழ்வுக்கு பூஷணம் மிரண்டு விட்டார்.

“நீ வெளிநாட்டுக்கு அடிமை என்று தெரியும் என்றாலும், எந்த நாட்டுக்கு என்று இதுநாள் வரையிலும் தெரியாது. இப்பொழுது தெரிந்து விட்டது பூஷணம். நீ ஜெயில் கம்பிகளை எண்ணும் காட்சியைக் காணக் கூடிய வாய்ப்பு இத்தனை நாட்களுக்கு இந்திய மக்களுக்கு கிடைத்தது” என்றான் நேத்ரா.

“உன்னால் எதையும் நிரூபிக்க முடியாது.” செருக்குடன் சொன்னார் பூஷணம்.

“தேவையில்லை. ஏஜெண்ட் க்யூ எங்களிடம் கைதியாக இருந்தால் போதும். உங்கள் இருவரிடமிருந்தும் ரகசியங்களை எப்படி வரவழைப்பது என்று எனக்குத் தெரியும்.”

உரையாடலை சாவகாசமாக கேட்டுக்கொண்டிருந்த ஏஜெண்ட் க்யூ இறுதியாய் சொன்னதைக் கேட்டு சிரித்துவிட்டுச் சொன்னான். “அதுவரையிலும் உங்கள் அரசாங்கம் அதிகாரத்தில் இருக்காது நேத்ரா. அரச மரியாதையுடன் எங்களை விடுவிக்க புதிய அரசாங்கம் எப்படி வரப் போகிறது என்று பார்ப்பதற்காக நீ கொஞ்ச காலம் பொறுத்திருக்க வேண்டும்.”

நேத்ராவின் மூளை காலிகுலேட்டாரை விட வேகமாய் யோசித்துக் கொண்டிருந்தது. லாக்கப்பில் ஏஜெண்ட் க்யூவை எவ்வளவு துன்புறுத்தினாலும் ஒரு ரகசியம் கூட வெளியில் வராது என்பதில் மாற்று கருத்து இல்லை. பூஷணத்தை ஒரு நாளுக்கு மேலே ஜெயிலில் இருக்க விட மாட்டார்கள் லாயர்கள்.

இந்த இரண்டையும் விட ஆபத்தான விஷயம் வேறொன்று இருக்கிறது.

இவ்விருவருக்கு இடையே இருக்கும் உறவு வெளிப்பட்டுவிட்டால், பகைவர்கள் எதிர்காலத்தில் பூஷணத்தின் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளாமல் இருக்கக் கூடும். அல்லது அவனைத் தீர்த்துக்கட்டி விடக் கூடும். பூஷணம் இறந்து விட்டால் இனி இந்த ரகசியம் வெளியில் வரவே வாய்ப்பு இல்லை.

என்னதான் செய்வது?

அவன் எண்ணங்களை, நிசப்தத்தை வேறு விதமாக புரிந்து கொண்ட க்யூ திரும்பவும் சிரித்தான். “உன் நாட்டில் நீ நம்பர் ஒன் ஏஜெண்ட் என்றால், எங்கள் நாட்டுக்கு நான் நம்பர் ஒன். என்னுடைய லட்சியம் உனக்குத் தெரியும்தானே. உலக வரைபடத்திலிருந்து உங்கள் நாட்டை முழுவதுமாக நீக்குவது. இந்த முறை அந்த காரியத்தை முடிக்காமல் போக மாட்டேன்.”

“என் உடலில் உயிர் இருக்கும் வரையில் அந்த காரியம் நடக்க விடமாட்டேன்.”

“உன் உயிரை எடுக்க வேண்டிய அவசியம் எனக்கு மிகவும் இருக்கிறது நேத்ரா. இந்த நாட்டில் பிரபலமான நபர் எங்களுக்கு அடி பணிந்து விட்டான் என்றும், அவனுடைய பரிசோதனைச் சாலையில் மிகவும் ஆபத்தான ரிசெர்ச் நடைபெற்று வருகிறது என்றும் தெரிந்த நபர் நீதான். அந்த ரகசியம் உன்னுடன் சமாதியாக வேண்டியதுதான்.” சிரித்தான் க்யூ. “எங்கள் இருவரில் ஒருத்தர் மீதுதான் உன்னால் பிஸ்டலை பிரயோகிக்க முடியும். இரண்டாவது முறை உபயோகிப்பதற்குள் நான் என் பிஸ்டலால் உன்னை

சுட்டு விடுவேன். நாம் மூவரும் சாகப் போவது உறுதி. அத்துடன் உன் நாட்டுப் பிரச்சனை தீர்ந்து விடாது. சரிதானே?”

நேத்ரா பதில் சொல்லவில்லை. தொலைவின் வாகனங்கள் வரும் சத்தம் கேட்டது. அப்பொழுது சிரித்தான்.

“உண்மைதான். உன்னால் அவ்வளவு வேகமாக சுடவும் முடியும். உனக்கு பலமும், சுறுசுறுப்பும் அதிகம். ஆனால் புத்திசாலித்தனம் தான் கொஞ்சம் குறைவு. மிஸ்டர் க்யூ! இத்தனை நேரம் பேச்சில் ஆழ்த்தி உன்னை காக்க வைக்க வேண்டும் என்ற என் எண்ணம் நிறைவேறிவிட்டது. என் டிபார்ட்மெண்ட் ஆட்கள் வருகிறார்கள். அந்த மலை திருப்பத்தில் பார்.”

ஏஜெண்ட் க்யூ சிரித்தான். அந்தப் பக்கம் பார்க்கவில்லை. “உன்னைவிட எனக்கு புத்திசாலித்தனம் அதிகம் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் சூழ்நிலையை எனக்கு அனுகூலமாக மாற்றிகொள்ளும் திறமை இருக்கிறது என்று மட்டும் நிச்சயமாக என்னால் சொல்ல முடியும். அது அந்தப் பக்கம் பார்” என்றான்.

நேத்ரா வேன் பக்கம் பார்த்தான்.

வேனில் இருந்த நபர்கள் மீது பிஸ்டலை குறி பார்த்து நின்றிருந்தான் க்யூவுடன் ஹெலிகாப்டரில் வந்தவன். க்யூ மேலும் சொன்னான்.

“உன்னால் என்னை கொல்ல முடியும். பூஷணத்தையும் கொல்ல முடியும். ஆனால் அந்த அப்பாவி மக்கள் சாவுக்கு விளிம்பில் இருக்கிறார்கள். சொல்லு! நம் சதுரங்க ஆட்டத்தில் அந்த அப்பாவி மக்களை பலி கொடுக்கப் போகிறாயா? பிஸ்டலை விட்டு விடுகிறாயா?”

நேத்ரா கற்சிலையாகி விட்டான். அவன் இந்த பரிணாமத்தை ஊகிக்கவில்லை.

“சொல்லு நேத்ரா! பிஸ்டலை கீழே போட்டு விடுகிறாயா? அல்லது அந்த அப்பாவி நோயாளிகளை

கொல்ல சொல்கிறாயா?”

நேத்ரா பிஸ்டலை விட்டுவிட்டான். க்யூ அருகில் வந்து அதை கையில் எடுத்துக் கொண்டு உரத்தக் குரலில் சிரித்தான். “சக மனிதன் கஷ்டத்தில் இருந்தால் நீ மற்ற விஷயங்களை மறந்து விடுவாய் என்று எனக்கு தெரியும் நேத்ரா. அதனால்தான் பொய் சொன்னேன். அந்த வேனில் இருப்பவை உயிர் இல்லாத உடல்கள். பூஷணத்தின் பரிசோதனைச் சாலையில் சமிதையாக மாறியவர்கள்.”

வாகங்களின் சத்தம் நெருங்கிக் கொண்டிருந்தது.

“குட் பை நேத்ரா! அடுத்த பிறவியில் சந்திப்போம்” என்று நேத்ராவுக்கு மேற்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளிக்காமல் துப்பாக்கியால் சுட்டான்.

நேத்ரா காற்றில் டைவ் செய்தான்.

ஆனால் ஏஜெண்ட் க்யூ உலகத்திலேயே சிறந்த ஷூட்டர். முதல் குண்டு இலக்குத் தவறி விட்டாலும், இரண்டாவது குண்டு நேராக போய் தாக்கியது.

நேத்ரா நீரில் குதித்துவிட்டான். அதகுள் மற்றொரு குண்டு அவன் உடலில் ஊடுருவி விட்டது. தொடர்ந்து அடுத்தது ... அடுத்தது...

தண்ணீர் சிவப்பாக மாறியது. க்யூவின் இதழ்களில் குறுநகை படர்ந்தது.

நேத்ராவின் உடல் பிணமாய் மாறி மேலே மிதந்தது. அதற்காகவே காத்துக் கொண்டிருந்த க்யூ வாகனத்தை நோக்கிப் போய் கொண்டே, “குவிக்! நீ இங்கிருந்து உடனே போய் விடு” என்றான். அடுத்த நிமிஷம் பூஷணத்தின் வேன் அங்கிருந்து மாயமாகி விட்டது. க்யூவின் ஹெலிகாப்டர் காற்றில் எழும்பியது. ஒரு நிமிஷத்திற்கு முன்னால் நடந்த கோரமான சம்பவத்தின் சாயல் அங்கே எதுவும் இருக்கவில்லை.

அங்கே எதுவுமே இல்லை.

சென்ட்ரல் இன்டலிஜென்ஸ் சீஃப் தன் படையுடன் அங்கே வந்த போது அங்கே யாருமே இல்லை. தண்ணீர் மட்டும் சிவப்பாக இருந்தது. அவர் மனம் தீங்கை எடைபோட்டது.

“ஸர்ச்!” என்று கத்தினார்.

சட்டென்று நான்குபேர் நீரில் குதித்தார்கள். ஒரு நிமிடம் கழித்து சலனமற்ற நேத்ராவின் உடலே வெளியே கொண்டு வந்தார்கள்.

“நேத்ரா!” தழுதழுக்கும் குரலில் அவன் உடலைத் தொட்டார் பகீரதன். ஒரு ஏஜெண்டுக்கும் உயர் அதிகாரிக்கும் இடையே இருப்பதைவிட மேலான உறவு அவர்களுடையது.

நேத்ரா ஏதோ பேச முயற்சித்தான். “ஏஜெண்ட் க்யூ... க்யூ” என்றான். அதற்குள் அவன் தலை சாய்ந்து விட்டது.

அதிகாரிகள் எல்லோரும் தொலைவில் நின்று கொண்டிருந்தார்கள்.

குண்டுகள் பாய்ந்துவிட்ட நேத்ராவின் உடலை திகைப்புடன் பார்த்தபடி இருந்துவிட்டார் பகீரதன்.

## 5

இரவு பதினொன்றரை ஆகி இருந்தது.

அந்த அறையில் விளக்கு இல்லை. அதன் தேவையும் இல்லை. காரணம் பார்வையற்றவர்களின் ஹாஸ்டல் அது. அறையின் நடுவில் அமர்ந்துகொண்டு ஒரு இளம் பெண் தன் அண்ணனுக்கு கடிதம் எழுதிக் கொண்திருந்தாள். எழுதுகிறாள் என்பதை விட செதுக்குகிறாள் என்று சொன்னால் சரியாக இருக்கும். பிரெயிலி மொழியில் காகிதத்தின் மீது ஊசியால் குத்தியபடி கடிதத்தை எழுதி முடித்தாள்.

டேய் பாஸ்கர் அண்ணா!

நீ ஒரு முட்டாள் என்று எனக்கு இன்றுதான் புரிந்தது. எனக்காக நீ பிரெயிலி மொழி கற்றுக்கொள்ள வில்லை

என்றும், நீ எழுதிய கடிதங்களை எல்லாம் நேத்ரா அண்ணனைக் கொண்டு எழுத வைப்பதாகவும், அது போலவே நான் எழுதிய கடிதங்களை கூட தன்னைக் கொண்டு படிக்க வைப்பதாகவும் தாத்தா சொன்னார். பார்வையில்லாத தங்கையை எதற்காக ஏமாற்றுகிறாய்? நேத்ரா அண்ணனுக்கு இருக்கும் அன்பில் மூன்றில் ஒரு பங்கு உனக்கு இருந்தாலும் நான் ரொம்ப சந்தோஷமடைந்து இருப்பேன். அன்பு இருக்கு. ஆனால் கஷ்டப்படத்தான் முடியாது என்பாய். மேலாக பார்த்தால் கஷ்டமாக தெரியும் இந்த பிரெயிலியை கற்றுக்கொள்வது மிகவும் சுலபம். வேண்டுமானால் நேத்ரா அண்ணனிடம் கேட்டு தெரிந்துகொள். அவனைப் பார்த்து பாடம் கற்றுக்கொள். அவன் எனக்காக இந்த மொழியைக் கற்றுக் கொண்டான். நீ என்னை ஏமாற்றிய குற்றத்திற்கு தண்டனையாய் இந்த வருஷம் உனக்கு ராக்கி கட்டப் போவதில்லை.

ஆபீசில் மின்சாரம் போய் விட்டது போலும். வார்டன் சலித்துக் கொள்கிறாள். இது போன்ற சமயத்தில்தான் கண்பார்வை இல்லாமல் போனதால் ஏற்படும் நன்மைகள் தெரியும்."

உன் கல்யாணி

மறுநாள் கடிதத்தை தபால்பெட்டியில் போட்டுவிட்டு பள்ளிக்குச் சென்றாள். அன்று சேட் கன்வர்லால் பிறந்த நாள். ஒவ்வொரு வருடமும் பார்வையற்ற மாணவ மாணவியருக்கு இனிப்பும், உடைகளும் வழங்குவது கன்வர்லாலின் பழக்கம்.

எல்லோருக்கும் வழங்கிக்கொண்டே வந்தார்.

"எதற்காக இந்த வெகுமதிகள்?" கேட்டாள் கல்யாணி.

"என் பிறந்தநாள். அதற்காக."

"உங்கள் பிறந்த நாளன்று உங்களிடம் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு வழங்கலாமே. எங்களுக்கு எதற்கு?"

கன்வர்லால் கொஞ்சம் சங்கடமாக உணர்ந்தார். “கடவுள் உங்களுக்கு அநியாயம் செய்து விட்டார் என்பதால்.”

“இரக்கம் காட்டுவதால் எங்கள் குறைபாட்டை திரும்பவும் நினைவுப் படுத்துகிறீர்கள். இதைவிட எங்கள் பள்ளிக்கு நன்கொடை கொடுங்கள். எங்கள் திறமைகளை மேலும் வளர்த்துக்கொள்ள ஊக்கம் கொடுங்கள். எங்களுக்கு இரக்கம் தேவையில்லை. ஆதரவு தாருங்கள். புண்ணியத்திற்காக தான தர்மம் வேண்டாம். சம உரிமைக்காக மனித நேயத்தை காட்டுங்கள்.”

கன்வர்லால் மனம் இளகிவிட்டது. “இதையெல்லாம் யார் கற்றுக் கொடுத்தாங்கம்மா உனக்கு?”

“எங்கள் நேத்ரா அண்ணன்.”

“நீ சொன்னது ரொம்ப சரி. உன் வார்த்தைகளால் என் கண்கள் திறந்து கொண்டன என்று என்னால் சொல்ல முடியாது. ஏன் என்றால் நானும் உன்னைப் போல் பிறவிக் குருடன் என்பதால்.”

கல்யாணி சட்டென்று, “சாரி” என்றாள்.

“பரவாயில்லை அம்மா. புதியதொரு உண்மையை தெரிந்து கொண்டேன்” என்று சொல்லிவிட்டு போய்விட்டார்.

அன்று முழுவதும் பள்ளியில் டீச்சர் அவர்களுக்கு பிரெயிலி பேப்பர்களைத் தந்தாள். “நாளை முதல் பதினைந்து நாட்கள் விடுமுறை. வீட்டுப் பாடமாக இன்றைய நாளேட்டில் வந்த செய்திகளை பிரெயிலியில் மாற்றி உங்களுக்குத் தருகிறேன். காபி செய்து எடுத்து வாங்க.” ஒரு நாள் நாளேட்டில் வந்த செய்திகளை பிரெயிலி மொழியில் மாற்றுவதற்கு பதினைந்து நாட்கள் தேவைப்படும்.

வீட்டுக்கு வந்த பிறகு கல்யாணி பேப்பரை படிக்கத் தொடங்கினாள். ஒரு மூலையில் வந்த சிறு செய்தி.

“இன்டர்போல் ஏஜெண்ட் நேத்ராவின் கொலை!”

அவளுக்கு ஒரு நிமிஷம் ஒன்றும் புரியவில்லை. அது கனவா நிஜம்தானா என்று புரியவில்லை. சட்டென்று எழுந்து நின்றாள். கை பட்டு பேப்பர் கீழே விழுந்தது. நடுங்கும் கரங்களால் அதனை கையில் எடுத்துக் கொண்டாள்.

ரொம்ப தீனமான நிலை அது.

தனக்கு பார்வையில்லாத சங்கடத்தை வாழ்நாளில் முதல் முறையாய் எதிர்கொண்டாள்.

கையால் தடவி படித்தாள். இது நிஜம்தானா? இல்லை பிரமையா?

அவன் ஒன்றும் அரசியல் தலைவன் இல்லை. சமூக சேவகனும் இல்லை. அதனால் முதல் பக்கத்தில் அந்த செய்திக்கு இடம் இருக்கவில்லை. ஏதோ ஒரு மூலையில் நான்கே வரிகள்.

தனக்கு பார்வையில்லாமல் போனதற்கு முதல் முறையாய் அந்தப் பெண் அழுதாள். அந்த செய்தியைத் தான் சரியாக புரிந்துகொண்டாளோ இல்லையோ. பேப்பரில் அந்த செய்தி எங்கே இருக்கிறது என்று தெரிந்துக் கொள்வதற்காக பேப்பர் முழுவதையும் விரல்களால் தடவிக் கொண்டிருந்தாள்.

*****

அரசு மரியாதை தெரிவிப்பது போல் காற்றில் துப்பாகிகள் வெடித்தன. பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பிண ஊர்த்தி வந்து நின்றது. போலீஸ் அதிகாரிகள் செல்யூட் செய்தபடி நின்றார்கள். நேத்ரா எத்தனை முறை நாட்டை விபத்திலிருந்து காப்பாற்றியிருகிறான் என்று அந்த டிபார்ட்மெண்டில் இருப்பவர்களுக்கு மட்டுமே தெரியும்.

நேத்ராவின் மரணத்தினால் நாடு ஒரு பெரிய சீக்ரெட் ஏஜெண்டை இழந்து விட்டது என்று பிரதமர் இரங்கல் செய்தி அனுப்பியிருந்தார்.

அவனுக்கு தாய் தந்தை இல்லை. தாத்தா மட்டுமே இருந்தார். அவர்தான் சிதைக்கு தீ மூட்டினார்.

ஆஜான்பாகுவான தோற்றம். துக்கத்தை வெளியில் காட்டிகொள்ளாமல் கம்பீரமாக இருந்தார்.

பகீரதன் தொலைவில் நின்று கொண்டிருந்தார். நேத்ராவை ஷூட் செய்தது ஏஜெண்ட் க்யூதான் என்று தெரியும். திரைக்கு பின்னால் பூஷணம் இருப்பதும் தெரியும். இருந்தாலும் எதுவும் செய்ய முடியாத இயலாமை.

கஜபதிராவ் சிதைக்கு நெருப்பு மூட்டிக் கொண்டிருந்தார். பகீரதன் அந்த நெருப்பையே பார்த்துக் கொண்டிருந்தார். தொலைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்தவர்களில் பூஷணமும் இருந்தார். இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன.

‘உன்னை தூக்கு மேடையில் ஏற்றும் வரையில் அந்த நெருப்பு எரிந்துகொண்டுதான் இருக்கும் பூஷணம்’ நினைத்துகொண்டார் பகீரதன்.

நேத்ராவின் உடல் சாம்பலாக மாறிக்கொண்டிருந்தது. அதே சமயத்தில் ஏஜெண்ட் க்யூ வல்லியூர் என்ற குக்கிராமத்தை நோக்கி போய்க் கொண்டிருந்தான்.

## 6

“ஐ யாம் சாரி சார். இப்படி நடந்து விட்டதற்கு நான் மிகவும் வருந்துகிறேன்” என்றார் பகீரதன்.

“நான் வருத்தப் படவில்லை. என் பேரன் ஒரு பகைவனை எதிர்த்து யுத்தத்தில் மரணம் அடைந்தான்.”

தொலைவில் விசும்பி விசும்பி அழும் சத்தம். பகீரதன் தலையைத் திருப்பிப் பார்த்தார். கஜபதியின் மனைவி புடவைத் தலைப்பால் வாயை பொத்தி அழுகையை அடக்க முயன்று கொண்டிருந்தாள். பக்கத்திலேயே பார்வையில்லாத பெண் ஒருத்தி அவளை தேற்றுவது போல் கையால் தடவிக் கொண்டிருந்தாள்.

அவர் நிசப்தமாக வெளியே வந்து விட்டார். பாஸ்கர் அவரை பின்பற்றினான்.

சிற்பி ஒருவன் இரவும் பகலும் கஷ்டப்பட்டு செதுக்கிக் கொண்டிருந்த சிற்பம் ஒன்று இடி விழுந்து சுக்கு நூறானால் எப்படி இருக்குமோ அது போல் இருந்தது கஜபதியின் மனநிலை. எழுந்து மனைவியின் அருகில் சென்றார்.

“அழாதே பார்வதி!. பாஸ்கர், கல்யாணி இவர்கள் மட்டும் நம் குழந்தைகள் இல்லையா? கல்யாணி! உள்ளே அழைத்துப் போம்மா.”

கல்யாணி அந்தம்மாளை உள்ளே அழைத்துப் போனாள். அவர் நேத்ராவின் போட்டோவைப் பார்த்தார். அவனுக்கும் தனக்கு நிறைய ஜாடை இருக்கிறது. நாற்பது வருடங்களுக்கு முன் தான் அது போலவே இருந்தான். கண்களில் அதே பழி வாங்கும் உணர்வு! எதிரியை எப்படியாவது வெற்றிகொள்ள வேண்டும் என்ற வெறி. இரண்டு உலகப்போர்களில் வெற்றி பெற்றார். ஆனால் வெற்றி எதிரிகளை அழிக்காது. திரும்பத் திருமப் உருவாகிக்கொண்டே இருப்பார்கள். இந்த முறை தோல்வி தன் பேரனுக்கு.

போட்டோ அருகில் சென்றார். கல்யாணி கட்டிவிட்ட ராக்கி தென்பட்டது. மனிதனுக்கு சென்டிமென்ட் அதிக சந்தோஷத்தைத் தருமா? கம்பீரமாக இருப்பது அதிக மகிழ்ச்சியைத் தருமா? தன் மனைவியைப் போலவோ, கல்யாணியைப் போவோ அழ முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

ராக்கியை கையில் எடுத்துக் கொண்டார். அவர் மனம் முழுவதும் ஏதோ உத்வேகம் பரவியிருந்தது. நேத்ரா இறந்து போன போது, “அண்ணா!” என்று ராக்கியை கையில் பிடித்துக்கொண்டு கல்யாணி அழுதத்தைப் பார்த்தபோது வேடிக்கையாக இருந்தது. இந்த பெண்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று நினைத்தார். பின்னே இப்போ தன் விரல்கள் ஏன் நடுங்குகின்றன? நோ... நோ.. என்று நினைத்துக் கொண்டார், கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே.

வெளியில் கார் அருகில் வந்த பாஸ்கர் பகீரதனிடம் சொன்னான். “என்னையும், கல்யாணியையும் சிறுவயது முதல் கணபதிதான் வளர்த்து வந்தார். நேத்ராவை முன்னோடியாக எடுத்துக்கொண்டுதான் நான் இந்த டிபார்மென்டில் சேர்ந்தேன்.”

பகீரதன் எதுவும் பேசவில்லை. தன்னுடைய யோசனையில் ஆழ்ந்து இருந்தார். இருவரும் கார் அருகில் வந்தார்கள்.

பகீரதன் பாஸ்கரின் தோளில் கையைப் பதித்தார். “பாஸ்கர்! நீ இந்த கேஸை எடுத்துக் கொள்கிறாயா?”

ஊகித்திராத பிரபோசல் அது. ஒரு பக்கம் மகிழ்ச்சி. ஜூனியர் ஆக இருக்கும் தன்னிடம் இந்த கேஸை ஒப்படைப்பதற்கு. இன்னொரு பக்கம் வேதனை. நண்பனின் உயிரைப் பலி வாங்கி விட்ட கேஸை தான் டேக்கப் செய்ய வேண்டி வருவது. ஆனால் பழி!

பழிவாங்கும் உணர்வு நிரம்பிய குரலில், “கட்டாயம் சார். உயிர் போனாலும் சரி, அவனுக்கு ஒரு முடிவு கட்டி விடுகிறேன்” என்றான் பாஸ்கர்.

தான் ஒரு பெரிய மலையுடன் மோத இருப்பதாக அந்த நிமிடம் அந்த செம்மறி ஆட்டுக்கு தெரியாது. தான் செய்து கொண்டிருக்கும் தவறு தெரியாத பகீரதன், “க்யூ இந்த நாட்டிலேயே இருக்கிறான். மீதி விவரங்களை நீ சோதித்து தெரிந்துகொள்” என்றார்.

அதன் விளைவை ஆறுமாதங்களுக்கு பிறகு அனுபவிக்க வேண்டி வந்தது.

“தாங்க்ஸ் சர்! ஜூனியர் ஆக இருந்த போதிலும் என்னிடம் இவ்வளவு பெரிய வேலையை ஒப்படைத்ததற்கு.”

பகீரதன் வேதனையுடன் சிரித்தார். “மேலோ டிராமா என்றால் இதுதான். பூஷணம் கேஸை நேத்ராவிடம் ஒப்படைத்த போது இவ்வளவு சிறிய கேஸை அவனிடம் தருவதா என்று நினைத்தேன். இதில் க்யூ இருக்கிறான் என்று நினைக்கவில்லை. கவனமாக இரு

பாஸ்கர்! அதைவிட என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை. சின்ன கேஸ் மட்டும் இல்லை. அதை மட்டும் என்னால் சொல்ல முடியும்” என்றார்.

அந்த விஷயம் தனக்கும் தெரியும் என்பது போல் தலையை அசைத்த பாஸ்கர் ஒரு நிமிடம் கழித்து, “பூஷணத்தின் மீது கூட ஒரு ஏஜெண்டை ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் இல்லையா?” என்றான்.

“ஆமாம். ஏஜெண்ட் பிரதிமாவிடம் அந்த கேஸை ஒப்படைத்து இருக்கிறேன்” என்றார்.

*****

பிரதிமா குளியலறையில் குளித்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு வயது இருபத்தி நான்கு. பட்டபடிப்பு முடித்ததுமே இந்த வேலைக்கு வந்து விட்டாள். புத்திசாலிதான். ஆனால் பரபரப்பு கொஞ்சம் அதிகம். சந்தேகப்பிராணி. அடிக்கடி ஆபத்துகளில் ஊடுருவிப் பாய்வது அவளுக்குப் பிடிக்கும். துரதிர்ஷ்டவசமாய் பெரும்பாலும் அந்த ஆபத்துகள் அவளாக ஏற்படுத்திக் கொண்டவைதான்.

சில மாதங்களுக்கு முன்னால் பூஷணத்தின் கேஸ் டிபார்மென்ட் அவளை டேக்கப் செய்யச் சொன்ன பொழுது அவள் பூரித்துவிட்டாள். அந்த நிமிடம் முதல் மரணம் தன்னைத் துரத்தி வருவதாக பாவித்துவிட்டாள். சதா சர்வகாலமும் ஜாக்கிரதைகளை மேற்கொண்டாள்.

அவளுக்கு பாட்டியைத் தவிர வேறு யாரும் இல்லை. பாட்டியின் கணவர் டிப்யூட்டி தாசீல்தாராக வேலை பார்த்துக் கொண்டிருந்த போது இறந்து விட்டார். அந்தம்மாளுக்கு தன் கணவர் மீது அபாரமான மதிப்பு. அந்த நாட்களில் அவர் மட்டும் இல்லையென்றால் நாட்டின் முன்னேற்றம் ஐநூறு ஆண்டுகள் பின் தங்கியிருக்கும் என்பது அவள் திட நம்பிக்கை. பாட்டிக்கும் பேத்திக்கும் இடையே உரையாடல் அமெரிக்கன், ரஷியன் ஜனாதிபதி லெவலில் நடக்கும்.

“பாட்டீ! நீ எந்த காசியோ, ராமேஸ்வரமோ போய் இருக்கக் கூடாதா?”

“எதுக்காக?”

“சீக்ரெட் ஏஜெண்டுகளுக்கு சொந்தபந்தம் என்று யாரும் இருக்கக் கூடாது. நீ மட்டும் இல்லை என்றால் நான் தனியாக ஆபத்துகளில் குதிக்கலாம்.”

“ஐயோ ஐயோ! இதென்ன வேண்டாத வார்த்தைகள்? நீ போகும் முன் என்னை போகச் சொல்கிறாயா?”

“அது இல்லை பாட்டீ! நாட்டுக்காக உயிரையும் கொடுப்பதற்குத் தயாராக இருப்பவர்களுக்கு எந்த பந்தமும் இருக்கக்கூடாது. அதுதான் உன்னை காசிக்குப் போகச் சொல்கிறேன்.”

“சொல்லுவாய் சொல்லுவாய். உன் தாத்தா டிப்டி தாசீல்தாராக இருந்த நாட்களில் உன்னைப் போன்ற ஏஜெண்டுகள் வீடு முழுவதும் இருப்பார்கள். சமையல் முதற்கொண்டு காய்கறி வாங்கி வருவது வரை எல்லா வேலைகளையும் அவர்களே செய்வார்கள்.”

“மை காட்! மானத்தை வாங்குகிறாய் பாட்டீ. அவர்கள் ஏஜெண்டுகள் இல்லை சர்வெண்ட்ஸ்.”

“யாராக இருந்தால் என்ன? லட்சணமாக கல்யாணம் செய்துகொள்ளாமல் இந்த பைல்கள், துப்பாக்கிகள் இதெல்லாம் என்ன?”

இப்படித்தான் அவர்கள் உரையாடல் தொடர்ந்து கொண்டிருக்கும்.

பிரதிமாவின் அழகு அவள் கழுத்தின் அருகில் இருந்தது. அவள் சீக்ரெட் ஏஜெண்ட் ஆக இருப்பதை விட அழகுப் போட்டியில் சிறப்பாக விளங்குவாள். அதற்காக வேலையில் சிரத்தை இருக்காது என்று இல்லை. கொடுத்த காரியத்தை முடிக்கும் வரையில் உறங்க மாட்டாள். ஆனால் இறுகிய உதடுகளுக்குப் பின்னால் பிடிவாதத்தைவிட குறும்புத்தனமும், பரபரப்பும், வெகுளித்தனமும் அதிகமாய் தென்படும்.

அவள் ஷவரின் அடியில் குளித்துக் கொண்டிருந்த போது தங்கப் பதுமை ஒன்று பாற்கடலில் குளிப்பது போல் இருந்தது.

பூஷணத்தைப் பற்றி யோசித்தப்படியே அவள் குளித்துக் கொண்டிருந்தாள். அவள் சேகரித்த விவரங்களின் படி கடந்த இரண்டு மாதங்களில் பூஷணம் வல்லியூருக்குச் சென்று இருக்கிறார்.

எதற்காக?

அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த போது அவள் காதுகளுக்கு தன் பிளாட் வாசற்கதவு திறந்துகொள்ளும் சத்தம் கேட்டது. அவள் மூன்றாவது மாடியில் இருக்கிறாள். சாவியின் துவாரம் வழியாக பார்த்தாள். படுக்கை அறைக்கு அப்பால் ஹாலில் இரண்டு கால்கள் உள்ளே நுழைந்து கொண்டிருப்பது தெரிந்தது.

“பாட்டீ!” ரகசியமான குரலில் கூப்பிட்டாள்.

பதில் இல்லை.

“பாட்டீ!” மற்றொரு முறை அழைத்தாள்.

மெலிதான முனகல் கேட்டது.

அவள் ஷவரை நிறுத்தினாள். அந்த நிசப்தம் மேலும் பயங்கரமாக இருந்தது. அவள் காதுகளைத் தீட்டிக்கொண்டு கேட்டாள். வெளியில் யாரோ நாற்காலியை இழுத்த சத்தம். திரும்பவும் நிசப்தம்.

அதன் பிறகு இரண்டாவது நபரின் காலடிச் சத்தம்.

மேஜைமீது எதையோ வைத்த சத்தம். ட்ரேயை நகர்த்திய சத்தம்.

பிரதிமா மெதுவாக எழுந்து உடலில் டவலை சுற்றிக் கொண்டாள். பாத் டப் விளிம்பில் இருந்த துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சத்தம் போடாமல் ஒரே எட்டில் முன்னால் பாய்ந்து இரண்டு கைகளாலும் துப்பாக்கியால் குறிப் பார்க்கப் போனாள். அதற்குள் உடலில் சுற்றிக் கொண்டிருந்த டவல் நழுவப்

போனபோது ஒரு கையால் அதை இறுக்கிப் பிடித்துக்கொண்டு, உரத்தக் குரலில், “ஹேண்ட்ஸ் அப்!” என்று கத்தினாள்.

அந்தக் கத்தல்கள் அறையின் சுவர்கள் எதிரொலித்தன.

நாற்காலியில் உட்கார்ந்திருந்த பெரியவர் திடுக்கிட்டு காபி மேலே ஊற்றிக்கொண்டு விருட்டென்று எழுந்துகொண்டார். அவர் சி.பி.ஐ. சீஃப் பகீரதன்.

“ஓ... நீங்களா சார். சாரி... சாரி” என்று புடவைக்காக பக்கத்து அறைக்குள் எம்பிக் குதித்தாள். நல்லவேளையாக அவர் பின்னால் திரும்பிப் பார்ப்பதற்குள் அவளால் பக்கத்து அறைக்கு போய் விட முடிந்தது. அதே நேரத்தில் பாட்டி எதிரே வந்தாள்.

“குரங்கு போல் இந்த குதியாட்டம் என்ன?” என்றாள் ட்ரேயை எடுத்துப்போய் கொண்டே.

தன் காதில் விழுந்த சத்தங்களின் பின்னணி என்னவென்று அவளுக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

“உனக்கு மூளையே இல்லை பாட்டி. கூப்பிட்டால் பதில் குரல் கொடுக்க வேண்டாமா? எவனோ வெளிநாட்டு ஒற்றன் வந்து விட்டன என்று நினைத்து விட்டேன். அதிர்ஷ்டம் நன்றாக இருந்து விட்டது. இல்லாவிட்டால் கிழவரின் மண்டை இன்றைக்கு வெடித்து சிதறி விட்டிருக்கும்” என்று உடைகளை மாற்றிக்கொண்டு வெளியே வந்தாள்.

நிமிடத்தில் சகலத்தையும் மாற்றிவிட்டு, “குட் மார்னிங் சார்” என்றாள், தேவைக்கும் அதிகமாக பணிவு கலந்த குரலில்.

“மிஸ் பிரதிமா! பூஷணத்தைப் பற்றி பைல் தயாரிக்கச் சொன்னேனே. செய்தாயா?”

“செய்து விட்டேன் சார். இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது” என்று சுவற்று கடியாரம் அருகில் என்று அதிலிருந்து சாவியை எடுத்து பீரோவைத் திறந்தாள். உள்ளே ஒரு சீக்ரெட் அறை இருந்தது. அதைத் திறந்து

உள்ளே இருந்து பைலை எடுத்து அவரிடம் கொடுத்தாள். இந்த நடைமுறையை எல்லாம், பட்டிகாட்டான் ஒருவன் மந்திரவாதியை பார்த்தது போல் பார்த்தார்.

“இன்னும் எத்தனை நாட்களில் பூர்த்தியாகும்?”

“ஒரிரண்டு நாட்களில் சார்.”

“குட்! உனக்கு ஒரு அறிவுரை சொல்ல நினைக்கிறேன். இயான் பிளெமிங் நாவல்கள் அதிகம் படிக்காதே.”

அவருடைய அறிவுரை அவளுக்கு புரியவில்லை.

உள்ளே போனவள் ஒரு டம்ளரை கைகுட்டையால் பதிலமாக எடுத்து வந்து, “நேற்று அவர் கொடுத்த பார்ட்டீக்குச் சென்றேன். ரொம்ப கஷ்டபப்பட்டு அவருடைய கைவிரல் அடையாளங்களை சம்பாதித்தேன். இதோ சார் அவர் குடித்த விஸ்கி டம்ளர்” என்றாள்.

கதவுக்குப் பின்னாலிருந்து பாட்டீ பிரதிமாவை அழைத்தாள்.

“என்னடீ இது? தங்கமான கண்ணாடி டம்ளரை அவரிடம் கொடுத்து விட்டாயே?”

“அதன் மீது ஒரு தேசத்ரோகியின் விரல் அடையாளங்கள் இருக்கு பாட்டீ.”

“என்ன அடையாளமோ என்ன எழவோ? நம் வீட்டுது என்று நினைத்து காலையில் சுத்தமாக கழுவி விட்டேனே?”

பிரதிமா அதிர்ந்து போனவளாய், “கழுவினாயா?” என்றாள்.

“பேஷாக! விம் போட்டு துலக்கினேன்,”

“பாட்டீ! நாட்டுக்காக உயிரைக் கொடுக்கும் சீக்ரெட் ஏஜெண்டுக்கு பாட்டியாக இருக்கும் தகுதி உனக்கு இல்லை.” ரோஷத்துடன் சொன்னாள். ஏற்கனவே சிவப்பாக இருந்த அவள் முகம் மேலும் சிவந்து விட்டது.

“இப்போ என்னவாகி விட்டது? அந்த விரல் அடையாளங்கள் இல்லை என்றாலும் என்னுடையது இருக்கும் இல்லையா? பைலில் வைத்துக் கொள்வதற்கு அவை போதும்.”

“இன்டர்போல் என்றால் உனக்கு விளையாட்டாய் இருக்கிறதா பாட்டீ?”

“சொல்லுடியம்மா சொல்லு. உன் தாத்தா மட்டும் உயிரோடு இருந்தால்...”

“இன்றைக்கு நீ செய்த காரியத்திற்கு நைய புடைத்திருப்பார். வாயை மூடு” என்றபடி அங்கிருந்து முன் அறைக்கு வந்தாள். பகீரதன் அவளுக்காக காத்திருந்தார்.

“சாரி சர். நாளைக்கு அவருடைய குடும்ப உறுப்பினர்களின் போட்டோக்களை சம்பாதிக்கிறேன்” மன்னிப்பு கேட்டுக் கொள்வது போல் சொன்னாள்.

அவர் எழுந்து கொண்டார்.

பிரதிமா கொஞ்சம் தயங்கினாள். பூஷணம் அடக்கடி வல்லியூருக்கு போவதைப் பற்றி அவரிடம் சொல்ல நினைத்தாள். மறுநாளே அந்த விஷயமாய் விசாரிக்க தானே அந்த ஊருக்கு போவதாக நினைத்திருந்தாள். அதைப் பற்றியும் சொல்ல நினைத்தவள் ஏனோ இறுதியில் நின்றுவிட்டாள்.

பக்ஸ்!

சீக்ரெட் ஏஜெண்டுகளின் வீடுகளில் எதிரிகள் உளவாளிகளை ஏற்பாடு செய்து ரகசியங்களை தெரிந்து கொள்வார்கள் என்ற விஷயம் அவளுக்கு நினைவுக்கு வந்தது. அதிலும் அவள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கேஸை பரிசோதிக்கும் ஏஜெண்ட் வேறு.

பயண விஷயத்தை தனக்குள்ளேயே வைத்துக் கொண்டாள்.

மறுநாள் வல்லியூருக்குக் கிளம்பினாள்.

அதுதான் குடியை மூழ்க வைத்து விட்டது.

# 7

பஸ் பழுதடைந்து பிரதிமா வல்லியூருக்குப் போய்ச் சேருவதற்குள் இரவு பத்தரையாகி விட்டது. அதற்குள் ஏறக்குறைய ஊரே உறக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்தது. அத்தனை சின்ன ஊர் அது.

அவள் மேக்கப்பில் அதிக மாறுதல் இல்லை. வேலையில் சேர்ந்து அதிக நாள் ஆகவில்லையாதலால் தன்னை யாரும் அடையாளம் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்ற துணிச்சல் இருந்தது அவளுக்கு.

சில நாட்களுக்கு முன்னால் சீஃப் அவளிடம் பூஷணத்தைப் பற்றி விவரம் சேகரிக்கச் சொன்ன பொழுது பூரித்துப் போனாள். ஜூனியரான தன்னிடம் அத்தனை பெரிய கேஸ் வந்தது தன் அதிர்ஷ்டமாய நினைத்தாள். அதிலிருந்து மிக கவனமாய் அந்த வேலையைச் செய்து வந்தாள். சீக்கிரமாய் ஒரு முடிவிற்கு வருவது, ஒவ்வொன்றையும் சந்தேகப்படுவது போன்ற குணங்களைத் தவிர அவள் வேலையில் எந்த குறையும் சொல்ல முடியாது.

குடும்பக் கட்டுபாட்டு அதிகாரியைப் போல் கொண்டை முடிந்து, நூல் புடவையைக் கட்டிக்கொண்டு, கையில் குடையுடன் அவள் பஸ்ஸிலிருந்து இறங்கினாள். பஸ் ஸ்டாண்டிற்குப் பக்கத்திலேயே இருந்த பெட்டிக்கடையில் விசாரித்தாள்.

“பிரசிடென்டின் வீடு எங்கே இருக்கு?

அந்த ராத்திரி வேளையில் வந்த அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டு, “யாரு, ரெட்டி நாயுடுவா?” என்று எதிர்க்கேள்வி கேட்டான் கடைக்காரன்.

“ஆமாம்.”

“நேராகப் போனால் சோத்துக் கைப் பக்கமாய் ஒரு கொட்டகை இருக்கும். அதுக்கும் பக்கத்துக்கு வீடுதான்.”

பிரதிமா நடக்கத் தொடங்கினாள். பெட்டிக்கடை பெஞ்சின் மேல் உட்கார்ந்திருந்த இளைஞர்கள் இரண்டு பேர் எழுந்து, அவளைத் தொடர்ந்தார்கள். தெரு

முழுவதும் ஒரே இருட்டு. வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்தன. ஒருவன் அவளுக்குப் பின்பக்கமாய் வந்து காதில் ஏதோ கிசுகிசுத்தான். அவன் பேசிய தமிழ் புரியவில்லை. அவள் நடை வேகத்தை அதிகரித்தாள். பின்னாடி வந்தவர்களும் வேகத்தை அதிகரித்தார்கள். அவள் பயந்தது அவர்களுக்கு மேலும் துணிச்சலைத் தந்தது. ஒருவன் இடுப்பில் கையை வைத்தான். அவள் கையை உதறிய போது சிரித்தான். அவள் கத்தாததால் இன்னும் கொஞ்சம் முன்னுக்குப் போனான்.

அவள் யோசித்தது வேறு. அனாவசியமாய் ரகளை ஏற்படுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. அதுதான் தயங்கினாள்.

அவள் பேசாமலிருந்ததைப் பார்த்துவிட்டுப் பின்னாலிருந்தவன், அவள் வயிற்றிலிருந்து கையைக் கீழே நகர்த்தினான். அவள் புடவைக் கொசுவங்களிளிருந்து கை கீழே போயிற்று. அவள் கத்தினால் வாயை பொத்தலாம் என்று இன்னொருவன் தயாராயிருந்தான். அவள் கத்தவில்லை. கால் மட்டும் காற்றில் எம்பிற்று.

புடவை கட்டிக் கொண்டிருந்ததால் கொஞ்சம் சிரமமாயிருந்தது. இல்லாவிட்டால் அந்த உதைக்கு அவன் மூன்று மாதம் படுக்கையில் கிடந்திருப்பான். பயிற்சியின் போது முதன் முதலில் அந்த மாதிரி உதைக்கக் கற்றுத் தருவார்கள். அவள் காலால் உதைத்த உதைக்கு அவன் போய் தெருவோரத்தில் இருந்த சாக்கடையில் விழுந்தான். அவனோடு கூட இருந்த இரண்டாவது ஆளுக்கு ஒன்றும் புரியவில்லை. திடீரென்று நண்பன் எப்படி மாயமானான் என்று புரியாமல் இருட்டில் கண்களால் துழாவிப் பார்த்துக்கொண்டே, “என்னவாச்சு?” என்று கேட்டான்.

“ஒன்றுமாகவில்லை. நீ இந்தப் பக்கம் ஒரு முறை பார்” என்றாள்.

அவன் உல்லாசமாய் சிரித்துக்கொண்டே அவளைப் பார்த்தான்.. அவன் கன்னம் அதிர்ந்தது.

பயங்கரமான தீவிரவாதிகளிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்காக அடிக்கும் அடி அது. அவன் தாடை சரிந்து விட்டது. இனி வாழ்க்கையில் என்றுமே அவன் மேல் பற்களும் கீழ் பற்களும் சந்திக்கும் வாய்ப்பு இருக்காது.

அடுத்த வினாடியே அவள் சாதாரணமாகி விட்டாள். கைப் பையில் இருந்த துப்பாக்கி கையால் தடவி பார்த்துக்கொண்டு படியேறி பிரசிடென்ட் வீட்டுக் கதவைத் தட்டினாள்.

*****

“நீ உடம்பைப் பிடிச்சு விட்டால் அசல் சொர்க்கத்தில் இருக்கிறார் போலவே இருக்குடா.” தன்மயக்கம் அடைந்து போய் சொன்னான் பிரசிடென்ட்.

வேதகிரி எஜமானரின் உடம்பைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தான். அரிக்கேன் விளக்கு மினுக் மினுக்கென்று ஒளிர்ந்து கொண்டிருந்தது எஜமானரின் வார்த்தைக்குக் கொஞ்சம் வெட்கமடைந்தவனாய், “போதும் தொரை! சும்மா புகழாதீங்க” என்றான்.

“புகழறது என்னடா? நான் என்ன சொல்லிட்டேன்? நீ உடம்பைப் பிடிச்சுவிட்டால் இந்த உலகத்தில் வேறு எதுவுமே தேவையில்லை என்றேன். அவ்வளவுதானே?”

வேதகிரி கண்களைச் செருகிக்கொண்டு, “ஆங்... நேற்று ராத்திரி துரைசானி கூட அப்படித்தான் சொன்னங்க” என்றான் ஆனந்தமாய்.

பிரசிடென்ட் அதிர்ந்துபோய் கட்டிலிலிருந்து எழுந்திருந்து, “என் பெண்ஜாதியின் உடம்பைப் பிடிச்சு விட்டாயாடா?” என்று கத்தினான் திடீரென்று.

எஜமானர் ஏன் அவ்விதமாய் அதிர்ந்து போய் எழுந்து உட்கார்ந்தார் என்று புரியவில்லை வேதகிரிக்கு. உல்லாசமாய்ச் சிரித்துக்கொண்டே, “ஆங்... பிடிச்சு

விட்டேன்” என்று அது ஒரு பெரிய சாதனையைப் போல் பதிலளித்தான்.

“டேய்... என்ன காரியம்டா பண்ணிட்டாய்?”

“தொரைசானி என்ன சொன்னாலும் அதைப் பண்ணனும்னு நீங்க தானே சொன்னீங்க?” எரிச்சலுடன் கேட்டான்.

“நான் சொன்னேனா?” பெரிதாய் கத்தினான்.

“சொல்லலியா? துரைசானி சொன்னதைப் பண்ணாவிட்டால் வேலை போயிடும்னு சொல்லலையா நீங்க?” அதைவிட பெரிதாய் அவன் கத்திப் பேசியதால் அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியாதவனாய் மென்று விழுங்கிக்கொண்டே கேட்டான் பிரசிடென்ட்.

“இன்னும் என்னடா பண்ணினாய்?”

“எனக்கு வெட்கமாயிருக்குது.”

“கொன்னுடுவேன். சொல்லப் போகிறாயா இல்லையா?”

“வேறென்ன பண்ணுவேன். உடம்பைப் பிடிச்சு விட்டேன். தலைக்கு எண்ணெய் தடவினேன். அப்புறம் குளிக்கணும்னு சொன்னதால..” அவன் வார்த்தை முடியக் கூடவில்லை.

பிரசிடென்ட் கட்டிலில் எம்பிக் குதித்து, “குளிபாட்டக் கூட செய்தாயாடா நீ?” என்று திட்டத் தொடங்கினான்.

“என்ன தொரை திட்டுறீங்க. நான் என்ன பண்ணிட்டேன்? தொரைசானி குளிக்கிறேன்னதும் தண்ணீர் எடுத்து வைச்சேன். அவ்வளவுதானே?”

பிரசிடென்ட் நிம்மதியாய் மூச்சு விட்டு, “அவ்வளவுதானா?” என்றான் திரும்பி கட்டிலில் சாய்ந்து கொண்டு.

“அவ்வளவுதான். அப்புறம் தொட்டுப் பார்த்தேன். அவ்வளவுதான்.” மெதுவாய் முடித்தான்.

அணைந்து விட்டது என்றெண்ணிய குண்டு திரும்பவும் வேடித்தாற்போல் அதிர்ந்துபோய், “தொட்டுப் பார்த்தாயாடா? குளிக்கப் போன என் பெண் ஜாதியை தொட்டுப் பார்த்தாயாடா?’

“தண்ணி ஜில்லுன்னு இருக்கா சூடா இருக்கான்னு தொட்டுப் பார்க்கத் தேவையில்லையா?”

பிரசிடென்ட் ஏதோ சொல்ல வந்தபோது வெளியே கதவைத் தட்டிய சப்தம் கேட்டது.

வேதகிரி போய்க் கதவைத் திறந்தான். எதிரே ஒரு பெண் தென்படவே ஓரடி பின்வாங்கினான்.

பிரதிமா தன் வாழ்க்கையில் என்றுமே அவ்வளவு அதிர்ச்சியடைந்ததில்லை. தான் கண்டது கனவா, நினைவா என்றுகூடத் தெரியவில்லை அவளுக்கு. அப்படியே சிலையாய் நின்று கொண்டிருந்தாள். அவள் இதயம் வேகமாய்த் துடித்தது. மூளையில் சமுத்திரத்தின் பேரிரைச்சல். எதிரே நின்று கொண்டிருந்தவன் அசல் நேத்ராவைப் போலவேயிருந்தான். தலைப்பாகையை எடுத்துவிட்டு, உடைகளை மாற்றி, கொஞ்சம் சீர்திருத்திவிட்டால் போதும் அவன் அப்படியே நேத்ராவைப் போலவே இருப்பான். ஒருத்தரைப் போலவே இன்னொருத்தரும் இருப்பார்கள் என்று தெரியுமே ஒழிய இவ்வளவு உருவ ஒற்றுமைகூட உண்டு என்று அறிந்திருக்கவில்லை.

“யார் வேணும் துரைசானி?” என்று கேட்டுக் கொண்டிருந்தான் வேதகிரி. அவளுக்கு அது காதில் கேட்கவில்லை. இன்னும் திக்பிரமையிலிருந்து மீளவில்லை அவள். தெளிவின்றி, “ஏஜெண்ட் நேத்ரா!” என்றாள்.

“தொரை... யாரோ ஏஜெண்ட் நேத்ராவாம். வந்திருக்காங்க” என்றான் வேதகிரி உள்ளே பார்த்தபடி.

அதற்குள் ஒரு பெண்ணின் குரலைக் கேட்டுவிட்ட பிரசிடென்ட் வேட்டியை சரி பண்ணிக்கொண்டு வெளியே வந்தான். பிரதிமாவை வரவேற்றபடி, “எம்.டி.ஒ.

சொன்னது உன்னைப் பற்றித்தானா? வா உள்ளே. ஃபேமிலி பிளானிங் ஆபீசர் என்றால் யாரோ வயதானவளாய் இருப்பாள் என்று நினைச்சேன். உன்னைப் போல் சின்னப் பெண் என்று நினைக்கவில்லை” என்றான்.

“நான் எங்கே தங்கியிருக்கணுமோ, அந்த வீட்டைக் காட்டினால்...” பிரதிமாவின் வார்த்தைகள் இன்னும் முடியக்கூடவில்லை.

“இவ்வளவு பெரிய வீட்டை வெச்சுகிட்டு இன்னும் வேறு எங்கேயோ எதுக்கு? எங்கள் வீட்டிலேயே இருக்கலாம்” என்றான் பிரசிடென்ட்.

“ஆமாம். தொரைசானிகூட இல்லை.” பக்கத்திலிருந்து வார்த்தைகளை எடுத்துக் கொடுத்தான் வேதகிரி. பிரதிமா எதற்கும் தயாராயிருக்கலாம் என்றெண்ணி காலை உதறி பார்த்துக்கொண்டாள்.

“வாயை மூடிக்கிட்டு அம்மாவுக்கு அறையைக் காட்டு. பாவம்! பஸ்ஸில் வந்திருக்கு. வெந்நீர் போடு.”

“தேவையில்லை” என்றாள் மேலுக்கு. ஆனால் குளித்தால்தான் உயிர் வரும் போலிருந்தது அவளுக்கு.

“தேவையில்லைன்னு சொல்லிட்டால் எப்படி துரைசானி? வா போகலாம்” என்றான் வேதகிரி.

அவளை உள்ளே அழைத்துச் சென்று கொண்டிருந்த வேதகிரி ஏதோ சந்தேகம் வந்தவனாய் திரும்பி, “சின்னம்மாவுக்குக் கூட ஒடம்பைக் கூட பிடிச்சு விடணுமா துரை?” என்று கேட்டான் பணிவாய். கேட்டுக் கொண்டிருந்த பிரதிமா அதிர்ந்து விட்டாள்.

“டேய்! புதுசாய் வந்திருக்கிற விருந்தாளியை இப்படி பயமுறுத்தலாமாடா?”

“இப்ப என்ன சொல்லிட்டேன்? வாங்க தொரைசானி. வீட்டையெல்லாம் காட்டறேன்” என்று உள்ளே அழைத்துச் சென்றான் வேதகிரி.

பெயருக்குத்தான் படுத்துக் கொண்டிருந்தாளே தவிர அன்றிரவெல்லாம் உறக்கமே வரவில்லை பிரதிமாவுக்கு.

ஏஜெண்ட் நேத்ராவுடன் அவளுக்குப் அறிமுகம் இல்லை. தொலைவிலிருந்து ஓரிரண்டு தடவை பார்த்திருக்கிறாள். அவ்வளவுதான். ஆனால் டிபார்ட்மென்டில் அவனைப்பற்றி எல்லோரும் பேசிக் கொண்டதைக் கேட்டிருக்கிறாள்.

நேத்ராவின் மரணம் டிபார்ட்மென்டிற்கு எத்தனை பெரிய இழப்பு என்பதை அறிவாள்.

அப்படிப்பட்ட நேத்ராவைப் போலவே இருந்த ஒருவனைத் தான் கண்டுபிடித்திருக்கிறாள். அந்தப் பரபரப்பில் அவளுக்கு அன்றிரவெல்லாம் உறக்கமே வரவில்லை.

மறுநாள் காலையில் குளித்துவிட்டு அவள் தபாலாபீசுக்குப் போக எண்ணியிருந்தாள். அறையோடு கூடிய தனி குளியலறை இல்லை. கொல்லையில் தட்டியால் கட்டப் பட்டிருந்தது குளியலறை. அவள் துணிகளை அவிழ்த்துத் தட்டியின் மேல் போட்டுவிட்டுப் பலகையின் மேல் உட்கார்ந்து கொண்டாள். எதிரே வாளியில் நீர் இருந்தது. மிகச் சூடாய் இருந்தது அவளுக்கு என்ன பண்ணுவதென்று புரியவில்லை திரும்பவும் உடை அணிந்துகொண்டு வெளியே போய்த்தான் தண்ணீர் கொண்டு வர வேண்டுமா என்றெண்ணிக் கொண்டிருந்த போதே, “என்ன வேணும் தொரைசானி? பச்சைத் தண்ணியா?” என்ற குரல் கேட்டது.

அவள் திடுக்கிட்டு சுற்றிலும் பார்த்தாள். பனைமரத்தின் மேல் வேதகிரி தென்பட்டான். வீலென்று அலறியபடி புடவையை இழுத்துக் கொண்டாள். அவள் முகம் சிவந்து விட்டது. அவன் இறங்கி வந்து தண்ணீரைக் கொண்டு வந்து வெளியே வைத்தான். வெகு நேரம்வரை மனம் ஒரு நிலையில் இல்லை. வெட்கத்தால் கூனிக்குறுகி விட்டிருந்தாள்.

பத்து மணியளவில் அவள் நகரத்திற்கு ட்ரங்கால் பண்ணினாள் தபாலாபீசிலிருந்து.

மறுமுனையிலிருந்து சீஃப் போனை எடுத்ததுமே, “ஆகாசத்தில் ஆடுகள், நீரில் பட்சிகள்” என்றாள் ரகசியமாய்.

“யாரு? பிரதிமாவா?”

“ஆமாம் சார். நான்தான்.”

“ஏதாவது அபாயத்தில் இருந்தால்தான் அந்த கோடைப் பயன்படுத்தணும். எங்கேயிருந்து பேசுகிறாய்?”

“வல்லியூரிலிருந்து.”

சீஃபின் குரல் கீச்சென்று வெளிவந்தது. “வல்லியூரிலிருந்தா? அங்கே எதுக்காகப் போனாய் நீ?”

“உங்களிடம் சொல்லிக்கொள்ள முடியாமல் போய் விட்டது சார். பூஷணம் கேஸ் விஷயமாய் விவரம் சேகரிக்க வரவேண்டியிருந்தது. அச்சுவார்த்தாற்போல் நேத்ராவைப் போலவே இருக்கும் ஒரு ஆள் இந்த ஊரில் இருக்கிறான். உலகத்தில் எட்டாவது அதிசயம் சார்! நான் தங்கியிருக்கிற வீட்டில்தான் இருக்கிறான்.” பரபரப்பு, ஆவேசம், உத்வேகம் நிரம்பிய குரலில் சொன்னாள்.

“ஈஸிட்?”

“ஆமாம் சார்! அவனைக் கொஞ்சம் சீர்திருத்தி எதிரிகளுக்கிடையே அனுப்பி வைத்தோமானால் பயந்து விடுவார்கள். இறந்துவிட்ட நேத்ரா திரும்பி வந்து விட்டான் என்று தெரிந்தால் போதும். அவர்கள் மானசீகமாய் பலவீனமடைந்து போய் விடுவார்கள். நேத்ராவின் பெயரைச் சொன்னால்...”

அந்த வார்த்தைகளைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு, டைரக்டர் மெதுவாய், “நேத்ராவின் பெயரைச் சொன்னால் எதிரிகள் என்ன ஆவார்களோ தெரியாது. ஆனால் உன் பரபரப்பைப் பார்த்தால் டிபார்மென்டில் பெண்கள் எப்படி பைத்தியமாய்

இருந்தார்கள் என்று புரிகிறது. அதுசரி, இப்போ என்ன செய்யச் சொல்கிறாய்?”

பிரதிமா கொஞ்சம் ஏமாற்ற மடைந்த போதிலும், சட்டென்று தேறிக்கொண்டு, “அந்த பட்டிகாட்டு ஆளைத் சீர்த்திருத்தி, படிப்புச் சொல்லிக் கொடுத்து, கோட்டு சூட்டு போட்டு நேத்ராவாய் மாற்றுகிறேன்” என்றாள்.

“அதுக்கு எவ்வளவு நாளாகும் தெரியுமா?”

“காட்டுத்திருடன் சினிமாவில் ஒரே பாடலில் எம்.ஜி.ஆர். அத்தனையும் கற்றுக் கொண்டு விடவில்லையா சார்? காளிதாசர் ஒரே ஒரு ஸ்பரிசத்தால் கவியாகிவிடலையா சார்?’

“உன்னை அங்கே அனுப்பியது கேசைப் பரிசோதிக்கத்தானே தவிர பாட்டுப் பாடி மனிதர்களை மாற்றுவதற்காக இல்லை. உன் மனம் நேத்ராவின் மீது ஈடுபட்டிருந்ததால், அவன் இறந்து விட்டதால், அதே உருவ ஒற்றுமையுடைய ஆளை ஒரு பத்து வருஷ காலம் கஷ்டப்பட்டு திருத்தி அமைத்துக் கொள்கிறேன் என்றால் எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. இப்படிப்பட்ட போன்களை மட்டும் பண்ணாதே” என்று போனை வைத்துவிட்டார்.

பிரதிமா உற்சாகமின்றி போனை வைத்தாள். வீட்டிற்குத் திரும்பி வரும் வரையிலும், இந்த விஷயத்தைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள். வீடு திரும்பியதுமே தன் பரிசோதனையைத் தொடங்கிவிட்டாள். எல்லோரும் பிற்பகல் ஒருமணிக்கு சாப்பிட்டுவிட்டுப் படுத்து உறங்கிவிட்டார்கள். பிரசிடென்டின் மகன் வெளியே எங்கேயோ விளையாட போய்விட்டான். தொலைவில் காகம் கரையும் சத்தத்தைத் தவிர வேறெந்த ஓசையும் இல்லை. வேதகிரியிடமிருந்து விஷயத்தை வரவழைப்பதற்கு இதுதான் நல்ல சமயம்.

முன் அறையில் தூணில் சாய்ந்தவாறு தன்னை மறந்த நிலையில் சுருட்டுப் புகைத்துக் கொண்டிருந்தான் வேதகிரி.

“ஷ்... ஷ்” என்று மெல்லிய குரலில் கூப்பிட்டாள்.

வேதகிரி கண்ணைத் திறந்ததுமே தன் அறைக்கு வரச்சொல்லி சைகை காட்டினாள்.

அவன் அவள் அறைக்குள் நுழைந்தான். அவள் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். நாடகத்தை தொடங்குவதற்கு நாந்தியாக அழகான ஒரு புன்னகையை உதிர்த்தாள். குழப்பத்துடன் பார்த்துவிட்டு, “ஊஹும். நான் அந்த மாதிரி ஆள் இல்லை தொரைசானி” என்றான்.

கன்னத்தில் அறைந்தாற் போலிருந்தது அவளுக்கு. அவள் தேறிக்கொள்ள ஐந்து நிமிடம் ஆயிற்று. அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல், “அது இல்லை வேதகிரி. உன்னை சில கெள்விகள் கேட்கிறேன். இப்படியே உட்கார்ந்து பதில் சொல்லு” என்றாள்.

“வேலை இல்லாமல் இப்படி உட்கார்ந்துக்கிட்டிருந்தால் பெரிய தொரை சம்பளம் கொடுக்க மாட்டார்.”

“பரவாயில்லை. என்னோடு இருந்தேன் என்று சொன்னால் ஒன்றும் சொல்ல மாட்டார்.”

“உடம்பைப் பிடிச்சு விடணுமா தொரைசானி! அந்த மாதிரி வேலை பண்ணினால் ஒன்றும் சொல்ல மாட்டாரு தொரை” என்றான்.

அவள் கூனிக் குறுகியபடி, “வேண்டாம் வேண்டாம்” என்றாள்.

“அப்படீன்னால் போயிட்டு வரேன். தொரை பார்த்தால் என்னடா வம்பும்பாரு.”

“வேண்டாம் உட்காரு. இந்தா விரலைப் பிடித்து விடு” என்று கையை நீட்டினாள். அவளுக்கு நாட்டைப்பற்றி நினைவு வந்தது. நாட்டிற்காக உயிரைக் கொடுத்த வீரர்கள் இருந்த நாட்டில் ஒரு தேசத்துரோகியைப் பிடித்துத் தருவதற்காக விரலைப் பிடிக்கச் செய்வதால் தவறு எதுவுமில்லை என்றெண்ணிக் கொண்டாள். ஒரு முறை வரலாற்று புகழ்

வாய்ந்த அந்த முடிவுக்கு வந்த பிறகு வல்லியூருக்கு தான் வந்த வேலைக்காக துப்புத் துலக்கத் தொடங்கினாள்.

நேரடியாய் விஷயத்திற்கு வரவில்லை.

“உனக்கு சூட்டும், கோட்டும் போட்டுக்கொள்ள விருப்பமா?” என்று உரையாடலைத் தொடங்கினாள்.

“சூட்டா? அப்படீன்னால்?”

“சினிமாவில் பார்ப்பாயே அதுபோல்”

“எதுக்கு தொரைசானி எனக்கு சூட்டு?”

“உனக்குப் படிப்புக்கூட கற்றுத் தரேன்.”

“வேண்டாம் தொரைசானி. எனக்கு இந்த மாதிரி பிடிச்சு விட்டுட்டிருக்கிறதே நல்லாயிருக்கு” தன்மயகத்தில் இருப்பது போல் கண்களைச் செருகிக்கொண்டே சொன்னான்.

அதில் ஏதாவது இரட்டை அர்த்தம் இருக்குமோ என்று அவனை சந்தேகத்துடன் பார்த்துவிட்டு, ‘இப்பொழுது லாபமில்லை. நாளைக்கு முயற்சிப்போம்’ என்றெண்ணி பேச்சை மாற்றினாள்.

“இந்த ஊருக்கு இப்பொழுதெல்லாம் ஜீப்புகளும், கார்களும் நிறைய வந்துட்டிருக்கோ?” என்று கேட்டாள்.

“கார்களும். ஜீப்புகளுமா?” அவன் தலையைச் சொரிந்து கொண்டே, “காருன்னால் தெரியும். ஜீப்புன்னால்? அந்த ரெண்டுக்கும் என்ன வித்தியாசம்?” என்று கேட்டான்.

அவளுக்கு எப்படி விளக்குவது என்று புரியவில்லை. அதற்குள் அவனே, “முன்னாடி நீளமாய் இருப்பது கார். பின்னாடி உயரமாய் இருக்கும் ஜீப்பு. அதானே தொரைசானி?” என்றான்.

இவன் வார்த்தைகளில் வேறு அர்த்தம் ஏதாவது இருக்குமோ? இவன் அதிக சாமர்த்தியமாய் பேசுகிறானா? என்று அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அந்த மாதிரி எதுவும் இல்லை என்று தெரிந்து கொண்டதும் ஆமாம் என்று தலையாட்டினாள்.

“அந்த மாதிரி எதுவும் இந்த ஊருக்கு வரலையே?”

“நீ பார்த்திருக்க மாட்டாய்.”

“என்னவோ. எனக்குத் தெரியாது” என்றான்.

அவள் கேள்வியை மாற்றிக்கொண்டே, “பூஷணம் என்பவர் இந்த ஊரில் பாதி இடத்துக்குமேல் விலை கொடுத்து வாங்கியிருக்கிறாராம். உண்மைதானா?” என்று கேட்டாள்.

“ஓ.. அவரா... ஊர்ல எங்கே வாங்கியிருக்காரு? ஏரியில்தான் வாங்கியிருக்கார்.”

அவள் வியப்புடன், “ஏரியில் வாங்கியிருக்கிறாரா?” என்று கேட்டாள்.

“ஆங். அதைத் தூர்த்துட்டு, நிலமாக்கி விற்கப் போறாராம்.”

திடீரென்று அவள் வீலென்று கத்தினாள்.

“என்னவாச்சு? என்னவாச்சு தொரைசானி?” கலக்கத்துடன் கேட்டான் அவன்.

“விரல்! என் விரலை கெட்டியாய் அழுத்திவிட்டாய். விரல் முறிஞ்சு போச்சு” என்றாள் வலி பொறுக்க மாட்டதவளாய்.

“எங்க தொரைசானியாயிருந்தால் இன்னும் கெட்டியாய் அழுத்தச் சொல்லியிருப்பாங்க” என்றான் அவன் கடமையே கண்ணாய்.

“போதும். இனி நீ போகலாம்” என்றாள் அலுப்போடு.

## 9

இரவு பன்னிரண்டு மணிக்கு பிரதிமா எழுந்து கொண்டாள். பெட்டியிலிருந்து பிஸ்டலை எடுத்து ப்ளவுசுக்குள் வைத்துக் கொண்டாள்.

“ஓ.. அவரா... ஊர்ல எங்கே வாங்கியிருக்காரு? ஏரியில்தான் வாங்கியிருக்கார்.”

என்ற வேதகிரி வார்த்தைகள்தான் நினைவுக்கு வந்தன. பூஷணம் போன்றவர் இவ்வளவு சிறிய ஊரில்

ரியல் எஸ்டேட் வியாபாரம் ஏன் செய்யப் போகிறார்? அப்படியே செய்தாலும் தானே நேரில் இத்தனை முறை இந்த ஊருக்கு ஏன் வரப் போகிறார்?

இன்று இரவே அந்த விஷயத்தை தெரிந்து கொண்டு விடவேண்டும் என்று முடிவு செய்தாள்.

ப்ரீப்கேசுடன் அறையை விட்டு வெளியே வந்தாள். பழங்காலத்து கிராமத்து பங்களா. ஆளரவமற்று இருந்தது. தொலைவில் ரெட்டி நாயுடுவின் குறட்டை சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. கொஞ்சம் அதிகமாக பேசினாலும் நல்ல மனிதர்.

அவள் வாசற்கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். குளிர்ந்த காற்று விர்ரென்று வீசியது. தெருவில் யாரும் இருக்கவில்லை. அவள் அடியெடுத்து வைக்கும் போது அந்த மங்கலான நிலா வெளிச்சத்தில் நிழல் ஒன்று அவள் பின்னாலிருந்து நீளமாய் முன்னால் விழுந்தது.

தோள் வழியாக அருகில் காதருகில் மெல்லிய குரலில், “வெளியே போறீங்களா தொரைசானி?” என்று கேட்டது. பிரதமா எம்பி குதித்து பக்கத்தில் நகர்ந்து பிஸ்டலை எடுத்து குறிபார்த்தாள்.

எதிரே வேதகிரி.

“நீ தானா!” நிம்மதியாக மூச்சு விட்டுக்கொண்டாள்.

அவனைப் பார்த்தால் ‘நிசாசரன்’ என்ற வார்த்தைக்கு சரியான அர்த்தம் தெரிவது போல் இருந்தது.

பிரதிமா சமாளித்துக்கொண்டு, “ஐந்து ரூபாய் தருகிறேன். நான் இப்படி நள்ளிரவில் வெளியே போகிற விஷயத்தை யாரிடமும் சொல்லாதே” என்றாள்.

“எங்க தொரைசானியாக இருந்தால் பத்து ரூபாய் கொடுப்பாள்” என்றான் பேரத்தை செட்டில் பண்ணு என்பது போல்.

“ஷட்டப்! நான் யார் தெரியுமா. இந்தியன் சீக்ரெட் சர்வீஸ் ஏஜெண்ட். இந்தியனாக இருப்பதால் எங்கள்

டிபார்மென்டுக்கு உதவி செய்வது உன் கடமை. இந்தத் தலையாயக் கடமையை ....”

மேலும் சொல்லிக் கொண்டிருந்தவளை பாதியிலேயே நிறுத்தி, “புரிகிற மாதிரி சொல்லு தொரைசானி” என்றான்.

“யாருக்கும் தெரியாத ஒரு ரகசியத்தை உலகத்திற்கு பறைச்சாற்ற போய்க் கொண்டிருக்கிறேன். இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லாதே.”

“சொல்ல மாட்டேன்.”

“சத்தியமாகச் சொல்லக் கூடாது.”

“ஒரு தடவை சொல்லாதே என்ற பிறகு சொல்லுவேனா? இப்போ நீ இப்படி நின்னுக்கிட்டு இருக்கும்போது ஓணான் ஒன்று உன் கால் வழியாய் மேலே ஏறியதை உன்னண்டை சொன்னேனா?”

அவன் வார்த்தைகள் இன்னும் முடியக் கூடவில்லை. முழங்கால் வழியாக ஏதோ ஊர்ந்தது போல் இருந்தது. வீலென்று கத்தியவள் அவனைப் பலமாக கட்டிக்கொண்டாள். பயமானது அவன் கழுத்தைச் சுற்றிலும் கையைப்போட்டு அவளை குதிக்க வைத்தது. அவன் அவள் புடவையைப் பிடித்து உதறிவிட்டான். ஓணான் தரையில் விழுந்து சாலையின் குறுக்கே ஓடியது.

“கீழே விழுந்துடுத்து தொரைசானி” என்றான் அவன் சந்தோஷமாய். அவள் தேறிக் கொள்வதற்கு இரண்டு நிமிடங்கள் தேவைப்பட்டன.

“இந்த ஊரில் ஓணான்கள் அதிகமா?” என்று கேட்டாள். ஏஜெண்ட் க்யூவையும், ஓணானையும் சேர்த்து நிற்க வைத்தால் ஓணானுக்குத்தான் அவள் அதிகமாக பயப்படுவாள். அதான் அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

“ஆமாம். அதிகம்தான்” என்றான்.

“நீ என்னுடன் வருகிறாயா?”

“எங்கே தொரைசானி?”

“நாட்டுக்காக. வா சொல்கிறேன்.” ப்ரீப்கேஸை இன்னொரு கைக்கு மாற்றிக்கொண்டாள்.

“நாட்டுக்காக செத்தாலும் பரவாயில்லை என்றாய். ஓணானை பார்த்து இப்படி பயப்படுகிறாயே? வா போகலாம்.”

இருவரும் ஏறக்குறைய ஒரு மணி நேரம் நடந்தார்கள். ஏரி வந்து விட்டது. ஏரிக்கு அந்தப் பக்கம் கோட்டை போன்ற பங்களா இருந்தது. சிதிலமாகி விட்டது. தண்ணீர் அதனுள்ளும் போயிருந்தது.

அவள் ரொம்ப நேரம் அங்கேயே நின்று விட்டாள்.

“இங்கேதான் ஒன்றுமே இல்லையே?” என்றான் வேதகிரி.

அவள் பதில் சொல்லவில்லை. ஏதோ செயற்கைத்தன்மை தென்பட்டது அங்கே.

தொலைவில் சாலையில், ஏரிவரையில் வந்து நின்றுவிட்ட டயர்களின் அடையாளங்கள்.

“நீ அந்தப் பக்கமாய் ஏரியைச் சுற்றிக்கொண்டு வா. நான் இந்தப் பக்கமாய் போகிறேன்.” அவனை அங்கிருந்து அனுப்பி விட வேண்டும் என்பதற்காக சொன்னாள்.

“போய் என்ன பண்ணட்டும்?” எதிர்க்கேள்வி கேட்டான்.

“எதாவது அடையாளமோ, பொருளோ தென்படுகிறதோ பார்.”

“எனக்கு மாலைக்கண். ஒன்றும் தெரியாது. உன்னுடனே இருக்கறேன்.” அவளை நெருங்கி வந்தான்,

அவள் சலித்துக் கொண்டே, “சரி வா” என்று சிதிலமான பங்களாவை நோக்கி நடந்தாள். ஏரியின் தண்ணீர் பங்களாவின் சுவரைத் தொட்டுக் கொண்டிருந்தது. மேலும் அருகில் சென்றார்கள். சுவற்றுக்கோழிகளின் சத்தம் அதிகரித்து.

“வேண்டாம் தொரைசானி. எனக்கு பயமாய் இருக்கு. திரும்பிப் போய் விடுவோம்.”

அவள் மேலும் முன்னால் ஒரு அடி வைத்தாள். காலுக்கு ட்யூப் ஒன்று தட்டுப்பட்டது. ரப்பர் ட்யூப் அது. தண்ணீரிலிருந்து வெளியே வந்திருந்தது. அவள் சந்தேகம் உறுதியாகி விட்டது. அவள் கடைக்கண்ணால் வேதகிரியைப் பார்த்தாள்.

“திரும்பி போய்விடலாம் என்கிறாயா?”

அவன் தலையை அசைத்தான். இருவரும் கிராமத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

அவன் சொன்னான். “இனி இந்த பக்கம் வராதீங்க தொரைசானி. இங்கே பாம்பும் தேளும் இருக்கும்.”

அவளிடமிருந்து பதில் வராமல் போகவே அவன் சுற்றிலும் பார்த்தான்.

அவள் இருக்கவில்லை. அவன் பதற்றமடைந்தான். “தொரைசானி!” என்று அழைத்தான். பதில் இல்லை. தொலைவில் ஏரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்த நிழல் தென்பட்டது.

“நில் தொரைசானி!” என்று கத்தினான்.

ஆனால் அதற்குள் தாமதமாகி விட்டிருந்தது.

ப்ரீப்கேஸிலிருந்து மாஸ்கை எடுத்து முகத்தில் பொருத்திக் கொண்டு தண்ணீரில் குதித்துவிட்டாள். அவளுக்கு நீச்சல் நன்றாகவே தெரியும். அந்த ட்யூபைப் பிடித்துக்கொண்டு தண்ணீருக்கு அடியில் சென்றாள். அடியில் பாசியும், புல்பூண்டுகளும் இருந்தன. டார்ச் லைட் வெளிச்சத்தில் மீன்கள் மின்னியபடி தென்பட்டன. அவள் ட்யூபை பின் தொடர்ந்து மேலும் முன்னுக்கு போனாள். திடீரென்று அவளுக்கு முன்னால் சுவர் ஒன்று தென்பட்டது. அவள் அதனைத் தடவிக்கொண்டே தண்ணீரில் மேற்புறம் வந்தாள். வெளியில் சாதாரணமாக தென்பட்டாலும், ஏரியின் ஆழம் சுமார் ஐம்பதடி இருக்கும்.

ஏரிக்கு அந்த பக்கம் இருந்த பாழடைந்த பங்களாவுக்குள் தான் வந்து விட்டதாக அவள் உணர்ந்தாள். ஆறடி அகலம் கொண்ட பாதை அது. இடுப்பு வரையில் தண்ணீர் இருந்தது. அவள் அந்த பாதையில் மேலும் முன்னேறினாள்.

அங்கே தென்பட்டது ட்ராப் டோர். அவள் அதை பரிசீலித்தாள். அவள் இதயம் வேகமாய் துடிக்கத் தொடங்கியது. அவள் அதைத் திறக்க முயன்றபோது பின்னால் சத்தம் கேட்டது. அவள் திரும்பிப் பார்ப்பதற்குள் தண்ணீரில் விடும் அம்பு அவள் பக்கத்திலிருந்து ஊடுருவிச் சென்றது. வாட்டர் சூட்டில் இருந்த நபர்கள் அவளை நோக்கி வேகமாய் வந்தார்கள். அவள் தண்ணீருக்கு மேலே வருவதற்கு முயன்றாள். அவள் முயற்சியைத் தடுத்தபடி அவர்கள் அவளை பின்னால் இழுத்தார்கள். அவர்களின் ஒருவன் கத்தியால் அவளை குத்த முயன்றான். அவள் பக்கத்தில் நகர்ந்து கொண்டதில் தோள் பட்டையில் உரசி தீக்காயம் போல் எரிச்சல் ஏற்பட்டது.

அவள் மிகவும் ஜூனியர். வெளிநாட்டு உளவு விவகாரங்களிலோ, கடைந்தெடுத்த கடத்தல்காரர்களின் கேசுகளிலோ இதுவரை அவள் வேலை பார்த்தது இல்லை. ரகசிய பைல்களைத் தயாரிப்பது வரையில் தான் அவள் கடந்த இரண்டு ஆண்டுகளாய் கற்று வந்தாள். சீக்ரெட் சர்வீசில் அவளுக்கு பயிற்சி அளிக்கப் பட்டிருந்தாலும் . தண்ணீருக்கு அடியில் எதிர்த்து நிற்கும் முறை அவளுக்கு தெரியாது.

ஒரு நபர் அவள் கைகளை பின்னால மடக்கிப் பிடித்துக் கொண்டான். இன்னொருவன் அவள் வயிற்றில் குத்தப் போனான். அவள் கண்களை மூடி கடவுளைப் பிரார்த்திக்கத் தொடங்கினாள். அதற்குள் பக்கத்தில் தண்ணீரில் சிறிய சலசலப்பு கேட்டது. அவளைப் பிடித்துக்கொண்டிருந்த கைகள் விடுபட்டன. அவள் தன்னையறியாமல் தண்ணீரின் மேலே வந்து விட்டாள்.

அடியில் இரு திமிங்கலங்கள் சண்டையிட்டுக் கொள்வது போன்ற கல்லோலம்.

ஒரு நிமிஷம் கழித்து வேதகிரி மேலே மிதந்தான். அவனுடன் ரத்தத்தில் தோய்ந்த ஒரு உடல் மேலே வந்தது. சுற்றிலும் இரத்தம் கலந்த நீர். பக்கத்தில் பிணம். எல்லாவற்றையும் பார்த்து அவள் கலவரமடைந்தாள்.

இதற்குள் தொலைவில் ஜீப் வரும் சத்தம் கேட்டது. இரண்டாவது ஆசாமி என்னவானான் என்று தெரியவில்லை.

வேதகிரி சட்டென்று அவள் கையைப் பற்றி தண்ணீருக்குள் அழைத்துப் போனான். அவள் பார்த்திருந்த ரப்பர் குழாய் அந்த பாழடைந்த பங்களாக்குள் போயிற்று. தண்ணீரிலேயே அவர்கள் சுவரின் முனையை திரும்பினார்கள். அங்கே தென்பட்ட காட்சியை பார்த்து அவள் சிலையாகி விட்டாள். கண்ணாடிச் சுவருக்கு அந்தப் பக்கம் பரிசோதனசாலை இருந்தது.

வெளியில் பாழடைந்து தோற்றமளிக்கும் பங்களாவின் தரைமாளிகை பகுதி அது.

அவள் தலையைத் திருப்பி பக்கத்தில் பார்த்தாள். வேதகிரி ஜேபியிலிருந்து கட்டிங் ப்ளேயர் போன்ற கருவியை எடுத்தான். அந்த ரப்பர் குழாயை மின்சார வயராக அவள் புரிந்து கொண்டாள்.

அவளை அங்கேயே இருக்கச் சொல்லி ஜாடை காட்டிவிட்டு அவன் ட்ராப் டோர் வழியாக உள்ளே சென்றான். பாழடைந்த பங்களாவானாலும் உள்ளே நவீனமான பரிசோதனைச் சாலை இருந்தது. கண்ணாடி வழியாய் பிரதிமாவுக்கு எல்லாம் தெளிவாக காட்சி தந்து கொண்டிருந்தது. ஓரிருவரைத் தவிர அந்த ஹால் ஆளரவமற்று இருந்தது.

எதிர்பாராத விதமாக ட்ராப் டோர் வழியாக உள்ளே வந்த நபரைப் பார்த்து அவர்கள் கத்தப் போனார்கள். வேதகிரி கழுத்தில் அடித்த அடியில்

நினைவு தப்பி விழுந்தார்கள். பிரதிமாவால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. எத்தனையோ பயிற்சி இருந்தால் தவிர அப்படி தாக்குவது அசாத்தியம்.

அதற்குள் அவன் தேடி தனக்கு வேண்டிய கெமிகல்ஸ் எடுத்துக்கொண்டு இரண்டு நிமிடங்களில் ஒரு கலவையைத் தயாரித்தான். ரப்பர் குழாயைப் பிரித்து ஷார்ட் சர்க்யூட் செய்து வேகமாக வெளியே வந்தான். அவள் இன்னும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அவள் கையைப் பற்றி தொலைவாக அழைத்துச் சென்றான். ஏரியின் அடுத்தப் பக்கம் போவதற்கு அரை நிமிஷமாயிற்று. இருவரும் தண்ணீரிலிருந்து வெளியே வந்தார்கள்.

முகத்திற்கு இருந்த மாஸ்கை எடுத்ததும் அவள் கேட்ட முதல் கேள்வி, “யார் நீ?”

அவன் பதில் சொல்லாமல் தொலைவில் இருந்த பாழைடந்த பங்களாவையே பார்த்துக் கொண்டிருந்தான். அதற்குள் அந்தப் பக்கமாய ஜீப் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து பூஷணம் இறங்கினார். இருட்டில் நின்றிருந்த வேதகிரி, பிரதிமா தொலைவில் ஜீப்பிலிருந்து இறங்கியவர்களின் கண்ணில் படவில்லை. பூஷணம் இரண்டடி எடுத்து வைத்ததும் பிணம் காலில் தட்டுபட்டது. அதிர்ந்து விட்டார். பாதி கரையிலும் பாதி நீரிலும் கிடந்த பிணத்தைப் பார்த்து அவர் ஏதோ கத்தினார். எல்லாம் ஒரே பரபரப்பு. மக்கள் அங்கும் இங்குமாய் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது வெடி சத்தம் கேட்டது.

ஏரியில் இருந்த தண்ணீர் முழுவதும் கொந்தளிக்கும் விதமாய், பாழடைந்த பங்களா இடிந்து விழும் விதமாய் வெடிப்பு நிகழ்ந்தது. ஒரு நிமிட நேரம் தண்ணீர் அடியிலிருந்து தீக் கொழுந்து வெளியே வந்தது. அந்த சத்தம் வல்லியூர் வரையில் கேட்டிருக்கும். அந்த வெளிச்சத்தில் இந்த திடீர் சம்பவத்திற்கு பூஷணம் திக்பிரமை அடைந்தது தெளிவாகத் தென்பட்டது. ஜீப்பிலிருந்து இறங்கிய ஆட்கள் ஓட்டமாய் இந்தப்

பக்கமே வந்து கொண்டிருந்தார்கள். ஏரியின் மறுகரையில் நின்றிருந்த உருவங்களைப் பார்த்து சுட ஆரம்பித்தார்கள்.

“ஓடு… ரன் க்விக்!” என்றான் அவளிடம்.

அவள் நகரவில்லை. ஜீப் இருந்த பக்கம் போகத் தொடங்கினாள்.

“யூ ப்ளடி! அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஓடு.”

“யார் நீ? அதைச் சொன்னால் தவிர இங்கிருந்து நகர மாட்டேன்.” பிடிவாதமான குரலில் சொன்னாள்.

“நேத்ரா! ஏஜெண்ட் நேத்ரா” என்றான் அவள் கையைப் பிடித்து இழுத்து அழைத்துச் சென்ற படியே.

*****

“இன்று இரவு நாம் இந்த காட்டிலேயே தலை மறைவாக இருக்க வேண்டும். அவர்கள் இன்னுமும் தேடிக்கொண்டே இருப்பார்கள்.”

“என் முன்னாலிருப்பது நேத்ரா என்றால் என் கண்களையே நம்ப முடியவில்லை. மயானத்தில் எரிந்து சாம்பலாகிவிட்ட நேத்ரா திரும்பவும் எப்படி உயிர்த்தெழுந்து வந்தான்?”

“அது ஒரு தந்திரம். அந்த விஷயம் நம் சீஃப் பகீரதனுக்கு மட்டுமே தெரியும்.” அன்று இரவுக்காக மரத்தின் கிளையின் மீதே படுக்கையை ஏற்பாடு செய்து கொண்டிருந்தான். இனி ரெட்டி நாயுடுவின் வீட்டுக்குப் போவது ஆபத்து.

“எதற்காக இந்த நாடகம்?” கேட்டாள் அவள்.

அவன் சொல்லத் தொடங்கினான்.

“நாட்டை நாசமாக்குவதற்காக ஏதோ சதி நடக்கிறது. இல்லாவிட்டால் ஏஜெண்ட் க்யூ இத்தனை காலம் இந்தியாவில் டேரா போட மாட்டான். பூஷணத்தின் தோட்டத்தில் பரிசோதனைகள் தொடங்கி விட்டன. அதற்கு ஒரே ஒரு சாட்சி நான். அங்கேதான்

ஏஜெண்ட் க்யூவைப் பார்த்தேன். அவனைப் பார்த்ததும் இது சிறிய விஷயம் இல்லை என்று புரிந்து விட்டது. அத்துடன் நான் இறந்து விட்டதாய் நாடகம் ஆடினேன். நான் இறந்து விட்டதால் இனி இந்த விஷயம் தெரிந்தவர்கள் யாரும் இல்லை என்ற தைரியத்தில் அவர்கள் தம் வேலைகளை தொடர்ந்தார்கள். ஆனால் தோட்டத்தில் தொடருவது ஆபத்து என்று நினைத்து இடத்தை மாற்றி விட்டார்கள். எங்கே என்று தெரியவில்லை. அதனால் நான் ரகசியமாக சோதிக்கத் தொடங்கினேன். பூஷணம் அடிக்கடி வல்லியூருக்கு வந்து போய்க் கொண்டிருந்தான். அதனால் நான் இங்கே வந்து பிரசிடென்டிடம் வேலைக்காரனாய் சேர்ந்தேன். ஆறுமாதங்கள் பொறுமையாய் காத்திருந்தேன். ஏரில் இருக்கும் மீன்களை ஏற்றுமதி செய்யும் சாக்கில் பூஷணம் பரிசோதனையை நடத்தி வருவது தெரித்தது. ஆனால் அதைக் கைப்பற்றுவதால் எந்த பயனும் இல்லை. அவனை சட்டபடி எதுவும் செய்ய முடியாது. அவர்களின் பரிசோதனை முடியும் வரையில் காத்திருக்க வேண்டியதுதான். நம் சீக்ரெட் ஏஜெண்டுகளில் ஒருவன் அவர்களுக்குள் ஒருவனாக சேர்ந்து விட்டான். தனக்கு தெரிந்த விவரங்களை உடனுக்குடன் தெரிவித்து வருகிறான். வலை வீசி தயாராக காத்திருந்தோம். இதற்குள் நீ வந்து விட்டாய். அவர்கள் ரகசியம் நமக்குத் தெரிந்து விட்டதாக அவர்களுக்குத் தெரிந்து போய் விட்டது. உன்னால் திட்டமெல்லாம் பாழாகி விட்டது. உன்னை வல்லியூரிலிருந்து திருப்பி அனுப்பி விட வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் எனக்குக் கூடத் தெரியாமல் தண்ணீரில் குதித்து விட்டாய். இனி வேறு வழியில்லாத நிலையில் அந்த பரிசோதனைச் சாலையைத் தகர்க்க வேண்டியதாகி விட்டது. பூஷணத்திற்கு இது சி.பி.ஐ. வேலைதான் என்று சந்தேகம் வந்து விட்டது. இந்த முறை வேறு என்ன நடவடிக்கை எடுப்பார் என்று காத்திருக்க வேண்டும். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் கதைத் திரும்பவும் தொடங்கிய இடத்திற்கே வந்து சேர்ந்து விட்டது.”

அவன் சொல்லி முடித்ததும் திடீரென்று அழத் தொடங்கி விட்டாள்.

நேத்ரா பதற்றத்துடன், “ஏன்? என்னவாச்சு? பூச்சி ஏதாவது கடித்து விட்டதா?’ என்று கேட்டான்.

“நான் சீக்ரெட் ஏஜென்ட ஆக இருப்பதற்கு லாயக்கு இல்லை. நீங்கள் இத்தனை கஷ்டப்பட்டு பண்ணியதை எல்லாம் என் முட்டாள்த்தனத்தினால் பாழடித்து விட்டேன். நாளைக்கு சீஃபிடம் என்ன பதில் சொல்வது?” என்றாள் அழுதுகொண்டே.

“நானே ஏதோ ஒன்றைச் சொல்லி சமாளிக்கிறேன். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அப்படி செய்ய வேண்டி வந்தது என்று சொன்னால், ஒருக்கால் உன்னை எதுவும் சொல்ல மாட்டாரராய் இருக்கும்.”

. அவள் நன்றி நிறைந்த குரலில், “தாங்க்யூ” என்றாள். கொஞ்சம் தேறிக்கொண்டு.

“இனி படுத்துக்கொள். நான் காவல் இருக்கிறேன்” என்றான்.

அவள் மனம் இலேசாகி விட்டது. மல்லாந்து படுத்தவள் வானத்தைப் பார்த்துக்கொண்டே உரத்த குரலில், “கனவு நினைவாகி விட்டது விருப்பம் நிறைவேறியது” என்று பாடத் தொடங்கினாள்.

அவன் அதிர்ந்துபோய் எழுந்து உட்கார்ந்து, “உனக்கு பைத்தியம் ஏதாவது பிடித்து விட்டதா?” என்று கேட்டான்.

அவள் தொய்ந்து போன முகத்துடன், “இரவு தூங்குவதற்கு முன்னால் சற்று நேரம் உரத்தக் குரலில் பாடுவது என் வழக்கம். இல்லை என்றால் தூக்கம் வராது. பாட்டி கூட என்னை கோபித்துக் கொள்வாள்” என்றாள்.

“காட்டில் அவர்கள் நமக்காகத் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். பாட்டு மட்டும்தானா? டான்ஸ் கூட ஆடணுமா?” என்றான் கோபமாய்.

“பாட்டு மட்டும் தான்” என்றாள் சுருதி குறைந்து விட்ட குரலில்.

“அப்போ மனதிலேயே உரக்க பாடிக்கொள் “

“ஆனால்...”

“இன்னும் ஒரு வார்த்தை பேசினாய் என்றால் கொன்று போட்டு விடுவேன்.”

மிரண்டு போனவளாய் திரும்பிப் படுத்து, கண்களை இருக்க மூடிக்கொண்டாள்.

*****

அது விசாலமான ஹால். ஹால் நடுவில் வட்டமான மேஜை இருந்தது. அதன் சுற்றிலும் பதினாறு பேர் வரையில் அமர்ந்து கொள்ளலாம். டைனிங் டேபிள் மேற்பகுதி மட்டும் சுழலும் நவீனமான மேஜை அது.

அதைச் சுற்றிலும் பதினாறு பேர் அமர்ந்து இருந்தார்கள்.

உயரமாய் இருந்த முதல் நாற்காலியில் இருந்த க்யூவின் அருகில் ஒரு பெண், லக்ஷ்மியின் தங்க விக்கிரகத்தை ட்ரேயில் கொண்டு வந்தாள். அதை எடுத்து முன்னால் இருந்த மேஜை மீது வைத்துவிட்டு அவன் சொல்லத் தொடங்கினான்.

“இந்த நாடு பூண்டோடு அழிந்து, எங்கள் நாட்டில் இணைந்த பிறகு, எதிர்காலத்தில் கவர்னர்களாக வரப் போகிறவர்களை மனப் பூர்வமாக வரவேற்கிறேன். நீங்கள் எல்லோரும் உங்கள் துறைகளில் திறமை மிக்கவர்கள். மைக்ரோ பயலாலாஜி ரிசெர்ச் ஸ்காலர்கள் முதல் மக்களை ஆட்டுவிக்கும் அரசியல் தலைவர்கள் இதில் இருக்கிறார்கள். உங்களில் ஒருவர் உயர்வான ஒரு சாதனையைப் புரிந்து இருக்கிறார்கள். அவருக்காக ஒரு பரிசு”

ஏஜெண்ட் க்யூ தன் முன்னால் இருந்த மேஜையின் மேற்பகுதியை சுழற்றினான். அது கிர்ரென்று சுழல ஆரம்பித்தது. அதன் மீது இருந்த லக்ஷ்மி பொம்மையும்

எல்லோரின் முன்னாலிருந்தும் தாண்டி போய்க் கொண்டிருந்தது. எல்லோரும் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டார்கள்.

மேஜை பலகையின் வேகம் குறையத் தொடங்கியது. மெதுவாக ஒரு பெண்ணின் இருக்கையின் முன்னால் வந்து நின்றது. ஏஜெண்ட் க்யூ எழுந்து வந்து அவளுக்குப் பின்னால் நின்று கொண்டான்.

“மனிதனின் அதிர்ஷ்டத்தை முடிவு செய்யும் சக்கரம் இது. இன்று விஜயலட்சுமி இவளைத் தேர்ந்தெடுத்து இருக்கிறது. டியர் பிரண்ட்ஸ்! இவள் பெயர் சுவர்ணரேகா. கெமிஸ்ட்ரியில் அபூர்வமான பரிசோதனை செய்திருக்கிறாள். இது வரையில் அவள் சாதித்த வெற்றிகளுக்கு வேகுபதியாக எங்கள் நாடு இந்தச் சிறிய பரிசை அளிக்கிறது” என்று தங்கத்தினால ஆன அந்த பொம்மையை அவளிடம் கொடுத்தான்.

“இதன் விலை லட்சம் டாலர்கள். இது வெறும் அட்வான்ஸ் மட்டும்தான். அவள் சாதிக்கப் போகும் அபூர்வமான வெற்றிக்கு” என்றான்.

சுவர்ணரேகா அந்த பொம்மையையே கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் முகத்தில் சந்தோஷம் இருக்கவில்லை. பணத்திற்காகவா அவள் செய்கிறாள்? அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

*****

அவள் ஓடிக்கொண்டிருந்தாள். பின்னால் ஒரு இளைஞன் துரத்திக் கொண்டிருந்தான். இனி எங்கே தப்பித்து போக முடியும் என்ற செருக்குடன் மானை வேட்டையாடும் புலியைப் போல் இருந்தான்.

இரண்டாவது காட்சியில் அவள் கையில் ஒரு குடுவை இருந்தது. அவள் கத்திய கத்தல் அந்த அறையில் எதிரொலித்தது. அதை எடுத்து மேலே வீசினாள்.

*****

பழைய நினைவுகளில் மூழ்கியிருக்கும்போதே அவள் தோளில் ஒரு கை படிந்தது. கண்களைத் திறந்து

பார்த்தாள். பக்கத்தில் பூஷணம் எடுத்துக் கொள் என்பது போல் பார்த்துக் கொண்டிருந்தார். அவள் பொம்மையை அவர் பக்கம் தள்ளி விட்டாள்.

ஏஜெண்ட் க்யூ மேலும் சொல்லத் தொடங்கினான்.

“இத்தனை மகிழ்ச்சியான சம்பவத்திற்கு பக்கத்திலேயே வேறொரு வேதனையான சம்பவம் ஒன்று நிகழ்ந்து இருக்கிறது.”

ஒரு பெண் ட்ரேயில் மண்டை ஓட்டை கொண்டு வந்தாள். அவன் அதை தன் முன்னால் வைத்துக்கொண்டான்.

“நமது நண்பர் பூஷணம் எங்கள் நாட்டுக்கு உதவி செய்து வருகிறார் என்று நம்மில் யாரோ ஒருவர் சீக்ரெட் தகவலை வெளியிட்டு இருக்கிறார்கள். அத்துடன் கோடி ரூபாய் பெறுமானமுள்ள லாபரேட்டரி முற்றிலும் சிதைந்து விட்டது. இது நமக்கு இரண்டாவது அடி. சொல்லுங்கள். உங்களில் அந்த துரோகி யார்?”

யாருமே பேசவில்லை. க்யூ அந்த மேஜையை சுழற்றினான். மண்டை ஓடு எல்லோரின் முன்னாலிருந்தும் சுழன்று கொண்டிருந்தது.

எல்லோரும் மூச்சை இறுக்கிப் பிடித்தார்கள். இந்த முறை தம் முன்னால் நிற்கக் கூடாது என்று ஒவ்வொருவரும் பிரார்த்திக்கொண்டார்கள்.

மெதுவாக அது வந்து ஒரு நபரின் முன்னால் நின்றது.

அவன் சட்டென்று எழுந்து நின்று, “இது அநியாயம். எனக்கு ஒன்றும் தெரியாது” என்று கத்தினான்.

“ஜாதக சக்கரம் போய் சொல்லாது மிஸ்டர் பாஸ்கர். உன் வெகுமதியை ஏற்றுக்கொள்” என்று ப்ரீப்கேஸை திறந்தான் க்யூ

“டபுள் ஏஜெண்ட் ஆக வேலை செய்தாய். இதுவரையில் எங்களுக்கு செய்து வந்த உதவிக்காக துன்புறுத்தி உன் உயிரை எடுப்பதில் எனக்கு விருப்பம்

இல்லை. உன் உயிரை நீயே எடுத்துக்கொள். இதோ பிஸ்டல்” என்று ப்ரீப்கேஸிலிருந்து பிஸ்டலை எடுத்துக் கொடுத்தான்.

அவன் தயங்கினான்.

“வேறு வழி இல்லை பாஸ்கர். நீயே சுட்டுக் கொள்கிறாயா? என்னை சுடச் சொல்கிறாயா?” என்றான் க்யூ.

பாஸ்கர் க்யூவை குறி பார்த்தான். “ஆமாம். நான் டபிள் ஏஜெண்ட் தான் இந்திய சீக்ரெட் சர்வீஸ் ஏஜெண்ட். இன்று உன் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டு விட்டேன். இனி உன் ஆட்டம் முடிந்துவிட்டது. கையை உயர்த்து” என்றான்.

க்யூ கைகளை உயர்த்தவில்லை. முறுவலுடன் அவனிடம் வந்தான்.

“ஐ வில் ஷுட் யூ.”

க்யூ மிரண்டு போகவில்லை. மேலும் அருகில் வந்தான். சிரித்துக்கொண்டே, “உன்னைக் கொண்டே உண்மையைச் சொல்ல வைத்து விட்டேன் பார்த்தாயா?” என்றான்.

பாஸ்கர் ட்ரிக்கரை அழுத்தினான். அவ்வளவுதான். ஏதோ ஷார்ட் சர்க்யூட் ஆனாற்போல் வீலென்று கத்தி விட்டு தரையில் சரிந்தான். பிஸ்டல் போய் தொலைவில் விழுந்தது.

க்யூ உரத்தக் குரலில் சிரித்தான். பாஸ்கரை சுற்றிலும் கண்ணாடி கூண்டு இறங்கியது. எல்லோரும் மூச்சை அடக்கி பார்த்து கொண்டிருந்தார்கள்.

க்யூ அவர்களிடம் கேட்டான். “காற்று, நீர், அக்னி பஞ்ச பூதங்களில் எதன உதவியுடன் இவனை கொன்றால் நன்றாக இருக்கும்? சொல்லுங்கள் நண்பர்களே” என்றான்.

யாரோ, “நீர்” என்று கத்தினார்கள்.

க்ஷுத்ர தேவதை உபாசகர்கள் கத்துவது போல் எல்லோரும் ஒரே குரலில், “நீர் நீர்” என்று கத்தினார்கள். அந்த கத்தலின் எதிரொலி அந்த அறை முழுவதும் பரவியது.

கண்ணாடி கூண்டுக்குள் நீர் வழியத் தொடங்கியது. பாஸ்கர் கண்ணாடியை உடைக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். புல்லெட் ப்ரூப் போலும்.

சுவர்ணரேகா பார்த்துக் கொண்டிருந்தாள்.

மீன் தண்ணீருக்கு வெளியே துடிதுடிப்பது போல் அவன் தண்ணீரில் துடிப்பது கண்ணாடி வழியாக தென்பட்டுக் கொண்டிருந்தது.

மெம்பர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சுவர்ணரேகா கண்களை மூடிக்கொண்டாள்.

அவன் உடல் தண்ணீரின் அடியில் சலனம் ஒடுங்கி விட்டிருந்தது.

## 10

மனிதனுக்கு ஒரு உறுப்பு பலவீனமாக இருந்தால் அது பண்ண வேண்டிய வேலையை எஞ்சிய உறுப்புகள் பண்ணும் என்ற உண்மையை அன்றுதான் நேத்ரா கண்கூடாய்க் கண்டான்.

அவன் முற்றிலுமாய் உள்ளேகூட வரவில்லை. அதற்குள் கல்யாணி அடையாளம் கண்டுகொண்டு விட்டாள்.

“அண்ணா!” என்று அருகில் வந்தாள். அவள் குரலில் கொஞ்சமும் சந்தேகமில்லை. அவன் அவளை இன்னும் கொஞ்சம் அழ வைக்க விரும்பி, “பாஸ்கர் சார் இருக்காருங்களா?” என்றான். வெளிநாட்டு உளவாளிகளையே கூட ஏமாற்றிவிடவல்ல அவன் குரல் அவளை மட்டும் தவறான வழியில் இட்டுச் செல்லவில்லை. அவள் ஒரே பாய்ச்சலாய் அவனிடம் ஓடிவந்து அவன் கைகளைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு அழத் தொடங்கினாள். எந்த

விஷயத்தையும் சர்வசாதாரணமாய் எடுத்துகொள்ளும் அவனே கூட தளர்ந்துவிட்டான்.

பார்வதி அம்மாளோ கேட்கவே வேண்டாம். ஓவென்று கதறித் தீர்த்துவிட்டாள். கம்பீரமாய் இருந்தது கணபதி மட்டுமே. “அப்போ போயிட்டான்னு அழுதாய். இப்போ வந்துட்டான்னு அழுகிறாய். உன் அழுகைக்கு அர்த்தம் ஏதாவது இருக்கா?” என்று திட்டினார்.

நேத்ரா சிரித்தான்.

“பாஸ்கர் எங்கே இருக்கிறான் என்று தெரிந்ததா?”

“வந்துவிடுவான் தாத்தா. சீக்கிரத்திலேயே.”

அதற்குள் கல்யாணி அவன் கையில் ராக்கியைக் கட்டிவிட்டு, “இதை உனக்காகவே பத்திரமாய் வைத்திருந்தேன் அண்ணா. பாஸ்கர் அண்ணாவுக்கு இந்த வருஷம் இல்லை” என்றால் சிறு குழந்தையைப் போல்.

‘ஆறுமாதமாகவா வைத்திருந்தாய்?’ என்று கேட்கவில்லை நேத்ரா.

சாதாரண கண்ணுக்கு அது ஒரு கலர் காகிதமும், நூலுமாயும் தோன்றும். மற்றொரு கண்ணோட்டத்தில் பார்த்தால் அன்பும் பாசமும் கலந்த ஒரு உணர்வு. ‘நீ எனக்கு ரொம்ப வேண்டியவன் அண்ணா’ என்பது போல்.

நேத்ரா சிரித்துவிட்டு, “அவன் அழுவான். வந்ததும் அவனுக்கும் கட்டு” என்றான்.

அவன் வார்த்தை முடியக் கூடவில்லை. வீட்டிற்கு முன்னால் வேன் வந்து நின்றது. முன் சீட்டிலிருந்து சீஃப் இறங்கினார். பின்னாலிருந்து நான்கு பேர் பிணத்தை இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வினாடி ஒன்றுமே புரியவில்லை. பாஸ்கரின் பிணம் தரையில் கிடத்தப்பட்டது.

நேத்ரா அதிர்ச்சி அடைந்தான். தன் உயிருக்கு பதில் இன்னொரு ஏஜென்டின் உயிரை பலி வாங்கியதற்காக எதிரிகள் வெற்றி பெருமிதத்துடன்

சிரிப்பது போலிருந்தது. கணபதியும், பார்வதியும் அதிர்ச்சி அடைந்தவர்களைப் போல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“என்ன நடந்தது? என்ன நடந்தது அண்ணா?” என்று கல்யாணி நேத்ராவைக் கேட்டாள்.

காலடி ஓசையைக் கொண்டு அடையாளம் புரிந்துகொள்ளக் கூடிய அந்த குருட்டுப் பெண்ணிற்கு நான்கு தோள்களின் மேல் நிசப்தமாய் வந்து கொண்டிருந்த உடல் பாஸ்கருடையது என்று சொல்லக் கூடிய துணிச்சல் அங்கு யாருக்குமே வரவில்லை. பரிதாபகரமான நிலைமை.

முதலில் தேறிக்கொண்டது நேத்ராதான். கல்யாணியின் தோளைப் பற்றிக்கொண்டே பாஸ்கரின் உடலின் அருகில் அழைத்துச் சென்று தொடச் செய்தான். அவளுக்கு முதலில் புரியவில்லை. “அண்ணா!” என்றாள். சலனமில்லாத அந்த உடலை ஸ்பரிசத்தின் மூலம் அறிந்தாள்.

திடீரென்று அவ்விடத்தில் எரிமலை வெடித்தது.

அவளைத் தேற்ற யாராலும் முடியவில்லை. “அவன் மேல் இருந்த கோபத்தால் அடுத்த வருஷம் கட்டுகிறேன் என்று சொன்னேன். என் மேலிருந்த கோபத்தால் இந்த ஜென்மத்திலேயே கட்டிக்க மாட்டேன் என்று போயிட்டான்” என்று அழுது கொண்டிருந்தாள் கல்யாணி.

நேத்ராவால் அவ்விடத்தில் இருக்க முடியவில்லை. முன் அறைக்கு வந்தான். அங்கே சீஃப் பக்கத்தில் பிரதிமா நின்று கொண்டிருந்தாள்.

“இதெல்லாம் என்னால்தான். என்னால்தான்” என்றாள் கண்ணீர் பெருக்கியபடி.

“நான் வல்லியூருக்கு போவதாய் சீஃபிடம் சொல்லாததால்தான் இதெல்லாம் நடந்தது. அவர்களுக்கு பாஸ்கர் மீது சந்தேகம் வரக் காரணம் நான்தான். சிறு பெண்ணைப் போல் அறிந்தும் அறியாமலும் ஆர்வக்

கோளாறுடன் நான் பண்ணிய காரியம் பாஸ்கரை பலி வாங்கி விட்டது” என்றாள் குரல் கம்மியபடி.

அவள் வாழ்க்கையில் என்றுமே அவ்வளவு வருந்தியதில்லை. ஒவ்வொன்றையும் சர்வ சாதாரணமாகவும், உர்சாகத்துடனும் எடுத்துக்கொள்ளும் அவளுக்கு இது உண்மையிலேயே பெரிய அதிர்ச்சி!

“நீ மட்டும் என்ன பண்ணிவிடுவாய்?” என்றான் நேத்ரா அவள் கைமேல் தன் கையை வைத்து ஆறுதலாய். அவன் கையில் தங்கை கட்டிய ராக்கி கயிறு இருந்தது.

அந்த ராக்கி அவனைப் பரிகாசம் பண்ணுவது போல் இருந்தது.

*****

அவள் படுக்கையறை நவீனமாய் இருந்தது. அவளுக்கு முன்னால் கிளாஸ் டம்ளரில் விஸ்கி இருந்தது. சுவர்ணரேகா கிளாஸ் டம்ளரை எடுத்துக்கொண்டு உறிஞ்சினாள். கதவைத் திறந்துகொண்டு பூஷணம் ஆனந்தமாய் உள்ளே வந்தார். “பார்த்தாயா அம்மா. நீ காரியத்தை சாதிப்பாய் என்ற நம்பிக்கையில்தான் அவ்வளவு விலை உயர்ந்த பரிசைத் தந்தான். உன்மேல் அவனுக்கு அத்தனை நம்பிக்கை” என்றார்.

அவள் அந்த வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல், “ரொம்ப கொடுமையாய் கொலை பண்ணி விட்டார்கள் அப்பா” என்றாள்.

“அந்த ஏஜெண்ட் நம் நிறுவனத்தை அந்த அளவுக்கு ஏமாற்றி விட்டான் இல்லையா அம்மா?” என்றார்.

அவள் மௌனமாய் கிளாஸ் டம்ளரிலிருந்து விஸ்கியை உறிஞ்சி கொண்டிருந்தாள்.

“உன் மனசு இன்றைக்கு சரியாக இல்லை என்று தோன்றுகிறது. ஷாட் எடுத்துக்கலையா அம்மா” என்று அவள் கையில் இன்ஜெக்ஷனை குத்தி விட்டு, “பார்த்ததை மறந்து விடு. ஆனந்தமாய் நேரத்தைக் கழி. லைஃப் ஈஸ் டு எஞ்ஜாய்” என்றார். அவள் கண்ணாடியில் பார்த்தாள்.

உருவம் மங்கலாய்த் தெரிந்தது. இஞ்செக்ஷன் வேலை பண்ணிக் கொண்டிருந்தது.

ஒரு காந்திக் குல்லாய், ஒரு இன்ஸ்பெக்டர் தொப்பி, நோட்டுக் கற்றைகள் வரிசையை கிர்ரென்று சுழன்று கொண்டிருந்தன அவள் பெரிதாய் சிரித்தாள்.

“நன்றாயிருக்காம்மா?”

“நன்றாயிருக்குப்பா. ஐ யாம் ஹேப்பி. ஐ யாம் ஹேப்பி.”

அவள் சிரித்துக் கொண்டிருந்தாள். அதற்கு முன்னால் இருந்த வேதனை இல்லை. “இந்த நாட்டை நிர்மூலம் பண்ண வேண்டும்” என்று பெரிதாய்ச் சிரித்தாள்.

அப்பொழுதுதான் உள்ளே வந்த அம்சரேகா அக்காவை ஆச்சரியத்தோடும், கவலையோடும் பார்த்தாள். அவள் ஏதோ சொல்ல வருவதற்குள் தந்தை அவளை அங்கருந்து அழைத்துச் சென்று விட்டார்.

*****

“வாழ்க்கை வண்டிச் சக்கரம் போன்றது. பிறப்பில் தொடங்கி இறப்பில் முடிவடைகிறது” என்றார் ஒரு தத்துவஞானி. அது உண்மையாக இருக்கலாமோ என்னவோ? ஆனால் இந்த வண்டிச் சக்கரத்தின் சுற்றளவு மட்டும் ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கும் மாறுபடும். எங்கோ அம்பா சமுத்திரத்தில் பிறந்தவன், மாடு மேய்த்து அதே ஊரில் குடியானவனாகி சாகலாம். வேலைக்காரனின் மகனாய் பிறந்தவன் பிரதமராகி பாரிஸில் எஞ்சிய வாழ்க்கையைக் கழிக்கலாம்.

சுவர்ணரேகாவின் வாழ்க்கைகூட குறுகிய காலத்திற்குள் இதுபோல்தான் திசை திரும்பியது. அவள் தந்தை பாக்டீரியாலஜி, வைராலாஜி போன்றவற்றில் ஆராய்ச்சி செய்து பூச்சிக்கொல்லி மருந்துக்காக சோதனை செய்து வந்தார். பூஷணத்தின் மருந்து தொழிற்சாலையின் ஆராய்ச்சிப் பிரிவில் அவர் தலைமை அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். அந்தக்

காலத்தில் அவர் மகள் சுவர்ணரேகாவும் தந்தைக்கு உதவியாய் அப்பிரிவில் வேலை செய்து வந்தாள்.

மேலுக்கு மிகச் சாதாரணமாய்த் தெரிந்த சுவர்ணரேகாவின் தந்தை மிகவும் கெட்டிக்காரர். அவர் கண்டுபிடித்த பி.ஜி. கியாஸ் (விஷவாயு) எல்லா சிறு கிருமிகளையும் கொல்லக் கூடியது.

அதுமட்டுமில்ல. ஏதாவது மருந்தை ஒரு பயிருக்குப் பயன்படுத்தினால், சில வருடங்களுக்கு அந்தக் கிருமிகள் அந்த மருந்திற்கு இம்யூன் ஆகிவிட வல்லவை.

ஆனால் இந்த வாயுவில் அப்படிப்பட்ட தன்மை இல்லை. வெவ்வேறு கிருமிகளுக்கு வெவ்வேறு மருந்துகள் தேவையின்றி ஸ்ப்ரே ஒன்றின் மூலமாகவே கொல்லும் இந்த வாயு மட்டும் மார்கெட்டிற்கு வந்திருந்தால் நாட்டின் விவசாய உற்பத்தி இரண்டு மூன்று மடங்கு வளர்ச்சியடைந்திருக்கும். பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கும்.

இதெல்லாம் நடக்காமல் போனதற்குக் காரணம் கடைசி தருணத்தில் நிகழ்ந்த ஒரு துரதிர்ஷடமான சம்பவம். அது அந்த விஞ்ஞானியின் மரணம்! தற்சமயம் அந்த ஃபார்முலா தெரிந்திருந்த ஒரே நபர் அவர் மகளான சுவர்ணரேகாதான்.

அவள் அதை வெளிப்படுத்தவில்லை.

அவளிடமிருந்த வெறுப்பு, ஃபிரஸ்ட்ரேஷன், தன் தந்தையின் மரணம், தனக்கு நிகழ்ந்த அநியாயம், தான் எடுத்துகொள்ளும் போதை மருந்துகள்... இதெல்லாம் சேர்ந்து அந்த ஃபார்முலாவைத் தனக்குள்ளாகவே வைத்துகொள்ளும்படிச் செய்து விட்டன. அந்த ஃபார்முலாவை அடிப்படையாய்க் கொண்டு அவள் இன்னும் மேற்கொண்டு பரிசோதனைகளைப் பண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால் அதிக நாட்களை சுவர்க்கத்திலே கழித்துக் கொண்டிருந்தாள்.

தந்தை இறந்தபிறகு வளர்ப்புத் தந்தையான பூஷணம் தரும் போதை ஊசிகளால் தென்படும்

சுவர்க்கம் அது. ஏஜெண்ட் க்யூவின் கைகளுக்கு இடையே கிடைக்கும் சுவர்க்கம். தற்சமயம் இந்த இரண்டு உலகமுமே போதும் அவளுக்கு.

அவற்றிலிருந்து வெளியேறுவதற்கு விருப்பம் இல்லாத அளவிற்கு அதற்குள்ளேயே புதையுண்டு போயிருந்தாள் அவள்.

*****

“இன்னும் எவ்வளவு நாளாகும் நீ இந்தப் பரிசோதனையை முடிக்க?” ஏஜெண்ட் க்யூ கேட்டான்.

“சீக்கிரத்திலேயே முடித்து விடலாம்.” என்றால் சுவர்ணரேகா.

அவள் ஆடையின்றி இருந்தாள். ஏர் கண்டிஷனிலிருந்து வெளிவந்த குளிர்ந்த காற்று அவள் உடல் உஷ்ணத்திற்கு சூடாகி கொண்டிருந்தது. அவளுக்குப் பக்கத்தில் க்யூ சிங்கம் போல் இருந்தான். வலிமையான தோள்கள், பரந்த மார்பு, எல்லாவற்றையும் விட பொறுமை!

அவனுக்குச் சாதாரண மேட்டிங் போதாது. குறைந்தது நாலைந்து மணி நேரம் வேண்டும். முதலில் அவளுக்கு அது கஷ்டமாயிருந்தது. ஆனால் பழக்கபட்ட பிறகு அதில் ஆனந்தம் தெரிந்தது. “என்னால் யாரிடமுமே இருக்க முடியாது. இவ்வளவு சாமர்த்தியம் உனக்கு எப்படி வந்தது?” கேட்டாள் அவள்.

“யோகா.” சிரித்தான் அவன். “உங்கள் இந்தியக் கலைகளில் எனக்குப் பிடித்த ஒன்றே ஒன்று போகாதான். ஆனால் நீங்கள் சோம்பேறிகள். அதைச் சரியாய் பண்ணுவதாய் தோன்றவில்லை எனக்கு. சாப்பிடுவதற்காக வாழ்வது, உறங்குவதற்கு முன் கடனே என்று செயல்படுவது. அவ்வளவுதான்.”

“உனக்கு இந்த நாட்டின் மேல் தாழ்வு அபிப்பிராயம் இருக்கிராற்போல் இருக்கே?”

“தாழ்வாவது? அபிப்பிராயமே கிடையாது! உலக வரைபடத்தில் பார்ப்பதற்குத்தான் பெரிய நாடு. சியோல்

ஒலிம்பிக் லிருந்து அரசியல் வரை எல்லாமே இந்த விஷயத்தை நிரூபிக்கின்றன. பார்த்துக்கொண்டே இரு. எங்கள் நாட்டு ராணுவம் அதிகாரத்திற்கு வந்தால் உங்களை எப்படி வழிக்குக் கொண்டு வரப்போகிறது என்று பார்த்துக்கொண்டே இரு” என்றான் க்யூ.

அவள் அவன் கழுத்தைச் சுற்றிக் கைகளைப் போட்டு, “செக்ஸிலிருந்து அரசியலுக்குத் தாவி விட்டாயே?” என்றாள்.

அவன் குனிந்து அவள் உதடுகளை கவ்வினான். உதடுகளோடு மட்டுமே அவன் அரைமணி நேரம் விளையாடுவான்.

தான் மகிழ்வதைவிட அதிகமாய் எதிராளியை மகிழ வைப்பதை முக்கியமாய்க் கொள்வான் அவன்.

அவ்விதமாய் அவனிடமிருந்து வாழ்க்கைப் பாடம் கற்றுக்கொண்ட எந்த பெண்ணும் அவனுக்கு வாழ்நாளெல்லாம் நன்றியோடிருக்கத் தவற மாட்டாள்! தமக்கு அதுவரையிலும் தெரியாத உலகம் அது. வாழ்க்கையில் உபயோகப்படும் கலை அது.

அதைக்காட்டிலும் வேறென்ன வேண்டும்? குருதட்சிணையாக எவ்வளவோ வெளிநாட்டு ராணுவ அதிகாரிகளின் மனைவியர் அவனுக்கு எத்தனையோ ரகசியங்களைத் தெரியப்படுத்தி இருக்கிறார்கள்.

அவனுக்குத் தன் துப்பாக்கி, புத்திசாலித்தனம், சாமர்த்தியம்.... இவை எல்லாவற்றையும் விட தன்னுடைய இந்தக் கலையின் மீதுதான் அதிக நம்பிக்கை.

தன் கவலைகளை எடுத்துச் சொல்லி எதிராளியை சலிப்படைய வைக்காமல் இருப்பது அவனுடைய மற்றொரு சிறந்த குணம். ஆண்- பெண் தம் வேதனைகளை பரஸ்பரம் பகிர்ந்துகொண்டு, ஆறுதல் பெற்று, அந்த விதமாய் ஏற்படும் நன்றி மூலமாய் மனதளவில் நெருக்கமாகிறார்கள் என்பது உண்மையாகவே இருக்கலாம்.

ஆனால் அவரவர்களின் பிரச்னைகளை அவரவர்கள்தான் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், இருக்கும் கொஞ்ச நேரத்திலும் தன் வேதனைகளை சொல்லிக்கொண்டு எதிராளிக்கு சலிப்பு ஏற்படுத்தக் கூடாது என்றும் அவன் நம்பினான். அதனால் அவன் எப்பொழுதுமே ஆனந்தமே உருக்கொண்டவனாய் விளங்கி வந்தான்.

எதிரியின் படை முழுவதுமாய் வலைவீசியபடி நெருங்கி வந்தாலும் சரி, அந்த டென்ஷனை காதலிக்குத் தெரிவிக்காமல் இருப்பது அவனுடைய சிறப்பு. தன் மடியில் தலை வைத்துக்கொண்டு அழும் ஆணை அனேகமாய் விரும்பினாலும்கூட இந்த விதமான ஆண்மகனைப் பார்த்த எந்தப் பெண்ணுமே அடிமையாகமல் இருக்க மாட்டாள்.

சாதாரண பெண்களுக்கே இந்த விதமாய் இருந்தது என்றால், திறமைசாலியும், என்றுமே தன் ஆராய்ச்சி விஷயத்தில் ஆழ்ந்து போய் விட்டிருப்பவளுமான சுவர்ணரேகாவுக்கு அவன் நெருக்கம் சொர்க்கமாய விளங்கியதில் வியப்பில்லை.

அப்படிப்பட்ட சுவர்ணரேகாவுக்கு சொர்க்கத்தைக் காட்டிலும் அதீதமான எதைக்காட்டி நேத்ரா க்யூவிடமிருந்து அவளை மீட்டு தன்பக்கம் திருப்பிக்கொண்டான் என்பதை காலம்தான் தெளிவுப் படுத்த வேண்டும். பூஷணத்தின் ரகசியங்கள் அவள் மூலம் வெளிப்படுவது என்பது சிறிய விஷயமல்ல.

*****

சீதாலட்சுமி ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் கல்லூரி பி.எஸ்.ஸி. இறுதியாண்டு வகுப்பு. முப்பத்தெட்டு வயதுடைய, கல்யாணமாகாத லெக்சரர், குழந்தைகள் எப்படி பிறப்பார்கள் என்பதை ஆர்வத்துடன் மிக விளக்கமாக சொல்லிக் கொண்டிருந்தாள்

மணி அடித்ததும் மாணவிகள் எழுந்திருந்தார்கள். வகுப்புத் தோழிகளுடன் சேர்ந்து வெளியே வந்து

கொண்டிருக்கையில் அம்சரேகா சொன்னாள். “மேடம் சொல்லித் தந்தது எனக்கு ஒன்றுமே புரியவில்லை.”

அருணா வியப்புடன் பார்த்து, “ஒன்றுமே புரியவில்லையா?” என்றாள்.

“ஸ்பெர்ம்... எம்பிரையோ... ஊஹும். எனக்கு ஒரு வார்த்தைகூட புரியவில்லை.” அம்சரேகா கவலையுடன் சொன்னாள்.

“உன் வயதென்ன?”

“இருபத்தியொன்று. ஏன்?”

“இருபத்தோரு வயதாகிவிட்டது. குழந்தைகள் எப்படிப் பிறப்பார்கள் என்று கூட தெரியாதா?”

“ஊஹும்.”

இருவரும் அருணாவின் அறைக்கு வந்து சேர்ந்தார்கள். அருணா ஹாஸ்டலில் தங்கி இருந்தாள்.

“இறுதியாண்டு பி.எஸ்.ஸி. படித்து வருகிறாய். குழந்தைகள் எப்படிப் பிறப்பார்கள் என்று தெரியாது என்று சொன்னால் சிரிப்பார்கள். அஃப்கோர்ஸ். என்னுடைய அக்காவுக்குக்கூட கல்யாணமான மூன்றாவது நாள் வரையில் தெரியவே தெரியாதாம். அதுசரி, குறைந்த பட்சம் உனக்கு முதலிரவு என்றால் என்னவென்றாவது தெரியுமா?”

“கட்டிலுக்கு பூ அது இது கட்டுவார்கள். அதுதானே?” என்றாள் அம்சரேகா.

அந்த வயதில் இருக்கக் கூடிய சகஜமான ஆர்வம் அவ்விரு பெண்களிடமும் இருந்தது. ஒருத்தருக்கு கேட்க வேண்டும் என்றும், மற்றொருவருக்கு சொல்ல வேண்டும் என்றும்.

“ஆமாம். அதுதான்” என்றாள் அருணா.

“முதலிரவுக்கும் குழந்தைகள் பிறப்பதற்கும் என்ன சம்பந்தம்? பூக்களால் அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் படுத்துகொண்டால் பிறந்து விடுவார்களா?”

“உன் மூஞ்சி! பாயின் மேல் படுத்தாலும் பிறப்பார்கள்” என்று அருணா அருகில் வந்து ரகசியம் சொல்வது போல், “அதான் அன்றைக்குப் கணவன் மனைவியை அழுத்தமாய் உதட்டில் முத்தமிடுவான். அந்த முத்தத்தால் வயிற்றில் சுமை வந்து விடும் என்று அர்த்தம். புரிந்ததா அசட்டுப் பெண்ணே!” என்றாள்.

அம்சரேகா புரிந்தது என்பது போல் தலையாட்டினாள். சுவரில் மரஃபி குழந்தை இருவரையும் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

“முதல் மதிப்பெண்கள் வாங்கும் மாணவி நீ. நாளைக்கு வெளிநாட்டுக்குப் போய் பெரிய ரிசெர்ச் எல்லாம் பண்ணப் போகிறாய். வேறு யாரிடத்திலும் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டு விடாதே. சிரிப்பார்கள்.”

அம்சரேகா தலையை அசைத்தாள். அருணா ஒரு புத்தகத்தை எடுத்து தந்து, “இந்தா. இதைப்படி. கல்யாணமான பிறகு உதவும்” என்றாள்.

அம்சரேகா அதைப் பார்த்துவிட்டு, “சீ..” என்றாள். சொன்னாளே தவிர திருப்பித் தர முயற்சி செய்யவில்லை. தன் புத்தகங்களுக்கிடையில் அதை மறைத்து வைத்துகொண்டாள்.

“இதொண்ணும் ஆபாசமான புத்தகமில்லை. சயின்ஸ்! இந்த சயின்ஸ் கல்யாணமான ஆண்களில் பாதிபேருக்குத் தெரியாதாம். கடைக்காரன் சொன்னான். நம்மைப் போன்ற மாடர்ன் கர்ல்ஸ் எல்லோருமே படிக்க வேண்டிய புத்தகம். அனுபவத்தால் சொல்கிறேன்” என்றாள் அருணா. அப் புத்தகத்தின் பெயர்.

“முத்தம் கொடுப்பதில் முப்பத்திரண்டு விதங்கள்.”

## 11

ஏஜெண்ட் நேத்ரா சி.பி.ஐ. ஆபீசுக்குள் நுழையும் போது மணி பதினொன்று.

அஹோபிலா கண்கள் அகல விரிய அவனை பக்தியோடு பார்த்தாள். அவன் ஃபுல் சூட்டில் இருந்தான். வெள்ளை பேண்ட, வெள்ளை கோட்டு அவன் சிவந்த

மேனிக்கு அழகைக் கூட்டிற்று. அவன் நடையிலிருந்த மிடுக்கு எப்படிப்பட்ட பெண்ணாயிருந்தாலும் மற்றொரு முறை திரும்பிப் பார்க்கச் செய்யும்.

“உங்களுக்காக சீஃப் ஒரு மணி நேரமாய் காத்துக்கொண்டு இருக்கிறார்” என்றாள் அஹோபிலா.

“நல்லதுதானே! காத்துக்கொண்டு இருப்பது உடல் நலத்திற்கு என்றுமே நல்லது” என்றான் சிரித்துக்கொண்டே.

“உங்களுக்காக வாழ்நாளெல்லாம் காத்திருப்பேன் மிஸ்டர் நேத்ரா.”

“வேண்டாம். இன்றிரவே முடிந்தால் டின்னருக்குக் அழைத்துப் போகிறேன்.”

“என்னைவிட அழகான பெண் வேறு யாருமே இன்றைக்கு உங்கள் கண்ணில் பட்டுவிடக் கூடாது என்று ராத்திரி வரைக்கும் பிரார்த்தனை செய்துகொண்டு இருப்பேன். இதோ பார்த்தீங்களா” என்று மேஜையை காட்டினாள். சிவப்பு இங்க் கொட்டி துணியால் துடைத்திருப்பது போல் இருந்தது.

“இதென்னது?” வியப்புடன் கேட்டான்.

“நீங்க பிழைத்திருபதாய் தெரிந்தது. அதுவரை நெற்றியில் பொட்டு வைத்துக்கொள்ளவே இல்லை. சிவப்பு இங்கில் விரலை முக்கி நெற்றியில் வைத்துக்கொள்ளப் போனபோது சீசா தவறி விழுந்துவிட்டது.”

நேத்ரா சிரிக்கப் போனான். அவள் முகத்தைப் பார்த்ததும் அவன் மனது இரக்கத்தால் நிரம்பி வழிந்தது. சொன்னாலும் அந்தப் பெண்ணிற்குப் புரியாது. முதல் முதலில் அவன் அவளோடு சிரித்தபடி சகஜமாய்ப் பேசியதே தவறாகி விட்டது என்று நினைத்தான். அதுவரையில் அவளோடு அந்த அளவிற்குக் கூட யாருமே அன்பாய் பேசியிருக்க மாட்டார்கள். கொஞ்சம் வெப்பத்திற்கே உருகிப் போய் விடக் கூடிய மனநிலையில் இருந்தாள் அவள். ‘நேத்ராவாவது

உன்னைக் காதலிப்பதாவது?’ என்று கடவுளே நேரில் வந்து சொன்னாலும் நம்பும் மனநிலையில்லை அவள். அப்படிப்பட்ட பிரியங்கள் தர்க்கத்திற்கு எட்டாதவை. இப்படிப்பட்ட காதல் விபத்துகள் அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரியும். நேத்ரா சிரித்துவிட்டு கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனான்.

உள்ளே பிரதிமாவும் இருந்தாள். “குட் மார்னிங் சார்” என்று பிரதிமாவின் பக்கம் திரும்பி, “என்ன? கண்கள் சிவந்திருக்கு. இரவு முழுவதும் பாட்டுப் பாடிக்கொண்டு இருந்தாயா?” என்று கேட்டான்.

“மிஸ்டர் நேத்ரா! ஆறுமாதங்கள் அந்த வல்லியூரில் தங்கி இருந்து என்ன கிழித்தாய் என்று எனக்குப் புரியலை. நீ அனுப்பிய ரிப்போர்டுகளை படித்தேன். மீன்கள் எத்தனை வகை, மீன்களை எத்தனை விதமாய் சமைக்கலாம் என்று இருந்ததே தவிர, நாட்டிற்கு வரக்கூடிய ஆபத்தைப் பற்றி எதுவுமே இல்லை.”

“ரிப்போர்ட் எழுத எல்லாம் எனக்கு வணங்காது என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன் சார். ஐ பிலீவ் இன் ஆக்ஷன். அந்த ரிப்போர்ட்டை நான் எழுதவில்லை. என் பக்கத்து வீட்டுப் பையனைக் கொண்டு எழுத வைத்தேன்” என்று நாற்காலியில் வந்து உட்கார்ந்துகொண்டு.

“நான்சென்ஸ்! இவ்வளவு சம்பளம் கொடுத்து உங்களை வேலை பண்ணச் சொன்னால், மீனைப் பற்றிய கட்டுரை அதுவும் பக்கத்து வீட்டுப் பையனை கொண்டு எழுத வைத்திருக்கிறாய்.”

“ஐ... ஐ அப்ஜெக்ட் இட் சர்” என்றாள் பிரதிமா. “உயிரையும் பொருட்படுத்தாமல் நான் பூஷணத்தைப் பற்றிய ரிப்போர்ட் தயாரித்தேன். அது எங்கள் வீட்டு பீரோவில் பத்திரமாய் இருக்கிறது. நீங்கள்கூட பார்த்தீர்களே” என்றாள்.

“ஆண்களைவிட பெண்களுக்கு வேலையில் அதிக சிரத்தை இருக்கிறதை நிரூபித்துவிட்டாய் பெண்ணே.

நான் உன்னைப்பற்றி சொல்லவில்லை” என்று சீஃப் சொல்லிக் கொண்டிருந்த போதே போன் மணியடித்தது. அவர் அதை எடுத்துப் பேசிவிட்டு, “உனக்குத்தான். உன் பாட்டியிடமிருந்து” ஏறனார் பிரதிமாவிடம்.

“பாட்டிக்குக் கூட இன்டர்போல் போன் நம்பரைத் தந்தாயா?” என்றான் நேத்ரா. “ஆண்களை விட பெண்களுக்கு வீட்டைப் பற்றி அதிக சிரத்தை உண்டு என்று நிரூபித்து விட்டாய்.”

அவனை விழுங்கி விடுவது போல் பார்த்துக்கொண்டே பிரதிமா சங்கடத்துடன் போனைக் கையில் எடுத்துக்கொண்டு, “பாட்டீ! இது சீக்ரெட் போன். மிக அவசியமான நிலைமை ஏற்ட்டாலே யொழிய பயன்படுத்தக் கூடாது. என்ன விஷயம் சொல்லு?” என்றாள் தாழ்ந்த குரலில்.

மறுமுனையிலிருந்து பாட்டி, “உன் மூஞ்சி! அவசியமாவது, அனாவசியமாவது! தாசில்தாராய் இருந்த போது உன்னுடைய தாத்தா மாலையில் என்ன டிபன் பண்ணப் போகிறாய் என்று கேட்பதற்கு ஆபீஸ் போனைப் பயன்படுத்துவார். தெரிஞ்சுதா?” ஆற அமர பேசத் தொடங்கினாள்.

“இங்கே நாங்கள் நாட்டுப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட மிக முக்கியமான மீடிங்கில் இருக்கிறோம் பாட்டி. விஷயம் என்னவென்று சீக்கிரமாய் சொல்லு.” கோபத்தை அடக்கிக்கொண்டே பேசினாள்.

“எவர்சில்வர் பாத்திரக்காரன் வந்திருக்கிறான். அன்றைக்கு புடவையை எங்கே வைத்தாய்?”

பிரதிமாவின் முகம் கொல்லன் உலைகளத்து இரும்பாய் சிவந்தது. நேத்ரா ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான். அரும்பாடுபட்டு கோபத்தை அடக்கிக்கொண்டு, “அதைக் கேட்கிறதுக்கு இதுதானா சமயம் பாட்டீ?” என்றாள்.

“அவனிடம் ஒரு கிண்ணம் ரொம்ப நன்றாய் இருக்கு. அந்த மாதிரி கிண்ணத்தில்தான் உங்க தாத்தா

என் கையால் பால் சாதம் வாங்கி சாப்பிடுவார். அவர் போனதும்...” என்று அழத் தொடங்கினாள்.

பிரதிமா கலக்கம்டைந்தவளாய், “வேண்டாம் பாட்டீ. தாத்தா உன்னோடு சேர்ந்து எதில் என்ன செய்வார் என்கிற புராணத்தை அவிழ்த்து விடாதே. புடவை என் பீரோவில் இருக்கு.” ‘எடுத்துக்கோ’ என்று சொல்ல வந்தவள், “ஆனால் அதில் முக்கியமான ஃபைல் இருக்கு. நான் வந்ததும் எடுத்து தருகிறேன்” என்றாள் தயங்கிக்கொண்டே.

“அதுவரைக்கும் இந்த பாத்திரக்காரன் இருக்கமாட்டானே?”

“இருக்காவிட்டால் போகட்டும். அது ரொம்ப முக்கியமான ஃபைல்.”

“என்ன முக்கியம்? ஏதோ ஒன்றரை அணா உத்யோகம் பண்ணிக் கிழிக்கிறாய். உங்க தாத்தா மாவட்ட தாசீல்தாராய் இருந்தபோதுகூட, ‘வசுந்தரா! இந்தா சாவிக்கொத்து’ன்னு என்னண்டைதான் தருவார். இன்றைக்கு அவர் போனபிறகு என் தலையெழுத்து இப்படியாகி விட்டது. அந்த எவர்சில்வர் கிண்ணத்தை உன் தாத்தாவின் நினைவாய் வெச்சுக்கணும் என்று நினைத்தேன். என் வாழ்க்கை...”

“வேண்டம் பாட்டீ! சாவிக்கொத்து சுவர்க் கடியாரத்தில் இருக்கு. எடுத்துக்கொள்! ஃபைல் ஜாக்கிரதை. பெஞ்சுமேல் ஏறி பீரோவிலிருந்து எடுக்காதே. ஏற்கனவே உனக்கு முதுகு வலி” என்று போனை வைத்துவிட்டாள். அங்கே பாட்டியும் போனை வைத்துவிட்டு, ஸ்டூலை பீரோவுக்குகருகில் இழுத்தாள்.

ஜாக்கிரதையாய் ஸ்டூலில் ஏறி கடியாரத்திற்கு உள்ளே இருந்த சாவிகொத்தை எடுத்து, பீரோவைத் திறந்து அதிலிருந்த புடவையை எடுக்கப் போனாள். புடவைக்கு மேலே சீக்ரெட் ஃபைல் இருந்தது. பீரோவுக்கு பக்கத்திலேயே வாட்டர் ப்யூரிஃபயர் இருந்தது. அதற்கு மூடி இல்லை. அவள் ஃபைலை நகர்த்தி, அதற்கடியில் இருந்த புடவையை எடுத்துக் கொண்டிருந்தபோது

ஃபைலுக்குக் கீழே இருந்த ஒரு கவர் நழுவி நீரில் விழுந்துவிட்டது. அவள் அதை கவனிக்கவில்லை. நேத்ராவின் வாழ்க்கையில் ஒரு பெரும் மாறுதலுக்கு அந்நிகழ்ச்சி மூலகாரணமாயிற்று.

பிரதிமா திரும்பி வந்து உட்கார்ந்து ஏதோ பேசப் போனபோது நேத்ரா, “என்ன அவ்வளவு அர்ஜென்ட்?” என்று சாதாரணமாய் கேட்டான்.

“ஒன்றுமில்லை.”

நேத்ரா சீஃபைப் பார்த்து, “தோட்டத்திலிருந்த பரிசோதனை சாலையை நான் கண்டுபிடித்து விட்டது தெரிந்ததுமே அதை வல்லியூருக்கு மாற்றிவிட்டார்கள். அத்தனை விலை உயர்ந்த அண்டர் வாட்டர் லேபரேட்டரி என்றால், ஒருக்கால் இதெல்லாம் நாம் நினைப்பது போல் சின்ன விஷயமாய் இருந்திருக்காது. க்யூ கூட இதில் இருக்கிறான். அதனால் கண்டிப்பாய் எதிரி நாட்டின் உதவி இருந்து தீரும்” என்றான்.

“போகட்டும். சுவர்ணரேகாவை அரெஸ்ட் பண்ணினால் என்ன?” என்றாள் பிரதிமா.

சீஃப் மறுத்துத் தலையசைத்தார்.

“என்னவென்று கேஸ் போடுவோம்? வேண்டுமானால் அந்த ஏரி பூஷணத்துடையது. ஆதலால் அவரை அரெஸ்ட் பண்ணலாம். அதனால் நம் பிரச்னை தீராது” என்றார்.

இருவரும் யோசனையில் ஆழ்ந்தார்கள்.

பிரதிமா மற்றொருமுறை குற்றவாளியைப் போல் உணர்ந்தாள்.. இதெல்லாம் தன்னால்தான் என்று எண்ணிக்கொண்டாள். வல்லியூருக்குப் போவதற்கு முன்னால் சீஃபிடமோ, ஏரியில் இறங்கப் போவதற்கு முன்னால் வேதகிரியிடமோ சொல்லி இருந்தால் பிரச்சினை இத்தனை தூரத்திற்கு வராமல் இருந்திருக்கும்.

அவ்விருவரின் மௌனமும் அவளை மேலும் சங்கடத்திற்கு உள்ளாக்கிற்று. பேப்பர் வெயிட்டையே

சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குள் அவள் மூளையில் ஏதோ பளிச்சிட்டாற் போலிருந்தது.

“ஐடியா!” என்றாள் கண்கள் ஆர்வத்துடன் பளிச்சிட. அந்த யோசனை வந்ததுமே அதுவரை இருந்து வந்த டென்ஷன் போயிற்று.

“தோன்றிவிட்டது. யோசனை தொன்றிவிட்டது” என்றாள்.

“என்ன?” என்றார் சீஃப்.

திடீரென்று தனக்கு வந்து சேர்ந்த முக்கியத்துவத்திற்குப் பூரித்துப் போய்விட்டாள் அவள். நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு, ஒரு படைத் தலைவன் போர்த் திட்டத்தைப் பற்றி எஞ்சியவர்களுக்கு எடுத்துச் சொல்வது போல், “அந்த ரகசியம் வெளிப்படுவதற்கு ஒரே ஒரு சான்ஸ் இருக்கு. அது பூஷணத்தின் மகளை டிராப் பண்ணுவது” என்றாள்.

அவ்வறையில் திடீரென்று நிசப்தம் ஏற்பட்டது. அவள் சொன்னது அவர்களுக்கு உடனே புரியவில்லை. புரியாதவர்களாய் அவளைப் பார்த்தார்கள்.

பிரதிமா அவ்விருவரையும் பார்த்து இன்னும் நிமிர்ந்து உட்கார்ந்து, “அந்தப் பெண்ணின் பெயர் சுவர்ணரேகா. ஆறு மாதமாய் கஷ்டப்பட்டு நான் பூஷணத்தைப் பற்றி தகவல்களை சேகரித்துக் கொண்டிருந்த ஃபைலில் அந்தப் பெண்ணைப் பற்றிய விவரம் இருக்கிறது. ஃபைலைப் படித்தால் தெரியும்” என்றாள் உற்சாகத்துடன்.

“ஃபலைப் படிப்பது, குறிப்பு எழுதுவது இதெல்லாம் நமக்கு சரிப்படாது. விஷயத்தை நேரடியாகச் சொல்லு” என்றான் நேத்ரா.

“சுவர்ணரேகா ஏதோ திட்டத்தில் மூழ்கியிருக்கிறாள். போதைப் பொருட்களின் பழக்கம் இருக்கிறது. சமுதாயத்திடம் பற்று இல்லாததுபோல் நடந்து கொள்வாள். ஆண்களைக் கண்டால் கண்மூடித் தனமான பைத்தியம். பூஷணத்தின் அத்தனை

ரகசியமும் அவளுக்குத் தெரியும். அவளிடமிருந்து ரகசியத்தை வரவழைக்கக் கூடிய ஒரே சாதனம் அழகான ஆண்மகன். இது நம் ஏஜெண்ட் நேத்ராவுக்கு பொருந்தும்” என்று சிரித்தாள் பிரதிமா.

“யு ஆர் டாக்கிங் நான்சென்ஸ். தந்தையின் ரகசியத்தைத் தெரிந்துகொள்ள மகளை ட்ராப் பண்ணுவதாவது?” என்றான் நேத்ரா.

“தவறென்ன இருக்கு? எதிரிநாட்டு சிப்பாய் அகப்பட்டுவிட்டால் ரகசியத்தை வரவழைப்பதற்காக சித்ரவதை பண்ணுவதில்லையா? உயிரை எடுப்பதில்லையா?”

“அது யுத்தத்தில்! இங்கே நம் சுயநலத்துக்காக ஒரு அப்பாவிப் பெண்ணைப் பலிவாங்குவதா?”

“அப்பாவி இல்லை.” பிரதிமா ஆவேசமாய்ப் பேசினாள். “அந்தப் பெண்ணுக்கு போதை மருந்து பழக்கம் இருக்கு. புடவையை மாற்றுவதுபோல் ஆண்களை மாற்றிக்கொண்டே இருப்பாள். தந்தையோடு ரகசிய மீட்டிங்குகளில் பங்கெடுத்துக் கொள்கிறாள். ஒரு தேசத் துரோகியை உன் அழகால் மயக்கி, நாட்டைக் காப்பாற்றிக் கொள்வதில் தவறு இல்லை. கற்பை விட நாடு முக்கியம் என்பது ஆண்களுக்கும் பொருந்தும்.”

“நாட்டுக்காக உயிரை விட சொன்னாலும் தயாராயிருக்கிறேன். தேசத் துரோகிகளை கருணை இன்றி கொல்லுகிறேன். ஆனால்... ஒரு பெண்ணின் கற்பை இரையாக்கி என் பண்பை கெடுத்துக் கொள்ள மாட்டேன். ஐ யாம் சாரி. நீங்க வேறு எந்த ஏஜெண்டையாவது இந்த வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்” என்று எழுந்தான் நேத்ரா.

சீஃப் அவனைத் தடுத்து நிறுத்தி, “உட்காரு உட்காரு” என்று பிரதிமாவை நோக்கித் திரும்பி, “நீ போய் அந்த ஃபைலைக் கொண்டு வா” என்றார்.

அவள் ஆர்வத்துடன் புறப்பட்டாள். அவள் போனபிறகு பகீரதனின் குரல் அவ்வறையில் மந்திர

ஸ்தாயில் கேட்கத் தொடங்கிற்று.

## 12

“நீ சொன்னது நிஜம்தான். பணத்தைவிட, உயிரைவிட மானமே விலைமதிப்பு வாய்ந்தது. முக்கியமாய் நம் இந்திய பெண்ணிற்கு. நம் சீக்ரெட் சர்வீஸ் வரலாற்றில் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் ஒரு அபூர்வமான சம்பவம் நிகழ்ந்தது தெரியுமா? ஜெர்மன் நாஜிக்களின் ரகசியங்களைத் தெரிந்துகொள்வதற்கு அமெரிக்க அரசாங்கம் ஒரு ரகசிய ஏஜெண்டை நியமித்தது. அப்பெண் ஒரு வருட காலம் கடுமையான பயிற்சி செய்து ஜெர்மன் மொழி கற்றுகொண்டாள். பிளாஸ்டிக் சர்ஜரி செய்து ஜெர்மன் பெண்ணாக மாறி, ஒரு ராணுவ அதிகாரியைத் திருமணம் செய்து கொண்டாள். அவனிடம் ஒரு குழந்தையையும் பெற்றெடுத்தாள். தன் வாழ்க்கையையே அதுபோல் பணயமாய் வைத்து அமெரிக்காவுக்கு ரகசியங்களை அனுப்பி தற்கொலை பண்ணிக்கொண்டாள். உளவாளிகளுக்கே ஒரு எடுத்துக் காட்டாய் நிலைத்து நின்று விட்டாள்.

இதெல்லாம் உன்னை கன்வின்ஸ் பண்ணுவதற்காகச் சொல்லவில்லை. உன் வாதம்கூட சரியானதுதான். ஆனால் யோசித்துப் பார். உனக்கு பிடிக்காமல் போனால் அந்தப் பெண்ணை உடல் உறவு வரைக்கும் கொண்டு போக வேண்டாம். பிரதிமா ரிப்போர்ட்டின் படி அவள் வாழ்க்கையை எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடியவள்.. உன் சாதுரியத்தைப் பயன்படுத்தி அவளிடமிருந்து ஏதேனும் கொஞ்சம் விஷயத்தை வரவழைத்தாலும் நமக்கு மிகவும் உபயோகமாய் இருக்கும். எந்த ஸ்டேஜில் நீ அதை சாதிப்பாய் என்பது உன் தன்னம்பிக்கையின் மேல் ஆதாரபட்டிருக்கிறது. அதற்காக சொன்னது போல் யாருடைய கற்பையும் பலிகொடுக்க வேண்டியிருக்காது. உனக்கு உன்மீது நம்பிக்கை இருக்கிறதா?”

ஏஜெண்ட் நேத்ரா கைவிரல்களைப் பார்த்துக்கொண்டு மௌனமாய் உட்கார்ந்திருந்தான். தன் வாழ்க்கையில் ஒரு காரியத்தைப் பண்ணுவதற்கு அவன் தடுமாற்றமடைந்தது அதுதான் முதல் தடவை.

சீஃப் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

*****

“இன்னொரு கிண்ணம் தரட்டுமா அம்மா?” எவர்சில்வர் பாத்திரக்காரன் கேட்டான்.

“வேண்டாம் அப்பனே. என் பேத்தி இதையெல்லாம் பார்த்தால் என்மேல் பாய்ந்து வந்து விடுவாள்”

கிண்ணத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போனவள் மின் அதிர்ச்சி அடைந்தாற்போல் அப்படியே நின்றுவிட்டாள்.

தண்ணீருக்கு மேலே நனைந்த போட்டோ மிதந்து கொண்டிருந்தது தென்பட்டது. அவள் அதை எடுக்கப் போனபொழுது காலிங்க்பெல் அடித்தது. அவள் மேலும் கலக்கமடைந்து போட்டோவை புடவைத் தலைப்பால் துடைக்க முயன்றாள். அதன் மூலம் போட்டோவின் மேற்புறம் கிழிந்துவிட்டது. அதற்குள் வெளியேயிருந்து, “பாட்டீ!” என்ற பிரதிமாவின் குரல கேட்டது. அவள் போட்டோவை திகிலோடு பார்த்தாள்.

‘மிக முக்கியமான ஃபைல் பாட்டீ’ என்று பிரதிமா போனில் சொன்னது நினைவுக்கு வந்தது. வெளியேயிருந்து காலிங்க்பெல் விடாமல் ஒலித்துக்கொண்டே இருந்தது.

அவள் ஃபைலை எடுத்தாள்.

அதற்குள் இன்னும் நிறைய போட்டோக்கள் இருந்தன, அதிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து சட்டென்று கவருக்குள் வைத்துவிட்டு, அதை ஃபைலில் சொருகிவிட்டு ஃபைலை பழைய இடத்திலேயே வைத்துவிட்டு போய் கதவைத் திறந்தாள்.

“என்ன பாட்டீ இவ்வளவு தாமதம்” என்று பிரதிமா பரபரப்புடன் உள்ளே வந்து, திறந்திருந்த பீரோவைப் பார்த்துவிட்டு, “உனக்கு அலட்சியம் அதிகமாகி விட்டது. முக்கியமான காகிதங்கள் இருக்கு என்று சொன்னேன் இல்லையா?” என்று அவ்விடத்திற்குப் போய் ஃபைலை எடுத்துக் கொண்டாள்.

எவ்வளவு வேகமாய் வந்தாளோ அவ்வளவு வேகமாய் அங்கிருந்து போய்விட்டாள்.

பாட்டி வைத்த போட்டோ அம்சரேகாவுடையது.

*****

அம்சரேகாவின் அறை.

கவாஸ்கரின் போஸ்டர்களும், பீடில்சின் படமும் சுவரில் இருந்தன.

நவநாகரீகமான உடைகள் ஹேங்கரில் தொங்கிக் கொண்டிருந்தன. அறையின் ஒரு மூலையில் டி.வி. இருந்தது. டி.வி.யில் கோஹினூர் விளம்பரம், குடும்பக்கட்டுபாடு பற்றியது. ஆணும் பெண்ணும் உதட்டிற்கருகில் வந்து அப்படியே நின்று கொண்டார்கள்.

“நில்லுங்கள்” என்று கத்தினாள் அம்சரேகா.

“முத்தம் கொடுப்பதற்கு முன்னால் இன்னொரு தடவை நன்றாக யோசித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். இன்னொரு குழந்தை பெறுவதற்கு இது தருணமா? இரு குழந்தைகளுக்கு இடையே இடைவெளி இருக்கும் படியாய் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் ஆரோக்கியத்திற்கு மிக நல்லது. குழந்தைகள் பிறக்காமல் தடுக்கவல்ல ஒரே வழி நிரோத்” என்று பாக்கெட்டை உயர்த்திப் பிடித்துக் கொண்டாள்.

கதவிற்கருகில் கைத்தட்டல் சத்தம் கேட்டது.

சுவர்ணரேகா முறுவலுடன் உள்ளே வந்தாள். அம்சரேகா வெட்கமடைந்தாள்.

“என்னது? படிப்பை விட்டுவிட்டு விளம்பரக் கம்பெனியில் சேர்ந்துவிட்டாயா?’ என்றாள் சுவர்ணா.

அவள் குரலில் நேற்றைய சம்பவத்தின் சுவடே இல்லை.

“இல்லை அக்கா! நாளைக்கு கல்லூரி சார்பில் பக்கத்து கிராமத்திற்கு மாணவிகள் எல்லோரும் போய் வாலண்டரி பிரோக்கிராம் தரணும். அதுக்கு ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறேன்” என்றாள்.

சுவர்ணரேகா பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே தன் பிரசங்கத்தைத் தொடர்ந்தாள்.

“படிப்பு இல்லாததாலும், புரிந்துகொள்ளும் பக்குவம் இல்லாததாலும் நிறைய குழந்தைகளை பெற்றுக்கொண்டு உங்கள் வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்ளாதீர்கள். இதோ நிரோத்! முத்தம் கொடுப்பதற்கு முன்னால் இந்த மாத்திரையைப் போட்டுக்கொண்டால் உங்களுக்குக் குழந்தைகள் பிறக்காது.” பாக்கெட்டை உயர்த்திப் பிடித்துக்கொண்டு ஒத்திகையைத் தொடர்ந்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த சுவர்ணரேகா அதிர்ந்து போய், “என்னது? இன்னொரு தடவை சொல்லு” என்றாள்.

அம்சரேகா சற்று முன்னால் சொன்னதையே திரும்பிச் சொன்னாள். சுவர்ணரேகாவுக்கு தங்கைக்கு எப்படிச் சொல்வது என்று புரியவில்லை.

“நாளைக்கு அந்த கிராமத்தில் இதேபோல் சொன்னாயானால் தக்காளிப் பழத்தையும் அழுகிய முட்டையையும் உன்மேல் விட்டெறிவார்கள்” என்றாள் சிரிப்பை அடக்கிக்கொண்டு.

“ஏன்? எதுக்காக?” என்றாள் அம்சரேகா கோபமாய்.

சுவர்ணாவுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.

“உள்ளே மாத்திரைகள் இருக்காது. அந்த பாக்கெட்டைப் பிரித்துப் பாரு” என்று சொல்லிவிட்டு அதற்கு மேல் அங்கு இருக்கமாட்டாதவளாய் சங்கோஜத்துடன் போய்விட்டாள்.

அம்சரேகா சந்தேகத்துடன் உறையைப் பிரித்தாள். உள்ளேயிருந்த பொருளைப் பார்த்ததுமே தான் பண்ணிய தவறு புரிந்தது.

“கிராம மக்களே! நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணைவிகளுக்கு முத்தம் கொடுப்பதற்கு முன்னால் இந்த பரிசுத்தமான, பிளாஸ்டிக் காகிதத்தை உதட்டில் உறையாய் போட்டுக்கொள்ளுங்கள்” என்று தொடர்ந்தாள்.

## 13

அதே சமயத்தில் அங்கே பிரதிமா மீட்டிங்கில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“அந்தப் பெண்ணின் பெயர் ரேகா. பூஷணத்திற்கு மகள் மீது மிகப் பிரியம். ஆனால் அந்த அன்பு சகஜமாய் தோன்றியது அல்ல. பணத்தால் ஏற்பட்ட அன்பு. மீதி விஷயங்கள் இந்த ஃபைலில் உள்ளன” என்று ஃபைலைத் தந்தாள்.

“ஃபைல் படிப்பதில் எல்லாம் எனக்கு ஆர்வம் கிடையாது என்று முன்பே சொல்லியிருக்கிறேன்” என்று முதல் பக்கத்தைத் திருப்பினான். உள்ளே உறையிருந்தது. உறையின் மீது ரேகா என்று எழுதியிருந்தது. உள்ளேயிருந்து போட்டோவை எடுத்தான். அது அம்சரேகாவின் போட்டோ. பிரதிமாவின் பாட்டி அவசரத்தில் மாற்றிவிட்டிருந்த போட்டோ அது. அவன் அதை கண்ணிமைக்காமல் பார்த்தான். அவனுக்கு அந்த போட்டோவைப் பார்த்ததுமே அன்றைக்கு அந்தப் பெண் பூஷணத்துடன் தோட்டத்தில் பேசிக்கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. போட்டோவில் அம்சரேகா அப்பாவியாய் பார்த்துக்கொண்டிருந்தாள். கண்களில் கடுகளவு குறும்புத்தனமும், ஆர்வமும் மின்னின.

“ரொம்ப அப்பாவித்தனமாய் இருக்கு இல்லையா அந்தக் கண்கள்! அந்தக் கண்களைப் பார்த்தால் ஏமாற்றுகிற பெண்ணாகவே தோன்றவில்லை.” என்றான்.

“போதை ஊசி போட்டு போட்டு அந்த மாதிரி ஆகிவிட்டது அந்தக் கண்கள்” என்றாள் பிரதிமா போட்டோவைப் பார்க்காமலேயே.

“ஓ.கே. மீதி விஷயத்தை நான் பார்த்துக்கொள்கிறேன். இந்தப் பெண்ணை அவள் தந்தையுடன் கூட தோட்டத்தில் அன்றைக்கே பார்த்தேன். எனக்கு நினைவிருக்கு” என்றான்.

“இன்று மாலை ஓட்டல் பிராட்வேக்கு பூஷணத்தின் குடும்பம் ஒரு பார்ட்டிக்கு வரப்போகிறது. அதுக்கு இன்விடேஷனைக் கூட சம்பாதித்து விட்டேன். இதோ” என்று அழைப்பிதழைத் தந்தாள். தான் சொன்ன திட்டத்தை சீஃப் மெச்சிக் கொண்டது, நேத்ரா அதனை எளிதில் ஒப்புக்கொண்டது அவளுக்கு மிக சந்தோஷமாயிருந்தது.

நேத்ரா வெளியே வந்து அஹோபிலாவிடம், “இதோ பார். இந்த ஃபைலை ரிகார்ட்டு ரூமில் கொண்டு போய் வை” என்று தந்தான்.

அவள் அதைப் பெற்றுக்கொண்டு, “இன்று மாலையில்” என்றாள் அவன் தந்த வாக்குறுதியை நினைவுப்படுத்தியபடி.

“சாரி அஹோபிலா! மாலையில் கொஞ்சம் அரசாங்க வேலை இருக்கு” என்றான் கிளம்ப முற்பட்டவனாய்.

அவள் கவலையுடன் அவன் போன திசையையே பார்த்துக்கொண்டு இருந்தாள்.

*****

உள்ளே பார்ட்டி நடந்து கொண்டிருந்தது. மிக விலையுயர்ந்த பார்ட்டி அது. விசாலமான ஹால். வெளிவராண்டாவில் நின்று கொண்டிருந்தார்கள் நேத்ராவும், பிரதிமாவும். கண்ணாடிக் கதவுகளின் வழியாய் உள்ளேயிருந்தவர்கள் தென்பட்டார்கள்.

“அதோ.. அந்தப் பெண்தான்” என்றாள் பிரதிமா.

“கையில் கோகோ கோலாவை வைத்திருக்கிறாளே, அந்தப் பெண் தானே?” அம்சரேகாவைப் பார்த்துக் கேட்டான் நேத்ரா.

“பேருக்கு கோகோ கோலா. யாரும் பார்க்காமல் அதில் ரம்மைக் கலந்து கொண்டிருப்பாள்.” வெறுப்போடு சுவர்ணரேகாவைப் பார்த்துச் சொன்னாள் பிரதிமா.

“பார்த்துக்கொண்டே இருந்தால் நானே அவளைக் காதலிக்கத் தொடங்கி விடுவேன் போலிருக்கு. அத்தனை அழகாக இருக்கிறாள்.” ஓரக்கண்ணால் பிரதிமாவைப் பார்த்துச் சொன்னான்.

அம்சரேகா உண்மையில் அந்த உடையில் அவ்வளவு அழகாக இருந்தாள்.

பிரதிமா சிரித்துவிட்டு, “எனக்கு அந்த பயமெல்லாம் இல்லை. அந்தப் பெண்ணின் சரித்திரத்தைத் தெரிந்தவர்கள் யாருமே அவளை விரும்ப மாட்டார்கள்” என்றாள் அலட்சியமாய்.

“சரி. வலது காலை எடுத்து வைத்துக் களத்தில் குதிக்கட்டுமா?”

“பெஸ்ட் ஆஃப் லக். நான் மீதி ஏற்பாடுகளை கவனிக்கிறேன்.”

நேத்ரா வியப்புடன், “மீதி ஏற்பாடா? அதென்ன?” இனான்.

“அந்தப் பெண் உன்னை சீக்கிரமாய் காதலிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டாமா?”

“அதை எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். உன்னைப் பார்த்தால் முதலிரவைக் கூட சுயமாய் ஏற்பாடு பண்ணி விடுவாய் போலிருக்கு.”

“நாட்டுக்காக அவ்வளவுக் கூட தற்காலிகமாய் தியாகம் பண்ணாமல் போனால் எப்படி?” என்று சிரித்துவிட்டாள் பிரதிமா.

“நீயும் உள்ளே வருகிறாயா? அந்தப் பெண்ணைப் அறிமுகம் செய்து கொள்வோம்.”

“வேண்டாம். நான் இருந்தால் கதையே மாறிவிடலாம். போய் வருகிறேன். பெஸ்ட் ஆஃப் லக்” என்று சொல்லிவிட்டு பிரதிமா போய்விட்டாள்.

அவள் போன பிறகு நேத்ரா உள்ளே அடியெடுத்து வைத்தான்.

ஏர் கண்டிஷன் ஹால். குளிர்ந்த காற்று விர்ரென்று வீசிக் கொண்டிருந்தது. அம்சரேகா ஒரு மூலையில் நின்று கோக் அருந்திக் கொண்டிருந்தாள்.

அவன் தயங்காமல் அருகில் சென்று, “கேன் ஐ கிவ் கம்பெனி ஹியர்?” என்றான் கையில் கிளாஸ் டம்ளருடன்.

அவள் அவனைப் பார்த்தாள். அவன் கண்களில் காந்த சக்தி இருந்தது. அவள் அவனை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சிரித்தான். மேலுக்குச் சிரித்தானே தவிர, அவன் மனதிற்குள் அன்றைக்குத் தோட்டத்தில் வேனுக்குள் ஏற்றப்பட்ட மனிதர்களின் உடல்களே நிழலாடிக் கொண்டிருந்தன. அடுத்த வினாடியே பழைய நிலைக்கு வந்து விட்டான்.

“என் பெயர் நேத்ரா. மன்மத நேத்ரா” என்றான்.

அவள் கண்கள் அகல விரிய, “மன்மத நேத்ராவா? பெயரே ரொம்ப வித்தியாசமாக இருக்கிறதே? என்ன செய்கிறீர்கள்?” என்று கேட்டாள்.

“சீக்ரெட் சர்வீஸ்.”

“என்னது?”

“ரகசிய வேலைகள்.”

அவள் கிளுக்கென்று சிரித்துவிட்டு, “ரொம்ப நன்றாய் பேசுகிறீர்கள்” என்றாள்.

அவன் அவளை நேராகப் பார்த்தான். மிக விலையுயர்ந்த ஸ்கர்ட் அணிந்திருந்தாள். பிரதிமா சொன்னது போல் மிக சாகசக்காரியாய் இருப்பாள் போலிருந்தது. ஆனால் அவள் கண்களில்

குறும்புத்தனத்தோடு கூட இன்னும் ஏதோ... ஏதோ கூட இருந்தது. அதென்னது? கவிதை உணர்வா? அவனது நுட்பமான பார்வையிலிருந்து அவளைப்பற்றிய எந்தச் சின்ன விஷயமுமே தப்பவில்லை.

தன் டிபார்ட்மென்ட் தன்னிடம் என்ன வேலையை ஒப்படைத்திருந்தது என்று அவனுக்குத் தெரியும். என்ன பண்ண வேண்டும் என்றும் அவனுக்கு தெரியும்.

அவன் தானாகவே இந்த விவகாரத்தைத் தொடர நினைத்தான். பொய் பெயரைச் சொல்லுவதோ, . ரகசியமாய் நடந்து கொள்வதோ விரும்பவில்லை. எவ்வளவு மறைத்து வைத்தாலும் இந்த விஷயம் எப்படியும் அவள் தந்தைக்கு தெரிந்துவிடும். மறைத்து வைப்பது அனாவசியம்.

இந்த ஆபரேஷன் முழுவதிலும் அவன் ஊகித்தும் இராதது ஒன்றுள்ளது. பூஷணமும் க்யூவும் சுவர்ணரேகாவின் பரிசோதனைக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது! அவள் அவர்களின் பரிசோதனைச் சாலையில் ஒரு சின்ன அசிஸ்டென்ட் என்றெண்ணிக் கொண்டானே தவிர அவள் ஒரு ஆராய்ச்சியாளர் என்று நினைக்கவில்லை.

அதனால்தான் அம்சரேகாவைப் பார்த்தபோது அவனுக்கு எந்தச் சந்தேகமும் வரவில்லை.

அதற்குள் அவள் மேஜைமேலிருந்த கிளாஸ் டம்ளரை கையில் எடுத்துக்கொண்டு ஒரு மடக்கு குடித்தாள். ஸ்பான்டேனிடி அவனுக்குக் கை வந்த கலை.

“அடடா!” என்றான் பதறியபடி.

“என்னவாச்சு?”

“நீங்கள் என் கிளாஸ் டம்ளரை எடுத்துக் குடிச்சிட்டீங்க.”

அவள் கிளாஸ் டம்ப்ளரை டக்கென்று கீழே வைத்துவிட்டு, “மை காட்! சாரி” என்றாள்.

“பரவாயில்லை.” அவன் குறும்பாய் சிரித்தான்.

அவளுக்கோ மின்சாரம் பாய்ந்தாற்போல் இருந்தது.

சிநேகிதியின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. வயிற்றின் மேல் கை வைத்துக் கொண்டாள். பச்சிளம் குழந்தையின் அழுகுரல் கேட்பது போலிருந்தது.

அதுவரை தொலைவிலிருந்தபடியே இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சுவர்ணரேகா அவர்களிடம் வந்து, “ரொம்ப நன்றாய் பேசுறீங்களே நீங்கள்” என்றாள்.

சரியாய் ஒரு நிமிஷம் கழித்து அவன் அவர்களுக்கு நெருங்கியவனாகி விட்டான்.

“என்னுடைய அக்கா” என்று அறிமுகம் செய்து வைத்தாள் அம்சரேகா.

“சொந்த அக்கா இல்லை. அவள் அப்பாவின் வளர்ப்பு மகள்” என்று அருகில் வந்தாள் சுவர்ணரேகா.

“என் பெயர் நேத்ரா” என்று அறிமுகம் செய்துகொண்டு அம்சரேகாவின் பக்கமாய திரும்பி, “உங்கள் ரசனைகள் என்னென்ன?” என்று கேட்டான்.

“என் சப்ஜெக்ட் கெமிஸ்ட்ரி. அதனால் எனக்கு கெமிஸ்ட்ரி என்றால் மிகவும் பிடிக்கும்” என்றாள் அம்சரேகா.

“கெமிஸ்ட்ரியில் எதைப் பற்றி ஆராய்ச்சி பண்றீங்க?”

“ஆராய்ச்சியா? இல்லையே. இன்னும் படித்துக்கொண்டு இருக்கிறேன்.”

நேத்ரா அவளைக் கூர்ந்து பார்த்தான். கொஞ்சம் அவசரப்பட்டு விட்டோமோ என்று தோன்றிற்று அவனுக்கு. உடனே பேச்சை மாற்ற எண்ணி, “பெண்ணின் கெமிகல் ப்ராபர்ட்டீஸ் சொல்லுங்கள் பார்ப்போம்” என்றான்.

அவள் வியப்புடன், “பெண்ணின் கெமிகல் பிராபர்ட்டீஸா?” என்றாள்.

“ஆமாம்.”

“எனக்குப் புரியவில்லை. நீங்க எதைப்பற்றி கேட்கிறீங்க?” என்றாள்.

சுவர்ணரேகாவும் அவனை வியப்புடன் பார்த்தாள்.

“கெமிஸ்ட்ரியில் பரிசோதனை பண்ணிகொண்டு இருக்கும் உங்களுக்கே விஷயம் தெரியாதா?” சிரித்துக்கொண்டே சொல்லத் தொடங்கினான் நேத்ரா.

அம்சரேகா கண்கள் அகலவிரிய அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். காலேஜில் நிறைய ஜோக்குகளைக் கேட்டிருக்கிறாள். ஆனால் இவ்வளவு துல்லியமாய் எந்த தடையின்றி கடகடவென ஒப்பித்தது அவளுக்கு த்ரில்லிங்காய் இருந்து. அவள் திக்பிரமையிலிருந்து மீளுவதற்குள்ளாகவே, “என்ன அப்படி பார்க்கிறீங்க?” என்று கேட்டான்.

அவள் சட்டென்று கண்களைத் தாழ்த்திக்கொண்டு, “ஒன்றுமில்லை” என்றாள்.

சுவர்ணரேகாவும் அவனை பாராட்டுவது போல் பார்த்தாள்.

“உங்களுக்கு ஆங்கில கவிதைகளில் கூட ஆர்வம் உண்டு என்று சொன்னீங்க இல்லையா?” என்று கேட்டான்.

சொன்னாளா இல்லையா என்று அவளுக்கு நினைவில்லை. தலையாட்டினாள்.

“ரொம்ப நாட்களுக்கு முன்னால் காலேஜில் படித்துக் கொண்டிருந்த போது நான் கவிதைகள் எழுதுவேன்” என்றான்.

“நிஜமாகவா? எங்கே ஒன்று சொல்லுங்கள் பார்க்கலாம்” என்றாள்.

தன்னையே நிந்தித்துக் கொண்டான் நேத்ரா. துப்பாக்கி சுடுவது, எதிரிகளின் திட்டங்களைத் தகர்ப்பது, தப்பித்துக் கொள்வது... இதெல்லாம்தான் அவனுக்கு வருமே தவிர, இதுபோல் வார்த்தைகளைக் கற்பனையில் புனைந்து கவிதை படைப்பது அவனுக்கு கைவராத கலை.

“என்ன கவிதை எழுதுவீங்க?” என்றாள் மறுபடியும்.

“கவிதை என்று இல்லை. ஏதோ படிக்கும் நாட்களில் பெண்ணைப் பற்றி குறும்புத்தனமான கவிதைகள் அவை.”

“சொல்லக் கூடாதா?” கெஞ்சினாள்.

“திட்டக் கூடாது.”

“திட்ட மாட்டேன்.”

அவன் ஒரு வினாடி அவள் போட்டுக் கொண்டிருந்த உடைகளையும், அவளையும் பார்த்துவிட்டு, கண்களைப் பார்வையால் அளந்துகொண்டே சொன்னான்.

“நீங்கள் ஸ்கர்ட்டில் மிக அழகாய் இருக்கீங்க. ஆனால் பைஜாமா குர்த்தா போட்டிருந்தால் இன்னும் நன்றாயிருந்திருக்கும்.”

“கவிதையைச் சொல்லாமல் நீங்கள் என்னை இழுத்தடிக்கிறீங்க.”

“சொல்லித்தான் தீரணுமா?”

“சொல்லித் தீரணும்.”

“you are too old for mini skirts
Let us go to the out skirts
You are too young to be a grand maa
And look excellent without a Pyjama

அவள் கன்னங்கள் வெட்கத்தால் சிவந்தன. ஆனாலும் கண்களில் மின்னல் பளிச்சிட்டது. நேத்ராவுக்குத் தன்மீதே இரக்கமாய் இருந்தது. இந்த பெண்களைக் கவரும் விதத்தில் உரையாடலை மேற்கொள்ள வேண்டுமானால் குறைந்தது பத்து வயதாவது மானசீகமாய் குறைக்க வேண்டும்.

பார்ட்டியில் நேத்ரா, அம்சரேகா சுவர்ணரேகா... இவர்களுடன் அளவளாவிக் கொண்டிருக்கையில்...

தொலைவில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த பூஷணம் அவர்களைப் பார்த்தார். அவர் புருவம் உயர்ந்தது. சட்டென்று கிளாஸ் டம்ளரை கீழே வைத்தார்.

“உங்க ஹாபி என்னென்ன?” என்று கேட்டான் நேத்ரா அம்சரேகாவை மூன்றாவது தடவையாக.

“அவள் ஹாபீஸ் என்னவென்று என்னைக் கேளுங்கள். நான் சொல்கிறேன்” என்று சுவர்ணரேகா

குறுக்கிட்டு, “எல்வீஸ் ப்ரிஸ்லி என்றால் பிடிக்கும். க்ளிஃப் ரிச்சர்ட்ஸ் என்றால் காதை அறுத்துக் கொள்வாள். டான்சிங் ஈஸ் ஹர் லவ். இதெல்லாவற்றையும் விட கெமிஸ்ட்ரி அவளுக்கு விருப்பம்.”

நேத்ரா ஏதோ சொல்ல வந்த போது, வேலையாள் வந்து, “உங்களைக் கூப்பிடறாங்க” என்று காட்டிவிட்டுப் போய் விட்டான்.

கண்ணாடிக் கப்பால் பூஷணம் படம் விரித்தாடும் பாம்பு போல் இருந்தார்.

“என்னது? தனியாய் இருக்கிற பெண்களிடம் வம்பு பேசுகிறாயா?”

“உனக்கென்ன நஷ்டம் அதனால்?” என்றான் நேத்ரா அதே திமிரோடு.

“அவர்கள் என் மகள்கள்.”

நேத்ரா சிரித்துவிட்டு, “ஓஹோ!” என்றான்.

பூஷணத்துக்கு அந்தச் சிரிப்பு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அவர் கை ஜெபிக்குள் போயிற்று. அரும்பாடுபட்டு துப்பாக்கியை வெளியே எடுக்காமல் தன்னை சுதாரித்துக் கொண்டார். “இதோ பார்! நீ நாயுடுவின் வீட்டில் வேலை செய்த வேலைக்காரன் என்றும், உனக்கு கோட்டும் சூட்டும் போட்டு சி.பி.ஐ. ஆட்கள் இங்கே கூட்டிட்டு வந்திருக்கிறார்கள் என்றும் தெரியும். பெரிய மனுஷனாய் ஆலோசனை சொல்கிறேன். உங்கள் ஊருக்குப் போய் ஏதாவது கூலி வேலை பண்ணிக்கோ. இங்கே இருந்தால் உயிர் போய் விடும். உன் நன்மைக்காகச் சொல்கிறேன்.”

நேத்ரா வினாடி நேரம் திகைத்துப் போய் உடனே சமாளித்துக்கொண்டான். அடக்க மாட்டாமல் வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டே, “போயிட்டு வாய்யா. குடிப்பதற்கு இந்த மாதிரி உயர்ந்த சரக்கு எங்கள் ஊர்ல திரும்பக் கிடைக்குமா? ரொம்ப அழகாயிருக்குது உன் பொண்ணு. செத்தா சாகறேன். பயப்படுவேனா? ஒரு மாசத்துக்குள் எல்லாம் கத்துக்கிடறேன். நானே நேத்ரா ஆயிடறேன்” என்று கண்களை சிமிட்டிவிட்டு அங்கிருந்து போய்விட்டான்.

பூஷணம் அவன் போனதையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். வாழ்நாளிலேயே அவருடன் அந்த மாதிரி பேசியவர்கள் யாருமே இல்லை.

அதற்கு மறுநாள் கூட நேத்ரா தன் மகளைச் சந்தித்தான் என்று அவருக்குத் தெரியாது. அவ்விருவரும் பக்கத்துப் பக்கத்து சீட்டுகளில் உட்கார்ந்து சினிமா பார்த்தார்கள். தான் எதேச்சையாய் சினிமா தியேட்டரில் அப்பொழுதுதான் பார்த்தது போல் நடித்தான், அவளையே தொடர்ந்து கொண்டிருந்த நேத்ரா. அந்த இரண்டாவது சந்திப்பு அவர்களை மேலும் நெருக்கமாக்கியது.

## 14

அதே நாள் இரவு அண்டை நாட்டிற்கு ஒரு தந்தி போயிற்று. பார்க்க வெகு சாதாரணமாய் தென்பட்ட அந்தத் தந்தியை டீ கோட் பண்ணினால் இவ்வாறு இருக்கும்.

“எதிர்பார்த்துக் கொண்டிருந்த பரிசோதனை ஏறக்குறைய முடிவடைந்து விட்டது. அதன் முடிவு எனக்கு மிகவும் திருப்தியளித்தது. அங்கே நீங்கள் பண்ண வேண்டிய ஏற்பாடுகளை முடித்துக்கொண்டு, தயாராய் இருங்கள். சீக்கிரத்திலேயே யுத்தத்தைத் தொடங்க வேண்டி வரலாம்.-- க்யூ”

*****

“மிஸ்டர் நேத்ரா! இதோ நீங்கள் கேட்ட ஃபிளாட்” என்று காட்டினாள் அஹோபிலா.

மூன்றாவது மாடியிலிருந்த பிளாட் அது. எல்லா வசதிகளும் செய்யப் பட்டிருந்தது.

“தாங்க்யூ” என்றான் நேத்ரா, சுற்றிலும் நோட்டமிட்டபடி. அங்கு வேண்டியது சௌகரியம் அல்ல. நடக்க வேண்டிய வேலைக்கு அது பயன்படுமா இல்லையா என்பதுதான் முக்கியம்.

அஹோபிலா அவனிடம் வந்து, “ஆபீஸ் பணத்திலிருந்து எடுத்து இதுக்கு மூணு மாத வாடகையைத் தரச் சொன்னார் சீஃப். அதாவது நீங்கள்

மூன்று மாதங்கள் வரை இந்த பிளாட்டில் இருக்கப் போறீங்கன்னு அர்த்தம்” என்றாள்.

“ஆமாம். உன் ஊகத்துக்குப் பாராட்டுக்கள்” என்றான் நேத்ரா.

“எங்கம்மா அப்பா ரெண்டு பேரும் ஒரு மாதத்துக்கு பத்ரிநாத் யாத்திரை போகிறார்கள். உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் ஒரு மாதகாலம் நானும் இங்கேயே இருக்கிறேன்.”

“அப்படிப்பட்ட யோசனை சமூக விரோதச் செயலாகும்.”

அவள் தடுமாற்றமடைந்து, “உங்கள் பெட்ரூமைக் காட்டுகிறேன் வாங்க” என்றால்.

“தாங்க்ஸ்! நானே பார்த்துக் கொள்கிறேன்” என்றான் சூட்கேசிலிருந்து கருவிகளை வெளியே எடுத்துக்கொண்டு. அவன் கையில் ஒரு மினி டெலஸ்கோப் இருந்தது.

“அவ்வளவுதான் என்கிறீர்களா?’ என்று கேட்டாள்.

“ஆபீஸ் வேலைக்கு நடுவே இந்த மாதிரி முறைகேடாய் நடந்துகொள்வது எனக்குப் பிடிக்காது அஹோபிலா. சாரி” என்று அவளை வலுக்கட்டாயமாக அனுப்பிவிட்டு, டெலஸ்கோப்பை ஸ்டாண்டின் பொருத்தினான். இரவு மணி ஏழு..

டெலஸ்கோப்பில் எதிர் வீடு துல்லியமாய் தென்பட்டது. மாடி ஜன்னல் வழியாய் அம்சரேகா கண்ணாடிக்கு முன்னால் நின்றுகொண்டு தலைவாரிக் கொண்டிருந்தது தென்பட்டது. அவள் அப்பொழுதுதான் குளித்துவிட்டு வந்திருப்பாள் போலிருந்தது. இன்னும் இடுப்பில் டவலுடனேயே இருந்தாள்.

அது அவள் தனி அறையாக இருந்ததால் அந்த டவலை அலட்சியமாய் சுற்றி கொண்டிருந்தாள். இரு கைகளையும் மேலே தூக்கி கூந்தலை முடிந்து கொண்டாள். மிக ஆரோக்கியமான உடற்கட்டு அவளுடையது. சாதாரண பெண்களை விட கொஞ்சம் உயரமாயிருந்ததால் அந்த டவலால் அவள் உடலை முழுவதுமாக மறைக்க முடியவில்லை.

மிக சக்தி வாய்ந்த டெலஸ்கோப் அது. இமயமலையில் மேற்புறத்திலிருந்து பல்லாயிரம் ஆண்டுகளாய் உருகி வழிந்த பனி, அங்கிருந்த பாறைகளை வழவழப்பாக்கினாற்போல் அவள் வெண்ணிறத் தோள்கள் வழவழப்பாய் மின்னிக் கொண்டிருந்தன. ஆனால் அவன் அவள் அழகையோ, நெளிவுகளையோ பொருட்படுத்தவில்லை. மேஜையை நெருங்கி பளபளவென்று நான்கு வரிகள் எழுதி, அக்காகிதத்தை உருண்டையாக்கி ஏர்கன்னில் வைத்து ஷூட் பண்ணினான். அது போய் அவள் மார்பிற்கு நடுவே பட்டது.

அம்சரேகா வீலென்று அலறி, பின்னுக்குத் துள்ளிக் குதித்து, தன்மேல் பட்ட காகிதத்தை சந்தேகத்துடன் பார்த்துவிட்டு, பயந்தவாறே பிரித்தாள். யாருமே கண்ணில் படவில்லை. ஜன்னல் கதவைச் சாத்திவிட்டு, நடுங்கும் விரல்களுடன் அக்காகிதத்தைப் படித்தாள் நான்கே வரிகள்.

“அன்பார்ந்த உங்களுக்கு,

நான்தான் நேத்ரா. கண்ணை மூடினாலும் திறந்தாலும் நெருக்கமானவர்கள் கண்முன் தென்படுவது அக்காலத்து நட்புக்கு இலக்கணம். ஜன்னலை மூடினாலும் திறந்தாலும் நீங்களே தென்பட வேண்டுமென்று எதிர்த்த பிளாட்டிற்குக் குடி வந்து விட்டேன். இந்த நல்ல சந்தர்பத்தில் நீங்கள் என் வீட்டுக்கு தேநீருக்கு வந்தால் சந்தோஷப் படுவேன்.”

அவள் படித்துவிட்டு வியப்போடு நிமிர்ந்து ஜன்னலைத் திறந்து பார்த்தாள். எதிர்த்த அபார்ட்மெண்டில் மூன்றாவது மாடியில் நேத்ரா நின்று கொண்டிருந்தான். அவனுக்கு தாமதமான நடவடிக்கையில் நம்பிக்கை இல்லை. கொஞ்சம் பதறிப் போனாலும் இப்படிப்பட்ட பெண்கள் வேகமான நடவடிக்கைகளைத்தான் விரும்புவார்கள் என்று நம்பினான். உரிமையுடன் புகுந்து செயல்படுவது நல்லது. அவள் தன்னைப் பார்த்ததுமே வீட்டிற்கு தேநீருக்கு வரச் சொல்லி கையாட்டினான். ஆனால் அதில் ரோட் சைட் ரோமியோ லட்சணம் இல்லை.

ரிடையரான இரண்டு அக்கம் பக்கத்து பெரிய மனிதர்கள் காம்பவுண்ட் சுவருக்கு அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாய் நின்றுகொண்டு எப்படி மரியாதையுடன் பேசிக்கொள்வார்களோ அப்படி சைகை காட்டினான்.

அம்சரேகாவுக்கு இவையெல்லாம் ஆச்சரியமாகவும், த்ரில்லிங்காகவும் இருந்தன. அவன் மற்றொருமுறை கூப்பிட்டான். கொஞ்சம் தடுமாறிவிட்டு, ‘வருகிறேன்’ என்பது போல் சைகை காட்டினாள்.

நேத்ராவுக்கு பின்னாலிருந்து, “கங்கிராட்ஸ்” என்று குரல் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தான். பிரதிமா!

சிரிப்பை அடக்கிக்கொண்டு நின்றிருந்தாள்.

“மை காட்! நீயா?” என்றான்.

“நல்ல முன்னேற்றம்தான்” என்றாள்.

இருவரும் திரும்பி அறைக்குள் வந்து கொண்டிருந்த போது, “உன் தைரியத்துக்கு உண்மையாகவே பாராட்டணும்” என்றாள்.

“அந்தப் பெண் இப்படிப்பட்ட விஷயங்களில் கரை கண்டவள் என்று நீ சொன்னதால்தான் இவ்வளவு தைரியம் வந்தது.”

“கொஞ்சம் சாதித்து விட்டோம் என்று சொல்லு. எங்கே நான் பார்க்கட்டுமா அந்தப் பெண்ணை” என்று குனியப் போனாள்.

நேத்ரா சட்டென்று அவளைத் தடுத்து, “நீ உடனே இங்கிருந்து போய் விடு. இன்னும் இரண்டு நிமிஷத்தில் அந்தப் பெண் இங்கே வரப் போகிறாள். உன்னைப் பார்த்தால் இவனுக்குப் பெண்பித்து என்று நினைத்து விடுவாள்” என்றான்.

“ஆனால் அந்த பெண்ணுடன் நீ என்ன பேசப் போகிறாய், எப்படி ப்ரோசீட் பண்ணப் போகிறாய் என்று பார்க்கணும் போலிருக்கு” என்றாள் பிரதிமா செல்லமாய்.

“அழகுதான். இன்னும் என்னென்னவோ கூட பார்க்கணும் போலிருக்கு என்று சொல்லாமல் போனாயே. போ போ” என்று அவசரப்படுத்தினான். அவள் போனதுமே ஜன்னலிடம் போய் டெலஸ்கோப்பை எடுத்து மறைத்து வைத்தான். பிரதிமா வெளியே வந்து

லிஃப்ட் பட்டனை அழுத்தினாள். மேலிருந்து கீழே வருவதும், கீழேயிருந்து மேலுக்குப் போவதுமாய் லிஃப்டுகள் அடுத்தடுத்து இருந்தன. அவள் லிஃப்டிற்குள் நுழைந்ததும், இன்னொரு லிஃபட் கீழேயிருந்து வந்து நின்று கதவைத் திறந்து கொண்டதும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. அதிலிருந்து அம்சரேகா வெளியே வந்து மூன்றாவது தளத்தில் அடியெடுத்து வைத்தாள்.

அம்சரேகா ஒரு வினாடி முன்னாடி வந்திருந்தால் பிரதிமா அவளைப் பார்த்திருப்பாள். அப்பொழுது இக்கதை வேறுவிதமாய் திரும்பியிருக்கும்.

லிஃப்டில் கீழேயிறங்கிய பிரதிமா கொஞ்ச நேரம் நின்றாள். அவளுக்கு அவ்விருவரையும் அவ்வாறு விட்டுவிட்டுப் போக மனமில்லை. என்னதான் மறுத்தாலும் பெண்களுக்கே சகஜமான பொறாமை அவள் கால்களை நகரவிடாமல் செய்தது. அவன் அவளோடு என்னதான் பேசப் போகிறான் என்று கேட்க வேண்டுமென்ற ஆர்வம் அவளைப் போக விடாமல் தடுத்தது. கொஞ்ச நேரம் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தாள்.

அதற்குள் அவள் பார்வை மெயின் ஃப்யூசின் மீது பட்டது. ஒரு யோசனைக்கு வந்தவளாய் யாராவது பார்க்கிறார்களா என்று சுற்றும் முற்றும் கவனித்துவிட்டு மெயின் ஃப்யூஸை எடுத்து விட்டாள்.

## 15

காலிங்க்பெல் ஓசை கேட்டதும் நேத்ரா போய், “கமின்” என்றான். அம்சரேகா உள்ளே வந்தாள்.

“வாங்க. உங்களை ரொம்ப கலங்கடித்து விட்டேனோ” என்றான் அவளை வரவேற்றபடி.

அம்சரேகா அறையில் நின்றபடி சுற்றிலும் பார்வையிட்டாள்.

“உட்காருங்கள்” என்றான்.

“நீங்கள் எழுதியது எனக்குப் புரியவில்லை” என்றாள்.

“இதில் புரியாமல் போவதற்கு என்ன இருக்கு ரேகா? நினைத்த போதெல்லாம் உன்னைப் பார்க்கணும்

என்றுதான் இந்த ஃபிளாட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டேன். உள்ளது உள்ளபடி வெளிப்படையாய் பேசி விடுவதுதான் என்னுடைய வழக்கம். நான் தனிக்கட்டை. வீடு எப்படியும் தேவை. புண்ணியம், புருஷார்த்தம், பெண் தரிசனம் கிடைக்கிறது இல்லையா இங்கேயிருந்தால்."

அவள் சிரித்துவிட்டு, "உங்களுக்கு வேறு எந்த வேலையும் இல்லையா?' என்றாள்.

"என் வேலைதான் இது. உன்னையும், உங்கப்பாவையும் ஒரு கண் பார்த்துட்டிருப்பது."

"எங்கப்பாவையா?" ஆச்சரியமாய் கேட்டாள்.

"பின்னே அவர் பார்க்காத போது உன்னை நான் பார்க்கணும் இல்லையா?'

"நன்றாய் பேசுறீங்க."

"எல்லா கேள்வியையும் நீயே கேட்கிறாய். நான் ஒன்றும் கேட்க வேண்டாமா?"

அவள் சிரித்துவிட்டு, "கேளுங்கள்" என்றாள்.

"தேநீர் குடிச்சுகிட்டே பேசலாம். தேநீரா? ஜின்னா?"

அவள் சங்கடமடைந்து, "ஜின் வைன் இதெல்லாம் எனக்குப் பழக்கமில்லை" என்றாள்.

அவன் இமைக்காமல் அவளையே பார்த்தான். பிரதிமா உண்மைதான் சொல்லியிருக்கிறாள். இவள் கைதேர்ந்த நடிகை!

"என்னிடமுள்ள பழக்கங்களை தைரியமாய் வெளியே சொல்லிக் கொள்வது எனது குணங்களுக்குள் ஒன்று. உதாரணமாய் நான் ஒரு சமயம் மார்பியா எடுத்துக்கிட்டேன். ரொம்ப நன்றாக இருந்தது. அப்புறமாய் கண்ட்ரோல் பண்ணுவதற்கு ரொம்ப கஷ்டப்பட வேண்டியிருந்தது" என்று பாட்டிலை எடுத்தான். "ஒரு மாதத்திற்கு முன்னால் ஒரு நண்பன் கொடுத்தான். இதைப் பார்த்ததும் மனம் கேட்கவில்லை."

அவள் அவனை இரக்கத்துடன் பார்த்தாள். தன் அக்காவின் வாழ்க்கை எப்படியாகி விட்டது என்பதை எடுத்துச் சொல்ல நினைத்தாள். வீட்டு விஷயத்தை வெளியே எதற்குச் சொல்ல வேண்டும் என்றெண்ணினாள். ஆனால் நேத்ராவைப் போன்ற

அழகான, ஆரோக்கியமான இளைஞன் போதை பொருளுக்கு அடிமையாவதை அவள் விரும்பவில்லை.

அப்படிப்பட்ட பழக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இந்த யோசனை வந்துமே அவள் அவன் கையிலிருந்த பாட்டிலை உரிமையுடன் பிடுங்கி, சிரித்துக்கொண்டே, ஜன்னல் வழியாய் வீசி எறிந்தாள்.

“பார்த்தீர்களா! இருக்கிற வரைக்கும்தான் டெம்ப்டேஷன். ஒரு முறை போய் விட்ட தென்றால் அப்புறம் ரிலிஃப்” என்றாள் நிம்மதியாய்.

அவள் அவ்வாறு செய்வாள் என்று எதிர்பார்த்திராத அவன் வியந்துபோய் விட்டான். ஏதோ சங்கடமான உணர்வு! ஆனால் சட்டென்று தேறிக்கொண்டான்.

அவள் கைகளைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, குரலில் மென்மையை வரவழைத்துக்கொண்டு, “எனக்கு உன்னோடு வாழ்நாளெல்லாம் நட்புடன் இருக்க வேண்டும் போலிருக்கு. உனக்கு ஆட்சேபணை இல்லையே?” என்றான். அவனுக்கே அவன் வார்த்தைகள் செயற்கையாய்த் தோன்றின.

அவன் வார்த்தைகள் அல்ல. ஆனால் அவன் கை ஸ்பரிசம் அவள் உடலை புல்லரிக்கச் செய்தது.

“சொல்லு. உனக்கு ஆட்சேபணை இல்லையே?”

“ஊஹும்” என்றாள் அவள் தலை குனிந்தபடி.

‘எவ்வளவு நன்றாய் நடிக்கிறாள்’ என்றெண்ணிக் கொண்டான் மனதிற்குள். “உங்கப்பா நம் சினேகத்திற்கு சம்மதிப்பாரா?” என்று கேட்டான்.

அவள் வியப்போடு, “ஏன்? ஏன் சம்மதிக்க மாட்டார்? என்றாள்.

“தன் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கச் சொல்லி உங்கப்பா கேட்டால்?” உரையாடலை முன்னுக்குக் கொண்டு வந்தபடி கேட்டான்.

“தன் நடவடிக்கைகளா?”

“உங்கப்பா பண்ணிட்டிருக்கிற வேலைகளைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும்.”

அவள் தலை குனிந்தாள்.

எதிர்பார்த்த தருணம் வந்துவிட்டது.

அவன் குரலை தாழ்த்திக்கொண்டு, “அதில் தவறு இல்லை என்று வை. பணத்துக்காக என்ன வேணுமானாலும் பண்ணலாம்” என்றான், அவள் தந்தைக்குப் பரிந்து வருவது போல்.

“பணத்துக்காக என்ன வேண்டுமானாலும் பண்ணலாமா? உயிரை கூட எடுக்கலாமா?” என்றாள் அவள் கோபமாய்.

அவன் சட்டென்று அவளைப் பார்த்தான். ‘அப்படி என்றால் பூஷணத்தின் வேலைகளைப் பற்றி இவளுக்குத் தெரியும். தனக்கு முன்னால்தான் நல்லவள் போல் நடிக்கிறாள்’ என்று நினைத்த அவன் தன் எரிச்சலை அடக்கிக்கொண்டு அவளிடமிருந்து விஷயத்தைத் தெரிந்துகொள்ள முயன்றான்.

“ஏன்? தவறென்ன இருக்கு? நான் அவர் மருமகனாகி விட்டால் கண்டிப்பாய் அவருக்கு உதவி செய்வேன்” என்றான். அவள் அவனைவிட்டு தொலைவில் போய் நின்றாள். அவன் ஒரு வினாடி பொறுத்துவிட்டு, திரும்பி அவளிடம் வந்தான்.

“நீ சொல்லு. உங்கள் வேலைகளில் என்னால் எந்த விதத்தில் உதவ முடியும்?” என்று கேட்டான் ஊக்குவிப்பது போல்.

“எங்கள் வேலைகளா?” புரியாமல் விழித்தாள்.

“அதான் உங்கப்பா செய்கிற வேலைகள்” என்று நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

“அவர்...” என்று ஏதோ சொல்ல வந்தாள். அந்த சமயத்தில் மின்சாரம் போய்விட்டது.

நேத்ராவுக்குக் கோபம் வந்தது. இன்னும் ஒரு வினாடிக்குள் அவள் சொல்லியிருப்பாள். இல்லை என்றால் அவன் சொல்ல வைத்திருப்பான். அதற்குள் மின்சாரம் போய்விட்டதே.

“ஊம்... அவர்?” என்று திரும்ப கேட்டான். அவள் பதில் பேசவில்லை.

சுற்றிலும் ஒரே காரிருள். அவள் எழுந்துகொள்ள எந்த முயற்சியும் செய்யவில்லை. இருவரும் தனித்தனி பிரம்பு நாற்காலிகளில் அருகருகில் அமர்ந்திருந்தார்கள். எதிரே டீப்பாய் இருந்தது.

“உங்கப்பா உன்னைக் கொண்டு நிறைய பரிசோதனைகளைப் பண்ண வைத்துக்கொண்டு இருக்கிறார். இல்லையா?” பேச்சைத் தொடரப் போனான்.

“எனக்கு இருட்டென்றால் பயம்.” அவளிடமிருந்து கேட்டது.

“மெழுகுவர்த்தி இல்லை. ஆனாலும் நான்தான் இருக்கிறேனே. பயம் எதுக்கு?”

சரியாய் அந்த சமயத்தில் பிரதிமா அவ்வறைக்குள் நுழைந்தாள். அவள் வந்த சமயத்தில், “எனக்கு இருட்டென்றால் பயம்” என்று அம்சரேகா சொன்னதும் அதற்கு நேத்ரா பதிலளித்ததும் நிகழ்ந்து கொண்டிருந்தன. மெழுகுவர்த்தி இல்லை. ஆனாலும் நான் இருக்கிறேனே. ஏன் பயம்? என்கிறான் நேத்ரா! பிரதிமா நிசப்தமாய் நின்றாள். அம்சரேகாவும் அந்த இருட்டில் மௌனமாய் இருந்து விட்டாள்.

“ஆண்கள் எப்படிப்பட்ட பெண்களை விரும்புவார்கள் தெரியுமா?” என்று கேட்டான் நேத்ரா.

“ஊஹும். தெரியாது” என்றாள் அம்சரேகா.

பிரதிமா கூட அந்த இருட்டில் பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் என்று அவனுக்குத் தெரியாது. அம்சரேகாவை பேச்சில் இழுத்து, தன் மேலிருந்த பயத்தைப் போக்கடிப்பதற்காகவே அவன் பேசிக் கொண்டிருந்தான்.

அம்சரேகா ஆர்வத்துடன் முன்னுக்கு வந்து, “நீங்கள் சொல்லுங்க. ஆண்கள் எப்படிப்பட்ட பெண்களை விரும்புவார்கள்?” என்றாள். அக்கேள்வியில் கொஞ்சம் குறும்புத்தனம் கூட இருந்தது.

“ஆண் நல்ல பெண்ணாயிருந்தால் மதிப்பளிப்பான். கெட்டிக்காரப் பெண் மூலமாய் ஊக்கம் பெறுவான். அழகான பெண்ணாயிருந்தால் ஆர்வம் காட்டுவான். புரிந்துகொள்ளக் கூடிய பெண்ணுக்குத் தன்னை அர்பணித்துக் கொள்வான்.”

“எவ்வளவு நன்றாய் ஐஸ் வைக்கிறாய் நேத்ரா?’ என்றெண்ணிக்கொண்டாள் பின்னாலிருந்த பிரதிமா. அதே வார்த்தையைக் கொஞ்சம் அப்படியும் இப்படியுமாய் மாற்றி அந்த நான்கு விதமான

பெண்களையும் தன் வலையில் வீழ்த்திக் கொள்கிறான் போலும். ஒரு வாரத்திற்கு முன்னால் அவன் அவளிடம் சொன்னான். “ஆண்களுக்கு நல்ல பெண் என்றால் ஆர்வம். கெட்டிக்காரி என்றால் பயம். அழகான, ஆர்வமுடைய (உன்னைப் போன்ற) பெண்ணாயிருந்தால் பழியாய் கிடப்பாங்க” என்று.

பிரதிமாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. நாட்டுக்காக அந்த சூழ்நிலையை பொறுத்துக்கொள்வது போல் பொறுமையாய் நின்றாள். குளிரில் இமயமலை எல்லையில் காவல் காத்து நின்று கொண்டிருக்கும் ராணுவ வீரனைப்போல் இருட்டில்.

“என்னால் உங்களைப் புரிந்துகொள்ள முடியும் நேத்ரா.” தவிப்புடன் சொன்னாள் அம்சரேகா.

“தாங்க்ஸ். அப்படி என்றால் என்னை நான் உனக்கு அர்பணித்துக் கொள்கிறேன்” என்றான் நேத்ரா.

“எப்படி?” என்றாள் புரியாமல்.

“ஒரு முத்தம் மூலமாய்.” தன்மயக்கத்துடன் சொன்னான்.

அவளுக்கு பயம் ஏற்பட்டது. முத்தத்தின் மூலமாய் சகலத்தையும் அர்ப்பணித்துக் கொள்வது பெண் அல்லவா? தன்னைத் தானே அர்பணித்துக் கொள்கிறேன் என்கிறானே. அதெப்படி என்றெண்ணிக் கொண்டாள். தன் மௌனத்தை அவன் வேறு விதமாய் புரிந்துகொணடு, சட்டென்று உதடுகளின் மேல் முத்தமிட்டு விட்டால்? (அவளுக்கு பச்சிளம் குழந்தையின் அழு குரல் கேட்டது) சட்டென்று நாற்காலியை விட்டு எழுந்து நின்று, “போய் வருகிறேன்” என்றாள்.

அனாவசியமாய் தான் அவசரப்பட்டு விட்டோமோ என்றெண்ணிக் கொண்டான் நேத்ரா. அந்தப் பெண்ணைப் பற்றிய ஒரு வினோதமான விஷயத்தைக் கூட அவன் தெரிந்துகொண்டான். அவளுக்கு ஆர்வம் இருந்தது. ஆனால் முத்தம் போன்று விஷயத்திற்கு வந்ததும் குறுகிப் போய் விடுகிறாள்.

பேச்சை மாற்ற எண்ணி, “நீங்கள் சொல்லுங்க. பெண்கள் எப்படிப்பட்ட ஆண்களை விரும்புவர்கள்?” என்று கேட்டான்.

“என்ன?”

“ஆண்கள் விஷயத்தை நான் சொன்னேன் இல்லையா. பெண்கள் விஷயத்தை நீங்க சொல்லுங்க.”

அவள் சங்கடத்துடன், “பெண் சாதாரணமாய் புத்திசாலி இளைஞனைத்தான் விரும்புவாள் என்று நினைக்கிறேன்” என்றாள்.

அவன் உடனே, “உங்களுடையது கெமிஸ்ட்ரி இல்லையா? போட்டாஷியம் அயோடைட் பக்கத்தில் இரண்டு ஸல்ஃபர் அணுக்களை வைத்தால் என்னவாகும்? சொல்லுங்கள்? என்று கேட்டான்.

“அவை ஒன்று சேராது” என்றாள்ல் சட்டென்று.

“சிம்பாலிக் ஆக சொல்லுங்க.”

“எனக்குப் புரியலை.”

“பொட்டாஷியம் அயோடைட் சிம்பல் KI. அதற்குப் பக்கத்தில் இரண்டு ஸல்ஃபர் அணுக்களை வைத்தால்?”

“கே.ஐ.எஸ்.எஸ். இல்லையா?” என்றால் ஏதோ யோசனையுடன்.

நேத்ரா தலையில் அடித்துக்கொண்டே, “உங்களுக்கு ரசனை உணர்வை ஏற்படுத்துவது கஷ்டம் என்று நினைக்கிறேன்” என்றான் கவலையுடன்.

“மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்கு சென்ஸ் ஆஃப் ஹ்யூமர் குறைவு.”

“சரி விடுங்கள். உங்களுக்கு பிடித்தமான இன்னொரு சப்ஜெக்ட் என்ன?”

“கணக்கு.”

“மார்க் நிறைய வருமா?”

“தொண்ணூறு சதவீதத்திற்கு மேல் வரும்.”

“ஒரு பக்கெட்டில் சாதாரணமாய் எத்தனை கிலோ தண்ணீர் பிடிக்கும்?”

அவன் கேட்ட கேள்விக்கு அவள் தடுமாற்றமடைந்து, “எனக்குத் தெரியாது. ஒருக்கால் பத்துப் பன்னிரண்டு கிலோ பிடிக்கலாம்” என்றாள்.

“நீங்கள் சொன்னது போலவே பன்னிரண்டு கிலோ என்றே வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பிடித்த இரண்டு எண்களைக் சொல்லுங்க.”

"நூறு, ஐம்பது! எதற்காக கேட்கிறீங்க?"

"நூறு மீட்டர் நீளமும், ஐம்பது மீட்டர் அகலமும் உள்ள உங்க வீட்டுக் கொல்லையில் பதினைந்து நிமிஷங்களுக்கு நாலு மில்லி லிட்டர் மழை பெய்தது என்று வையுங்கள். எத்தனை பக்கெட் நீரை உங்கள் செடிகளுக்கு ஊற்றினால் அதற்கு சமமாகும்? நீங்க முன்னாடி சொல்கிறீங்களா நான் சொல்கிறேனா என்று பந்தயம் வைப்போம்."

அவள் சட்டென்று யோசித்து, ஒரு நிமிஷத்திற்குப் பிறகு, "நோ...இந்தக் கேள்விக்கு யாராலுமே பதில் சொல்ல முடியாது" என்றாள்.

"1666 பக்கெட்டுகள் ஒரு க்யூபிக் சென்டிமீட்டர் தண்ணீரின் வெயிட் ஒரு கிராம் என்ற விஷயத்தை இத்துடன் சேர்த்து பார்க்க வேண்டும். அவ்வளவுதான்."

அவள் தனக்குள் கணக்குப் போட்டுப் பார்த்து, "உண்மைதான்" என்றாள்.

"மார்கெட்டில் இரண்டு பூசணிக்காயைப் பார்த்தீங்க நீங்க. ஒன்றின் விலை இரண்டு ரூபாய் என்றான் கடைக்காரன். இரண்டாவது முதல் காயை விட இருமடங்கு பருமனாய் இருந்தது. அதை ஆறு ரூபாய் சொன்னான். எதை வாங்குவீங்க?"

"முதலாவதை."

"தவறு. இரண்டாவது எட்டு ரூபாய் வரைக்கும் ஆனாலும் வாங்கலாம்."

"மை காட்! நீங்க ரொம்ப புத்திசாலியாய் இருக்கீங்களே?" என்றாள் ரேகா.

அந்த வார்த்தைக்காகவே காத்துக் கொண்டிருந்தாற்போல், "தாங்க்யூ. உங்களைப் போன்ற பெண்களுக்கு பிடித்த குணம் ஒன்று என்னிடம் இருப்பதை நீங்கள் கண்டு பிடிச்சதுக்கு" என்றான் முறுவலுடன்.

தன்னை அவன் எந்த டாபிக்கை நோக்கி அழைத்துச் செல்கிறானோ புரிந்ததும் அவள் மௌனமாயிருந்து விட்டாள்.

பின்னாடியே நின்று கொண்டிருந்த பிரதிமாவுக்கு அலுப்புத் தட்டியது. இவனுடைய வேலையை விட்டுவிட்டு

கணக்கையும், சயின்சையும் சொல்லிக் கொண்டிருக்கிறான். இன்னும் கொஞ்ச நேரமானால் தத்துவ சாஸ்திரத்தையும், வேதாந்தத்தையும் கூட கற்பிப்பான் போலிருக்கிறதே என்றெண்ணிக் கொண்டாள்.

அதற்குள் அவளுக்குத் தேவையான கேள்வியை அவன் அம்சரேகாவைப் பார்த்து கேட்டு விட்டான். "ரேகா! டு யு லவ் மி?" என்று

## 16

அம்சரேகா பதில் பேசவில்லை. தான் குறுக்கிடாமல் போனால் லாபமில்லை என்றெண்ணினாள் பிரதிமா. இருவருக்கும் பின்னாடி வந்து நின்று ஒரு கையை அம்சரேகாவின் மீதும், இன்னொரு கையை நேத்ராவின் மீதும் வைத்து அழுத்தினாள். நேத்ராதான் தன் கையின் மீது கையை வைத்து அழுத்தினானோ என்றெண்ணி ரேகா சட்டென்று தன் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

அவள் தன் கேள்விக்கு பதில் சொல்வதுபோல் தன் கையை வைத்தாள் போலிருக்கிறது என்றெண்ணிவிட்ட நேத்ரா, "தாங்க்ஸ்!" என்றான், அக்கையை அன்பாய் வருடியபடி. பிரதிமாவும் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

"நான் போய் வருகிறேன்" என்றாள் ரேகா.

"இதென்ன? இப்பொழுதுதானே வந்தாய்?"

"மின்சாரம் இப்போதைக்கு வராது போலிருக்கு,"

"அதுதான் காரணமா? என்னிடம் பயமா?"

"காதலில் பயம் எதுக்கு?"

"காதலிலா? அப்படி என்றால் மை காட்! தாங்க்யூ" என்றான் நேத்ரா.

பிரதிமா தலையில் அடித்துக்கொண்டாள். மின்னலாய் பாய்ந்து துப்பாக்கியை எடுக்கத்தான் தெரியுமே தவிர பெண் ஒருத்தியைக் கட்டி அணைக்கத் தெரியாது இந்த ஆண் பிள்ளைக்கு.

இருவரையும் மேலும் நெருக்கமாக்க வேண்டிய பொறுப்பு தன்னைச் சேர்ந்திருப்பதாய் எண்ணினாள்

பிரதிமா.

மெல்ல குனிந்து நேத்ராவின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தாள்.

நேத்ரா அதிர்ந்துபோய், “தாங்க்யூ தாங்க்யூ” என்றான்

“எதுக்கு அவ்வளவு முறை தாங்க்ஸ் சொல்றீங்க?” ஆச்சரியம் அடைந்தவளாய் கேட்டாள் ரேகா.

நேத்ரா சங்கடத்தில் ஆழ்ந்தான். செய்ததோடு கூட திரும்பி வாயால் வேறு சொல்லச் சொல்கிறாள்.

பெண் ஒருத்தி ஆவேசமடைந்து திடீரென்று எழுச்சியடைந்தால் ஆண் எவ்வளவு இக்கட்டான நிலையில் ஆழ்ந்து விடுகிறான் என்பதை அனுபவபூர்வமாய்க் கண்டான் அவன்.

“எதுக்கு தாங்க்ஸ் சொன்னீங்க?” திரும்பவும் கேட்டாள். “உங்கள் ரூமுக்கு வந்ததற்காகவா?”

“இல்லை. முதலாவது காதலிக்கிறேன் என்று சொன்னதற்கு. இரண்டாவது அதுக்கு” என்றான்.

“அதுக்கா? எதுக்கு?”

“எதுக்கு என்றால்?” அவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அதற்குள் பிரதிமா அம்சரேகாவின் கையை எடுத்து, சந்தடி செய்யாமல் முத்தமிட்டாள்.

அம்சரேகா வீலென்று கத்தினாள்.

“என்னவாச்சு என்னவாச்சு?” பதறிப் போய் கேட்டான்.

“நான் போகிறேன். அதிர்ஷ்டம் நன்றாயிக்கக் கொண்டு கையில் கொடுத்தீங்க.”

“கையில் கொடுத்தேனா? என்ன கொடுத்தேன்?” வியப்புடன் கேட்டான்.

“பாருங்கள். எனக்கு இதெல்லாம் பிடிக்காது. இந்த மாதிரி சறுக்கி விழுந்தால் கன்னிப் பெண்களுக்குக் கஷ்டம்” என்றாள்.

“சறுக்கி விழுவதா? ஆனாலும் இருட்டில் எதுக்காக நடக்கணும்? அப்புறமாய் சறுக்கி விட்டது என்று ஏன் வருத்தப்பட வேண்டும்?”

“நான் உங்கள் பக்கத்தில்தான் உட்கார்ந்து இருக்கிறேன். நடந்து கால் சறுக்குவதைப் பற்றிச் சொல்லலை நான். முத்தமிடுவதால் ஏற்படும் சறுக்கலைப் பற்றிச் சொன்னேன்.”

“முத்தமிடுவதால் சறுக்குமா? அதென்னது? நீ என்ன பேசுகிறாய் ரேகா? யாராவது படுத்துக்கொண்டோ, நின்றுகொண்டோ உட்கார்ந்தோதான் முத்தமிடுவார்களே தவிர ஓடிகொண்டு முத்தமிட மாட்டார்கள் இல்லையா? பின்னே கால் எப்படி சறுக்கும்?” உண்மையிலேயே புரியாமல் கேட்டான் நேத்ரா.

அவள் எழுந்திருந்து, “நான் போகிறேன். அவ்வளவு ஆபத்தான விஷயத்தைப் பற்றி இந்த இருட்டில் பேசுவதற்கு பயமா இருக்கு எனக்கு” என்றாள்.

அவள் பயத்தைப் பார்த்து நேத்ரா அதற்கு மேல் வற்புறுத்ததவில்லை, முதலுக்கே மோசம் வந்து விடும் என்றெண்ணி.

“திரும்பவும் எப்போது சந்திக்கலாம்?”

“ஊஹும். இனி சந்திக்க மாட்டேன்.”

“ஏன்?”

“இந்த மாதிரி இருட்டில் திருட்டுத்தனமாய் சந்திப்பதும், கோழையாய் யாராவது பார்த்து விடுவார்களோ என்று பயப்படுவதும் எனக்குப் பிடிக்காது.”

“பின்னே எதுதான் பிடிக்கும்?”

“ஜாக்கிச்சான், சில்வெஸ்டர் ஸ்டாலின், சக்நோரிஸ், சார்லஸ் பிரான்சன் தெரியும் இல்லையா? ஆண்கள் என்றால் அப்படியிருக்கணும்” என்றாள் அவள். “என் சிநேகிதிகள் எல்லோருக்கும் ஜாக்கிச்சான் என்றால் ரொம்பப் பிடிக்கும். அடிச்சுப்பாங்க. போலீஸ் ஸ்டோரியை பல தடவை பார்த்தார்கள். கல்யாணமாகாதவர்கள் அவன் போட்டோவை லாக்கெட்டில் போட்டுப்பார்கள். கல்யாணமானவர்கள் தாலிக்கு நடுவில் மாட்டிப்பார்கள்.”

“போதும். விதவைகள் எங்கே மாட்டிக்கொள்வார்கள்? அந்த விவரமெல்லாம்

தேவையில்லை” என்றான் வெறுப்பாய்.

அவள் எழுந்து, “நான் போய் வருகிறேன்” என்றாள். அவள் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். ஒரு வினாடி ஆழ்ந்த நிசப்தம். “உன் கை எவ்வளவு சூடாய் இருக்கு?”

அவள் பதில் பேசவில்லை.

“நீ பண்ற பரிசோதனைகள் எதைப்பற்றி சுவர்ணரேகா?”

நிசப்தம்.

“உன் தந்தை உனக்காக லட்சக் கணக்கில் செலவழித்து பரிசோதனைச் சாலையை நடத்துகிறார். எதுக்காக? வெளிநாட்டு உளவாளிகள் எதற்காக நம் நாட்டில் இருக்கிறார்கள்? என்மேல் உனக்கு கொஞ்சமாவது அன்பிருந்தால் இந்த கேள்விக்கு பதில் சொல்லு. உன் பரிசோதனையின் உத்தேசம் என்ன?” அவள் கையைத் தன் கையால் தடவிக் கொண்டே கேட்டான்.

உண்மையில் அந்தக் கை பிரதிமாவுடையது.

பிரதிமா அங்குமிங்கும் பார்த்தாள். அம்சரேகா (அவள் உத்தேசபடி சுவர்ணரேகா) அந்த அறையில் இன்னும் இருக்கிறாளா போய் விட்டாளா என்று தெரியவில்லை. அவள் கையைத் தன் கையில் எடுத்து வைத்துக்கொண்டு, தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கிறான் இந்த நேத்ரா! அது தன் கை என்று சொல்ல வேண்டுமானால் பக்கத்தில் அந்தப் பெண் இருக்கிறாளா இல்லையா என்று தெரியவில்லை.

“ரேகா!” என்றான் நேத்ரா அன்போடு. “உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்.”

நிசப்தம்.

“உனக்கு?”

“ஊம்” என்றாள் பிரதிமா சங்கடத்துடன்.

அவன் அவள் கையை அப்படியே கிட்டே இழுத்துக்கொண்டு, அவள் தோளைச் சுற்றிலும் கையைப் போட்டு, முகத்தோடு முகம் வைத்து, உதடுகளில் ரத்தம் ஏற்படுமாறு அழுத்தமாய் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு, “சொல்லு. உங்கப்பா எதுக்காக வெளிநாட்டிலிருந்து

அவ்வளவு அமிலங்களை வரவழைக்கிறார்? இந்த விஷயமாய் உன் அபிப்பிராயம் என்ன?” என்று கேட்டான்.

“அந்தப் பெண் இங்கிருந்து போய் விட்டாள் என்று நினைக்கிறேன் நான்” என்றாள் பிரதிமா மெதுவாய்.

நேத்ரா மின் அதிர்ச்சி அடைந்தவனைப் போல் அவளை விட்டுவிட்டு, “யாரு” என்றான்.

அதற்குள் மின்சாரம் வந்து விட்டது.

நேத்ரா அவளைப் பார்த்துத் துள்ளி குதித்து, “நீ இவ்வளவு நேரமாய் இங்கேயா இருந்தாய்?” என்றான்.

“இருந்தேன். உங்களிருவரையும் சேர்த்து வைப்பதற்கு ஃப்யூஸை எடுப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.”

“பாவி! கரண்டைப் போக்கடித்து நீ தானா?” என்றான் நேத்ரா. “அப்படிப் பண்ணியிருக்கா விட்டால் கொஞ்சம் விஷயம் வெளியாகியிருக்கும்.”

“நீ என்னவோ வரவேண்டிய விஷயத்துக்கு வராமல் ஐ லவ் யூ ஐ லவ் யூ என்று சொல்லிக் கொண்டிருந்தாய். எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அதனால் நானே உன் சார்பில் ஓரடி முன்னோக்கி அடி எடுத்து வைத்து அந்தப் பெண்ணை முத்தமிட்டேன்.”

“அதானா வீலென்று அலறினாள்?”

“எல்லாம் நடிப்பு! என் ஃபைலில் பதினைந்தாம் பக்கத்தைப் படித்தாயா? அவளுடைய ஆண் நண்பர்களின் லிஸ்ட் இருக்கு அந்தப் பக்கத்தில்.”

“ஃபைலைப் படிப்பது எனக்கு வழக்கமில்லை. மேலும் எனக்கு அந்தப் பெண்ணின் கண்களில் அப்படிப்பட்ட அனுபவம் தெரியவில்லை, பயத்தைத் தவிர.”

“போதை மயக்கத்தில் ஆழ்ந்து போயிருப்பாள் அவள்.”

“இந்த விஷயத்தில் நீ தலையிடாமல் என்னிடம் விட்டுவிடு. இல்லாவிட்டால் இந்த ஆபரேஷன் கௌன்டர் ஸ்பை வெற்றியடையாது.”

“அப்படி என்றால் இதெல்லாம் எனக்குப் பிடித்துதான் பண்ணுகிறேன் என்கிறாயா?”

“பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. என் கைமேல் கையை வைத்து அழுத்தியது கூட நீதானா?”

“நான்தான்! எவ்வளவு தவறாக புரிந்து கொண்டிருக்கிறாய் என்னை? நான் காதலித்தவனை இன்னொருத்திக்கு விட்டுக் கொடுத்தேன். இரண்டு பேருக்கும் நடுவில் உட்கார்ந்து ஒருவர் முத்தத்தை இன்னொருவருக்குத் தந்தேன். எந்தப் பெண்ணுமே பண்ணாத காரியத்தை நான் பண்ணினேன். எந்த உலவாளியுமே பண்ணாத திட்டத்தை நான் தீட்டினேன்.” ரோஷத்தோடு கண்ணீர் மல்க சொன்னாள்.

“குழாயைத் திறந்து விடாதே ப்ளீஸ். நீ என்ன செய்யச் சொல்கிறாயோ அதை நான் செய்து விடுகிறேன்.”

அவள் எதிர்பார்ப்புடன், “நிஜமாகவே செய்வாயா?’ என்றாள்.

“செய்கிறேன்.”

“அப்படி என்றால் நாளை மாலை அந்தப் பெண்ணை காரில் அழைத்துக்கொண்டு பெங்களூர் ரோடில் போ.”

“எதுக்கு?” என்று கேட்டான் வியப்போடு.

“சொல்கிறேன்.”

“முதலில் சொல்லு.”

“நீ பிராமிஸ் பண்ணி விட்டாய். பண்ணித் தீரணும். அவ்வளவுதான். அந்தப் பெண்ணுக்கு ஜாக்கிசான் பிடிக்குமாம். நீ ஜாக்கிசான் என்று நிரூபிக்கணும். அவள் லாக்கெட்டிலும், உடைகளுக்கு நடுவிலும் அவனுடைய போட்டோவை எடுத்துவிட்டு, உன் போட்டோவை வைத்துக்கொள்வது போல் செய்கிறேன். இது நம் நாட்டின் மீது நான் பண்ணுகிற சபதம்” என்றாள் பிரதிமா.

*****

“சார்! எனக்கு பத்து ஏஜெண்டுகள் வேணும்” என்றாள் பிரதிமா.

“எதுக்கு?” கேட்டார் சீஃப்.

மிக முக்கியமான காரியமாய் இருந்தாலேயொழிய அவ்வளவு ஆள்படையைப் பயன்படுத்தக் கூடாது.

“ஒரு ரகசியமான திட்டத்தை செயல்படுத்தப் போகிறேன். டாப் சீக்ரெட். அந்த பத்துப் பேருக்கும் பிளாக் கமாண்டோஸ் உடை வேண்டும்” என்று தனக்கு வேண்டிய விவரங்களைச் சொன்னாள்.

“என்ன விஷயம், அதைச் சொல்லு பிரதிமா?”

“நாளை மாலை தெரியும்.”

சீஃப் முகவாயைச் சொரிந்துகொண்டார். ஏஜெண்டுகளிடம் விவரம் கேட்கும் உரிமை அவருக்கு உண்டு. ஆனால் ஏஜெண்ட் சொல்ல விரும்பாவிட்டால் வற்புறுத்துவது நியாயம் இல்லை. அதுவும் பிரதிமா இப்பொழுதுதான் டிபார்ட்மெண்ட்டில் பெயரெடுத்துக் கொண்டிருந்த ஏஜெண்ட். தலையை அசைத்துவிட்டு, “சரி” என்றார்.

*****

நேத்ராவின் கையில் வயர்லெஸ் போன்ற ஒரு கருவி இருந்தது. அவன் அதன் ஆன்டெனாவை ஜன்னலிலிருந்து வெளியே கொண்டு வந்து கட்டினான்.

மேஜைக்கு மேலே கார்ட்லெஸ் போன் இருந்தது. அவன் ரிசீவரைக் கையிலெடுத்துக் கொண்டிருந்த போது பிரதிமா பரபரப்புடன் உள்ளே வந்தாள். அவன் அவளைத் திரும்பிப் பாராமலேயே தன் காரியத்தில் மூழ்கியபடி, “பூஷணத்தின் போனை ட்ராப் பண்ணியிருக்கேன். இனிமேல் அவனுக்கு வர போன்கால்களையும், அவனிடமிருந்து போகிற கால்களையும் கேட்கலாம்” என்றான்.

“கேட்கிறது இருக்கட்டும். நான் எதுக்காக வந்திருக்கிறேன் என்று கேளு. நாளை மாலை நீ அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு பங்களூர் ரோடில் போய்க் கொண்டு இருக்கும் போது பத்து பிளாக் கமாண்டோஸ் வந்து உன்னோடு சண்டை போடுவார்கள். அவர்களை போட்டு தள்ளாதே. அவர்கள் நம் ஏஜெண்டுகள் தான்.”

அவன் கையிலிருந்த ஒயர் நழுவி விழுந்தது.

“நம் ஏஜெண்டுகளா? சண்டை போடணுமா?” புரியாமல் திகைத்துப் போய் கேட்டான்.

“அந்தப் பெண்ணுக்கு ஜாக்கிச்சான் என்றால் அபிமானம் என்று சொன்னாள் இல்லையா. அதான் சின்ன சண்டைக் காட்சிக்கு ஏற்பாடு பண்ணினேன்.”

“உனக்கு உண்மையிலேயே புத்தி பிசகிவிட்டது.”

“நீ எனக்கு பிராமிஸ் பாணி இருக்கிறாய். நான் போய் சீஃபுடன் கூட பேசிவிட்டேன்.”

“சீஃபுடன் பேசினாயா?” தயங்கினான்.

“ஆமாம். பத்து ஏஜெண்டுகளைத் தருவதற்குக்கூட ஒப்புக்கொண்டார். நீ தான் தாமதம்.”

நேத்ராவால் பதில் பேச முடியவில்லை. பகீரதன் கூட இதற்கு ஒப்புக்கொண்டு விட்டால் செய்வதற்கு இனி என்ன இருக்கு!

அதற்குள் வயர்லெஸ் இன்டிகேட்டர் லிருந்து பீமிங் சப்தம் கேட்டது. நேத்ரா சட்டென்று போய் ரிசீவரை எடுத்தான். பூஷணம் ஜன்னலிடம் நின்றபடி யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தது கேட்டது.

“பழைய ரஷியன் அம்பாசிடர். அவரோடு நாளைக்கு அப்பாயின்மென்ட் எடுத்துக்கொள்” என்று போனை வைத்துவிட்டார்.

“ஒரு காலத்தில் ரஷ்யாவின் தூதராயிருந்தவருடன் பூஷணத்திற்கு இப்பொழுது என்ன வேலை? இதில் ஏதோ விஷயம் இருக்கிறது.” யோசனையில் ஆழ்ந்து சொன்னான்.

“நாம் நினைத்திருப்பதை விட ஆபத்தானவனாய் தென்படுகிறான் இந்த பூஷணம். ஏதோ ஒன்றைப் பண்ணணும் சீக்கிரம். நம்மிடம் இருக்கிற ஒரே ஆயுதம் இந்த ரேகா. இப்போது பரிசோதனைச் சாலை எங்கே இருக்கிறது என்றுகூட தெரியாது நமக்கு. எதையாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், அதை அந்த ரேகா மூலம்தான் காரியம் ஆக வேண்டும்.”

நேத்ரா போனை எடுத்து டயல் பண்ணினான்.

மறுமுனையிலிருந்து பூஷணத்தின் குரல், “யாரு?” என்று கேட்டதுமே, “நான்தான் நேத்ரா! நலமாயிருக்கிறாயா மாமா?” என்றான்.

“யாரு?”

“உன் மூஞ்சி! என்னையே மறந்து விட்டாயா. நான்தான் வேதகிரி.”

“யூ இடியட்! என்ன தைரியமடா? எனக்கே போன் பண்ணுகிறாயா?”

“போன் நான் உனக்குப் பண்ணலை. உன் மகளுக்குப் பண்ணினேன். நீ எதுக்கு எடுத்தே? வை வை. உன் மகளை எடுக்கச் சொல்லு. ரேகா இருக்கிறாளா?”

போன் கட் ஆகிவிட்டது. பத்து நிமிஷங்களுக்குப் பிறகு திரும்பவும் போன் பண்ணினான். இரண்டு நிமிஷங்கள் பேசிவிட்டு போனை வைத்துவிட்டு, “நாளைக்கு வருவதாய் சொன்னாள் அந்தப் பெண்” என்றான்.

இங்கே இந்த உரையாடல் நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் அங்கே பூஷணம் ரேகாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

“பாரும்மா. அன்றைக்குப் பார்ட்டியில் உன்னைச் சந்தித்தானே, நேத்ரான்னு ஒருத்தன், நினைவிருக்கா?”

“இருக்குப்பா.”

“அவன் சீக்ரெட் ஏஜெண்ட். மாறுவேடத்தில் இருக்கிறான். நம்மைப் பற்றி ஒன்றும் சொல்லி விடாதே.”

சுவர்ணரேகா ஆச்சரியமடைந்தவளாய், “நான் எதுக்குச் சொல்லப் போகிறேன்? முதலில் அவன் யார் என்று அடையாளம் கூட நினைவில்லை” என்றால்.

“அவன் அதற்கு பிறகு உன்னைச் சந்திக்கவே இல்லையா?”

“இல்லையே?”

“நிஜமாகவா?”

“நிஜம்தாம்பா. உங்களுக்கு எதுக்கு சந்தேகம் வந்தது? ஆனாலும் நான் அவ்வளவு முட்டாளாய் அவனோடு ஏன் பேசப் போகிறேன்?”

பூஷணத்திற்கு அவள் சொன்னது நிஜம்தான் என்று தோன்றிற்று. கேவலம் தன்னை மனதளவில் பலவீனப்படுத்துவதற்காகவே டிபார்ட்மெண்ட் இந்த நாடகம் ஆடுகிறது போலப் பட்டது. இல்லாவிட்டால் தனக்கு எதிரிலேயே மகளோடு பார்ட்டியில் அவன் ஏன் பேசப் போகிறான்?

ஆனாலும் இந்த விஷயத்தை அவள்ளளவு எளிதாய் விட்டுவிட விரும்பவில்லை அவர். தன்னோடு விளையாடும் அவனை ஒரு கை பார்த்து விட வேண்டும் என்றெண்ணிக் கொண்டார். செகரெட்ரியைக் கூப்பிட்டுச் சொன்னார்.

“இந்த வேதகிரி பயல் யாரோ தெரியலை. கொஞ்சம் பார்த்துக்கோ. சூட்டும் கோட்டும் போட்டுகிட்டதுமே வாலை ஆட்டத் தொடங்கிவிட்டான்.”

செகரெட்ரி பணிவாய், “நாளைக்கு சாயந்திரமே ஒரு பத்துப் பேர் ரவுடிக்களை ஏற்பாடு பண்ணி அவனை ஒரு கை பார்த்து விடுகிறேன் சார்” என்றான்.

## 17

“எதுக்கு வரச் சொன்னீங்க?” கேட்டாள் அம்சரேகா.

கார் வேகமாய் போய்க் கொண்டிருந்தது. தொலைவில் கோட்டை தென்பட்டது.

அதற்கு நேத்ரா பதில் சொல்லாமலேயே, “உனக்கு கார் டிரைவிங் தெரியுமா?” என்று கேட்டான்.

“அப்பாவுக்கு எங்கேயாவது ஆக்சிடெண்ட பண்ணி விடப் போகிறேன் என்று பயம்.”

“உங்கப்பாவுக்கு உன் மேல் ரொம்ப பிரியம் என்று நினைக்கிறேன்.”

அவள் பதில் பேசவில்லை.

“நான் கற்றுத் தரட்டுமா?”

“ஊம்.”

“இதோ கீழே இருப்பது ஆக்சிலேட்டர். இதை அழுத்தினால் வேகம் அதிகமாகும். ரொம்ப வேகம் அதிகமாகி விட்டால் இதோ நடுவில் இருக்கிற இதை நாசூக்காய் அழுத்தணும். அதை பிரேக் என்பார்கள். அதற்காக ஒரேயடியாய் பிரேகை போட்டுவிடக் கூடாது. க்ளச்சை கொஞ்சம் கொஞ்சமாய் அழுத்திக் கொண்டே வேகத்தைக் குறைக்கணும். அப்படியும் நிற்காவிட்டால் ஹேண்ட் பிரேக்கைக் கையால்..”

“வேட்டூரி சுந்தர ராமமூர்த்தி உங்களுக்கு என்ன உறவு?”

திடீரென்று அவள் அவ்வாறு கேட்கவே அவன் வியப்படைந்து, “அவருக்கும் நான் சொல்லித் தருவதற்கும் என்ன சம்பதம்?” என்று கேட்டான்.

“ஒண்ணுமில்லை சொல்லுங்க.”

“காதலுக்கும் டிரைவிங் கற்றுக் கொள்வதற்கும் நிறைய ஒற்றுமை இருக்கு. தெரியுமா?”

அவள் வியப்புடன், “அதென்னது?” என்று கேட்டாள்.

“I என்ற லேர்னிங். O என்றால் ஒரு பெண், Vஎன்றால் வர்ஜின், E என்றால் என்ட்ரி.”

“நீங்கள் என்னவோ இருபொருள் பட பேசுவதுபோல் இருக்கு.”

“பார்த்தீங்களா? வேட்டூரி சுந்தர ராம மூர்த்தியையும் சென்சார் இதுபோல் தவறாய் புரிந்து கொள்வாங்க. என் அபிப்பிராயம் என்னவென்றால் ஒரு கன்னிப்பெண்ணின் இதயத்திற்குள் நுழைவதையே காதல் என்பார்கள்” என்று சொல்லிவிட்டு, “நாம் இந்த கற்றுக்கொள்வது, கற்றுக்கொடுப்பது இவைகளை நாளையிலிருந்து ஆரம்பிக்கலாம்.”

“நாளுக்கு மாலையில் என் சிநேகிதியின் கல்யாணம் இருக்கு. நான் போகணும்.”

“நாளைக்கா?” ஆச்ச்ரியப்படுபவனை போல் நடித்தான் நேத்ரா.

“அந்த ஜோடி ரொம்ப அதிர்ஷ்டசாலிகள்.”

“ஏன்?”

“நாளைக்கு டிசம்பர் 21.”

“அதனால்?” புரியாமல் கேட்டாள்.

“சயின்ஸ் படித்தவள். உனக்கு அவ்வளவு கூட தெரியாதா?”

“ஊஹும்.”

“வருடத்திலேயே நீண்ட இரவு நேரம் உடையது அன்றைக்குத் தான்தான்.”

“அதனால் என்னவாம்?” என்றாள்.

“அதைக்கூடச் சொல்லணுமா?

அவள் பதில் பேசவில்லை. ‘இதென்னது? ராத்திரியெல்லாம் முத்தம் கொடுத்துட்டே இருப்பாங்களா என்ன, எவ்வளவு நீண்ட முதலிரவாக

இருந்தால் மட்டும்' என்றெண்ணிக் கொண்டாள் மனதிற்குள்.

"உங்களைப் பார்த்தால் புரொபசர் லால் ஞாபகத்துக்கு வருகிறார்."

"அவர் யார்? ஞாபகம் வருவானேன்?"

"உன்னைப் போலவே கெமிஸ்ட்ரியில் ரிசர்ச் பண்ணிட்டிருப்பாரு."

"நான் ரிசர்ச் பண்ணவில்லை. ஸ்டூடென்ட் தான்." அவள் வார்த்தைகள் முடியக்கூட வில்லை. அவன் குறுக்கிட்டு, "என்னை முழுவதும் சொல்ல விட மாட்டாயா?" என்றான்.

"சொல்லுங்க."

"தன் லேடி செகரெட்ரியோடு சேர்ந்து வெளி ஊருக்கு ஏதோ மீட்டிங்கிற்காகப் போனவர் அன்றிரவு அங்கேயே தங்குபடி நேர்ந்ததாம். ஓட்டலில் ஒரே ஒரு டபுள் பெட் ரூம் இருந்ததால் வேறு வழியின்றி அதையே எடுத்துகொள்ள நேர்ந்தது. ஆளுக்கொரு படுக்கையில் படுத்துக் கொண்டார்களாம். நள்ளிரவில் குளிராயிருந்ததால், சேகரெட்ரி "கொஞ்சம் உங்கள் பக்கம் இருக்கிற ஜன்னல் கதவை சாத்துறீங்களா?" என்று கேட்டாளாம். அவர் தன் படுக்கைய்லேயே இந்தப் பக்கமாய் ஒருக்களித்துப் படுத்துக்கொண்டு, "இந்த ஒரே ஒரு இரவு மட்டும் என் மனைவியாய் இருக்க முடியுமா?" என்று கேட்டாராம். அவள் மிக உற்சாகத்துடன், "கண்டிப்பாய் சார்" என்றாளாம். "அப்படி என்றால் ஒன்றும் நினைத்துக்காமல் நீயே சாத்திக்கொள்" என்று அந்தப் பக்கமாய் திரும்பிப் படுத்துக் கொண்டாராம்."

அவள் முகம் சிவந்து, "இந்த மாதிரி கதைகளை சொல்லத்தான் வரச் சொன்னீங்களா?' என்றாள் கோபமாய்.

"இல்லை. ஒரு பெண்... அழகான மாலையில் பொழுதுபோக்காய் ஒருத்தன் வரச் சொன்னான் என்றால் அது சிநேகத்திற்கு கடைசி கட்டம், காதலுக்கு முதல்படி."

"நம் காதல் இன்னும் இந்தக் கட்டத்தில்தான் இருக்கு என்று நான் நினைக்கவில்லை."

“அப்படி என்றால் ஒரு விஷயம் சொல்லு. ரஷ்யாவிலிருந்து வந்த தூதருக்கும் உங்கப்பாவுக்கும் என்ன சம்பந்தம்? அவர் பெயர் வாமனன். நேற்று வரை ரஷ்யாவில் வேலை பண்ணிட்டு, இங்கே வெளிநாட்டு இலாக்காவுக்கு வந்திருக்கிறார். மிக நேர்மையான அதிகாரி. அவரை உங்க அப்பா எதுக்கு சந்திக்க விரும்புகிறார்?”

“அது உங்களுக்கு எதற்கு?” எதிர்க்கேள்வி கேட்டாள்.

நேத்ரா இந்த உரையாடலில் தனக்கு உற்சாகம் இல்லாதது போல், “உன்னிஷ்டம். காதலர்களுக்கிடையே ரகசியங்கள் இருக்கக் கூடாது என்று நீ எண்ணினால் சொல்லு” என்றான்.

அம்சரேகா அப்பாவியாய், “ரஷ்யன் சர்க்கஸ் வந்திருக்கு இல்லையா? அதுக்கு ஏதாவது இலவச பாஸ் வேண்டும் என்று கேட்பதற்காக இருக்கலாமோ என்னவோ” என்றாள்.

அந்த பதிலை கேட்டுவிட்டு நேத்ரா அவளை விழுங்கி விடுவது போல் பார்த்தான். “நேற்றிரவு போனில் அப்பா யாருடனோ...” என்று சொல்லப் போனாள். அதற்குள் எதிரே மோட்டார் சைக்கிள்களை வந்தன. அவர்கள் அரை வட்டமாய் நின்று கொண்டிருந்தார்கள். அவன் காரை விட்டிறங்கி, அவர்களிடம் போய் ரகசியமாய், “உங்கள் குறுக்கீடு அவசியமில்லை. போய் பிரதிமாவிடம் சொல்லுங்கள். அந்தப் பெண் தானே எல்லா விஷயங்களையும் சொல்லத் தயாராயிருப்பதுபோல் தோன்றுகிறது” என்றான் காரைக் காட்டி.

பதிலுக்கு அவன் கழுத்தில் ஒரு குத்து விழுந்தது. தொலைவில் போய் விழுந்தான். அவனுக்குப் புரியவில்லை. எழுந்துபோய், “நாடகத்தைக் கூட சரியாய் நடிக்க முடிய வில்லையா உங்களால்?’ என்றான் எரிச்சலுடன். அதற்குள் மின்னலைக் காட்டிலும் வேகமாய் ஒரு கத்தி வந்து அவன் ஷர்ட்டைக் கிழித்துவிட்டுக் கீழே விழுந்தது. சருமம் சிவந்தது. அவன்

அக்கையைப் பிடித்து வேகமாய் தள்ளுவதற்குள்ளாகவே இன்னொருத்தன் வந்து தாக்கினான்.

நேத்ராவுக்கு ஏதோ குளறுபடி நடந்து விட்டதாய் தோன்றிற்று. பிரதிமா சீஃபிடம் சொன்னதை யாராவது தெரிந்துகொண்டு நாடகமாடுகிறார்களோ என்றெண்ணினான். மேற்கொண்டு தாமதிக்கவில்லை. இரண்டே வினாடிகளில் தயாராகிவிட்டான். ஒரு பேக் கிக், இரண்டு குத்துகள்... அவன் கை மின்னலைக் காட்டிலும் வேகமாய் நகர்ந்தது. எதிரி கிட்டே வந்ததுமே அவன் காற்றில் டைவ் செய்தான். வந்தவர்கள் இத்தொழிலில் அதிகத் திறமையுடையவர்கள் அல்ல. அவனோ புரோஃபஷனல். அம்சரேகா பயந்து போய் பார்த்துக் கொண்டிருந்தாள். வரிசையாய் ஒவ்வொருத்தராய் பலத்தைக் கூட்டிக்கொண்டு அங்கிருந்து ஓடி விட்டார்கள்.

அவன் காரை நெருங்கினான். “பார்த்தாயா, உங்க அப்பா எவ்வளவு அயோக்கியர் என்று! எப்படிப்பட்ட ஆளுக்கு நீ உதவுகிறாய் தெரியுமா?” என்றான்.

“உதவியா?” என்றாள் புரியாமல்.

“ஆமாம். இப்பொழுது சொல்லு. நீ பண்ணுகிற பரிசோதனைகள்” என்று நேத்ரா ஏதோ சொல்லப் போனான்.

அதற்குள் பிளாக் கமாண்டோக்கள் திரும்பி வந்தார்கள். திரும்பவும் அவ்விடத்தில் பயங்கர யுத்தம் தொடங்கிற்று. யாரோ கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். நேத்ரா கொஞ்சமும் தளரவில்லை. எதிராளியைப் பேச விடவில்லை. கடைசி ஆளின் முகத்தில் குத்தியபோது மட்டும், “கொன்று விட்டாய் பாஸ்” என்று கேட்டது. முகத்திலிருந்து திரையை அகற்றிப் பார்த்தான். சக ஏஜெண்ட்! ‘மை காட்!’ என்றெண்ணிக் கொண்டான். அதற்குள் தாமதமாகி விட்டது.

*****

‘சஸ்பென்ஷனைத் தவிர வேறு வழியில்லை” என்றார் சீஃப்.

“என்னை சஸ்பென்ட் பண்ணப் போறீங்களா சார்?” பயந்து கேட்டாள் பிரதிமா.

“உன்னையில்லை. என்னை.” கம்பீரமாய் சொன்னார் சீஃப். “இப்படிப்பட்ட உபயோகமற்ற ஆலோசனைகளை அப்ரூவ் பண்ணி, நீ கேட்டுக் கொண்டதுமே பத்து ஏஜெண்டுகளை அனுப்பியதற்கு என்னைக் கண்டிப்பாய் சஸ்பென்ட் பண்ணிவிடும் அரசாங்கம்.”

மருத்துவமனை படுக்கைகளுக்கிடையே நின்றபடி பேசிக் கொண்டிருந்தார்கள் அவர்கள். இரு பக்கத்துப் படுக்கைக்களிலும் சி.பி.ஐ. ஏஜெண்டுகள் படுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கால்கள் மேலே நோக்கிக் கட்டப் பட்டிருந்தன. சிலரது கைகளில் பேண்டேஜ் இருந்ததது.

“இதில் என் தவறு எதுவுமில்லை. கொஞ்சம் பிசகியிருந்தால் என் உயிரே போயிருக்கும்” என்றான் நேத்ரா.

பிரதிமா இந்த உரையாடலில் கலந்துகொள்ளவில்லை. எப்பொழுதும் குறும்புத்தனத்தோடும் ஆர்வத்தோடும் பேசும் அவள் இப்பொழுது மௌனமாய், நிசப்தமாய் இருந்தாள்.

வேதனையையும் மீறிய அதீதமான நிலை அது. கோடி ரூபாய் திட்டம் ஒன்று ஒரு கணக்கர் செய்த சிறு தவறினால் தோற்றுப் போய் நஷ்டம் வந்தால், அந்த கணக்கரின் மனநிலை எப்படியிருக்குமோ அப்படியிருந்தது அவள் மனநிலை.

ஆஸ்பத்திரி படுக்கையில் இருந்த சக ஏஜெண்டுகள் அவளுடைய கையாலாகத்தனத்திற்கு எடுத்துக்காட்டாய் தென்பட்டார்கள். எல்லோரையும் விட அவள் ஜூனியர். ஆனாலும் அவள் யோசனைக்கு மதிப்பளித்தார்கள் டிபார்ட்மென்ட் சீனியர்ஸ். அவள் இதை விளையாட்டு விவகாரமாய் எடுத்துக்கொண்டு நடந்திருக்கிறாள்.

இந்த நஷ்டத்திலிருந்து வெளியேறுவது டிபார்மென்ட்டிற்குக் கஷ்டம் ஒன்றுமில்லை. ரிகார்டில்

வராமல் அவள் சீஃப் பார்த்துக்கொள்வார். ஆனால் அவள்தான் அவளுடைய மனசுக்கு ஜவாப்தாரி.

அவள் நிசப்தமாய் வெளியே வந்து விட்டாள். மருத்துவமனை விசிட்டர்களின் அறையில் தனியாய் உட்கார்ந்திருந்தாள். எவ்வளவு நேரமாய் அவ்வாறு உட்கார்ந்திருந்தாளோ தெரியாது. சீஃபுடன் பேசிவிட்டு நேத்ரா அவளைத் தேடிக்கொண்டு அங்கே வந்தான். அவள் அந்தப் பக்கமாய் திரும்பி உட்கார்ந்திருந்தாள்.

“பிரதிமா!” என்றான். அவள் திரும்பவில்லை. அவன் அருகில் சென்று அவள் நிலைமையைப் புரிந்து கொண்டவனைப் போல், “வருத்தப் படாதே” என்றான். அவள் ஓவென்று கதறித் தீர்த்துவிட்டாள்.

“சீ… இதென்ன அழுகை இப்போ என்னவாகி விட்டது? அவர்கள் சீக்கிரத்திலேயே குணமாகி வெளியே வந்துடுவார்கள்” என்று சொல்லவில்லை அவன். அப்படியே அழவிட்டான் அவளை. இதுபோன்ற விஷயங்களுக்கு வருத்தப்படுவது என்பது வாழ்க்கையின் ஆரம்ப தசையிலே முடித்து விடுவது நல்லது. போகப்போக அவள் பெரிய சீக்ரெட் ஏஜெண்ட் ஆவாள் என்றறிவான் அவன். சரியோ தவறோ நினைத்ததைப் பண்ணிவிடுவது ஏஜெண்டுகளின் முக்கிய லட்சணமாய் இருக்க வேண்டும். அவன் அவளை நேசித்தானா இல்லையா என்பது கேள்வி இல்லை. துக்கம் வந்த போது ஆறுதலுக்காக வேறு ஆளைத் தேடிக்கொண்டு போவது வீரர்களின் லட்சணம் அல்ல.

எதிரி நாட்டில் சத்ருக்களுக்கு நடுவே ஆண்டுக் கணக்காய் அவர்கள் கொடுக்கும் துன்பங்களை அனுபவிக்க நேரலாம். அப்பொழுது ஆறுதல் அளிக்கும் கைகளோ, வார்த்தைகளோ கிடைக்காது. அந்த நுட்பமான உணர்வு போக வேண்டும். காதல், ஆறுதல், இரக்கம், பிரிவு… இதெல்லாம் ஏஜெண்ட் ஆக இருப்பர்களுக்கு கைக்கெட்டாத தூரத்தில் இருக்க வேண்டும். அப்பொழதுதான் தம் துறையில் நம்பர் ஒன் ஆவார்கள்.

பிரதிமா அவ்வாறு ஆக வேண்டும்.

ஹி லைக்ஸ் ஹர்.

ஹி லைக்ஸ் ஹர், ப்ரொஃபஷானலி.

## 18

வெளிநாட்டு இலக்கா ஆபீசில் இரண்டாவது மாடியில் அந்த இ அண்ட் ஐ கமிஷனரின் அறையில் உட்கார்ந்திருந்தார்கள் அவ்விருவரும்.

“எவ்வளவு நாளாயிடுத்துடா உன்னைப் பார்த்து? ஐந்து வருஷம் ஆகி விட்டது இல்லையா?” என்றார் கணபதி.

“மாஸ்கோவுக்குத் தூதரகத்துக்குப் போன பிறகு இந்தப் பக்கம் வரவே முடியாமல் போய் விட்டது. டில்லிக்கும் மாஸ்கோவுக்குமிடையே ஷட்டில் சர்வீசுக்கே சரியாகி விட்டது. இனி இந்தியாவுக்கு வந்துவிட்டேன். ஆதலால் அடிக்கடி சந்திக்கலாம். பை தி பை இருபத்தி நாலாம் தேதி ரஷ்யன் சர்கஸ் இருக்கு. கல்ச்சுரல் விங்கைச் சேர்ந்தவர்கள் ஸ்பான்சர் செய்கிறார்கள். இதோ வி.ஐ.பி. இன்விடேஷன். கண்டிப்பாய் வரணும்” என்றார் வாமனமூர்த்தி.

“வரேண்டா. இந்த வயதில் அதைவிட வேறு வேலை என்ன இருக்கு?’ என்றார் அழைப்பிதழை வாங்கிக்கொண்ட கணபதி.

“நீ மட்டுமேயில்லை. வீட்டில் எல்லோரையுமே அழைத்துக்கொண்டு வரணும்.”

“கண்டிப்பாய்.”

பூஷணம் உள்ளே வந்தார். கணபதியைப் பார்த்துவிட்டு, நின்று கேலியாய், “ஹலோ! ரிடையர்ட் கர்னல். நாடு எப்படி இருக்கு?” என்று கேட்டார்.

“வெளியில் இருக்கு எதிரிகளால் ஆபத்து எதுவும் தென்படவில்லை. உள்ளேயிருந்துதான் ஆபத்து நெருங்குகிறது.” அத்தனைக்கத்தனை சூடாய் பதிலளித்தார் கணபதி.

“நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்து புகழ் பெற்ற உங்கள் பேரனைப் போன்றவர்கள் இருக்கிற வரைக்கும் நாட்டுக்கு எந்த ஆபத்தும் இல்லை.” சிரித்தார்.

“வியாபாரத்தைத் தவிர இதர விஷயங்களை எல்லாம் படிப்பதை விட்டுவிட்டாயா பூஷணம். என்

பேரன் இறந்து போனது... அதெல்லாம் நாடகம். நேத்ரா நிம்மதியாய், சந்தோஷமாய் வாழ்ந்து கொண்டு இருக்கிறான்."

"நீயும் போலீசாரும் சேர்ந்து போடுகிற நாடகம் அது. எனக்குத் தெரியும். பேரன் இறந்து விட்டதற்கு மனதில் மலையத்தனை துக்கத்தை வைத்துக்கொண்டு, மேலுக்கு சந்தோஷமாய் இருப்பதுபோல் நடிக்க வேண்டியிருப்பது எத்தனை கஷ்டம் என்று என்னால் ஊகிக்க முடிகிறது."

கணபதி அவரை எரிச்சலுடன் பார்த்தார். அப்படிப்பட்டவருடன் வாதாடுவது அனாவசியம் என்று தோன்றிற்று. "சரி. அப்படியே எண்ணி திருப்தி அடைந்துகொள்" என்று தன் காரை நோக்கிப் போய் விட்டார்.

பூஷணம் ஆபீசிற்குள் நுழைந்து வாமன மூர்த்தியிடம் போனார். பரஸ்பரம் அறிமுகத்திற்கு பிறகு வந்த காரியத்தைச் சொன்னார்.

"வெளிநாட்டிலிருந்து எனக்கு வேண்டிய அமிலங்களின் இறக்குமதியை அரசாங்கம் தடைசெய்து விட்டது. காரணம் என்னவென்று சொல்லவில்லை. எந்த காரணத்தினால் எனக்கு வரவேண்டிய சரக்குகளை தடுத்து நிறுத்த முடியும் உங்களால்?"

"அவ்வளவு விலை மதிப்புள்ள அமிலங்களின் தேவை உங்களுக்கு எதுக்கு என்று எங்களுக்குப் புரியவில்லை மிஸ்டர் பூஷணம்."

"எனக்கு ஆயிரத்தெட்டு தொழிற்சாலைகள் உள்ளன. அந்த விவரங்களை எல்லாம் என் அப்ளிகேஷனில் எழுதி இருக்கிறேன்."

"அந்த தொழிற்சாலைகளின் அந்தப் பொருட்களின் தேவை இருக்கா இல்லையா என்று விசாரிப்பதற்குக் கமிட்டி ஒன்றைப் போட்டிருக்கிறேன்." வாமன மூர்த்தி சமாதானமாய் சொன்னார்.

"நான்சென்ஸ்! இதெல்லாம் எனக்கு தொல்லை கொடுப்பதற்காக நீங்கள் போடுகிற நாடகம்! அந்த கமிட்டீ ரிப்போர்ட்டும் தராது. எங்கள் லைசன்சும் சாங்க்ஷன் ஆகாது."

“ரொம்ப நன்றாய் ஊகித்துக் கொண்டிருக்கிறீர்கள் பூஷணம்! எங்கள் உத்தேசம் அதுதான்.” முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் சொன்னார்.

பூஷணத்தின் முகம் சிவந்தது. “கோர்ட்டுக்குப் போவேன்.”

“இரண்டு வருஷங்கள் ஆகும் அங்கே கேசு முடிவடைவதற்கு,” சிரித்தபடி நாற்காலியை விட்டு எழுந்திருந்து அவரிடம் வந்தார் வாமன மூர்த்தி. “நீங்கள் தேசத்ரோகி என்று எல்லோருக்குமே தெரியும். உங்களை அரசாங்கத்தால் ஒன்றும் பண்ண முடியாது. கோர்ட்டும் எதுவும் பண்ணிவிட முடியாது. ஐ.பி.ஸி., ஃபேரா, நாசா, மிசா இதெல்லாம் உங்களைத் தொடவும் முடியாது. பின்னே என்னதான் செய்வது? இந்த நிலைமையில் உங்களை நாலு பக்கங்களிலிருந்து... மனதளவிலும், பொருளாதார ரீதியிலும் தாக்குவதற்கு வழிகாட்டியாக எங்களுக்கு ஒருவர் ஆலோசனை தந்தார். உங்களை கைது பண்ண மாட்டோம். ஜெயிலில் தள்ள மாட்டோம். கேசுகள் போட மாட்டோம். ஆனால் நீங்கள் எந்தக் காரியத்தைப் பண்ணினாலும் அதற்கு எந்த விதத்திலாவது தடை ஏற்படுத்துவோம். இந்தப் புது டெக்னிக் நன்றாக இருக்கிறதா?”

பூஷணம் கோபத்தை அடக்கிக்கொண்டு, “யார் தந்தது உங்களுக்கு இந்த ஆலோசனையை?” என்று கேட்டார்.

“நேத்ரா.”

“பெண்களோடும் துப்பாக்கிகளோடும் கொட்டமடிகிற ஏஜெண்ட் பொருளாதார விஷயத்தில் அரசாங்கத்திற்கு ஆலோசனை தருகிறானா? குட்! இதை எப்படி சமாளிக்கணும் என்று எனக்குத் தெரியும். ஒரு வாரத்திற்குள் எனக்கு அந்த இறக்குமதி லைசன்சு வேண்டும். நீங்களே தரப் போறீங்களா? என்னை பெற்றுக்கொள்ளச் சொல்றீங்களா?”

வாமனமூர்த்தி சிரித்தார். “நான் இத்தனை நாளாய் ரஷ்யாவில் இருந்துவிட்டு வந்திருக்கிறவன். யாரை எப்படி எங்கே வைத்திருக்கணும் என்று ரஷ்யர்களுக்கு நன்றாய்த் தெரியும். பூஷணம்! உங்கள் கொட்டம்

என்னிடம் பலிக்காது. அந்தக் காரியத்துக்காகவேதான் என்னை இந்த பதவியில் போட்டிருக்கிறார்கள்.” கடைசி வார்த்தையை அழுத்திச் சொன்னார்.

பூஷணமும் சிரித்தார்.

“நான் இந்தியாவில் பிறந்து வளர்ந்தவன் மூர்த்தி. யாரிடமிருந்து எப்படி வேலையைப் பண்ணிக்கணும் என்று இந்தியத் தொழிலதிபர்களுக்கு நன்றாகத் தெரியும். போய் வருகிறேன்” என்று எழுந்திருந்தார்.

அவர் வெளியே வந்து காரில் உட்கார்ந்து கொண்டார் பின்சீட்டில். அவருக்குப் பக்கத்தில் க்யூ இருந்தான்.

“என்னவாச்சு?”

“அந்த வாமனமூர்த்தி ரொம்ப அழுத்தமானவனாய் இருக்கிறான். ஒவ்வொன்றுக்கும் தடை விதிக்கிறான். அதைவிட பெரிய பிரச்சனை நேத்ராவிடமிருந்து வருகிறது. அவன் உண்மையிலேயே நேத்ராதானா, வேதகிரியா என்று தெரியவில்லை.”

க்யூ சிரித்தான். “ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. டூ பர்ட்ஸ் அட் எ ஷாட் என்று. அவன் நேத்ராவா இல்லையா என்று தெரிந்து கொள்வதற்கும், நேத்ராவாகவே இருந்தால் அவனையும் வாமனமூர்த்தியையும் களைவதற்கும் ஒரே ஒரு பீரங்கியைப் போன்ற ஆயுதம் இருக்கு.”

“அதென்ன ஆயுதம்?”

“அந்த ஆயுதத்தின் பெயர் பிரசிடென்ட். அந்த பீரங்கியில் பயன்படுத்தப் போகிற குண்டு அவன் மகன்” என்றான் அவன்.

அவன் வார்த்தைகளில் மிகை எதுவும் இல்லை. மிக சாமர்த்தியசாலியும், எத்தனையோ விஷமப் பிரச்சினைகளுக்கெல்லாம் கூட எளிதாய் தீர்வுகளைத் தேடிக்கொள்ளக் கூடியவருமான பூஷணத்திற்கு இந்த சதுரங்க ஆட்டத்தில் விவரம் புரிபடவில்லை. க்யூவைப் பார்த்தார். அவன் சலனமில்லாமல் இருந்தான். அவன் பக்கத்தில் இருந்தால் மலையத்தனை துணிச்சல் ஏற்பட்டாற்போல் இருந்தது. நேத்ராவை எதிர்த்து நிற்கக் கூடிய ஒரே ஆள் இவன்தான் என்ற நம்பிக்கை பிறந்தது.

பூஷணம் நடக்க வேண்டியதைப் பற்றி யோசிக்கத் தொடங்கினார். சுவர்ணரேகா கேட்டிருந்த அமிலத்தைப் பற்றி யோசிக்கத் தொடங்கினார். எந்தச் சூழ்நிலையிலும் அது ஒரு வாரத்திற்குள் வந்து சேர்ந்து விட வேண்டும். இல்லாவிட்டால் பரிசோதனை முடிவடையாது. அது முடிவடைந்து விட்டால் எதிர்காலமே பொன்னான காலந்தான்.

அமிலத்தை வரவழைப்பது ஏதோ ஒப்புக்காகத்தான். அதிகாரிகளின் கண்களைத் துடைப்பதற்காகத்தான் என்று தெரியும். அவனுக்கு வரப் போகும் இரண்டாயிரம் லிட்டர் அமிலம் கண்டெயினர்களில் கோடி ரூபாய் விலை மதிப்புடைய ப்ளுடோனியத்தைக் கூட (தமக்கு உதவும் எதிரிநாடு) அனுப்புகிறது என்ற விஷயம் மூவருக்கு மட்டுமே தெரியும்.

அவருக்கு, ஏஜெண்ட் க்யூவுக்கு, சுவர்ணரேகாவிற்கு!

*****

“சீக்கிரமாய் நீ இந்த கேஸை ஒரு முடிவுக்குக் கொண்டு வரணும் நேத்ரா! பூஷணம் வெளிநாட்டு இலக்காவை மிரட்டியிருக்கிறான். எப்படியாவது சரக்குகளை இறக்குமதி பண்ணிக்கொண்டு விடுவான்” என்றார் சீஃப்.

“அதுமட்டுமில்லை. அவனுக்கு இறக்குமதி ஆகிற சரக்கு நாட்டின் தலைநகரம் வழியாய் வருகிறது. அது மிக ஆபத்தானது. எந்தப் பொருளின் மாறாட்டமும் அங்கே நிகழலாம்” என்றான் நேத்ரா.

சீஃப் கண்கள் அகலவிரிய, “அந்த விஷயத்தை நான் யோசித்து பார்க்கவேயில்லை” என்றார்.

நேத்ரா எழுந்திருந்து, “எது எப்படி இருந்தாலும் நாளை மாலைக்குள் இந்த கேஸை ஒரு வழிக்குக் கொண்டு வந்து விடுகிறேன்” என்றான்.

“எப்படி?”

“இதற்கு நம்மிடமுள்ள ஆயுதம் ஒன்றுதான். ரேகா! அந்தப் பெண்ணின் மூலமாய்த்தான் ரகசியத்தை

வெளிக்கொணர வேண்டும்” என்று நாற்காலியை விட்டு எழுந்திருந்தான்.

அன்றிரவே அவன் அம்சரேகாவுடன் (அவன் உத்தேசப்படி அவள் சுவர்ணரேகா) பேசி இதைப் பற்றி உண்டு இல்லை என்று தெரிந்துகொண்டு விடத் துடித்தான்.

*****

உள்ளே வந்து கொண்டிருந்த கிராமத்தானைப் பார்த்து, “யார் வேண்டும்?” என்று கேட்டார் கணபதி. அதற்குள் நேத்ரா அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே அருகில் சென்றான்.

ஃபுல் சூட்டிலிருந்த நேத்ராவை கண்கள் அகல விரிய பார்த்தான் பிரசிடென்ட். அவன் கண்களில் நீர் நிறைந்தது.

“தொரை! என்னை மன்னிச்சுக்க. உன்னைக் கையைப் பிடிக்கச் சொன்னேன். வேலையெல்லாம் வாங்கினேன். நீ இவ்வளவு பெரிய ஆபீசருன்னு தெரியாமல் எவ்வளவோ வேலைகளைப் பண்ணச் சொன்னேன்” என்றான் பிரசிடென்ட்.

நேத்ரா அவன் தோளில் பரிவோடு கையை வைத்தான்.

“இதில் அவ்வளவு வருத்தப்பட என்ன இருக்கு? சின்ன விஷயம்” என்றான்.

பிரசிடென்ட் அவனை பக்தியோடு பார்த்தான். அவனைத் தான் நடத்திய விதத்திற்கு நாணமடைந்தான் என்று கண்களில் தென்பட்ட குற்ற உணர்வு சொல்லிற்று.

“எங்கே தங்கியிருக்கிறாய்?” கேட்டான் நேத்ரா.

“உன்னைப் பார்க்கத்தான் வந்தேன் தொரை. யாரோ சொன்ன போது முதல்ல நம்பலை. தேடிக்கொண்டு வந்தேன்.”

“எங்கள் வீட்டிலேயே இரண்டு நாள் தங்கியிரு,”

“இல்லை தொரை. போய் விடுகிறேன்.”

“இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய். அதற்குள்ளே போவதாவது? ஆறுமாதங்கள் வீட்டில் வைத்துப் போஷித்தாய் என்னை நீ. உன்ன அவ்வளவு சீக்கிரத்தில் அனுப்பி விடுவேனா?”

பிரசிடென்ட் தலையாட்டினான்.

“நான் இங்கே இருக்கிறேன் என்று உனக்கு யார் சொன்னார்கள்?” என்ற விஷயத்தைப் பற்றி ஓரிரண்டு கேள்விகள் நேத்ரா கேட்டிருந்தானானால், தன்னைக் கொலை பண்ணுவதற்காகப் பண்ணிக் கொண்டிருந்த முயற்சியைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்கும்.

*****

“அடியேய். இன்னிக்கு சாயந்திரம் எங்கேயும் போகாதே” என்றாள் பாட்டி.

“இந்திய சீக்ரெட் சர்வீஸ் ஏஜெண்டைப் பிடித்துக்கொண்டு வாடி போடி என்று சொன்னால் கண் அவிஞ்சி போய் விடும் பாட்டி. என்ன விஷயம்? அதைச் சொல்லு” சாப்பிட்டுக்கொண்டிருந்த பிரதிமா கேட்டாள்.

“சாயந்திரம் உன்னைப் பார்க்க பிள்ளை வீட்டார் வராங்க.”

பிரதிமாவுக்கு புரை ஏறிற்று,

“இதென்னது? யாரோ நினைக்கிறாங்க போலிருக்கு.”

“என் காதலன் பாட்டி.”

“சீ... குடி மூழ்கிவிட்டது. அவ்வளவு கட்டு மீறிப் போய் விட்டாயா?”

“இன்னும் கட்டு மீறலை பாட்டி. கட்டுக்குள்ளேதான் இருக்கிறேன்.”

“எவன் அவன்?”

“நேத்ரா என்று, சீக்ரெட் ஏஜெண்ட்.” கை கழுவிக்கொண்டே பதிலளித்தாள்.

“ஒரு ஏஜெண்டோடையே மாரடிக்க முடியலை. வீட்டில் ரெண்டு ஏஜெண்டுகளா?”

அதற்குள் போன் ஒலித்தது. பிரதிமா, “ஹலோ” என்றவள், “பார்த்தாயா பாட்டீ. அவர்தான் பண்ணுகிறார்” என்றாள்.

“நான்தான் நேத்ரா. மாலையில் ஒரு புரோக்கிராம் இருக்கு. வர முடியுமா?”

“மாலையிலா. வருக்கிறேன்.’

“சீக்கிரமாய் வா.”

அவள் போனை வைத்துவிட்டாள்.

“மாலையில் வரேன்னு சொன்னாயே. எங்கே?” கேட்டாள் பாட்டி.

“காதலர்கள் இருவரை ஒன்று சேர்த்து வைப்பதற்கு.”

அவள் புரியாதவளாய், “பின்னே இப்போ போன் பண்ணியது நீ கல்யாணம் பண்ணிக்கப் போறவன் என்று சொன்னாயே?” என்று கேட்டாள்.

பிரதிமா சிரித்துவிட்டு, “காதல் தியாகத்தை விரும்புகிறது பாட்டி” என்று கண்ணைச் சிமிட்டிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

*****

“இந்த உடையில் நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய்” என்றான் ஏஜெண்ட் நேத்ரா.

போனில் பேசிக் கொண்டிருந்த அம்சரேகா, “இருட்டில் அம்பு விடுவது உங்களுக்கு பழக்கப்பட்டது என்று நினைக்கிறேன். நான் எந்த உடையில் இருக்கிறேன் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?” என்று கேட்டாள், ஜன்னல் வழியாய் அவன் வீட்டு பால்கனியைப் ஆராய்ந்துகொண்டே.

அவன் அங்கே இல்லை.

மினி டெலிஸ்கோப்பில் ஜன்னல் வழியாய் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண் கட்டிலுக்குப் பக்கத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தது தென்பட்டது. சல்வார் கமீசுக்கு மேலே ரோஜாப்பூ அழகாய் இருந்தது.

“மனதிற்குப் பிடித்த ஆளை சந்திக்கும் பொழுது பெண்கள் டென்ஷனால் அடிக்கடி முகத்தை கைக்குட்டையால் துடைத்துக் கொள்வார்கள். கன்னத்திற்கு அழுத்தமாக பவுடர் தடவிக் கொள்வார்கள். இதெல்லாம் காதல் லட்சணங்கள்.”

முகவாயிலிருந்த கையை எடுத்துவிட்டு அவள் கட்டிலில் குப்புறப்படுத்துக் கொண்டாள். “இன்னும்?” என்றாள் ரிசீவரை அந்தக் கையிலிருந்து இந்தக் கைக்கு மாற்றிக்கொண்டே.

அப்பொழுது அவனுக்கு இன்னும் தெளிவாய் தென்பட்டாள் அவள்.

“காதலர்கள் போனில் இரவெல்லாம் பேசுவதைக் காட்டிலும் சந்தோஷமானது வேறொன்றும் இல்லை இந்த உலகத்தில். உலகமே தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும். காதலர்கள் இருவர் மட்டுமே விழித்துக் கொண்டிருப்பார்கள். நேரம் போவதே தெரியாது. இருட்டு உற்சாகமூட்டும்.”

“இன்னும்?” என்றாள் சிரிப்பை அடக்கிக்கொண்டு.

நேத்ரா தொடர்ந்தான்.

“கொஞ்சம் நேரம் நிற்பார்கள். கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்பார்கள். அப்புறம் கட்டிலில் படுத்துப்பார்கள். இப்போ வைத்துக்கொண்டு இருப்பது போல் மார்பின் மேல் கையை வைத்துக்கொள்வார்கள்.”

அவன் வார்த்தைகளை முடிப்பதற்குள்ளாகவே அவள் தன் கை எங்கே இருந்தது என்பதைப் பார்த்துக்கொண்டு கையைக் கீழே போட்டுவிட்டு, “இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிகிறது?” என்று கேட்டாள்.

“என் அறைக்கு வந்தால் சொல்றேன்.”

“இப்பொழுதா?”

“ஆமாம். நாளைக்கு என் பிறந்த நாள். கேக் செலக்ட் பண்ணணும். கடைக்குப் போகலாம்.”

“மைகாட்! நாளைக்கு உங்கள் பிறந்தநாளா? நிஜமாகவா? நாளைக்கு எத்தனை வயது முடிவடைகிறது?”

நேத்ரா சங்கடத்துடன், “ஆண்களின் வயதைக் கேட்கக் கூடாது” என்றான்.

“எப்போ பிறந்தீர்கள் என்று சொல்லுங்க ப்ளீஸ்.”

“கி.பி. ஆரம்பத்தில் என்று வைத்துக்கொள்.”

அவள் கொஞ்சம் தடுமாறி, “இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு எங்கள் வீட்டுக்கு வர முடியுமா?” என்றாள்.

அதிர்ந்து விட்டான். “வாட்?” என்றான்.

“நீங்கள் ஒன்றும் நினைத்துக்கக் கூடாது. வர முடியுமா? அப்பா ஊரில் இல்லை.”

“எதுக்கு?”

“வந்த பிறகு சொல்கிறேன்.” போனை வைத்து விட்டாள்.

*****

நேத்ரா பிரதிமாவிடம் தனக்கும் அம்சரேகாவுக்குமிடையே நடந்த உரையாடல் முழுவதையும் சொன்னான்.

“பழம் நழுவி பாலில் விழுந்து விட்டது.” துள்ளிக் குதிக்காத குறையாய் கத்தி விட்டாள் பிரதிமா.

“நான் சொன்னால் கேட்கவே இல்லை. பார்த்தாயா? அந்தப் பெண் உன் சாகசங்களுக்கு மயங்கிவிட்டாள். நள்ளிரவு நேரத்தில் அழைக்கிறாள்.”

“என்னால் நம்ப முடியவில்லை.”

“நான்தான் சொன்னேனே, அவள் ரொம்ப ஃபாஸ்ட் என்று. ஆண்கள் அவளுக்குப் புதிதில்லை” என்று சொல்லிக்கொண்டே போன பிரதிமாவின் முகம் திடீரென்று வாடிவிட்டது.

“ஒருவேளை நீயும் மயங்கி விட்டாயா?”

நேத்ராவுக்குச் சிரிப்பு வந்தது. “நீ தானே என்னை இவ்வளவு தூரம் தூண்டி விட்டதே?”

“ஆனாலும் பரவாயில்லை. பெயர் அளவுக்குக் காதலித்து அந்த ரகசியங்களை வரவழைத்தால் அதுவே போதும். அதுசரி, அவள் ஏதாவது போதைப் பொருளை பாலில் கலந்து கொடுத்து விடப்போகிறாள். மார்ஃபியா இஞ்சக்ஷனை சேர்ந்து எடுத்துப்போம் என்று கட்டாயப் படுத்தப் போகிறாள். அந்த மாதிரி காரியம் எதுவும் பண்ண மாட்டேன் என்று சத்தியம் பண்ணு.”

“அப்படிப் பண்ணினால் தவிர தந்தையில் ரகசியம் சொல்ல மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தால்?”

“பிடிவாதம் பிடித்தாலும் சரி.”

“பின்னே நாட்டுக்காக எது பண்ணினாலும் பரவாயில்லை என்று ஏன் சொன்னாய்?”

“என்ன பண்ணினாலும் என்றால்... அது ஒன்று மட்டும் கூடாது.” அவள் முகத்தில் அழுகைப் பீறிடும் போலிருந்தது.

“சரி பன்னிரண்டு மணியாகட்டும். பார்க்கலாம்” என்றானே தவிர அவனுக்கு இதெல்லாம் குழப்பமாயும், பரபரப்பாகவும் இருந்தது.

அம்சரேகாவைப் பற்றி அவன் ஒரு அபிப்பிராயத்திற்கு வந்தாலும், இப்பொழுது அப்பெண் நள்ளிரவில் இதுபோல் கூப்பிட்டாள் என்றால் நம்பத்தான் முடியவில்லை அவனால்.

## 19

நேத்ரா கேட்டிற்கு முன்னால் நின்றான். எங்கும் இருட்டாய் இருந்தது. கேட் பூட்டப் பட்டிருந்தது.

பிரதிமா சொன்னது நிஜம்தானா என்ற சந்தேகம் வந்தது. மேலுக்கு அப்பாவியாய் தென்பட்ட அப்பெண் உண்மையில் பிரதிமா சொன்ன பிரிவைச் சேர்ந்தவள்தானா? தன்னை முட்டாளாக்குகிறாளோ?

அவன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான். காலிங்பெல்லை அழுத்தப் போனபொழுது கதவு திறந்து கொண்டது. எதிரே அம்சரேகா நின்று கொண்டிருந்தாள். அவன் அவளையே பார்த்தான். ஒரு நிசப்த அலை சிநேகம் என்ற சுகந்தத்தை எடுத்துக்கொண்டு இருவரையும் தாண்டி போயிற்று. அவள் வெண்ணிற புடவையில் இருந்தாள். பனியில் குளித்த மல்லிகைப்பூ மேகத்திலிருந்து நழுவி விடியற்காலையின் குளிர்ச்சியைத் தழுவிக் கொண்டாற்போல் இருந்தது.

“தூங்கவில்லையா?” கேட்டான்.

“மேலே பால்கனியில் உங்களைத்தான் எதிர்பார்த்துகொண்டு உட்கார்ந்திருந்தேன்.”

“பால்கனியிலேயா?”

“பின்னே எங்கே இருப்பேன் என்று நினைத்தீங்க?”

“பெட்ரூமில் இருப்பாய் என்று நினைத்தேன்.”

அவள் பயந்தாற்போல் பார்த்தாள். “நான் இந்த மாதிரி நள்ளிரவு நேரத்தில் கூப்பிட்டதற்குத் தவறாய் புரிஞ்சுக்க மாட்டீங்களே?”

அவன் சங்கடத்துடன், “இதில் தவறாய் புரிந்துகொள்ள என்ன இருக்கு? யு லவ் மி. டோன்ட் யூ?” என்றான்.

அவள் கண்களைத் தாழ்த்திக்கொண்டாள். அந்த நேரத்தில் அவள் மிக அழகாய், இதழ் விரித்த மல்லிகைப்

பூவைப் போல் தென்பட்டாள் அவன் கண்களுக்கு.

இருவேறு உணர்வுகளால் அலைக்கழிக்கப்பட்டது அவன் மனம்.

இவள் யார்? மார்ஜ்சுவானா போன்ற போதைப் பொருளுக்குப் பழக்கப் பட்டவளா? உடையைக் களைவது போல் ஆண்களை மாற்றுபவளா? அவனுடைய மனம் திரும்பத் திரும்ப யோசித்துக்கொண்டே இருந்தது.

அவள் நிர்மலமாய் ஒரு சுகந்தமாய் அவனைச் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்தாள்.

அவனுக்குச் சில நாட்களுக்கு முன்னால் நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது.

*****

அம்சரேகா அரும்பாடுபட்டு காரை ஒரு பக்கமாய் நிறுத்தினாள். இல்லாவிட்டால் நடுவில் நின்றுபோய் டிராஃபிக் ஜாம் ஆகி விடும். தெரு மிகவும் சந்தடியாக இருந்தது.

அவளுக்கு அத்தனை எரிச்சலும், கோபமும் என்றுமே வந்தது இல்லை. நேரத்தைப் பார்த்தாள். இன்னும் பத்தே நிமிஷங்கள் இருந்தது. இப்படிப்பட்ட நிலைமை என்றுமே ஏற்பட்டதில்லை அவளுக்கு. இத்தனைக்கும் புதிய கார் அது.

என்ன செய்வதென்று புரியவில்லை அவளுக்கு. கார் கதவைப் பூட்டிவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் ஜீன்ஸ் பேண்டும் லூசான ஷர்டும் உடுத்தி இருந்தாலும் அவளுடைய உடற்கட்டு பார்ப்பவர்களின் கண்ணைக் கவரும்படி இருந்தது. ஏதாவது விழாக்களுக்கும், பார்ட்டீகளுக்கும் போவதுதான் அவள் வழக்கம். இதுபோல் நடுத்தெருவில் ஆதரவில்லாமல் நிற்பதற்கு ஏதோ போல் இருந்தது. ஆனாலும் இதுகூட இல்லை அவள் எரிச்சலுக்குக் காரணம்; நேரம் இன்னும் ஒன்பது நிமிஷங்களே இருந்தன. ஆட்டோ ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தாள். ஒன்று கூட காலியாய் எதிர்படவில்லை.

இன்னொரு நிமிஷம் கழிந்தது.

ஒரு ரிக்ஷா காலியாய் போய்க் கொண்டிருந்தது. அவள் அதை நிறுத்தி ஏறிக்கொண்டு, “போ” என்றாள்.

அத்தனை நாகரீகப் பெண் ரிக்ஷாவில் ஏறியது வியப்பாயிருந்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், “எங்கேம்மா?” என்றான் ரிக்ஷாக்காரன்.

“ஸ்டேஷனுக்கு.”

ரிக்ஷா பாரமாய் நகர்ந்தது. அவளால் அதில் சரியாய் உட்கார முடியவில்லை. மிக மெதுவாய் போய் கொண்டிருந்தாற்போல் தோன்றிற்று. அதிர்ஷ்டவசமாய் சீக்கிரத்திலேயே ஆட்டோ கிடைத்தது. ஒரே பாய்ச்சலில் ரிக்ஷாவிலிருந்து இறங்கி ஐம்பது ரூபாய் நோட்டை அவன் மேல் விட்டெறிந்து ஆட்டோவில் ஏறிக்கொண்டாள்.

நேரம் இன்னும் ஐந்தே நிமிஷங்கள்தான் இருந்தன. ஆட்டோ ஸ்டேஷனை நோக்கி வேகமாய் ஓடிற்று. அவள் மனதிற்குள்ளேயே கணக்குப் போட்டுப் பார்த்துக்கொண்டாள். இதே ரீதியின் போனால் சரியாய் இரண்டு நிமிஷம்தான் இருக்கும். இரண்டு நிமிஷங்கள் கூடத் தேவையில்லை. இரண்டே வினாடிகள் போதும் ரயில் போகாமலிருந்தால்.

ஆட்டோ நின்றதால் அவள் இந்த உலகத்திற்குத் திரும்பினாள்.

ஸ்டேஷன் கண்ணில் படவில்லை. சுற்றிலும் நின்று கொண்டிருந்த வாகனங்கள் தென்பட்டன. “ட்ராபிக் ஜாம் அம்மா” என்றான். அவள் தாமதிக்கவில்லை. தொலைவில் இரண்டு பர்லாங்கு தூரத்தில் ஸ்டேஷன் டவர் தென்பட்டது. அவள் ஓடத் தொடங்கினாள். ஒரு நொடி சுற்றிலும் நின்று கொண்டிருந்தவர்களுக்கு எதுவுமே புரியவில்லை. சைக்கிளிலும் காரிலும் போய்க் கொண்டிருந்தவர்கள் அவளையே விநோதமாய் பார்த்தார்கள். நவீன பாணியில் ஹேர் ஸ்டைல்! விலையுயர்ந்த மேக்கப்! அணுவணுவாய் நவநாகரீகத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்த அவள் அந்த வெயிலில் தெருவில் ஓடுவதைப் பார்த்தவர்களுக்கு அபூர்வ காட்சியாயிருந்தது.

அவள் ஸ்டேஷனைப் போய்ச் சேருவதற்குள் மேலும் இரண்டு நிமிஷங்கள் கழிந்து விட்டன. கேட் அருகில் நின்றிருந்த டிக்கெட் கலெக்டரைப்

பொருட்படுத்தாமல் உள்ளே ஓடினாள். அப்பொழுதுதான் ரயில் கூவிய சப்தம் கேட்டது.

அவள் ஒவ்வொரு கம்பார்ட்மெணடாய் தேடிக் கொண்டே போனாள். தன்னை யார் யார் பார்க்கிறார்கள், எத்தனை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் பொருட்படுத்தவில்லை அவள்.

ரயில் மெல்ல நகர்ந்தது.

அவளுக்கு அழுகை ஒன்றுதான் பாக்கி.

அதற்குள் அவள் கண்களில் நேத்ரா தென்பட்டான். முதல் வகுப்பு போகியின் ஜன்னலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து ஏதோ பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தவன், அவளை அந்த நிலையில் அவ்வாறு பார்த்து ஆச்சரியமடைந்து விட்டான்.

“ரேகா!” என்றான் வியப்போடு. “இதென்னது? நீ எதுக்கு வந்தாய்?”

“நீங்கள் ஊருக்குப் போறீங்க இல்லையா?”

“அதனால்? அதான் நாளை மாலை திரும்பி வந்துடுவேன் என்று உன்னைச் சந்தித்தபோது சொன்னேனே?” என்றான்.

“என்னவோ, எனக்கு பார்க்கணும் போலிருந்தது.” சின்னக் குழந்தையைப் போல் கொஞ்சலாய் சொன்னாள். அவனைப் பார்த்த ஆனந்தம் அக்கண்களில் பிரதிபலித்தது.

ரயில் மெதுவாய் வேகத்தை மேற்கொண்டது. அவள் அதோடு சேர்ந்து பிளாட்பாரத்தில் வேகமாய் நடந்து கொண்டிருந்தாள். அவன் பார்வை வியர்வையில் நனைந்து நெற்றில் ஒட்டிக் கொண்டிருந்த அவள் கேசங்களின் மீதும், பட்டன் கழன்று போயிருந்த ஷர்ட்டின் மீதும் பட்டது. அவளுக்கு இன்னும் மூச்சிரைத்துக் கொண்டே இருந்தது.

“ஓடியா வந்தாய்?” என்று கேட்டான்.

“ஆமாம். ரோடில் கூட... கார் ட்ரபுள் கொடுத்தது” என்று சிரித்தாள்.

அவன் அவளை திக்பிரமையோடு பார்த்தான். “நாளை மாலையில் வந்துவிடுவீர்களா சீக்கிரமாய்

வந்துவிடுங்கள்.”

அவன் அதை காதில் வாங்கிக்கொள்ளவில்லை. இன்னும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“நடுரோட்டில் எல்லோரும் பார்த்துட்டிருக்கும் போது ஓடி வந்தாயா?” என்று கேட்டான்.

ரயிலோடு கூட நடக்க முடியாதவளாய் அவள் நின்றுவிட்டாள். இருவருக்குமிடையே தூரம் அதிகமாகிக் கொண்டிருந்தது. அவன் காதில் விழ வேண்டுமென்று அவள் குரலைக் கொஞ்சம் உயர்த்தி பெரிதாய் கத்தினாள் சிரித்துக் கொண்டே.

“அம்மா என்ன சொல்லுவாள்? அப்பா என்ன சொல்லுவார்? மக்கள் என்ன நினைபார்கள்? என்று யோசித்துக் கொண்டிருந்தால் அது எப்படி காதலாகும்?”

*****

“என்ன யோசனையில் மூழ்கியபடி அங்கேயே நின்று விட்டீர்களே?” என்ற வார்த்தையைக் கேட்டு அவன் சட்டென்று தேறிக்கொண்டான். மனதில் உள்ள உணர்வுகளை வெளிகாட்டிக் கொண்டு விடாமல் முன்னோக்கி நடந்தான்.

ஏனோ தெரியவில்லை. அவனுக்கு திடீரென்று பிரதிமாவின் நினைவு வந்தது. அதற்குக் காரணம் ஒன்றும் இல்லை. அவள் வெறும் அருவியானால் இவள் காவேரி. அவள் ஒளிமறைவு இல்லாதவள். இவள் மெய்மறக்கச் செய்பவள்! ‘இல்லை இல்லை’ என்றெண்ணிக் கொண்டான். தலையைச் சிலிர்த்துக்கொண்டு திரும்பவும், தன்மீது ஒரு பொறுப்பைச் சுமத்தியிருக்கிறது டிபார்ட்மென்ட். இவள் மட்டும் நாடகமாடுகிறாள் என்றால் தன்னைவிட புத்திசாலியான ஏஜெண்டாக இருப்பாள். அவன் மயங்கிவிடக் கூடாது.

அவன் சாதாரண மனிதனாகி விட்டான்.

“அறைக்குப் போவோமா? இங்கேயே இரவெல்லாம கழிப்போமா?” அவள் டென்ஷனைக் குறைக்க விரும்பிக் கேட்டான்.

“வாங்க.” அவள் நகர்ந்து வழி விட்டாள்.

அவன் ஹாலுக்குள் அடியெடுத்து வைத்தான். “நீங்கள் சிரிக்க மாட்டேன் என்று சொன்னால்..” பாதியில் நிறுத்திவிட்டாள்.

அவன், “என்ன?” என்று கேட்டான்.

“சிரிக்கக் கூடாது.”

“சிரிக்க மாட்டேன், சொல்லு.”

“மேலே பால்கனிக்குப் போவோம்.”

“நள்ளிரவு நேரத்தில், இந்த குளிரிலா?” வியப்போடு கேட்டான்.

“ப்ளீஸ்.”

அவளைப் பின்தொடர்ந்து அவன் மேலே போனான். அவள் கடைசிப்படியில் நின்று திரும்பி பார்த்துச் சொன்னாள். “நீங்கள் பிறந்தநாள் விஷயத்தை ராத்திரி ஒரு மணிக்குச் சொன்னீங்க. அதுவும் சரியான வயதைச் சொல்லவில்லை. கி.பி. என்கிறீர்கள். அதையெல்லாம் சம்பாதித்துக்கொள்ள எத்தனை கடைகளைச் சுற்றி அலைந்தேன் தெரியுமா?”

“சம்பாதித்துக்கொள்ளவா? அதென்ன?”

அவள் பதில் சொல்லாமல் அங்கிருந்து நழுவினாள். அவன் ஒரு அடி முன்னோக்கி நடந்தவன் அப்படியே சிலையாய் நின்று விட்டான். பால்கனி பூராவும் மெழுகுவர்த்திகளின் ஒளியால் நிரம்பி வழிந்தது. எங்கும் ஒளி மயம்! அவன் அவைகளையே பார்த்துக் கொண்டிருந்த போது அவள் குரல் பக்கத்திலிருந்து கேட்டது.

“1990 மெழுகுவர்த்திகள்! யாருக்கும் தெரியாமல் நாம் இருவர் மட்டுமே இருக்க வேண்டும் என்று எண்ணி அத்தனை ஏற்பாடுகளையும் நானே பண்ணினேன். எல்லோருக்கும் முன்கூட்டி நான்தான் அருகில் இருந்து கேக் கட் பண்ண வைக்கணும் என்று எண்ணித்தான் வீட்டுக்கு அழைத்தேன். ஹாப்பி பர்த்டே டு யூ.”

தீபங்கள் எல்லாம் அவனுக்குப் பிறந்தநாள் பாட்டுப்பாடுவதுபோல் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தன. அவன் கண்கள் பனித்தன. அத்தனை அன்பை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த தீபங்களுக்கு இடையே அவள் மங்கலாய்

தென்பட்டாள். அவள் குரல் மட்டும் மேகங்களுக்கு அப்பாலிருந்து கேட்டாற்போலிருந்தது.

அருவியும், தென்றலும் கலந்தாற்போல்... வைகறைப்பொழுது விடிந்தாற்போல்... அவள் குரல், “நீங்கள் வரும் வரையில் ஒரு தீபம்கூட அணைந்து விடாமல் இருக்கணும் என்று எவ்வளவு பாடுபட்டேன் தெரியுமா? இந்தப் பக்கமேற்றி வைத்தால் அந்தப் பக்கம் அணைந்து போய்விடும். அந்தப் பக்கம் போனால் இங்கே படபடக்கும். மொத்தத்தில் எப்படியோ அத்தனையையும் ஏற்றி வைத்துவிட்டேன்.”

அவனைப் பார்த்து அப்பாவியாய், சிறு குழந்தை தந்தையிடம் ஃபர்ஸ்ட் மார்க் வந்த ரிப்போர்ட்டை காட்டிவிட்டு அவருடைய பாராட்டுக்காகக் காத்திருந்தாற்போல் பார்த்தாள்.

“ரேகா!” என்றான் அவன் தெளிவில்லாமல், “ஐ லவ் யூ”

அவள் அவனைப் பார்த்தாள். தென்றல் காற்றிற்கு தீபம் அன்போடு நடுங்கிற்று. ரேகா தீபங்களுக்கிடையே இருந்து வந்து நீட்டிய அவன் கரங்களுக்கிடையே புதைந்து கொண்டாள்.

“ஐ டூ” என்றாள் தவிப்புடன்.

அவன் அவள் தோளைச் சுற்றி கைகளைப் போட்டு அருகில் இழுத்துக்கொண்டான். அவள் நிமிர்ந்தாள். அவன் குனிந்து அவள் உதடுகளில் ஆழ்ந்து முத்தமிடுவதற்காகத் தலையைத் தாழ்த்தினான். அவள் பின்னுக்கு நகரப் போனாள். பலமான ஒரு அலை முன்னுக்குத் தள்ளிவிட்டாற்போல் ஒரு மயக்கம் அவளைச் சூழ்ந்து கொண்டது. அவன் அவள் அதரங்களை ஒற்றினான்.

காஷ்மீர் பள்ளத்தாக்கிலிருந்து வந்த பனி இரவிருந்து எழுச்சி பெற்று லேசான ஆலாபனையைத் தொடங்கிற்று. மேகத்திரையில் விளங்கிய நட்சத்திரங்கள் பியானோ மெட்டுக்கள் ஆயின. குளிர்காலத்து காற்றுத் துளைகளாக்கிக் கொண்டாற்போல் வந்து வீசிற்று. அது ஹம்சத்வனி இல்லை. மோகனமும் இல்லை. அவ்விருவரும் அப்படியே

வெகு நேரம் இருந்தார்கள். நான்கு உதடுகள் கூடி ஐந்து நிமிஷ முத்தமாய் மாறி ஆறு ருதுக்களிலிருந்தும் சக்தியைப் பெற்று ஏழு வர்ணங்களுடன் சங்கமமாகி, எட்டு திசைகளுக்கும் காதல் கீதமாய் பரவிற்று. அவள் அவனிடமிருந்து விலகி இந்தப் பக்கமாய்த் திரும்பினாள்.

அவனும் ஏஜெண்ட் நேத்ராவாகி விட்டான். அவள் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

அவன் ஆச்சரியமடைந்தவனாய், "அழுகிறாயா. இப்போது என்னவாகி விட்டது?" என்றான்.

அவள் இதழ்களைப் புடவைத் தலைப்பால் ஒற்றிக்கொண்டே, "கல்யாணமாகமலேயே தன் சகலத்தையும் அர்ப்பணித்துவிட்ட எந்தப் பெண்ணுமே இதுபோல்தான் அழுவாள் இல்லையா?' என்றாள்.

அவன் வியப்போடு, "சகலத்தையும் அர்ப்பணிப்பதா?" என்று கேட்டான்.

"ஆமாம். கல்யாணமாகாமல் கற்பை இழப்பது தவறு இல்லையா?"

"இல்லை ரேகா! நான் மனப்பூர்வமாய் காதலித்துதான் உன்னை முத்தமிட்டேன். இது தவறு என்றால் இந்தத் தவறில் எனக்கும் பாதி பங்கு உண்டு. "கற்பு" "அர்பணிப்பு" என்ற பெரிய பெரிய வார்த்தைகள் எல்லாம் எதுக்கு?"

அவள் திரும்பினாள். அவன் அவளைத் தொடர்ந்து வந்துகொண்டே, "இந்தப் புடவையில் நீ ஒரு அன்னம் போலவே இருக்கிறாய்" என்றான்.

அவள் சிரித்துவிட்டு, "நான் எப்போது இந்தப் புடவை கட்டிக் கொண்டாலும் அக்கா கூட அப்படித்தான் சொல்லி என்னை அழவைப்பாள். பெயருக்குத் தகுந்தாற்போல் அசல் அன்னத்தைப்போல் இருக்கிறாய் என்று. நீங்களும் அதேபோல் சொல்றீங்க" என்றாள்.

"பெயருக்கும் புடவைக்கும் என்ன சம்பந்தம்?"

"அம்சரேகா என்றால் அன்னம் என்று அர்த்தமில்லையா?"

"அம்சரேகாவா?"

"என் பெயர்."

"உன் பெயரா?"

“பெயரே தெரியாதா? ஓஹோ! என் முழு பெயரும் உங்களுக்குத் தெரியாது இல்லையா. அம்சரேகா” என்றாள்.

“சுவர்ணரேகா இல்லையா?” திகைப்படைந்தான்.

“என் அக்கா பெயர் சுவர்ணரேகா. என் பெயர் அம்சரேகா.”

வானமே இடிந்து தலைமேல் விழுந்தாற்போலிருந்தது அவனுக்கு.

## 20

“எப்படி நடந்தது, எப்படி நடந்து இது?” அவன் ஆவேசத்தால் அந்த அறை அதிர்ந்தது.

டிபார்ட்மென்ட் ரிகார்டு ரூமில் நேத்ரா கத்திக் கொண்டிருந்தான். பிரதிமா கூட அதே தொனியில் பதிலளித்தாள்.

இருவருக்குமிடையே ரிகார்டு கிளார்க் அஹோபிலா திருதிருவென்று விழித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

“என் தவறு எதுவுமே இல்லை. இதெல்லாம் உன் தவறு. நான் ஃபைலில் இதையெல்லாம் விவரமாய் எழுதியிருந்தேன். தங்கை அப்பாவிப் பெண் என்றும், அக்கா பெயர் சுவர்ணரேகா என்றும்.”

பிரதிமா சொல்லிக் கொண்டிருந்த போதே, “ஸ்டாப் நான்சென்ஸ்” என்று கத்தினான். “ஃபைலைப் படிக்கிறதெல்லாம் எனக்கு வழக்கமில்லை. போட்டோவைத் தா என்று நான் கேட்டபோது தந்தாயே.”

“நான் சரியான போட்டோவைத்தான் தந்தேன். உரையில் வைத்து உரையின் மேல் ரேகா என்று பெயர் எழுதியிருந்தேன்.”

“சரியாய் தந்தாயா? அஹோபிலா! அந்த ஃபைலை எடு.”

அதற்குள் பயந்து போய் விட்டிருந்த அஹோபிலா பதற்றத்துடன் ரேக்கில் இருந்த ஃபைலை எடுத்துத் தந்தாள்.

அவன் முதல் பக்கத்தைத் திறந்து அதிலிருந்த ரேகா என்ற கவரை எடுத்து உள்ளேயிருந்த

போட்டோவை வெளியே எடுத்துப் பார்த்துவிட்டு, “இதென்னது?” என்று கேட்டான்.

அவள் அதைப் பார்த்ததும் அதிர்ந்து விட்டாள். அதில் அம்சரேகாவின் போட்டோ இருந்தது.

*****

“ஆமாம்மா. அந்த பதற்றத்தில் எனக்கு என்ன செய்வது என்றே தோன்றவில்லை. இன்னொரு கவரில் இரண்டு போட்டோக்கள் இருந்ததைப் பார்த்துவிட்டு, அதிலிருந்து ஒன்றை எடுத்து இதில் வைத்தேன். உன்னுடைய தாத்தா மாவட்ட தாசில்தராய் இருந்த காலத்தில் கூட ஒரு முறை இதேபோல் நடந்தபோது...”

“பாட்டீ....பாட்டீ.....பாட்டீ! பேசாதே. நீ செய்த காரியத்திற்கு இன்று எங்கள் டிபார்ட்மென்ட்..” என்று ஏதோ சொல்ல வந்தாள் பிரதிமா.

பக்கத்திலிருந்து நேத்ரா குறுக்கிட்டு, “அந்தம்மாளை எதுக்குச் சொல்கிறாய்? சீக்ரெட் ஃபைலை சில்க் புடவைகளுக்கு நடுவில் வைத்த உன் புத்தியைச் சொல்லணும்” என்றான்.

“இப்போ என்ன நடந்துவிட்டது?

“என்ன நடந்து விட்டதா? வீணாய் ஒரு அப்பாவிப் பெண்ணைக் காதலில் இழுத்து, முத்தம் கொடுக்க நேர்ந்தது. நம்முடைய நேரமும் பாழாகி விட்டது. டிபார்மெண்ட்டின் கண்ணோட்டத்தில் நாமிருவரும் முட்டாளாகி விட்டோம்.”

“ஒன்றும் குடி மூழ்கிவிடவில்லை. பார் நேத்ரா! யுத்தத்தில் நிறையப் பேர் அப்பாவிகள் மடிந்து போகிறார்கள். அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இது ரொம்பச் சின்ன விஷயம்.”

“எது? முத்தமிடுவதா?”

“ஆமாம்.”

“உன்னைப் போன்றவளுக்கு இது ரொம்பச் சின்ன விஷயமாய் இருக்கலாம்.”

“என்ன சொன்னாய்?”

“சொல்லுவேன். எவ்வளவு தடவை வேண்டுமானாலும் சொல்லுவேன். வாழ்க்கையில்

நேர்மை உடைய எந்தப் பெண்ணுக்குமே இது சின்ன விஷயமில்லை.”

“இதையெல்லாம் பார்த்தால் நீயே இதில் ஆர்வம் காட்டுகிறாய் போல் தோன்றுகிறது. இதையெல்லாம் என்னிடம் விட்டுவிடு. நான் போய் சொல்கிறேன்.”

நேத்ரா எரிச்சலுடன் பார்த்தான்.

“என்ன சொல்லுவாய்?”

“இதையெல்லாம் பண்ணியது நான்தான் தாயே. என்னை மன்னித்து விடு. முத்தம்தானே? துடைத்துக்கொண்டால் போய் விடும் என்பேன். என் உத்தேசத்தின்படி அந்தப் பெண் இதற்குள் எல்லாவற்றையும் மறந்து போயிருப்பாள்” என்று முடித்தாள் பிரதிமா.

*****

அம்சரேகா கன்சல்டிங் அறையில் பயந்தவாறு உட்கார்ந்திருந்தாள். ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அவளுக்கு அழைப்பு வந்தது. சாதாரண கேள்விகளைக் கேட்ட பிறகு டாக்டர் கேட்டார்.

“யாரும்மா அவன்?”

“நேத்ரா என்ற என் நண்பன். மீதி விவரமெல்லாம் நான் கேட்கவில்லை. எதிர் ஃபிளாட்டில் இருக்கிறான். காலையில் போய் பார்த்தேன். அவன் இல்லை. பூட்டி இருந்தது. ஆனாலும் இதில் அவன் தவறு எதுவும் இல்லைங்க. நள்ளிரவில் நான்தான் அவனை என் வீட்டுக்கு அழைத்தேன். இதில் தவறு ஏதாவது இருந்தால் அது என்னுடையதுதான்.”

“அபார்ஷன் ரெகமெண்டெட் இல்லைம்மா. அது சரி எத்தனை மாதம்?”

“மாதமா?”

“ஆமாம்மா.”

“இது செப்டம்பர் இல்லையா. ஒன்பதாவது மாதம்.”

“அந்த மாதம் இல்லையம்மா நான் கேட்டது. இப்போ உனக்கு எத்தனாவது மாதம் என்று?”

“நீங்கள் என்ன சொல்றீங்க என்று புரியவில்லை டாக்டர் எனக்கு.”

டாக்டருக்குக் ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. அந்தப் பெண்ணின் தந்தையை நினைத்துக் கோபத்தை அடக்கிக் கொண்டார்.

நயமாய், “அதாம்மா.. ஐ மீன் இது நடந்து எவ்வளவு நாளாயிற்று?” என்று கேட்டார்.

“எது? முத்தமிடுவதா?”

“அதான். முத்தமும் அந்த சரச சல்லாபமும்.” கடைசி வார்த்தையை அழுத்திச் சொன்னார். அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.

“நேற்றிரவு டாக்டர்” என்றாள்.

ஸ்டெதஸ்கோப் நழுவி விழுந்தது. “நேற்றிரவு நடந்ததற்கு இன்றைக்கு கர்ப்பம் என்று சந்தேகம் வந்துவிட்டதா?” அதிர்ந்து போய் கேட்டார்.

“நாம் ஜாக்கிரதையாய் இருக்கிறது நல்லதில்லையா டாக்டர்.” தாழ்வான குரலில் கேட்டாள்.

“பாரும்மா. நீ மகளைப் போன்றவள். இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லாதே. அவன் உன்னைத் திருமணம் பண்ணிக் கொண்டால் சரி. இல்லாவிட்டால் இந்த விஷயம் உனக்குள்ளேயே ரகசியமாய் புதைந்து போயிடணும். அவன் தென்படாமல் போனது காலையிலிருந்துதான் என்று சொல்கிறாய். அதனால் இன்னும் கொஞ்ச நாள் பொறு. அதற்குள் அவன் தென்பட்டால் சொல்லு. உங்கப்பாவோடு நான் பேசுகிறேன். இல்லாவிட்டால் ரெண்டு மூணு மாசமான பிறகு பார்ப்போம்.”

அம்சரேகா எழுந்திருந்தாள். ஆஸ்பத்திரி சுவரில் மாட்டப்பட்டிருந்த குடும்பக் கட்டுபாட்டு விளம்பரத்தில் ஆணும் பெண்ணும் முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவள் அந்தப் படத்தையே பார்த்தாள்.

குழந்தையின் அழுகை வயிற்றுகுள்ளிருந்து கேட்டது.

*****

“யார் நீங்க?” கேட்டான் பிரசிடென்ட்.

விலையுயர்ந்த ஓட்டலில் வராண்டா அது. அவனை அழைத்துச் சென்று கொண்டிருந்த அவர்கள் பதில் பேசவில்லை. ஒரு அறைக்குள் நுழைந்தார்கள். லக்சரி

சூட் அது. அதிலிருந்த பர்னிச்சர் மட்டுமே ஐந்தாறு லட்சம் இருக்கும்.

உள்ளே உட்கார்ந்திருந்தார் பூஷணம்.

"எதுக்கு அழைத்து வந்தீங்க இங்கே என்னை?"

"உட்காரு."

"யாரய்யா நீ?"

"உன்னிடம் வேலை பண்ணிய வேதகிரிதான் நேத்ரா என்று உனக்குச் செய்தி சொல்லியனுப்பியவன் நான்தான்."

பிரசிடென்ட் சந்தேகம் விடுபட்டு முகம் மலர்ந்தான்.

"ஓ... நீங்கள்தானா அந்தச் செய்தியைச் சொல்லியனுப்பியது. பலே ஆபீசரய்யா. கத்தி போன்ற இளைஞன். என்னிடம் என்னமாய் நாடகமாடினான். நானே ஏமாந்துவிட்டேன்" என்றான் மெச்சிக்கொண்டு.

"அந்தக் கத்தியை இனிமேல் பிரயோஜனப்படாமல் பண்ணிவிட வேண்டும்."

"என்ன சொன்னாய்?"

"ஏஜெண்ட் நேத்ராவை இன்று மாலையில் நீ கொல்லணும்." சர்வ சாதாரணமாய்ச் சொன்னான்.

"கொல்லணுமா? நாக்கை அறுத்து விடுவேன். நான் யார் என்று தெரியுமா? தஞ்சாவூர் தொரை! சோழனை எதிர்த்த வம்சத்தில் பிறந்தவன்."

போன் மணி அடித்தது. பூஷணம் நிதானமாய் ரிசீவரை கையிலெடுத்துக்கொண்டு தான் கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றாற்போல் பிரசிடென்டிடம் தந்துவிட்டு, "கேள்" என்றார்.

ஒரு சிறுவனின் குரல், "அப்பா!" என்று மறுமுனையிலிருந்து கேட்டது. பிரசிடென்டிற்கு முதலில் புரியவில்லை. புரிந்ததுமே, "நரசிம்மா" என்று கத்தினான்.

"நாந்தாம்பா." மறுமுனையிலிருந்து எட்டு வயது சிறுவனின் வார்த்தைகள் இன்னும் முடிவதற்குள்ளாகவே அச்சிறுவனுக்குப் பின்னாலிருந்த க்யூ, ஊசியால் அவன் முதுகில் குத்தினான். "அ...ப்...பா!" என்ற கத்தல் கேட்டது.

"என்னடா? என்னவாச்சு? எங்கேயிருந்தடா பேசுகிறாய்?" குரலில் துக்கம் பொங்க கிரீச்சென்று

கத்தினான் பிரசிடென்ட்.

“அப்...பா” சிறிய முனகல் அழுகை. க்யூ கையில் ஒட்டிக் கொண்டிருந்த ரத்தத்தைத் துடைத்துக்கொண்டான் மறுமுனையில்.

பிரசிடென்ட் பூஷணத்திடம், “தொரை! இதென்னது? என் மவன் அழுவுறானே?” என்று தீனமாய் கேட்டான்.

“எங்களிடம் தான் இருக்கிறான். நீ எங்கள் வேலையைப் பண்ணாவிட்டால் சாவதற்குத் தயாராய் இருக்கிறான்.”

“டேய் கொலைக்காரா” என்று பிரசிடென்ட் அவன்மேல் பாயப்போனான். பின்னாலிருந்து கழுத்தில் விழுந்தது அடி. முகத்திற்கருகில் போனும் விழுந்தது. ரிசீவரிலிருந்து, “அப்பா,, அப்பா...” என்று இதயத்தைப் பிழியும்படியாய் கத்திக் கொண்டிருந்தான் மகன்.

பூஷணம் எழுந்து போனை சரியாய் வைத்தார். பிரசிடென்டிடம் போய் அவனை சிநேகப்பூர்வமாய் எழுப்பி நிறுத்தினார்.

“புரிந்ததா? உன் மகன் உனக்கு உயிருடன் திரும்ப கிடைக்கணும் என்றால் இதோ இந்த மருந்தை நேத்ராவின் காபியில் கலக்கணும்.”

“எதுக்கு? இதென்னது?”

“விஷம்... கொல்வதற்கு.” இரண்டு கேள்விகளுக்குமாய் ஒரே பதிலைச் சிரித்தார் பூஷணம். “உன் மூலமாய் நடந்தால் வேலை வெகு சுலபமாய் முடிந்து விடும். இல்லையா?”

“டேய் உன்னை” என்றான் பிரசிடென்ட்.

“நில். மாலைக்குள் இந்தக் காரியம் முடிந்து விட்டது என்று சொல்லாது போனால் அங்கே உன் மகனின் உடம்பு துளைக்கப்பட்டு விடும். புதைக்கக் கூட முடியாத அளவிற்குத் துண்டு துண்டாய் போய் விடும். அதிகமாய் பேசுவது எனக்குப் பிடிக்காது. யோசித்துப் பார்த்துவிட்டு எது நன்றாய் இருக்கோ அதைப் பண்ணு. போலீசுக்கு சொல்லணும் என்று தோன்றினால் சொல்லு. எனக்கு ஆட்சேபணை இல்லை. உன் இஷ்டம்.”

*****

பிரதிமா அந்த வீட்டிற்குள் நுழைந்தபோது உள்ளேயிருந்து கணபதி வெளியே வந்து கொண்டிருந்தார். அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டு உள்ளேயிருந்த மனைவியிடம், “பார்வதி! சகுனம் நன்றாயிருக்கு. சீக்கிரமாய் வா” என்று கத்தினார். பிரதிமா சிரித்துக்கொண்டே, “இதென்னது? நீங்ககூட சகுனத்தை நம்புகிறீர்களா?” என்று கேட்டாள்.

“இல்லையம்மா. இன்று மாலை சர்க்கஸுக்குக் கிளம்புவதற்குக் காலையிலிருந்தே தயாராகி கொண்டு இருக்கிறாள். இப்படிக் சொன்னாலாவது வருவாளோ என்றுதான்” என்று சிரித்தார்.

அதற்குள் பார்வதி அங்கே வந்தாள். “என்னம்மா? நீயும் சர்க்கசுக்கு வரா?” என்று கேட்டாள்.

“எங்கள் சீக்ரெட் ஏஜெண்டுகளுக்கு தினந்தினம் சர்க்கஸ்தான். இனி ஸ்பெஷலாய் பார்க்கிறதுக்கு வேறேன்ன இருக்கு? நேத்ரா இல்லையா?”

“உள்ளே இருக்கிறான்” என்று சொல்லிவிட்டு அத்தம்பதிகளிருவரும் போய் விட்டார்கள்.

பிரதிமா உள்ளே போனாள். நேத்ரா தனியாய் உட்கார்ந்திருந்தான். கல்யாணி துணிகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தாள்.

“எங்கேயிருந்து வருகிறாய். ஃபிளாட்டிலிருந்தா?”

“ஆமாம். அந்தப் போனுக்குப் பக்கத்தில் இருக்க வேண்டிய ட்யூட்டி என்னுடையதாச்சே?”

“ஏதாவது முக்கியமான போன் பண்ணினானா பூஷணம்?”

“ஒன்றுமில்லை. மாலை ஆறுமணிக்கு சர்கஸுக்குப் போகிறான். ‘நம் ஆட்களை ரெடியாய் இருக்கச் சொல்லு. நான் வந்துகொண்டு இருக்கிறேன்’ என்று யாருடனோ சொல்லிக் கொண்டிருந்தான்.”

நேத்ரா சிரித்துவிட்டு, “அவ்வளவு பெரிய வியாபாரப் புள்ளிக்கு சர்க்கஸ் பார்க்க நேரம் எப்படித்தான் கிடைத்ததோ?” என்றான்.

அதற்குள் கதவிற்கருகில் சந்தடி கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். பிரசிடென்ட் உள்ளே வந்து கொண்டிருந்தான்.

“என்ன செளக்கியமா?’ நேத்ரா கேட்டான்.

அவன் பதில் பேசவில்லை. அவன் முகத்தில் பிரேதக்களை தென்பட்டது. கண்கள் ஒளியிழந்து காணப்பட்டன.

“சுற்றிச்சுற்றி களைத்துப் போய்விட்டாற்போல் இருக்கு. காபி குடிக்கிறாயா?” என்று கேட்டான் நேத்ரா. பிரதிமா கல்யாணியிடம் போய் உதவி பண்ணத் தொடங்கினாள்.

பிரசிடென்ட் பதில் பேசாமல் இருந்ததைப் பார்த்துவிட்டு, “ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?” திரும்பவும் கேட்டான் நேத்ரா.

“ஒன்னுமில்லை. சும்மாத்தான்.”

“ஊருக்கு எப்போ போகிறாய்?”

“வேலை ஆனதும் போக வேண்டியதுதானே?”

நேத்ரா மேஜை மேலிருந்த பாக்கெட்டை அவனிடம் தந்து, “உன் பையனுக்கு இது. பேசும் பொம்மை. வேலைக்காரன் வேதகிரி கொடுத்தான் என்று சொல்லு. சொல்லுவாயா தொரை?” என்று கேட்டான், பழைய நாட்களை நினைவுப் படுத்திக்கொண்டு.

பிரசிடென்ட் உணர்ச்சியற்றவன் போல் பார்த்தான்.

“சொல்லு தொரை! மகனிடம் சொல்லுவாய் இல்லையா” என்று சிரித்தான் நேத்ரா.

அவன் அதைப் பெற்றுக்கொண்டு, “தொரை! இவ்வளவு நாளாய் எனக்கு சேவை பண்ணினாய். இப்போ நான் உனக்கு பண்றேன்” என்று எழுந்திருந்தான். “நானே உனக்கு காபி கொண்டாறேன்.”

நேத்ரா தடுத்து நிறுத்தி, “ச்சீ... நீ பண்றதா? வேண்டாம்” என்றான். அதற்குள் அவன் உள்ளே போய் விட்டான்.

## 21

நேரம் ஐந்தரை ஆயிற்று.

ஸ்டவ்வின் மேல் பால் காய்ந்து கொண்டிருந்தது. மேலே அலமாரியில் காபிப்பொடி பாட்டில் இருந்தது. அதை எடுத்துக்கொண்டு, சர்க்கரைக்காக பக்கத்திலிருந்த டப்பாவைக் கையிலெடுத்தான்.

பிரசிடென்ட் சுற்றும் முற்றும் பார்த்தான். அவன் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. சமையலறையில் யாருமில்லை. பால் காய்ந்து கொண்டிருந்த சப்தத்தைத் தவிர வேறெந்த ஓசையும் இல்லை.

கொதித்துக் கொண்டிருந்த பாலில் காபிப் பொடியைப் போட்டான். ஜேபியிலிருந்து பொட்டலத்தை வெளியே எடுத்துப் பிரித்தான். உள்ளே கறுப்பு நிறத்தில் பவுடர் இருந்தது. காபியை இரண்டு கோப்பைகளில் ஊற்றினான். ஸ்பூனைக் கையிலெடுத்துக் கொண்டான்.

பொட்டலத்தில் இருந்த பவுடரை ஒரு கப்பில் போடப் போனபொழுது, “அது சர்க்கரை இல்லை” என்று கேட்டது பின்னாலிருந்து. திடுக்கிட்டான். அவன் இதயம் ஒரு வினாடி நின்றுவிட்டாற்போல் இருந்தது. கையிலிருந்த பொட்டலம் நடுங்கிற்று.

பின்னாடி கல்யாணி சிரித்தபடியே நின்று கொண்டிருந்தாள். பிரசிடென்ட்டின் முகம் கறுத்துவிட்டது. “இது... இது” என்றான் கையிலிருந்த பொட்டலத்தை மறைக்க முயன்று.

“பாட்டி எப்போதுமே இதுபோலதான். சர்க்கரை என்று எழுதியிருக்கும் டப்பாவில் மிளகாய்த் தூளைப் போட்டு வைப்பாள். நீங்கள் என்ன கலக்குறீங்க காபியில்?”

“நானா... நானா?” தடுமாற்றமடைந்தான்.

அவள் நெருங்கி வந்து அலமாரியிலிருந்து தேடி இன்னொரு பாட்டிலைக் கையிலெடுத்துக் கொண்டாள். “இதுக்கு மேலே புளி என்று எழுதியிருந்தால் இது சர்க்கரை. படியுங்கள்”

“எனக்குப் படிக்க வராது.”

“பலே! உங்களுக்குப் படிப்பு வராததால் படிக்க முடியாது. எனக்குக் கண் தெரியாததால் படிக்க முடியாது. எப்படியிருக்கு?”

பிரசிடென்ட் அப்பொழுதுதான் பார்த்தான், அவளுக்குக் கண் பார்வை இல்லாததை. அவன் முகத்தில் நிம்மதி பரவிற்று,

“ஒரு குருடனுக்கு மற்றொரு குருடன் வழிகாட்டியது போல் என்று ஆங்கிலத்தில் பழமொழியை நம்மைப்

பார்த்துவிட்டுத்தான் எழுதியிருப்பார்கள்” என்று சிரித்துவிட்டு மூடியைத் திறந்தாள்.

“சர்க்கரையை கப்பில் போடுங்கள். ஆறு மாதம் ஒருத்தரோடு சகவாசம் பண்ணினால் இருவரும் ஒன்றாகி விடுவார்களாம். ஆறுமாதம் உங்களுக்கு சேவை பண்ணிய அண்ணா இப்போ உங்களுக்கு தொரை ஆகிவிட்டான்னு சொல்லுங்க. இந்த விதமாய் நன்றியைத் தீர்த்துக் கொள்கிறீங்களா?”

விஷத்தை ஒரு கப்பிலும், சர்க்கரையை மற்றொரு கப்பிலும் போட்டுவிட்டு, “ஆமாம் தொரைசானி” என்றான்.

அவள் ஸ்பூனால் இரண்டு கோப்பைகளையும் கலக்கினாள்.

அவள் ட்ரேயை எடுத்துச் செல்ல முயன்றபோது அவன் “நான் கொண்டுபோகிறேன்” என்றான்.

“அண்ணா சொன்னபோது என்னவோ என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ரொம்ப செண்டிமெண்ட் ஆள்தான் நீங்க.”

அவன் ட்ரேயைக் கொண்டு வைத்துவிட்டு, “செண்டிமென்டா?” என்றான்.

“அடுத்தவர்கள் நமக்கு எவ்வளவு பண்றாங்களோ அதுக்கு ரெண்டு மடங்கு நாம் அவங்களுக்கு பண்றதை செண்டிமெண்ட் என்பார்கள்.”

பிரசிடென்ட் ட்ரேயுடன் முன் அறைக்கு வந்தான்.

“நீ எதுக்கு இவ்வளவு சிரமப்பட்டாய்?”

“பரவாயில்லை தொரை” என்று ட்ரேயை இருவருக்குமிடையே வைத்து விட்டு நின்றான்.

நேத்ரா கோப்பையைக் கையிலெடுத்துக்கொண்டு, “ஆமாம். சர்க்கரை குறைவாக சாப்பிடணும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார் இல்லையா? அதே போலவே போட்டாயா?’ என்று கேட்டான்.

பிரசிடென்ட்டின் கண்கள் ஈரமாயின.

“உனக்கு இன்னும் அதெல்லாம் ஞாபகமா இருக்கா தொரை” என்றான்.

“பலே ஆள்தான். மறப்பேனா? ஒருமுறை சர்க்கரை அதிகமாய் போடலைன்னு அடித்தாயே?” என்று சிரித்துவிட்டு கோப்பையைக் கையிலெடுத்துக் கொண்டான்.

இந்தக் கடைசி வார்த்தையைக் கேட்டு அவன் ஒரு தீர்மானத்துக்கு வந்தான். இருவரும் கோப்பைகளைக் கையிலெடுத்துக் கொண்டு குடிக்கத் தொடங்கினார்கள்.

“தொரை!” என்றான் பிரசிடென்ட்.

நேத்ரா வியப்போடு பார்த்தான். அவன் அவ்வாறு பேசியது அதுதான் முதல் தடவை. “உன்னைக் கொல்லாது போனால் அவர்கள் என் மகனைக் கொன்று விடுவார்களாம். தொரை! இப்பவே பாதி கொன்று விட்டார்கள். திரும்ப பீரங்கியாலே துளைக்கப் போறாங்களாம். நீ குடிக்கிற காபியில் விஷம் கலக்கச் சொன்னாங்க.”

நேத்ரா சிலையாய் உட்கார்ந்து விட்டான். மின்னல்களுக்கிடையே மேகம் தென்பட்டாற்போல் பிரசிடென்ட்டின் முகத்தில் விதம் விதமான உணர்வுகள். பயம், கருணை, இரக்கம, திகில்... பிரதிபலித்துக் கொண்டிருந்தன.

பிரதிமாவும் கல்யாணியும் சலனம் ஒடுங்கிப்போய் உட்கார்ந்து விட்டார்கள். பிரசிடென்ட் நாற்காலியின் கைப்பிடியை அழுத்தமாய் பற்றிக் கொண்டான். ஒவ்வொரு வார்த்தையாய் வலுகட்டாயமாக வெளியே வந்தது.

“எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. என் மகன் சாகப் போறது நிச்சயம். என் ஒரே மகன் செத்து விட்டால் என்னால் பொழைக்க முடியாது. அதுக்காக உன்னைக் கொல்ல மாட்டேன். அதனால்.... அதனால...”

நேத்ராவுக்கு ஏதோ சந்தேகம் வந்தது. சட்டென்று நாற்காலியை விட்டு எழுந்து அவனிடம் வந்து, “அதனால்?” என்றான்.

நேத்ரா அவனைப் பிடித்துக்கொண்டான். பிரசிடென்டின் வாயிலிருந்து நுரை வெளிவந்தது.

“நான் செத்தால் என்னவாகி விடும் துரை? நான் காய்ந்த சருகு. நீ வாழணும். நீ நாட்டுக்கு அவசியம்

தேவை. எனக்கு சந்தோஷமாய் இருக்கு தொரை. உன்னைக் காப்பாத்திட்டேன். என் மகனைக் காப்பாத்திட்டேன். நான் செத்துப் போனால் என் மகனை விட்டு விடுவார்கள்.” அவன் வார்த்தைகள் முடியக்கூடவில்லை.

“நோ... நீ சாககூடாது. உன்னை எப்படியாவது காப்பாற்றி விடுவேன்” என்று நேத்ரா அவனைப் பிடித்துக் கொண்டான். “பிரதிமா. கவிக்! ஆம்புலென்ஸ்க்கு போன் பண்ணு.”

*****

மாலை ஆறுமணி ஆனதை கடியாரம் மணிடித்து உணர்த்திற்று.

சர்க்கஸ் மும்முரமாய் நடந்து கொண்டிருந்தது.

வாமனமூர்த்தி, கணபதி, பார்வதி எல்லோரும் முன் வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள். சிறுவர்கள் ஆரவாரமாய் கைதட்டிக் கொண்டிருந்தார்கள். பபூன்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு காலத்தில் ரஷ்ய தூதராயிருந்த வாமன மூர்த்தியும், தற்சமயம் ரஷ்ய தூதராய் இருந்து வரும் ஸ்டான்ஸலவஸ்கி இருவரும் அருகருகில் உட்காந்து கொண்டிருந்தார்கள். இரு பக்கங்களிலும் செக்யூரிடிகள் இருந்தனர்.

*****

அவன் உடலுக்குள் சலைன் செலுத்தப்பட்டது. நேத்ரா அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். பிரதிமா அருகில் இருந்தாள்.

நேத்ரா பிரசிடெண்டையே பார்த்துக் கொண்டிருந்தான். இன்னும் மரணத்தின் கடை வாயிலில் நின்று போராடிக் கொண்டிருந்தற்போல் இருந்தது அவன் முகம்.

“என் மகனை பீரங்கியாலே துளைத்தெடுக்கப் போறாங்க” என்ற குரல் இன்னும் எதிரொலித்துக் கொண்டே இருந்தது. ஆஸ்பத்திரி ஜன்னலுக்கப்பாலிருந்து பேண்டு வாத்திய சப்தம் கேட்டது. வெளியே பார்த்தான். “ரஷ்யன் சர்க்கஸ்” விளம்பர ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

“மாலை ஆறுமணிக்கு பூஷணம் சர்க்கசுக்குப் போகிறார். “நம் ஆட்களைத் தயாராக இருக்கச் சொல்லு. நான் வந்துகொண்டு இருக்கிறேன்” என்று பூஷணம் சொன்னதாய் பிரதிமா தெரியப்படுத்திய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. அப்பொழுது பூஷணத்தைப் போன்றவர்கள் சர்க்கசுக்குப் போவதா என்று சிரித்துக் கொண்டான்.

மணி ஆறடிதது.

சர்க்கஸ்... பீரங்கி.... சர்க்கஸ்...

நேத்ராவின் மூளையில் ஏதோ பளிச்சிட்டாற் போலிருந்தது.

“பிரதிமா! இன்னிக்கு வாமன் மூர்த்தி சர்க்கசுக்குப் போகிறாரா?” என்று கேட்டான்.

“ஆமாம்.”

“ஸ்டான்ஸ்லவஸ்கி கூட போகிறார் இல்லையா?”

“ஆமாம். ஏன்?”

“மை காட்!” என்று ஒரே பாய்ச்சலில் அங்கிருந்து வெளியே ஓடினான்.

அடுத்த வினாடி அவன் கார் ஆஸ்பத்திரி காம்பவுண்டிலிருந்து வேகமாய் வெளியேறிற்று. அவன் யோசனைகளை அதையும் விட வேகமாய் ஓடிக் கொண்டிருந்தன.

இந்தியாவிலுள்ள ரஷ்யன் தூதர் ஸ்டான்ஸ்லவஸ்கியையும். வாமன மூர்த்தியையும் கொன்றுவிட்டால் அந்தப் பக்கம் எதிரி நாட்டிற்கும், இந்தப் பக்கம் பூஷணத்திற்கும் லாபம். இந்தியா ரஷ்ய உறவு கொஞ்சமாவது கெடும். பல நாட்களாகவே ரஷ்ய தூதரைக் கொல்ல முயற்சிகள் நடந்து வருகின்றன. இந்த கொலைகளால், தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பண்ண முடியாமல் போய்விட்டது என்று அரசாங்கத்தின் மீது விமரிசனங்கள் வரும்.

பாதுகாப்பு வளையத்தைக் துளைத்துக்கொண்டு பீரங்கி குண்டு வெடித்து சர்க்கஸ் புரியும் சிறுவனும் அவர்களோடு சேர்ந்து மாண்டுவிடுவான் போலும்.

“ஹேட்ஸ் ஆஃப் டு யுவர் ப்ளான் க்யூ” என்றெண்ணிக் கொண்டான் நேத்ரா தனக்குள். நேரம்

ஏழு மணியாயிற்று. சர்கஸில் பீரங்கி ஐட்டம் எப்போது என்று நேத்ராவுக்கு தெரியாது. கார் அம்பாய் பறந்து கொண்டிருந்தது.

ரிங் மாஸ்டர் புலிகளையும், சிங்கங்களையும் நாற்காலியில் உட்கார வைத்துக்கொண்டிருந்தார். இன்னொரு மூலையில் பபூன் சிங்கத்தின் வாலைப் பிடித்து இழுத்து விட்டு, அது உறுமவே, குட்டிக்கரணம் போட்டுகொண்டே ஓடினான்.

சிறுவர்கள் வயிறு குலுங்கச் சிரித்தார்கள்.

ஆனந்தமும் உற்சாகமும் கொப்பளித்துக் கொண்டிருந்தன அவ்விடத்தில். அரசாங்கத்தில் மிக உயர்ந்த பதவி வகித்து வந்தவர்களுக்காகவே ஏற்பாடு செய்திருந்த ஸ்பெஷல் ஷோ அது. வெளிநாட்டு இலாக்காவின் தலைமை அதிகாரி, டிஃபென்ஸ் செகரெட்ரி எல்லோரும் தத்தம குடும்பங்களுடன் வரிசையாய் உட்கார்ந்திருந்தார்கள். நடுவில் வாமனமூர்த்தி.

அதற்குள் நான்கு பேர் உள்ளே இருந்து பீரங்கியைக் கொண்டு வந்தார்கள். பபூன் அதில் ஏறி உள்ளே இருந்து வெளியே குதித்தான். திரும்பவும் சிரிப்பு அலை!

அதே சமயத்தில் பூஷணம் எழுந்து பின் பக்கமாய் போனார்.

வாமனமூர்த்தி குனிந்து கணபதியிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். எட்டு வயது சிறுவனை அங்கே அழைத்து வந்தார்கள். பட்டாம் பூச்சியைப் போல் மேக்கப் போடப் பட்டிருந்தான் அச்சிறுவன். தகர உடம்புடன், தங்கத்தாலான இறக்கைகளுடனும் உடையலங்காரம் பண்ணப் பட்டிருந்தது அவனுக்கு. முகத்தில் பறவையின் முகமூடி இருந்தது. அதே சமயத்தில் நேத்ராவின் கார் காம்பவுண்டிற்குள் நுழைந்தது.

பூஷணம் பீரங்கிகளுக்குப் பின்னாலிருந்த குண்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். பின்னாலிருந்த கையாள் அதை மாற்றிவிட்டு வேறொன்றை அவ்விடத்தில் வைத்தான். மெதுவாய் பீரங்கியின் திசை

ஆகாயத்திலிருந்து வாமனமூர்த்தி பக்கமாய் திருப்பப்பட்டது. அதை யாருமே பொருட்படுத்தவில்லை. விளையாட்டில் அது ஒரு பகுதி என்றெண்ணிக் கொண்டார்கள்.

அதே சமயத்தில் நேத்ரா காரை விட்டிறங்கி ஓட்டமும் நடையுமாக உள்ளே வரப் போனான். கேட்டிற்கருகில் போலீசார் அவனைத் தடுத்து நிறுத்தினார்கள்.

“இது ஸ்பெஷல் ஷோ. இன்வைட்டீஸ்களுக்கு மட்டும்தான்” என்று போலீஸ் ஆபீசர் அவனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டார். நேத்ரா வாதாடவில்லை. வாதாடிக் கொண்டிருக்க இது நேரமில்லை.

உள்ளேயிருந்து மைக்கில் கேட்டுக் கொண்டிருந்தது.

“திஸ் ஈஸ் தி டைம் ஃபர் கேனன் ப்ளோ அப்! {பீரங்கி மூலமாய் சிறுவன் வெடிப்பு ) தி கிரேடேஸ்ட் ஷோ ஆன் எர்த்.”

நேத்ரா சர்க்கஸ் கூடாரத்தின் பின்பக்கமாய் ஓடினான். சிறுவனை பீரங்கிக்குள் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அவன் முதுகோடு மினியேச்சர் எக்ஸ்ப்ளோஸிவ் பொருத்தப் பட்டிருந்தது. முகத்திற்கு மாஸ்க் இருந்ததால் அவன் முகத்தில் தோன்றிய உணர்வுகளைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. வாமனமூர்த்தி கணபதியுடன் பேசிக் கொண்டிருந்தார்.

நேத்ரா கூண்டுகளுக்கிடையே நின்று கொண்டிருந்தான். சிங்கங்களும், புலிகளும் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தன. சில உருமின. கயிறுகளும், துணிகளும், கழிகளும் தாறுமாறாய் விழுந்து கிடந்தன.

அவற்றைத் தாண்டிக்கொண்டு அவன் உள்ளே நுழைந்தான். பூஷணம் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். எஞ்சிய மக்களுக்கு அவர் தென்படாதவாறு திரை மறைவில் நின்று கொண்டிருந்தார். அந்தக் காட்சியில் பங்கெடுத்துக் கொள்ளாத எஞ்சிய சர்க்கஸ் கலைஞர்கள் எல்லோரும் விங்கிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள் விதம் விதமான அலங்காரங்களில் இருந்தார்கள். உண்மையில்

அந்த பீரங்கியில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய சிறுவன் பட்டாம்பூச்சி சிறுவன் உடை அலங்காரத்துடன் இருட்டில் தூணோடு கட்டிப் போடப் பட்டிருந்தான்.

கருப்பு முகத்திரையுடன், ‘தலையாரி” வேஷத்திலிருந்த கையாள் பீரங்கிக்கு நெருப்பைப் பற்ற வைத்தான்.

அதே சமயத்தில் உள்ளே வந்த நேத்ராவின் பார்வை ட்ரபீஜ் கயிறு மேல் பட்டது. அவற்றின் உதவியுடன் அவன் காற்றில் எம்பினான்.

பத்து, இருபது, நாற்பது, ஐம்பது அடி உயரம் காற்றில் பறந்தான். பீரங்கி வெடித்ததுமே அதிலிருந்து சிறுவன் அம்பாய் வெளியே வந்தான். வாமன மூர்த்தியை நோக்கி அவன் உடல் பந்தைப் போல் சுருண்டு வேகமாய் போய்க் கொண்டிருந்தது.

வானத்தில் பறந்து கொண்டிருந்த பறவையை மேலிருந்து வந்த கழுகு பிடித்துக் கொண்டாற்போல் நேத்ரா காற்றிலேயே அச்சிறுவனைப் கைப்பற்றினான். அதே வேகத்தில் அவன் முகுகிலிருந்த வெடிகுண்டையும் எடுத்து காற்றில் உயரே வீசியெறிந்தான். சர்க்கஸ் கூடாரத்தின் மேற்புறம் வரையிலும் போய் அது பெருத்த ஓசையுடன் வெடித்தது. அந்த எதிர்பாராத சம்பவம் திடீரென்று அவ்விடத்தில் சலசலப்பைத் தோற்றுவித்தது. மக்கள் பெரிதாய் கூச்சலிட்டுக்கொண்டு அங்கிருந்து வெளியேற பரபரப்புடன் முயன்றதால் அல்லோல கல்லோலமாகி விட்டது.

அதற்குள் நேத்ரா பிரசிடென்டின் மகனைப் பிடித்துக்கொண்டே அதே வேகத்தில் பின்னுக்குப் போனான். பீரங்கிக்கருகில் கருப்பு முகத்திரை போட்டுக் கொண்டிருந்த தலையாரியைப் போன்ற ஆள் கூடாரத்திற்குப் பின்பக்கமாய் போய்க் கொண்டிருந்தது தென்பட்டது. நேத்ரா அவனுக்குப் பின்னால் ஓடினான். ஆனால் பக்கத்தில் சிறுவன் இருந்ததால் அவனால் வேகமாய் ஓட முடியவில்லை. தொலைவில் தீயணைக்கும் இஞ்சின் வந்து கொண்டிருந்த ஓசை கேட்டது.

மக்கள் கத்தியும் கூச்சலிட்டுக் கொண்டும் ஓடிக் கொண்டிருந்தார்கள். தீயைப் பார்த்துவிட்டு கூண்டுக்குள் இருந்த மிருகங்கள் தரை அதிரும்படி கத்திக் கொண்டிருந்தன.

நேத்ரா துப்பாக்கியை எடுத்தான். முகத்தில் இருந்த திரையை விலக்கிவிட்டு ஓடிக்கொண்டிருந்த ஆள் திரும்பினான்.

அவன் ஏஜெண்ட் க்யூ!

நேத்ரா துப்பாக்கியைக் குறிபார்த்துச் சுட்டான். ஆனால் க்யூ அதையும் விட வேகமாய் கூண்டின் கதவைத் திறந்து விட்டான். தீயின் நிறத்திற்கு பயந்த புலி வேகமாய் வெளியே பாய்ந்தது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு க்யூ கூடாரத்திற்குப் பின்பக்கமாய் ஓடினான்.

அதற்குள் தீயின் சூட்டிற்கு யானைகள் கட்டுத்தரியைத் தாண்டி வெளியே வந்தன. பிரசிடென்ட்டின் மகன் அவற்றிற்கிடையே சிக்கிக் கீழே விழுந்துவிட்டான்.

நேத்ரா விட்டுவிட வில்லை. எப்படியாவது க்யூவைப் பிடித்து விட வேண்டும் என்ற உறுதியோடு, பாய்ந்து வந்து கொண்டிருந்த மிருகங்களை விலக்கிக்கொண்டு முன்னுக்கு ஓடினான். கூடாரத்தின் அந்தப் பக்கமாய் வரிசையாய் இரும்புக் கம்பத்தில் குதிரைகள் கட்டப் பட்டிருந்தன. க்யூ அதன் இணைப்பை அவிழ்த்துவிட்டு விடவே குதிரைகள் வேகமாய் மக்களை நோக்கி ஓடி வரத்தொடங்கின. அவை மக்களிடம் போய்ச் சேர்ந்துவிட்டால் நெரிசல் ஏற்பட்டு விடும்.

## 22

நேத்ரா தயங்காமல் காற்றில் துப்பாக்கியைச் சுட்டான். தன் துப்பாக்கியில் இருந்தவை ஆறே குண்டுகள் என்றும், க்யூவை வேட்டையாடுவதற்கு அவை இன்றிமையாதவை என்றும் அவனுக்குத் தெரியும்.

ஆனால் ஒரு வெளிநாட்டு உளவாளியைவிட தம் நாட்டு மக்களின் க்ஷேமம் முக்கியம்.

அவன் மேலும் இரண்டு முறை சுட்டான்.

அந்த சத்தத்திற்கு குதிரைகள் அதே வேகத்தில் திரும்பின. ஒரே நேர்கோட்டில் முனை திரும்பி வேறுபக்கமாய் போய் விட்டன. பிரசிடென்ட்டின் மகனின் கால் கூடாரத்தோடு கட்டியிருந்த கயிற்றிற்கிடையே சிக்கிக்கொண்டு விட்டது. கூண்டைவிட்டு வெளியே வந்த புலி அவனைச் சுற்றிச்சுற்றி வந்தது. மனிதர்களிடையே இருந்த போதிலும் அந்தத் தீயும், அச்சூழ்நிலையும் அதனை பைத்தியம் பிடிப்பது போல் செய்து கொண்டிருந்தன. காதுகள் பிளந்து போகும்படியாய் கத்திக் கொண்டிருந்தது. சிறுவன் பயந்து போய் ஓலமிட்டுக் கொண்டிருந்தான். ஆனால் மக்களின் கூக்குரலில் அது கேட்கவில்லை.

நேத்ரா இதைக் கவனித்தான். ஆனால் அவன் கொஞ்சம் இந்தப் பக்கமாய் வந்து விட்டாலும் போதும் அந்த பக்கமாய் ஓடி வந்து கொண்டிருந்த யானைகள் மக்கள் இருந்த பக்கமாய் வந்து விடும்.

தீ சிறுவனை நோக்கி வந்து கொண்டிருந்தது.

அதே சமயம் நேத்ராவின் பார்வை வாட்டர் டேங்கின் மேல் பட்டது. பதினைந்தடி உயரமுள்ள தூணின் மேல் டிரம்மை கட்டி தற்காலிகமாய் பார்வையாளர்களுக்காக தண்ணீர் வசதி பண்ணியிருந்தார்கள். நேத்ரா தயங்காமல் அதைச் சுட்டான்.

பம்பிலிருந்து வெளி வந்தாற்போல் தண்ணீர் பீறிட்டது. எதிர்பாராத இச்சூழ்நிலைக்கு புலி பின்வாங்கியது. தீயின் தீவிரம் குறைந்தது.

சரியாய் அதே சமயத்தில் க்யூ கூடாரத்திற்குப் பின்புறமாய் வந்து காரை நோக்கி ஓடினான். நேத்ரா குறிபார்த்துச் சுட்டான். ஆனால் அதற்குள் துப்பாக்கியில் குண்டுகள் தீர்ந்து விட்டன. க்யூ காரில் ஏறி வேகமாய் போய்விட்டான். பின்னாலிருந்து சிரிப்புச் சத்தம் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தான் நேத்ரா.

பூஷணம் சிரித்துக் கொண்டிருந்தார்.

“இப்போ புரிந்துவிட்டது. நீ வேதகிரி இல்லை என்றும், இந்திய சீக்ரெட் ஏஜெண்ட் நேத்ரா என்றும்.”

தொலைவில் நெருப்பணைக்கும் இஞ்சின் தீயை அணைத்துக் கொண்டிருந்தது. மிருகங்களை சர்க்கஸ் ஆட்கள் திரும்பவும் பழைய இடத்தில் கொண்டுபோய் சேர்த்துக் கொண்டிருந்தார்கள்.

“கங்கிராட்ஸ்! பிரசிடென்ட்டின் மகனைக் காப்பாற்றியதற்கு. ஆனால் ஆபத்து இத்துடன் நீங்கி விட்டதென்று சந்தோஷப்படாதே. ஒவ்வொரு நிமிஷமும் அது உன்னைத் துரத்திக்கொண்டே வரும்.”

“உனக்கு இன்டர்போல் ஏஜெண்ட் விஷயம் அவ்வளவாய் தெரியாது போலிருக்கு பூஷணம். ஆபத்து இல்லாவிட்டால்தான் அவர்களுக்கு வருத்தம்.”

“அப்படியா. அப்படி என்றால் வாமன மூர்த்தியை எப்படியும் கொல்லப் போகிறோம். காப்பாற்றுகிற முயற்சியில் திரும்பவும் இன்னொரு தடவை சிக்கிக்கொள்.”

“பாவம்! அவரை எதுக்குக் கொல்லணும்? உங்களுக்கு அவ்வளவு உதவி பண்ணிய அவரை எதற்காக கொல்லணும்?”

“உதவியா?”

“வெளிநாட்டிலிருந்து அமிலங்களை வரவழைக்கிற உன் ஃபைலில் அவர் இன்று காலையில் கையெழுத்திட்டார். அந்த விஷயம் தெரியாமல் நீ அவரைக் கொல்ல முயன்றாய்.”

பூஷணம் வியப்போடு, “நான் நம்பவில்லை” என்றார்.

“நீ நம்ப முடியாத விஷயங்கள் வெகு சீக்கிரத்திலேயே நிறைய நடக்கப் போகின்றன பூஷணம். அவற்றை நீ கண்ணாரக் காணப் போகிறாய்.”

“ரொம்ப மனக்கோட்டை கட்டுகிறவன் போலிருக்கு நீ. எதை நிரூபிக்க முடியும் உன்னால். உன்னைக் கொல்லுவதற்கு நான் பிரசிடென்ட்டைப் பயன்படுத்தினேன். நிஜந்தான். உன் ஆட்களால் நிரூபிக்க முடியுமா? இந்த நாட்டை எதிரி நாட்டின் ஆதீனத்திற்குள் கொண்டு போகப் போகிறேன்.. நிரூபிக்க முடியுமா உன்னால்?”

நேத்ரா துப்பாக்கியோடு அவரை நெருங்கினான். அவன் முகத் தோற்றத்தைப் பார்த்துவிட்டு பூஷணம் பின்னுக்கு நகர்ந்தார். பின்னால் மிருகங்களின் கூண்டுகள் இருந்தன.

நேத்ரா சட்டென்று கதவைத் தூக்கி அவரை உள்ளே தள்ளினான். “நான் உன்னைக் கொல்வதற்காக உள்ளே தள்ளினேன். உண்மைதான். நிரூபிக்க முடியுமா உன்னால்? உன்னை என் துப்பாக்கிக் குண்டால் துளைக்க விரும்பினேன். நிரூபிக்க முடியுமா உன்னால்? இப்பொழுது உன் உடம்பிலுள்ள தசைகளை எல்லாம் அந்தப் புலி தின்று விட்டால் அதற்குக் காரணம் நான்தான். நிரூபிக்கமுடியுமா? விஷ் யூ லாங் லைஃப் இன் ஹெவன் பூஷணம். குட் பை” என்று அங்கிருந்து போய்விட்டான்.

பூஷணம் திரும்பிப் பார்த்தார்.

கூண்டிற்குள் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்த புலி உள்ளே வந்த வேற்று பிராணியைப் பார்த்துவிட்டு எழுந்து வந்தது.

கத்தக்கூட துணிச்சல் இல்லாமல் சிலையாய் பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

முகத்திலிருந்து வியர்வை ஆறாய் பெருகியது.

பிரசிடென்ட்டின் மகனை அழைத்துக்கொண்டு நேத்ரா காரை நோக்கி வந்தான். அவனைக் காரில் ஏற்றிவிட்டுத் தானும் ஏறிக்கொண்டான். காரைக் கிளப்பிக்கொண்டு நகரத்தை நோக்கிப் புறபட்டான்.

புலி ஓரடி முன்னோக்கி வைத்தது.

இந்திய அரசாங்கத்தையும், அமெரிக்க கோர்ட்டுகளையும் கூட எதிர்த்து நிற்கவல்ல அந்த தொழில் மேதை, எஞ்சியவர்களைப் போலில்லாமல் கையாட்களின் உதவியின்றி, தானே சுயமாய் எதிரிகளின் உயிரை எடுக்கும் அந்த பசுத்தோல் போர்த்திய புலி, எதிரே இருந்த உண்மையான புலியைப் பார்த்துக் கத்துவதற்கு கடைசி முயற்சி பண்ணினார்.

தொலைவில் தீயணைக்கும் எஞ்சினின் ஓசை கேட்டது.

நீரின் சப்தத்திற்கு முன்னால் மனிதனின் குரல் காதில் விழுவது கஷ்டம்.

*****

“போய் வருகிறேன் தொரை” என்றான் பிரசிடென்ட், மகனோடு வந்து வணக்கம் தெரிவித்துவிட்டு.

நேத்ரா தலையாட்டினான். அவன் நேத்ராவிடம் வந்தான். கண்கள் கசிந்திருந்தன.

“நான் உன்னைக் கொல்ல எண்ணினேன் தொரை. நீ என்னையும் என் மகனையும் காப்பாற்றி விட்டாய்.” அவன் தொண்டை அடைத்துக்கொண்டது.

“இதில் நான் பண்ணியது என்ன இருக்கு?” என்று சொல்ல வந்தான் நேத்ரா. அதற்குள் பார்வதியின் அழுகுரல் கேட்டது. எல்லோரும் பதறிப் போய் உள்ளே ஓடினார்கள்.

உள்ளே கணபதி மனைவியிடம், “அவர்கள் நல்லபடியாக புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது இதென்ன அழுகை?” என்று கண்டித்துக் கொண்டிருந்தார்.

பிரசிடென்ட் அவரைப் பதற்றத்தோடு பார்த்து, “என்ன ஆச்சுங்க?” என்று கேட்டான்.

“என் மனைவிக்கு இதெல்லாம் பழக்கப் பட்டதுதான். எனக்கு இதில் நாற்பதாண்டு அனுபவம் இருக்கு. பதறத் தேவையில்லை” என்று மனைவியை நோக்கித் திரும்பி, “என்ன ஆச்சு?” என்று கேட்டார்.

“அந்த பீரங்கி மட்டும் நிஜமாகவே வெடித்திருந்தால் என்னவாகிப் போயிருப்போம்” என்று விசும்பத் தொடங்கினாள்.

“இரண்டு பேரும் செத்திருப்போம்” என்றார் அலுப்படைந்து.

“நீங்கள் கொஞ்சம் இடது பக்கமாய் தொலைவில் உட்கார்ந்திருந்தீங்க. அந்தப் பக்கமாய் வெடித்திருந்தால்?”

“விதவையாகி விட்டிருப்பாய்.” வெறுப்போடு சொன்னார் இம்முறை.

“இன்றைக்கு ஆடி வெள்ளிக்கிழமை. அது நினைவுக்கு வரவே அழுகை வந்துவிட்டது” என்று

அழுகையைத் தொடர்ந்தாள்.

“எப்பொழுதோ நான்கு நாட்களுக்கு முன்னால் நடந்ததை நினைத்து இப்பொழுது அழுகை எதற்கு?” என்று அவர் வியப்படைந்தார். கல்யாணி சிரிப்பை அடக்கிக் கொண்டாள். நேத்ரா சொன்னான்.

“பாட்டீ! உன்னைப் போன்றவங்களைத்தான் இங்கிலீஷில் டி.டி. (D.T.) என்பாங்க. டவுட்டிங் டாம் என்று. ஒவ்வொன்றையும் அந்த மாதிரி யோசித்துப் பார்த்துட்டு எப்போப் பார்த்தாலும் கவலைப் பட்டுக்கொண்டே இருக்காதீங்க. அது ஆரோக்கியத்துக்கு அவ்வளவு நல்லதில்லை.”

அவன் சொன்னது உண்மைதான் என்று பட்டது கல்யாணிக்கு.

பிறவிக் குருடான அவளால் உலகத்தைப் பார்க்க முடியவில்லை. ஆனால் மனித சுபாவங்களைப் பார்க்க முடிந்தது. சிலர் எப்பொழுதும் ஏதாவது நடக்கப் போகிறது என்றோ, ஆபத்து ஏற்படப் போகிறது என்றோ பயந்து கொண்டிருப்பார்கள். ஸ்டேஷனுக்குப் போய்ச் சேரும் வரையிலும் ரயில் போய் விட்டிருக்குமோ என்னவோ என்ற பயம். இறங்கியதும் ரிக்ஷா கிடைக்காதோ என்ற பயம்.. இது போன்றவர்கள் தாமும் சுகப்பட மாட்டார்கள் பிறரையும் சுகப்படுத்த மாட்டார்கள்.

நேத்ராகூட அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தான். உண்மையில் இந்த பாட்டியுடன் தாத்தா நாற்பதாண்டு காலம் குடும்பம் நடத்தியிருக்கிறார் என்றால், ஹேட்ஸ் ஆஃப் டு ஹிம்! மிகச் சிறிய பிரச்சினை போல் தோன்றும். ஆனால் தினம் தினம் தாங்கிக்கொள்ள வேண்டி வரும்போதுதான் பிரச்சனையில் ஆழம் தெரியவரும்.

“ஒரு குளிர் காலத்து இரவில் நல்ல ரொமாண்டிக் மூடில் இருக்கும் போது, “இறுக அணைத்துக் கொண்டாலும் குறைய மாட்டேங்கிறது இல்லையா எலும்பை வதைக்கிற இந்தக் குளிர்” என்கிற போது, அந்த இல்லாள், “ஐயோ! இந்தக் குளிருக்குப் பால் தோயுமோ தோயாதோ. நாளைக்கு தயிருக்கு என்ன பண்றதுங்க?”

என்று திருப்பிக் கேட்டால், அது போதாதா வாழ்க்கையிடம் விரக்தி ஏற்படுவதற்கு

நேத்ரா யோசித்துக் கொண்டிருந்த போது பிரசிடென்ட் அவனிடம் வந்து, “போய் வருகிறேன்” என்றான்.

“சரி.”

“எங்கள் ஊருக்கு எப்போ வர்றீங்க?”

“எனக்கு ஓரிரு மாதங்கள் வேலை இருக்கு. அது முடிந்ததும் வருகிறேன்.”

“கண்டிப்பாய் வரணும்.”

“கண்டிப்பாய்.”

அவர்கள் போய் விட்டார்கள். நேத்ரா அவர்கள் போன திசையையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். எந்தெந்த சம்பவங்களுக்கு தொடர்பு இருக்கும் என்று யாராலுமே சொல்ல முடியாது.

அவன் வேதகிரி உருவத்தோடு அவர்கள் வீட்டில் வேலை செய்தது அந்தத் தந்தை, மகன் இருவரையுமே மரணத்தில் விளிம்பிற்குக் கொண்டு சென்று விட்டது.

ஒருக்கால் இதைத்தான் “வேளை” என்கிறார்களோ.

கணபதி கேட்டார். “யாருடைய கேசு? இன்னும் இரண்டு மாதம் வேலை இருக்கு என்றாயே?”

“பூஷணத்தின் வேலையாய் கடல் பயணம் போக வேண்டியிருக்கும் தாத்தா.”

திரும்பவும் பெருத்த குரலில் அழுகை சப்தம் கேட்டது.

“என்ன ஆச்சு பாட்டீ?” என்று கேட்டாள் கல்யாணி பதறிப்போய்.

நேத்ரா பதில் சொன்னான். “இந்த கடல் பயணமும் திமிங்கல வேட்டையும் எதற்கு? ஏதாவது ஆகி விட்டால்? என்று அழுது கொண்டிருக்காங்க போலிருக்கு. இல்லையா?”

அவள் தலையாட்டினாள்.

என்ன பண்ணுவதென்று அங்கிருந்த யாருக்குமே தெரியவில்லை. அவள் கணவர் கோபமாய், “நிஜமாய் நீ நினைக்கிறதே நடந்து நான் இந்த உலகத்திலிருந்து

போய்ச் சேர்ந்தால் தான் உன்னைவிட்டு இந்த அழுகை போகும் போல் இருக்கு” என்றார்.

“ஐயோ! ததாஸ்து தேவதைகள் இருக்கப் போறாங்க. ஆடி வெள்ளிக் கிழமையும் அதுவுமாய் எந்த ததாஸ்து தேவதை உங்க வாயால் இதைச் சொல்ல வைத்ததோ தெரியவில்லையே. கடவுளே!”

அவர் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார். “ஒரு பக்கத்தில் பயம் பயம் என்று அழுகிறாய். இன்னொரு பக்கத்தில் அந்த பயம் நிஜம் ஆகி விடக் கூடாதே என்று அழுகிறாய். உன்னோடு மாரடிக்க முடியவில்லை என்னால்” என்றார்.

சரியாய் அதே சமயத்தில் பிரதிமா அங்கே வந்தாள். “பூஷணத்தை இன்றைக்கு ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்கிறார்கள்” என்றாள்.

நேத்ரா தலை அசைத்துவிட்டு, “நான் கேட்ட டிரான்ஸ்மீட்டரைத் தயாராய் வைத்திருக்கீங்களா?” என்று கேட்டான்.

அவள் அதை அவனிடம் கொடுத்தாள். நாலணா சைஸில் இருந்தது அது. மிக சக்தி வாய்ந்த டிரான்ஸ்மீட்டர்.

*****

நகரத்திலேயே மிகப் பெரிய ஆஸ்பத்திரியின் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார் அவர். சுற்றிலும் பத்திரிக்கை நிருபர்கள்.

“மிஸ்டர் பூஷணம். நீங்கள் பண்ணிய சாகசத்திற்குப் பாராட்டுக்கள்.”

“உங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் மிக ஆபத்தானவை என்றும், நீங்கள் செய்த நல்ல காரியந்தான் உங்களைக் காப்பாற்றி இருக்கிறது என்றும் நாங்கள் நினைக்கிறோம். இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?”

“இந்த சம்பவம் உங்களுக்கு எந்த மாதிரி உணர்வை ஏற்படுத்தியது?”

பத்திரிகை நிருபர்கள் ஆஸ்பத்திரி படுக்கையைச் சூழ்ந்துகொண்டு கேள்விமாரி பொழிந்தார்கள்.

பூஷணத்தின் வலது கால் மேலே தூக்கி வைக்கப் பட்டிருந்தது. கையில் பேண்டேஜ் இருந்தது.

நிருபர்களின் கேமராக்கள் பளிச்சிட்டன. எல்லோரும் கேள்வி அம்புகளைத் தொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இரவு எட்டுமணிக்கு சர்க்கஸ் கூடாரம் எரிந்த விஷயமும், குண்டு வெடித்த விஷயமும் பத்திரிக்கை நிருபர்களுக்குத் தெரிந்தது. உயிர் இழப்பு எதுவும் ஏற்படாததால் அது பெரிய விஷயமாய் தென்படவில்லை. சிறிய எழுத்தில் செய்தியாய் வெளி வந்திருந்தது. அவ்வளவுதான்.

ஆனாலு சுமார் ஒன்பரை மணி வாக்கில் பூஷணத்தின் செகரெட்ரி என்று சொல்லிக்கொண்டு ஒரு ஆள் இந்தச் செய்தியை வெளியிட்டான். இந்த செகரெட்ரி என்ற ஆசாமி யார் என்று பூஷணத்துக்குத் தலையை பிய்த்துக் கொண்டாலும் தெரியவில்லை. ஆனாலும் செய்தி சாதகமாக இருந்ததால் அவர் அதைப்பற்றி அவ்வளவாய் பொருட்படுத்தவில்லை.

“ஒரு சிறுவன் தவறுதலாய் கூடாரத்திற்கு பின் பக்கமாய் வந்து அந்த அல்லோல கல்லோலத்தில் புலிகளுக்கிடையே சிக்கி விட்டான். சமயத்தில் அந்தப் பக்கமாய் ஓடிய பூஷணம் உயிரையும் பொருட்படுத்தாமல், அச்சிறுவனைக் காப்பாற்றினார். அந்த முயற்சியில் அவருக்குக் காயங்கள் ஏற்பட்டதன.”

அச்செய்தி வெளிவந்ததுமே பத்திரிகைகள் சுறுசுறுப்பாகி விட்டன. பூஷணத்தைப் போன்ற பிரபலமான ஒருவர் சம்பந்தப்பட்ட எந்த செய்தியுமே பத்திரிகைகளுக்கு முக்கிய சேதிதான். அதுவும் புலியை எதிர்ப்பது!

நிருபர்கள் ஆஸ்பத்திரிக்கு படையெடுத்து விட்டார்கள். அப்பொழுது அவர் இன்னும் அதிர்ச்சியிலிருந்து முற்றிலும் மீளவில்லை. டாக்டர்கள் அனுமதி தரவில்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு வரச் சொன்னார்கள். செய்தி அதுவரையிலும் நிற்காது.

அதற்கு மறுநாள் பத்திரிகைகளில் இச்செய்தி பெரிய எழுத்துகளில் வெளிவந்து விட்டது. அதன்

பலன்தான் இரண்டு நாட்களுக்குப் பிறகு இந்த ‘இன்டர்வியூ’ ஆனால் அவர் இந்த இன்டர்வ்யூவைத் தர விரும்பவில்லை. சுருக்கமாய் பதில் சொன்னார்.

டாக்டர்கள் நிருபர்களை அனுப்பி வைத்து விட்டார்கள். நெருங்கிய உறவினர்களையும் மகள்களையும் மட்டுமே இருக்கும்படிச் சொன்னார்கள். அவர்கள்கூட பாராட்டுக்களைத் தெரிவித்துவிட்டுப் போய்ச் சேர்ந்தார்கள்.

## 23

பூஷணம் கண்களை மூடிக் கொண்டிருந்தார். இந்த காயங்கள் ஆறுவதற்கு எப்படியும் ஒரு மாத காலம் ஆகலாம். அவர் மனம் ஆத்திரத்தால் கொதித்தெழுந்தது. கைக்குப் போடப்பட்டிருந்த பேண்டேஜைப் பார்த்துக் கொண்டார். டாக்டர் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு கட்டியிருந்தார் அதை.

நகரத்திலேயே மிகப் பெரிய ஆஸ்பத்திரி அது. தன் பணம் டாக்டரை அதிக ‘அக்கறை’ எடுத்துக்கொள்ள வைத்திருந்தது என்று எண்ணிக் கொண்டார். ஆனால் அதற்கு மறுபக்கத்தில் நேத்ரா இருந்து வந்தான் என்றும், பணத்தை விட அதிகாரமும் (முக்கியமாய் சி.பி.ஐ.க்கு இருந்த அதிகாரம்) அதிகாரத்தைவிட, கெட்டிக்காரத்தனமும் உயர்ந்தவை என்றும் அவர் ஊகித்திருக்கவில்லை.

அன்று அவருக்கு டாக்டர் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த பொழுது நேத்ரா பக்கத்திலேதான் இருந்தான். அவனுக்கு இன்னும் கொஞ்ச நேரத்தில் நினைவு திரும்பவிருந்த போது தனக்கு வேண்டிய காரியத்தை நேத்ரா டாக்டர் உதவியோடு முடித்துக் கொண்டன்.

பூஷணத்தின் கையில் அவருக்குத் தெரியாமலேயே பேண்டேஜுடன் கூட ஒரு புதிய பொருள் அவர் உடம்புக்குள் பொருத்தப் பட்டது. அவருக்கு அந்த விஷயம் தெரிய வழியில்லை.

அவர் அவ்வாறு கண்களை மூடிக்கொண்டிருந்த பொழுது கைமேல் ஒரு கை படிந்தது. கண்களைத் திறந்து

பார்த்தார். எதிரே நேத்ரா நின்று கொண்டிருந்தான். “நீயா?” கோபமாய் கேட்டார்.

“சர்க்கஸில் சிறுவனைக் காப்பாற்றியது நீதான் என்ற செய்தியைப் பத்திரிகைகளுக்குச் சொன்னது நான்தான்” என்றான் நேத்ரா.

“என் செகரெட்ரி அல்லவா சொன்னான்?”

“ஆமாம். உன் செகரெட்ரியாய் நான்தான் சொன்னேன்.

“எதுக்கு?”

“பாராட்டு என்பது எத்தனை சக்தி வாயந்தது என்று தெரிந்தாலாவது நீ மாறுவாய் என்று நான் நினைக்கிறேன். நீ பண்ணாத போதிலும், குறைந்தது நீ பண்ணினாய் என்ற செய்தியாவது எவ்வளவு பேரிடமிருந்து உனக்குப் பாராட்டுகளைக் கொண்டு வந்து குவிக்கிறது என்று பார்! சுயநலத்தை விட பாராட்டு உயர்ந்தது பூஷணம்.”

“துப்பாக்கியை தூக்கி எறிந்துவிட்டு புத்தரைப் போல் நடந்துகொள்ளத் தொடங்கி விட்டாய் என்று சொல்.” ஏளனமாய் சொன்னார் பூஷணம்.

“துப்பாக்கி மூலமாய் முயற்சி பண்ண வேண்டி வந்தால் சுயநலத்தோடுகூட உன்னையும் கிளப்ப வேண்டியிருக்கும் பூஷணம். விஷயம் அவ்வளவு தூரத்துக்கு வந்தால் அதிலிருந்து எப்படியும் தப்பிக்க முடியாது. ஆனால் சட்டத்தின் எல்லைக்குள் உன்னை வரவழைக்க வேண்டும் என்பதுதான் என் எண்ணம். உன் மூலமாய் ஏஜெண்ட் க்யூவின் விவகாரத்தைக் கண்டு பிடிக்கணும். உன் மேலிருக்கிற கேசுகளை எல்லாம் வாபஸ் வாங்கிக்கொண்டு விடுகிறோம். ஏஜெண்ட் க்யூ இந்தியாவுக்கு எந்த உத்தேசத்துடன் வந்திருக்கிறான் என்று மட்டும் சொல்லிவிடு.”

பூஷணம் சிரித்துவிட்டு, “என் கால்களில் விழுந்து கெஞ்சவும் தயாராகி விட்டாயா?” என்றார்.

“இல்லை. கடைசி யுத்தத்திற்கு இறுதி தூது வந்திருக்கிறேன். முற்றிலுமாய் நாசமடைவதற்குள்ளாகவே ஒரு நல்ல முடிவை எடுத்துக்கொள். நீ பெரிய வியாபார நிர்வாகி. சரியான

சமயத்தில் எடுத்துக் கொண்ட முடிவைக் காட்டிலும் சரியானது வேறில்லை. உன்னை நீ காப்பாற்றிக் கொள்வதன் மூலமாய் மக்களைக் காப்பாற்றுவது என்ற விஷயத்திற்குக் கடைசி சான்ஸ் தருகிறேன். நல்ல மனிதனாய் இரு பூஷணம்.”

பூஷணம் சிரித்தார். “மனிதனால் சுயநலத்திற்கு எவ்வளவு அழுத்தமாய் கோட்டிங் கொடுக்க முடியுமோ அவ்வளவு நன்றாய் தன் பக்கமாய் நியாயத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும் நேத்ரா! அரசாங்கத்திற்கு உதவுவதற்காக நீ லைசென்ஸ்ட் கொலைகளைப் பண்ணுகிறாய். என் அந்தஸ்துக்காகவும், பணத்திற்காகவும் நான் கொலைகள் பண்ணுகிறேன். மிஸ்டர் நேத்ரா! இந்த மக்களைப் போன்ற அப்பாவிகள் வேறு யாரும் இல்லை. கடைசி வெற்றி தர்மத்திற்குத்தான் என்று இவர்கள் நம்பிக்கொண்டு இருப்பார்கள். வரப்போகும் அந்த வெற்றியை ஆர்வத்தோடு எதிர்பார்த்துக்கொண்டு இருப்பார்கள். அது எப்போதுமே கைக்கெட்டாத தூரத்தில் தென்பட்டுக்கொண்டு இருக்குமே தவிர நிரந்தரமான வெற்றி மட்டும் எப்பொழுதும் தீயவைக்குத்தான். இந்தத் தீயவை என்பது பொதுவான சொல். அரசியலிலிருந்து வியாபாராம் வரைக்கும் எல்லாத் துறைகளிகும் அது கலந்தே இருக்கும். எப்பொழுதோ இறுதியில் வரும் கடைசி வெற்றி எனக்கு வேண்டாம். அதர்மமாயிருந்தாலும் சரி, நிரந்தர வெற்றிதான் வேண்டும்.”

நேத்ரா அவனைக் கூர்ந்து பார்த்தான். “ரொம்ப சரியாய் சொன்னாய்.”

“என் லாஜிக்கைப் புரிந்து கிட்டதற்கு நன்றி.”

நேத்ரா நிதானமாய், “நீ சரியாய் சொன்னாய் என்றது உன் லாஜிக்கைப் பற்றி இல்லை. முதலில் சொன்ன மனசாட்சியை வஞ்சித்துக் கொள்வது பற்றி” என்றான்.

பூஷணத்தின் முகம் தொய்ந்து விட்டது.

நேத்ரா எழுந்தான். “பாராட்டுகளால் உன் மனம் மாறிவிடும் என்று நினைத்தது என் தவறு. சம்மட்டியால்

அடித்தாலே யொழிய அது மாறாது. சீக்கிரத்திலேயே உனக்கு அதைப் போன்ற அதிர்ச்சி வைத்தியம் தரப் போகிறேன். பார்த்துக்கொண்டிரு.”

“அதைவிட பெரிய அதிர்ச்சி உனக்கும், உன் நாட்டு மக்களுக்கும் ஏற்படப் போகிறது. பார்த்துக் கொண்டிரு. அந்த முயற்சிக்கு முதல் படியாய் வெளிநாட்டிலிருந்து வரப் போகும் அமிலமே உதாரணம். நீங்கள் எல்லோருமாய் சேர்ந்தும் கூட அந்த அமில இறக்குமதியைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே.” சிரித்தார்.

நேத்ராவும் சிரித்துவிட்டு, “உனக்கு நேரப்போகிற அதிர்ச்சி அந்த அமிலத்திலேயே கூட இருக்கலாம் அல்லவா?” என்று ஓரடி முன்னுக்கு வந்து, “உனக்கு எப்போ வேண்டுமானாலும் என்னால் அதிர்ச்சி கொடுக்க முடியும் பூஷணம்! உன்னோடு இவ்வளவு தூரமாவது பேசுகிறேன் என்றால் அதற்குக் காரணம் எனக்கும் க்யூவுக்கு இடையே நீ ஒரு லிங்க் ஆனதால்தான்.”

“அனாவசியப் பேச்சால் நேரத்தை வீணடிப்பதில் விருப்பமில்லை எனக்கு. பார்த்து விடுவோம். யாரை யார் முதலில் என்ன பண்ணுகிறார்கள் என்று. நான் இன்னும் அரை மணிகெல்லாம் என் ஃபேக்டரிக்குப் போகப் போகிறேன் கால்கட்டை எடுத்ததுமே. அதற்கப்புறம் தொழில் மேதைகளுடன் மீட்டிங் இருக்கு. மாலையில் ஹோம் செகரெட்ரியோடு மீட்டிங். இரவு கவர்னரின் கூட்டத்தில் முக்கியமான விருந்தாளி. இத்தனைக்கும் நடுவில் நான் எந்த நிகழ்ச்சியில் இருக்கும் போது அதிர்ச்சி தருவது என்று யோசித்துக்கொள்.”

“சரி. நானும் என் இன்றைய நிகழ்ச்சி நிரல் சொல்கிறேன் கேளு. இப்பொழுது வீட்டிற்குப் போனதுமே சாப்பிடுவேன். மூன்று மணிக்கு உன் இளைய மகளோடு சினிமாவுக்குப் போவேன். ஆறுமணிக்கு உன் பெரிய மகளைச் சந்தித்து மார்ஜுவானா பார்ட்டி தரப் போகிறேன். மூன்றாவது டிகிரியைப் பயன்படுத்தாமலேயே ரகசியங்களைக் கக்க வைக்கிறேன். எட்டுமணிக்கு அரெஸ்ட் வாரண்டுடன்

உன்னிடம் வரப் போகிறேன். என் நிகழ்ச்சி நிரல் எப்படி இருக்கு?”

நேத்ரா அங்கிருந்து வெளியே வந்து விட்டான்.

பூஷணத்தின் முகம் ரத்தம் சுண்டிவிட்டாற்போல் வெளுத்து விட்டது.

சுவர்ணரேகாவை நேத்ரா அணுகும் முன்பே இந்த விஷயத்தை ஏஜெண்ட் க்யூவுக்கு எப்படித் தெரியப்படுத்துவது என்று யோசித்தார். குழம்பத் தொடங்கினார்.

நேத்ராவுக்கு வேண்டியதும் அதுதான்.

செய்யப் போகிறேன் என்ற காரியத்தைச் செய்யாவிட்டாலும், செய்வது போலவே நாடகத்தை உருவாக்கி, எதிரியை மனதளவில் தளர்ந்து போகும்படி பண்ணுவது ஒரு கலை. யுத்தத்தில் எல்லாவற்றையும் விட மிக நன்றாய் பயன்படக் கூடிய ஆயுதம், எதிரியின் பயம்!

‘உடனுக்குடன் எதிரியைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக எதிர் பாராத புதிய முறைகளைப் பற்றி யோசி. என்பது இரண்டாவது பாடம்! அந்தப் பாடத்தின் ஒரு பாகமாகத்தான் பூஷணத்தின் கையில் பேண்டேஜ் கட்டும் பொழுது அதில் டாக்டரைக் கொண்டு சீக்ரெட் ட்ரான்ஸ்மீட்டர் ஒன்றை வைக்கச் சொல்லியிருந்தான் நேத்ரா. பூஷணம் இருக்கும் மிடத்தையும், எங்கெங்கு போகிறான் என்பதையும் துல்லியமாகக் காட்டும் கருவி அது.

*****

மிகக் சிறிய சந்து அது. இருட்டாய் இருந்தது. ஆண்களே கூட அந்த சந்தில் தனியாய் போவதற்கு பயப்படுவார்கள். அப்படி இருக்கையில் அந்தப் பெண் விடுவிடென்று போய்க் கொண்டிருந்தாள். அவள் நடையைக் கொண்டு அந்த வீதி அவளுக்குப் புதிதில்லை என்று புரிந்தது. அவள் தெருவில் காரை நிறுத்தி வைத்துவிட்டு உள்ளே நடந்த போதிலும் ஒருவருமே அவளைப் பொருட்படுத்தவில்லை. நிக்கர் அணிந்து கொண்டிருந்த சிறுவர்கள்கூட சாதாரணமாய் ஒதுங்கிக் கொண்டார்கள்.

அந்த சந்தில் கழிவு நீர் ஒரு பக்கமாய் பள்ளத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

சிறிய கடைக்கு முன்னால் வந்து நின்றாள் அவள்.

முன்பக்கத்தில் சிறிய பந்தல் தொங்கிக் கொண்டிருந்தது. இரண்டு பல்புகள் போடப் பட்டிருந்தன. அந்தக் கடையில் தினந்தோறும் லட்சம் ரூபாய்க்கு விற்பனை நடந்து கொண்டிருந்தது என்றால் யாராலும் நம்ப முடியாது.

“ஹலோ!” என்றாள் அவள்.

உள்ளே கடை முதலாளி நகர்ந்த சப்தம்.

“3-டோஸ்” என்றாள் அவள்.

உள்ளேயிருந்து லேசான வெளிச்சம் வந்து விழுந்தது. மிக நம்பிக்கையான வாடிக்கையாளர்களைத் தவிர வேறு யாருக்குமே அங்கே விற்பனை நடைபெறாது. அவள் தன் முகம் கடைக்காரன் கண்ணில் படும்விதமாய் அந்த வெளிச்சத்திற்கு முன்னால் வந்து நின்றாள். அப்பொழுதுதான் மெதுவாய், “சுவர்ணரேகா!” என்று கேட்டது.

குண்டு விழுந்தாற்போல் அதிர்ந்துவிட்டாள் அவள். உள்ளேயிருந் நேத்ரா வெளியே வந்தான்.

அவனைப் பார்த்துவிட்டு திடுக்கிட்ட அவள், “நீங்களா?” என்றாள்.

“ஆமாம். நான்தான். ரொம்ப நாட்களுக்கு பிறகு சந்திக்கிறோம் இல்லையா? அன்றைக்குப் பார்ட்டியில். பிறகு இன்றைக்குத்தான்.”

“யார் நீங்கள்?”

“நேத்ரா... சீக்ரெட் ஏஜெண்ட்.”

அவள் பயந்துபோய் திரும்பிப் போகத் தொடங்கினாள். அவன் அவளைத் தொடர்ந்தான்.

“இந்தக் கடைக்காரனை இன்றைக்குத்தான் அரெஸ்ட் பண்ணினோம். போதைப் போர்ட்களை விற்பது எவ்வளவு குற்றமோ, அவற்றைப் பயன்படுத்துவதுகூட அதே அளவுக்குக் குற்றம். தெரியுமா?”

“வேண்டுமானால் என்னை அரெஸ்ட் பண்ணிக்கொள்ளுங்கள்.”

“மனம் வைத்தால் அது பெரிய விஷயமில்லை. ஆனால் உன் மீதுள்ள கௌரவத்தால் அந்தக் காரியத்தை என்னால் பண்ண முடியவில்லை.”

வேகமாய் போய்க் கொண்டிருந்த அவள் நின்று, அவனைத் திரும்பிப் பார்த்து, “கௌரவமா?” என்றுகேட்டாள்.

“ஆமாம். உன் அறிவுக்கு யாராயிருந்தாலும் சரி, கொடுக்க வேண்டிய கௌரவம்.”

“தேவையில்லை. எனக்கு உங்களையும் உங்க மக்களையும் கண்டால் அருவருப்பு.” வெறுப்பை உமிழ்ந்தாள்.

“ஏன்?”

அவள் பதில் பேசாமல் வீடுவிடென்று காரை நோக்கிப் போனாள். கோலி விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களுக்குள் ஏதோ சச்சரவு வந்து விட்டது போலிருந்தது. ஒருவரையொருவர் துரத்திக் கொண்டு ஓடினார்கள்.

“சுவர்ணரேகா! ஒரே ஒரு கேள்விக்கு பதில் சொல்லு. அங்கே தோட்டத்திலும், வல்லியூரிலும் அவ்வளவு ரகசியமாய் பண்ணுகிற பரிசோதனைகள் எல்லாம் எதற்காக?”

அவள் ஏதோ சொல்லப் போனாள். அதற்குள் அவள் நிறுத்தி வைத்திருந்த கார் நகர்ந்து அவளை நோக்கி வந்தது. அதற்குக் கறுப்புக் கண்ணாடி இருந்ததால் உள்ளே டிரைவர் சீட்டில் யார் இருந்தார்கள் என்று தெரியவில்லை. கார் கிட்டே வந்ததுமே அவள் சட்டென்று அதில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

அந்த திறந்த கதவு சந்திலிருந்து வினாடி நேரம், உள்ளே டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்த ஆள் நேத்ராவைப் பார்த்துச் சிரித்தான்.

அவன் - ஏஜெண்ட் க்யூ!

டயரை நோக்கி சுடுவதற்காக நேத்ரா மின்னல் வேகத்தில் ஜேபியிலிருந்து துப்பாக்கியை எடுத்தான். ட்ரிக்கரை அழுத்த போன விரல்கள் கடைசி நிமிஷத்தில் நின்று விட்டன. கோலி விளையாடிக் கொண்டிருந்த

சிறுவர்கள் தெருவிற்குக் குறுக்கே ஓடிக் கொண்டிருந்தார்கள்.

கார் முனை திரும்பி கண் மறைவாயிற்று.

*****

அன்று மாலையில் ஏஜெண்ட் க்யூவிடமிருந்து பூஷணத்துத்துக்கு கோட் மொழியில் செய்தி வந்தது.

“நீ அனுப்பிய செய்தி கிடைத்தது. இன்டர்போல் சுவர்ணரேகா விடமிருந்து எந்த விதத்திலாவது ரகசியங்களை சேகரித்துக் கொள்ளும் என்று எனக்குத் தெரியும். முக்கியமாய் நேத்ரா களத்தில் இறங்கி விட்டான் என்றால் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சுவர்ணரேகா எந்தக் கடையில் போதை மருந்து வாங்குகிறாள் என்பதைக் கூட அவன் தெரிந்து கொண்டு விட்டான். நம் திட்டம் கடைசி கட்டத்திற்கு வந்து விட்டது. இன்றைக்குத்தான் அதைப் பரிசோதித்துப் பார்க்கப் போகிறோம். எதிர்பார்த்த பலன் கிடைத்து விட்டால் ப்ளூட்டோனியம் வரவழைத்து உன் ஃபேக்டரியில் பெருத்த அளவில் உற்பத்தி பண்ண வேண்டும். ஒருக்கால் நாளையிலிருந்து சுவர்ணரேகாவின் தேவை நமக்குத் இருக்காது. இன்டர்போலுக்கு சாட்சியம் கிடைக்காமலிருக்க அவளை அப்புறப்படுத்துவது மிக இன்றிமையாதது. அந்தப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். அவளை வீட்டில் கொல்ல வேண்டாம். நேத்ரா கண்களில் விளக்கெண்ணையை விட்டுக்கொண்டு கவனித்துக் கொண்டேயிருப்பான். அதனால் யாருடைய உதவியும் இல்லாமல் இக்காரியத்தை நீயே சுயமாய் பண்ணிவிடு. -க்யூ

செய்தியைப் படித்துவிட்டு, காகிதத்தைக் கிழித்தெறிந்து விட்டார் பூஷணம்

## 24

பூஷணத்தின் வீட்டிலிருந்து வெளியே போகும் போன் கால்களையும், அவனுக்கு வரும் போன் கால்களையும் கண்காணிப்பில் வைத்திருந்தான் நேத்ரா.

தான் குடியிருந்த எதிர்த்த ஃபிளாட்டிற்கு கனெக்ட் பண்ணிக்கொண்டான்.

பூஷணம் வீட்டில் போன் ரிசீவரை கையில் எடுத்ததுமே இங்கே நேத்ராவின் ஃபிளாட்டில் டேப்ரிக்கார்டர் தானாகவே சுழலத் தொடங்கிற்று.

நேத்ரா பிரதிமாவை இந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டான். நிறைய ஆலோசனைகளைத் தந்தான். முக்கியமாய் பூஷணத்திற்கு ஏஜெண்ட் க்யூவிடமிருந்து வரும் போன் கால் எந்த விதமாய் ட்ராப் பண்ண வேண்டும் என்ற யோசனை!

“ஏஜெண்ட் க்யூ அத்தனை முட்டாள்தனமாய் பூஷணத்தின் வீட்டிற்குப் போன் பண்ணிப் பேசுவான் என்று எனக்கு நம்பிக்கை இல்லை” என்றாள் பிரதிமா.

“நானும் நினைக்கவில்லை. ஆனால் இருவருக்குமிடையே ஏதோ கோட் இருக்கும். ஒவ்வொரு முறையும் காகிதத்தில் எழுதி அனுப்புவது என்றால் முடியாத காரியமல்லவா. என்றாவது போனில் பிடிபடுவார். அதற்காகவே பொறுமையாய் காத்திருக்கணும்.”

“எனக்கு நம்பிக்கை இல்லை.”

நேத்ரா சிரித்தான். “ஏஜெண்ட் க்யூவின் மீது அவனுடைய அரசாங்க அதிகாரிகளை விட உனக்குத்தான் அதிகமாய் நம்பிக்கை இருக்கும் போலிருக்கே.”

“சமீபத்தில் ‘ஸ்பான்’ பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளிவந்தது தெரியுமா? ‘மேன் வித தி கோல்டன் கன்’ என்று. ஒரு இன்டர்போல் ஏஜெண்டைப் பற்றி உயர்வாய் எழுதியிருக்காங்க. இன்டலிஜென்ஸ் அவனுடைய துப்பாகியாம். செக்ஸ் அவனுடைய குண்டுகளாம். பெயரைச் சொல்லவில்லையே தவிர அது நிச்சயமாய் ஏஜெண்ட் க்யூவைப் பற்றித்தான். ஒருக்கால சுவர்ணரேகாவை அதுபோலத்தான் வலையில் வீழ்த்தியிருப்பான்.”

“செக்ஸை பூதக்கண்ணாடியில் வைத்துக் காட்டுவது தமிழ்ப் பத்திரிகைகளின் வழக்கம் என்று

நினைத்துக்கொண்டு இருந்தேன்.. ஆங்கிலப் பத்திரிகைகளுக்குக் கூட அந்தப் பைத்தியம் உண்டு போலிருக்கே?” என்றான் நேத்ரா.

“உனக்கு எல்லாமே விளையாட்டாய்தான் இருக்கு.”

“பின்னே இதென்னது பிரதிமா? இந்த உலகத்தில் இத்தனை தம்பதிகள் சுகமாய் சந்தோஷமாய் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்களே. அவர்களுக்கெல்லாம் துப்பாக்கிகளும், குண்டுக்களும்தான் இருக்கா? சாதாரண புத்திசாதுரியத்தை விட அதிக அளவு புத்திசாதுரியம் இருப்பது எப்பொழுதுமே லாபந்தான். ஆனால் அது கேவலம் செக்ஸில்தான் இருக்கணுமா?

சமையல் பண்ணுவதற்குக் கூட புத்திசாலித்தனம் வேண்டும். சிலருக்குக் காலையில் சமையல் பண்ணுவதற்கு ஒன்றரை மணி நேரம் பிடித்தால் வேறு சிலர் அரைமணி நேரத்தில் பண்ணி முடித்து விடுவார்கள். எப்படி? கியாஸ் ஸ்டவ்வுக்கு இரண்டு பர்னர்கள் இருந்தால் எதன் மீது எந்த ஆர்டரில் எதை சமைக்க வேண்டும்? காய்கறிகளை எப்பொழுது நறுக்க வேண்டும்? அரிசியை எப்பொழுது கழுவ வேண்டும்? போன்ற சிறு விஷயங்களை பிளான் போட்டுக் கொள்வதன் மூலம்.

இதெல்லாம் சிரிப்பை வர வழைக்கக் கூடிய விஷயமாக தோன்றலாம். ஆனால் அரிசியைக் கொதிக்க வைத்து கஞ்சியை வடித்து சமைப்பதைவிட நீராவியில் வேகவைப்பதால் 65 சதவீதம் எரிபொருள் மிச்சப் படுகிறது என்று சொன்னால் த்ரில்லிங் ஏற்புடுகிறது இல்லையா.

வெங்காயத்தை வதக்கும் போதே கத்தரிக்காயை நறுக்குவது மூலமாய் நேரத்தை மிச்சப் படுத்துவது கூட இல்லாளின் சாமர்த்தியத்தை அதே அளவிற்குக் காட்டுகிறது.

இதெல்லாம் இயற்கையானது. அதற்கு அனாவசியமான முக்கியத்துவம் தருவது தேவையில்லாதது. ரோமான்ஸுக்கும் சமையலுக்கும் முடிச்சுப் போடுகிறேனே என்று பார்க்காதே. அனாலிசிஸ் பண்ணுவதற்கு எதுவுமே அப்பாற்பட்டது இல்லை

என்கிறேன். மிக உயர்ந்த காதலுக்கு முன்னால் செக்ஸ் மிக அற்பமான விஷயம். அவ்வளவுதான்” என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

அவள் அப்படியே சிலையாய் நின்று கொண்டிருந்தாள். உலகத்தில் தலை சிறந்து ஏஜெண்டுகள் இருவரும் இரு வெவ்வேறு கொள்கைகளை நம்புகிறார்கள். (சுவர்ணரேகாவை) யார் ஜெயிக்கப் போகிறார்கள்?

*****

“டியர் பிரண்ட்ஸ்!

இன்றைக்கு மிகவும் நல்ல நாள். விஞ்ஞான வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கப் போகிறது. அல்லும் பகலுமாய் அரும்பாடு பட்டு சுவர்ணரேகா கண்டுபிடித்த பி.ஜி. கியாஸ் ஃபார்முலா தயாராகிவிட்டது.

அதை இப்பொழுது நாம் பிரயோகம் பண்ணிப் பார்க்கப் போகிறோம். இந்த விஷ வாயு மட்டும் நினைத்த பலனைத் தந்துவிட்டால், இந்த நாடு நம் உள்ளங்கைகக்குள் அடங்கிப் போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை. மனிதனை வினாடி நேரத்துக்குள் கொல்லும் இந்த விஷ வாயு இதுவரை உலகத்திலுள்ள ரசாயன வாயுக்களிடையே மிக நவீனமானதாகி விடும். இரான். ஈராக் யுத்தங்களில் பயன்படுத்திய ரசாயன வாயுக்களை விட பலமடங்கு சக்தி வாய்ந்த இந்த பி.ஜி. கியாசில் உள்ள விசேஷம் என்னவென்றால், ஒரு சிறிய காப்ஸ்யூலின் மேல் உரை உருகிப் போய்விட்டால் போதும் எஞ்சியவை காற்றோடு கலந்து விடும். ஆனால் வெகுநாள் வரைக்கும் வெகுதூரம் வரைக்கும் தன் சக்தியை இழந்து விடாமல் சில நூற்றுக் கணக்கான சதுரமைல்கள் பரப்பளவுள்ள இடங்களை விஷமயமாக்கி விடும். இரானின் மீது பயன்படுத்தியதைவிட இது எவ்வளவு சக்தி வாயந்தது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

ஃபிரண்ட்ஸ்! இந்தப் பரிசோதனைக்கு நீங்கள் எல்லோரும் ஒத்துழைத்தீர்கள். இதைக் கண்கூடாக நீங்கள் பார்ப்பதற்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்.

இந்த வாயுவின் தயாரிப்புக்கு ப்ளூட்டோனியம் தேவை என்று நீங்களும் அறிவீர்கள்.

இறக்குமதி பண்ணவிருக்கிற நூறு டன்கள் அமிலங்கலோடு கூட மிக நுன்னியத்திலும் நுன்னியமான உருவில் ப்ளூட்டோனியம் கூட எங்கள் நாட்டிலிருந்து திருட்டுத்தனமாக ஏற்றுமதி செய்யப்படும். இந்தப் பரிசோதனை பலித்துவிட்ட அடுத்த வினாடியே பெருத்த அளவில் அந்த காப்ஸ்யூல் தயாரிக்கும் பணி தொடங்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் சுவர்ணரேகாவுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

ஏஜெண்ட் க்யூவின் ஆங்கிலப் பிரசங்கம் முடிந்ததுமே, அந்த ஹாலில் கைதட்டல் ஓசை வானை எட்டிற்று. க்யூ எழுந்திருந்து சுவர்ணரேகாவைத் தன்னோடு வரச்சொல்லி சைகை காட்டினான்.

இருவரும் வெளியே வந்து கொண்டிருக்கையில் சுவர்ணரேகா கேட்டாள். “எந்த விலங்கின் மீது பரிசோதித்துப் பார்க்கலாம்?”

க்யூ சிரித்தான். “உன் பரிசோதனை இன்னும் விலங்குகள் மீதே சோதித்துப் பார்க்கும் லெவல் கடந்துவிட்டது ரேகா.”

“அப்படி என்றால்?”

அவன் பதில் பேசவில்லை.

சினிமா ஹாலுக்குப் பின்னாலிருக்கும் ப்ரொஜெக்ஷன் அறையைப் போல் இருந்த சிறிய அறைக்குள் நுழைந்தான். அதற்கு முன்னால் ஹாலுக்கு நடுவில் கண்ணாடி இருந்தது. கண்ணாடிக்கப்பால் ஹால் தென்பட்டது. அங்கத்தினர்கள் எல்லோரும் நடக்கப் போகும் பரிசோதனையை எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

சுவர்ணரேகாவை “உட்கார்” என்று சொல்லிவிட்டு சுவிட்சைப் போட்டான்.

அங்கத்தினர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சுவர்ணரேகாவுக்குப் புரியவில்லை.

அங்கிருந்த அங்கத்தினர்கள் பத்து பேரில் சுவரோரமாக உட்கார்ந்திருந்த ஆள் முதலில் எழுந்தான். கழுத்தைப் பிடித்துக்கொண்டு குனிந்தான். மறுவினாடி

அவ்விடத்துக் காட்சி பீதியைத் தொற்றுவிக்கும்படியாய் மாற்றிற்று. அங்கத்தினர்கள் பத்துபேரும் மரணத்திலிருந்து விடுபட பிரம்மப் பிரயத்தனம் பண்ணிக் கொண்டிருந்தர்கள். அவர்களின் அலறல்கள் கண்ணாடி ஹாலுக்குள்ளேயே சமாதியாகி கொண்டிருந்தன.

மரணம் அவர்களின் உடல்களை கொடூரமாய் தாக்கி. கோரதாண்டவம் பண்ணிக் கொண்டிருந்தது. சுவர்ணரேகா எவ்வளவு அதிர்ச்சி அடைந்தாள் என்றால், அவளுக்கு அதைத் தாங்கிக்கொள்ளும் சக்தி கூட இல்லாமல் போய்விட்டது. இதுவரையிலும் தன்னோடு சேர்ந்து பங்கெடுத்துக் கொண்டிருந்தவர்கள்.. தன் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள். தன் நண்பர்கள், தன் சகாக்கள், தன்னோடு கஷ்டத்தைப் பகிர்ந்து கொண்டவர்கள். இப்பொழுது தரையில் துவண்டு கொண்டிருந்தார்கள்.

அவளுக்குத் தன் தந்தை நினைவுக்கு வந்தார். நோபல் பரிசுக்காக எதிர்பார்த்துக் கொண்டே இருந்து உயிரை விட்ட தந்தை! உலகத்தைப் பசுமையாக்க எண்ணியிருந்த தந்தை! அந்த ஃபார்முலாவை அவள் கொஞ்சம் மாற்றினாள். அதன் விளைவு இத்தனை கொடுமையாகவா இருக்கும்? அடுத்த வினாடியே அந்த இடம் மயானமாய் மாறிவிட்டது. சலனமில்லாமல் விழுந்து கிடந்தார்கள் அவ்வறையில் இருந்தவர்கள். எந்த போஸ்ட் மார்டத்தாலும் அவர்கள் எப்படி இறந்தார்கள் என்று கண்டு பிடித்துவிட முடியாது. அதுதான் அந்த ஃபார்முலாவின் சிறப்பே! எந்த நாடும் பிற நாட்டைக் குற்றவாளியாய் நிலை நிறுத்த முடியாது.

“சக்சஸ்! கிராண்ட் சக்சஸ்” கத்தினான் க்யூ. அவன் என்றுமே அவ்வளவு ஆனந்தமாய் இருந்ததில்லை. சுவர்ணரேகாவை அருகில் இழுத்துக் கட்டிக்கொண்டு, “வென்று விட்டோம். நாம் வெற்றி பெற்றுவிட்டோம்” என்றான். அவளுக்கு அது காதில் விழவில்லை. அந்த பிணங்களையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த மனித இனத்தின் மீதும், இந்த நாட்டின் மீதும், முக்கியமாய் ஆண்களின் மீதும் அவள்

மனதிலிருந்த வெறுப்பிற்கு எடுத்துக்காட்டு அந்த பிணங்கள்! ஆனால் அவள் தந்தை! மனித வாழ்க்கையை மகோன்னதமாக்குவதற்காகத் தன் வாழ்க்கையையே தாரைவார்த்த அவள் தந்தை மட்டும் இப்பொழுது உயிரோடிருந்தால், மகளின் வெற்றியைப் பார்த்து என்ன செய்திருப்பாரோ? இது வெற்றியா, தோல்வியா என்று அவளுக்கு புரியவில்லை.

சிறிய பட்டன் உருவத்தில் இருந்த காப்சூல் அது. கண்ணாடி இருந்ததால் வாயுக்கள் வெளியே பரவவில்லை. இல்லாவிட்டால் ஐந்து நிமிஷத்தில் அந்த நகரத்திலுள்ள ஜீவன்கள் எல்லாம் பூண்டோடு அழிந்திருக்கும். இதே பரிசோதனையைப் பெருமளவில், ஒரு பெரிய தீவின் மீதோ, அல்லது லட்சக் கணக்கான மக்களின் மீதோ பார்க்கும் வரைக்கும் க்யூவுக்கு நம்பிக்கை ஏற்படாமல் போகலாம். ஆனால் ஒரு விஞ்ஞானி ஆன அவளுக்குத் தன் பரிசோதனை வெற்றியடைந்து விட்டதென்று புரிந்துவிட்டது. இனி மிகக் கொடுமையான மாரணக்காண்டம் காத்திருக்கிறது. தன் பழி தணிந்து விட்ட நாள், போதை மயக்கம் தேவையில்லாத நாள்... இதெல்லாம் சந்தோஷம்தானா?

யுரேனியத்தை நியூட்ரானால் பிளந்தால் பிரிவு ஏற்படும் என்றும், ஆட்டம்பாம் தயாராகுமென்றும், அது மனித இனத்தை நாசமாக்கி விடுமென்றும் கண்டுபிடித்த பொழுது ஓட்டோ ஹசனின் மனநிலை எப்படி இருந்திருக்கும்? சந்தோஷமடைந்திருப்பாரா? சஞ்சலனமடைந்திருப்பாரா?

அவளுக்கு லூயி மேகனீஸ் எழுதிய preyar of the unborn baby நினைவிற்கு வந்தது.

“நான் இன்னும் பிறக்கவில்லை. நான் வரும் வழியில் ஒளியைத் தரும் விளக்குகளை உங்கள் மனம் என்ற முற்றத்தில் ஏற்றி வையுங்கள். விபத்துகள் இல்லாத வாழ்க்கையை எனக்குக் கொடுங்கள். என் நாக்கு சொல்லப் போகும் பொய்களை, என் கை பண்ணப் போகும் கொலைகளை, நான் பிறப்பதற்கு முன்பே

தயாரித்து வைக்காதீர்கள். ரத்தமழை பெய்யும் யுத்தத்தில் என்னைக் குளிப்பாட்டாதீர்கள்.”

கையில் சுரீரென்று படவே, அவள் இந்த உலகத்திற்குத் திரும்பினாள்.

“இந்த நல்ல சமயத்தில் சந்தோஷமாக இரு.” இன்செக்ஷனை கையில் கொடுத்துவிட்டுப் போனான் க்யூ. “நமக்குத் தேவையான ப்ளூட்டோனியம் வந்து சேர்ந்ததுமே, இந்த காப்ஸ்யூல் தயாரிப்பு ஆயிரக்கணக்கில் பெருகிவிடும். இந்த நாட்டின் மகாராணியாகப் போகிறவளுக்கு எங்கள் நாட்டின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.” நாடகப்பாணியில் சொன்னான் க்யூ.

அவள் மயக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தாள். அறிவின் கண்கள் மூடிகொள்ளத் தொடங்கின.

பெரிதாய் சிரித்தாள்.

“எல்லோரும் செத்துப் போயிடுவார்களா?”

“எல்லோரும் செத்துப் போவார்கள்.”

“ஆண்கள் எல்லோரும்?”

“அவர்களும் இறந்து போவார்கள்.”.

“நீ கூட செத்து விடுவாயா?” சரிந்து கொண்டிருந்த அவள் உடம்பை இருகரங்களாலும் பிடித்து தூங்க வைத்தான்.

பதில் சொல்லவில்லை. அவள் இந்த உலகத்தில் இல்லை.

அவன் அவளையே கண் இமைக்காமல் பார்த்தான். அப்பொழுதே அவளை மேலுலகத்திற்கு அனுப்பி வைத்துவிட எண்ணினான். வேண்டாம் வேண்டாம். இன்னும் சிலநாள் பொறுத்திருக்க வேண்டும். அந்தப் பரிசோதனையில் பெருமளவிற்கு பலன் கிட்டிய பிறகுகூட, வெற்றியடைந்த பின்னர்தான் இவளுடைய சாவு. அவன் மௌனமாய் அங்கிருந்து வெளியேறினான்.

## 25

ஒய்.எம்.சி.ஏ. பிலியர்ட்ஸ் ரூமில் வாமனமூர்த்தி, சீஃப் பகீரதன் நேத்ரா மூவரும் உட்கார்ந்து இருந்தார்கள்.

சீஃப் சிவப்பு பந்தை குறிபார்த்துக் கொண்டிருக்க, பக்கத்தில் நின்று கொண்டிருந்த நேத்ரா சொல்லிக் கொண்டிருந்தான். “ஒருக்கால் உங்களுக்கு நினைவு இருந்திருக்கும் சார். ஒரு வருஷத்திற்கு முன்னால் ஒரு சம்பவம் நடந்தது. அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தானுக்கு திருட்டுத் தனமாய் ப்ளூடோனியம் ஏற்றுமதி நடந்தது. இந்த விஷயமாய் அமெரிக்கன் செனட்டில் பெரிய ரகளை கூட நடந்தது. பாகிஸ்தானுக்கு அணு பரிசோதனை உதவியை முற்றிலுமாய் நிறுத்திவிட வேண்டும் என்று எதிர்வாதம் கூட நிகழ்ந்தது.”

“ஆமாம்.”

“அந்த திருட்டு ஏற்றுமதி கப்பல் வழியாய் நடந்தது. பல ஆயிரக்கணக்கான லிட்டர்கள் திரவத்தில் கொஞ்சம் ப்ளூடோனியம் அனுப்பப் பட்டது. அவ்வளவு சிறிய பரிமாணத்தைக் கண்டுபிடிப்பது கடினம். ஆனால் அந்தக் கொஞ்ச அளவே சில கோடி கணக்கான ரூபாய்கள் மதிப்புடையதாகும். மிக அபாரமான திட்டம் அது.”

“இதெல்லாம் இப்போது எதற்காகச் சொல்கிறாய் நீ?” ஸ்டிக்கைக் கொடுத்துவிட்டுச் சொன்னார் வாமனமூர்த்தி.

“பூஷணத்தின் அமில இறக்குமதியில் கூட இப்படிப்பட்ட ரகசியம்தான் உள்ளதென்று சந்தேகப்படுகிறேன் நான்.” நேத்ரா அடித்த பந்து வேகமாய்ப் போய் குழியில் விழுந்தது.

“மை காட்!” இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். “இவ்வளவு நாளாய் அந்த அமிலங்கள் எல்லாம் ஏதோ வியாபாரம் பொருட்டுதான் என்று எண்ணியிருந்தேன்” என்றார் வாமன மூர்த்தி.

“ஆனால் நீதானே நேத்ரா அந்த இறக்குமதியை அவனுக்கு அனுமதிக்கும்படி சொன்னாய்.” சீஃப் கேட்டார்.

“ஆமாம் சார். நான்தான் சொன்னேன். ஒவ்வொன்றையும் சட்டப் பிரகாரம் சாதிக்க முடியாது நம்மால். பூஷணத்துக்காக தருவித்துக் கொண்டிருக்கும் அமிலத்தை அங்கேயே கடலில் கலந்து விட்டு அவனை ஒரேயடியாய் மூழ்கிவிட எண்ணியிருந்தேன்.”

“அதனால் அவனுக்கொன்றும் நஷ்டமில்லை. அதற்கெல்லாம் இன்ஸ்யூரன்ஸ் வந்துவிடும்.”

“போனது அமிலமாய மட்டுமே இருந்தால் வரும். ஆனால் அதோடு ப்ளூடோனியமும் இருந்தால்?” நேத்ரா சிரித்தான்.

எஞ்சிய இருவரும் திறந்த வாயை மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“எனக்கென்னவோ சந்தேகமாய் இருக்கு சார். அவன் தொழிற்சாலைகளுக்கு அவ்வளவு அமிலங்கள் தேவையில்லை என்று நினைத்தேன். அதே சமயத்தில் இந்த பாகிஸ்தான் விவகாரத்தைப் படித்த பொழுது எனக்கு சந்தேகம் வந்தது. பத்துப் பதினைந்து நாட்கள் வரையிலும் கடலில் காவல் காத்து அந்தக் கப்பலைப் பிடிக்க வேண்டும்.”

“ஆனால் ஒரு மாத காலம் வரைக்கும் சிறிய படகில் உணவு பதார்த்தங்களை சேமித்து வைத்துக்கொண்டு, இரவும் பகலுமாய் வெயிலிலும், மழையிலும்...”

“வேறு வழியில்லை சார். நவீன ஆயுதங்களுடன் நம் கப்பல் அந்த எல்லையில் தென்பட்டதென்றால் அந்த அழிவிற்கு நம் நாடுதான் காரணம் என்று இண்டர் நேஷனல் கோர்ட்டில் நம் எதிரி நாடு கேஸ் போடக் கூடிய ஆபத்து இருக்கு. நிரூபிக்க முடியாது என்றாலும் கூட நம் நாட்டு கௌரவம் சம்பந்தப்பட்ட விஷயம் இது.”

“ஆனால் அவ்வளவு ரிஸ்க்?”

“உங்களுக்கு நினைவு இருக்கா? பாகிஸ்தானுடன் யுத்த சமயத்தில் ஒரு எதிர்நாட்டின் நீர்மூழ்கிக் கப்பல் விசாகப் பட்டினம் கடலில் மாதக் கணக்கில் காவல் காத்துக் கொண்டிருந்தது. நம் எதிரி நீருக்குள் அவ்வளவு நாள் இருந்த போது நீருக்கு மேல் நான் இருப்பதில் ரிஸ்க் என்ன இருக்கு? போய் வருகிறேன். வேலையை முடித்துக்கொண்டு திரும்பி வந்த பிறகு சந்திக்கிறோம்.”

“சந்திக்கிறோம் என்கிறாய். உன்னோடு கூட வருவது யார்?”

“ஏஜெண்ட் பிரதிமா.”

*****

சுற்றிலும் நீர். அலைகள் கூட இல்லை. எங்கும் நிச்பதமாயிருந்தது. கடலில் அந்த நிசப்தம் பயங்கரமாய் இருந்தது.

அதோடு கூட தனிமை!

அவ்விருவர் மட்டுமே அப்படகில் இரண்டு வாரங்களாய் இருந்து வந்தார்கள். சிறிய மோட்டார் படகு போல் இருந்தது அது. மேற்கூரை வெயிலையும், மழையையும் தாங்க உதவிற்று. சீட்டிற்குக் கீழே சுமார் ஒரு மாதக் காலம் வரைக்கும் போதுமான தண்ணீர் பாட்டில்கள், ஸ்டவ், தேநீர் தூள், பிஸ்கட்டுகள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற எல்லா வசதிகளும் இருந்தன. போழுது போக்கிற்கு டிரான்சிஸ்டர் இருந்தது.

ஆனாலும் அந்த நிசப்தம் பயங்கரமாக இருந்தது.

பிரதிமாவும் நேத்ராவும் அந்தப் படகில் இருந்தார்கள். ஏழுநாட்கள் வெளியுலகத்தோடு தொடர்பு இல்லாமல் இருப்பது எத்தனை கஷ்டம் என்று பிரதிமாவுக்குப் புரிந்தது. அவளுக்கு இந்த அனுபவம் புதித்து. சீக்ரெட் ஏஜெண்டாய் அவளுக்கு இது போன்ற அனுபவம் இதுவரையிலும் ஏற்பட்டதில்லை. நேரத்தைக் பங்கு போட்டுக்கொண்டு ஒருவர் மாற்றி இன்னொருவர் விழித்துக் கொண்டிருப்பது, பைனாக்குலர் மூலமாய் சுற்றிலும் பார்ப்பது... இதே வேலை. சூரியன் உதிக்கும். மேற்கே மறைந்து போகும்.

தண்ணீர்... தண்ணீர்... எங்கு பார்த்தாலும் நீர். குளிப்பதற்கு நீர் இருக்காது. ரேஷன். குடிக்கும் நீருக்குப் பிரச்சினை இல்லை. அவர்கள் அந்த எல்லைக்கு வந்து சேர்ந்த நான்கு நாட்களில் மழை பெய்தது. கிடைக்க முடியாத பொருள் கிடைத்து விட்டால் அது எவ்வளவு அருமையாய் இருக்கும் என்பது அப்பொழுதுதான் புரிந்தது அவளுக்கு. பக்கத்தில் அவன் இருப்பதைக்கூட மறந்து விட்டாள். கைகளை காற்றில் தூக்கி அந்த மழையில் நனைந்தாள். உப்புக்காற்றில் வறண்டு போயிருந்த உடலுக்கு அந்த மழை மிக இதமாயிருந்தது. சிறு பெண்ணைப் போல் குதித்துக் கும்மாளமிட்டாள்.

நேத்ரா படகிற்கு அந்தப் பக்கமாய் போய்விட்டான்.

பிறகு கேட்டாள். “ஏன் அவ்வாறு பண்ணினாய்?’ என்று.

“உன் உற்சாகத்தைப் பாழடிக்க விரும்பாததால்தான். நான் இருந்தால் ஈர் ஆடையுடன் உன்னால் அவ்வளவு சுதந்திரமாய் இருக்க முடியாது” என்றான்.

அவள் கொஞ்சம் வெட்கமடைந்து, “ஆனால் அன்றைக்கு வல்லியூரில்...” என்று இடையிலேயே நிறுத்திக் கொண்டாள்.

“அது வேறு. அன்றைக்கு என்னை நான் எஸ்டாப்ளிஷ் பண்ண வேண்டியிருந்தது. இங்கே அப்படி இல்லை. என்னை நம்பி வந்திருக்கிறாய். உன் நம்பிக்கையைப் பாழாக்குவது இந்த டிபார்மென்டிற்கு அநியாயம் பண்ணுவது போலாகும். அதோடு கூட உன்னை அந்த தோற்றத்தில் அப்படிப் பார்க்க நேர்ந்தால் என் மனம் சலனமடையலாம்.”

அவள் அவனை மதிப்போடும் பக்தியோடும் பார்த்தாள். சாதாரண சமயத்தில் எவ்வளவு குறும்புத்தனத்தோடு அழவைக்கிறார்களோ அவர்களே, தேவையான பொழுது இதுபோல் நேர்மையாய் இருப்பார்கள் போலும் என்றெண்ணிக் கொண்டாள். சாதாரணமாய் மரியாதையும், பண்பும் காட்டும் ஆண்கள் இந்நிலையில் இருந்திருந்தால் மானபங்கம் பண்ணும் அளவிற்கு போகாவிட்டாலும், குறைந்தபட்சம் வாய் வார்த்தையால் அறிமுகத்தை மேலும் வளர்ந்துக் கொள்ளவாவது முயலுவார்கள் நிலா வெளிச்சத்தில் இரவு நேரத்தையும் தனிமையையும் விட்டு விட மாட்டார்கள்.

மேலுக்கு மிகவும் கௌரவமாய் நடந்துகொள்ளும் ஆண்கள் சமயம் வரும்போது எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை அவள் அறிவாள்.

“ஐ லவ் யூ ... ஐ லவ் யூ நேத்ரா” என்றெண்ணிக்கொண்டாள். பெண்களுக்கே உரிய தயக்கத்தால் அதை வெளியே சொல்லிக் கொள்ளவில்லை.

அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. சுற்றிலுமிருந்த எல்லை தெரியாத நீர், மேலே வானம்,

நட்சத்திரங்கள், கடலிலிருந்து வந்து வீசிய குளிர்ந்த காற்று, அலைகளின் மேல் மின்னிய சந்திரகிரணம், வர்ணத்தோடு சப்தம் சேர்ந்து வரும் அபூர்வ நாதம் “காதல்.”

அவளுக்கு ஏனோ அந்த அனுபவம் மிக உற்சாகமாய் இருந்தது. இவ்வளவு தூரத்தில், நீருக்கு நடுவில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த படகில் தாம் இருவர் மட்டுமே! அவள் யோசனையில் ஆழ்ந்திருந்த போதே தொலைவிலிருந்து சப்தம் கேட்டது.

கப்பல் சப்தம். நேத்ரா பைனாகுலரால் பார்த்தான். இருட்டில் தொலைவில் விளக்குகளின் வெளிச்சம் தென்பட்டது.

அவன் தயாராகத் தொடங்கினான். அவள் அவனையே பார்த்தாள். அவ்வளவு குளிரிலும் அவள் உடம்பு வியர்வையால் நனைந்தது.

அவன் மீனைப் போல் நீருக்குள் நழுவினான் சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் கப்பல் வந்துகொண்டிருந்தது. இது மிகவும் துணிச்சலான காரியம் என்று தெரியும் அவளுக்கு. கொஞ்சம் அப்படியோ இப்படியோ ஆகிவிட்டாலும் சரி, அவன் திரும்பி வர முடியாமல் போகலாம்.

*****

முப்பதடி உயரமிருக்கலாம் அந்த கப்பலின் தளம்.

நீரிலிருந்து தலையைத் தூக்கிப் பார்த்தான் நேத்ரா. ஆரஞ்சு வண்ணத்துப் பலகையின் மீது நீர்த்துளி பச்சையாய் தென்பட்டது. அவன் கையிலிருந்த கருவியை அத்துடன் பொருத்தினான். முன் காலத்தில் சிப்பாய்கள் கோட்டைச் சுவரைத் தாண்டுவதற்காக பயன்படுத்தும், உடும்பு போல் இருந்த அந்த நவீன கருவியின் உதவியால் அந்த மேல்தளத்தில் ஏறுவதற்கு முயற்சி பண்ணிக் கொண்டிருந்தான். மிகக் கடினமான சாகசம் அது. கப்பல் நிதானமாக போய்க் கொண்டிருந்தது. சுமார் அரைமணி பிடித்தது அவனுக்கு மேலே போய்ச் சேருவதற்கு. கார்கோ கப்பல் அது.

அந்தக் காலத்துடன் ஒப்பிட்டால் கடல் கொள்ளைக்காரர்களின் தாக்குதல் ஏறக்குறைய

இல்லையென்றே சொல்லலாம். அதனால் காவல் அதிகம் இல்லை.

அவன் தாழ்வாரத்தில் இறங்கினான். ஆளரவமில்லாமல் இருந்தது. அவன் கேபினை நோக்கிப் போய் கொண்டிருந்தபோது இருவர் எதிரே வந்து கொண்டிருந்தார்கள். சட்டென்று ஒளிந்து கொள்வதற்கு ஒன்றுமே தென்படவில்லை. வலது பக்கத்திலிருந்து ஆறங்குல பரப்பளவுள்ள குழாய் ஒன்று போயிற்று. நேத்ரா சட்டேன்று அதை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு, காற்றில் எம்பி மேலே ஏறி, குப்புறப்படுத்துக் கொண்டான். அதிர்ஷ்டவசமாய் அது வளைந்து போகவில்லை.

பூமிக்கு ஏழடி உயரத்தில் இருந்தது அது. எதிரே வந்து கொண்டிருந்த இரு ஆட்களும் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்ததும் நின்று, சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, வலது பக்கமாய் நடந்தார்கள். சரியாய் அவன் இருந்த இரும்பு தூணிற்கு கீழே வந்து நின்றார்கள். நேத்ரா மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

அவர்கள் கையை உயர்த்தினால் போதும் அவன்மீது படலாம். அந்த இரு கார்ட்டுகளில் ஒருவன் தலைக்குத் தடவிக் கொண்டிருந்த தைலத்தின் நறுமணம் அவன் நாசியைத் தாக்கியது. அத்தனை நெருக்கத்தில் இருந்தார்கள் அவர்கள். இருவருள் ஒருவன் ஜேபியிலிருந்து பாட்டிலை வெளியே எடுத்து அடுத்தவனிடம் தந்தான். அந்த பாட்டிலை அப்படியே உயரே தூக்கிக் குடிக்க வேண்டுமென்ற ஆவல் அந்த இரண்டாவது ஆளுக்கு ஏற்பட்டு விடக்கூடாதே என்றும், நிலா வெளிச்சத்தை அண்ணாந்து பார்க்கும் ஆசை முதலாமவனுக்கு வந்து விடக் கூடாதே என்றும் நேத்ரா மனதிற்குள்ளாகவே பிரார்த்தனை பண்ணிக் கொண்டான். அந்த இரண்டில் எது நடந்தாலும், அவர்களை விட ஓரடி உயரத்திலிருந்த தான் கண்ணில் படாமல் உலகில் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

அவர்களைக் கொல்லுவதோ நினைவு தப்பச் செய்வதோ பெரிய கஷ்டமில்லை. ஆனால் இவ்வளவு பாடுபட்டதும் பலனில்லாமல் போய் விடும். இத்தனை

நாளும் படகில் இருந்து காத்திருந்து செயல்படுவது, இது வெறும் விபத்துதான் என்ற பிரமையைத் தோற்றுவிக்கத்தான். எதிரியின் சதி என்ற சந்தேகம் வருவதற்காக இல்லை.

கார்டு பாட்டிலை உயரே தூக்கினான். நேத்ரா சட்டென்று அவன்மீது பாயத் தயாரானான். ஆனால் கடைசி நிமிஷத்தில் அந்த கார்டு முன்னோக்கி நடந்தான். அதனால் நேத்ரா அவன் கண்களுக்குப் புலப்படவில்லை. இருவரும் குடித்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்கள். நேத்ரா நிம்மதியாய் மூச்சு விட்டான். அதற்கு மேல் தாமதிக்கவில்லை. மேலேருந்து குதித்து, தாழ்வாரத்தில் ஓடி, உள்ளே நுழைந்தான். கீழே படிகள் இருந்தன

அண்டர் கிரௌண்டின் பூட்டைத் திறப்பதற்கு அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

கீழே விசாலமான இடத்தில் இருந்தன பீப்பாய்கள், சுமார் பன்னிரண்டு பீப்பாய்கள். அவன் ஜேபியிலிருந்து கத்தியை எடுத்தான். ஒரு பீப்பாயிலிருந்து இன்னொரு பீப்பாய்க்கு பைப் கனெக்ஷன் இருந்தது. ஒரு பீப்பாயில் ஓட்டை பண்ணிவிட்டால் போதும். ஆனால் அது பிற்பாடு எதிரியின் சதியாக தெரிந்து விடக்கூடாது. யதேச்சையாக நிகழ்ந்த விபத்தாய் தென்படவேண்டும்.

அவனுக்கு வேலை முடிவதற்கு சுமார் அரைமணி நேரம் பிடித்தது. பீப்பாயிலிருந்து திரவம் ஒழுகி ஒரு மூலையில் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அவன் அங்கிருந்து மேலே வந்து நீரில் குதித்தான்.

படகில் பிரதிமா காத்துக் கொண்டிருந்தாள். அவன் அருகில் வந்ததுமே கைக்கொடுத்தாள். அவன் மேலே ஏறிக்கொண்டு முகத்திரையை எடுத்து விட்டான். “ஐந்து நிமிடங்களில் எல்லாம் காலியாகி விடும்” என்றான் படகை கிளப்பியப்படி.

“அங்கே பார்” என்றாள் பிரதிமா.

தொலைவில் தீ தென்பட்டது. மிகச் சிறிய தீ. பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அது கடலில்

பர்லாங்கு தூரம் பரவியது.

கப்பலில் க்யூ முதலியவர்கள் பரபரப்புடன் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். கப்பல் தீயை விட்டு தொலைவாக போய்க் கொண்டிருந்தது. கப்பலுக்கு ஆபத்து இல்லை.

அந்தக் காட்சி மட்டும் அபூர்வமாக இருந்தது. சுமார் இருபது லட்சம் மதிப்புடைய அமிலங்கள் தண்ணீரில் கலந்து விட்டன. பச்சை, மஞ்சள் நிறங்களில் வாயுவாய் பரவியது.

“எனக்கு சயின்ஸ் பற்றி அதிகமாய் தெரியாது. ஆனால் இந்த மாதிரி எரிந்து போவது ஒரு விதமாய் அதிர்ஷ்டம்தான். மீன்கள் சாகாது” என்றான் நேத்ரா. படகு ஒரு பக்கமாகவும், கப்பல் ஒரு பக்கமாயும் தீயை விட்டு தொலைதூரத்தில் போய்க் கொண்டிருந்தன.

படகு கரையை அடைவதற்கு மேலும் ஏழுநாட்கள் ஆகலாம். வயர்லெஸ் மூலமாய் படகிலிருந்து பத்திரிகைகளுக்குப் போய்ச் சேருவதற்கு ஏழு நிமிஷங்கள் போதும்.

“அமிலங்கள் சமுத்திரத்தில் கலந்து போனதில் இருபது லட்சங்கள் நஷ்டம்.”

கொட்டை எழுத்துகளில் செய்தி வெளியாயிற்று,

‘கராச்சியிலிருந்து வந்து கொண்டிருந்த கப்பலிலிருந்த அமிலங்கள் நேற்றிரவு கசிவு ஏற்பட்டதில் கடலில் கலந்து விட்டன. பிரபல தொழிலதிபர் பூஷணத்தின் தொழிற்சாலைகளுக்காக இறக்குமதியாகிக் கொண்டிருந்த, இந்த அமிலங்களின் மதிப்பு சுமார் இருபது லட்சங்கள். கண்டெயினரில் ஏற்பட்ட கசிவினால் இந்த ஆபத்து ஏற்பட்டிருக்கக் கூடும் நினைக்கிறார்கள். கப்பலுக்கு ஆபத்து எதுவும் இல்லை.’

பூஷணத்தின் கையிலிருந்த பேப்பர் நடுங்கிற்று. ஆவேசத்தால் தடுமாறிக் கொண்டிருந்தார்.

அது சாதாரணமான நஷ்டமில்லை. கோடிக் கணக்கில் இருக்கும். அவர் சாதாராண ஆள் இல்லை. பெரிய தொழிலதிபதி. வியாபார விஷயங்களில் அனுபவம் கண்டவர். ஒருமுறை ஃபார்முலா எதிரிநாட்டிற்குப் போய்ச் சேர்ந்து விட்டால் அதற்குப்

பிறகு தன் மதிப்பு துரும்பளவுக்குக்கூட இருக்காது என்றும் அவருக்குத் தெரியும். அதனால்தான் காப்ஸ்யூல் தானே தயாரிப்பதாய் சொன்னார். தயாரித்து விற்பனை செய்வதாய்ச் சொன்னார். எதிரிநாடு பண்ண வேண்டியதெல்லாம் ஒன்றுதான் தனக்கு திருட்டுத்தனமாய் ப்ளூட்டோனியம் அனுப்புவது ஒன்றுதான் என்று சொன்னார். முதலீட்டை எல்லாம் தானே போட்டார். இப்பொழுது மூழ்கிப் போய்விட்டார்.

## 26

அன்று மாலையே அவர் ஏஜெண்ட் க்யூவைச் சந்தித்தார். தெருவோரத்தில் கார் பஞ்சராகி நின்று போய்விட்டது. டிரைவர் டயரை மாற்றிக் கொண்டிருந்தான்.

“கார் விளக்குகளுக்குக் கருப்பு நிறத்தைப் போடுகிறேன் சார். போலீஸ்காரரர்கள் பொழுதெல்லாம் பிடிக்கிறாங்க” என்று ஒரு ஆள் தார் டப்பாவுடன் வந்தான்.

“போடு” என்றார் பூஷணம்.

அவன் தார் போட்டுக் கொண்டிருக்கையில் அவ்விருவருக்கும் இடையே உரையாடல் நடந்தது.

“ரொம்ப பெரிய அடிதான். பேப்பர் படித்தாயா? துரதிர்ஷ்டம் துரத்துகிறது போலிருகிறது.?”

“துரத்துவது துரதிர்ஷ்டம் இல்லை. ஏஜெண்ட் நேத்ரா! கப்பலில் ஆன கசிவிற்குக் காரணம் நேத்ரா.”

பூஷணம் அதிர்ந்து விட்டார். அதிர்ச்சியைப் பற்றி நேத்ரா பேசிய வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. அவர் முகம் ஆவேசத்தால் சிவந்தது. “என்னால் நம்ப முடியவில்லை” என்றார்.

“நேத்ரா இரண்டு மாதமாய் ஊரில் இல்லை. இப்பொழுதுதான் புரிகிறது. கடலில் காவல் போட்டிருந்தான் போலும். ஒன்றோடு ஒன்று கூட்டிப் பார்த்தால் அப்படித்தான் இருக்கணும் என்று தோன்றுகிறது.”

“நான் ரொம்ப நஷ்டப்பட்டு விட்டேன்.”

“ஏமாற்றம் அடையத் தேவையில்லை. இப்பொழுது என்ன ஆகிவிட்டது? இந்த நாட்டில் நடக்க வேண்டிய உற்பத்தி எங்கள் நாட்டில் நடக்கும். அவ்வளவுதானே. ஃபார்முலா எப்படியும் தயாராகி விட்டது. சிறிய அளவில் பரிசோதனை செய்து பார்த்தோம். அதைப் பெருத்த அளவில் ஒரு முறை பயன்படுத்திப் பார்த்தால் போதும். சுவர்ணரேகாவைக் தீர்த்துக்கட்டி விட்டு நாம் நம் நாட்டிற்கு போய் விடலாம்.”

பூஷணம் மகிழ்ச்சி அடைந்தார். பொருளாதார ரீதியில் நஷ்டமடைந்தாலும் அவர் இந்த திட்டத்திலிருந்து வெளியேற்றப் படவில்லை.

“ஆமாம் சுவர்ணரேகாவின் வாயை சாசுவதமாக மூடுவது மிக அவசியமானது.”

“நீ அந்த வேலையை கவனி.”

“அந்த இராசயனக் கலவைக்கு சில ஆயிரக் கணக்கான பேர்களை கொல்லக் கூடிய சக்தி உண்டா இல்லையா என்று இன்று பிற்பகல் பரிசோதனைப் பண்ணிப் பார்க்கிறேன். அதற்கப்புறம் தகவல் அனுப்புகிறேன். அது கிடைத்ததுமே சுவர்ணரேகாவை கொன்றுவிடு. அதற்கப்புறம் ஏதாவது சாக்கில் வெளிநாட்டுப் பயணத்தை ஏற்படுத்திக்கொண்டு மூன்று நாட்களில் கிளம்பி விடு. உன் விமானம் எங்கள் நாட்டை வந்து சேர்ந்ததுமே உனக்கு மாரடைப்பு வந்து விடும். எங்கள் நாட்டில் உனக்கு பைபாஸ் ஆபரேஷன் நடக்கும் அந்த சாக்கில் மூன்று நான்கு மாதங்கள் அங்கேயே தங்கி விடுவாய். அதற்கிடையில் இந்த நாட்டில் நாம் நினைத்ததை சாதித்து விடலாம். புரிந்ததா?”

“புரிந்தது” என்றவர் நிதானமாய், “என்னோடு கூட என் மகளும் வருவாள்.”

க்யூ நிமிர்ந்தான். இருவர் பார்வையும் கலந்தன.

“ஆமாம். இன்டர்போலுக்குக் கொஞ்சம் சந்தேகம் வந்து விட்டாலும் போதும். அம்சரேகாவை அரெஸ்ட் பண்ணி துன்புறுத்துவார்கள். அவளும் என்னோடு கூட வருவதுமிக அவசியம்.”

அதில் வேண்டுகோள் இல்லை. ‘நான் இதெல்லாம் பண்ணுவதால் நீயும் பண்ண வேண்டும்’ என்ற

நிபந்தனை இருந்தது. க்யூ கொஞ்சம் யோசித்து, தலையாட்டிவிட்டு, “நீ சொன்னது நிஜம்தான். ஆனால் அந்தப் பெண்ணுக்கு இதெல்லாம் தெரியக் கூடாது. எங்கேயாவது சுவிட்சர்லாந்தில் நான்கு நாட்கள் பிக்னிக் என்று சொல்லிப் கிளம்ப ஏற்பாடு செய். எங்கள் நாட்டிற்கு வந்த பிறகு மீதியைப் பார்த்துக்கொள்வோம்.”

“தாங்க்யூ.”

அவன் விளக்குகளுக்குத் தார் பூசிவிட்டு அங்கிருந்து போய்விட்டான். பூஷணம் யோசனையில் ஆழ்ந்துபோய் நின்றுவிட்டார். தன் மகளை இவை எல்லாவற்றையும் விட்டு வெகு தொலைவில் வைக்க வேண்டுமானால் அவன் சொன்னது போல் வெளிநாட்டில் தற்காலிகமாய் தஞ்சம் புக வேண்டியது இன்றியமையாதது. ஆனால் அவளுக்கு முன்பே தெரிந்தால் தகராறு பண்ணலாம். பிறந்து வளர்ந்த நாடு இது. அதனால் வேறு ஏதாவது சாக்கில் இங்கிருந்து அழைத்துச் சென்று விட வேண்டும்.

தற்காலிகம் என்றால் சுமார் ஓர் ஆண்டு.

*****

அம்சரேகா டைரியைத் திறந்தாள். கடந்த இரண்டு நாளாக அவளுக்கு என்ன பண்ணுவதென்று புரியவில்லை.

அவள் உடம்பு கூட சரியாயில்லை. காரணம் கூட அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. எதைச் சாப்பிட்டாலும் குமட்டுவது, வயிற்றைப் பிரட்டுவது. தன் பதற்றம் தந்தையின் கண்களில் பட்டு விடக்கூடாதே என்று அவள் அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் எவ்வளவு நாள்தான் அவளால் மறைத்து வைத்துக்கொள்ள முடியும்?

நேத்ரா! என்னவாகி விட்டான் நேத்ரா?

“I have no art
to reveal my heart
It’s full of fears
Stood as tears
on the edge of my right eye
when you said it good bye

டைரியை மூடி வைத்தாள்.

நேத்ரா எங்கே இருக்கிறான் என்று தெரியவில்லை. ஒரு மாதமாய் அவனைக் காணவில்லை. இன்னொரு பக்கத்தில் தந்தை வெளிநாட்டுப் பயணம் என்கிறார். எத்தனை நாளில் திரும்பி வரப் போகிறோம் என்று கேட்டாலும் பதில் சொல்லவில்லை.

இதெல்லாம் தந்தைக்குத் தெரிந்து போனால் அவளைக் கொன்று விடுவார். அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவள் இவ்வாறு தடுமாறிக் கொண்டிருந்த போது பிரதிமா அவளைச் சந்தித்தாள்.

நேத்ரா அவளை எதற்காகக் காதலிப்பது போல் நடிக்க வேண்டி வந்தது என்பதை விவரமாய் எடுத்துச் சொல்லிவிட வேண்டியது தன் கடமை என்றெண்ணினாள் பிரதிமா.

அம்சரேகா சிலையாய் நின்றபடி அத்தனையும் கேட்டாள். வெகுநேரம் வரை அது கனவா நினைவா என்று புரியவில்லை அவளுக்கு. ஆனால் பிரதிமா எவ்வளவு தூரம் சொல்ல வேண்டுமோ அவ்வளவு தூரம் சொல்லியிருந்தாள்.

தன்னால் தான் போட்டோ மாறாட்டம் நிகழ்ந்தது என்பதைச் சொல்லவில்லை. அவள் தந்தையின் குற்றங்களைப் பற்றியும், அவள் அக்காவின் பரிசோதனைப் பற்றிய அரசாங்கம் சந்தேகப்படுவதைப் பற்றியும் சொல்லவில்லை.

பல தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால், தன் தூண்டுதளால், நேத்ரா அவளைக் காதலிப்பது போல் நடிக்க வேண்டியிருந்தது என்று மட்டும் சொன்னாள். அம்சரேகாவின் உள்ளங்கைகளும் நெற்றியும் வியர்த்தெடுத்தன. சிறு வயதிலேயே தாய் இறந்து விட்டதாலும், தந்தை தன் வியாபார விஷயத்தில் ஆழ்ந்து போய் விட்டதாலும் அவள் தனிமையில் உழன்று வந்தாள். தனிமையானது காதல் உணர்வை மனதில் மலையாய் வளர்த்து விட்டிருந்தது.

ஸ்டேஷனில் வழியனுப்பி வைத்துவிட்டு, அந்த வேதனையைத் தாங்க முடியாமல் காரில் அடுத்த ஊர்

ஸ்டேஷனுக்குப் போய் திரும்பவும் விசாரித்துவிட்டு வரக் கூடிய அளவிற்கு உத்வேகத்தைக் கொண்டது அவள் காதல்.

அப்படி இருக்கும் போது இன்று நேத்ரா அவளை பிரதிமாவின் வார்த்தைகளின்படி நாட்டிற்காகக் காதலிப்பது போல் நடித்தான் என்றால்...

“நோ... நோ. நான் நம்பவில்லை. என்னால் நம்ப முடியாது.” குழப்பத்துடன் சொன்னாள் அம்சரேகா. “நேத்ரா அப்படிப்பட்ட ஆள் இல்லை. இந்தக் காதல், அன்பு எல்லாம் நடிப்பு என்றால் என்னால் நம்ப முடியாது.”

“நம்பாவிட்டால் உன் தலையெழுத்து. சரி, உன்னிஷ்டம். சொல்ல வேண்டிய கடமை என்னைச் சேர்ந்திருந்ததால் சொன்னேன்” என்றாள் பிரதிமா.

“நேத்ராவின் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு” என்றாள் அம்சரேகா திடமாய்.

“எங்களுக்கிடையே அதையும் விட அதிக பந்தமே இருக்கு. சுவர்ணரேகாவைக் காதலிக்கும்படி நான் சொன்னதைக் கேட்டுதான் நேத்ரா இந்த நாடகமாடினான். என் பேச்சின் மேல் அவனுக்கு அத்தனை நம்பிக்கை.” அதையும் விட திடமாய் சொன்னாள் பிரதிமா.

“பொய்!”

“இல்லை. நிஜம்! நாங்கள் இருவரும் ஒரே தொழிலில் இருந்து காதலித்துக் கொண்டவர்கள். அவன் உன்னைக் காதலித்தது தொழில் ரீதியாய் மட்டுமே.” சினிமாவின் கதாநாயகியைப் போல் சொன்னாள் பிரதிமா.

“என்னதான் தொழில்ரீதியாக இருந்தாலும் ஒரு பெண்ணின் சகலத்தையும் களவாடும் உரிமை உங்களுக்கில்லை” என்றாள் ரேகா.

பிரதிமா வெறுப்புடன் பார்த்தாள். “பிளாட்டிங் பேப்பரில் ஒற்றி எடுத்துவிட்டால் போய் விடுகிற முத்தத்திற்குப் போய் ‘சகலத்தையும்’ என்ற பெரிய வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்துகின்ற உன் சாமர்த்தியத்திற்குப் பாராட்டு! உன் நன்மைக்காகவே சொல்கிறேன். அவனை மறந்துவிடு. ‘அவன்

உனக்குத்தான் சொந்தம்' என்று சொன்னால், 'இல்லை இல்லை உனக்குத்தான் சொந்தம்' என்று பாட்டு பாடும் நிலையில் நான் இல்லை. அவன் என்னுடையவன் தான். என்றைக்குமே என்னுடையவன்தான். அண்டர்ஸ்டான்ட்!" என்று அங்கிருந்து போய் விட்டாள்.

அம்சரேகா சிலையாய் அப்படியே நின்று விட்டாள். பிறகு நேத்ராவின் பிளாட்டை நோக்கிக் கிளம்பினாள்.

*****

அவள் வெகு நேரமாய் கதவைத் தட்டியபோதும் யாருமே வந்து திறக்கவில்லை. நேத்ராவின் பிளாட்டிற்கு முன்னால் நின்று சுமார் ஐந்து நிமிடம் முயற்சி செய்தாள். பிறகுதான் அவள் வீடு பூட்டியிருந்தத்தைக் கவனித்துத் திரும்பி விட்டாள்.

அதே சமயத்தில் அஹோபிலா லிஃப்டில் மேலே வந்தாள். அம்சரேகாவைப் பார்த்துவிட்டு, "யார் வேண்டும் உங்களுக்கு?" என்று கேட்டாள்.

"நேத்ரா."

"நீங்கள் யார்?"

அவள் அதற்கு பதிலளிக்காமல், "நேத்ரா எங்கே இருக்கார்?" என்று கேட்டாள்.

அஹோபிலா யோசித்தாள். நேத்ரா கடலில் காவல் காத்துக் கொண்டிருக்கிறான் என்று சொல்வதில் விருப்பமில்லை அவளுக்கு. அவன் திரும்பி வந்து விட்ட செய்தி அவளுக்குத் தெரியாது.

"நேத்ரா இந்த நாட்டை விட்டுப் போய் விட்டார். இப்போதைக்குத் திரும்பி வரமாட்டார்" என்றாள்.

அம்சரேகாவின் இதயம் துடிப்பது ஒரு வினாடி நிறுத்திவிட்டு, திரும்பவும் வேகமாய் துடிக்கத் தொடங்கியது.

இப்போதைக்குத் திரும்பி வர மாட்டாரா? ஐயோ... இப்போது என்ன செய்வது?

"உங்கள் பிரச்சினை என்ன?

"ஒன்றுமில்லை. ஒன்றுமில்லை" அவள் தடுமாற்றத்தைப் பார்த்து அஹோபிலாவுக்குச் சந்தேகம் வந்தது.

“நீங்கள் யார் என்றே இன்னும் சொல்லலையே?” என்றாள்.

“நீங்கள் யார்?” எதிர் கேள்வி கேட்டாள் அம்சரேகா.

“என் பெயர் அஹோபிலா. அவருடைய கர்ல் பிரண்ட்”

அம்சரேகாவுக்குத் தலை சுழன்றது.

“எவ்வளவு பேர் அவருக்கு கேர்ல் பிரண்டுகள்?”

“அவர் காதல் மன்னன்.” கண்களை மூடி கிறங்கிய நிலையில் சொன்னாள்.

அம்சரேகாவின் கண்களில் நீர் துளிர்ந்தது.

“அவர் உங்களைக் கூட கல்யாணம் பண்ணிக் கொள்வதாய் சொன்னாரா?”

‘பைத்தியமே’ என்பது போல் பார்த்தாள் அஹோபிலா. “எங்கள் காதல் கல்யாணத்திற்கும் அப்பாற்பட்டது. புனிதமான காதல் எங்களுடையது.” கண்களை மூடிக்கொண்டு சொல்லத் தொடங்கினாள். “ஆனால் என் உடலும் மனமும் அவருக்குத்தான் சொந்தம். காதல் மன்னன் நேத்ரா. அந்தப் பெயர் என் உதட்டிலும் உள்ளத்திலும் எப்பொழுது இருக்கும். ஐ லவ் ஹிம். என் ரிகார்டு ரூமிலுள்ள ஒவ்வொரு ஃபைலிலும் அவர் எனக்குத் தென்பட்டுக்கொண்டேதான் இருப்பார்.” சொல்லிவிட்டு அவள் கண்களைத் திறந்தபோது அம்சரேகா அங்கே இல்லை.

## 27

“அக்கா! நான் ஏமாந்து போய் விட்டேன்.”

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த சுவர்ணரேகா அம்சரேகாவின் வார்த்தைகளைக் கேட்டு கண்களைத் திறந்தாள். முதலில் அவளுக்குப் புரியவில்லை.

“ஆமாம் அக்கா. நான் சறுக்கி விழுந்துவிட்டேன்.”

சுவர்ணரேகா வியப்போடு அவளை நெருங்கி, “இதென்னது? நீ சொல்றது நிஜம்தானா?” என்று கேட்டாள்.

“விவரங்களைக் கேட்காதே அக்கா. ஆனால் என் சந்தேகம் நிஜம்தான். என்னிடத்தில் தோன்றி கொண்டிருக்கிற மாறுதல்களை நான் அறிவேன். பெண் இல்லையா?” கண்ணீருடன் சொன்னாள்.

“யாரவன்?”

அவள் பதில் பேசவில்லை.

“நேத்ராதானே?”

“உனக்கெப்படி தெரியும்?”

“நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததை ஒரு முறை பார்த்தேன்.”

“ஆமாம். நேத்ரா தான்.”

“எங்கே இருக்கிறான் அவன்?”

“தெரியாது. அவனைப் பற்றி விசாரித்தேன். இந்த நாட்டிலேயே இல்லை என்று நினைக்கிறேன்.”

சுவர்ணரேகா யோசனையில் ஆழ்ந்தாள்.

அம்சரேகா அவளிடம் வந்தாள். “எனக்கென்னவோ பய்மாய் இருக்கு அக்கா. யாரிடம் சொல்லுவதென்றே தெரியவில்லை. இன்னொரு மாதம் போனால் எல்லோருக்கும் தெரிந்து போய் விடும்.”

“அப்பாவிடம் சொன்னாயா?”

“இல்லை. கொன்று விடுவார்.”

“டாக்டரிடம்?”

அவள் வார்த்தைகள் முடியக்கூட வில்லை. “போனேன்” என்றாள் அம்சரேகா.

“என்ன சொன்னார்?”

“உடனே ஒன்றும் தெரிந்து விடாது. இரண்டு மாதம் பொறுத்து வரச் சொன்னார். ரெண்டு மாதம் ஆகி விட்டது அவர் சொல்லி.” அம்சரேகாவின் கண்களில் நீர் சுழன்றது. எப்பொழுதும் ஜீன்ஸ் பேண்ட், டீ ஷர்ட்டுடன், ஆங்கில பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருக்கும் அவள் இப்பொழுது துவண்டு போயிருந்தாள்.

“நேத்ரா என்ன சொல்கிறான்?”

“காதலிப்பதாய் சொன்னான். ஆனால் இதே வார்த்தையை அவன் நிறைய பேரிடம் சொல்லியிருப்பதாய் தெரிந்தது. இது வரைக்கு இரண்டு பேர் சொல்லிவிட்டார்கள் என்னிடம்.”

“ப்ளேபாய் என்று சொல்லு.”

“இல்லை அக்கா. ரொம்ப நல்லவன்.”

சுவர்ணரேகாவின் முகம் கோபத்தாலும் அருவருப்பாலும் சிவந்தது.

“இந்த உலகத்தில் எந்த ஆணுமே நல்லவனில்லை. எந்த ஆணுமே! உன்னைப் போன்ற பெண்கள் அவர்களைத்தான் நம்புவார்கள். எல்லாம் முடிந்து விடும். இதே கதை எத்தனை முறை திரும்பத்திரும்ப நடந்தாலும் உங்களுக்கு புத்தி வராது.”

“நீ என்ன வேண்டுமானாலும் சொல்லு. நேத்ரா மட்டும் அப்படிபட்டவன் இல்லை.”

“அவன் உன்னைக் காதலிப்பது போல் நடித்தான். கல்யாணமாகாமலேயே வயிற்றில் சுமையைத் தந்து விட்டான். ஆனாலும் உன் கண்களுக்கு அவன் நல்லவன் போல் தென்படுகிறான். இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லையா?”

“இதெல்லாம் தவறாக இருந்தால், இதில் எனக்கும் பாதிப் பங்கு உண்டு.”

“இதைத்தான் பப்பி லவ் என்பார்கள்.

“என்னுடையது பப்பி லவ் இல்லை. பிளேடோனிக் லவ்.”

“உன் வயதில் எல்லாப் பெண்களுமே அப்படித்தான் எண்ணிக் கொள்வார்கள். எங்களுடையது பிளேடோனிக் லவ் என்று எண்ணிக் கொள்வதே பப்பி லவ். கிளம்பு, எனக்குத் தெரிந்த டாகடர் ஒருத்தி இருக்கிறாள்.”

“எதுக்கு?”

“அப்பாவுக்குத் தெரியக் கூடாது. இதெல்லாம் ரகசியமாய் நடக்கணும் வா” என்று அவளை மேற்கொண்டு பேசவிடாமல் இழுத்துக்கொண்டு போனாள். இருவரும் லேடி டாக்டரிடம் போனார்கள்.

சுவர்ணரேகா டாக்டரோடு கொஞ்சம் தனியாய் பேசினாள். பிறகு டாக்டர் அம்சரேகாவை உள்ளே அழைத்துச் சென்றாள்.

அவளைக் கட்டிலின் மீது படுக்க வைத்துவிட்டு, திரையை ஒதுக்கிக்கொண்டே கேட்டாள், “எத்தனாம் மாசம்?”

“நவம்பர் இல்லைங்களா? பதினோராவது மாதம்.”

“கேலண்டர் மாதம் இல்லை. இது நடந்து எவ்வளவு நாள் ஆச்சுன்னு கேட்கிறேன்.”

“இரண்டு மாதம் என்று நினைக்கிறேன்.”

டாக்டர் ஐந்து நிமிஷங்கள் பரிசோதித்தாள். அம்சரேகாவின் இதயம் வேகமாய் துடிக்கத் தொடங்கியது.

இருவரும் முன் அறைக்கு வந்தார்கள். டாக்டர் திரும்பவும் உள்ளே போனாள். சுவர் கடியாரத்தின் சப்தத்தைத் தவிர எங்கும் நிசப்தமாயிருந்தது. டென்ஷன் மனிதனை சாதாரணமாக இருக்க விடாது. சிலர் நடை பயிலுவார்கள். வேறு சிலர் நகத்தைக் கடிப்பார்கள். சிலர் அளவுக்கு மீறி சிகரெட் புகைப்பார்கள். குடிப்பார்கள். அதேபோல் அவள் அந்த டென்ஷனைக் குறைப்பதற்காகத் தன்னை அறியாமல் மேஜை மேலிருந்து பேனாவைக் கையிலெடுத்துக் கொண்டாள். டாக்டரின் ப்ரிஸ்க்ரிப்ஷன் மீது கவிதை எழுத தொடங்கினாள்.

கவலையிலிருந்து வெளியேறுவதற்கு அவளுக்குத் தெரிந்த ஒரே வழி கவிதை. அவள் வருத்தமெல்லாம் ஒரு அழகான கவிதையாய் உருவெடுத்தது. அவள் எழுதிய அந்த ஆங்கிலக் கவிதையைத் தமிழில் மொழி பெயர்த்தால் இவ்விதமாய் இருக்கும்.

“மலைச் சிகரங்களின் மேலுள்ள வெண்ணிற பனிப் படலங்களைப் பார்த்துக்கொண்டே இருப்பேன். மனமெல்லாம் சூனியமாகவும் திகிலாகவும் இருக்கும். துக்கம் தொண்டையிலிருந்து வெளிவர முடியாமல் இதயத்திற்குள் பந்தாய் சுருண்டு கொண்டே இருக்கும். நான் இல்லையே என்ற கவலை கொஞ்சமும் இல்லாமல் நீ எங்கேயோ உன் உலகத்தில் சாதாரணமாய் சிரித்து மகிழ்ந்து கொண்டிருப்பாய் என்ற யோசனையே என்னைத் தகிக்க வைக்கிறது.

நான் இங்கே நெருப்பில் வெந்து கொண்டிருக்கிறேன். பேனா நகராது. யோசனை ஓடாது. தூங்குமூஞ்சி இலைகளைப் போல் என் மனம் சுருங்கி விட்டது. இந்த சலனமில்லாத அவஸ்தை இன்னும் எவ்வளவு நாட்கள் கடவுளே!

உனக்கு வருத்தம் இருக்காது என்று சொல்லவில்லை. இரண்டு மைனஸ்கள் சேர்ந்து ஒரு பிளஸ் ஆனாற்போல், இரண்டு வருத்தங்கள் சேர்ந்தால்

ஒரு சந்தோஷம் வரும் என்று தெரியும் அல்லவா. வந்து விடு. புறா சிறகுகளை படபடத்துக் கொண்டாற்போல், என்னுள் உன் யோசனைகளை கடலில் மழை பெயதாற்போல் சதா நடுக்கத்துடன் என்னை வாட்டிக் கொண்டேயிருக்கின்றன.

நான் எப்பொழுதும் நினைத்துக்கொள்வேன். நீ என்னுடன் இருந்த அந்தக் கொஞ்ச நேரத்தில் ஒவ்வொரு வினாடியும் என்ன நடந்தது என்று நினைவு வைத்துக்கொள்ள வேண்டுமென்று! உன்னுடன் சேர்ந்து வந்து என்னைச் சூழ்ந்துகொண்ட அந்த மயக்கம் நீ போன பிறகுதான் விடுபடும்.

அதென்ன தலையெழுத்தோ? காலம் பாம்பாய் ஊர்ந்து செல்லும் போதே கொத்தி விட்டது. தனிமை வன்மத்துடன் புன்னகைத்தபடியே குசலம் விசாரிக்கிறது. அப்பொழுதுதான் நினைவுக்கு வருகிறது, மறக்க முடியாத வேதனையை விட இனிமையானது வேறொன்றில்லை என்று அனுபவத்தில் உணருகிறேன்.”

டாக்டர் வந்த சந்தடி கேட்டதால் அவள் தன் கவிதை உலகத்திலிருந்து மீண்டு வெளியே வந்தாள். டாக்டரின் கையில் அம்சரேகாவின் ரிப்போர்ட் இருந்தது.

“எல்லாவற்றையும் விவரமாய் பார்த்தேன். நான் நினைத்தது சரிதான். அவளுக்கு மூன்றாம் மாதம்.” டாக்டர் சொல்லிக் கொண்டிருந்தாள்.

மலைப்பாறை இடிந்து தலைமேல் விழுந்து விட்டாற்போல் மனமெல்லாம் உத்வேகத்தால் சண்டமாருதமாயிற்று. அவள் கையிலிருந்து பேனா நழுவி விழுந்தது. மனதில் ஒரு மூலையில், ஒருக்கால் இல்லாமல் இருக்குமோ என்று கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த சந்தேகமும் போய் விட்டது. அவள் காய்ந்த சருகாய் நடுங்கினாள். எங்கே இருக்கிறான் என்றே தெரியாத நேத்ராவுக்காக அவள் நயனங்கள் கங்கையாய் பிரவகித்தன. அவளுக்கு மூன்றாவது மாதம் என்ற டாக்டரின் வார்த்தைகள் அவ்வறை சுவரெல்லாம் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

*****

அவ்வறை நிசப்தமாயிருந்தது. அறையில் டி.வி. ஸ்க்ரீனும், பக்கத்திலேயே கண்ட்ரோல்ஸும் இருந்தன. டி.வி. திரையில் அந்த நகரத்தின் வரைபடம் இருந்தது. நடுவில் சிறிய விளக்கு எரிந்து எரிந்து அணைந்து கொண்டு இருந்தது.

பூஷணத்தின் கை பேண்டேஜ்லிருந்த ட்ரான்ஸ்மீட்டரின் விளக்கு அது. பூஷணம் நகரத்தில் எங்கே இருக்கிறார் என்பதை டி.வி. ஸ்க்ரீன் காட்டிக் கொண்டிருந்தது. வரைபடத்தின் நடுவில் இருந்தது அவர் வீடு.

அந்த அறையிலேயே ஒரு ஆள் வேறு ஏதோ வேலை பண்ணிக் கொண்டிருந்தான்.

திரையில் விளக்கு மெதுவாக நகர்ந்தது. வரைபடத்தில் அது நகரத்தின் எல்லையைத் தாண்டியதுமே, ‘பீப் பீப்’ என்ற சப்தம் வந்தது. தன் வேலையில் ஆழ்ந்து இருந்த ஆள் இந்த சப்தத்தைக் கேட்டுவிட்டு சட்டென்று செயல்பட்டு அடுத்த வினாடியே அந்தச் செய்தியை டிபார்ட்மெண்ட்டிற்குத் தெரியப்படுத்தினான்.

ஐந்தே நிமிஷத்தில் நேத்ரா அங்கே வந்தான். இப்பொழுது இந்தியா முழுவதுமே டி.வி.யில் தென்பட்டுக் கொண்டிருந்தது. பூஷணம் எங்கே இருந்தார் என்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்த விளக்கு இந்தியாவைத் தாண்டி மாலைத்தீவுகளை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

பூஷணம் தன் பிரைவேட் வாகனத்தில் தென் திசையாக போய்க் கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது. இந்தியாவிற்குத் தெற்கு திசையில் இருந்த தீவிற்கருகில் அவர் வாகனம் நின்றது.

மிகச் சிறிய தீவு. காட்டுவாகிகளும் நாகரீகம் தெரியாத மக்களும் வசிக்கும் தீவு அது.

பூஷணம் அங்கே போக வேண்டிய காரணம் என்ன?

நேத்ராவின் ஹெலிகாப்டர் அந்தத் தீவை அடையும்பொழுது மணி இரண்டாகிவிட்டது. கடலுக்கு நடுவில் பச்சை நிறத்தை பூசினாற்போல் தென்பட்டது

அத்தீவு. உயரமான மரங்கள், அடைந்த புதர்கள், கொடிகள். நாகரீகம் இன்னும் அப்பிரதேசத்தைக் கெடுத்து விடவில்லை. இந்தியாவின் எல்லைக்குள்ளேயே அடங்கி இருந்தது அது.

சிறிய மலை. அருவி. நதிக்கு அருகிலேயே இருபது முப்பது குடிசைகள் இருந்தன. நேத்ரா இறங்கி அவ்விடத்தை நோக்கிப் போனான். பூஷணம் என்ன காரணத்திற்காக அங்கே வந்தார்? அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது அவன் உத்தேசம். அக்கிரமச் செயல்களுக்கு அத்தீவை அவர்கள் பயன் படுத்திக்கொண்டாலும் அதில் ஆச்சரியப் படுவதற்கு எதுவுமில்லை.

அவன் துப்பாக்கியின் மீது விரலைக் குறியாய் வைத்துக்கொண்டு முன்னோக்கி நடந்தான். தொலைவில் அருவின் சப்தம் கேட்டது. காட்டுப் பறவை ஒன்று விட்டு விட்டுக் கத்திக் கொண்டிருந்தது. மரக்கிளைகளுக்கு இடையே இருந்து வெளிவந்த காற்று அலாதியான சப்தத்தை எழுப்பி, பயத்தைத் தோற்றுவிக்கும் படியாய் இருந்தது. நேத்ரா பத்தடி எடுத்து வைத்தான். குடிசைகள் தெளிவாகத் தெரிந்தன. அவற்றின் கூரைகளில் கட்டியிருந்த பாம்புத் தோல்கள் காற்றில் மெதுவாய் ஆடிக் கொண்டிருந்தன. பாம்புத் தோல் தீய சக்திகளின் பிடியிலிருந்து வீட்டைக் காப்பாற்றும் என்பது காட்டுவாசிகளின் நம்பிக்கை.

குடிசையை நோக்கிச் செல்வதற்கு மரங்களையொட்டி ஒற்றையடிப் பாதை சென்றது. குடிசையைப் பார்த்தபடியே போய்க் கொண்டிருந்த நேத்ராவின் கால்களில் ஏதோ தட்டுப்படவே, தடுக்கி விழ இருந்த அவன் சமாளித்துக்கொண்டு குனிந்து பார்த்தான்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் இறந்து போன ஒரு காட்டுவாசியின் பிணம் காலடியில் கிடந்தது.

அவன் நிமிர்ந்தான்.

தொலைவில் ஒரு ஆடு செத்துக் கிடந்தது.

திடீரென்று அவ்விடத்தில் காற்று கூட ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாற்போல் இருந்தது. திடீரென்று வந்து

சூழ்ந்துகொண்ட நிசப்தம் உடம்பைச் சிலிர்க்கச் செய்தது.

அவன் இன்னும் நான்கடிகள் நடந்தான். அங்கு கண்ட காட்சியைப் பார்த்துவிட்டு சீக்ரெட் ஏஜெண்டான அவனே தன்னை அறியாமலேயே அதிர்ந்து போய் ஓரடி பின்வாங்கினான். அவன் உரோமங்கள் சிலிர்த்தன. முகத்தைத் திருப்பிக்கொண்டான். தொலைவில் குடிசைகளுக்கு அருகில் பிணங்கள் அங்கும் இங்கும் வீசிவிட்டது போல் சிதறிக் கிடந்தன. அதிக நாட்கள் ஆகாததால் இன்னும் நாற்றமடிக்கத் தொடங்கவில்லை. ஜந்துக்களும் இறந்து கிடந்தன. ஒரு நள்ளிரவு நேரத்தில் யாரோ கொலையாளி நிசப்தமாய் வந்து எல்லோரின் கழுத்தையும் நெரித்துக் கொன்று போட்டுவிட்டுப் போயிருந்தாற்போல் இருந்தது. அவர்கள் உடம்பில் எந்த காயமும் இல்லை. அது ஒன்றுதான் வித்தியாசம்.

குறைந்தது ஒரு உயிராவது பிழைத்திருக்குமா என்று அவன் அந்தத் தீவு முழுவதும் தேடினான். பாம்புகள், தேள்கள்.... சகல ஜீவராசிகளும் சலனமில்லாமல் கிடந்தன.

தொலைவில் ஒரு குடிசை தென்பட்டது. காட்டுவாசிகளுள் திருமணமான புதுமணத் தம்பதிகளை அவ்வாறு தொலைவில் தனி குடிசையில் வைப்பார்கள். அவன் அங்கு போய் கதவைத் தள்ளினான். திறக்க முடியவில்லை.

காலால் பலமாய் உதைத்தான். தாழ் நீங்கி, கதவு திறந்து கொண்டது. உயிர் போவதற்கு முன்னால் எழுந்திருப்பதற்குக் கூட நேரமில்லாமல் அவர்கள் விழுந்து கிடந்தார்கள். அவன் மேல் அவள் விழுந்து கிடந்தாள்.

நேத்ரா கதவைத் தாழிட்டுவிட்டு வெளியே வந்து விட்டான்.

## 28

“பிணப் பரிசோதனை மூலம் எதுவும் தெரியவில்லை.”

“ஒரு தீவில் அத்தனைப் பேர் செத்துக் கிடந்து இருக்கிறார்கள். எந்த தடயமும் கிடைக்கவில்லை. குறைந்தது பிணப் பரிசோதனையில் கூட எதுவுமே கிடைக்கவில்லை” என்றான் நேத்ரா.

சீஃப் பேசவில்லை.

“அதற்கு முன்னால் பூஷணம் அந்தத் தீவிற்குப் போயிருக்கிறார். அதை நாம் மறந்துடக் கூடாது.”

“பூஷணத்திற்கு அந்த மரணங்களுக்கும் சம்பந்தம் இருக்கும் என்கிறாயா?”

“அப்படித்தான் நான் நிச்சயமாய் நம்புகிறேன். அது மட்டுமில்லை. சுவர்ணரேகாவின் பரிசோதனைக்கும் இந்த மரணங்களுக்கும் கூட சம்பந்தம் இருக்கும் என்று நம்புகிறேன்.”

“இயற்கையாய் இல்லாமல் அந்தத் தீவில் அவ்வளவு பேர் இறந்து போனது ஏதோ அக்கிரமச் செயலாக இருந்திருந்தால் அது ரிப்போர்ட்டில் தெரிந்திருக்கும்.”

நேத்ரா முதன் முதலாக பகீரதனை எரிச்சலுடன் பார்த்தான். “சுவர்ணரேகாவின் பரிசோதனையின் மீது பூஷணம் கோடிக் கணக்கான முதலீட்டை முடக்கியிருக்கிறார். நான் களத்தில் இறங்கியதும், பரிசோதனைச்சாலையை ஏரிக்குக் கீழே மாற்றிக்கொண்டு விழிப்படைந்து விட்டார் ஏஜெண்டு க்யூ இவ்வளவு நாட்களாக இங்கே முகம் போட்டிருந்தான். பூஷணத்தின் வார்த்தைகளில் இந்த நாடே தன்னுடையது ஆகப் போகிறது என்ற செருக்கு வெளிப்பட்டது. ஒரு சிறிய பரிசோதனைக்காக இவ்வளவு சம்பவங்கள் தொடர் சங்கிலியாய் நடக்காது. என் ஊகம் சரியாய் இருந்தால், இந்த நாட்டையே... இல்லை உலகம் முழ்வதையுமே கபளீகரம் பண்ணிவிட முயற்சி நடந்து வருகிறது,”

“ஒரு சாதாரண தொழிலதிபரின் மீது சி.பி.ஐ. விசாரணை என்று எண்ணியிருந்த இது எதில் தொடங்கி எதில் முடியுமோ?” சீஃப் பயந்துபோய் கவலையுடன் சொன்னார்.

நேத்ரா பதில் பேசவில்லை. அந்தப் பரிசோதனை பலித்துவிட்டதில் அவனுக்குத் துப்புத் துலக்குவதில்

எல்லா வழிகளும் மூடிக்கொண்டு விட்டாற்போல் இருந்தது.

ஏதாவது க்ளூ எஞ்சி இருந்ததென்றால் அது சுவர்ணரேகாதான். அவன் அவளைப் பற்றித் துப்புத் துலக்கும்படி பகீரதனிடம் சொன்னான். பூஷணத்தின் மகள்களை அவன் முதல் முதலாய் சந்தித்த பொழுது சுவர்ணரேகா, “நீங்க தவறாய் புரிஞ்சுகிட்டீங்க. நான் என் தந்தைக்கு வளர்ப்பு மகள்” என்று முறுவலுடன் சொன்னது நினைவுக்கு வந்தது. அவன் அந்த யோசனையில் ஆழ்ந்திருந்த போது பிரதிமா பைலுடன் அந்த அறைக்குள் நுழைந்தாள். ஏறக்குறைய மூன்று சி.பி.ஐ. ஏஜெண்டுகள் அரும்பாடுபட்டு சேகரித்த விவரங்கள் அதில் இருந்தன. இதற்கு முன்னால் பிரதிமா சேகரித்திருந்த சுவர்ணரேகா சம்பந்தப்பட்ட விவரங்கள் இல்லாமல் கடந்த கால வாழ்க்கைக் குறிப்புகளும் அதில் இருந்தன. பிரதிமா பக்கத்திலிருந்த நாற்காலில் உட்கார்ந்து ஃபைலைப் பிரித்தபடி, “ஒரு அபூர்வ விஷயம் தெரிந்தது” என்றாள்.

“என்ன?”

“சுவர்ணரேகா சர் ஜெகதீஷ் சந்திர சட்டர்ஜியின் மகள்” என்றாள்.

கேட்டு கொண்டிருந்த இருவரும் திடுக்கிட்டார்கள். மைகாட் என்று முணுமுணுத்தார் சீஃப்.

“சர் ஜெகதீஷ் சந்திர சட்டர்ஜி இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானிகளுள் ஒருவர். மைக்ரோ பயாலஜியிலும், கெமிஸ்ட்ரியிலும் அவர் பண்ணிய பரிசோதனைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. திரவ உருவத்தில் இன்றி கியாஸ் மூலமாய் பூச்சிக்கொல்லி மருந்தைத் தயாரிக்கும் பரிசோதனையில் பெரும்பாலும் வெற்றியடைந்து விட்டார் என்றே சொல்ல வேண்டும். அந்த நாட்களில்தான் அவர் தன் சோதனைக் கூடத்திலிருந்த சிலிண்டர் வெடித்து மரணமடைந்தார். அவர் மகளுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு கூட கொடுத்தது. ஆனால் சுவர்ணரேகா அதை மறுத்துவிட்டாள். அதற்குப் பிறகு அவளை யாரும் பொருட்படுத்தவில்லை. சுவர்ணரேகா சிறுவயதிலிருந்தே புத்திசாலி மாணவி. காலேஜில் படித்துக் கொண்டிருந்த போதே தந்தையோடு

பரிசோதனைகளில் உதவி செய்வாள். தந்தை இறந்த பிறகு ஆறு மாதகாலம் ஹெ.ஆர். தொழிற்சாலையில் வேலை செய்து வந்தாள். போதைப் பொருட்களுக்கு அடிமையானதால் அங்கிருந்து அவளை பனி நீக்கம் செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு அவள் ஏறக்குறைய அண்டர்கிரவுண்டிற்கே போய் விட்டாள்."

"ஒரு விஷயம்" என்று நேத்ரா இடைமறித்ததால் பிரதிமா நிறுத்தினாள்.

"சுவர்ணரேகாவை சஸ்பென்ட் பண்ணியது வெறும் நாடகம்."

"ஏன் அவ்வாறு சொல்கிறாய்?"

"ஹெச். ஆர். தொழிற்சாலை பூஷணத்தினுடையது ஆதனால். தன் சொந்த மகள் பெயரில் வைத்திருந்த ஃபேக்டரி அது. கேவலம் மக்கள் சுவர்ணரேகா விஷயத்தை மறந்து போய் விட வேண்டும் என்றுதான் ஆறுமாத காலத்திற்குத் தன்னிடம் வேலை தந்தார். பிறகு சொந்த லாப் ஏற்பாடு பண்ணிக்கொண்டு அதில் அவளை மாற்றி விட்டிருப்பார், சஸ்பென்ஷன் என்ற சாக்கில்."

இத்தனை சிறிய விஷயம் தனக்குத் தோன்றாமல் போனதற்கு பிரதிமா வெட்கமடைந்தாள்.

நேத்ரா எழுந்து நின்று, "நமக்கு அதிக நேரமில்லை. ஏதோ ஒரு வழியில் பூஷணத்தை அரெஸ்ட் பண்ண வேண்டும்" என்றான்.

"லாபமில்லை. அவன் லாயர்கள் அடுத்த நிமிஷமே அவனை வெளியே கொண்டு வந்து விடுவார்கள்."

"அடுத்த வினாடியே நாம் இன்னொரு குற்றத்தை அவர் மேல் சுமத்த வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் சரி அவர் வெளி உலகத்தில் இருக்கக் கூடாது."

அப்படிச் சொல்லிவிட்டானே தவிர அது நடக்க முடியாத காரியம் என்று நேத்ராவுக்குத் தெரியும். கோர்ட்டிலிருந்து ஜெயில் வரைக்கும் பூஷணத்திற்கு உதவி பண்ணுபவர்கள் இருக்கிறார்கள். அவருடைய செல்வாக்கிற்காகவும், அவர் இரைக்கும் பணத்திற்காகவும் அதிகாரிகள் அவனுக்காக நாயாக உழைப்பார்கள். இங்கே நியாயம் அநியாயம் என்ற

பேச்சுக்கு இடமில்லை. நாடு எப்படிப் போனாலும் பரவாயில்லை. சுயநலம் முக்கியம்.

பிரதிமா ஏதோ சொல்ல வந்தவள் அவன் கம்பீரமாய் இருந்ததைப் பார்த்துவிட்டுப் பேசாமல் இருந்து கொண்டாள். நேத்ரா அங்கிருந்து மௌனமாய் நகர்ந்தான். எஞ்சியிருந்த இருவரும் அவனைப் பேச வைக்க முயற்சி செய்யவில்லை. அவன் ஏதோ யோசனையில் மூழ்கியிருந்தது அவர்களுக்குப் புரிந்தது. அவர்களுக்கும் பிரச்சனையின் தீவிரம் புரிந்தது. ஒரு தீவைச் சேர்ந்த உயிரினங்கள் அத்தனையும் அழிந்து போய்விட்ட போட்டோக்கள் அவர்கள் மேஜை மேல் இருந்தன.

நேத்ரா போன கொஞ்ச நேரத்திற்கெல்லாம் போன் மணியடித்தது. சீஃப் கூட இல்லாததால் பிரதிமா அதை எடுத்து, "ஹலோ" என்றாள்.

"நேத்ரா இருக்காரா?"

"நீங்கள் யார்?"

"அம்சரேகா என்று சொல்லுங்கள்."

பிரதிமா வெறுப்போடு கையில் இருந்த ரிசீவரைப் பார்த்தாள். இந்தப் பெண் ஒருத்தி நாயுருவியைப் போல் ஒட்டிக்கொண்டு துன்பம் தருகிறாள்.

"என்ன பேசணும் நேத்ராவோடு?"

"ரொம்ப அர்ஜென்ட் ப்ளீஸ்."

"உங்களுக்குப் போன் நம்பர் யார் கொடுத்தாங்க?"

"அது அவ்வளவு முக்கியமா?"

"பாருங்கள் மிஸ்." கம்பீரமாய் சொன்னாள் பிரதிமா. "இது நாட்டுக்குப் பாதுகாப்பு சம்பத்தப்பட்ட சீக்ரெட் ஆபீஸ். மிக ரகசியமான போன் நம்பர் இது. இது உங்களுக்கு எப்படி தெரிந்தது என்று விவரமாய் எங்களுக்குச் சொல்லாமல் போனால் உங்களை மிசா, ஃபேரா, ஆண்டி டெரரிஸ்ட் சட்டங்களின் கீழ் கஸ்டடியில் எடுத்துக்கும்படி நேரிடும். நீங்கள் மட்டுமே இல்லை. இந்த ரகசிய நம்பரை உங்களக்குக் கிடைக்கும்படி செய்த ஆளுடைய விவரங்களையும் எங்களுக்கு சொல்ல வேண்டும். அந்த ஆள் மீது கூட நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்." கம்பீரமாய்ச் சொன்னாள்.

“ஐயோ நான் பண்ணியது தவறு என்றால் என்னை மன்னித்து விடுங்கள். எனக்கு எந்த தண்டனை விதித்தாலும் பரவாயில்லை. ஆனால் எனக்கு உங்கள் போன் நம்பரைத் தந்த அம்மாளை மட்டும் ஒன்றும் பண்ணிடாதீங்க. பாவம் ரொம்ப வயதான பெண்மணி.”

“வயதான பெண்மனியா? யார் அந்த அம்மாள்?”

“பிரதிமா என்று உங்கள் ஆபீசில் வேலை பார்க்கிறாள் இல்லையா. அவளுடைய பாட்டி.”

பிரதிமா முன்னுக்குத் துள்ளி விழப் போனவள் சமாளித்துக்கொண்டு, “அந்தம்மாளை எங்கே சந்திச்சீங்க நீங்க?” என்று கேட்டாள் தளர்ந்து போய்.

“காய்கறிக் கடையில். அந்தம்மாளுக்கு கத்திரிக்காய் பேரம் சரியாய் படியாமல் போனதால் கொஞ்சம் உதவி பண்ணினேன். பாவம். அந்த அம்மாளின் தவறு எதுவும் இல்லைங்க. அந்த நன்றியோடு புடலங்காய்....”

“வேண்டாம். காய்கறி பேரம் வேண்டாம். அந்தம்மாளை உங்களுக்கு எப்படித் தெரியும்? அந்த விஷயத்தைச் சொல்லுங்கள்.” துக்கத்தை மென்று விழுங்கிக்கொண்டே கேட்டாள் பிரதிமா.

“பிரதிமாவையும், அவங்க பாட்டியையும் முந்தாநாள் கோவிலில் பார்த்தேன். அதற்குப் பிறகு பாட்டியை தனியாய் காய்கறிக் கடையில் பார்த்தேன். தெய்வம்தான் எங்களை இப்படி சந்திக்க வைத்திருக்கிறது என்றெண்ணி, “பிரதிமா வேலை பண்ற ஆபீசிலேயே வேலை பார்த்துட்டிருக்கிற நேத்ராவை உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டேன்.

“ஐயோ தெரியாமல் என்னம்மா என்று இந்த போன் நம்பரைக் கொடுத்தாள். அதுசரி, நீங்கள் என்னவோ இது இந்தியா சம்பந்தப்பட்ட மிக ரகசியமான போன் நம்பர் என்று சொல்றீங்க. அந்த கத்திரிக்காய் கடைக்காரன் கூட இந்தப் போன் நம்பரைக் கேட்டானே? நாட்டுக்கு இதனால் எந்த ஆபத்தும் வந்து விடாதே?”

“பரவாயில்லை. இந்தியாவின் ரகசியங்கள் எல்லாம் வெளிநாடுகளில் காய்கறி கடைக்காரங்களுக்குக் கூட தெரிந்திருக்கிறது. நீ

பதற்றமடையத் தேவையில்லை. சரி, விஷயத்தைச் சொல்லு.”

“அது எனக்கும், நேத்ராவுக்கும் சம்பந்தப்பட்ட பர்சனல் விஷயம்.”

“ஆனாலும் பரவாயில்லை.”

“மன்னித்துக் கொள்ளுங்கள். என்னை ஜெயிலில் போட்டாலும் சரி. அதைச் சொல்லமாட்டேன்.” மறுமுனையிலிருந்து திடமாய்க் கேட்டது. “நான் எங்கப்பாவோடு வெளிநாட்டிற்குப் போகிறேன். அதனால்தான் இந்த விஷயம் அர்ஜென்ட்.”

பிரதிமா யோசனையில் ஆழ்ந்தாள். ‘இந்தப் பெண் சாதாரணமாய் சொல்லமாட்டாள் போல் தெரிகிறது. ஏன் இவ்வளவு தகராறு பண்ணுகிறாள்? காதல் வரைக்கும் சரியாய்த்தான் இருக்கிறது. நடந்தது என்னவோ நடந்துவிட்டது என்று அடங்கிப்போய் விட்டுத் தொலைக்க வேண்டியதுதானே? தானும் சொல்லியாகிவிட்டது. அஹோபிலாவும் சொல்லிவிட்டாள். ஆனாலும் இந்த ரகசிய உளவாளி வேலை, போன் நம்பர்களைக் கண்டு பிடிப்பது, துரத்திக்கொண்டே வருவது இதெல்லாம் எதற்காக? ஏதோ ரகசியம் இருக்கிறது. அதென்னது?

அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. “ஒரு நிமிஷம் இருங்க. நேத்ராவைக் கூப்பிடுகிறேன்” என்று போனை வைத்துவிட்டு பக்கத்து அறைக்குப் போனாள். டெக்னிக்கல் உபகரணங்கள் இருந்தன அவ்வறையில். அதிலிருந்து சிறிய மௌத் பீஸ் போன்ற ஒன்றை வைத்துக்கொண்டு போனிடம் வந்தாள்.

அவள் மார்பு வேகமாய் படபடத்தது. தன் தொழில் திறமைக்கு இது ஒரு சவால். அவள் அந்த உபகரணத்தைப் போனுடன் பொருத்தினாள். அதன் மூலமாய் பெண் குரல் கூட கொஞ்சம் கட்டையாய் ஒலிக்கும். சி.ஐ.டி யில் இன்னொருவரின் குரலைப் போல் குரலை மாற்றிக்கொண்டு பேசுவதற்குப் பயிற்சி தருவார்கள். இதுவரையிலும் அதற்குத் தேவை ஏற்படவில்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அதுவும் ஆண்குரலைப் போல் பேச வேண்டியிருப்பது.

அவள் குரலை மாற்றிக் கொண்டு, “நேத்ரா ஹியர்” என்றாள்.

“நேத்ரா நீங்கள்தானா? நீங்களே தானா?” மறுமுனையிலிருந்து உணர்ச்சி பெருக்குடன் கேட்டது.

ஸோ ... அவள் வென்றுவிட்டாள்.

“ஆமாம். நான்தான். என்ன விஷயம்? என்றாள். இப்படிப்பட்ட சந்தர்பங்களில் மிகச் சுருக்கமாய்ப் பேசவேண்டும் என்று தெரியும் அவளுக்கு. நேத்ராவின் உச்சரிப்பு அவளுக்கு நன்றாகத் தெரிந்திருந்த போதிலும், அந்த கருவி எவ்வளவு நுட்பமாக பயன்பட்ட போதிலும், உற்சாகத்தால் அதிகமாய் பேசிவிட்டால் அந்தப் பெண் இவளைக் கண்டுபிடித்து விடக்கூடிய ஆபத்து உண்டு.

“நான் உங்களோடு அர்ஜென்ட்டாய்ப் பேசணும் நேத்ரா!”

“என்ன?”

“போனில் சொல்கிற விஷயமில்லை. அதுசரி, என்னவாகி விட்டீர்கள் நீங்கள்? நான் எவ்வளவு பயந்துவிட்டேன் தெரியுமா? உங்களைப்பற்றி அந்த பிரதிமாவும், அஹோபிலாவும் சொன்னதைக் கேட்டு பயப்படாமல் என்ன பண்ணுவேன்?”

“கவிதை கூட எழுதி இருப்பாயே?”

“நிஜந்தான் நேத்ரா. சரியாய் ஊகித்து விட்டீங்க. என்ன எழுதினேன் தெரியுமா?”

பிரதிமா தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டாள். இப்பொழுது சொந்தக் கவிதையால் தன்னைப் பைத்தியமாய் அடிக்கப் போகிறாளோ இந்தப் பெண் என்றெண்ணி அலுத்துக்கொண்டே கேட்கத் தொடங்கினாள். மறுமுனயிலிருந்து அம்சரேகா இரண்டு வார்த்தைகள் பேசியதுமே பிரதிமாவின் அலுப்பு மெல்ல மெல்லக் குறைந்து ஆச்சரியம் தோன்றத் தொடங்கிற்று. ஒரு அபூர்வ உணர்ச்சியால் மனம் கரைந்தது.

அதுவரை அவளுக்கு அம்சரேகாவின் பால் ஒருவிதமான ஏளன மனப்பான்மை இருந்து வந்தது. ஒரு தேசத்ரோகியின் மகள், தந்தை சம்பாதித்த கோடிக்கணக்கான் சொத்து இருகிறது. ஜீன்ஸ் பேண்ட்

போட்டுக்கொண்டு விசிலடித்துக் கொண்டு காரில் சுற்றும் பெண் என்றெண்ணி வந்தாள். ஆனால் அவள் எழுதியிருந்த கவிதையைக் கேட்டபொழுது அவள் மனதில் ஒரு அபூர்வ உணர்வு ஏற்பட்டது.

“இன்னொரு தடவை சொல்லு” என்று கேட்டாள் தன்னையறியாமல்.

அம்சரேகா தான் ஆங்கிலத்தில் எழுதி வைத்திருந்த கவிதையைப் படித்தாள்.

கவிதையின் சுருக்கம்.

“நான் கண்ணாடியில் பார்த்துக்கொண்ட பொழுது தென்பட்ட உருவம் நீ. அதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? என் பிரதிபிம்பம்தான் நீ. மேகங்களுக்குப் பின்னாலிருந்து நட்சத்திரங்கள் எட்டிப் பார்க்கின்றன. நாம் பிரிந்து போவதைப் பார்த்து அவை துக்கப் படுகின்றன. காதல் என்றால் என்னவென்று உன்னைப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. ஆனால் உனக்காக நிற்கும் பெண்களின் க்யூவைப் பார்க்கும் போது அதைச் சொல்ல பயமாயிருக்கிறது.”

கடைசி வரி பிரதிமாவை அவ்வளவாய் சந்தோஷப்படுத்தவில்லை. தன்னையும், அஹோபிலாவையும் க்யூவில் நிற்கும் பெண்களோடு ஒப்பிட்டுச் சொன்னது அவளைச் சுருக்கென்று தைத்தது. அதனால் திரும்பவும் பழைய பிரதிமாவாகி விட்டாள்.

“அவ்வளவு வருத்தப்படும் படியாய் என்ன ஆகிவிட்டது?”

“லேடி டாக்டர் மூன்றாவது மாதம் என்று சொன்னாள்.”

பிரதிமா அதிர்ந்து போய், “வாட்?” என்று கத்தினாள்.

“ஆமாம். நானும் அக்காவும் போனோம். எனக்கு முதலிலிருந்தே சந்தேகமாய்த்தான் இருந்தது. இப்பொழுது டாக்டர் உறுதியாய்ச் சொல்லிவிட்டாள்.

“அதற்கு நேத்ராதான் காரணம் என்கிறாயா?” தானே நேத்ராவாய் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து விட்டாள் பிரதிமா.

“இதென்ன நேத்ரா இப்படிச் சொல்றீங்க? என்மீது உங்களுக்கு ஏதாவது சந்தேகமாய் இருக்கிறதா? மை காட்! எத்தனை துரதிர்ஷ்டமான நிலைமை வந்து சேர்ந்து விட்டது எனக்கு. அன்றைக்கு நடந்ததுகூட ஞாபகமில்லையா?”

அவள் சொல்லிக்கொண்டே போக, அதற்குமேல் கேட்க மாட்டாதவளாய் பிரதிம்மா அவள் வார்த்தைகளை இடைமறித்து, “எந்த டாகடர் உனக்குச் சொன்னாள்?” என்று கேட்டாள்.

“சுவப்னா நர்சிங் ஹோம்.”

அதற்கு மேல் ஒன்றும் பேசாமல் அவள் போனை வைத்துவிட்டு சுவப்னா நர்சிங் ஹோமிற்குப் போன் பண்ணினாள். “நாங்கள் சி.பி.ஐ. லிருந்து பேசுகிறோம். அம்சரேகா என்ற பெண் உங்களிடம் வந்தாள். எந்த டாக்டர் அவளை பரிசோதித்தார் என்று ரிகார்டைப் பார்த்துச் சொல்லுங்கள்.”

“நான்தான்.” மறுமுனையிலிருந்து கேட்டது. “என்ன விஷயம்?”

“டாக்டர்! தற்சமயம் அவள் எந்த நிலையில் இருக்கிறாள்?”

“நீங்கள் பரிசோதிக்கும் எந்த விஷயத்தில் அவள் நிலைமையைப் பற்றி உங்களுக்கு தகவல் வேண்டும்?”

பிரதிமா தடுமாற்றமடைந்து, “அதையெல்லாம் சொல்லணுமா டாக்டர்?”

“தேவையில்லை. உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள்.”

“அம்சரேகாவுக்குத் தற்சமயம்...”

“மூன்றாம் மாதம்.” சுருக்கமாய் முடித்தாள் மறுமுனையில்.

பிரதிமா அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. மறுமுனையிலிருந்து, “ஹலோ ஹலோ” என்று கேட்டுக் கொண்டே இருந்தது.

அவள் கையிலிருந்து போன் தன்னையறியாமல் நழுவி விழுந்தது.

*****

“நான்சென்ஸ்! என்ன சொல்கிறாய் நீ?” நேத்ரா கோபமாய் கத்தினான்.

“நான் இல்லை. அந்தப் பெண் அவ்வாறு சொல்கிறாள்.” அதையும் விட பெரிதாய் கத்தினாள் பிரதிமா. “இன்னொருத்தர் சொன்னால் நம்பியிருக்க மாட்டேன். அம்சரேகா சுயமாய் என்னிடம் சொன்னாள். போகட்டும். என்னை அழ வைப்பதற்காக சொல்லியிருப்பாளோ என்றெண்ணிக் கொள்ளவும் இடமில்லை. நானே நேத்ராவைப் போல் பேசினேன். நம்மிருவருக்குமிடையே என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியாதா என்று அப்பெண் சுயமாய் கேட்டாள். என் காதால் கேட்டேன். இன்னும் இதையெல்லாம் பொய் என்கிறாயா?”

“நிஜமாய் இதெல்லாம் பொய்தான் பிரதிமா. உனக்கு பயந்து பொய் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இல்லை. ஆனால் மனசாட்சி அறிய சொல்கிறேன். இதெல்லாம் எப்படி நடந்தது என்று எனக்குத் தெரியாது.”

“அப்படியானால் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளணும் என்று ஆசைப்பட்டு அம்சரேகா இதுபோல் பொய் சொல்கிறாள் என்கிறாயா?”

“அம்சரேகா அப்படிப்பட்டவள் இல்லை.”

“அம்சரேகாவும் நல்லவள். அவள் வயிற்றில் சுமை உருவாகியிருப்பதும் உண்மை. எதை நம்பச் சொல்கிறாய் என்னை? என்ன பண்ணச் சொல்கிறாய்?”

“எதையுமே நம்பத் தேவை இல்லை. எதுவும் பண்ணவும் வேண்டாம். வரப் போகிற ஆபத்தைப் பற்றி யோசி. அது போதும். அந்தப் பெண்ணை அவள் தந்தை வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்கிறார் என்றால், சட்டத்திற்கு விரோதமாய் இந்த நாட்டை விட்டுப் போய்விட திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். ஆபத்து நெருங்கி விட்டது. அதனால்தான் இன்டர்போல் விசாரணையில் சிக்கிக்கொள்ளாமல் தப்பித்துப் போய்க் கொண்டிருக்கிறார். என் ஊகத்தின்படி அவர் மகளோடு ஏதோ வெளிநாட்டில் தஞ்சம் புகுந்துகொள்ளவிருக்கிறார். இந்தப் பயணத்தில்

சுவர்ணரேகாவை அழைத்துச் செல்லவில்லை என்றால் அவளை இங்கேயே... “ என்று யோசனையில் மூழ்கியபடி அங்கிருந்து போய்விட்டான்.

அவன் உண்மையான சி.பி.ஐ. ஏஜெண்ட். அவனைப்பற்றி இவ்வளவு ரகளை ஏற்பட்டிருக்கிறது. பிரதிமா உலுக்கி எடுக்கிறாள். ஆனாலும் அதற்கு அவன் அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை. அம்சரேகா தந்தையுடன் வெளிநாட்டிற்குப் போகப் போவதாய்ச் சொன்ன ஒரு வார்த்தையை ஆதாரமாய் வைத்துக்கொண்டு, இவ்வளவு ஊகித்து உளவுத் தொழிலுக்குத் தான் எவ்வளவு தகுந்தவன் என்பதை நிரூபித்துவிட்டான்.

தன் தொழிலில் ஆழ்ந்துபோய் விட்டவனுக்கு, அவன் எழுத்தாளனாகவே இருக்கட்டும், விளையாட்டு வீரனாயிருக்கட்டும், இண்டர் போல் ஏஜெண்டாகவே இருக்கட்டும், மனதில் வருத்தங்களும், வீட்டுப் பிரச்சினைகளும், வெளியுலகத்துத் தொந்தரவுகளும் கொஞ்சமும் தடையாய் இராது. அவ்வளவிற்கு டிடாச்மென்ட் சாதிக்கக் கூடியவனால்தான் தன் துறையில் முன்னுக்கு வர முடியும்.

ஆனால் பிரதிமா இன்னும் இந்தத் தொழிலுக்குப் புதிது. பூஷணத்தின் விவரங்களைச் சேகரிக்கச் சொல்லி மட்டுமே டிபார்ட்மென்ட் அவளை வேண்டிக் கொண்டது. அது முடிந்ததும் அவள் வேலை நேத்ராவுக்கு உதவி செய்வது மட்டும்தான். இப்பொழுது நடந்த விஷயத்தை அவளால் அவ்வளவு எளிதில் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

எந்த தைரியத்தில் அம்சரேகா இவ்வளவு பெரிய பொய் சொல்கிறாள்?

அவள் இரண்டே மணி நேரத்தில் அம்சரேகாவைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தாள். தன் சி.பி.ஐ. அனுபவத்தால் அவள் கண்டு பிடித்த விவரங்கள் அவள் குழப்பத்தை மேலும் அதிகமாக்கின.

அம்சரேகாவுக்கு வேறு எந்த ஆண் நண்பர்களும் கிடையாது. மேலுக்கு மிகத் துடுக்கானவளைப் போலத் தென்பட்டாலும், உண்மையில் அவள் மிகவும் கூச்ச

சுபாவம் கொண்ட பெண். ஆங்கிலத்தில் மிக அபாரமான கவிதைகளை எழுதினாற்போல் சுபாவத்திலும் கவிதை ரசனை மிகுந்தவள்.

பின்னே இது எப்படி நடந்திருக்கும்?

யோசித்தவாறே அவள் வீடு திரும்பினாள்.

“பாட்டீ! நான் ஒரு கேள்வி கேட்க்கிறேன். பதில் சொல்லுவாயா?”

“என்ன?”

“இரண்டு பேருடைய வாழ்க்கை உன் பதில் மீதுதான் ஆதாரபட்டிருக்கு பாட்டீ. வெட்கப்படாமல் சொல்லணும்.”

“ஐயோ! அவ்வளவு தூரம் வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயத்தில் நான் சொல்வதற்கு என்ன இருக்கு? ஆனாலும் கேளு. எதுக்கு வெட்கப்படணும்?”

“குழந்தைங்க எப்படிப் பிறப்பாங்க பாட்டீ?”

அந்தம்மாள் திடீரென்று அழுது கொண்டே, “ஐயோ! குடி மூழ்கிவிட்டது. எங்கே வழுக்கி வழுக்கி விழுந்து விட்டாயடி பெண்ணே?” என்று பிலாக்கணம் பாடத் தொடங்கிவிட்டாள்.

பிரதிமா பதற்றமடைந்து, “நான் ஒன்றும் வழுக்கி விழலை பாட்டீ. ஒரு ஏஜெண்டை வலையில் வீழ்த்துவதற்கு வெளிநாட்டுச் சக்திகள் போட்டுக் கொண்டிருக்கும் நாடகத்தில் உண்மை எவ்வளவு தூரம் இருக்கு என்று தெரிந்துகொள்ளத்தான் கேட்கிறேன்.”

“ஆனாலும் இவ்வளவு வயதாகி விட்டது. உனக்குத் தெரியாமலா?”

“தெரியும் பாட்டி. எனக்கும் தெரியும். ஆனால் நமக்கு தெரிந்ததுதான் வேதம் என்று எண்ணிவிடக் கூடாதாம். எனக்குத் தெரியாமல் இல்லை. இருந்தாலும் உன்னிடம் கேட்கிறேன், நீ ஏதாவது சொல்லுவாயோ என்று.”

“இந்த வயதில் நான் எப்படி சொல்வேன்?”

“முத்தம் மட்டும்தான் கொடுத்தேன் என்று சொல்கிறான் நேத்ரா. அந்தப் பெண்ணோ கர்ப்பத்துக்கு நீதான் காரணம் என்கிறாள். எதில் உண்மை இருக்கு?”

“அவர்கள் சொன்னதும் நீ கேட்டதும் நன்றாகத்தான் இருக்கிறது. அது சரி, முத்தமிட்டானாமா?”

“ஆமாம் பாட்டி.”

“ஒரே ஒரு முத்தம்தான் கொடுத்தானா?”

“ஆமாம். ஒன்றுதான். காதல் இல்லாமல், ஆபத்து எதுவும் இல்லாமல் ஒரே ஒரு முத்தம்.”

எல்லாவற்றையும் கேட்டு முடித்துவிட்டு பாட்டி பெருமூச்செறிந்தாள். பிறகு யோசனையில் ஆழ்ந்தபடியே, “இப்போ எல்லாம் மிஷின்கள் தானே. கோழி இல்லாமலேயே கூட முட்டையைத் தயாரிக்கிறார்களாம்! ஒருவேளை புது முறை ஏதாவது வந்திருக்குமோ என்னவோ. எனக்குத் தெரியாது. எங்க காலத்திலேயானால்...” என்றாள்.

“ஊம். உங்கள் காலத்திலேயானால்?”

“அம்மாடி! அதற்கு சடங்குகள் நிறைய இருக்கும். ரொம்ப கஷ்டப்படுவோம்.”

## 29

பூஷணத்தின் வீட்டைச் சுற்றிலும். சி.பி.ஐ. வலை பின்னிற்று. நேத்ரா தன் ஃபிளாட்டில் உட்கார்ந்து கொண்டே பைனாகுலர் வழியே எதிர் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். வரப்போகும் பன்னிரண்டு மணி நேரமும் மிக முக்கியமானது என்று தெரியும் அவனுக்கு. பன்னிரண்டு மணிக்குள் பூஷணம் நாட்டை விட்டுப் போய் விடுவார். அதற்குள் அவர் தன் வேலைகளை முடித்துக்கொண்டு விடுவார். இந்தச் சமயத்தில் அவரைப் பிடித்து ஏதோ ஒரு கேஸில் சிக்க வைக்காமல் போனால் அவர் கை நழுவிப் போய் விடப் போவது உறுதி.

ஒன்று... இரண்டு... மூன்று மணிகள். ஒன்றுமே நிகழவில்லை. சுமார் மூன்றரை மணி நேரம் கழித்து போன் ஒலித்தது. பூஷணம் வீட்டிற்கு வந்த கால் அது. அதிலிருந்து இந்த போனுக்கு லைன் ட்ராப் பண்ணப் பட்டது. நேத்ரா சட்டென்று போய் போனை எடுத்துக் கொண்டான்.

இந்தப் பக்கத்திலிருந்து பூஷணம் ,”ஹலோ!” என்றார். மறுமுனையில் இருந்தவன், “சௌக்கியமா?’ என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டான்.

இந்தப் பக்கத்தில் பூஷணமும் போனை வைத்துவிட்டார்.

அது கோட் வார்த்தை!

நேத்ராவுக்குப் புரிந்தது.

அவன் நினைத்தாற்போலவே பூஷணத்தின் கார் ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் புறப்பட்டது. நேத்ரா பின்தொடர்ந்து போனான். பூஷணத்தின் கார் ஐந்து நிமிஷங்களில் ஒரு பப்ளிக் போனிற்கு முன்னால் வந்து நின்றது. நேத்ராவுக்கு எல்லா விஷயமும் புரிந்து விட்டது. பூஷணம் தன் போன் வழியாய் பேசுவதில்லை. போன் வந்ததுமே இதுபோல் வெளியே வந்து பேசுவார் போலும்.

நேத்ரா ஒயர்லஸ் மூலமாய் தன் டிபார்மென்ட்டுக்கு ஆணைகளைத் தந்தான். அடுத்த வினாடியே டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் சுறுசுறுபாபாகி விட்டது. பூஷணம் எந்த பப்ளிக் பூத்லிருந்து பேசிக் கொண்டிருந்தாரோ அந்த போன் உரையாடல் டேப் பண்ணப் பட்டது.

“மிஸ்டர் க்யூ?”

“ஸ்பீகிங்.”

“பூஷணம் ஹியர்.”

“இன்னும் அரை மணிக்குள் சுவர்ணரேகாவைக் கொன்று விடணும். நாம் கிளம்பி விடலாம்.”

“எப்பொழுது கிளம்பப் போகிறோம்?”

“உடனேயே! சுவர்ணரேகா இறந்த பிறகு ஒரு வினாடி கூட இங்கே இருக்கக் கூடாது. இன்டர்போலுக்கு அந்த மரணம் தெரிந்துவிட்டால் இனி உங்களை விடாது.”

“அந்த வேலையை உடனே முடித்து விடுகிறேன்.”

போன் கட் ஆகி விட்டடது.

நேத்ரா விழிப்படைந்தான். உடனே போய் பூஷணத்தை அரெஸ்ட் பண்ணிவிட வேண்டும் என்ற துடிப்பை அரும்பாடு பட்டு அடக்கிக்கொண்டான். அதனால் எந்த லாபமும் இல்லை. சுவர்ணரேகாவைப் தேட வேண்டும். அவள் எங்கே இருக்கிறாளோ

தெரியவில்லை. அவன் வேகமாய் ஃபிளாட்டிற்கு வந்தான்.

ஃப்ளாட்டிலிருந்து டெலஸ்கோப் மூலம் சுவர்ணரேகாவின் அறையைப் பார்த்தான். அவள் எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அவன் பார்வை கார்ஷெட்டின் மீது பட்டது. பூஷணம் ஷெட்லிருந்து வெளியே வந்து கொண்டிருந்தார்.

நேத்ராவின் புருவம் ஏறிற்று,

சுவர்ணரேகா கார் ஷெட்டை நோக்கிப் போய் கொண்டே தந்தையோடு ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். நேத்ரா ஓட்டமாய் லிஃப்டை நோக்கி வந்தான். அவன் கீழே இறங்கி ஃபிளாட்டிற்கு வெளியே வருவதற்குள் சுவர்ணரேகாவின் கார் வீட்டை விட்டுப் புறப்பட்டு மெயின் ரோடிற்குச் சென்று விட்டது.

நேத்ரா ஃபிளாட்டிற்கு முன்னால் நிறுத்தி வைத்திருந்த தன் காரை நோக்கி ஓடினான்.

பூஷணத்தின் வீட்டிற்கும், நேத்ராவின் ஃப்ளாட்டிற்கும் இடையிலுள்ள சாலை எப்பொழுது சந்தடி மிகுந்ததாய் இருக்கும். வாகனங்கள் வேகமாய் பறந்து கொண்டிருந்தன. நேத்ரா சுவர்ணரேகாவின் காரை பின்தொடர முயன்றான். அதற்குள் அது வெகு தொலவிற்குப் போய் விட்டிருந்தது. நேத்ரா வேகத்தை அதிகரித்தான்.

முன்னால் போய்க் கொண்டிருந்த சுவர்ணரேகா மிக வேகமாய் காரை ஒட்டிக் கொண்டிருந்தாள். க்யூ அவசரமாய் வரச் சொன்னான் என்று தந்தை அவளிடம் சொல்லியிருந்தார். ஏன் என்று புரியவில்லை. கார் நகர எல்லையைத் தாண்டிற்று. எதிரே வந்து கொண்டிருந்த லாரியிடமிருந்து தப்பித்துக்கொள்ள அவள் காரின் வேகத்தைக் குறைக்க முயன்றாள். குறையவில்லை.

அவளுக்கு ஒரு வினாடி புரியவில்லை. அதிர்ஷ்டவசமாய் லாரி தாண்டிப் போய்விட்டது. கார் கோணலும் மாணலுமாய் போகத் தொடங்கிற்று. திறந்திருந்த ஜன்னல் வழியாய் காற்று விர்ரென்று வீசிற்று. அவள் ஸ்டீரிங்கை கண்ட்ரோல் பண்ணுவதற்கு முயன்றாள். ஆனாலும் பலனில்லாமல் போய்விட்டது.

அப்பொழுதுதான் அவளுக்குப் புரிந்தது, பிரேக்குகள் பெயிலாகி விட்டன என்று. முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கார் பள்ளத்தில் இறங்கி ஏறி வேகத்தை மேற்கொண்டு இடது பக்கமாய் போய்க் கொண்டிருந்தது. வண்டியொன்றை உராய்ந்து கொண்டு போய் கொண்டிருந்தது.

அவள் தன் உயிர் மேலிருந்த ஆசையை விட்டு விட்டாள். அதற்குள் அவள் பக்கத்திலிருந்து இன்னொரு கார் தாண்டிக்கொண்டு வேகமாய்ப் போயிற்று. கொஞ்சம் தூரம் போனதும் அதன் வேகம் தணிந்தது. முன்னாலிருந்த காருக்கும், தன் காருக்கும் இடையிலிருந்த தூரம் மெல்ல மெல்ல குறைந்து கொண்டே வந்ததை அவள் கவனித்தாள்.

பதற்றமடைந்தவளாய் ஹாரன் அடித்தாள். தன் காருக்கு பிரேக்குகள் இல்லை என்பதை முன் காரிலிருந்து ஆளுக்கு எப்படித் தெரிவிப்பது என்று புரியவில்லை அவளுக்கு முன்னாலிருந்த காரின் வேகம் மேலும் தணிந்தது. பின் காரின் வேகத்தைவிட முன்னாலிருந்த காரின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்துகொண்டே வந்ததால் ரயில் கம்பர்ட்மெண்டுகளின் ஷண்டிங் செய்வது போல் இரண்டும் நெருக்கமாகிக் கொண்டிருந்தன.

ஒரு விமானம் தரையில் இறங்கும் போது பைலட் எவ்வளவு ஜாக்கிரதையை மேற்கொள்வானோ அவ்வளவு கைதேர்ந்த அனுபவத்தோடு பின் காரின் பேனட் தன்னுடைய காரின் மட்கார்ட்டுடன் சாய்ந்து நிற்குமாறு பண்ணிவிட்டுப் பிறகு மெல்ல மெல்ல தன் வாகனத்தின் வேகத்தைக் குறைத்து நிறுத்திவிட்டு, கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கினான் நேத்ரா.

சுவர்ணரேகா இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. தலையிலிருந்து வியர்வை ஆறாய் வழிந்து கொண்டிருந்தது. மரணத்தின் வாயிலிருந்து மயிரிழையில் தப்பியிருக்கிறாள்.

“உன் கார் இப்போதைக்கு ஓடாது. என்னோடு வா. இறக்கி விடுகிறேன்.”

அவள் பதில் பேசாமல் காரை விட்டிறங்கி நேத்ராவின் காருக்குள் ஏறிக் கொண்டாள். அவன் தன் வாகனத்தைத் திருப்பி நகரத்தை நோக்கி செலுத்தினான்.

“ஆபத்து மயிரிழையில் தப்பியது” என்றான்.

அவள் அதற்கு பதிலளிக்காமல், “என் கார் பிரேக் பழுதாகி விட்டது என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?” என்று கேட்டாள்.

அவன் ஏதோ பதில் சொல்வதற்குள், “கங்கிராசுலேஷன்ஸ்” என்றாள் அவள திரும்பவும்.

“எதுக்கு?” வியப்போடு கேட்டான்.

“என் காருடைய பிரேக் ஆயிலை எடுத்துவிட்டு, என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றினாற்போல் நடித்து, அந்த விதமாய் என்னை உங்கள் பக்கமாய் திருப்பிக் கொள்வதற்கு அபாரமான திட்டம் தீட்டியதற்கு. இந்திய சீக்ரெட் ஏஜெண்டுகளின் சாமர்த்தியம் எல்லாம் எதிரிநாட்டு உளவாளிகளை எதிர்த்து நிற்பதற்கு மாத்திரமே இல்லை. பெண்களை வலைவீசி பிடிப்பதற்குக் கூட பயன்படுகிறது என்று இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன்” என்றாள்.

அவனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. அரும்பாடுபட்டு அதை அடக்கிக்கொண்டு, “நீ பெரிய விஞ்ஞானியாக இருக்கலாம். ஆனால் உனக்கு உலக அனுபவம் கிடையாது என்று புரிந்து விட்டது. உன் தேவை தீர்ந்து போனதுமே, உன் தந்தையே உன்னை கொலை செய்ய கார் பிரேக்கை ஃபெயிலாக்கி வைத்து விட்டார். இவ்வளவு சின்ன விஷயத்தைக் கூடத் தெரிந்துகொள்ளாமல் போனது உன் துரதிர்ஷ்டம்தான்” என்றான்.

“யாருடைய துரதிர்ஷ்டத்தையும் யாராலும் நிர்ணயிக்க முடியாது மிஸ்டர் நேத்ரா. கேவலம் என் தந்தைக்கு மகளாய் பிறந்த குற்றத்தால் என் தங்கை இப்பொழுது கல்யாணம் ஆகாமலேயே தாயாகப் போகிறாள். அதற்கு யார் பதில் சொல்ல முடியும்?”

“மனச்சாட்சி அறிய சொல்கிறேன். அதற்கு நான் பொறுப்பாளி இல்லை.”

“அந்த விஷயம் எனக்குத் தெரியும்.”

அவள் மெதுவாய் நிறுத்திச் சொன்ன பதிலைக் கேட்டு நேத்ரா வியப்படைந்து, “உனக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டான். “குறைந்தது நீயாவது இந்த விஷயத்தை நம்புகிறாயே?’ என்றான் மேலும்.

“ஆமாம் எனக்குத் தெரியும்.”

“அதான் எப்படி என்று கேட்கிறேன்.”

“அமசரேகாவின் கர்ப்பத்திற்குக் காரணம் ஏஜெண்ட் க்யூ ஆனதால்.”

நேத்ராவின் கைகள் ஸ்டீயரிங்கைச் சுற்றிலும் முறுக்கேறி கொண்டன. தன் சர்வீஸில் என்றுமே அத்தனை அதிர்ச்சி அடைந்ததில்லை அவன்.

“ஏஜெண்ட் க்யூவா?” என்றான் நம்ப முடியாதவனாய்.

“இரண்டு மாதத்திற்கு முன்னால் உங்கள் பிறந்த நாள் என்று நாடகமாடி எங்கள் வீட்டிற்கு வந்து அம்சரேகாவை முத்தமிட்டீர்கள் நினைவிருக்கா?”

“ஆமாம்.”

“அன்றிரவு அவள் மிகவும் அலைக்கழிக்கப் பட்டவளாய் தென்பட்டாள். எனக்குக் காரணம் என்னவென்று தெரியாது. அவள் உறங்குவதற்காக நான் தினந்தோறும் பயன்படுத்தும் பெதிட்ரின் இஞ்சக்ஷனை அவளுக்குக் கொடுத்தேன். அந்த மயக்கத்தில்...”

“ஊம். அந்த மயக்கத்தில்?”

“அவளை ஏஜெண்ட் க்யூ அனுபவித்தான்.”

நேத்ராவின் முதுகுத்தண்டு சிலிர்த்தது. அது ஒரு சங்கடமான உணர்வு. இப்படி ஏன் நடந்து விட்டது என்ற ஏமாற்றம். உள்ளங்கைகள் முறுக்கிக் கொண்டன. வெறுப்போடு. இதுவரை அவனுக்கு ஏஜெண்ட் க்யூவின் பால் ஒரு கொள்கைக்காக மட்டுமே விரோதம் இருந்து வந்தது. இப்பொழுது அது தனிப்பட்ட விஷயமாகவும் மாறிவிட்டது.

சுவர்ணரேகா சொல்லிக்கொண்டே போனாள். “எனக்காக வந்த க்யூ ஒருக்கால் சுயநினைவு இல்லாத நிலையில் இருந்த அம்சரேகாவைப் பார்த்திருப்பான். அன்றிரவு இலவசமாய் கிடைத்த விருந்தை விட விரும்பவில்லை. அவன். அவன் அறைக்குள் போனதை

நான் பார்த்தேன். முதலில் நீங்கள்தானோ என்றெண்ணினேன். ஆனால் பார்த்தால் க்யூ! நான் அப்படியே சிலையாக நின்று விட்டேன். என்னுடையவன் என்றெண்ணிக் கொண்டிருந்த க்யூவை இன்னொரு பெண்ணுடன் பார்த்ததற்காக இல்லை. அந்த கட்டத்தை, பொறாமையை நான் என்றோ கடந்து விட்டவள். அனாவசியமாக அம்சரேகாவைப் போன்ற பெண் சீரழிந்து விட்டாளே என்று வருந்தினேன். ஆனால் இந்த விஷயத்தை அம்சரேகாவுக்குச் சொல்லவில்லை. ஆனால் விதி ஒத்துழைக்காமல் அம்சரேகாவைக் கர்ப்பவதியாக்கி விட்டது.”

நேத்ராவின் செவிகளில் அவை விழவில்லை. அவன் மூளையில் சமுத்திரத்தின் பேரிரைச்சல். “அம்சரேகா... அம்சரேகா” என்று முணுமுணுத்துக்கொண்டான் தவிப்போடு.

அவள் சொன்னாள். “டாக்டரிடம் போவோம் என்று அம்சரேகா சொன்னபொழுது நான் பதறிவிட்டேன். காரணம் யார் என்று கேட்போது நேத்ரா என்று சொன்னாள். உங்களிருவருக்கும் இடையே முன்பே நெருக்கமான உறவு இருந்திருக்குமோ என்று எண்ணினேன். க்யூ விஷயத்தை முற்றிலுமாய் மறைத்து வைத்து விட்டால் அதற்கு உங்களை பொறுப்பாளி ஆக்கி விடலாம் என்றெண்ணினேன் கூட. ஆனால்...”

“ம். ஆனால்?”

“இதற்குக் காரணம் நீங்கள் தான் நீங்கள்தான் அம்சரேகா திடமாய் உங்களைப் பற்றிச் சொன்னதால் எனக்குச் சந்தேகம் வந்தது. நிரோத்தை மாத்திரை என்றெண்ணிக் கொண்டிருந்தது நினைவிற்கு வரவே விஷயத்தை வரவழைத்தேன். அதைக் கேட்டால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். பி.எஸ்.ஸி படித்த பெண்ணிற்கு, இதுகூடவா தெரியாது என்று சிரிப்பீர்கள் கூட.”

“அதென்ன விஷயம்?”

“அம்சரேகாவுக்கு உடல் உறவு என்றால் என்னவென்றே தெரியாது. முத்தமிட்டால் குழந்தை பிறந்து விடும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள்.”

கிறீச்சென்ற ஓசையுடன் கார் நின்றது. “என்ன?” என்று கத்திவிட்டான் அவன்.

“ஆமாம். பிறந்த நாளன்றைக்கு நீங்கள் முத்தமிட்டீர்கள். அதனால் தான் தனக்கு வயிற்றில் சுமை வந்துவிட்டது என்ற எண்ணத்தில் இருக்கிறாள் அம்சரேகா. சொல்லுங்கள். அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்வீர்களா?”

போக்குவரத்து அதிகமாய் இருந்ததால் நேத்ரா காரை மெதுவாய் ஓட்டிக் கொண்டிருந்தான். பக்கத்தில் சுவர்ணரேகா இருக்கிறாள் என்றும், அவளிடமிருந்து ஒரு முக்கிய ரகசியத்தை வரவழைக்க வேண்டுமென்றும் அறிவான். ஆனால் அவனும் சாதாரண மனித உணர்வுகளுக்கு உட்பட்டவன்தான். அவன் ஒன்றும் ஜேம்ஸ்பாண்ட் இல்லை. அவன் தொழில் வேறு. அவன் இயல்பு வேறு. தன் டிபார்ட்மெண்ட் பின்னிய வலையில் சிக்கிக்கொண்ட அப்பாவிப் பறவை ஒன்றின் அழைப்பில் இருந்த இனிமையில் தற்காலிகமாய் தன் தொழிலையே மறந்து போய் திசை திரும்பிவிட்ட சம்பவம் அவனை உலுக்கி எடுத்துக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கத்தில், சுவர்ணரேகாவுடன் இரவைக் கழிக்க ரகசியமாய் வந்துவிட்டு, பக்கத்து அறையில் படுத்துக்கொண்டிருந்த அம்சரேகாவைப் பார்த்து, அங்கே போய் மயக்கத்திலிருந்த அவளை அனுபவித்த க்யூ... அது அவனுக்கு எரிச்சலை வரவழைத்தது.

அவன் யோசனைகளைச் சிதறடித்தவாறு சுவர்ணரேகா சொன்னாள்.

“அந்தப் பெண்ணிடமிருந்து உண்மையை அதிக நாள் மறைத்து வைத்திருக்க முடியாது. கர்ப்பத்திற்குக் காரணம் முத்தமில்லை என்றும். வேறொன்றும் என்றும் அவளுக்குச் சீக்கிரத்திலேயே எப்படியாவது தெரிந்துவிடும். அந்தக் காரியத்தைப் பண்ணியது கூட நீங்கள்தான் என்று நீங்கள் சொல்லணும். அதனால் அவளுக்கு உங்கள் மேலுள்ள நல்ல அபிப்பிராயம் போகலாம். அவ்வளவு தூரம் காதலித்தவன் மயக்கத்தில் இருந்த சமயத்தில் அவ்வாறு அனுபவிக்க வேண்டிய

தேவை என்ன என்று வாழ்நாள் முழுவதும் உங்களை உலுக்கி எடுக்கலாம். ஆனால் பிரச்சினை அது இல்லை.”

“பிரச்சனை அது இல்லை என்று எனக்குத் தெரியும். இவ்வளவு நாளாக அம்சரேகா தன் கர்ப்பத்திற்குக் காரணம் நான்தான் என்று எல்லோரிடமும் சொன்னதைப் பார்த்துவிட்டு இது ஒரு வலைவீச்சு என்றெண்ணி விட்டேனே தவிர இது அவள் அறியாமை என்று எண்ணி இருக்கவில்லை. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் பெண்களுக்கு இவ்வளவு அறியாமை இருந்ததாய் சொல்லியிருந்தால் நம்பியிருக்கலாம். அம்சரேகாவைப் போன்ற பெண்ணுக்கு, அதுவும் பி.எஸ்.ஸி படித்த பெண்ணுக்கு இத்தனைச் சிறிய விஷயம் தெரியாது என்றால்....”

“அம்சரேகாவின் அறியாமை மனோதத்துவம் சம்பந்தப்பட்ட விஷயம் நேத்ரா. அவள் ஆர்வத்தை அவள் சிநேகிதி விளையாட்டுத் தனமாய் தவறான வழியில் இட்டுச் சென்று மூடிவிட்டாள். அதனால் அவள் அதைப்பற்றி ஆழமாகவோ தர்க கரீதியாகவோ யோசிக்கவில்லை. நீங்கள் சொன்னது போல் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் “முதலிரவில் என்ன நடக்கும்” என்றே தெரியாதவர்கள் பத்து சதவீதம், “ஏதோ நடக்கும், அது என்னவென்று தெரியாது” என்றெண்ணிக் கொள்பவர்கள் ஐம்பது சதவீதம் பேர் இருந்தார்கள். இப்பொழுதும் அப்படிபட்டவர்கள் குறைந்தது ஒரு சதவீதம் பேராவது இருப்பார்கள். அறிந்தும் அறியாமலும் என்பது செக்ஸ் விஷயத்தில் உண்டு. செக்ஸ் என்பது ஒரு நந்தவனம் போன்றது. ஒருவர் முன் வரிசையில் இருக்கும் பூந்தோட்டத்தை மட்டும் பார்த்துவிட்டு, எல்லாவற்றையும் பார்த்துவிட்டோம், ரொம்ப அபாரமாய் இருந்தது என்று எண்ணிக் கொள்வார்கள். வேறு சிலரோ இன்னும் கொஞ்சம் முன்னால் சென்று மான்களையும், அருவிகளையும் பார்க்கலாம். வேறு சிலரோ மேலும் உள்ளே போய் மலைத் தொடர்களையும் யோக சித்தர்களையும் தேடித் பார்க்கலாம் இதெல்லாம் தெரிவதற்கு பி.எஸ்.ஸி. படிக்கணும் என்ற

அவசியமில்லை. ஆனால் இப்போது பிரச்சினை அம்சரேகாவுக்கு செக்ஸ் சயின்ஸ் எவ்வளவு தூரம் தெரியும் என்பதைப் பற்றி இல்லை. அம்சரேகாவின் பிரச்னைக்கு எப்படிப் பரிகாரம் பண்ணுவது என்பதுதான். உங்கள் சீக்ரெட் ஏஜென்ஸி, டெர்ரரிசம் இதையெல்லாம் விட்டுத் தள்ளுங்கள். ஒரு மனிதனாய் யோசித்துப் பாருங்கள்."

அவனுக்கு அவள் வார்த்தைகள் காதில் விழவில்லை. யோசித்துக் கொண்டிருந்தான். ஒரு நல்ல புகைப்படக்காரரின் கேமிரா போட்டோ பிடித்த அபூர்வ காட்சிகளைப் போல் அவன் கண் முன்னால் அம்சரேகாவின் நினைவுகள் ஸ்லோ மோஷனில் நிழலாடிக் கொண்டிருந்தன. சாலையில் நான்கு பர்லாங் தூரம் ஓடிவந்து வியர்வை விருவிருக்க நனைந்த கேசங்களை காதோரமாய் ஒதுக்கிக்கொண்டே, ஓடத் தொடங்கிய ரயில் ஜன்னலுக்கு அப்பால் நின்றுகொண்டு, "மக்கள் பார்க்கப் போகிறார்களே, சிரிக்கப் போகிறார்களே என்று நினைத்தால் அது காதல் எவ்வாறு ஆகும்?" என்று கேள்விகேட்ட ரம்மியமான ராக ரேகா

1990 மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து சிநேகிதனின் கண்களில் பாராட்டு தென்படுகிறதா என்று பார்த்த உயிரோட்டமுள்ள காதல் ரேகா.

வயிற்றில் வளரும் குழந்தைக்கு காரணம் என்னவென்று கூடத் தெரியாத வெள்ளைத்தாள் போன்ற மனதில் அப்பாவித்தனம் என்ற எழுத்துக்களைக் கோர்வையாய்க் கொண்ட அட்சர ரேகா.

அம்சரேகா...

தொலைவில் டிராஃபிக் லைட்டுகள் தென்பட்டன. அதைத் தாண்டியதுமே பூஷணத்தின் பங்களாவுக்கு எதிராய் தன் பிளாட். காரை ஓட்டிக்கொண்டே சொன்னான் அவன்.

"இதெல்லாம் ஒரு விபத்து. அவ்வளவுதான். அபாயமில்லாத விபத்து. அவள் பெயரில் தவறு எதுவுமில்லாத பொழுது தண்டனையை அவள் ஏன் அனுபவிக்கணும்? காதலுக்கு முன்னால் செக்ஸ் எவ்வளவு

அற்பமான விஷயம்! இதெல்லாம் காதல் இல்லை என்றால் அது மனசாட்சியை வஞ்சிப்பது போல்தான். நடந்ததெல்லாம் அவளுக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. அன்றிரவு அவசரப்பட்டு நடந்து கொண்டது என் தவறுதான். அதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்” என்றவன் நிறுத்தி, தன் இறுதி வார்த்தையை முடித்தான். “ஏஜெண்ட் க்யூவின் குழந்தைக்கு நான் தந்தையாகிறேன்.”

அவள் சரேலென்று நிமிர்ந்தாள்.

## 30

எப்படி நம்புவேன்? அன்பும் கருணையும் இன்னும் கூட உலகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கின்றன என்று! மனிதனுக்கும் மிருகத்திற்கு உள்ள வேறுபாடு கருணைதான் என்று! பரந்த உலகத்தை ஆயிரம் கரங்களினால் தழுவிக்கொண்டு, மனித ஜாதியைத் தன் நன்னடத்தையால் அணைத்துக் கொள்கிற இரண்டு கைகள்... அபிஷேகம் பண்ணுவதற்கு இரு கண்கள் நிரம்ப நீர்.

சிவப்பு விளக்கு எரிந்ததால் அவன் காரை நிறுத்தினான். அவள் சட்டென்று காரை விட்டிறங்கி, எதிர்பாராத வேகத்துடன் தன் வீட்டை நோக்கி ஓடினாள். அவன் சிலையாகி விட்டான். பின்னாலிருந்த கார்களின் ஹாரன் சத்தம் கேட்டதால் அவன் காரைத் தன் பிளாட்டை நோக்கி ஓட்டத் தொடங்கினான்.

தன்னிடமிருந்து தப்பித்துக் கொண்டு போவதற்காக அவள் அவ்வாறு ஓடவில்லை என்று மட்டும் புரிந்தது. காரணம் தெரியவில்லை.

அவன் தன் பிளாட்டிகுள் நுழைந்து டெலிஸ்கோப் வழியாய் அந்த வீட்டைப் பார்த்தான். படுக்கை அறையில் படுத்துக் கொண்டிருந்தாள்.

மனித ஜாதியிடம் கொண்டிருந்த அருவருப்பையும், கரடு தட்டிப் போயிருந்த துவேஷத்தையும், இதயத்திலிருந்த எரிமலையையும் அவனுடைய ஒரே வார்த்தை, ‘ஏஜெண்ட் க்யூவின் குழந்தைக்கு நான்

தந்தையாகிறேன்’ என்ற ஒரே வார்த்தை வெடிக்க வைத்து விட்டது.

அந்த உண்மையைக் காணவும் முடியாமல், கண்ட உண்மையைத் தாங்கிக் கொள்ளவும் முடியாமல் ஹிஸ்டீரிக்காய் அவள் அழுது கொண்டிருந்தாள். க்யூ அவளுக்கு சுவர்க்கத்தைக் காட்டித் தன்னுடையவளாய் ஆக்கிக் கொண்டான். நேத்ரா அவளுக்கு சுவர்க்கத்தைக் காட்டிலும் அற்புதமானதைக் காட்டிவிட்டான். அதுதான் “மனிததன்மை.”

*****

“ரொம்ப இருட்டிவிட்டது. வீட்டுக்கு போம்மா” என்ற வார்த்தையைக் கேட்டு சுவர்ணரேகா நிமிர்ந்தாள். அந்தக் கிழவரின் பெயர் போஸ். அபாரமான அறிவு அவரை சீக்கிரத்தில் கிழவராக்கி விட்டது.

அவள் சிரித்துவிட்டு, “போகிறேன். இன்னும் கொஞ்சம் வேலை பாக்கியிருக்கு டாடி” என்றாள்.

வெளியே இடி மின்னலுடன் மழை பயங்கரமாய் பெய்து கொண்டிருந்தது. அவள் ரெயின் கோட்டைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியேறப் போன போது, “அம்மா சுவர்ணா” என்று கூப்பிட்டார். அவள் நின்றாள்.

“ஒரு நாள் நீ ஒரு பெரிய ஆளாய் வரப் போகிறாய். கெமிஸ்ட்ரியில் உன்னை மிஞ்சியவர்கள் யாருமே கிடையாதும்மா. பார்த்துக்கொண்டே இரு” என்றார்.

அவள் சிரித்தாள். “உங்களுடைய வேலையில் உதவி பண்ணினாலே போதும் அப்பா. அல்ஃபா ப்ளஸ், அல்ஃபா மைனஸ் இவைகளின் சேர்க்கையை நீங்கள் கண்டு பிடிக்க வேண்டும். நாடே பெருமை படும்படியாக உங்களுக்கு நோபல் பரிசு வர வேண்டும். உங்கள் அசிஸ்ட்டென்டாய் எனக்கு அது போதும். உங்கள் மகளாய் எனக்கு அதுதான் பெருமை.”

“என்னால் ஒருக்கால் இந்தப் பரிசோதனையை முடிக்க முடியாமல் போனால், நீயாவது முடிப்பாய் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது சுவர்ணா.”

அவள் தந்தை வைராலஜியில் உழைத்தார். கியாஸ் மூலமாய் பயிர்ப்பூச்சிகளை அழிக்கும் முறையைக் கண்டுபிடித்துக் கொண்டிருந்தார். விசாலமான ஹால்

அது. சுற்றிலும் அசோக மரங்கள். தொலைவில் பேக்டரிகள். பூஷணத்தின் தொழிற்சாலையில் ஆராய்ச்சிப் பிரிவில் இருந்த பரிசோதனைக் கூடம் அது. அவள் தந்தை அதற்குப் பொறுப்பாளர்.

“குட் நைட் அப்பா.”

“குட் நைட் பேபி.”

அவள் வெளியே வந்தாள். ஊதற்காற்று வேகமாய் வந்து முகத்தில் மோதிற்று. அவள் தலையில் ரெயின் கோட்டைப் போர்த்திக்கொண்டு தெருவில் நடந்து பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றாள்.

“அப்பா மட்டும் இந்த நாட்டில் பிறந்து இருக்காமல் வேறு ஏதாவது நாட்டில் பிறந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! இப்படி பஸ்ஸிற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய தேவை இருந்திருகாது.”

தந்தை சொன்னது போல் அவளுக்கு கெமிஸ்ட்ரியில் நல்ல அறிவு இருந்தது. அவள் தந்தையோ மிகத் திறமைசாலி. அந்தத் திறமையை உணர்ந்துகொண்டது அந்த ஃபாக்டரி முதலாளி ஒருத்தர்தான். அவர் மட்டும் அவள் தந்தையை அதற்குத் தலைவராய் போடாமல் இருந்திருந்தால் இந்நாட்டில் உள்ள நிறைய புத்திசாலிகளைப் போலவே அவர் புகழ்கூட சாரமில்லாமல், உபயோகமில்லாமல் போயிருக்க வேண்டியது தான்.

ஒரு விசாலமான அறை, நவீன கருவிகள் கொண்ட பரிசோதனைச் சாலை. ஒரு விஞ்ஞானிக்கு வேறென்ன வேண்டும்? அவர் என்றுமே பணத்திற்காகவோ, சம்பளத்திற்காகவோ யோசித்தது இல்லை. தன் மகளையும் யோசிக்க விடவில்லை. கொள்கை ஒன்றைத் தவிர அவர் வாழ்க்கையில் வேறெந்த நோக்கமும் இருக்கவில்லை.

மழை வலுத்தது. இனி பஸ் வராது என்றெண்ணிக்கொண்டு அவள் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

“லிப்ட் மேடம்” எனக்கேட்டு ஒரு கார் பக்கத்தில் வந்து நின்றது. அவள் நிமிர்ந்து பார்த்தாள். ஒரு

இளைஞனும், இளம் பெண்ணும் உட்கார்ந்திருந்தார்கள். அவள் தயங்கியதைப் பார்த்துவிட்டு, “வாங்க. மழை வலுத்துவிட்டது” என்றான். அவள் பின்சீட்டில் ஏறிக்கொண்டாள்.

கார் புறப்பட்டது, பின் சீட்டில் ஊர்வலத்தில் கையில் பிடித்துக்கொண்டு போகும் கட்சிக் கொடிகள் இருந்தன.

“என் பெயர் ராம். முன்னால் அமைச்சர் தர்மராமின் மகன். இவள் என் பிரெண்ட் சௌமித்ரி.”

அறிமுகம் பண்ணிக்கொண்டு காரை நிறுத்தினான். அவன் சிநேகிதி இறங்கிக்கொண்டு, “வருகிறேன். இதுதான் எங்கள் வீடு” என்றாள்.

“நானும் இறங்கிக் கொள்கிறேன்.”

“பரவாயில்லை. நான் இறக்கி விட்டு விடுகிறேன்.

கார் கிளம்பிற்று. ஒரு நிமிஷ நிசப்த பிரயாணத்திற்குப் பிறகு டிரைவ் பண்ணிக்கொண்டிருந்த அவனை பின்சீட்டிலிருந்து பார்த்த அவள் திடுக்கிட்டாள். அவன் பாட்டிலை தூக்கிக் குடித்துக் கொண்டிருந்தான்.

“பயப்படாதீங்க. நேற்று வரை தேர்தல் வேலையில் அலைந்ததில் களைத்துவிட்டேன். இப்பொழுதுதான் எண்ணிக்கை நடந்து முடிந்தது. அப்பா பெருத்த மெஜாரிட்டியில் ஜெயித்திருக்கிறார். இதுவரை அந்த சந்தோஷத்தை கொண்டாடிக் கொண்டே இருந்தோம். இன்றிரவு கொண்டாட்டத்தை இத்தோடு முடித்து விடணும் என்று இல்லை போலிருக்கு. உன்னைக் காட்டிவிட்டார். அசதி மேலிட்ட போது குடிப்பதும், குடித்த பிறகு அனுபவிப்பதும் என் பழக்கம். ஒளிவு மறைவு இல்லாமல் சொல்கிறேன். பட்டப் படிப்பு படித்தவள் முதல் வேலைக்காரி வரைக்கும் யாராயிருந்தாலும் பரவாயில்லை. சௌமித்ரி இன்னும் மூன்று நாளைக்கு லாபமில்லை என்று சொல்லி விட்டாள். அதான் சொல்லிவிட்டேனே. கடவுள் கருணை உள்ளவர் என்று” என்று அவளைப் பார்த்து ஒருமாதிரி சிரித்தான்.

“காரை நிறுத்து.”

அவன் காரை நிறுத்திவிட்டு, கண்ணை சிமிட்டுவிட்டு, “நெக்ஸ்ட்?” என்றான். அவள் கதவைத் திறந்துகொண்டு இறங்கப் போனாள். திறக்க முடியவில்லை. தள்ளிவிட்டு வெளியே வரப் போனாள். எப்பொழுது வந்தானோ தெரியாது, அவன் வந்து எதிரே நின்று கொண்டிருந்தான்.

எதிர்காற்றுக்கு அவன் கேசங்கள் விகாரமாய்ப் பறந்து கொண்டிருந்தன. மசமசவென்ற இருளில் ஒரு நிழல் நின்றிருந்தாற் போலிருந்தது அவன் தோற்றம். “பின் சீட்டில்தான் நன்றாயிருக்கும்” என்று உள்ளே வரப் போனான் அவன். அந்தப் பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு வெளியேற முயன்றாள்.

இரண்டு பக்கங்களிலும் ஏற்பட்ட இடைவெளியால் காற்றின் வேகத்தில் உள்ளே இருந்த கொடிகள் வேகமாய் வெளியே வந்து விட்டன. அவன் அவளைப் பிடித்து வெளியே இழுத்தான். கொடிகளோடு கூட அவளும் வெளியே வந்தாள். அவன் தந்தைக்கு வெற்றியைத் தேடித்தந்து, ஹோம் மினிஸ்டராக்க இருந்த கட்சிக் கொடி அது. அதுதான் அவளைக் காப்பாற்றிற்று.

மேலே பாய்ந்து குனிந்து அவள் உதடுகளை அழுத்தமாய்ப் முத்தமிட்டான். ஒரு கையால் இடுப்பைச் சுற்றிப் பிடித்துகொண்டு அவளை கிட்டே இழுத்து, இன்னொரு கையால் அவள் புடவையை முழங்காலுக்கு மேலே தள்ளி அவள் கால்களுக்கு இடையே தன் காலை வைத்து சீட்டிற்கு நடுவில் தள்ளப் போனான். அப்பொழுதுதான் அவள் அவனைக் குத்தினாள்.

கொடியிலிருந்த மெல்லிய கம்பியை அவன் கண்ணுக்குள் நேராய் பலம் கொண்ட மட்டிலும் குத்தினாள். சுமார் ஓரங்குலம் உள்ளுக்கு இறங்கி விட்டது அது. அவன் விகாரமாய் அலறிய அலறல் அந்த மழைத் தூறலின் சத்தத்தோடு கலந்து தேய்ந்து விட்டது.

அவள் ஓட்டம் பிடிக்கத் தொடங்கினாள். பின்னால் அவன் துரத்திக் கொண்டு வந்தானா இல்லையா என்றுகூடப் பார்க்கவில்லை. சுமார் ஐந்து நிமிஷம் ஓடியிருப்பாள். தொழிற்சாலையில் எல்லைப் புறத்தில் இருந்ததால் ஆளரவமில்லாமல் இருந்தது.

பின்னால் அவன் இன்னும் துரத்திக்கொண்டு வருவது போலவேதான் தோன்றியது. அவள் மேல் மூச்சு வாங்கியபடி நின்று நிமிர்ந்து பார்த்த பொழுது போலீஸ் ஸ்டேஷன் தென்பட்டது.

இரவு பதினொன்றரை மணிக்கு உள்ளே நுழைந்த அப்பெண்ணைப் பார்த்துவிட்டு, மேஜைமேல் கவிழ்ந்து குட்டித் தூக்கம் போட்டுக் கொண்டிருந்த ஹெட் கான்ஸ்டேபிள் திடுக்கிட்டான். அவள் நேராய் உள்ளே நுழைந்து சப் இன்ஸ்பெக்டரிடம் போனாள்.

அவள் சுதாரித்துக் கொள்வதற்கு ஐந்து நிமிடங்கள் பிடித்தன. பிறகு நடந்ததை எல்லாம் விவரமாய்ச் சொன்னாள். சப் இன்ஸ்பெக்டர் இரக்கம் ததும்பக் கேட்டார். அவள் சொல்லி முடித்ததுமே, “நல்ல காரியம் பண்ணினீங்க” என்றார். “கற்பழிப்பு முயற்சியைக் கோர்ட்டில் நிரூபிப்பது அத்தனை சுலபம் இல்லை. அதற்கு தண்டனை எதுவோ அதை நீங்களே கொடுத்து விட்டீர்கள். கங்கிராட்ஸ்!” சிரித்தார்

“அவன் இன்னும் என்னைத் துரத்தி வந்துகொண்டு இருப்பது போல் சந்தேகமாய் இருக்கு சார்.”

“அந்த ஆபத்து ஏற்படாது. உங்களை ஜாக்கிரதையாய் கொண்டுபோய் இறக்கி விடுவதற்கு ஏற்பாடு செய்கிறேன்.”

அவள் நிம்மதியாய் மூச்சு விட்டு, “தாங்க்யூ சார்” என்றாள்.

“அந்த இரும்புக் கம்பி மட்டும் கிடைத்திருக்காவிட்டால் என்னவாகி இருப்பீங்களோ? அந்த மாதிரி பாதி ராத்திரியில் லிப்ட் வேண்டுமா என்று கேட்டதுமே ஏறிக்கொள்ளக் கூடாது.”

“பக்கத்தில் இன்னொரு பெண் உட்கார்ந்து இருந்ததால் தைரியமாய் ஏறினேன். பின்சீட்டில் கொடிகள் இருந்தன. இடமே இல்லை சார்.”

“கொடிகளா?”

“தேர்தல் கொடிகள் சார். தர்மராமாம். அவரைத் தெரியுமா?”

“தெரியும். முன்னாள் ஹோம் மினிஸ்டர்.”

“அந்த இளைஞன் அவர் மகன் தான்.”

எஸ்.ஐ முகம் நிறம் மாறிற்று. “நீங்கள் குத்தியது தர்மராமின் மகனையா?”

அவள் பேசவில்லை.

“நாம் இந்த விஷயத்தை அவரிடம் சொல்ல வேண்டியிருக்கும்.”

அவள் பயந்து, “எதற்கு?” என்றாள்.

“அவர் இருப்பது இந்த ஸ்டேஷன் எல்லையில்தான். இந்த கேசு எங்கள் ஸ்டேஷனுக்குத்தான் வரும். வெளியே இருந்த ஹெட் கான்ஸ்டேபிள் உங்களைப் பார்த்துவிட்டான். இதையெல்லாம் நான் மறைத்து வைத்து விட்டேன் என்று அவருக்குத் தெரிந்தால் என் வேலை போய்விடும். அவர் தேர்தலில் ஜெயித்தற்குக் காரணம் அவர் மகன்தான். அவ்வளவு செல்வாக்கு இருக்கு அவனுக்கு. நீங்கள் கண்ணைக் குத்தியது ஏதோ சாதாரண ரோட் சைட் ரோமியோன்னு நினைத்துக் கொண்டிருந்தேன் இவ்வளவு நேரமாய்.”

“சாதராண ரோமியோவாக இருந்தால் ஒரு ட்ரீட்மென்ட்டும், அமைச்சரின் மகன் ரோமியோவாக இருந்தால் இன்னொரு ட்ரீட்மென்ட்டும் இருக்குமா இன்ஸ்பெக்டர் சார்? என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?”

“கேஸ் போட வேண்டாம் என்று அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுங்கள்.”

அவள் குரல் கம்ம பெரிதாக, “என்னை அவன் கற்பழிக்க முயன்றான் சார். கேஸ் போடும் உரிமை எனக்குத்தான் இருக்கு. நீங்கள் என்னவோ என்னைக் கெஞ்ச சொல்றீங்களே?” என்று கத்தினாள்.

“என் அனுபவத்தைக் கொண்டு சொல்றேன். உங்கள் விருப்பம்” சுருக்கமாய் சொன்னார். குற்றவாளி யார் என்று தெரிந்ததுமே அவரிடம் மாறுதல் தென்படத் தொடங்கிவிட்டது.

அவள் எழுந்து, “உங்கள் விருப்பம் போல் செய்து கொள்ளுங்கள். நான் போகிறேன்” என்றாள்.

“தர்மராமுக்குத் தெரியாமல் நீங்கள் போய்விட்டால் என் வேலை போய் விடும்.”

“வேலை... வேலை... வேலை. இந்த உலகத்தில் பெண்களின் கற்பு, ஆதரவில்லாத தன்மை, இரக்கம் இதெல்லாம் ஒன்றுமே இல்லையா? உங்கள் வேலைதான் முக்கியமா?”

அவர் பேசாமல் டெலிபோனைச் சுழற்றத் தொடங்கினார்.

சரியாய் கால்மணி நேரத்தில் தர்மராம் வந்தார். ஆஜானுபாகுவான தேகம். நடையில் மிடுக்கு தென்பட்டது. ஆனால் முகம் கவலையில் தோய்ந்திருந்தது.

உள்ளே வந்துகொண்டே, “உங்களைத் தவிர வேறு யார் கூப்பிட்டிருந்தாலும் வந்திருக்க மாட்டேன். வீடு முழுவதும் தேர்தலில் ஜெயித்த சந்தோஷத்தில் மூழ்கியிருக்கு. ஒரே மக்கள் கூட்டம்! மகன் விஷயம் என்று சொன்னதால் ஓட்டமாய் ஓடி வந்தேன். என்ன விஷயம்?”

எஸ்.ஐ. எல்லாவற்றையும் விவரமாய்ச் சொன்னார்.

தர்மராமின் முகம் வெளுத்து விட்டது. அது கோபமா வேதனையா என்று தெரியவில்லை. கடைசியில் அவர் மகன் ஒரு கண்ணில் இரும்புக் கம்பி குத்தப்பட்டு அந்த மழையில் அலைந்து கொண்டிருக்கிறான் என்று தெரிந்ததுமே அவளை நோக்கித் திரும்பினார். இழுத்துக் கன்னத்தில் பலமாய் ஒரு அறை கொடுத்தார். அவள் நாற்காலியிலிருந்து துள்ளி விழுந்தாள்.

இந்த எதிர்பாராத சம்பவத்தால் தூக்கிவாரிப்போட, அந்த அதிர்ச்சியிலிருந்து அவள் மீளுவதற்கு முன்பே தர்மராம் அவள் தலைமுடியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டே, “அடிப்பாவி! என்ன பண்ணி விட்டாய் என் மகனை?” என்று கத்தினார். அவருக்கு மகன்தான் சகலமும்.

சாதாரண சமயங்களில் கைகளைக் கூப்பி, “மக்கள்தான் என் உயிர்” என்று சொல்லும் அரசியல்வாதி, மக்களின் அமைதியையும் நலனையும் காக்கும் ஹோம் மினிஸ்டர் தற்சமயம் அரக்கனாய் தென்பட்டார்.

அவள் ஒரே பாய்ச்சலாய் அவரிடமிருந்து விடுபட்டு, தொலைவில் போய் நின்றுகொண்டு எஸ்.ஐ. பக்கம் திரும்பி, “ஆர் யூ நாட் அஷேம்ட் ஆஃப் ஆல் திஸ்?” என்று கத்தினாள்.

எஸ்.ஐ. அவளை இரக்கம் ததும்ப பார்த்துக் கொண்டிருந்தார்.

“இவளை என் காரில் இழுத்துட்டுப் போய்த் தள்ளுங்க. என் மகனுக்கு அங்கே ஏதாவது ஆகிவிட்டால் இவளை உயிரோடு விட்டு விடமாட்டேன்” என்று வெளியே நடந்தார்.

“இது அநியாயம் இன்ஸ்பெக்டர்! கற்பழிப்பிலிருந்து காப்பாற்றும்படி நள்ளிரவில் வந்து வேண்டிக்கொண்ட ஒரு பெண்ணை இந்த மாதிரி ஆபத்தில் தள்ளுவது” என்று சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் கத்தலை காதில் போட்டுக் கொள்ளாமல் இரு போலீசார் அவளை இழுத்துச் சென்று அவர் காரில் ஏற்றினார்கள். காரில் டிரைவரும் இன்னொரு ஆளும் மட்டுமே இருந்தார்கள்.

## 31

தர்மராமின் பங்களா விளக்கு வெளிச்சத்தால் ஜொலித்துக் கொண்டிருந்தது. கட்சித் தொண்டர்கள், தேர்தலில் ஜெயித்த மற்ற அரசியல்வாதிகள், அதிகாரிகள் எல்லோரும் அங்கே குடித்துக் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

காரில் வீசிய குளிர்ந்த காற்றுக்கு தர்மராமின் ஆவேசம் குறைந்து விட்டது. இப்போது இவளை தன் பங்களாவுக்கு அழைத்துச் செல்வது வலிய ஆபத்தை வரவழைத்துக் கொள்வது போல்தான் என்று தோன்றியது.

அவுட் ஹவுசில் இறக்கி காவலில் வைத்து விட்டு, உள்ளே சென்று தன் நெருங்கிய நண்பர்களுடன் கலந்து ஆலோசித்தார்.

அவருடைய நெருங்கிய நண்பர்கள் மூன்று பேர். அவருடைய அரசியல் வாழ்க்கை அம்மூவரின் அறிவுரைகளின் படிதான் நடக்கும். முதலாமவர் சாரங்கராஜன். ஹைகோர்ட் சீஃப் ஜஸ்டிஸ். லீகல் விஷயங்களில் கரை கண்டவர்.

இரண்டாமவன் மஸ்தான் ராஜா. மாபியா தலைவன். இரவோடு இரவாய் ஒரு கும்பலையே தீர்த்துக் கட்டக் கூடியவன்.

மூன்றாமவர் பைனாஷியர். தேர்தல்களில் கோடிக் கோடியாய் செலவு செய்து, வேட்பாளர் ஜெயித்த பிறகு லைசென்ஸ் உருவில் ஐந்து மடங்கு வசூல் செய்து கொண்டு விடக் கூடியவர்.

“தவறு பண்ணிட்டாய்” என்றார் சாரங்கராஜன். “அந்தப் பெண்ணை அங்கேயே எதையாவது நயமாய் சொல்லி அனுப்பி வைத்திருக்க வேண்டியது. அனாவசியமாய்த் தூண்டிவிட்டாய். ஏற்கனவே அவள் படித்த பெண் என்கிறாய் வேறு.”

“என் மகன் உயிருக்கே ஆபத்தான நிலையில் இருக்கிறான் என்று தெரிந்ததுமே...”

“ஒரு கண் போயிருக்க போகுது. அவ்வளவுதானே. இப்போ உன் பதவிக்கே ஆபத்து வந்து விட்டது.”

“எப்படி?”

“எவ்வளவு அமைச்சர்கள் தம் மகன்கள் மூலமாய் தொல்லையில் சிக்கிக்கொள்கிறார்கள் என்று தெரியாதா? அந்தப் பெண் ஒரே ஒரு பத்திரிக்கை நிருபரைச் சத்தித்து விட்டால் போதும். நீ க்ளோஸ் ஆகி விடுவாய்.” நீதிபதி சொன்னார். தர்மராம் யோசனையில் ஆழ்ந்தார்.

“நான் அவ்வளவு தூரம் யோசித்து பார்க்கவில்லை.”

“இந்த விஷயம் அந்த போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ.க்குக் கூட தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அப்படித்தானே?”

“அவன் மூஞ்சி! நேர்மையான ஆளே தவிர வெறும் கோழை! அவன் விஷயத்தை நாம் மறந்துவிடலாம். நாம் யோசிக்க வேண்டியது எதிர்க்கட்சி விஷயத்தைத்தான்.”

“அப்படி என்றால் அவளைத் தீர்த்துக் கட்டி விடுவதுதான் சரியானது. இவ்வளவு சின்ன விஷயத்திற்குப் போய் அவ்வளவு தூரம் யோசிக்கணுமா என்ன?” என்று மஸ்தான் ராஜா எழுந்தான்.

மஸ்தானை நில் என்று சொல்லிவிட்டு, “உங்கள் ஜட்ஜ்மென்ட் என்ன?” தர்மராம் கேட்டார்

சாரங்கராஜனை.

“அதுதான் சரி என்று நினைக்கிறேன். இவ்வளவு நடந்தபிறகு அந்தப் பெண் வாயைத் திறக்காமலிருக்காது. அதோடு காவல் நிலையத்திலேயே திமிராய் பேசினாள் என்று வேறு சொல்கிறாய். இன்னும் பத்து நாளில் எப்படியும் அமைச்சர் பட்டியலை வெளியிடுவார்கள். திரும்பவும் நீயேதான் ஹோம் மினிஸ்டர் ஆகப் போகிறாய். போலீசார் உன் கைக்குள்தான் இருப்பார்கள். இந்தச் சமயத்தில் இந்த விஷயம் வெளியில் பரவக்கூடாது. நிருபர்கள் கழுகு போன்றவர்கள். சின்ன விஷயத்தைக் கூட மோப்பம் பிடித்து விடுவார்கள். அதோடு அந்தப் பெண்ணை ஆவேசத்தோடு வீட்டுக்கு வேறு அழைத்துக்கொண்டு வந்துவிட்டாய்.”

தர்மராம் யோசனையுடன் மஸ்தான் ராஜாவைப் பார்த்தார். ராஜா வெளியே நடந்தான். அதற்குள் அவன் பாடிகார்டுகள் அந்த பெண்ணை அவுட்ஹவுசிற்குக் கொண்டு வந்திருந்தார்கள்.

உள்ளே வந்த மஸ்தான் ராஜாவைப் பார்த்து பயந்து நடுங்கினாள் அவள்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அங்கே அலறல் கேட்டது.

அரைமணிக்குப் பிறகு திரும்பி வந்த மஸ்தான் ராஜாவைப் பார்த்து, “முடிந்து விட்டதா?” என்று கேட்டார் தர்மராம். அவன் சிரித்தான்.

“பிளானில் சின்ன மாறுதல்.”

“என்ன?”

“பெண் ரொம்ப அழகா இருக்கிறாள். ஃபிரெஷ்! அப்படிப்பட்டதை சாதாரணமாய்க் கொன்று பிணத்தை மாயம் செய்வதில் எனக்கு விருப்பமில்லை. அதனால்தான் அரைமணி நேரம் தாமதமாகி விட்டது. தர்மராம் வெற்றி பெற்ற சந்தர்ப்பத்தில் சியர்ஸ் சொன்னோமே தவிர சேலையை அவிழ்க்க வில்லையே என்று இவ்வளவு நேரமாய் வருத்தப்பட்டுக்கொண்டு இருந்தேன். அந்த ஆசை நிறைவேறி விட்டது. ஜட்ஜ் சார்!

நீங்கள் போங்க. அதான் சொன்னேனே. சரக்கு ரொம்ப நன்றாக இருக்கு.”

“அப்படி என்றால்...”

“புரியவில்லையா? எப்படியும் சாகப் போகிறவள்தானே? முதலில் கொஞ்சம் ருசி பாருங்கள்.” சிரித்தான் ஜட்ஜைப் பார்த்து.

“மை காட்! நானா?”

மஸ்தான் ராஜா அவரிடம் வந்தான். “என்ன சுவாமி! நீங்கள் ஆண்பிள்ளை இல்லையா? இப்பத்தான் கறுப்புக் கோட்டு இல்லையே? ஐந்து நிமிஷ வேலை. என்ஜாய் பண்ணுங்கள். இரண்டாம் பேருக்குத் தெரியாது.”

சாரங்கன் கண்களில் பத்தாண்டுகளுக்கு முன்னால் மனைவி இறந்ததுமே மடிந்து போய் விட்டிருந்த ஆசை மெதுவாய் தலையெடுத்து கண்களில் வழிந்தது. அதை கவனித்துவிட்ட தர்மராம் தலையாட்டிவிட்டு, “போங்க. இதில் தவறென்ன இருக்கு?” என்றார்.

கொஞ்சம் தயங்கிவிட்டு சாரங்கன் அவ்வறையை விட்டுக் கிளம்பினார்.

அவள் ஆதரவில்லாமல் மேற்கூரையைப் பார்த்தபடி படுத்திருந்தாள். அவள்மீது லயப்படி அசைந்து கொண்டிருந்த உடல் அவளுக்கு அருவருப்பை தரவில்லை. அவள் சக்தியெல்லாம் மஸ்தான் ராஜாவை எதிர்த்துப் போராடியதிலேயே நசிந்து போய் விட்டது. இந்த இரண்டாவது உடல் அவளைத் துன்புறுத்தவில்லை. சாரங்கன் போனபிறகு தர்மராம் வந்தார். மகன் முயன்று தோற்றுப் போய் விட்டதை தந்தை சாதித்துவிட்டார். மூவரின் களங்கமும் அவள் மனதில் விஷத்தைப் பூசிற்று. தர்மராம் வயதில் பெரியவர். மஸ்தான் ராஜாவைப் போல் ரௌடி அல்ல. சாரங்கனைப் போல் ஜாக்கிரதையை மேற்கொள்ளத் தெரியவும் இல்லை. அந்தப் பக்கமாய் திரும்பி உடையணிந்து கொண்டிருந்த போது கொஞ்சம் அலட்சியமாய் இருந்துவிட்டார். அவள் சக்தியெல்லாம் திரட்டிக்கொண்டு உடலைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்தாள். அவரை பலமாய் பிடித்துத் தள்ளிவிட்டு இருட்டில் ஓடிவிட்டாள்.

தர்மராம் திகைத்துப் போய் விட்டார். ஆனால் எதிர்பாராத இச்சம்பவத்திற்கு பயந்து விடவில்லை. அரசியல் சதுரங்கத்தில் இதைவிட வினோதமான சம்பவங்களை சந்தித்தவர் தர்மராம்.

"அந்தப் பெண் ஓடிப் போய் விட்டாள். இதைப் பற்றியெல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் சொல்லி விடுவாள். வெளி உலகத்திற்குப் போவதற்குள்ளாவே வழிகளை அடைத்து விட வேண்டும்" என்றார் நீதிபதி.

"அந்த விஷயத்தை என்னிடம் விடுங்கள். இதை ஒரு சவாலாய் என்றான் ரௌடி மஸ்தான் ராஜா.

"இந்தக் காரியம் வெற்றிகரமாய் முடித்தால் உங்களுக்கு வாழ்நாளெல்லாம் கடமைப் பட்டிருப்பேன்" என்றார் ஹோம் மினிஸ்டர் ஆகப் போகிறவர்.

நாலாவது ஆள் எதுவும் பேசவில்லை. அவளுக்கான வேட்டை தொடங்கி விட்டது.

அவள் மூச்சிரைக்க அந்த எல்லைக்குள் நுழைந்தாள். அந்த எல்லை அவளுக்கு பரிச்சயமான எல்லைதான். அங்கேதான் அவள் தந்தையோடு சேர்ந்து இரவும் பகலும் ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருதாள்.

இரவு இரண்டு மணிக்கு, அவிழ்ந்து தொங்கிய கேசங்களுடன் மழையில் நனனிந்து கொண்டு உள்ளே நுழைந்த மகளைப் பார்த்து அவர் வியப்படைந்தார். உண்மையில் அவர் இந்த உலகத்திலேயே இல்லை. விஞ்ஞான சாம்ராஜ்ஜியத்தின் கடைசி படியில் ஏறிவிட்ட ராஜாதிராஜனாக, ஓட்டப் பந்தயத்தில் வெற்றியடைந்த சின்ன பையனைப் போல் அபரிமிதமான் ஆனந்தைத்தோடு மகளை அப்படியே கட்டிக்கொண்டார்.

"சாதித்து விட்டேனம்மா! மனித இனத்தை கிருமிகளின் தாக்குதலிலிருந்து காப்பாற்றக் கூடிய கியாஸ் ஃபார்முலாவைக் கண்டு பிடித்து விட்டேன். இந்த வெற்றி உன்னுடையது. என்னுடையது. நம்முடையது. கிரீன் ரெவல்யூஷனைச் சாதித்து விட்டோம்."

அவர் சந்தோஷத்தோடு அவளை உலுக்கி எடுத்த போது அவளால் பேச முடியவில்லை. அன்றிரவு ஏற்பட்ட கசப்பான அனுவங்களை அவளால் சொல்ல முடியவில்லை. இதே வெற்றி நேற்றிரவு கிடைத்திருந்தால்

எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? கண்ணீர் நிரம்பிய கண்களோடு நினைத்துக்கொண்டாள். ஏதோ இனம் புரியாத வெறுப்பும், ஆதரவில்லாத தன்மையும் எரிச்சலும் அவளை உலுக்கி எடுத்துக் கொண்டிருந்தன.

அதே சமயத்தில் கதவிற்கருகில் சந்தடி கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். அக்காட்சியை அவளால் வாழ்நாளெல்லாம் மறக்கவே முடியாது. கதவிற்கு அப்பாலிருந்து வந்த மங்கலான வெளிச்சத்தில் அவன் நிழல் நீளமாய் வந்து விழுந்தது. ஒரு கண்ணிலிருந்து வழிந்த ரத்தம் கன்னத்தில் கோடு போட்டு உறைந்திருந்தது. தலையிலிருந்து இன்னும் மழைத் தண்ணீர் வழிந்தோடிக் கொண்டே இருந்தது. தன் கண்ணில் குத்திவிட்டு ஓடிப் போய்விட்ட பெண்ணை அவன் எவ்வளவு நேராய் தேடிக் கொண்டிருந்தானோ தெரியாது. அவளைப் பார்த்ததுமே பயங்கரமாய்ச் சிரித்தான்.

“என் கண்... என் கண் போய் விட்டது. எரியவில்லை. அந்த நெருப்பு இங்கே எரிகிறது” என்று மார்ப்பைத் தொட்டுக் காட்டினான். “உன்னை இனி உயிரோடு விட மாட்டேன்.”

அவள் சிலையாய் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

“யார் நீ?” கிழவர் கிட்டே போய் கேட்டார்.

ஒரே ஒரு அறை. அக்கிழவரின் உடல் காற்றில் எம்பிப் போய் சுவரோடு மோதி சலனம் ஒடுங்கிற்று. “அப்பா!” என்று அவள் அவ்விடத்திற்கு ஓடினாள். அவன் குறுக்கே வந்தான்.

கிழவரிடம் சலனம் இல்லை.

அவன் ஓரடி முன்னோக்கி வைத்தான்.

தனக்கு ஏற்பட்ட அநியாயத்தைக் காட்டிலும் தன் தந்தைக்கு நிகழ்ந்த அக்கிரமம்தான் அவளுக்கு ஆத்திரத்தைக் கிளபிற்று,

அவன் கிட்டே வந்தான். கைகளை நீட்டினான்.

அவள் திரும்பி பக்கத்தில் பார்த்தாள். அவளுடைய பலநாள் தோழர்கள்.. கார்போஜைலிக் ஆசிட்கள், நைட்ரோ காம்பவுண்டுகள், ஜிரகோனியம், ஒஸ்மியமும்

பயிற்சி பெற்றிருக்கும் படை வீரர்களைப் போல் வரிசையாய் நின்று கொண்டிருந்தன. அவள் ஒரு குடுவையைக் கையில் எடுத்துக் கொண்டாள். அவள் மனதில் இருந்த ஆத்திரத்தை எல்லாம் சக்தியாய் மாற்றிக்கொண்டு பலமாய் அவன் மேல் வீசி எறிந்தாள்.

அப்பொழுது அவன் அலறிய அலறல் அந்த ஹாலையே கிடுகிடுக்க வைத்தது. சருமம் செதில் செதிலாக விடுபட்டுக் கொண்டிருந்தது. எதிர்த்து நின்ற படை வீரர்களைப் போல் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கிற்று. வினாடி நேரத்தில் அவன் தேகம் எரிந்து சாம்பலாகி எலும்புகள் வெளிப்பட்டன. துவண்டு சரிந்தான். அவள் அவனைப் பார்க்கவில்லை.

தந்தையிடம் ஓட்டமாய் ஓடிப் போய் அவர் உடலை தன் மடியில் ஏந்திக்கொண்டு அழத் தொடங்கினாள்.

மெல்ல மெல்ல அவள் ஆவேசம் தணிந்துவிட்டது. எதிரே சாம்பலாய்ப் போன பிணம், தொலைவில் மழையும் இடியும், உயிரற்ற தந்தை.

பரிகாசம் பண்ணிக் கொண்டிருந்த குற்றம், படமெடுத்த பாம்பாய் ஓடித் துரத்திக் கொண்டே இருக்கிறது.

அவள் நடுங்கி விட்டாள் ஒரு சிறிய சம்பவம், சின்ன லிப்ட்... மூவரால கற்பழிக்கபடுவதற்கு வழிகோலி, கடைசியில் கொலையாளியாகி விட்டது அவளை.

என்ன பண்ணுவதென்று புரியாதவளாய் அவள் எழுந்திருந்தாள். கதவிற்கருகில் சந்தடி கேட்டது. அவள் மேலும் பீதியடைந்தவளாய் அந்தப் பக்கமாய் பார்வையை செலுத்தினாள்.

அங்கே பூஷணம் நின்று கொண்டிருந்தார்.

அந்த பரிசோதனைச் சாலையின் சொந்தகாரரர் என்ற முறையில் அவள் அறிந்திருந்தாள். அவள் திடீரென்று ஓவெனக் கதறி விட்டாள். என்னவாயிருந்தாலும் அபலைப் பெண். அதுவரை இதயத்தில் வடிகட்டிக் கொண்டிருந்த வேதனை துக்க உருவில் துளையிட்டுக் கொண்டு வெளி வந்தது. அவள் துக்கம் தீரும் வரையிலும் அவளை அப்படியே அழவிட்டார் அவர். “நான்... நான்” என்றாள் மூச்சிரைக்க.

“எனக்கு எல்லாம் தெரியும்” என்றார் அவர் சுருக்கமாக. “இங்கிருந்து நீ உடனே வெளியேறி விட வேண்டும். அதிக நேரமில்லை. அவர்கள் வேட்டை நாயாய் உன்னைத் துரத்திக்கொண்டே வருகிறார்கள்.”

“யாரு, போலீசா?”

“இல்லை, தர்மராம். சாரங்கன், மஸ்தான் ராஜா இன்னும் விவரமாய் சொல்லணும் என்றால் உன்னைக் கற்பழித்தவர்கள். மீதி விஷயங்களை அப்புறமாய் சொல்கிறேன். கிளம்பு.”

“எங்கப்பா?” தீனமாய் கேட்டாள்.

“பிணத்துகாகக் காத்துகிட்டு இருந்தால் நீயே பிணமாக மாறிவிடுவாய்.” எச்சரிப்பது போல்ச் சொன்னார். “அவர்கள் காவல் நிலையத்தில் உன்னைப் பற்றிப் புகார் கொடுக்க போயிருக்கிறார்கள். கேவலம் பதவி பறிப் போய் விடப் போகிறதே போகிறதே என்கிற பயத்தால் உன்னைக் கொன்று விடணும் என்று நினைக்கிறவர்கள், இப்போது மகன்கூட உன் கையால் இறந்து விட்டான் என்று தெரிந்தால் சும்மாயிருக்க மாட்டார்கள். புறப்படு.”

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவள் அவருடைய கெஸ்ட் ஹவுசில் இருந்தாள். அவர் நடைபயின்று கொண்டிருந்தார் யோசனையுடன்.

“சார்” என்றாள் அவள். “என் வருத்தத்தில் ஆழ்ந்துபோய் உங்களுக்கு ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டேன். அப்பா பி.ஜி. கியாஸ் ஃபார்முலாவைக் கண்டு பிடித்துவிட்டார்.”

பூஷணம் சொன்னார். “உண்மையாகவா? எவ்வளவு நல்ல செய்தி! இதைப் பண்ணியதற்காகவாவது நான் உங்கள் குடும்பத்திற்கு தகுந்த வெகுமதி கொடுக்கணும்.” அவர் ஜேபியிலிருந்து இன்செக்ஷனை வெளியே எடுத்தார்.

“இதென்னது?” கேட்டாள்.

“பெதிட்ரின்... நீ கவலையும் குழப்பமுமாய் இருக்கிறாய். ஒரு சயின்டிஸ்ட்’ இதுபோல் சாதாரண விஷயத்துக்கு மனம் கலங்குவது எனக்குப் பிடிக்கவில்லை உன்னைப் பாதுகாக்க வேண்டிய

பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். இன்றிலிருந்து நீ என் வளர்ப்பு மகள். என் மகள் பெயர் அம்சரேகா. உன் பெயர் இனி சுவர்ணா இல்லை. சுவர்ணரேகா. இனி எந்த சக்தியுமே உன்னை ஒன்றும் பண்ணி விட முடியாது. எவ்வளவு கழுகுகள் துரத்திக்கொண்டு வந்தாலும் இந்தப் புறா காப்பாற்றப்பட்டு விடும்."

அந்த விதமாய் அன்று முதல் சுவர்ணா சுவர்ணரேகாவாகி விட்டாள்.

அவள் உடல் மெதுவாய் காற்றில் மிதக்கத் தொடங்கியது.

"தாக்ஸ்... தாங்... தாங்க்ஸ்."

"எப்படி இருக்கு?" கேட்டார்.

"வெறுப்பாய் ஆத்திரமாய் இருக்கு. இந்த ஆண்கள் மீதே வெறுப்பாய் இருக்கு."

"இருக்கும். ஒரு இன்ஸ்பெகடர் கோழையாய் முக்காடு போட்டுக்கிட்டார். ஒரு நீதிபதி உன்னைக் கொல்லணும் என்று தீர்ப்பு தந்தார். ஒரு ஹோம் மினிஸ்டர் உன்னை கற்பழித்தார். உன் மனம் ஆத்திரத்தால் குமுறுவதில் தவறு இல்லை."

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"தர்மராமுக்குப் பக்கத்திலிருந்த நாலாவது ஆள் ஆதலால்." பூஷணம் சிரித்தார். "இந்த பரிசோதனைச் சாலை என்னுடையது. இந்த ஊரில் பாதி ஃபாக்டரிக்கள் என்னுடையவை. முதலீடு போடுவது என் பொழுதுபோக்கு. புத்திசாதுரியம் எங்கே இருந்தாலும் விலை கொடுத்து வாங்கி விடுவது என் வழக்கம். அவர்களை விட வேகமாய் என்னால் யோசிக்க முடியும். உன் தந்தை மனித இனத்திற்குப் பயன்படக் கூடிய பூச்சிக் கொல்லி மருந்தை கண்டு பிடித்தார். அதன் ஃபார்முலாவை நீ கொஞ்சம் மாற்றப் போகிறாய். வேறு விதமாய் கண்டு பிடிக்கப் போகிறாய். அது மனித இனத்தைக் கொல்லக் கூடிய மருந்தாக வேண்டும். நீதிபதிகளையும், போலீசாரையும், அமைச்சர்களையும் கொல்லக் கூடிய மருந்தாக மாற வேண்டும். இந்த நாட்டைப் போன்ற உதவாக்கரை நாடு வேறொன்று இல்லை. இதை நிர்மூலம் பண்ண வேண்டும்.

அப்பொழுதுதான் உனக்குப் பண்ணிய அநியாயம் தீரும். உங்கப்பாவின் ஆத்மா சாந்தியடையும்.”

“ஆமாம்.” மயக்கத்தோடு பதிலளித்தாள்.

“உன் உதவியால் நான் பேரரசனாகி விடுவேன். உன்னைக் காபாற்றியதற்கு நீ தரக் கூடிய கைமாறு அதுதான்” என்று கைதட்டினார்.

ஒரு இளைஞன் உள்ளே வந்தான்.

“இந்த நிமிஷத்திலிருந்து இவன் உன் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வான். இவன் சுறுசுறுப்பானவன். சிறுத்தை புலியைக் காட்டிலும் வேகமானவன். நரியைக் காட்டிலும் சாமர்த்தியசாலி. இவன் உன் பக்கத்தில் இருக்கிற வரைக்கும் உன்னை யாராலும் ஒன்றும் பண்ணி விட முடியாது. நீ எங்கள் பாதுபாப்பில் இருக்கிறாய்.”

“கிளா... கிளாட் டு மீட் யூ. என் பெயர் சுவர்ணரேகா.”

“என் பெயர் க்யூ. ஏஜெண்ட் க்யூ!’

“க்யூ! ரொம்ப நன்றாய் இருக்கிறதே பெயர்.”

“க்யூ என்றால் குவஸ்ச்சன் மார்க்.”

“குவஸ்ச்சன் மார்க்!” அவள் பெரிதாய் சிரித்தாள். பெதிட்ரின் மயக்கத்தில் அவள் சிரித்த சிரிப்பு அலை அலையாய் அவ்வறையில் எதிரொலித்தது. மிகக் கொடுமையானவர் என்று பெயரெடுத்த பூஷணம் கூட வியப்போடு அவளைப் பார்த்தார். காளிதேவியின் அவதாரம் போல் இருந்தாள் அவள்.

“இந்த உலகத்தில் ஒவ்வொரு ஆணும் ஒரு குவஸ்ச்சன் மார்க்! தடி, கழி, காந்தி தொப்பி எல்லாம் வெளி வேஷங்கள்தாம். இறந்துவிட்ட என் தந்தையின் மேல் ஆணையிட்டுச் சொல்றேன். இந்த நாட்டைப் பழி வாங்கி விடுகிறேன். எனக்கு மனிதர்கள் மீது நம்பிக்கை போய் விட்டது. இந்த ஆண்கள் அத்தனைப் பேருமே கிரிமிகள்தான். அவைகளை அழிக்கும் மருந்தை நான் கண்டுபிடிக்கிறேன். டாடி! புது டாடீ! கிவ் மி எ டோஸ். பரிசோதனைச் சாலை, பெதிட்ரின் மருந்து இவைகளைத் தவிர வேறெதுவுமே தேவையில்லை எனக்கு.”

# 32

கடந்த கால நினைவுகளை கண்ணீர் உருவில் கால்வாய் கட்டி விட சுவர்ணரேகா அவ்வாறு எவ்வளவு நேரம் இருந்தாளோ தெரியாது. கார் ஓசை கேட்கவே ஜன்னல் வழியாய் பார்த்தாள். பூஷணத்தின் கார் போர்ட்டிகோவில் நின்றது. அவள் எழுந்திருக்க முயற்சிக்க வில்லை. எதிர் ப்ளாட்டிலிருந்து நேத்ரா கூட பூஷணம் வருவதை டெலிஸ்கோப மூலமாய்ப் பார்த்தான். சுவர்ணரேகா தன் கார் பிரேக் பெயிலானதற்குத் தந்தைதான் காரணம் என்று நம்பினாளா இல்லையா என்று தெரியாது. அவளை எப்படி நம்ப வைப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தான் நேத்ரா. அதற்குள் மின்னல் போன்ற யோசனை ஒன்று வந்தது போனை எடுத்து டயல் பண்ணினான்.

“ஹலோ! பூஷணம் ஹியர்.”

“நான் டிராஃபிக் கான்ஸ்டபிள் பேசுகிறேன் சார். நேஷனல் ஹைவேயில் கார் ஆக்ஸிடென்ட் ஆயிடுத்து, MXY 1234 .உள்ளேயிருந்த பேப்பர்களைக் கொண்டு உங்கள் கார்தான் என்று தெரிந்தது.”

“எங்கள் கார்தான்” என்றார் பூஷணம், “காரில்..?”

““டிரைவர் சீட்டில் ஒரு பெண்...”

நேத்ராவின் வார்த்தைகள் முடியக்கூட இல்லை. “எப்படி இருக்கிறாள்?” என்று கேட்டார்.

“இறந்து விட்டாள் சார்.”

“மை காட்! இதோ வருகிறேன்.”

போனை வைத்துவிட்டு தனக்குள் சிரித்துக்கொண்டார். வயர்லெஸ் எடுத்துப் பேசினார்.

“ஆபரேஷன் முடிவடைந்து விட்டது. ஆமாம். பிரேக்குகள் பெயில் ஆனதில் சுவர்ணரேகா இறந்து போய் விட்டாள். என் மகளை அழைத்துக் கொண்டு உங்கள் கோல்ட் ஐலாண்டிற்குப் புறப்படுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். குட் பை மிஸ்டர் பிளாக் ஈகிள்.”

வயர்லெஸ் நிறுத்திவிட்டுத் திரும்பியவர் சிலையாய் நின்று விட்டார். கதவிற்கருகில் சுவர்ணரேகா

துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தாள். நேத்ரா காற்றில் விட்ட அம்பு அவ்விதமாய் நேராய் போய் தைத்துக் கொண்டது.

“ஒரு கிளாஸ் சாராயத்திற்காகத் தங்கைகளை விபச்சாரத்தில் தள்ளும் அண்ணன்மார்கள் இருப்பதாய்க் கேள்விப் பட்டிருக்கிறேன். பிரமோஷனுக்காக மனைவியரைத் தாரை வார்க்கும் உத்தியோகஸ்தர்கள் இருப்பதைப் பற்றியும் படித்திருக்கிறேன். ஆனால் மேல்மட்டத்து சமுதாயத்தில் கோடிக்கணக்கில் பணம் வேண்டுமென்று ஆசைப்பட்டு மகள் உயிரை எடுக்கும் தந்தைகள் கூட இருக்கிறார்கள் என்று இப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன். வேறு எந்த எண்ணங்களும் ஏற்படாத அளவுக்கு போதை மயக்கத்தில் மூழ்க வைத்தது இதற்காகத்தானா? மூன்று அரக்கர்களின் பிடியிலிருந்து காப்பாற்றி, பெற்ற மகளாய் அரவணைத்துக் கொண்டது இதற்காகத்தானா அப்பா?” வேதனையாய் சிரித்தாள் சுவர்ணரேகா.

“எப்படியும் கொல்லத்தான் போகிறோம். கொலை செய்வதற்கு முன்னால் அனுபவித்து விடுவோம் என்றெண்ணினான் ஒரு ரௌடி. நீதிபதியாய் ஒய்வு பெற்றுவிட்டு, பெண் ஒருத்தியைப் பார்த்ததும் நப்பாசை கொண்டான் ஒரு கிராதகன். மகனின் கண் பறிபோய் என்ன ஆனானோ தெரியாத நிலையில் கூட கன்னிப் பெண்ணை ஆசை தீர அனுபவித்தான் இன்னொரு அரக்கன். அவர்கள் எல்லோருக்கும் விதம் விதமான விருதுகளை வழங்கலாம். ஆனால் இவ்வளவு சீராட்டி, இறுதியில் இத்தனை தயையின்றி கொல்ல எண்ணினாயே! அப்படிப்பட்ட உனக்கு என்ன விருது வழங்குவது என்று தெரியவில்லை எனக்கு. கொல்லப் போவதற்கு முன்னால் ஆட்டை நன்றாய் மேய விடுவார்களாம். அதுபோல் என்னைக் கொண்டு பரிசோதனைகளைப் பண்ண வைத்து, பலனை அனுபவிக்கணும் என்று எண்ணியிருந்தாயா டாடீ?”

பூஷணம் பதில் பேசவில்லை.

“இதையெல்லாம் நேத்ரா சொன்னபோது நான் நம்பவில்லை. என்னை உன்னிடமிருந்து பிரிப்பதற்காக

உபாயம் பண்ணுகிறான் என்று நினைத்து விட்டேன். ஆனால் இப்போது நீயே என்னை இந்த உலகத்திலிருந்து அனுப்பிவிட வேண்டும் என்று முயன்றாய். ‘நீதான் என் தெய்வம்’ என்று இத்தனை நாளாய் என்னை அனுபவித்து அந்த ஏஜெண்ட் க்யூ என்னைக் கொல்லச் சொல்லி உன்னைத் தூண்டி விட்டான். இதைவிட கொடுமை வேறு உண்டா? மனிதர்கள் மீது எனக்கு இருந்து வந்த அவநம்பிக்கையை நீங்கள் இன்னொரு தடவை நிரூபித்து விட்டீர்கள். உன்னை எதற்காக உயிரோடு விட்டு வைக்கணும்?”

“இந்தக் கேள்விகளை எல்லாம் என்னை ஏன் கேட்கிறாய்? அதோ பின்னாடியே நிற்கிறானே க்யூ. அவனையே கேள்.”

அவள் திரும்பினாள். அடுத்த வினாடி அவள் கையிலிருந்த துப்பாக்கி பூஷணத்தின் கைக்கு வந்தது. அவன் சிரித்தான். அவள் உயிருக்கு அஞ்சி ஓடினாள்.

அவன் கையிலிருந்த துப்பாக்கி வெடித்தது.

பூஷணம் வயர்லெஸ்ஸில் பேசிக் கொண்டிருந்த போது சுவர்ணரேகா வந்தது, அவ்விருவரும் வாதவிவாதம் பண்ணிக் கொண்டது சுவர்ணரேகா துப்பாக்கி மூலம் மிரட்டியது... எல்லாவற்றையும் டெலஸ்கோப் மூலமாய் நேத்ரா பார்த்துக் கொண்டிருந்தான்.

ட்ராபிக் கான்ஸ்டேபிள் குரலில் தான் பண்ணிய போன் மூலமாய் அவள் உண்மையை தெரிந்துகொண்டது மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. சுவர்ணரேகா தன்னையறியாமல் பின்னால் திரும்பிப் பார்த்ததும், பூஷணம் அவள் மேல் பாய்ந்து துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டதையும் பார்த்தான்.

“மை காட்!” என்றெண்ணிக்கொண்டு ஒரே பாய்ச்சலில் ப்ளாட்டிலிருந்து வெளியே வந்து லிஃப்டிற்காக கூட காத்திராமல் படிகளில் விடுவிடென்று இறங்கத் தொடங்கினான்.

கல்யாணி ரிக்ஷாவை நிறுத்தச் சொல்லிவிட்டு, தடவிக்கொண்டே கீழே இறங்கினாள். கண் தெரியாத அவளுக்கு எஞ்சிய விஷயங்களில் கிரகித்துக்கொள்ளும்

சக்தி அதிகமாக இருந்தது. அவள் ஃபேன்சி ஷாப்பிற்குள் நுழைந்தாள். அவள் தனக்குத் தேவையான பொருட்களை அந்த ஷாப்பில்தான் சாதாரணமாய் வாங்குவாள்.

வெளியே தெரு சந்தடியாய் இருந்தது. ஆனால் அதொன்றும் அவளுக்குத் தொல்லை இல்லை. திட்டம் எதுவும் போடாமல், எத்தனை அடிகள் எடுத்து வைத்தால் படிகள் வரும் என்றும், நடைபாதை எவ்வளவு தூரம் என்பது போன்ற விஷயங்கள் மூளையிலே பதிந்து போயிருந்தன.

அவள் ஷாப்பிங்கை முடித்துக்கொண்டு வெளியே வந்தாள். கார்களின் ஹாரன் சப்தம், எஞ்சிய வாகனங்களின் பேரிரைச்சல்களால் தெரு அதிர்ந்து கொண்டிருந்தது.

தெருவுக்கு இடது பக்கமாய் இருந்த ரிக்ஷாவை நோக்கி அவள் போகத் தொடங்கினாள். அவள் கையிலிருந்த வெள்ளைக்கழியைப் பார்த்து விட்டு எதிரே வந்தவர்கள் ஒதுங்கி வழி விட்டார்கள்.

எல்லோரும் அப்படிப் பண்ணிவிட்டால் அது உலகம் எப்படியாகும்? ஜீன்ஸ் போட்ட இளைஞன் ஒருவன் அவளைப் பார்க்காதது போல் நடித்தபடியே வந்து அவள் மேல் மோதிக்கொண்டான். அந்த அரை வினாடி நேரத்தில் அவள் மார்ப்பை அழுத்திவிட்டு அகன்றான். அவள் லேசாய் கத்தினாள். கையிலிருந்த கழி நழுவி பக்கத்திலிருந்த கால்வாயில் விழுந்து விட்டது. அந்த கூட்டத்தில் அவள் கத்தல் யார் காதிலும் விழவில்லை. இளைஞன் எத்தனை வேகமாய் அவள் மேல் வந்து மோதினானோ, அத்தனை வேகமாய் அங்கிருந்து மறைந்துவிட்டான்.

கல்யாணி குனிந்து கழியைத் தேடத் தொடங்கினாள். யாரோ கிழவர் “கால்வாயில் விழுந்து விட்டதம்மா” என்றார். அவள் அதை எடுக்கும் முயற்சியை கைவிட்டு விட்டு ரிக்ஷாவை நோக்கி நடக்கத் தொடங்கினாள். அவள் கையில் கடையில் வாங்கிய சாமான்கள் இருந்தன.

அவள் பிளாட்ப்பாரத்திலிருந்து இறங்கப் போனபொழுது, “அந்தப் பக்கம் இல்லை இந்தப் பக்கம்

க்விக்” என்ற குரல் கேட்டது. எங்கே இருந்தாலும் அவளால் அந்தக் குரலை அடையாளம் கண்டுகொள்ள முடியும். அவன் குரலில் கலவரமும், பதற்றமும் இருந்தன. தெருவுக்கு அந்தப் பக்கத்திலிருந்து கத்திக் கொண்டிருந்தான்.

“இந்தப் பக்கமாய் வந்துவிடு. சீக்கிரமாய்.”

கையில் கழி இல்லாமல் அவள் ஓரடி முன்னோக்கி எடுத்து வைத்தாள். தெருவில் லாரி ஒன்று வேகமாய் வந்து கொண்டிருந்தது.

*****

சுவர்ணரேகா பின்னால் திரும்பிப் பார்த்ததுமே பூஷணம் துப்பாக்கியைப் பிடுங்கிக்கொள்ளவே, அவள் வெளியே ஓடினாள். வீட்டிலிருந்து மெயின்கேட் முன்னூறு அடிகள் தூரத்தில் இருந்தது. அவள் அங்கு போய்ச் சேருவதற்குள் பின்னாலிருந்து அவர் இரண்டு முறை துப்பாக்கியால் சுட்டார், அவள் மட்டும் வெளியே போய்விட்டால் தன் சரித்திரமே முடிந்து விடும் என்றறிவார் அவர். வெறி பிடித்தவராய் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே அவரும் வீட்டின் முன் பகுதிக்கு வந்தார்.

சரியாய் அதே சமயத்தில் க்யூ பூஷணத்தை அழைத்துச் செல்வதற்காக ஜீப்பில் வந்தான். ஃபார்முலா கிடைத்துவிட்டதால் இனி இந்த நாட்டில் வேலை முடிந்து விட்டாற்போல்தான். திடீரென்று வீட்டிற்குள்ளேயிருந்து ஓடி வந்து கொண்டிருந்த சுவர்ணரேகாவைப் பார்த்துவிட்டு அவன் திடுக்கிட்டு போய் விட்டான். அவள் உயிரோடு இருந்தது அவனுக்கு வியப்பாய் இருந்தது. ஆனால் அவளைத் துரத்திக்கொண்டு பூஷணம் பின்னாடியே துப்பாக்கியோடு வருவதைப் பார்த்துவிட்டு, மேற்கொண்டு எதுவும் யோசித்துக் கொண்டிராமல் தானும் சேர்ந்து துரத்தத் தொடங்கினான். இன்னொரு பக்கத்திலிருந்தும் கூட துப்பாக்கி வெடிக்கத் தொடங்கியதைப் பார்த்துவிட்டு பயந்துபோன சுவர்ணரேகா தெருவிற்கு நடுவே வந்தாள்.

சரியாய் அதே சமயத்தில்தான் நேத்ராவும் பிளாட்டிலிருந்து கீழே வந்தாள்.

தெருவுக்கு இந்தப் பக்கத்தில் பூஷணமும், அந்த மூலையில் ஏஜெண்ட் க்யூவும், அந்தப் பக்கத்தில் நேத்ராவும், நடுவில் சுவர்ணரேகாவும் இருந்தார்கள். சுவர்ணரேகா குழப்பத்துடன் ஓடப் போனபொழுது, “அந்தப் பக்கமாய் இல்லை. இந்தப் பக்கமாய் கவிக்” என்று கத்தினான் நேத்ரா. அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

“இந்தப் பக்கமாய் வந்து விடு சீக்கிரமாய்” என்று திரும்பவும் கத்தினான்.

கல்யாணியின் காதில் விழுந்த வார்த்தைகள் அவைதான்.

அண்ணன் தன்னைத்தான் கூப்பிடுகிறான் என்றெண்ணிக்கொண்டு அப்பெண்ணும்கூட தெருவுக்கு நடுவே வந்தாள். சுவர்ணரேகாவைப் பார்த்துக்கொண்டிருந்த நேத்ரா தங்கையைக் கவனிக்கவில்லை. ஜேபியிலிருந்து துப்பாக்கியை எடுத்து பூஷணத்தைக் குறி பார்த்துச் சுடப் போனான். தெருவில் வாகனங்களின் சந்தடி எவ்வளவு பேரிரைச்சலாய் இருந்தது என்றால், அவற்றின் சத்தத்தில் துப்பாக்கிச் சத்தம் கூடக் கேட்கவில்லை. நேத்ரா தன் முயற்சியைக் கைவிட்டுவிட்டு தெருவுக்கு நடுவே வந்தான். அது தன் உயிருக்கே ஆபத்து என்று தெரியும். ஆனால் சுவர்ணரேகாவின் மேல் நாட்டில் எதிர்காலமே ஆதாரபட்டுக் கொண்டிருக்கிறது.

எதிரே வந்து கொண்டிருந்த காரை கிராஸ் பண்ணி, அவன் சுவர்ணரேகாவிடம் வரப் போனான்.

அதே சமயத்தில் அவன் பார்வை வேகமாய் வந்து கொண்டிருந்த லாரியின் மேல் பட்டது.

அதற்கு முன்னால் கல்யாணி நின்று கொண்டிருந்தாள். அண்ணன் கூப்பிடுகிறான் என்ற குருட்டு நம்பிக்கையுடன் முன்னோக்கி வந்து கொண்டிருந்த அவளை குருட்டுப் பெண் என்று தெரிந்து கொள்ளாமல் டிரைவர் வேகத்தைக் குறைக்காமல் வந்து கொண்டிருந்தான். வினாடி நேரம் குழம்பிப் போய் விட்டான் நேத்ரா. அந்தச் சமயத்தில் அவளை அங்கே எதிர்பார்க்கவில்லை. “கல்யாணி!” என்று கத்திக்கொண்டே, காற்றினும் வேகமாய் ஓடிப்போய்

அவளைப் பிடித்துக்கொண்டு அதே வேகத்தில் பக்கத்தில் உருண்டான். மயிரிழையில் அவ்விருவரையும் தப்பிக்கச் செய்துவிட்டு லாரி வேகமாய்த் தாண்டிப் போய்விட்டது.

அதே சமயத்தில் க்யூ சுட்ட குண்டுகள் நான்கு சுவர்ணரேகாவின் உடலைத் துளைத்துக்கொண்டு போயின். ஜீப் வந்து பூஷணத்துக்கு முன்னால் நின்றதும், அவன் ஏறிக்கொண்டதும் மின்னல் வேகத்தில் அங்கிருந்து மாயமானதும் கண்மூடித் திறப்பதற்குள் நிகழ்ந்து முடிந்து விட்டன.

அதற்குள் நேத்ரா எழுந்திருந்து துப்பாக்கியை ஜீப்பை நோக்கிக் குறிபார்த்துச் சுட்டான். க்யூவிற்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த கூட்டாளியின் முதுகை அது துளைத்துக்கொண்டு போயிற்று. ஜீப் நிற்கவில்லை. போக்குவரத்தில் கலந்து மறைந்து விட்டது.

மக்கள் பீதியடைந்தவர்களாய் ஓடத் தொடங்கினார்கள். சிலர் சுவர்ணரேகாவைச் சூழ்ந்து கொண்டார்கள். ரத்த வெள்ளத்தில் கிடந்தாள் அவள்.

*****

“அவள் எப்படியாவது பிழைக்க வேண்டும் டாக்டர். எப்படியாவது சரி.”

டாகடர் முகத்தில் நம்பிக்கை தென்படவில்லை. சீஃப், நேத்ரா, எஞ்சிய அதிகாரிகள் எல்லோரும் அவ்விடத்தில் இருந்தார்கள்.

சுவர்ணரேகாவின் உயிரின் மதிப்பு அங்கிருந்த எல்லோருக்குமே தெரியும்.

“குறைந்தபட்சம் இரண்டு நிமிடங்களாவது... இரண்டே நிமிடங்களாவது அவள் பேச முடிந்தால் நல்லது” என்றார் சீஃப்.

அதற்குள் பிரதிமா பரபரப்புடன் அங்கு வந்தாள்.

“முக்கியமான் நியூஸ் சார்” என்றாள்.

“என்ன?”

அவள் கையிலிருந்த காகிதத்தை அவரிடம் தந்துவிட்டு, “பூஷணம் நாட்டை விட்டுப் போய்விட்டார். அவன் ஏறிய ஹெலிகாப்டர் வங்காள விரிகுடா பக்கம் போயிற்று” என்றாள்.

“அவர் மகள் அம்சேகா?”

நேத்ரா குறுக்கிட்டு, “அவள் இரண்டு நாளைக்கு முன்னால்தான் பிக்னிக் என்று ரோம், ஜூரிச் நாடுகளுக்குப் புறபட்டாள். பாகிஸ்தானில் அந்த விமான எஞ்சின் கோளாறு காரணமாய் நின்றது. அங்கிருந்து திரும்பிப் புறப்பட்ட பயணிகளில் அவள் இல்லை. உடல்நலக் கோளாறினால் நின்றுவிட்டாள் என்றார்கள். அது உண்மையான காரணமாய் இல்லாமலிருக்கலாம்” என்று சொன்னான்.

இந்த உரையாடல் நடந்து கொண்டிருந்த பொழுது சர்ஜன் வந்தார் அங்கே.

“எப்படி இருக்கு டாக்டர்?

“மூன்று குண்டுகளை எடுத்துவிட்டோம். ஒரு குண்டு சுவாசக் குழாயில் சிக்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எடுப்பது ஆபத்தானது. அவளுக்கு நினைவு திரும்பி, நீங்கள் குறைந்தது ஒரு நிமிஷமாவது பேசணும் என்றிருந்ததால் அப்படியே விட்டு வைப்பது நல்லது.”

“அவளுக்கு நினைவு திரும்பி விடுமா?’

“ரத்தம் ரொம்பவும் போய் விட்டது. ஓ நெகடிவ். அது கிடைப்பது அரிது. நேரம் கூட அதிகமாய் இல்லை. நாடித் துடிப்பு வேகமாய் இறங்கிப் போய்க் கொண்டுருக்கிறது. அவளுக்குக் கொஞ்ச நேரமாவது நினைவு திரும்பி வர வேண்டும் என்றால் முதலில் அந்த குரூப் ரத்தம் வேண்டும்.”

“எங்கள் எல்லோரையும் பரிசோதியுங்கள் டாக்டர். எவ்வளவு ரத்தம் வேண்டுமானாலும் கொடுத்து எப்படியாவது அவளை பேச வைக்க வேண்டும். அவளிடமிருந்து சில ரகசியங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்” என்று சீஃப் டாக்டரின் கையைப் பிடித்தார். அங்கிருந்த அதிகாரிகள் கூட கைகளைக் கூப்பி தம் வேண்டுகோளை வெளிப்படுத்தினார்கள்.

அந்தக் காட்சியைப் பார்த்து டாக்டர் நெகிழ்ந்து விட்டார். இந்தியன் சீக்ரெட் சர்வீசுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள் என்றெண்ணிக்கொண்டார் மனதுக்குள். ஒருத்தரையடுத்து இன்னொருத்தரின் ரத்தம்

பரிசோதிக்கப் பட்டது. இன்னொரு பக்கத்தில் சுவர்ணரேகாவின் நிலைமை கவலைக்கிடமாய் மாறிக்கொண்டிருந்தது.

டாக்டர் கலக்கமடையத் தொடங்கினார். அவள் பிழைப்பது கஷ்டம் என்று தெரியும். போலீஸ் அதிகாரிகள் கேட்டுக்கொண்டது போல் அவளைக் கொஞ்ச நேரமாவது பேச வைக்கக்கூட சந்தப்பம் இருக்காது போலிருந்தது.

ஐந்து நிமிஷத்தில் ஏறக்குறைய பத்து அதிகாரிகளின் ரத்தம் பரிசோதிக்கப்பட்டன. பகீரதன் முகம் கூட தீவிரமாய் இருந்தது. அவரிடம் வந்து நேத்ரா சொன்னான். “ஐ யாம் சாரி சார். சீக்ரெட் ஏஜெண்டுகளுக்கு பந்த பாசமெல்லாம் இருக்கக் கூடாது என்பார்கள். கல்யாணி ஆபத்தில் இருந்ததைப் பார்த்துவிட்டு வினாடி நேரம் என் கடமையை மறந்து போய் விட்டேன். அதுதான் இப்பொழுது சுவர்ணரேகாவை ஆபத்தில் ஆழ்த்திவிட்டது.”

“இட்ஸ் ஆல்ரைட்! உன்னால் மட்டும் என்ன பண்ணிவிட முடியும்?”

நேத்ரா அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். கண்களை மூடிக்கொண்டாலும் அதே காட்சிதான் திரும்பத் திரும்ப நிழலாடிக் கொண்டிருந்தது.

அந்தக் கடைசி வினாடி தன் தங்கை பக்கமாய் ஓடிப் போகாமல் இருந்திருந்தால் என்னவாகி இருக்கும்? சுவர்ணரேகா இதற்குள் எல்லாவற்றையும் சொல்லியிருப்பாள். டிபார்ட்மென்ட் எதிரிகளின் வேட்டையில் மூழ்கிப் போய் விட்டிருக்கும்.

ஆனால்....

கல்யாணி ரத்தவெள்ளத்தில் துடித்துக்கொண்டே உயிரை விட்டிருப்பாள். அவள் பிணம் மயானத்தை நோக்கிப் போயிருக்கும். நான் தவறு பண்ணிவிட்டேனா?

தவறுதான்!

இந்தத் தவறை டிபார்மென்ட் மன்னித்தாலும், மற்றவர்கள் மன்னித்தாலும், அவனுக்குள் இருக்கும் பிரோபஷன் மனிதன் மன்னிக்க மாட்டான்.

அவன் யோசனைகளைச் சிதறடித்தவாறு லாபிலிருந்து டாக்டர் பரபரப்பாய் வந்தார். அவர் உற்சாகத்தைப் பார்த்துவிட்டு, “அந்த குரூப் ரத்தம் கிடைத்துவிட்டதா டாக்டர்?” என்று கேட்டார் சீஃப்.

“எஸ். கிடைத்து விட்டது.”

நேத்ரா சட்டென்று அவ்வார்த்தைகளைக் கேட்டுவிட்டு நிமிர்ந்து பார்த்தான். லாபிலிருந்து கல்யாணி வந்து கொண்டிருந்தாள்.

## 33

சுவர்ணரேகாவின் பக்கத்து படுக்கையில் படுத்திருந்தாள் கல்யாணி. இன்ட்ராவீனஸ் மூலமாய் ரத்தம் பாட்டிலுக்குள் போய், அங்கிருந்து சுவர்ணரேகாவின் உடம்பிற்குள் போய்ச் சேர்ந்து கொண்டிருந்தது.

ரத்தத்தை அந்த மாதிரி ஏற்ற மாட்டார்கள். ஏற்றவும் கூடாது. மருத்துவ வரலாற்றிலேயே அபூர்வமான அந்தப் பிரயோகத்தை டாக்டர் கடைபிடித்தற்குக் காரணம் நிமிஷத்திற்கு நிமிஷம் மோசமாகிக் கொண்டிருந்த சுவர்ணரேகாவின் நிலைமை.

கல்யாணிக்கு எல்லாம் தெரிந்துகொண்டேதான் இருந்தது. அவள் காது படவே சக டாக்டருக்கு இந்த முறையை விவரித்தார் டாக்டர்.

சுவர்ணரேகா பிழைப்பதன் முக்கியத்துவத்தை உணராத நர்ஸ் ஏதோ பாட்டை முணுமுணுத்துக் கொண்டே தொலைவில் மருந்து பெட்டிகளை அடுக்கிக் கொண்டிருந்தாள்.

இருவரையும் பரிசோதித்துவிட்டு டாக்டர் வெளியே வந்தார்.

“எப்படி இருக்கு டாக்டர்?” நேத்ரா கேட்டான்.

“லாபமில்லை. ரொம்ப ரத்தம் போய் விட்டது. இன்னும் வேண்டும். கல்யாணிகூட பலவீனமாய் தான் இருக்கிறாள். இந்த நிலைமையில் அவளிடமிருந்து மேலும் ரத்தத்தை பெறுவது ஆபத்தானது.”

ஜன்னல் பக்கத்திலேயே நின்றபடி அவர்கள் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகள் கல்யாணி செவிகளில்

விழுந்தன.

ஏனோ தெரியவில்லை. அவளுக்குத் தன் சொந்த அண்ணன் பாஸ்கரைப் பற்றி ஞாபகம் வந்தது. நேத்ராவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. “சீக்ரெட் ஏஜெண்டிற்கு பந்தம் பாசமும் இருக்கக் கூடாது என்று சொல்வார்கள். அப்படி இருக்கும்போது, தங்கைக்காக ஒரு வினாடி நேரம் கடமையை மறந்து போய் விட்டேன். ஐ யாம் சாரி.”

அவள் கண்கள் ஈரமாயின.

அவள் கை மிஷினைத் தடவின. ஃப்ளோ நாப் கைக்குத் தட்டுபட்டது. அதை திருகினாள்

ஏதோ நின்றுவிட்டாற்போல் இருந்தது. அவள் இம்முறை வலது பக்கமாய்த் திருப்பினாள். சிறிய ஜெர்க்!

ஹைட்ராலிக் பவருக்குச் சமமாய் தன்னிடமிருந்த சக்தியைத் துளைதெடுத்துக் கொண்டிருந்தாற் போன்ற உணர்வு!

ஆனால் அவள் வருந்தவில்லை.

திருப்தியோடு கண்களை மூடிக்கொண்டாள். கடியாரத்தைத் தவிர எல்லாம் நிசப்தமாயிருந்தது. இன்னொரு நோயாளியைப் பரிசோதித்துவிட்டு அப்பொழுதுதான் உள்ளே வந்த டாக்டர் அங்கு தென்பட்ட காட்சியைப் பார்த்துவிட்டு, தன்னையறியாமலேயே, “மை காட்!” என்று கத்தினார். கல்யாணி வலியால் துடிதுடித்துக் கொண்டிருந்தாள். அவர் ஓடிப்போய் மிஷினை டிஸ்கனெக்ட் பண்ணிவிட்டு, இன்ஃப்ளோ நாப்பை திருப்பினார். அதற்குள் அவள் மரணத்தின் கடைசி வாயிலுக்கு வந்து சேர்ந்துவிட்டாள்.

இந்த பரபரப்பைப் பார்த்துவிட்டு நேத்ராவும், சீஃபும் உள்ளே வந்தார்கள்.

“கல்யாணி! என்ன காரியம் பண்ணிவிட்டாய் கல்யாணி.”

அவளிடமிருந்து பதில் இல்லை. உயிரோடிருந்த வரையிலும் இருட்டை மட்டுமே பார்த்திருந்த கண்கள் இப்பொழுது சூனியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. பார்க்க முடியாத கண்களுக்குப் பேசும் சக்தி இருந்தது.

“ரத்தத்தைப் பகிர்ந்துகொண்டு பிறவாமல் போனாலும் அண்ணனுக்கு அவ்வளவுகூட ரத்தம் கொடுக்க முடியாதா உன் தங்கையால்? கடமையைச் சரியாக பண்ணவில்லை என்று வாழ்நாளெல்லாம் வருத்தப்படக்கூடிய இழிவான நிலையிலிருந்து உன்னைக் காப்பாற்றியதற்கு என் இந்தச் சின்ன வாழ்க்கை பயன்பட்டால் அதைவிட வேறென்ன வேண்டும் எனக்கு? என்றார் போலிருந்தன அக்கண்கள்.

அவள் மூச்சு நின்றுபோய் எவ்வளவு நேரமாயிற்றோ தெரியாது.

சுவர்ணரேகாவிடம் சலனம் தோன்றியது.

*****

இன்டர்நேஷனல் ஏர்போர்ட்டில் விமானம் தொழில் நுட்பக் குறைப்பாடு காரணமாய் நின்று போனதும், பயணிகள் அனைவரையும், ஓட்டலுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள் அதிகாரிகள். ஆறுமணி நேரத்திற்குப் பிறகு அது திரும்பவும் புறப்பட்டது. ஆனால் அம்சரேகாவை மட்டும் பாஸ்போர்ட் சரியாக இல்லை என்று தடுத்து விட்டார்கள்.

அவள் மிரண்டு விட்டாள்.

அவளுக்கு வெளிநாட்டுப் பயணம் புதிதல்ல. ஆனால் இந்த விதமான சிக்கல் தோன்றியது இதுதான் முதல் தடவை. பாஸ்போர்ட்டில் என்ன தவறு இருந்தது என்று அவளுக்குப் புரியவில்லை. புறப்படுவதற்கு முன்னால் தந்தை அவளை பாரிஸில் வந்து சந்திக்கிறேன் என்றார். அவளோ இந்த விதமாய்ச் சிக்கிக்கொண்டு விட்டாள்.

ஓட்டலில் நான்கு மணி நேரம் கழித்த பிறகு, தன் பதற்றத்தையும், தனிமையையும் தாங்க முடியாதவளாய் அவள் இந்தியத் தூதரகக் காரியாலயத்திற்குப் போன் பண்ணினாள். அவள் தந்தைக்கு இந்த விஷயத்தை தெரிவித்து விட்டால் போதும். அவரே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் என்பது அவள் உத்தேசம்.

என்ன காரணத்தால் அவள் தடுத்து நிறுத்தப்பட்டாள் என்று தெரியாதது வேறு அவளை மேலும் குழப்பத்தில் ஆழ்த்திற்று.

“நீங்கள் ரிசீவரை வைத்துவிடுங்கள். நான் தூதரக காரியாலயத்திற்கு கனெக்ஷன் பெற்றுத் தருகிறேன்” என்றாள் ஆபரேட்டர்.

அம்சரேகா போனை வைத்து விட்டு உட்கார்ந்தாள். ஐந்து நிமிஷம் .. பத்து நிமிஷம்... ஒரு மணி. போன் வரவில்லை.

அவள் அலுப்போடு ஆப்ரேட்டருடன் திரும்பவும் பேசினாள். மறுமுனையிலிருந்து, “தூதரக காரியாலயம் எங்கேஜ்ட் ஆக இருக்கு மேடம். அப்புறமாய் முயற்சிக்கிறேன்” என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு போனை வைத்து விட்டாள் ஆபரேட்டர்.

தான் மாட்டிக்கொண்டோம் என்ற யோசனை முதல் முறையாக பட்டது அவளுக்கு. தன் தந்தையின் எதிரி யாரோ தன்னை இவ்விதமாய் சிறைப் படுத்தியிருக்கிறார்கள் என்று எண்ணினாள். கைப்பையை எடுத்துக் கொண்டு அறையின் கதவைச் சாத்திவிட்டு அவள் கீழே இறங்கினாள்.

“எங்கே மேடம்?” கீழே ஒரு ஆள் கேட்டான்.

“உங்களுக்கு எதுக்கு?” கோபமாய் கேட்டாள்.

“சாரி மேடம். எங்கள் அனுமதி இல்லாமல் நீங்கள் வெளியே போகக் கூடாது. டிபார்ட்மென்ட் ஆஃப் செக்யூரிடி” என்று கார்ட்டை எடுத்துக் காட்டினான். அந்த நாட்டின் முத்திரை இருந்தது அதில்.

அவள் பயந்துபோய் நின்றுவிட்டாள்.

இதுவரை அவள் எண்ணியிருந்தது வேறு. ஆனால் இப்போது நடப்பதை பார்க்கையில் வேறு காரணம் ஏதோ இருந்து தீரவேண்டும் என்று நினைத்தாள். “எதுக்கு எனக்கு இந்தச் சங்கடம்? நான் என்ன தவறு செய்தேன்?” என்று கேட்டாள். அவள் கண்களில் நீர் சுழன்றது.

“எங்களுக்குத் தெரியாது மேடம். அரசாங்க உத்தரவு. உங்கள் தந்தை வரும் வரைக்கும்”

அவளுக்குப் பெரும் பாரம் இறங்கினாற்போலிருந்தது.

“அப்பா இந்த நாட்டுக்கு வருவாரா?” என்று கேட்டாள்.

“அவர் நேற்றே புறப்பட்டு விட்டார் மேடம். நேற்றிரவே வந்திருக்க வேண்டியது. என்ன ஆனாரோ தெரியாது. இன்னும் சில மணி நேரத்தில் வந்து விடலாம். நீங்க பதற்றப் படாமல் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். இந்தியத் தூதர் காரியாலயத்திற்குப் போன் பண்ணுவது போன்ற யோசனை எல்லாம் வேண்டாம். எங்கள் அரசாங்கத்திற்கு நீங்கள் ஃபிரெண்ட்.”

அவள் திருப்தி அடைந்தவளாய்த் திரும்பி தன் அறைக்கு வந்து விட்டாள்.

இந்தியாவிற்கு அந்த நாடு எதிரி நாடு என்கையில் தன் தந்தை அந்நாட்டிற்கு நண்பராய் வருகிறார் என்றால் அதில் ஏதோ தில்லுமுல்லு இருக்க வேண்டும் என்று தர்க்க ரீதியாய் யோசித்துப் பார்க்கக் கூடிய புத்திசாலித்தனமோ, தந்தையின் மேல் சந்தேகமோ இல்லை அவளுக்கு.

அன்பைத் தவிர அவளுக்கு வேறொன்றும் தெரியாது. தந்தை அவ்வளவு அவசரமாய் அனுப்பி வைத்ததால் வந்தாளேயன்றி, இல்லாவிட்டால் நேத்ராவைச் சந்திக்க வேண்டுமென்றுதான் அவள் மனம் பரபரத்துக் கொண்டிருந்தது.

அறையில் உட்கார்ந்து, மேஜை விளக்கின் வெளிச்சத்தில் ஓட்டல் பேப்பரில் ஆங்கிலத்தில் கவிதை எழுதிக் கொண்டிருந்தவள், அப்படியே மேஜைமேல் தலை கவிழ்ந்தபடி உறங்கிவிட்டாள்.

எவ்வளவு நேரமாயிற்றோ தெரியாது. ஏதோ சந்தடி கேட்டு அவளுக்கு விழிப்பு வந்தது. கடியாரம் நேரம் ஒரு மணி என்று காட்டிற்று. நகரம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததாய் நிசப்தம் உணர்த்தியது. அந்த நிசப்தத்தில் திரும்பவும் சந்தடி. அவள் பயந்து போய் பாத்ரூம் பக்கமாய்ப் பார்த்தாள். அங்கிருந்துதான் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் அந்தக் கதவின் பிடி நகரத் தொடங்கிற்று.

அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. கத்தவும் சக்தியில்லாதளாய் அந்தப் பக்கமாகவே பார்க்கத் தொடங்கினாள். க்ளிக் என்ற சத்தத்துடன் கதவு திறந்து கொண்டது. அந்த ஆள் உள்ளே நுழைந்தான்.

பேசவேண்டாம் என்றாற்போல் சைகை பண்ணிவிட்டு, அவளைத் தன்னோடு வரச் சொல்லி சைகை கட்டினான்.

“யார் நீ?”

“உஷ்!” என்று ஜேபியிலிருந்து காகிதத்தை வெளியே எடுத்து அவளிடம் தந்தான்.

அந்த ஆள் சொன்னபடியே செய்யும்படி தந்தை அவளுக்கு எழுதிய கடிதம். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாய் வலை இறுகிக்கொண்டே வந்தாற்போல் தோன்றிற்று. இந்த நாட்டு அரசாங்கம் தன்னைத் தடுத்து நிறுத்தியது, தந்தை இந்த ஆளை அனுப்பி வைத்தது... எல்லாம் குழப்பமாய் இருந்தது.

அதற்குள் அவன் அவளை பாத்ரூமிற்குள் அழைத்துச் சென்றான். பைப் லைன் வழியாய்க் கீழே இறங்கினார்கள். கீழே ஒரு ஜீப் இருந்தது. அவர்கள் ஏறிக்கொண்டதுமே அது புறப்பட்டது. அவர்களை யாருமே தடுத்து நிறுத்தவில்லை. ஆனால் அவன் பதற்றத்தில் இருந்தாற்போல் தென்பட்டான்.

அவள் ஏதோ பேசப் போய் நிறுத்திக்கொண்டாள். தொலைவிலிருந்து கடலின் பேரிரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. ஜீப் நின்றதுமே அவன் அவளோடு சேர்ந்து படகை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

“எங்கே போகிறோம் நாம்? இதெல்லாம் என்ன?” அவள் அதற்கு மேல் தாங்க மாட்டாதவளாய்க் கத்தி விட்டாள்.

“சொல்கிறேன். படகில் ஏறு.”

“சொன்னால்தான் ஏறுவேன். நீங்க யாரு? இதெல்லாம் என்ன? அதைச் சொல்லுங்க முதலில். எங்கப்பா எங்கே? பிகினிக்கிற்கு வந்த என்னை இந்த விதமாய் எங்கே அழைத்துக்கொண்டு போறீங்க?”

அவன் அவள் தோளைப் பற்றிப் படகில் ஏற்றினான். அவன் கைகளில் ஒரு விதமான கமான்ட் இருந்தது. அவளால் எதிர்க்க முடியவில்லை.

படகு புறப்பட்டது.

கடலிலிருந்து வந்து வீசிய காற்று அவ்விருட்டில் பயத்தை தோற்றுவிக்கும் படியாய் இருந்தது.

படகு ஐந்து நிமிஷங்கள் பயணம் பண்ணி, கடலுக்கு நடுவில் நின்றது. சுற்றிலும் எல்லையில்லாத நீர்ப்பரப்பு! காரிருள்.

“சொல்லுங்கள் என்னை நீங்க எங்கே அழைத்துக்கொண்டு போறீங்க?” குரல் எடுத்து கேட்கப் போனவள் சட்டென்று நின்றுவிட்டாள்.

தொலைவில் நீரில் சலசலப்பு. கடலுக்கு அடியிலிருந்து திமிங்கலம் வெளியே வந்தாற்போல் நீர் அப்படியும் இப்படியுமாய் புரண்டு கொண்டிருந்தது. வாயிலிருந்து வார்த்தைகள் பெயர முடியாமல் ஒடுங்கிப் போய் அவள் அக்காட்சியையே பார்க்கத் தொடங்கினாள்.

நீர் பரப்பைக் கிழித்துக்கொண்டு ஒரு கரிய உருவம் மேலே வந்தது. அது ஒரு நீர்மூழ்க்கி கப்பல்!

புத்தகங்களில் படித்திருக்கிறாளே யொழிய நீர்மூழ்கிக் கப்பலைப் பார்ப்பது அதுதான் முதல் தடவை அவளுக்கு. அதற்குள் தொலைவிலிருந்து சர்ச் லைட்டுகளுடன் இரண்டு படகுகள் அவர்களை நோக்கி வருவதைப் பார்த்தாள். அவன் அவளை அவசர அவசரமாய நீர் மூழ்கிக் கப்பல் பக்கமாய் அழைத்துச் சென்றான்.

“ஸ்டாப்! டோன்ட் மூவ்!” படகிலிருந்து மைக்கில் கேட்டது.

அவன் நிற்கவில்லை. நீர்மூழ்கிக் கப்பலுக்குள் நுழைந்ததுமே அதன் கதவு மூடிக் கொண்டது. அதற்குள் “ஃபயர்” என்ற கத்தலும், தொடர்ந்து துப்பாக்கிகள் வெடித்த சத்தமும் கேட்டன. நீருக்கு மேல் சந்தடி மேலும் அதிகரித்துக்கொண்டே இருந்தது. நீர்மூழ்கி கப்பல் மெல்ல நீருக்குள் இறங்கிப் போய் விட்டது.

“இன்னும் பத்து நிமிஷத்தில் உங்கப்பாவிடம் போய் விடலாம். இப்பொழுது கேள், உன் சந்தேகங்களை எல்லாம்.” சிகார் பற்ற வைத்துக்கொண்டே சொன்னான் அவன் தெளிவான ஆங்கிலத்தில்.

அவளுக்கு அப்பொழுதுதான் அவன் பேச்சில் நம்பிக்கை பிறந்தது. தம்மை நோக்கிச் சுடத் தொடங்கிய மோட்டார் படகிற்கு மேலே இருந்த கொடியைப்

பார்த்தாள். தன்னை ஒட்டலில் சிறைப்படுத்தி வைத்திருந்த நாட்டின் கொடி அது. அந்த நாட்டிலிருந்து தப்பித்துக்கொண்டு தன் தந்தையிடம் போய்ச் சேரப் போகிறோம் என்ற சந்தோஷம் ஏற்பட்டது அவளுக்கு.

“இந்த நீர் மூழ்கிக் கப்பல்?”

“என்னுடையதுதான்” என்றான் அவன். “ஒருவிதத்தில் சொல்லணும் என்றால் என் தந்தையுடையது.”

“அவர் யார்?”

அவன் சிரித்தான். “அவர் பெயரை அவரே மறந்துவிட்டார். அவரை எல்லோரும் பிளாக் ஈகிள் என்பார்கள்.”

அவள் புரியாமல், “பிளாக் ஈகிளா?” என்று கேட்டாள்.

“ஆமாம். இப்போ நாம் அரபிக் கடலில் இருக்கிறோம். இந்து மகா கடலின் வழியாய்ப் போய் இடது பக்கமாய்த் திரும்பினால் மலேசியாவுக்குப் பக்கத்தில் இருக்கும், “ஈகிள் லேண்ட்” என்ற தீவு என் தந்தையுடையது. அதற்கு அவர் மகுடமில்லாத மகாரஜா. உன் தந்தையை அவருக்கு அறிமுகம் செய்து வைக்கப் போவது நான்தான்.”

“நீங்கள்?”

“என்னை க்யூ என்பார்கள். ஏஜெண்ட் க்யூ.”

அவள் வியப்போடு, “ஏஜெண்ட் க்யூவா?” என்றாள்.

அவன் சிரித்துவிட்டு, “ஒரு நிமிஷத்திற்கு முன்னாடி வரைக்கும் நான் சீக்ரெட் ஏஜென்ட்தான் ஆனால் உங்கள் நாட்டு ஏஜெண்ட் இல்லை. இந்த நாட்டைச் சேர்ந்தவன். அதாவது இப்போ நம்மைத் துரத்தினார்களே அந்த நாடு! இந்த வினாடியிலிருந்து சுதந்திர மனிதன். இந்த அவகாசத்திற்காக பதினைந்து வருடங்களாய் காத்துக்கொண்டு இருந்தேன். இன்னும் சில நாட்களில் என் தந்தை இந்த உலகத்திற்கே அரசனாகப் போகிறார். ஹிரோஷிமா, நாகசாகிகளின் மீது குண்டு விழுந்ததுமே ஜப்பான் தரைமட்ட ஆயிற்று. இப்போ என் தந்தையிடம் ஆட்டம் பாமை விட பெரிய மாரண ஆயுதம் இருக்கிறது. அதைப் பயன்படுத்திய சில நிமிஷங்களில் உலகமே

அதற்கு அடிபணிய வேண்டியதுதான். ஹெயில் பிளாக் ஈகிள்!” காற்றில் கையை உயர்த்திக் கத்தினான்.

ஏஜெண்ட் க்யூ அவ்வளவு விஸ்தாரமாய் பேசியது அதுவே முதல் தடவை. ஆனந்தத்தால் வெறி பிடித்தவனைப் போல் கத்திக் கொண்டிருந்த அவனை வாயடைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள் அம்சசேகா.

அவன் தந்தை உலகத்திற்கே தலைவனாய் இருக்கலாம். அவன் இன்னும் ஆனந்தத்தோடு குதிக்கலாம். ஆனால் இதில் தனக்கு என்ன சம்பந்தம் இருந்தது என்றுதான் அவளுக்குப் புரியவில்லை. புரிந்திருந்தால் அவள் இதயம் நின்று போய் விட்டிருக்கும்.

*****

ஜெனரல் இயாசத்கான் தன் நாற்காலியில் பொறுமையின்றி நெளிந்தான். படைத் தலைவன் சோயப் அஹமத், டிஃபென்ஸ் ஆபீசர் ரெஹமான் இருவரும் குழப்பத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

“இவ்வளவு நாளாய் இத்தனை நம்பிக்கையோடு வேலை பார்த்து வந்த ஏஜெண்ட் நம் சர்வீசை விட்டு விட்டு ‘கிராஸ்’ பண்ணியிருக்கிறான் என்றால் நம்பவே முடியலை. அதுவும் ஏஜெண்ட் க்யூவா?”

“நேற்றிரவு நாம் சிறைப்படுத்தி வைத்திருந்த ரேகா என்கிற பெண்ணைக் கடத்திக்கொண்டு போய் விட்டது கூட அவன்தான் சார். நீர்மூழ்கிக் கப்பலில் போய்விட்டான்.”

“நீர்மூழ்கிக் கப்பல் என்றால் பல கோடி ரூபாய்கள் இருக்கும். அவனுக்கு அதெப்படி முடிந்தது? நம்மை கிராஸ் பண்ணி சி.ஐ.ஏ. விலேயாவது கே.ஜி.ஏ.லாவது சேர்ந்துவிட்டானா? அதுசரி, அவனுடைய கடந்த காலத்தைப் பற்றி யாருக்காவது தெரியுமா? அவன் பிறந்தது வளர்ந்தது எல்லாம் எங்கே? அவன் எவ்வளவு நாளாய் கல்லுக்கடியில் நீர் போல் சதி செய்து கொண்டு வருகிறான்?”

“நம் பொறுப்பில் உள்ள பெண்ணை இப்பொழுது காணவில்லை என்றால் இந்திய அரசாங்கத்திற்கு நாம் என்ன பதில் சொல்லப் போகிறோம்?”

அவள் கேள்வி மழைக்கு பதில் இருப்பது போல் உளவு இலாகாவின் ஒருவர் ஃபைலோடு உள்ளே வந்தார். ஏஜெண்ட் க்யூவைப் பற்றி அவன் சொன்ன விவரங்கள் இவ்வாறு இருந்தன.

ஏஜெண்ட் க்யூவின் தந்தை ஒரு இரானியன். ஆப்கான் நாட்டைச் சேர்ந்தவன். அந்த நாட்டு கொரில்லா தலைவன். அவனுக்கு அமெரிக்கப் பெண்ணுடன் நெருங்கிய உறவு. ஏறக்குறைய கணவன் மனைவி போலவே இருந்து வந்தார்கள். அவர்களுக்குப் பிறந்தவன்தான் ஏஜெண்ட் க்யூ! ஆஃப்கானிஸ்தானில் சோவியத் சக்தியைக் முறிப்பதற்காகப் போய் ஆபரேஷன் க்யூவை வெற்றிகரமாய் நடத்தி, ஏஜெண்ட் க்யூ என்று பெயர் பெற்றான். அவன் தாய் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. ஏஜெண்ட். சோவியத் வெளிநாட்டு இலாகாவுடன் ரகசியத் தொடர்பு இருந்து வந்தது அவளுக்கு. இந்த விஷயத்தை அவள் கணவன் கண்டுபிடித்து விட்டான். இந்தப் பக்கம் இவளையும், அந்தப் பக்கம் ரஷ்யாவையும் தொல்லையில் ஆழ்த்தினான். தம் ரகசியங்கள் வெளியேறாமல் இருப்பதற்காக இரு நாடுகளும் அவனுக்கு நிறைய பணம் லஞ்சமாய் தந்தன. ஆனால் அதற்கு பிறகு அவன் கண்ணில் படவே இல்லை. எதிரி நாடு அவனைக் கொன்று இருக்க வேண்டும் என்று இரு நாடுகளும் எண்ணிக்கொண்டான.

அவன் மகனான க்யூ சீக்ரெட் சர்வீசில் சேர்ந்து மிக நம்பிக்கையாய் வேலை செய்து வந்தான். தற்சமயம் இந்தியாவில் முகாமிட்டு பூஷணம் என்ற ஆளுடன் சிநேகத்தை ஏற்படுத்திக் கொண்டான். ஒரு முக்கியமான ஃபார்முலா காகிதத்தைப் பெறுவதற்காக அவன் அங்கே போய், அது கிடைத்ததுமே தன் சொந்த நாட்டிற்கே உலை வைத்துவிட்டான்.”

இவைதான் அந்த அதிகாரி சொன்ன விவிவரங்கள்.

ஜெனரல் சொன்னான். “இவ்வளவு நாளாய் வேலையிலிருந்து விட்டு இப்பொழுது நம்மை விட்டு விட்டான் என்றால், நம்மை விரோதித்துக் கொள்ளத் துணிந்து விட்டான் என்றால்... பத்து வருஷங்களுக்கு முன்னாலிருந்தே அவங்க இதற்கு திட்டம் போட்டிருக்க வேண்டும். ஒருக்கால் அவன் தந்தையிடமே போயிருப்பான்.”

“அதில் சந்தேகமில்லை. அந்தத் தந்தை எங்கே இருக்கிறார், என்ன செய்து கொண்டு இருக்கிறார் என்றெல்லாம் நமக்குத் தெரியாது. எந்த தைரியத்தில் ஏஜெண்ட் க்யூ இவ்வளவுக்கு சாகசத்திற்கு துணிந்து விட்டான் நமக்குச் சொல்லக் கூடியவர்கள் ஒரே ஒரு ஆள்தான்.”

“யாரு?”

“இந்தியன் சயின்டிஸ்ட் சுவர்ணரேகா.”

## 34

சுவர்ணரேகா கண்களைத் திறந்தாள். டாக்டர் அவளுக்கருகிலேயே நின்று கொண்டிருந்தார். அவளைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தார். அவள் பலத்தைக் கூட்டிக்கொள்ள முயன்றவாறிருந்தாள்.

உதடுகள் பலவீனமாய் நடுங்கிக் கொண்டிருந்தன. நேத்ரா அவளிடம் குனிந்தான். மூச்சுக் குழாய்லிருந்து காற்று தொண்டைக் குழியில் சப்தமாய் வெளிவருவதற்கு தன் பலத்தையெல்லாம் ஒன்று கூட்டி முயன்று கொண்டிருந்தாள். இந்த ஆபரேஷன் முழுவதுமே அவள் சொல்லப் போகும் வார்த்தைகளில்தான் ஆதாரபட்டு இருக்கிறது என்று எல்லோருக்குமே தெரியும்.

கார்டியோகிராமில் இதயத்துடிப்பின் புள்ளிகளைத் தவிர மீதி எல்லாம் ஸ்டில் போட்டோகிராபரின் சலனமில்லாத புகைப்படங்களைப் போல் இருந்தன. அவள் கண்கள் திரும்பவும் மூடிக் கொண்டன.

நேத்ரா கண்ணாடி வழியாய் வராண்டாவைப் பார்த்தான். கல்யாணியின் உடலை ஸ்ட்ரெச்சரில் வைத்துத் தள்ளியபடி போய்க் கொண்டிருந்தார்கள்.

அங்கிருந்து மயானத்துக்கு. வயதான தம்பதிகள் கண்ணீர் பெருக்கியபடி அதனைத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தனர்.

பிரபாகர்... கல்யாணி இருவருமே நாட்டிற்காக உயிரை விட்டார்கள். போகிறவர்கள் போய்க்கொண்டே இருந்தார்கள். நினைவுகள் மட்டுமே எஞ்சி நின்று விட்டன.

“நீ போ. நான் இங்கே இருக்கிறேன். நினைவு திரும்பியதுமே செய்தி சொல்லியனுப்புகிறேன்” என்றார் சீஃப். ஏறக்குறைய முப்பத்தாறு மணி நேரமாய் அவர்கள் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள்.

“இல்லை சார். நினைவு திரும்பியதும் அவள் மனநிலை எப்படி இருக்குமோ தெரியாது. அந்தக் கொஞ்ச நேரத்தில் நாம் அவளை நம் பக்கம் திரும்பிக்கொண்டு பேச வைக்கணும் என்றால் நான் அருகில் இருப்பது ரொம்ப முக்கியம்” என்றான் நேத்ரா. அவ்வார்த்தைகளில் உண்மை இருந்ததால் சீஃப் மேற்கொண்டு பேசவில்லை.

கல்யாணியின் உடலை அம்புலென்ஸில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். நேத்ரா சலனமில்லாமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தான். இமயத்தில் மோனத் தவம் புரியும் யோகினி போல் தென்பட்டாள் அவன் தங்கை. தியாகத்தில் கருகிக் காய்ந்து உதிர்ந்த இளந்தளிரைப் போல் இருந்தாள். இதயத்தில் வேதனை... இமைகளின் திரைகளுக்கிடையே மழையாய் பொழிந்த துக்கம். அந்த அழகிய மலர் போன்ற உடல் அநியாயமாய் பலியாகிப் போனது. எவ்வளவு வேதனையை தன்னுள் வானளவு அடக்கிக்கொண்ட கடல் போன்ற மனது!

மரணத்தில் கூட இவ்வளவு கிரேஸ் உண்டு என்று அவனுக்குத் தெரியாது. மரணம் என்றால் என்ன? மேல் மூச்சு கீழ் மூச்சால் களைத்துப் போன உடலுக்கு ஒய்வு தருவது தானே. கலில் கிப்ரான் சொன்னது போல் மரணம் என்றால் நிசப்தத்திலிருந்து ஒரு டம்ளர் நீரை எடுத்துப் பருகுவது! பிறப்பும் இறப்பும் நண்பர்கள் போன்றவை. ஒன்றோடு நீ கழித்துக் கொண்டிருக்கையில்

இன்னொன்று உன் அருகில் காத்துக் கொண்டிருக்கும். இதில் துக்கம் எதற்கு?

எண்ணங்களால் அவன் புனிதமடைதான். துணிச்சலை கூட்டிக் கொண்டான்.

சுவர்ணரேகாவிடம் ஏற்பட்ட சலனத்தால் இவ்வுலகிற்கு மீண்டும் வந்தான் அவன். தொண்டையிலிருந்து வார்த்தைகள் தெளிவில்லாமல் வெளி வந்து கொண்டிருந்தன. அவன் கேட்டுப் புரிந்துகொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தான்.

“பிளாக்...” அவள் நிறுத்தினாள். ஒரு வினாடிக்குப் பிறகு சொன்னாள். “பிளாக் ஈகிள்”

“பிளாக் ஈகிளா?” திரும்பிக் கேட்டான்.

ஆம் என்பது போல் அவள் கண்கள் அசைந்தன. அவள் பி.பி குறைந்துகொண்டே வந்தது. “க்வீன் லாண்ட்ஸ்” என்றாள். மலேசியாவிற்கு இருநூறு கிலோ மீட்டர்கள் தொலைவில் உள்ள தீவுகள்.

டாக்டர் அவளைப் பரிசோதித்து விட்டு இன்னொரு ஊசி போட்டார்.

“என் பெட்ரூமில் சீக்ரெட் டிராயரில்...”

“ஊம். டிராயரில்?”

மூச்சுக் குழாயிலிருந்த குண்டு பேச முடியாமல் தடுத்துக் கொண்டிருந்தது.

அவள் திரும்பி கோமாவில் ஆழ்ந்துவிட்டாள்.

“திரும்பவும் நினைவு வருவதற்கு இன்னும் நாலு மணி நேரம் பிடிக்கலாம்.” டாக்டர் சொல்லிக் கொண்டிருந்தார்.

“பிழைக்க சான்ஸ் இருக்கா?” சீஃப் கேட்டார்.

“நினைவு திரும்பிய பிறகுதான் சொல்ல முடியும்.”

நேத்ரா மேற்கொண்டு அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்க வில்லை. தாமதம் செய்யாமல் புறப்பட்டான். பூஷணத்தின் வீட்டை போலீசார் சீல் வைத்து இருந்தார்கள். இரு போலீசாரைத் தவிர வேறு யாருமே இல்லை.

அவன் நேராய் சுவர்ணரேகாவின் அறைக்குள் நுழைந்தான். அந்த சீக்ரெட் ஏஜெண்டிற்கு அவள் அறையில் இருந்த ரகசிய டிராயரைக் கண்டுபிடிப்பதற்கு

ஐந்து நிமிஷங்களுக்கு மேல் பிடிக்கவில்ல. அதில் இருந்தன அவள் டைரிகள்.

முதல் டைரியைப் படித்ததுமே அவன் மனமெல்லாம் ஒரு மாதிரி ஆகி விட்டது. தர்மராமின் மகனைத் தான் எப்படி கொன்றாள், தான் எப்படி மூவராலும் கற்பழிக்கப் பட்டாள், பூஷணம் எப்படித் தனக்குத் தஞ்சமளித்து அந்த பிணத்தை மாயமாக்கினார் என்றெல்லாம் விவரமாய் இருந்தன.

அவனுக்குள் எரிச்சல்! இயலாமையினால் ஏற்பட்ட கோபம். இந்த டைரி எந்தக் கோர்ட்டிலுமே செல்லாது. தற்சமயம் தர்மராம் அரசியலில் பிரபலமான பதவியில் இருக்கிறார். பூஷணம் சட்ட கமிஷனுக்கு அதிகாரி. மஸ்தான் ராஜா தீனபந்து பட்டம் பெற்று அரசியலில் வேகமாய் நுழைந்து கொண்டிருந்தான்.

அவன் கண்கள் மூடிக்கொண்டன.

இவர்கள் ஆண்டு கொண்டிருக்கிற இந்த நாட்டை அவனைப் போன்றவர்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் துணிந்து காப்பாற்ற வேண்டும். இவர்கள் மேய்ந்துக் கொண்டிருக்கும் இந்தச் சமூகம் எச்சில் இலைகளாய் கிழிந்து போகாமல் தாம் காவல் காத்துக் கொண்டிருக்க வேண்டும்.

அவன் பக்கங்களைத் திருப்பினான்.

பூஷணம் தனக்கு எப்படி வேலை கொடுத்தார், அதற்குப் பிறகு எப்படி ஏதோ ஒரு சாக்கில் அங்கிருந்து யாருக்குமே சந்தேகம் வராமல் அப்புறப்படுத்தி, எப்படி தன் தோட்டத்தில் பரிசோதனைச் சாலையை ஏற்படுத்தினார் என்பதைப் பற்றியெல்லாம் இருந்தது.

அதற்குப் பிறகு டைரியில், க்யூவுடனான தன் செக்ஸ் வாழ்க்கையைப் பற்றி இருந்தது. வெவ்வேறு முறைகளில் எக்ஸ்டஸியை சாதித்ததைப் பற்றி விவரமாய் எழுதி இருந்தாள். ஒரு ஆராய்ச்சியே பண்ணினாற்போல் எழுதிருந்தாள் அவள். ஆரோக்கியமான செக்ஸ் வாழ்க்கை மனிதர்களுக்கு எவ்வளவு அவசியமானது என்று டைரியில் அந்தப் பகுதி நன்றாக பாடம் கற்பித்தது..

அவன் அதை வைத்துவிட்டு இன்னொரு டைரியைக் கையில் எடுத்தான். அதில் அவளுடைய பரிசோதனை முடிவுகள், விவரங்கள் இருந்தன.

எந்தெந்த நாட்களில் தான் சாதித்தவைகளை எழுதியிருந்தாள் அவள். அவளைப் பற்றி பெதிட்ரின் மயகத்தில் ஆழ்ந்த பெண் என்றுதான் அறிந்திருந்தானோ ஒழிய இவ்வளவு திறமை கொண்டவள் என்று உணரவில்லை. அந்த டைரி முழுவதும் ஃபார்முலாக்களும் அம்புக்குறிக்களுமாய் நிரம்பியிருந்தன.

அவன் வரிசையாய் பக்கங்களைத் திருப்பினான். ஒரு நோபல் பரிசுக்குத் தகுதி பெற்ற விஞ்ஞானியின் டைரியைப் பார்ப்பது அதுதான் முதல் தடவை. சாதாரணமாய் பார்த்தால் அது ஒரு பைத்தியக்காரன் வரைந்த கோடுகளைப் போல் இருந்தது. இடையிடையே, இது அசாத்தியம், என்னால் முடியாது... சுவர்ணா! தைரியமாயிரு" என்று தனக்குத் தானே எழுதிக் கொண்டிருந்தாள். தவிப்பு, பயிற்சி, நம்பிக்கை, ஆதரவற்ற நிலை, உறுதி அத்தனையும் தென்பட்டன.

அவன் அந்த டைரியை பக்கத்தில் வைத்துவிட்டான். அதை விஞ்ஞானியால்தான் புரிந்துகொள்ள முடியும். அவனுக்குத் தேவையான விஷயம் அதற்கடுத்த டைரியில் கிடைத்தது. ஏஜெண்ட் க்யூவைப் பற்றி இருந்தது அதில்!

“இன்றைக்கு அவன் (க்யூ) வார்த்தைகள் விநோதமாய் இருந்தன. அவனுக்கு தன் நாட்டின் மேல் கூட மதிப்போ நம்பிக்கையோ இல்லை என்று தெரிகிறது.

க்யூ தன் தந்தையைப் பற்றிச் சொன்னான். இரு நாடுகளை ஏய்த்து கோடிக்கணக்கான பணத்தை சம்பாதித்த அவன் தந்தை யார் என்று தெரிந்துகொள்ள எவ்வளவு முயன்ற போதிலும் க்யூ சொல்லவே இல்லை. ஆனால் க்யூவுக்கும் அவன் தந்தைக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்து வருவதாய் தெரிகிறது.

“இன்றைக்கு க்யூ வாக்குத் தவறி விட்டான். ஃபார்முலாவைக் கண்டுபிடிததுமே சீக்கிரமாய் தந்தையிடம் போக வேண்டும் என்றான். அதுதான்

புரியவில்லை. திரும்பத் திரும்பக் கேட்டாலும் பதில் சொல்லவில்லை. அந்த வார்த்தைகளை வைத்துக்கொண்டு லேசாய் துப்பு துலக்கத் தொடங்கினேன். க்யூ என்னையும்த் தன்னோடு அழைத்துச் செல்லப் போகிறான் என்று தந்தையிடம் சொன்னேன். “எங்கே? க்வீன் லேண்டுக்கா?” என்றார். என் சந்தேகம் உண்மையாகி விட்டது. தந்தையும், க்யூவும் சேர்ந்து அவன் சொந்த நாட்டிற்குப் போகவில்லை. க்யூவின் தந்தையிடம் போகிறார்கள். போகட்டும் எங்கே போனால் எனக்கென்ன? இந்தியாவின் அண்டை நாடான எதிரியின் தேசத்திற்குப் போனாலும் சரி, க்வீன் லேண்டிற்குப் போனாலும் சரி. என் எண்ணம் பலித்துவிடப் போகிறது. சிவப்பு நாடாவால அழுகிப் போன, அதிகார வர்க்கத்தால் புழுத்துப்போன இந்த நாடு வேரோடு நாசமாகப் போகிறது. அவ்வளவுதானே வேண்டும்.

பரிசோதனை முடிவடையப் போகும் நாள் நெருங்கிவிட்டது. அதைச் சொன்னபோது க்யூ முத்தமாரி பெய்யத் தொடங்கிவிட்டான். ஏனோ எதிர்பார்த்த சந்தோஷம் ஏற்படவில்லை. செக்ஸ் காட்டிலும் வேறு ஏதோ வேண்டும் போலிருந்தது. ஏனோ மிகவும் குழப்பமாக இருக்கிறது, க்யூ என்னைக் காதலிக்கிறானா? என் தங்கையைப் பற்றி ஏன் அவ்வளவு ஆர்வமாய் விசாரித்தான்?

இன்றைக்கு எல்லா விஷயமும் புரிந்துவிட்டது. தந்தையும் க்யூவும் பேசிக் கொண்டிருந்தார்கள். விஷ வாயுவின் பக்கபலத்துடன் உலகத்தையே தமக்குக் கீழே கொண்டு வந்து விட வேண்டும் என்பது அவர்களின் ஆசை. அது எப்படி சாத்தியப்படும்? சில கோடிக்கணக்கான விலை மதிப்புடைய ஃப்ளூட்டோனியம் வேண்டும் அதற்கு. இந்த விஷயத்தைத் தந்தையோடு பேச வேண்டும்.

இன்னும் சில பக்கங்கள் இருந்தும் நேத்ரா டைரியை மூடி வைத்து விட்டான். அவனுக்கு எல்லா விஷயமும் புரிந்துவிட்டது. ஏஜெண்ட் க்யூ தன் சொந்த நாட்டை கிராஸ் பண்ணிவிட்டான். அந்த நாட்டின் எல்லா

சீக்ரெட் ஏஜெண்டுகளுக்கும் போக்குக் காட்டிவிட்டு, தன் தந்தையை சந்தித்துக் கொண்டிருக்கிறான். தந்தையும் மகனும் பதினைந்து வருட காலமாய் மற்றவர்களுக்கு சந்தேகம் வராதபடி தம் வேலைகளை எந்த தடையுமின்றி முடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சுவர்ணரேகாவின் கடைசி சந்தேகத்திற்கு பதில் இதுதான். அந்தப் பரிசோதனைகளுடன் சுவர்ணரேகாவின் பி.ஜி.வாயு ஃபார்முலாவை ஒன்று சேர்ந்தால்?

நேத்ராவுகுத் தான் பார்த்த தீவும், அதில் உயிரற்ற பிராணிகளும், அவை பிணப் பரிசோதனை ரிப்போர்டிற்குக் கூட எட்டாத திறமையுடன் மரணமடைந்திருந்த விதமும் நினைவிற்கு வந்தன.

லிபியாவில் ரசாயன ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை இருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது.

இஸ்ரேலில் ரசாயனங்களின் தயாரிப்பைப் பற்றி ரஷ்யா புகாரிடுகிறது.

ஆனால் சுவர்ணரேகா கண்டுபிடித்த இந்த பி.ஜி. கியாஸ் எந்த குற்றவாளியையும் அகில உலக நீதி மன்றத்தில் நிற்க வைக்க முடியாது. அதன் விஷத்தன்மையைப் பற்றி அவனுக்குத் தெரியாது. ஆனால் அவனுக்கு தெரிந்தது உண்மையானால்...

பிளாக் ஈகிள் இந்த உலகத்திற்கே முடிசூடா மன்னானகி விடப் போவது தின்னம். அவன் மகனான ஏஜெண்ட் க்யூவின் கைக்கு சகல அதிகாரமும் வராமல் போகாது. இரண்டாவது உலக மகாயுத்ததில் இரண்டே குண்டுகளால் ஜப்பான் பணிந்து போயிற்று.. அப்படியிருக்கும் போது இவ்வளவு ஆபத்தான ஆயுதத்தால் அவர்கள் பேரம் பேசத் தொடங்கிவிட்டால்... நியூயார்க்கின் மேல் ஒரு காப்ஸ்யூலும், மாஸ்கோவின் மேல் ஒரு காப்ஸ்யூலும் போதும்.

உலகம் நடுங்கிப் போய்விடும். “அடிமை உனக்கு” என்று கூறி அதிகாரத்தை ஒப்படைத்து மண்டியிட்டு விடும். அந்த யோசனையே நேத்ராவின் தேகத்தை சிலிர்க்கச் செய்தது.

சுவர்ணரேகா அந்த ஃபார்முலாவைக் கண்டு பிடித்த அன்று சிவப்பு மையால்...

பிபரவரி 24

என்று எழுதி சுற்றிலும் கோடிட்டிருந்தாள்.

அப்படியானால் அன்றைக்கு பிரளயம் வரப் போகிறது போலும். பிப்ரவரி இருபத்தி நான்கு என்றால் இன்னும் பத்து நாட்கள் இருந்தன.

பத்து நாட்களில் பிளாக் ஈகிள் தன் சர்வாதிகாரத்தை அறிவிக்கப் போகிறான். இந்தியாவிற்குப் பக்கத்திலிருந்த தீவில் பரிசோதனை பண்ணிப் பார்த்தது போலவே தன்னை எதிர்க்கும் நாடுகளின் மீது காப்ஸ்யூல்களைப் பயன்படுத்தித் தன் கைவரிசையைக் காட்டப் போகிறான்.

அம்சரேகாவை அண்டை நாட்டில் அதிகாரிகள் தடுத்த பிறகு அவளைப் பற்றிய விவரம் எதுவும் தெரியவில்லை. அவர்களே தொல்லைகளுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். ஒருக்கால் க்யூ அவளை அங்கிருந்து தப்பிக்கச் செய்து குவீன் லேண்டிற்கு அழைத்துச் சென்றிருப்பானோ? நூற்றுகணக்கான தீவுகளைக் கொண்ட குவீன் லேண்டில் அவனுடைய இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பது எப்படி? அதுவும் பத்தே நாட்களில்.

அவன் யோசித்தவாறே எஞ்சிய பக்கங்களைப் புரட்டத் தொடணினான்.

ஒரு இடத்தில் அவன் பார்வை பட்டது. கண்கள் அகல விரிந்தன. எப்பொழுதும் அமைதியாய், எந்த ஆபத்து வந்தபோதிலும் அலட்டிக்கொள்ளாமல் சாதாரணமாகவே இருக்கும் நேத்ராவே கூட அந்த வார்த்தைகளைப் படித்துவிட்டு, “மை காட்!” என்றெண்ணிக்கொண்டன்.

டைரியைப் பிடித்துக் கொண்டிருந்த அவன் கைகள் முறுக்கேறிக்கொண்டன.

மற்றொரு முறை ... இன்னும் ஒரு முறை படித்தான்.

அவன் பார்வை டைரியின் வரிகளில் வேகமாய் ஓடிற்று. அம்சரேகாவைப் பற்றி தன் அபிப்பிராயங்களை, எண்ணங்களை எழுதியிருந்தாள் சுவர்ணரேகா.

அங்காங்கே அம்சரேகா வெற்றுத் தாள்களில் மடை திறந்தாற்போல் எழுதியிருந்த ஆங்கில கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பைக் கூட எழுதி, “இதையெல்லாம் தங்கை எழுதினாள் என்று சொன்னால் நம்பவே முடியவில்லை. ஜீன்ஸ் பேண்ட், கூலிங் கிளாஸ், லிப்ஸ்டிக் இவற்றோடு அல்ட்ரா மாடர்ன் ஆக இருக்கும் அம்சரேகாவிடம் இவ்வளவு கவிதை உணர்வு இருப்பது ஆச்சரியம்.

ஆகாச பந்தலுக்கு நட்சத்திர தோரணங்களைக் கட்டி, உறங்கிக்கொண்டிருக்கும் அந்தகாரத்தை சூரியன் தட்டி எழுப்பும் வரையில் காத்துக் கொண்டிருப்பேன். அது சீக்கிரமாய் போகும்படியாய் நீ வந்த பிறகு கொஞ்சம் மெதுவாய் போகும்படியும் வேண்டிக்கொள்ளவே. காலம் என்னை வியப்புடன் பார்த்தது என்று எழுதியிருந்தாள். உண்மையாகவே என் தங்கைதானா இதை எழுதினாள்? நினைத்தாலே ஆச்சரியமாய் இருக்கிறது.”

அவன் பக்கங்களைப் புரட்டினான்.

“சந்தேகமில்லை. அம்சரேகா காதலில் விழுந்து விட்டாள். கவிதையின் போக்கில் மாறுதல் வந்திருக்கிறது. “மூக்கையும், வாயையும் மூடிகொண்டால் கண்கள் அவனுக்காக அலை பாய்கின்றன. கண்களையும் காதையும் மூடிக்கொண்டால் உதடுகள் அவன் பெயரை உச்சரிக்கின்றன. எல்லாவற்றையுமே கைகளால் தடுத்து விடலாம். ஆனால் யோசனைகளை எந்தக் கையால் தடுக்க முடியும்?” என்று எழுதி இருக்கிறாள்.

நிச்சயமாய் அது காதல்தான். க்யூவிடம் சொன்னபோது அவன் சிரித்தான். உன் தங்கையை ஒரு தடவை எனக்குக் காட்டு என்றான். அவனிடம் இச்சை தெளிவாய்த் தெரிந்தது. இந்த விஷயம் அப்பாவுக்குத் தெரிந்தால் எப்படி இருக்குமோ? வளர்ப்பு விஷயத்தில் பொருட்படுதத்தது போல், பெற்ற மகள் விஷயத்தில் கூட பார்த்தும் பாராதது போல் விட்டு விடுவாரா?

“மிக சுவாரசியமான சம்பவம் இன்று நடந்தது. கிராம மக்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு விஷயமாய்

எடுத்துச் சொல்லுவதற்காகத் தன்னை அனுப்புகிறார்கள் என்று சொல்லி பிரசங்கத்தைத் தயார் பண்ணிக் கொண்டிருந்தாள் அம்சரேகா. நிரோத் பாகெட்டில் மாத்திரைகள் இருப்பதாய் எண்ணிக் கொண்டிருக்கிறாள் அந்தப் பெண். சிரித்தால் ஆத்திரமடைவாள் என்றெண்ணி, “பிரித்துப் பார்” என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன்.

மிக அதிர்ச்சியான செய்தி தெரிந்தது. அம்சரேகாவுக்கு கர்ப்பம். என்ன செய்வதென்று தெரியாமல் பயப்படுகிறாள். டாக்டரிடம் அழைத்துச் சென்றேன். அதற்குக் காரணம் சீக்ரெட் ஏஜெண்ட் நேத்ரா என்று சொன்னாள். அன்றைக்கு பார்ட்டியில் சந்தித்தப் போதே நினைத்தேன். ‘இவனைப் பார்த்து எந்தப் பெண்ணாக இருந்தாலும் காதலில் விழாமல் இருக்க மாட்டாள்’ என்று. ஆனால் அம்சரேகாவைப் போன்ற பெண்ணைக் கூட கெடுத்து விட்டான் என்றால்... ஆண்களின் மேல் எனக்கு உள்ள அவநம்பிக்கை உறுதியாகிறது. எல்லோரையும் பழி வாங்க வேண்டிய நாள் வந்துவிட்டது. நேத்ரா! ஐ ஹேட் யூ.”

தன்னை நேத்ரா எவ்வளவு காதலித்தான் என்றும், தம் காதல் எவ்வளவு உயர்ந்தது என்றும் அம்சரேகா சொல்லிக்கொண்டே இருக்கிறாள். அந்தப் பெண்ணின் குருட்டுக் காதலை நினைக்கும் போது இரக்கமும் துக்கமும் தான் ஏற்படுகின்றன. இவ்வளவு ஏமாற்றிவிட்ட பண்ணின நேத்ரா வேறு பெண்ணுடன் சுகமாய் இருப்பான் என்று எண்ணியபடியே காரை விட்டிறங்கி கிளினிக்கிற்குள் போகப் புறப்படும் போதுதான் விஷயமே தெரிந்தது. அவன் முத்தம் மட்டும்தான் தந்தானாம். இந்தப் பெண் என்னவோ கர்ப்பம் என்று கலவரப் படுகிறாள். நிரோத் என்றால் அம்சரேகாவுக்கு ஏன் புரியவில்லை என்பது இப்போதுதான் விளங்குகிறது. எனக்கு அலை அலையாய் சிரிப்பு வருகிறது. “கலங்கித் தவித்த கன்னிப் பெண்” என்ற பெயர் இவளுக்கு நன்றாகப் பொருந்தும். இருவரும் படியேறிக் கொண்டிருடோம். நேத்ரா தன்னை ஏமாற்ற மாட்டான் என்றும், அவன் அன்பு அசாதாரணமானது என்றும்

இன்னும் என்னென்னவோ சொல்லிக் கொண்டே இருந்தாள் அம்சரேகா. எனக்கு திடீரென்று ஒரு யோசனை வந்தது.

உண்மையாகவே அம்சரேகாவுக்கு கர்ப்பம் என்று தெரிந்தால் நேத்ராவின் நிலை எப்படி இருக்கும்? அவள் என்னவோ இவ்வளவு உயர்வாக அவன் காதலைப் பற்றிச் சொல்கிறாளே. உண்மையிலேயே அவ்வளவு உயர்வானதுதானா? சிறிய பரிசோதனை பண்ணிப் பார்த்தால்?

யோசனையை அமுலாக்குவதற்கும், டாக்டரை அப்படிச் சொல்ல வைப்பதற்கும் அதிக கஷ்டம் படவில்லை. பாவம், அம்சரேகாவைப் பார்த்தால் இரக்கமாய் இருந்தது. அதனால் என்ன? வாழ்க்கையில் ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக் கொள்வதற்கு ஒரு கசப்பான அனுபவம் தேவை. இந்த ஆண்களின் காதல் எல்லாம் எவ்வளவு கபடமானவை என்று அப்பெண் உணர வேண்டும்.

அடுத்த ஸ்டெப் நேத்ராவைச் சந்திப்பது. க்யூ மூலமாய் அம்சரேகா கர்ப்பவதி ஆகிவிட்டதாகச் சொல்கிறேன். தெரியாமல் அது நடந்து விட்டது என்று நாடகமாடுகிறேன். நேத்ரா என்ன பண்ணுவான்? உடலைக் காட்டிலும் உண்மையான காதல்தான் உயர்ந்தது என்றெண்ணி அவளைச் சேர்த்துகொள்வானா? இந்தக் காதல் கீதல் எதுவும் எனக்கொன்றும் தெரியாது. அம்சரேகா கர்ப்பம் ஆனால் எனக்கு என்ன வந்தது என்பானா?

வாழ்க்கை எனக்கு எவ்வளவோ பாடங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. இந்த ஆண்கள் எல்லோருமே சுயநலவாதிகள்தாம். அவர்களுக்குத் தம் தேவை ஒன்றுதான் முக்கியம். அதற்காக என்ன வேண்டுமானாலும் பண்ணுவார்கள். என் வாழ்க்கைப் பாடத்தை என் தங்கைக்குக்கூட கற்றுத் தருகிறேன். இந்த உலகத்தில் சுயநலம் ஒன்றைத் தவிர அன்பு எதுவும் கிடையாது என்று நிரூபிக்கிறேன். ஒருக்கால் உண்டு என்று தெரிந்தால் தலை குனிந்து வணங்குகிறேன்.”

நேத்ரா அந்த டைரியைக் கையில் வைத்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டான்.

உள்ளங்கையால் நிலா வெளிச்சத்தைப் பருகினாற்போன்ற உணர்வு! நிசப்தம் மல்லிகை மலர்களாய் உதிர்ந்தாற்போன்ற உணர்வு. புயல் என்றெண்ணிக் கொண்டிருந்தது மலய மாருதமான உணர்வு.

அம்சரேகாவிடம் தனக்கு இருக்கும் அன்பு கொஞ்சமும் குறைந்து விட வில்லை என்று சொன்னதுமே சுவர்ணரேகா ஏன் அவ்வாறு காரிலிருந்து இறங்கிப் போய்விட்டாள் என்று புரிந்தது. இதயம் என்ற குடிலுக்குக் கருணை வாசல். அன்பு படிகளில் ஏறி பாசம் எனும் வராண்டா வழியாய் நடந்து போனால் உள்ளே இருப்பதோ நற்பண்பு!

கொடுமை என்ற கொல்லன் பட்டரையில் காய்ந்து கிடந்த மனது, ஆளரவமில்லாத நதியில் ரத்த ஸ்நானம் பண்ணிய உடல், தீயில் வெந்த அனுபவம்... இவற்றுக்கிடையே நல்ல பண்பு தென்பட்டால் ஆனந்தத்தோடு துக்கப்படாமல் வேறென்ன செய்வாள்?

இதெல்லாம் இல்லை அவன் யோசித்துக் கொண்டிருந்தது. அம்சரேகாவைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தான். உள்ளங்கையிலிருந்து நழுவி ஓடிய பாதரசத்தைப் போல் இதயத்திலிருந்து ஆனந்தம் பொங்கிக் கொண்டு வெளி வந்தது.

அவன் டைரியை மூடி வைத்துவிட்டு எழுந்திருந்தான். இனி எஞ்சியிருப்பது கடமை.

## 35

விமான நிலையம் பரபரப்போடு இருந்தது.

“நேரம் அதிகமில்லை. பத்தே நாட்கள்தான் இருக்கு” என்றார் சீஃப்

“ஆமாம் சார்.”

“அவர்களின் ஆபரேஷன் என்னவென்று நமக்குத் தெரியாது. தம்மிடமுள்ள மாரண ஆயுதத்தின் மதிப்பை உலகத்திற்கு எடுத்துக் கட்ட எந்த காரியத்தை வேண்டுமானாலும் பண்ணுவார்கள். அதற்காக நம் நாட்டை தேர்ந்தெடுத்துக் கொண்டாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. இந்தியா போன்ற பெரிய நாட்டையே

பூண்டோடு அழித்துவிட்டோம். நீங்கள் இறங்கி வருகிறீர்களா என்று அவர்கள் எஞ்சிய நாடுகளுடன் பேரம் பேசலாம். அல்லது அமெரிக்கா ஆயுதங்களை விற்பது போல் யுத்தம் புரிந்து கொண்டிருக்கும் இரு நாடுகளுக்கும் அவர்களே காப்ஸ்யூல்களை விற்கலாம். அது மட்டுமே நடந்துவிட்டால் அந்த யுத்தங்கள் முன்போல் இராது. லட்சக்கணக்கான பேர்கள் மரணமடைவார்கள். அணுகுண்டைவிட ஆபத்தான ஆயுதத்தோடு அந்த யுத்தம் நிகழும். எது எப்படி நடந்தாலும் நஷ்டம்தான். உன்மீது பெரிய பொறுப்பு இருக்கு. கேட்டுகொண்டு இருக்கிறாயா?”

“கேட்டுகொண்டு இருக்கிறேன் சார்.” பணிவோடு சொன்னான்.

“நேத்ரா! நீ சீக்ரெட் ஏஜெண்டாகவே இருக்கலாம். ஆனால் நான் இன்டர்போல் சீப். மனிதர்களை நோட் பண்ண எனக்கும் தெரியும். நான் இங்கே பேசிக்கொண்டு இருக்கும்போது நீ அந்த விமானப் பணிப்பெண்ணைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாய்.”

“அந்தப் பெண் திருட்டுத் தனமாய் போதைப் பொருள் ஏதாவது கொண்டு போகிறாளோ என்று பார்த்தேன். சார்! என் நாட்டுப்பற்றை நீங்கள் சந்தேகப்படுறீங்க.”

“போதைப் பொருளை ஜாக்கெட்டிற்குள் மறைத்து வைத்துக்கொண்டு போக முடியாது. அதனால் நீ பார்க்கத் தேவையில்லை.”

“உங்கள் நுட்பமான பார்வைக்குப் பாராட்டுகள் சார்.”

“தாங்க்ஸ்! நான் இவ்வளவு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசிகொண்டு இருக்கும்போது போது நீ...”

அவர் பேச்சிற்கு இடையிலே அறிவிப்பு கேட்டது. “கோலாலம்பூருக்குச் செல்லும் விமானம் கிளம்பத் தயாராக இருக்கிறது. செக்யூரிட்டி செக் ப்ளீஸ்.”

“இப்பொழுதெல்லாம் செக்யூரி செக் அதிகமாகி விட்டது. ஜேம்ஸ் பாண்ட துப்பாக்கியை விமானத்தில்

எடுத்துச் செல்ல முடியுமா? பைலட்டிடம் ஒப்படைத்து விடணுமா சார்?”

“ஜோக் அடிக்காமல் கிளம்பு. உனக்காக எல்லோரும் இங்கே காத்துக் கொண்டு இருப்போம் என்பதை மறந்து விடாதே.”

“குட் பை சார்.”

“குட் லக் நேத்ரா! அதுசரி. இன்னொரு நல்ல செய்தி. சுவர்ணரேகா அபாய நிலையிலிருந்து மீண்டு விட்டாளாம்.”

“தாங்க்யூ சார். நல்ல சமாச்சாரம்தான்.”

*****

பிளாக் ஈகிளுக்கும், கோல்டன் லேண்டு அரசாங்கத்திற்கும் நல்ல தொடர்பு இருந்து வந்தது. சீனா அந்த அரசாங்கத்துடன் உறவாடிக் கொண்டிருந்தது. இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகு சிங்கப்பூர் சீனர்களின் வசமாகி விடும். அதற்குள் தாய்லாந்து, மலேஷியா, கொரியா இவைகளின் செல்வாக்கைக் குறைக்க முடிந்தாலேயொழிய சிங்கப்பூரில் காபிடலிஸ்ட் கொள்கை உடைய மக்களை தம் ஆதீனத்திற்குள் கொண்டு வருவது கஷ்டம் என்று சீனாவுக்குத் தெரியும். ஜனத்தொகை குறைவாய் உள்ள மலேஷியா தன் நாட்டில் வேலை பண்ணுவதற்காக இந்தோனேஷியாவிலிருந்தும், கொரியாவிலிருந்தும் கூலிகளை இறக்குமதி பண்ணிக்கொள்கிறது. ஆனால் இவர்கள் வேலை பண்ணுவதை விட்டுவிட்டு, பணக்காரர்களும், அமைதியை விரும்புவோருமான மலேஷியாவாசிகளுக்குப் பக்கத்திலேயே சின்னச் சின்ன திருட்டுக் கும்பல்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு கோல்ட் லேண்டின் பின்னணி இருந்தது என்று எல்லோரும் அறிந்த விஷயம்தான்.

ஈகிள் லேண்ட் ஜன சஞ்சாரம் அதிகமில்லாத தீவு. சூரிய கிரணங்கள் கூட விழாத அளவுக்கு மிக அடர்த்தியான காடு. பயங்கரமான பாம்புகளும், லேசாய் கொட்டினாலே நிமிட நாழிகையில் மனிதனின் உயிர் போகக் கூடிய விஷம் கொண்ட தேள்களும் அக்காட்டில்

எங்கு பார்த்தாலும் தென்பட்டன. பத்து சதுர மைல்களைக் கொண்ட தீவு. தனி கவனம் எடுத்துக்கொண்டு சுட்டிகாட்டினால் தவிர அப்படிப்பட்ட தீவு உலக வரைபடத்தில் தென்படாது.

இது நாணயத்தின் ஒரு பக்கம். இன்னொரு பக்கம் பிளாக் ஈகிளின் மிக நவீனமான பரிசோதனைச் சாலை இருந்தது. வடக்கிழக்குப் பக்கமாய் மட்டுமே அந்தத் தீவில் நுழையக் கூடிய வழி இருந்தது. எஞ்சிய மூன்று பக்கங்களிலும் கத்திமுனையைப் போன்ற மலைகளும் ஆழமான பள்ளத்தாக்குகளும் இருந்தன.

தீவின் வடகிழக்குப் பக்கத்தில் இருந்து குகை வழியாய் பரிசோதனைச் சாலைக்கு கொண்டு செல்வதற்கு சிங்கிள் ட்ராக் ரயில் இருந்தது. ஈகிள் லேண்டின் பூமிக்கு அடியிலிருந்த சுரங்கத்தில் இருந்தது அவனுடைய ஃபேக்டரி.

கோடிக்கணக்கான டாலர் மதிப்புடைய அந்த ஃபேக்டரி கோல்டன் லேண்ட் அரசாங்கத்திற்கும், பிளாக் ஈகிளுக்கும் ரகசிய தொடர்புகளும் பங்குகளும் இருந்தன. மிக கவனமாகவும், செக்யூரிட்டியுடனும் அந்த ஃபேக்டரி நடந்து கொண்டிருந்தது. சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கார்டுகள் அந்த தீவை ஒவ்வொரு வினாடியும் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள்.

கோல்டன் லேண்டின் தலைவன் பிளாக் ஈகிளுக்கும், அவன் மகனான ஏஜெண்ட் க்யூவிற்கும் மட்டுமே அந்தத் தீவைப் பற்றித் தெரியும். வெளியுலகத்தார் அந்தத் தீவைப் பற்றி அறிய மாட்டார்கள். அங்கிருந்த யாருக்குமே வெளியுலகத்தில் அடி எடுத்து வைக்கும் அவகாசம் இல்லாததால் தெரியக்கூடிய வாய்ப்பு இல்லை.

வேற்று நாட்டு சீக்ரெட் ஏஜெண்ட் க்யூ இவ்வளவு நாளாய் இந்த வியாபார விஷயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். சுமார் பத்தாண்டுகளுக்கும் மேலாய் மிக ரகசியமாய் விற்பனைகளை நடத்தி வந்து கொண்டிருந்தான். சுவர்ணரேகா கண்டுபிடித்த ஃபார்முலா மூலமாய் உலகத்தையே தன் அதிகாரத்தின்

கீழ் கொண்டு வந்து விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டதுமே அந்த நாட்டை கிராஸ் பண்ணிவிட்டான்.

தந்தையும் மகனுமாய் சேர்ந்து அபாரமான திட்டத்தைத் தீட்டினார்கள். அதை அமுலாக்குவதற்கு பதினைந்து நாட்கள் டயம் இருந்தது. இந்தப் பின்னணியில் பூஷணம் அந்த நாட்டிற்குள் அடியெடுத்து வைத்தார். இன்னொரு பக்கத்திலிருந்து அம்சரேகாவை அழைத்துக்கொண்டு க்யூ அந்த நாட்டிற்கு வந்தான். தந்தையைப் பார்த்ததுமே அம்சரேகா அழுது தீர்த்துவிட்டாள்.

“என்னப்பா இதெல்லாம்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. எதற்காக என்னை அந்த நாட்டில் தடுத்து நிறுத்தினார்கள்? எதற்காக இவ்வளவு ரகசியமாய் இங்கே அழைத்துக்கொண்டு வந்தார்கள்? இது எந்த நாடு? முதலில் சொல்லு. நாம் எங்கே இருக்கிறோம்?” என்று கண்ணீர் மல்க கேள்வி மாரி பொழிந்தாள்.

“நான் என்ன செய்தாலும் உன் நன்மைக்காகத்தான் அம்மா. அதை முதலில் நம்பு” என்றார் பூஷணம் சுருக்கமாய்.

“அந்த ஏஜெண்ட் க்யூ யார்?’

“உன் தந்தையின் கூட்டாளி.”

அவள் சரேலென்று திரும்பிப் பார்த்தாள். க்யூ சிரித்துக் கொண்டிருந்தான்.

“உன் தந்தையை இவ்வளவு தூரத்திற்கு வரவழைத்துக் கொண்டது உனக்காகவேதான். உன்னால்தான் உன் தந்தை உயிரோடிருக்கிறார். உனக்காக உன் தந்தைக்கு நான் தரப் போகிற பரிசு என்ன தெரியுமா?”

அவள் அதிர்ச்சியடைந்தவளாய் பார்த்தாள்.

“இந்தியா.”

அவள் தந்தையை நோக்கித் திரும்பினாள். தன் தந்தையின் முன்னிலையிலேயே அவன் இவ்வளவு வார்த்தைகளைப் பேசியபோதும் அவர் ஏன் மௌனமாய் இருக்கிறார் என்று புரியவில்லை அவளுக்கு. தன் தந்தையிடம் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருப்பதை கவனித்தாள்.

அது மட்டும் உண்மை.

இந்தியாவில் க்யூவின் நடவடிக்கைகளுக்கும் இங்கே நடந்துகொள்ளும் விதத்திற்கும் வித்தியாசம் இருந்தது. அங்கே பூஷணத்துக்குக் கீழே, அல்லது சரிசமமான கூட்டாளியாக இருவரும் இருந்து வந்தார்கள். இங்கேயோ இவனே முழு அதிகாரமும் பண்ணுகிறான்.

ஓட்டல் அறைக்குள் நுழைந்தார்கள் மூவரும். கோலாலம்பூரிலே மிக உயர்ந்த ஓட்டல் அது. “இது உங்கள் அறை. ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். மாலையில் என் தந்தை உங்களைச் சந்திப்பார்” என்று பூஷணத்திடம் சொல்லிவிட்டு, அம்சரேகாவைப் பார்த்து, “அனாவசியமான யோசனைகளால் மனதைக் கெடுத்துக்காதே பேபி! சந்தோஷப்பட வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கு” என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய் விட்டான்.

அவன் போனதுமே அம்சரேகா தந்தையிடம் வேகமாய் ஓடி வந்தாள். கோபமாய், “அவன் என்ன பேசுகிறான் என்று உங்களுக்குப் புரிகிறதா? நான் கடைச்சரக்கு என்றும் நீங்கள் அதை நடைபாதையில் விற்கிறவர் என்றும் நினைத்து விட்டானா? இடியட்! அப்பா! நாம் போய் விடலாம். இனி ஒரு நிமிஷம் கூட இங்கே இருக்கக் கூடாது.”

“கண்டிப்பாய் போய் விடலாம் அம்மா. இங்கே வேலை முடியட்டும்.” தேற்றுவது போல் சொன்னார் பூஷணம்.

“அங்கே அக்காவிடம் கூட சொல்லாமல் வந்து விட்டோம். இங்கே இவன் என்னவோ..”

“வருங்கால கணவனை அவன் இவன் என்று சொல்வது பண்பில்லை அம்சரேகா” என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டார் பூஷணம். எரிமலை வெடித்து விட்டாற்போல் பார்த்தாள் அம்சரேகா.

*****

பூஷணம் பிளாக் ஈகிளுக்கும் இடையே சரித்திரப் புகழ் பெற்ற சந்திப்பு அன்று மாலையில் நிகழ்ந்தது.

“தாங்க்யூ பூஷணம்! நீ எங்களுக்கு செய்த உதவி ரொம்ப பெரிசு. உன் நன்றியை மறக்க மாட்டோம்”

என்றான் பிளாக் ஈகிள்.

பூஷணம் அவனைக் கண்ணிமைக்காமல் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார். தன் வாழ்நாளில் எத்தனையோ கொலைகளைப் பண்ண வைத்தவரும், எவ்வளவோ பிரச்சனைகளுக்கு ரத்தத்தால் பரிகாரம் தேடியவருமான பூஷணம் அவனைப் பார்த்து பதில் பேச முடியாதவராய் நின்று கொண்டிருந்தார். குரூரமே உருவாய் நின்று கொண்டிருந்தான் அவன். யுத்தத்தில் ஒரு பக்கம் விகாரமாய் வெந்துபோய் விட்டிருந்த முகமும், மூடிக்கொண்டிருந்த ஒரு கண்ணும் அவன் குரூரத் தன்மையை மிகைப்படுத்திக் காட்டின. திடீரென்று அவனைப் பார்த்தால் யாருமே தம்மையறியாமல் நடுங்கிப் போய் விடுவார்கள். அந்த பட்டாணியனின் பார்வையில் ஒரு விதமான காந்த சக்தி இருந்தது. எதிராளியின் இதயத்தை வெளிக்கொண்டு வந்து விடும் சக்தி அது. மனதளவில் தான் எதிராளிக்கு முன்னால் பலத்தை இழந்து கொண்டிருக்கிறோம் என்று தெரிந்து கொண்டுதான் இருந்தது பூஷணத்துக்கு. நிறைய தடவை தானே தன் கீழே இருந்த ஆட்களை அதுபோல் நடத்தி இருக்கிறார். ஆனால் இப்பொழுது அவனிடமிருந்த சக்தியை எதிரே இருந்தவனின் பார்வையை பறித்துக் கொண்டிருந்தது. எவ்வளவு கட்டுப்படுத்திக்கொள்ள முயன்றாலும் முடியவில்லை.

“உங்களைப் பற்றி என் மகன் நிறைய சொல்லியிருக்கிறான். இரண்டு நாளில் தீவுக்கு வந்து விடுங்கள். ஃபைனல் ஆபரேஷனை கிட்டே இருந்து பார்க்கலாம்.”

“என் மகளின் ஃபார்முலாவை நீங்கள் எப்படி பயன்படுத்திக்கப் போறீங்க என்று பார்க்கத் துடித்துக்கொண்டு இருக்கிறேன் பிளாக் ஈகிள்! நீங்கள் சம்மதித்தால் இன்றைக்கே உங்களோடு வருகிறேன்” என்றார் பூஷணம். அந்த வார்த்தைகளில் ‘நான் உங்கள் கூட்டாளி. என்னைக் கலந்து கொள்ளாமல் இந்த காரியத்தை நடத்தக்கூடாது’ என்ற பொருள் பொதிந்திருந்தது.

“ஓரிரண்டு நாட்கள் இந்த வெளி உலகத்து சுகங்களையும் அழகையும் அனுபவியுங்கள் பூஷணம். ஏனென்றால்...”

“ஏனென்றால்?”

“என் தீவு இருக்குமிடம் வெளியுலகத்திற்கு தெரியாது. ஒருமுறை என் தீவுக்கு வந்துவிட்டால் பிறகு வெளியே போவதென்பது முடியாது, இது வரை அப்படி நடந்ததும் இல்லை. நம் பிளான் துரதிர்ஷ்டவசமாய் வெற்றி அடையாமல் போய்விட்டால் நீங்கள் நிரந்தரமாய் இங்கேயே இருந்துவிட வேண்டிய ஆபத்து ஏற்படலாம்” என்று அங்கிருந்து போய் விட்டான். பூஷணம் சிலையாய் நின்று கொண்டிருந்தார். தந்தையோடு சேர்ந்து க்யூ வெளியே வந்தான்.

“இந்த பூஷணம் என்பவனை எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. கிழ நரிக்கு குளிர் காய்ச்சல் வந்தாற்போல் இருக்கிறான். இவன் மகளைக் கொன்று நமக்கு ஃபார்முலாவைத் தந்தவனாகவே இருக்கலாம். அதற்கு பிரதிபலனாய் கத்தியால் குத்திக் கொல்வது, துப்பாக்கியால் சுடுவது போன்ற கடினான வழிகளில் இல்லாமல் கொஞ்சம் ஈசியாய் சயனைட் மூலமாய் கொல்வது நன்றாக இருக்கும். அதைக் காட்டிலும் பெரிய பிரதிபலன் தேவையில்லை என்று தோணுது.”

“அவன் நமக்குப் பண்ணிய உதவிக்கு, இந்தியாவைப் பரிசாய் தருவதாக சொல்லியிருக்கிறேன்.”

“அவனுக்கா? அவன் மகளுக்கா?”

க்யூ அதிர்ந்து போய் பார்த்தான். “நீ திரும்பவும் அந்த நாட்டிற்குப் போய் ரகசியமாய் அந்தப் பெண்ணை நீர்மூழ்கிக் கப்பலில் கொண்டு வரும் பெரிய பொறுப்பை எடுத்துக்கிட்ட போதே விஷயம் எனக்குப் புரிந்துவிட்டது.. ஆனால் ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள் பையா. எவ்வளவு பெரிய மேதாவிகளாக இருந்தாலும் சரி, புகழ் பெற்றவர்களாய் இருந்தாலும் சரி, பெண் மூலமாய்த்தான் சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள். சீக்ரெட் ஏஜெண்ட் ஆக ரொம்பவும் பெயரெடுத்திருக்கிறாய். இப்போ அந்தப் பெண்

மூலமாய் சிக்கலில் மாட்டிக்கொள்ளப் போகிறாய் என்று தோன்றுகிறது. நீ உயிரை இழந்தால் மகன் போனதற்குக் கூட கவலையில்லை. ஒரு நல்ல செயல் வீரன் போயிட்டானே என்று அழவேண்டியிருக்கும்."

காரில் ஏறிக்கொண்டே சொன்னான் பிளாக் ஈகிள். "இன்னொரு விஷயம். நாலு மணி நேரத்திற்கு முன்னால் நேத்ரா புறப்பட்டிருக்கிறான். இன்னும் இரண்டுமணி நேரத்தில் அவன் இங்கே வந்து சேர்ந்து விடுவான். அவனை விமான நிலையத்திலேயே..."

"சரி டாடி." புரிந்துகொண்டாற்போல் சொன்னான் க்யூ.

"நானே நேரில் போகிறேன். எங்களிருவரில் ஒருவர் சாகும்போது இன்னொருத்தர் கண்டிப்பாய் கிட்டே இருப்போம் என்று உடன்படிக்கை இருக்கு." சிரித்தான்.

பூஷணம் இன்னும் அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

"நேத்ரா வரப் போகிறான்." சொன்னான் க்யூ.

பூஷணத்தின் முகம் நிறம் மாறிற்று.

அவனிடம் தோன்றிய மாறுபாட்டை கவனித்துவிட்டு, "பயப்படுகிறாயா?" என்று சிரித்தான் க்யூ,

"என் நாட்டில் வேட்டை நாய் துரத்தியபோது கூட நான் பயப்படவில்லை. இங்கே உங்கள் எல்லோருடைய பக்கபலமும், அரசாங்க உதவியும் இருக்கிறபோது நான் எதுக்கு பயப்படப் போகிறேன்?"

"நேத்ராவை விமான நிலையத்திலேயே கொன்று விடச் சொல்லி பிளாக் ஈகிள் உத்தரவு போட்டிருக்கிறார்."

"அந்தக் காரியத்தை நான் ஏற்றுக்கொள்ள சந்தோஷமாய் காத்திருக்கிறேன் மிஸ்டர் க்யூ."

"நிஜமாகவா? எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் யோசிக்க வேண்டிய வேலை தீர்ந்தது. எந்த விதமாய் அவனைக் கொல்ல எண்ணுகிறாய்?"

"எனக்கு ஒரு மினி டைம் பாம் வேண்டும். அப்படியே பூச்செண்டு ஒன்று கூட."

க்யூ சிரித்தான். "குட்! புரிந்தது. பூச்செண்டிற்கும் டைம் பாமிற்கும் ஏற்பாடு செய்கிறேன்."

36

கோலாலம்பூர் விமான நிலையத்தில் நேத்ரா ஏறிய விமானம் வந்து சேரும் பொழுது மணி பத்தரையாகி விட்டது. இமிகிரேஷன் நிபந்தனைகளை முடித்துக்கொண்டு வெளியே வரும்போது மேலும் அரைமணி நேரமாகி விட்டது.

பிரீஃப்கேஸை எடுத்துக்கொண்டு அவன் வெளியே வரும்போது, “ஹலோ!” என்று கேட்டது. திரும்பிப் பார்த்தான். கண்களைப் பறிக்கும் அழகோடு ஒரு தாய்லாந்துப் பெண் அங்கே நின்றிருந்தாள். முறுவலுடன் அவனிடம் பூச்செண்டைத் தந்துகொண்டே, “வெல்கம் டு அவர் நேஷன் சார்” என்றாள் பணிவாய். அவன் உல்லாசமாய் சிரித்துக்கொண்டே அப்பூங்கொத்தைப் பெற்றுக்கொண்டான்.

“தாங்க்யூ. மான்கள் காடுகளில்தான் இருக்கும். அவற்றின் இடையைப் பார்க்கும் வாய்ப்பு மனிதர்களுக்கு அடிக்கடி கிடைக்காது மீன்கள் நீரில்தான் இருக்கும். பளபளக்கும் அவற்றின் உடலைப் பார்க்கும் வாய்ப்பு மனிதர்களுக்குக் கிடைக்காது. இவ்வளவு தவறுகளை பண்ணி விட்டேனே. இவ்வளவு அழகானவற்றை எல்லாம் மனிதர்கள் பார்க்க முடியாதபடி பண்ணி விட்டேனே என்று நாக்கைக் கடித்துக்கொண்ட கடவுள் இந்த மனித இனத்திற்காக உங்களிடம் அந்த அழகையெல்லாம் வைத்துப் படைத்திருக்கிறார் என்று நினைக்கிறேன்.”

அந்தப் பெண் அழகாய் நாணமடைந்தாள். நேத்ராவை மனோகரமாய்ப் பார்த்துவிட்டு அங்கிருந்து போய் விட்டாள்.

“உன் வருணனைக்கு பாராட்டு! ஒவ்வொரு பெண்ணோடும் இதே போல் பேசுவதுதான் உன் வழக்கம் என்று நினைக்கிறேன்.” பக்கத்திலிருந்து வந்தபடியே சொன்னான் க்யூ.

அவனைப் பார்த்து நேத்ரா வியப்படையவில்லை. சிரித்தான்.

“இந்த நாட்டிற்குள் அடியெடுத்து வைத்ததுமே ஒரு அழகான பெண்ணைக் கொண்டு வரவேற்கச் சொல்லுவதுதான் வழக்கம் என்று நினைக்கிறேன்” என்றான்.

“பெண் மட்டுமே இல்லை. விருந்தும் உண்டு. அதோபார்! உனக்காக வாகனம் தயாராய் இருக்கிறது.”

நேத்ரா அந்த பக்கமாய் பார்த்தான். ஒரு லட்சம் டாலர்கள் மதிப்புடைய கார் ஒன்று அங்கே நின்றிருந்தது.

“இன்னும் பத்து நிமிஷத்தில் உன் மரணம் நிகழப் போகிறது. நேத்ரா! இந்த உலகத்தில் அதை யாராலுமே தடுத்து நிறுத்திவிட முடியாது. இந்த பத்து நிமிஷமாவது சுகத்தை அனுபவித்து விடு.”

“தாங்க்யூ. என் இறுதி யாத்திரைக்கு அவ்வளவு அழகான கார் தேவையில்லை” என்றவன் “டாக்ஸி” என்று கூப்பிட்டான். டாக்ஸி வந்து நின்றது. அதில் ஏறப் போகும் பொழுது பத்தடி தூரத்தில் இருத்த இன்னொரு ஆளின் மீது பார்வை பட்டது.

“என்ன மாமா? இங்கே வந்து என்ன பண்ணிட்டிருக்கே?” என்று போய் அழுத்தமாய் கட்டிக்கொண்டான்.

“ஏய்! சீ விடு. விடு.” விடுவித்துக் கொண்டே கத்தினார் பூஷணம்.

“நான்தான் வேதகிரி! எங்கே ஓடிப்பூட்டே? உனக்காக நம்ப நாட்டில் எப்படியெல்லாம் தேடினேன் தெரியுமா? ராவோடு ராவாய் ஓடியாந்துட்டயா? பயந்து போயிட்டயா?”

“ராவோடு ராவா ஓடி வந்தேனோ, ராஜாவாய் திரும்பிப் போகப் போகிறேனோ எதிர்காலத்தில் தெரியும். சரி, போகட்டும். இது உன் நாடு இல்லை. இந்த விமான நிலையத்தில் ஒவ்வொரு ஆளும் எங்கள் ஆள்தான். ஒரு நிமிஷத்திற்குள் மரியாதையாய் காருக்குள் ஏறவில்லை என்றால் உன் தேகம் துளைத்தெடுக்கப் பட்டு விடும். கேசுகூட போட முடியாதபடி உன் கதையே முடிவடைந்து விடும். இந்த அரசாங்கம் என்னுடையது.”

“உன் மகள் எங்கேயிருக்கா மாமா?’

“நேத்ரா! ஸ்டாப் இட். இன்னும் முப்பது வினாடிதான் இருக்கு உன் கெடு.”

“ஐயோ! அப்படி என்றால் இங்கிருந்து போய் விடுகிறேன். உன் ஆளுங்களைச் சுட்டுடச் சொல்லிவிடாதே” என்று டாக்ஸியில் ஏறிக்கொண்டான்.

அவன் கையில் பூச்செண்டு இன்னும் அப்படியே இருந்தது.

பூஷணம் க்யூவிற்கருகில் வந்து நின்று, நேத்ரா போய்க் கொண்டிருந்த காரைப் பார்த்துக்கொண்டே தன் கையிலிருந்த வாட்சை சரி பார்த்துக் கொண்டார். “இன்னும் பத்து வினாடிகள் இருக்கு” என்றார்.

க்யூ பதில் பேசவில்லை.

ஐந்து வினாடிகள் கழிந்தன.

நான்கு...

மூன்று....

இரண்டு....

நேத்ரா ஏறிய டாக்ஸி டாக்ஸி தொலைவில் போய்க் கொண்டிருந்தது. பூஷணமும், க்யூவும் அதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

டைம் பாம் வெடிக்க இன்னும் இரண்டு வினாடிகள் இருந்தன.

பூஷணம் மூச்சை அடக்கிக் கொண்டார். எல்லோரும் நிசப்தமாய் இருந்தார்கள். அந்த நிசப்தத்திலிருந்து ‘டிக்...டிக்..” என்று கேட்டது. க்யூவின் நுட்பமான காதுகளுக்கு மட்டுமே அந்த சப்தம் கேட்டது.

“ஆ!” என்ற பூஷணம் குழப்பத்துடன் நிமிர்ந்து பார்த்தார்.

“அங்கே ... அங்கே பார்த்துக்கொள் இடியட்!” க்யூ கத்தினான். அவன் பார்வை பூஷணத்தின் கோட்டு பாக்கெட்டின் மீது இருந்தது. அவன் குரலில் பதைபதைப்பு தெரிந்தது. பூஷணம் தன்னையறியாமல் ஜெபிக்குள் கை விட்டார்.

அங்கு தட்டுபட்டது டைம் பாம். பூங்கொத்திற்குள் வைத்து விமானத்திலிருந்து இறங்கியதுமே ஒரு பெண்ணின் மூலமாய் தந்திருந்த டைம்பாமை, “மாமா” என்று வந்து கட்டிக்கொண்டே நேத்ரா அவர் ஜேபியில்

போட்டிருந்தான். அது இன்னும் ஒரு வினாடியில் வெடிக்கத் தயாராய் இருந்தது.

பூஷணம் அதை வெளியே எடுத்தும், பாம்பைக் கண்டது போல் அவர் கைகள் நடுங்கியதும், மின் அதிர்ச்சி அடைந்தாற்போல் அதை தொலைவில் விட்டெறிந்ததும், அவர்கள் விமான நிலையத்திற்குள் கொண்டு வந்திருந்த விலை உயர்ந்த காரின் மீது அது பட்டு அவ்விடத்தில் பெரிய வெடிப்பு ஏற்பட்டதும் வினாடி நேரத்திற்குள் நடந்து முடிந்து விட்டன. அவ்விடமெல்லாம் கரும்புகைச் சூழ்ந்துகொண்டது. மக்கள் பீதியடைந்தவர்களாய் ஓடிக் கொண்டிருந்தார்கள். தொலைவில் போலீஸ் சைரன் ஓசை கேட்டது.

இப்படிப்பட்ட எதிர்பாராத சம்பவங்களிலிருந்து சட்டென்று தேறிக்கொள்ளக் கூடிய க்யூ கூட தேறிக்கொள்ள கொஞ்ச நேரம் பிடித்தது. பூஷணத்தைப் பார்த்தான். அவன் பார்வைக்கு மட்டும் சக்தி இருந்தால் பூஷணம் அவ்விடத்திலேயே சாம்பலாகி விட்டிருப்பார்.

க்யூ தன் ஆட்களை நோக்கித் திரும்பி, “ஃபாலோ அண்ட் கில் ஹிம்” என்றான்.

அந்தச் சமயத்தில் நேத்ரா தன் சீட்டில் பின்னுக்குச் சாய்ந்துகொண்டே, டிரைவரைப் பார்த்தவன் துள்ளி நிமிர்ந்து உட்கார்ந்தான். ஸ்டீரிங்கைப் பிடித்துக்கொண்டிருந்த கைகளைப் பார்த்ததுமே அவை பெண்ணுடயவை என்று புரிந்தது.

“பிரதிமா!” என்றான்.

“எஸ்” திரும்பிப் பாராமலேயே சொன்னாள்.

“இங்கே எப்படி வந்தாய் நீ?”

“நீ நாட்டுக்காக வந்தால் நான் நாடு ப்ளஸ் உனக்காக வந்தேன். தட்ஸ் ஆல்.”

“டிபார்மென்ட் பரிமிஷன் வாங்கிக் கொண்டாயா?”

“இல்லை. லீவில் வந்திருக்கிறேன்.”

“நான் இங்கே வரப் போவதாய் உனக்கு யார் சொன்னாங்க?”

“அஹோபிலா.”

“மை காட்! நம் ஏஜென்ஸிக்கு சீக்ரெட் என்று பெயர் வைத்தது எவ்வளவு தவறு என்று இப்பத்தான் புரியுது.

நீங்களிருவரும் எப்போதிலிருந்து இவ்வளவு நல்ல சினேகிதிகள் ஆனீங்க?”

“எதிரியோட எதிரி நண்பன் அல்லவா?”

“உங்க இரண்டு பேருக்கும் இருக்கிற பொதுவான எதிரி யார்?”

“அம்சரேகா.”

“ஐயோ பாவம்! அவள் என்ன பண்ணினாள்?”

“தன் கர்ப்பத்துக்கு நீதான் காரணம் என்று பழி சுமத்த வில்லையா?”

“அதுவா!” நேத்ரா சிரித்தான். “நடந்தது என்னவென்றால்...” என்று சொல்லத் தொடங்கிய அதே நேரத்தில் ஒரு குண்டு ஊடுருவிக்கொண்டு வந்து பின் கண்ணாடிவைத் தூள் தூளாக்கிற்று. நேத்ரா சட்டென்று குனிந்து முன் சீட்டிற்குத் தாவினான். பின்னாலிருந்து கார்கள் வேகமாய் வந்து கொண்டிருந்தன. ஒரு காரிலிருந்து மிஷின்கன் இடைவிடாமல் வெடித்துக் கொண்டே இருந்தது. வீதியில் மக்கள் கூட்டமாய் கூடத் தொடங்கி விட்டார்கள். மின்னல் வேகத்தில் வாகனங்கள் இரண்டும் பறந்து கொண்டிருந்தன. அதற்கிடையே குண்டுகள் துளைத்துக்கொண்டே போகத் தொடங்கின.

“இனி லாபமில்லை. முன்னுக்கு போகப்போக மேலும் இக்கட்டான சந்து இருக்கிறது. நம்மால் தப்பிக்க முடியாது” என்றான் நேத்ரா.

“ஸ்டீரிங்கை உன்னிடம் மாற்றித் தரக் கூட நேரமில்லை.”

“குதித்து விடுவோம், முனை திரும்பியதுமே.”

“ரெடி.”

“ரெடி”

கார் முனை திரும்பியதுமே இருவரும் இருவேறு பக்கமாய் குதித்து, தொழிற் பயிர்ச்சி அனுபவத்தால் அதே வேகத்தோடு பக்கத்து சந்திற்குள் ஓட்டமெடுத்தார்கள். பின்னால் துரத்திக் கொண்டிருந்தவர்கள் வருவதற்குள் அந்த கார் மாதா கோவிலின் சுவரின் மோதி நின்றுவிட்டது. காருக்குள் இருவரும் இல்லை என்று தெரிந்து அவர்கள் சுற்றும் முற்றும் பார்ப்பதற்குள் ஐந்து நிமிஷம் ஆகிவிட்டது.

அந்த நேரத்தில் நேத்ராவும் பிரதிமாவும் கொஞ்ச தூரம் ஓடி விட முடிந்தது. ஆனால் அந்த சந்தோஷம் அதிக நேரம் நிலைக்கவில்லை. அந்தப் பக்கமாய் ஏறக்குறைய ஐந்து பேர் தேடியபடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் நடந்து வந்து கொண்டிருந்த தோற்றத்திலிருந்து அவர்களின் கை ஜேபியிலிருந்த ரிவால்வரின் மீது இருப்பது தெரிந்தது.

இருவரும் பக்கத்திலிருந்த காம்பவுண்டிற்குள் நுழைந்தார்கள். அங்கே நிறைய கார்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. சிறுவர்கள் ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சில வயோதிகர்கள் காரிலிருந்து இறங்கி, உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள்

அதற்குள் ஒரு பெண் வந்து, “பகாஷி பகாஷி” என்றாள்.

“வாங்க வாங்க என்கிறாள்” என்றான் நேத்ரா.

“எங்கேயாம்?”

அந்த இருவரும் மெயின் கேட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்தார்கள். அவன் மேற்கொண்டு தாமதிக்காமல் பிரதிமாவுடன் உள்ளே போனான்.

அவ்விடமெல்லாம் இருட்டாய் இருந்தது. அகர்பத்திகளின் புகையினால் அந்த அறை நிரம்பி வழிந்தது. ஒரு ஆள் வந்து நேத்ராவின் தலையில் வெள்ளைக் கைக்குட்டை போன்ற ஒன்றைக் கட்டினான்.

ஹாலின் இன்னொரு மூலையில் பெரிய சிலை, சுமார் இருபதடி உயரம் இருந்தது. புகை அங்கிருந்துதான் வந்து கொண்டிருந்தது. தமக்கு முன் வரிசையில் இருந்தவர்கள் முழங்காலிட்டு அமர்ந்திருப்பதைப் பார்த்து அவ்விருவரும் கூட அதுபோல் உட்கார்ந்து கொண்டார்கள். நேத்ரா வெளிவாசலில் ஒரு கண் வைத்திருந்தான். அங்கே நடந்து கொண்டிருந்த சடங்கைக் காட்டிலும், தம்மைத் தேடிக் கொண்டிருந்த அவர்கள் மீதுதான் அவன் கவனமெல்லாம் இருந்தது.

அந்த ஹாலில் ஏறக்குறைய இருபது பேர் இருந்தார்கள். மந்திரம் போல் எதையோ உச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

இருவர் கைகளிலும் ராக்கியைப் போன்ற கயிற்றைக் கட்டினார்கள் அங்கிருந்த பெண்கள். அழகாய் நகாசு வேலைப்பாடு அமைந்த கழி ஒன்றை நேத்ராவின் கையில் தந்தார்கள். பிரதிமா இதையெல்லாம் வியப்போடு பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். நேத்ரா அந்தக் காரியங்களைப் பண்ணிக்கொண்டே அங்கிருந்து எப்படி வெளியேறுவது என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். எதிரிகள் எல்லா பக்கங்களிலிருந்தும் வந்து சூழ்ந்து கொள்வதற்குள்ளாகவே அங்கிருந்து போய் விட வேண்டும். புகையால் கண்கள் எரியத் தொடங்கின. அத்துடன் இருட்டு வேறு.

அந்த ஹாலிள் இருந்தவர்கள் எல்லோரும் மெதுவாய் எழுந்திருந்து இன்னொறு சிறிய கதவை நோக்கிப் போனார்கள். நேத்ராவும் பிரதிமாவும் கூட அவர்களோடு போனார்கள். அந்தப் பக்கமாய் வந்த வெளிச்சத்தில் ஹாலில் இருந்தவர்களைப் பார்த்தான் நேத்ரா. எல்லோருமே இளைஞர்களாகவும் இளம் பெண்களாகவே இருந்தார்கள். இருவரும் அந்த ஜோடிகளை விலக்கிக்கொண்டு மறுபக்கமாய் போனார்கள். அதிர்ஷ்டவசமாய் அந்தப் பக்கத்தில் ஆளரவம் இல்லாமலிருந்தது. தூணுக்கு அருகில் ஒரு தொண்டுக் கிழவன் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். சந்தடியைக் கேட்டு கண்களைத் திறந்து நேத்ராவைப் பார்த்துவிட்டு, “காட் ஈஸ் கிரேட்!” என்று கையை நீட்டினான். நேத்ரா அவன் கையில் கொஞ்சம் சில்லறையைத் வைத்துவிட்டு அப்பால் போகக் கிளம்பியபோது, “ஹரோமி ஷிமாமி” என்றான். “எனக்கு உங்கள் மொழி நன்றாய் தெரியாது. ஆங்கிலத்தில் பேசு” என்றான்.

“புதுமணத் தம்பதிகளுக்கு மங்களம் உண்டாகட்டும்.”

இருவரும் அவனை வியப்புடன் பார்த்தார்கள். “நாங்கள் தம்பதிகள் அல்ல.”

“இதென்னப்பா. நயிஷானிலிருந்து (ஒரு சாதி மக்கள் தம் ஆசாரப்படி விவாகம் பண்ணும் மேடை)

வருகிறவர்கள் கல்யாணம் ஆக வில்லை என்கிறீர்களே? எங்கே உங்கள் கைகளைக் காட்டுங்க. அதோ கயிறு இருக்கு. சுபம்.”

உள்ளே இருந்து ஜோடிகள் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். வெளியே அவர்களுக்காக காத்திருந்த உறவினர்கள், குழந்தைகள், பெரியவர்கள் எல்லோரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் இருந்தார்கள். எங்கும் ஒரே கோலாகலமாய் இருந்தது. புதுமண தம்பதிகளை எல்லோரும் ஆசீர்வதித்துக் கொண்டிருந்தார்கள். மணமகன்களை மணமகள்கள் முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

நேத்ரா இன்னும் அதிர்ச்சியிருந்து மீளவில்லை.

பிரதிமாவின் உதடுகள் அவன் கன்னத்தை முத்தமிட்டன. ஏதோ கனவில் ஆழ்ந்தவனைப் போல் அவன் மெதுவாய் திரும்பிப் பார்த்தான். அவள் கண்கள் குறும்பாகவும் ஆனந்தத்தாலும் சிரித்துக் கொண்டிருந்தன.

## 37

“நான் உன்னைப் பற்றி வைத்திருந்த கணிப்பு பொய்த்துப் போகவில்லை” என்பது போல் பார்த்தான் பிளாக் ஈகிள். இதுபோன்ற நிலைமை அவருக்கு என்றமே வந்து இல்லை. அதுநாள் வரையில் அவருக்கு ஒருவிதமான தற்பெருமை இருந்து வந்தது. தன்னுடைய ஆபீஸ் அறையில் கூட உயரமான நாற்காலியில் அமர்ந்து கொண்டு எதிரே இருக்கும் ஆளை அதிகாரம் செய்வார். இப்பொழுது எதிரே இருக்கும் நபரின் கண்களில் தன்னிடம் இல்லாத ஏதோ ஒரு சக்தி இருப்பதை உணர்ந்தார். அதோடு தான் செய்த தவறு குற்ற உணர்வைத் தூண்டிவிட்டது.

“இன்னொரு முறை இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன்” என்றார் தலை குனிந்து கொண்டே.

“வாய்ப்புகள் திரும்பத்திரும்ப கிடைக்காது பூஷணம்.”

“நேத்ராவைப் பிடிப்பது அவ்வளவு கஷ்டமாக இருக்காது என்று நினைக்கிறேன்.”

“நேத்ராவைப் பிடிப்பது இருக்கட்டும். உன் முட்டாள்தனத்தினால் விலையுயர்ந்த கார் நாசமாகி விட்டது. அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்?”

“அந்த கார் எப்படியும் நாசமாகி இருக்கும். அதில்தான் நேத்ராவை ஏற்றிவிட்டு, அதை வெடிக்கச் செய்து விட வேண்டும் என்று எண்ணியிருந்தோம் நானும் க்யூவும்” என்றார். சிறு பிள்ளைகள் டீச்சரிடம் தன்னுடைய தவறில் பக்கத்தில் இருக்கும் மாணவனுக்கும் பங்கு இருக்கிறது என்பது போல் இருந்தது அவர் பேசிய தோரணை.

பிளாக் ஈகிள் சிரித்தான். அவன் சிரிப்பு எவ்வளவு மென்மையாக இருந்ததோ அவன் முகம் அவ்வளவு கொடூரமாக இருந்தது.

“க்யூ இந்த பிளான் பற்றி சொன்ன போது உடனே நான் அனுமதி கொடுத்தேன். காரணம் என்ன தெரியுமா பூஷணம்?”

என்னவென்பது போல் பார்த்தார் பூஷணம்.

“திருப்தி!” என்றான் பிளாக் ஈகிள். “அதன் விலையை எடை போட முடியாது. நீ என்னுடைய கூட்டாளி. நேத்ரா காருடன் சேர்ந்து வெடிக்கப் போவதைப் பார்த்து திருப்தி அடைய வேண்டும் என்று நீ விரும்புவதாக எண்ணினேன். என் கூட்டாளியைத் திருத்திப் படுத்துவதற்கு ஒரு லட்சம் டாலர்கள் செலவழித்தால் வந்த நஷ்டம் என்ன என்று நினைத்தேன். ஆனால் இப்போ நடந்தது என்ன? நம் கார் நாசமடைந்து விட்டதை நம் எதிரி வேடிக்கைப் பார்த்து இருப்பான். உள்ளூர சிரித்துக் கொண்டிருப்பான். அவனுடைய திருப்திக்காக என்னைக் கொண்டு இந்த செலவு செய்ய வைத்தாற்போல் ஆகி விட்டது. அப்படித்தானே?”

உள்ளங்கையில் வியர்தெடுத்தது பூஷணத்தால் உணர முடிந்தது. ‘என்ன இப்படி ஆகி கொண்டிருக்கிறேன்? இவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறேனே ஏன்?’ என்று நினைத்துக் கொண்டார். பிளாக் ஈகிள் சொன்ன வார்த்தைகளில் உண்மை இருந்தது. தான் எவ்வளவு முட்டாளாக நடந்து கொண்டிருக்கிறானோ தெரிந்து கொண்டுதான்

இருந்தது. வேலைகளை செய்ய வைப்பது தானே தவிர செய்வது தனக்குத் தெரியாது. உற்சாக மிகுதியில் இந்த வேலையை தானே செய்வதற்கு முற்பட்டார். அதுதான் தான் செய்த தவறு.

“இன்னொரு வாய்ப்பு கொடுத்தால் என் திறமை என்னவென்பதை நிரூபித்து காட்டுகிறேன்.” சொன்ன பிறகுதான் தான் எவ்வளவு ஹீனமாக பேசியிருக்கிறோம் என்று. தன்னிடம் வேலை செய்யும் கடைநிலை ஊழியர்கள் சொல்லும் வார்த்தை அது. தன்னை சமாளித்துக்கொள்ள முயன்றார்.

அதற்குள் பிளாக் ஈகிள் சொன்னான். “இன்னும் இரண்டு நாட்களில் இங்கிருந்து புறப்பட்டு நம் தீவுக்கு செல்லப் போகிறோம். ஒருமுறை அங்கே சென்ற பிறகு ராஜாதிராஜாவாக வெளி உலகில் அடியெடுத்து வைப்போம். இந்திய நாட்டுக்கு அதிபதியான உனக்குக் கீழே ஒரு ஊழியனாக நேத்ரா வேலை பார்க்க நேரிடலாம். உனக்கு அது வேண்டுமா? அல்லது அவன் உயிர் வேண்டுமா?”

“அவன் உயிர் வேண்டும்.” யோசிக்கும் தேவையே இல்லாமல் உடனே சொன்னார். பழைய நினைவுகள், சந்தித்த தோல்வி அவரிடம் பிடிவாதத்தை, பழி உணர்வை அதிகரிக்கச் செய்தன.

“ஆகட்டும். இன்னொரு வாய்ப்பை எடுத்துக்கொள். க்யூ உனக்கு வேண்டிய உதவியைச் செய்வான்.”

பூஷணம் கிளம்ப முற்பட்ட போது க்யூ சொன்னான். “நான் போய் இறக்கிவிட்டு வருகிறேன்.”

அம்சரேகாவை பார்ப்பதற்காக!

பிளாக் ஈகிள் மகனைப் பார்த்தான். தன் எண்ணத்தை வெளிப்படுத்தவில்லை. தலையை அசைத்தான்.

இருவரும் போகும் போது திரும்பவும் கேட்டான். “இன்னொரு முறை யோசித்துப் பார்த்துக்கொள் பூஷணம். புற்றில் இருக்கும் பாம்பை எழுப்பாமல் நம் வேலையை நாம் செய்துகொண்டு போவது நல்லது. அப்படி இல்லை பழி வாங்கித்தான் ஆக வேண்டும் என்கிறாயா?”

போய்க் கொண்டுருந்த நின்று திரும்பிப் பார்க்காமலேயே சொன்னார். “ஆமாம். எங்கே இருந்தாலும் சரி நேத்ராவை கொல்ல வேண்டியதுதான்” என்றார். அதுதான் வாழ்க்கையில் அவர் செய்த கடைசி தவறு!

*****

அவள் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தாள். அவளுடைய சிறிய மூளைக்கு இதைவிட வேறு வழி தோன்றவில்லை. தன் வாழ்க்கையில் இவ்வளவு திருப்பங்கள் ஏற்படும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. இனி நேத்ரா கண்ணில் படுவான் என்ற நம்பிக்கையும் இல்லை. இத்தனை நாளும் தம் விஷயத்தைப் பற்றி தந்தையிடம் எப்படி சொல்லுவது என்று யோசித்தாள். இப்பொழுது க்யூவின் வருகையும் சேர்ந்து விட்டதில் அவள் மிரண்டு விட்டாள். க்யூ விடமிருந்து தப்பித்துக்கொள்ள மரணம் ஒன்றுதான் வழி என்று முடிவு செய்தாள். க்யூவின் பக்கம் தந்தை சேர்ந்துகொண்டது மட்டும் புரிந்தது. தந்தை அங்கே எதற்காக அழைத்து வந்தார் என்று மட்டும் தெரியவில்லை. அவ்வளவு உலகஞானமும் இல்லை.

இறப்பதற்கு முன் நேத்ராவுக்கு இறுதிக் கடிதம் எழுதுவது கடமை என்று நினைத்தாள். அவளுக்கு முகவரியும் தெரியாது. அவனுடைய பெயரை எழுதி சீக்ரெட் சர்வீஸ் என்று கவர் மீது எழுதினாள். மனதில் இருக்கும் எண்ணங்களை பகிர்ந்துகொள்ள அக்காவும் பக்கத்தில் இல்லை. கடிதம் நேத்ராவுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லா விட்டாலும், தன் மனதில் பொங்கி வரும் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு அந்த கடிதத்தை சாதனமாக எடுத்துக் கொண்டாள். எந்த ஒரு இலக்கியவாதியின் கையிலாவது கிடைத்தால் வரலாற்றில் நிலைத்து நிற்கக் கூடிய அளவுக்கு உத்வேகம் நிரம்பி இருந்தது அந்தக் கடிதத்தில்.

ஆங்கிலக் கவிதைக்கு தமிழ் மொழிபெயர்ப்பு.

‘ஒரு அழகான மாலை. இருள் வந்து கவிழ்ந்துகொள்ளும் நேரம். நான் உன் நினைவுகளின் அகல் விளக்கை ஏற்றுவேன். தொலைவில் காட்டிலிருந்து

தனிமையில் இருக்கும் ஒரு பறவையின் கூவல் கேட்டுக் கொண்டிருக்கும். ஒருக்கால் அதுவும் என்னைப் போலவே எதையோ இழந்து விட்டிருக்கும். என் உலகத்தை உன்னைச் சுற்றிலும் உருவாக்கிக் கொள்வதற்கு இத்தனை காலம் பிடித்தது.

இனி விடைபெற வேண்டிய தருணம் வந்து விட்டது. கன்னத்தில் வழியும் ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் எத்தனையோ கதைகளை சொல்லும். என் காதல் இப்படி முடிந்து போவதற்கு நான்தான் காரணம். வேறு யாரை குறை சொல்லி என்ன பயன்? எப்போ மனமானது மூளைக்கு பாடம் கற்பிக்கத் தொடங்குமோ, அங்கே காதல் எப்படி நிலைத்திருக்கும்? போகட்டும். உன்னுடன் கழித்த அந்த மூன்று மணி நேரமும் மறக்க முடியாதவை. மூன்று மணி நேரம் என்று சொன்னேனா? இல்லை இல்லை மூன்று நிமிஷங்கள்.. மூன்று வினாடிகள்.

ஆயிரமாயிரம் குரல்களுக்கு இடையில் உன் நிசப்தத்தை கேட்டுக் கொண்திருப்பேன். இந்த உலகம் என்னை பைத்தியம் என்று சொல்லும்போது எனக்கு சிரிப்புதான் வருகிறது.

வாழ்க்கையின் இறுதி தருணத்தில் என்ன சொல்லட்டும், விடைபெறுவதைத் தவிர.

உன் அம்சலேகா

கடிதத்தைக் கவரில் வைத்து ஒட்டி, ஹோட்டலில் இருந்த தபால் பெட்டியில் போட்டு விட்டாள். எப்படி இறந்து போவது என்பதைப் பற்றி அவளுக்கு எந்த விதமான மாற்றுக் கருத்தும் இல்லை. மணிக்கட்டு அருகில் ஆழமாய் நரம்பை வெட்டிக்கொண்டு பாத்டப்பில் கையை மூழ்க வைப்பதுதான் சுலபமான வழி.

அவள் கத்தியைக் கையில் எடுத்துக்கொண்ட போது டி.வி.யில் தந்தையின் படம் தென்பட்டது. அவளுக்கு புரியவில்லை. அறிவிப்பாளர் அந்த நாட்டு மொழியில் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

இந்த நாட்டு தொலைக்காட்சியில் தந்தையின் போட்டோ வருவானேன் என்று அவள் குழம்பிக்

கொண்டிருந்த இருந்த போது கதவை படபடவென்று தட்டிய சத்தம் கேட்டது. அவள் போய் கதவைத் திறந்தாள். எதிரே தந்தை மூச்சிரைக்க நின்று கொண்டிருந்தார்.

தொலைவில் ஏறத்தாழ பத்து பேர் துரத்தியபடி வந்து கொண்டிருந்தார்கள்.

தந்தை உள்ளே வந்து கதவைத் தாழிடப் போனார். அதற்குள் மக்கள் அங்கு வந்து விட்டார்கள்.

“நோ நோ... ஐ ஆம் நாட்! ஐ யாம் நாட்!” என்று கத்தினார் கைகளை காற்றில் உயர்த்திக்கொண்டே.

அம்சலேகாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

*****

“விமான நிலையத்திலேயே நீ ஏன் க்யூவை தாக்க வில்லை என்று தோன்றியது எனக்கு” என்றாள் பிரதிமா. “கையில் கிடைத்த எதிரியை அனாவசியமாக விட்டு விட்டாய் என்று தோன்றியது. அவனை சுட்டு விட்டாலும், ஏதோ விதமாய் அங்கிருந்து தப்பித்துக் கொண்டு இருப்போம்.”

“க்யூவை தாக்குவது, பூஷணத்தை சுடுவது பெரிய விஷயம் இல்லை. ஆனால் ஒரு விஷயம் யோசி. பிளாக் ஈகிளுக்கும் நமக்கும் இருக்கும் பாலம் அவ்விருவர்தான். அவர்கள் மட்டும் இல்லை என்றால் நம்மால் லட்சியத்தை அடைய முடியாது. கூடுமான சீக்கிரத்தில் பூஷணத்தை பிடிக்க வேண்டும், பத்து நாட்களுக்குள்.”

“பத்து நாட்கள் இல்லை. இரண்டு நாட்களுக்குள்.”

“ஆமாம். ஒருக்கால் அவர்கள் தங்களுடைய இருப்பிடத்திற்கு கிளம்பிக் கொண்டு இருப்பார்கள். அதற்கு முன்பே இந்த வேலை நடந்தாக வேண்டும்” என்று ஜேபியிலிருந்து போட்டோவை எடுத்தான். பூஷணத்தின் புகைப்படம் அது.

“இது எப்படி வந்தது?”

“அவசரமாக இந்தியாவிலிருந்து வரவழைத்தேன்.”

“எதற்கு?”

“சொல்கிறேன். முதலில் போவோம்.”

இருவரும் காரில் ஏறிக் கொண்டார்கள். கார் பிரிண்டிங் ப்ரெஸ் முன்னால் நின்றது.

“எனக்கு இரண்டு வெவ்வேறு லெட்டர் ஹெட்ஸ் தலா ஆயிரம் வேண்டும். எத்தனை நேரமாகும்?”

அந்த ப்ரெஸ் முதலாளி ஒரு சைனாக்காரர். “அரை மணியில் தர முடியும்” என்றான்.

நேத்ரா தனக்கு வேண்டியதை எழுதிக் கொடுத்தான். அரைமணியில் நேர்த்தியாக பிரிண்ட் செய்யப்பட்ட லெட்டர் ஹெட்ஸ் கிடைத்து விட்டன.

அவற்றின் மீது வேறொரு கடையில் இரண்டு விதமான கடிதங்களை டைப் செய்ய வைத்தான்.

பிரதிமா அவன் செய்து கொண்டிருந்த காரியத்தை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கார் தொலைக்காட்சி நிலையத்தின் முன்னால் நின்றது. நேத்ரா உள்ளே சென்று டைரக்டரை சந்தித்தான். இரண்டு கடிதங்களையும், புகைப்படத்தையும் மேஜை மீது வைத்தான்.

“பூஷணம் என்ற நபர் நேற்று இரவு எங்கள் ஆஸ்பத்திரியிலிருந்து தப்பித்துக்கொண்டு போய் விட்டார். விவரம் தெரிந்தவர்கள் இந்த முகவரிக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.”

மெண்டல் ஆஸ்பத்திரி லெட்டர் ஹெட் மீது டைப் செய்யப்பட்ட கடிதம் முதலாவது.

“எங்கள் எல்லையிலிருந்து ஒரு பைத்தியக்காரன் தப்பித்துக் கொண்டு விட்டான். சம்பந்தப்பட்ட மெண்டல் ஆஸ்பத்திரி மேலாளர் எங்களிடம் புகார் கொடுத்துள்ளார். இந்த செய்தியை மற்றும் புகைப்படத்தை டி.வி.யில் ஒளிபரப்பி மக்களை எச்சரிக்கும்மாறு கேட்டுக் கொள்கிறோம்.”

காவல்நிலைய அதிகாரியின் லெட்டர் ஹெட்லிருந்து டி.வி. டைரக்டரை உத்தேசித்து இரண்டாவது கடிதம்.

“உடனே ஒளிபரப்பச் செய்கிறேன்” என்றார் டைரக்டர்.

“இந்த நபரிடம் பாஸ்போர்ட் கூட இல்லை.”

“அப்படியா. அவர் உங்களுக்கு என்ன உறவு?”

“அங்கிள் ஆக வேண்டும். அதான் பேப்பர்களை எடுத்துக்கொண்டு நேராக வந்தேன்.”

“உங்கள் அங்கிள் சீக்கிரமாய் கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.”

“நான் அதையே விரும்புகிறேன்” என்று அங்கிருந்து வெளியே வந்தான் நேத்ரா.

வெளியில் வந்த பிறகு பிரதிமா கேட்டாள். “தொலைக்காட்சியில் “காணாமல் போனவர்களை” பற்றி அறிவிப்பது இவ்வளவு சுலபமா?”

“பின்னே என்ன இருக்கும் என்று நினைத்தாய்?” நேத்ரா சிரித்தான்.

அதன் விளைவுதான் தற்போது பூஷணம் இருந்த ஹோட்டல் அறையில் நடந்து கொண்டிருந்தது.

“நோ… நோ. ஐ யாம் நாட் மேட்! நான் பைத்தியம் இல்லை.” பதற்றத்துடன் சொல்லிக் கொண்டயுர்ந்தார் பூஷணம்.

வந்தவர்கள் எல்லோரும் சுற்றிலும் வளையமாக சூழ்ந்து கொண்டார்கள். பூஷணம் ஜேபியிலிருந்து துப்பாக்கியை எடுத்தார். எல்லோரும் பயந்து போய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பூஷணம் துப்பாக்கியை எடுத்து மேஜை மீது வைத்துவிட்டு, “நோ பிஸ்டல். நோ மேட்” என்றார் அபயம் அளிப்பது போல் சிரித்துக்கொண்டே.

அவர் துப்பாக்கியை மேஜைமீது வைத்ததும் ஒரேதிரியாய எல்லோரும் அவர் மீது பாய்ந்தார்கள்.

“நோ… நோ…” அம்சலேகா கத்தினாள். அவள் வார்த்தைகளை யாரும் பொருட்படுத்தவில்லை. அங்கே இருந்தவர்களில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் குறைவு.

அவர்களில் ஒருவன் மெண்டல் ஆஸ்பத்திரிக்கு போன் செய்தான். நேத்ரா முன்னாடியே ஏற்பாடு செய்து வைத்திருந்தான். அந்த செய்தி அவனுக்கு வந்ததுமே அவன் வேகமாக ஹோட்டலுக்கு வந்தான்.

ஆனால் அவன் வந்து சேர்ந்த போது ஹோட்டலுக்கு முன்னால் ஒரு ஆஸ்பத்திரி வேன் நின்று இருந்தது. நான்கு ஆட்கள் சேர்ந்து பூஷணத்தை வேனில் ஏற்றிக் கொண்டு இருந்தார்கள். பின்னாலேயே அம்சரேகா இருந்தாள். அத்தனை நாட்களுக்கு பிறகு அந்த நாட்டில்

அந்தப் பெண்ணை பார்த்துவிட்டு, அவளை அழைக்கப் போன நேத்ரா நின்றுவிட்டான்.

வேனுக்கு பக்கத்திலேயே சூப்பரின்டெண்ட உடையில் ஏஜெண்ட் க்யூ நின்றிருந்தான்.

அம்சலேகாவுடன் பேசவேண்டும் என்ற உத்வேகத்தை நேத்ரா அரும்பாடுபட்டு அடக்கிக்கொண்டான். அவளும் ஏறிய பிறகு வேன் நகர்ந்தது.

அவர்களுக்குத் தெரியாமல் அதனை பின்பற்றினான்.

வேன் கொஞ்சம் தூரம் பயணித்து ஒரு ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனிக்குள் நுழைந்தது. விசாலமான வளாகத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேயப்பட்டிருந்தது. ஐந்து நிமிஷங்களுக்கு பிறகு நேத்ராவும் அதனுள் நுழைந்தான்.

அங்கே வேன் இருக்கவில்லை. அந்தப் பக்கம் இருந்த வாசல் வழியாய் போய் விட்டிருக்கும்.

நேத்ரா ஏமாற்றம் அடையவில்லை. வேன் நம்பரை பார்த்து விட்டான். அது போதும்.

## 38

“இந்த நாட்டுக்கு வந்த பிறகு உனக்கு என்னவோ ஆகிவிட்டது.” திட்டுவது போல் பழித்தான் க்யூ. “எல்லோரையும் ஆட்டிப்படைக்கும் பூஷணம் நீதானா என்று சந்தேகம் வருகிறது. அந்த நேரத்திற்கு நான் கொஞ்சம் சீக்கிரமாய் ஆஸ்பத்திரி ஆசாமியைப் போல் வேஷம் போட்டுக்கொண்டு வராமல் இருந்திருந்தால் நேத்ரா தன்னோடு உன்னைக் கூட்டிட்டுப் போயிருப்பான்.”

பூஷணம் பதில் பேசவில்லை. தன்னுடைய நடத்தை அவருக்கு வெட்கத்தை உண்டாகியது. நேத்ரா தன்னை எப்படி முட்டாளாக்கி விட்டான் என்றெண்ணியபோது ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. அவர் கண் முன்னால் மக்கள் எல்லோரும் தன்னை வெறிப்பிடித்த நாயைத் துரத்துவது போல் துரத்தி வந்த காட்சியே நிழலாடிக் கொண்டிருந்தது.

க்யூ சொன்னான். “இரண்டு மணி நேரமாய் அரைமணிக்கொரு தரம் டி.வியில் வந்து கொண்டு இருந்ததாம் அந்த அறிவிப்பு. நானும் அரைமணி நேரத்திற்கு முன்னால்தான் பார்த்தேன். உடனே புரிந்துவிட்டது. உன்னைப் பிடிப்பதற்காக நேத்ரா இந்த நாடகம் ஆடியிருகிறான் என்று. உன்னை என்னோடு அழைத்து வந்தது, எங்கப்பா சொன்னது போல் எவ்வளவு தவறு என்று புரிகிறது.” நீ இல்லா விட்டால் எந்தப் பிரச்சினையுமே வந்திருக்காது என்றாற்போல் பேசினான்.

“அந்த விளம்பரத்தில் நேத்ரா தன் விலாசத்தைக் கொடுத்திருப்பான்” என்றார் பூஷணம்.

“இல்லை. ஆஸ்பத்திரி விலாசத்தைத் தந்திருக்கிறான். யாராவது உனக்கு போன் பண்ணினால் அந்த போன் லைன் தனக்குக் கிடைக்கும்படி லஞ்சம் கொடுத்து ஏற்பாடு பண்ணிக்கொண்டிருக்கிறான்.”

“அந்த நேத்ராவை விடப் போறதில்லை.”

“அப்படிச் சொல்லிக்கொண்டே இவ்வளவு தூரத்திற்குக் கொண்டு வந்து விட்டாய் பூஷணம். அழகான மகள் ஒருத்தி இருப்பதைத் தவிர வேறு எந்த தகுதியும் இல்லை. பண்ணியது போதும். இன்னும் இரண்டு நாட்களுக்கு நீங்கள் இருவரும் வெளியே தலையைக் காட்டாதீங்க. எங்கள் தீவுக்குப் போனபிறகு மீதி விஷயங்களைப் பார்த்துக்கொள்ளலாம்.”

அதற்குள் அங்கே பிளாக் ஈகிள் வந்தான்.

“இதெல்லாம் என்ன?”

“இதில் என் தவறு எதுவுமே இல்லை” என்றார் பூஷணம்.

“திருட்டுத்தனமாய் நாட்டிற்குள் நுழைந்திருக்கிறாய் என்று தெரிந்தும் பாஸ்போர்ட் இல்லாமல் ஊர் சுற்றுவது தவறு இல்லையா? இனி வாயைத் திறக்காதே” என்றான் அவனை துச்சமாய் மதிப்பது போல்.

பிறகு மகன் பக்கமாய்த் திரும்பி, “உனக்கு முன்பே சொன்னேன். இவனைக் கத்தரித்துக்கொள். உனக்கு இந்த பெண்மீது இஷ்டம். அவ்வளவுதானே.

சந்தோஷமாய் அனுபவி. இல்லாவிட்டால் கல்யாணம் பண்ணிக்கொள். அதற்கு இந்தக் கிழவன் எதற்கு?" என்றான்.

அம்சரேகா மூச்சை இழுத்து விட்டுக் கொண்டாள். அதுவரையில் ஒரு பார்வையாளரைப் போல் நிகழ்ந்து கொண்டிருந்ததை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தவள் இனி தான் பேச வேண்டிய தருணம் வந்து விட்டதை உணர்ந்தாள். நேத்ரா இங்கேயே தனக்கு வெகு அண்மையில் இருக்கிறான் என்ற எண்ணம் அவளுக்கு அபரிதமான தைரியத்தையும் உற்சாகத்தையும் தந்தது.

"நீங்கள் எல்லோரும் என்ன நினைத்துக்கொண்டு இருக்கீங்க? என்னைப்பற்றி என்னதான் நினைகிறீங்க? நான் என்ன கடைச்சரக்கு என்றெண்ணிக் கொண்டீர்களா? என் தந்தை உனக்கு என்னை லஞ்சம் தர எண்ணியிருந்தாரா? நீ என்னவோ அதை வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்து இருந்தாயா?"

"அம்மா அம்சரேகா!"

அவள் அதைப் பொருட்படுத்தாமல், "மிஸ்டர் க்யூ! இதயம் வெடித்து விடாமல் ஜாக்கிரதையாய் நான் சொல்வதைக் கேள். நானும் நேத்ராவும் காதலிக்கிறோம். அவருக்காக சாவதற்குக் கூட நான் துணிந்து விட்டேன். அவ்வளவு உயர்ந்தது என் காதல். இப்போ சொல்லு. எச்சில் உணவை சாப்பிட உனக்கு சம்மதம்தானா?"

"எச்சிலையா?"

"ஆமாம். எனக்கு இப்போது நாலாவது மாதம்."

பூஷணத்தின் முகத்தில் திடீரென்று ஒரு வாளி குளிர்ந்த நீரை வாரி இறைத்தற்போல் இருந்தது. க்யூ சலனம் ஒடுங்கி நின்றுவிட்டான்.

அவ்வறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் சூழ்ந்தது. எல்லோருக்கும் முன்னால் தேறிக்கொண்டது ப்ளாக் ஈகிள்தான்.

"அப்படி என்றால் பூஷணம் உயிரோடிருப்பதற்குத் தேவையான கடைசி அருகதையைக் கூட இழந்து விட்டான் என்று சொல்லு" என்றான் மெதுவாய்.

பூஷணத்துக்கு அந்த வார்த்தைகள் காதில் விழவில்லை. மகள் சொன்ன செய்தியின்

அதிர்ச்சியிலிருந்து அவர் இன்னும் மீளவில்லை. "என்னது? நீ... நோ... உனக்கு.... உனக்கு" என்று வார்த்தைகளை முடிக்க முடியாமல் தடுமாறினார்.

அம்சரேகா பதில் பேசவில்லை. அதற்குள் ஒரு ஆள் அங்கே வந்து பிளாக் ஈகிளிடம் ஒரு கடிதத்தைத் தந்தான். அவன் அதைப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்தபோது பூஷணம், "அதென்னது?" என்றார்.

"நேத்ராவுக்கு உன் மகள் எழுதிய கடிதம். ஓட்டலில் தங்கி இருக்கும் உன் மகள் பதற்றமடைந்து இந்திய தூதரகத்திற்குப் போன் பண்ணியோ, லெட்டர் எழுதியோ ரகளையைக் கிளப்பி விடப் போகிறாளோ என்று சந்தேகப்பட்டு ஆட்களை ரகசியமாய் காவல் போட்டிருந்தேன். இதோ இந்தக் கடிதத்தை ஒரு மணி நேரத்திற்கு முன்னால் தபால் பெட்டியில் போட்டிருக்கிறாள். என்னம்மா? நேத்ராவை அந்த அளவுக்குக் காதலிக்கிறாயா?"

"ஆமாம். அதனால்தான் சாகத் தீர்மானித்துக்கொண்டு அந்தக் கடிதத்தை எழுதினேன்."

"ரொம்ப அப்பாவியாக இருக்கிறாயே? நேத்ரா கேர் ஆஃப் சீக்ரெட் சர்வீஸ், இந்தியா என்றால் கடிதம் போய்ச் சேர்ந்து விடுமா? கடிதத்தை மட்டும் அபாரமாய் எழுதியிருக்கிறாய். அந்தக் குருடன் யார்? கவிஞன் மைக்கேல் ஜாக்ஸன்தானே?"

"இல்லை. ஜான் மில்டன்."

"ஆ... அந்த ஜான் மில்டன் எழுதியது போலவே எழுதியிருக்கிறாய். அவனுக்காக நீ சாவதும், உன் வயிற்றில் வளருகிற சின்னக் குழந்தையைக் கொல்வதும் அத்தனை நல்ல காரியம் இல்லை. ஆனாலும் உன் கவிதையைப் படித்தால் எனக்கே உன்னைக் காதலிக்கணும் போல் இருக்கு."

"உங்கள் யாருக்குமே காதல் என்றால் என்னவென்றுகூடத் தெரியாது. எங்கள் நாட்டை ஏமாற்றிவிட்டீர்கள். எங்கப்பாவை ஏமாற்றி விட்டீர்கள். சுயநலம் இருக்குமிடத்தில் அன்பு இருக்காது."

"உங்கப்பாவை நாங்கள் ஏமாற்றினோமா? ஹா. ஹா. சரி அப்படி என்றால், பூஷணம்! ஒரு நிமிஷம் வெளி

அறைக்குப் போ. உன் மகளிடம் தனியாய் பேச வேண்டும்.”

“என்ன பேச வேண்டும்?”

“கற்பழிக்க மாட்டேன் போதுமா. இருவரும் போங்கள்.”

க்யூவும், பூஷணமும் போய் விட்டார்கள்,

ஒரு நிமிஷத்திற்குப் பிறகு ப்ளாக் ஈகிள் அந்த அறைக்குத் திரும்பி வந்தான்.

“உன் மகள் நேத்ராவை மிக ஆழ்ந்து நேசிக்கிறாள். நேத்ரா இந்த நாட்டில்தான் இருக்கிறான் என்று அவளுக்குத் தெரியாது. ஒருமுறை தற்கொலை பண்ணக் கூட முயற்சி பண்ணியிருக்கிறாள். இதுதான் நான் இந்த நிமிஷம் கண்டுபிடித்தது. பூஷணம்! நான் ஒரு யோசனை சொல்லுகிறேன், நேத்ராவைப் பிடிப்பதற்கு,”

“என்ன?”

“உன் மகள் எப்படியும் தான் சாகப் போவதாய் கடிதம் எழுதி வைத்திருக்கிறாள். ஜான் மில்டன் ஸ்டைலில் இருக்கு அது. அதை நாம் அவள் கையெழுத்தில் எல்லா தினசரி பத்திரிகைகளிலும் பிரசுரிக்கச் செய்வோம். நேத்ரா உன்னைப் பிடிப்பதற்கு டி.வியை பயன்படுத்தினான் என்றால் அவனைப் பிடிப்பதற்கு நாம் நியூஸ் பேப்பர்களை பயன்படுதிப்போம். அம்சரேகாவைக் கொன்று மயானத்திற்கு எடுத்துச் செல்வோம். நேத்ரா கண்டிப்பாய் வருவான்.”

“வாட்?” கத்திவிட்டார் பூஷணம். பிளாக் ஈகிள் அவர் கத்தலைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து சொன்னான்.

“எப்படியும் கடிதம் எழுதி வைத்திருக்கிறாள் என்பதால் நம்மேல் கேஸ் வராது. அவள் இறந்தச் செய்தி, இந்தக் கவிதை, குறிப்பிட்ட டயத்தில் இறுதிச்சடங்குகள், இதெல்லாம் பேப்பரில் போட்டு விட்டால் நேத்ரா கண்டிப்பாக ஆஜராவான். அப்போது அவனைக் கொன்று விடலாம்.”

“உங்களுக்கு புத்தி முழுவதுமாக பிசகி விட்டது. நேத்ராவைக் கொல்லுவதற்காக அம்சரேகாவைப் பலி கொடுப்பார்களா?”

“பெரிய மீனைப் பிடிப்பதற்காகச் சின்ன இரையைப் பயன்படுத்துவது சரித்திரத்தில் காலம் காலமாய் நிகழ்ந்து வருவதுதானே. அதோடு நாம் கொல்லாவிட்டாலும் அந்தப் பெண் எப்படியும் நேத்ராவுகாகச் சாகப் போவதாய்ச் சொல்லுகிறாள் இல்லையா?”

“அதற்காக என் மகளைக் கொல்லப் போகிறீர்களா?”

“உன் மகள் மட்டும்தானா? ஐந்து நிமிஷத்திற்கு முன்னாடி வரையிலும் அவள் என் மருமகள் கூடத்தான். அந்தப் பெண் கர்ப்பம் என்று தெரிந்த பிறகுதானே என் மகன் அவள்மேல் விரக்தியை ஏற்படுத்திக் கொண்டான். அது மட்டும் இல்லாதிருந்தால் என்னை எதிர்த்தாவது அவளை விவாகம் பண்ணிக்கணும் என்று ஆர்வத்துடன் இருந்தான். நான் ஏற்கனவே சாடிஸ்ட்! என் மகனை என்னிடமிருந்து பிரிக்கக் கூடிய அளவுக்கு சக்தி படைத்த இந்தப் பெண் மீது எனக்கு எவ்வளவு வெறுப்பு இருந்திருக்கணும்? அதையெல்லாம் விட்டுத் தள்ளு. உன் மூலமாய்தானே நேத்ரா இந்த நாட்டுக்கு வந்தான்? உன்னை அடையாளம் தெரிந்துகொண்டுதானே டி.வி. அறிவிப்பு தந்தான்? நீ இரும்பைப் போன்றவன். நேத்ரா காந்தத்தைப் போன்றவன். காந்தம் உன்னை எங்கேயிருந்தாலும் பிடித்து இழுத்துக்கொண்டு விடும். இப்போ நமக்கு இருப்பது ஒரே ஒரு வழிதான். இரும்பையாவது விட்டு விட வேண்டும். அல்லது காந்தத்தையாவது உபயோகம் இல்லாமல் செய்யவேண்டும். நீ எங்களோடு இந்த ஆபரேஷனில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றால் நேத்ராவை நிரந்தரமாய் அப்புறப் படுத்த வேண்டும். இந்த விஷயத்தை நீ ஒப்புக்கொள்கிறாய் இல்லையா? முட்டாளான உன் மகள் ஒரு பைத்தியக்காரத்தனமான லெட்டரை எழுதி நம் காரியத்தை இன்னும் சுலபமாக்கிவிட்டாள். அப்படிப்பட்ட கடிதத்தைப் படித்த எந்த ஆணுமே காதலியின் இறுதிச்சடங்குகளுக்கு ஆஜராகாமல் இருக்கமாட்டான். இப்போ சொல்லு. மகள் என்ற பந்தததைக் கூட விட்டுவிட்டு சுதந்திர ஆளாய்

எங்களோடு கைக்குலுக்குகிறாயா? மகளுக்கு பிரசவம் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாயா?”

“ஸ்டாப் தி நான்சென்ஸ்” கத்தினார் பூஷணம்.

“அப்படி என்றால் சரி. ஐ வில் ஸ்டாப் தி நான்சென்ஸ்” என்று முன்னோக்கி அடியெடுத்து வைத்தான் பிளாக் ஈகிள்.

சரியாய் ஒரு நிமிஷத்திற்குப் பிறகு பூஷணம் நாற்காலியில் உட்கார வைக்கப் பட்டிருந்தார். அவரால் எழுந்திருக்க முடியாது. சிறிய பெல்ட்டால் கட்டப் பட்டிருந்தார்.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு சிறிது ஷாக் ஏற்பட்டது. மிகச் சிறிய ஷாக். 10 வோல்ட் அது. அது அவரை அவ்வளவாய் பாதிக்கவில்லை.

பிறகு பத்து வினாடிகளுக்கு 120. அதற்குப் பிறகு 130.

அப்போது பிளாக் ஈகிள் சொன்னான். “பத்து வினாடிகளுக்கு பத்து வோல்டுகள் வீதம் அதிகரித்துக்கொண்டே போகும். எந்த வோல்டேஜில் மனிதன் இறந்து போவான் என்று பிரயோகம் பண்ணிப் பார்ப்பது ரொம்ப நன்றாயிருக்கும் இல்லையா?”

140 வோல்ட் ஷாக் அடித்தது

150

பிறகு

180.

பூஷணம் நாற்காலியில் தூக்கிவாரிப் போடபட்டார்.

பிளாக் ஈகிள் நிதானமாய் சொன்னான்.

“நீ பெரிய வியாப்பாரப்புள்ளி. எதற்காக எதைக் கைவிடுவது என்று நன்றாய்த் தெரிந்தவன்தான் உண்மையான வியாபாரி. எப்படியும் உன் உயிர் போகப் போவது உறுதி. எந்த குப்பைத் தொட்டிக்குப் பக்கத்திலாவது பிரசவித்து உன் மகள் உயிரை விடப் போவது கூட உறுதிதான். அப்படியிருக்கும்போது இது ஒரு சின்ன பிசினஸ் முடிவு. அவ்வளவுதான். உன் மகளின் சாவுக்கு முன்பாகவே உன் உயிர் போய் விட்டால் நல்லது

என்கிறாயா? இரண்டு பேரின் உயிரும் போவது நிச்சயம் எனும் போது இரண்டையும் இழப்பது நல்லதா? ஒன்றை மட்டும் இழப்பது நல்லதா? வியாபார மேதையே யோசி.”

190 வோல்ட்

200 வோல்ட்டுகள். தன் உயிரை இழப்பது நல்லதா? மகளின் உயிரை எடுப்பது நல்லதா? 220.. 220... 230

பூஷணம் லேசாய் கத்தினார்.

“இனி உனக்கு அதிக நேரமில்லை. இன்னும் நான்கே இன்டர்வெல்ஸ். அவ்வளவுதான்.”

“விடுங்கள். என்னை விட்டு விடுங்கள்.”

பிளாக் ஈகிள் முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான். ஆட்டோமேட்டிக் டிவைஸ் ரேஞ்ச் மெதுவாய் ஏறிக்கொண்டே இருந்தது.

பிளாக் ஈகிள் சொன்னதைச் செய்து காட்டி விடுவான் என்று புரிந்தது. தன் உயிர் போகப் போவது உறுதி என்று புரிந்துவிட்டது. அப்பொழுது பூஷணம் கத்தினார். “நீங்கள் சொன்ன வேலையை செய்கிறேன். என்னை விட்டுவிடுங்கள்.”

பிளாக் ஈகிள் அவர் கட்டுகளை அவிழ்த்துவிட்டு, கையில் துப்பாக்கியைத் தந்தான். “இதில் ஒரு குண்டு இருக்கிறது. உன் மகளை உள்ளே வரவழைக்கிறேன். ஒரே ஷாட். நெற்றியில் சுட்டுவிடு. ஒரு வினாடி யோசித்தாலும் சரி, உன் உயிர் காற்றில் கலந்து விடும்.”

பூஷணம் துப்பாக்கியைக் கையில் பிடித்துக்கொண்டார். பிளாக் ஈகிள் சைகை காட்டியதுமே அம்சரேகா உள்ளே வந்தாள். அவள் நெற்றியை நோக்கிக் குறி பார்த்து ட்ரிக்கரை அழுத்தினார்.

## 39

“பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து வந்தாற்போல் வந்து சேர்ந்த வேன் நம்பர் சரியான நம்பராக இருக்கக் கூடுமானால் அது ரீஜென்ட் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனியைச் சேர்ந்தது” என்றாள் பிரதிமா.

“அந்த பேக்டரியில் நுழைந்துதான் அந்த வேன் காணாமல் போய் விட்டது. அந்த கம்பெனிக்கும், ஏஜெண்ட் க்யூவுக்கும் ஏதோ தொடர்பு இருப்பது இப்பொழுது உறுதியாகி விட்டது. இந்த ஊர் செய்தித் தாள் இருக்கிறதா?”

எதற்கு என்று கேட்காமல் பிரதிமா எடுத்துக் கொடுத்தாள்.

பப்ளிக் போன பூத் எங்கெங்கே இருக்கிறது என்று பார்த்து வைத்துக்கொண்டு, போனை அருகில் இழுத்து கொண்டான். ரீஜென்ட் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனிக்கு போன் செய்தான்.

“ஹலோ!” மறுமுனையில் கேட்டது.

“செக்யூரிட்டி சீஃ ப் வேண்டும்.”

இரண்டு நிமிடங்கள் கழித்து ஒலித்தது. “செக்யூரிடீ சீஃ ப் ஹியர்.”

“ஐந்து நிமிஷங்களில் கிளம்பி ஈஸ்ட் கோஸ்ட்க்கு வா. அர்ஜென்ட்.” நேத்ரா சொன்னான்.

“யார் பேசுவது?”

“டாமிட்! நான்தான் ஏஜெண்ட் க்யூ.”

மறுமுனையிலிருந்து “கோட் ப்ளீஸ்” என்று கேட்பதற்குள் போனை வைத்துவிட்டான். எழுந்து, “புறப்படு” என்று சொல்லிவிட்டு, தன் ப்ரீஃப்கேஸிலிருந்து சிறிய டேப்ரிகார்டர் ஒன்றை வெளியே எடுத்தான். நெருப்புப்பெட்டி அளவிற்கு இருந்தது அது.

பிரதிமா அவனுடைய செயல்களை கவனித்துக் கொண்டிருந்தாளே தவிர கேள்வி கேட்கவில்லை.

நேத்ரா காரை விட்டு இறங்கி டெலிபோன் பூத்துக்குள் நுழைந்தான். ரிகார்ட் பட்டனை அழுத்தி, டேப்ரிகார்டரை வெளியில் தெரியாமல் அமர்த்திவிட்டு, திரும்பவும் வந்து காரில் உட்கார்து கொண்டான். பிரதிமா கொஞ்சம் தூரம் மேலும் சென்றாள். பீச்சில் அங்காங்கே ஜோடிகள் கண்ணில் பட்டார்கள். இருவரும் இறங்கி மணலில் அமர்ந்து கொண்டார்கள். நேத்ரா சீரியஸ் ஆக இருந்ததை கவனித்தாள் அவள்.

நேத்ராவின் டென்ஷனுக்கு காரணம் இருந்தது. இருட்டில் தான் எய்த அம்பு சரியாய் போய் தைக்குமா

என்ற சந்தேகத்தில் இருந்தான் அவன். ரீஜெண்ட் அஸ்பெஸ்டாஸ் கம்பெனியோடு உண்மையிலேயே க்யூவுக்கும், பிளாக் ஈகிளுக்கும் சம்பந்தம் இருந்திருந்தால், அந்தக் கம்பெனியின் செக்யூரிட்டி சீஃப்க்கு அவர்களைத் தெரிந்திருக்கும். ஆனால் தான் குரலை மாற்றி க்யூ போல் பேசியபோது அந்த செக்யூரிட்டி சீப் ரியாக்ஷன் எப்படி இருந்தது என்று தெரியாது. க்யூ மட்டும் அங்கேயே இருந்திருந்தால் தன்னுடைய திட்டம் முழுவதும் பாழாகி விடும்.

நேத்ரா வழிமேல் விழி வைத்தபடி உட்கார்ந்திருந்தான். பத்து நிமிஷங்களுக்கு பிறகு ஒரு கார் வந்து அங்கே நின்றது. அதிலிருந்து ஒரு ஆஜானபாகுவான ஆள் இறங்கினான்.

நேத்ரா மூச்சை இழுத்து அடக்கிக்கொண்டான். அவன்தானா கம்பெனி செக்யூரிட்டி சீஃப்!?

டெலிபோன் பூத்தில் பொருத்தப்பட்டிருந்த டேப் காசெட் நாற்பத்தைந்து நிமிஷங்கள் இயங்கக் கூடியது. அதற்குள் அரைமணியாகி விட்டது. செக்யூரிட்டி சீஃப் இன்னும் வரப்போகும் ஆளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

மேலும் ஐந்து நிமிஷங்கள் ஆயிற்று.

செக்யூரிட்டி சீஃப் அலுப்போடு கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே டெலிபோன் பூத்திற்குள் நுழைந்தான்.

நேத்ராவும் பிரதிமாவும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அவன் பூத்திலிருந்து வெளியே வந்தான்.

அவன் முகம் வாடியிருந்தது. கலவரம் தென்பட்டது. பதற்றத்துடன் காரில் ஏறிக்கொண்டு போய் விட்டான்.

நேத்ரா டெலிபோன் பூத்துக்குள் நுழைந்து டேப் ரிகார்டர் பட்டனை அணைத்தான்.

இருவரும் ஓட்டலுக்கு வந்ததும் அதைப் போட்டுக் கேட்கத் தொடங்கினார்கள். டி.வி.யில் செய்திகள் வெளி வந்து கொண்டிருந்தன.

‘கிர்க்... கிரிஈக்..” டயல் பண்ணிய சத்தம். “ஹலோ ஹெயில் பிளாக் ஈகிள். நான் ஆல்பர்ட் பேசுகிறேன்.

க்யூவுக்காக அரைமணியாய் இங்கே எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு இருக்கிறேன். எஸ்.. வரச் சொன்னார்.”

“......”

“மை காட்! சாரி. நோ.. எந்த பிராப்ளமும் இல்லை. இல்லை இல்லை. என்னை யாருமே பின்தொடரவில்லை. ஷ்யூர். பார்த்துக்கொள்கிறேன்.”

போனை வைத்து விட்ட ஓசை.

நேத்ரா ரிகார்டரை அணைத்து விட்டான். ஓட்டல் டி.வி. யில் இன்னும் செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. பிரதிமா செய்வதறியாது, “இந்த உரையாடலினால் நமக்கு எந்த லாபமும் இல்லை. நாம் இவனை பின்தொடர்ந்து போகலாமா இனிமேல்” என்று கேட்டாள்.

“அதனால் எந்த லாபமும் இருக்காது என்று தோன்றுகிறது. நான் ஊகிப்பது சரியாயிருந்தால்...”

“ஊகிப்பது சரியாயிருந்தால்?”

“ஒன்றுமில்லை.” நேத்ரா திரும்பவும் முதலிலிருந்து டேப்பைப் போட்டான்.

டெலிபோன் டயல் பண்ணிக்கொண்டிருந்த சப்தம்.

கிரிக் --- நம்பர் 2 அது.

கிரிஈக் 4

கிரிக் 2

இதே போல் மற்ற நம்பர்களையும் கண்டு பிடித்தான்.

“செக்யூரிட்டி சீஃப் டயல் பண்ணிய நம்பர் 24261810” என்றான் நேத்ரா.

பிரதிமா அவனைத் திகைப்படைந்துப் போய் பார்த்தாள். சீக்ரெட் ஏஜெண்டுகளின் புத்திசாலித்தனத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ‘நேத்ரா நேத்ராதான்’ என்றெண்ணிக்கொண்டாள் மனதிற்குள். ‘புத்திசாதுரியத்தைப் பார்த்து எந்தப் பெண்தான் உன்மேல் காதல் கொள்ள மாட்டாள்?’

டி.வி.யில் செய்திகள் இன்னும் வெளிவந்து கொண்டிருந்தன. ஆல்பர்ட்டின் போட்டோ தென்படவே இருவரும் அந்தப் பக்கமாய்ப் பார்த்தார்கள். உடைந்த

காரின் கண்ணாடிக்கிடையே அவன் முகம் தென்பட்டுக் கொண்டிருந்தது.

“மெயின் ரோடில் நிகழ்ந்த விபத்தில் ஒரு ஆள் மரணமடைந்தான். ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனியின் செக்யூரிட்டி சீஃப் என்று அவனைப் போலீசார் அடையாளம் கண்டு கொண்டார்கள்.”

“மை காட்!” என்றாள் பிரதிமா.

“எதிரிகள் மிகச் சுறுசுறுப்பாய் செயல்பட்டு வருகிறார்கள். ஆல்பர்ட்டை நாம் அடையாளம் தெரிந்துகொண்டு விட்டோம் என்று தெரிந்ததுமே அவனைக் கொன்று விடுவார்கள் என்று ஊகித்தேன். அதனால்தான் என் ஊகம் சரியாயிருந்தால் என்றேன்.”

பிரதிமா பதில் பேசவில்லை. அவள் மிகவும் ஜூனியர். உற்சாகம் ஒன்றுதான் இருந்ததே தவிர இந்த உபாயங்கள், மின்னல் வேகத்தில் எதிர் உபாயம் இதெல்லாம் அதிகமாய் அனுபவம் இல்லை.

நேத்ரா போனை அருகில் இழுத்துக்கொண்டு 242621810க்கு டயல் செய்தான்.

“போர்ட் ஸ்டேஷன்” என்று கேட்டது. கப்பலில் சரக்குகளை ஏற்றும் இடம் அது.

நேத்ராவின் முகம் வாடிவிட்டது. போனை வைத்துவிட்டு திரும்பவும் ஒரு முறை டேப் ரிகார்த்டரில் நம்பரை சரிபார்த்தான். அதே நம்பர் தான். யோசனையில் ஆழ்ந்தான்.

அந்த அறையில் ஆழ்ந்த நிசப்தம் ஏற்பட்டது.

நேத்ரா ஏதோ பொறி தட்டினாற்போல், திரும்பவும் அதே நம்பருக்கு டயல் பண்ணினான். “போர்ட் ஸ்டேஷன்” என்று மறுமுனையிலிருந்து கேட்கவே, “ஹெயில் பிளாக் ஈகிள்” என்றான்.

“ஆபரேஷன் நம்பர் ப்ளீஸ்.”

என்ன சொல்வதென்று தெரியவில்லை. “டு” என்றான்.

“கங்கிராசுலேஷனஸ்! இப்பத்தான் செய்திகளைக் கேட்டோம். ஆல்பர்ட் இறந்தது ஆக்சிடென்ட் மூலம்தான் என்று போலீசார் நம்பி விட்டார்கள். குட் வர்க்.”

“தாங்க்யூ.”

"ஆப்ரேஷன் நம்பர் 10. விமான நிலையத்திற்குப் போ. இன்னும் அரைமணியில் பிரோபசர் "சோ" வந்து இறங்கப் போகிறார். அவரைக் அழைத்துக்கொண்டு வந்துவிடு. மாலையில் இங்கிருந்து எல்லோரும் போய் விடப் போகிறோம். புரிந்ததா?"

"எஸ்."

"ஜாக்கிரதை. பிரோபசர் சோ ரொம்ப முக்கியமான ஆள். ஆபரேஷன் நம்பர் 10. முடித்துவிடு."

"சரி."

போனை வைத்துவிட்டு பிரதிமாவைப் பார்த்துச் சிரித்தான்.

பிரதிமா காற்றாய் வந்து அவனை அணைத்துக்கொண்டாள். "ஹாட்ஸ் ஆஃப் டு யு. நிஜமாய் எனக்குப் புரியவே இல்லை. ஹெயில் பிளாக் ஈகிள் என்பது அவர்களின் கோட் வார்த்தை போலும்."

நேத்ரா அவளிடமிருந்து விடுவித்துக்கொண்டு, "நான் விமான நிலையத்திற்குப் போகிறேன். அதற்குள் நீ இந்த நம்பருக்கும் போர்ட் ஸ்டேஷனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கு என்று கண்டுபிடி. திரும்பவும் இங்கேயே சந்திப்போம்" என்றான். பிறகு, "இதோ பார். இந்த இன்ஜெக்ஷனை ரெடி பண்ணி வை" என்றான்.

எதற்கு என்று கேட்காமல் அவள் தலையாட்டினாள்.

பத்து நிமிஷத்திற்குப் பிறகு அவன் விமான நிலையத்தில் சோ என்ற போர்ட்டைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்தான்.

அரைமணிக்குப் பிறகு ஹாங்காங்கிலிருந்து வந்த விமானம் இறங்கிற்று. வெளியே வந்து கொண்டிருந்த பயனிகளுள் ஒரு ஆள் அந்த போர்டைப் பார்த்துவிட்டு அருகில் வந்தான்.

"ஹெயில் பிளாக் ஈகிள்" என்றான் நேத்ரா அவனுக்கு மட்டுமே கேட்கும் விதமாக.

சோவின் முகம் மலர்ந்தது. "ஹெயில் பிளாக் ஈகிள். நீங்கள் வருவீங்களோ மாட்டீர்களோ என்று பயந்துகொண்டு இருந்தேன்."

"நீங்கள் மிக முக்கியமான ஆள். வராமல் எப்படி இருப்போம். கிளம்புங்கள், போவோம்."

சோ பிரிட்டிஷ் சீன ரத்தம் கலவையில் பிறந்தவன் போல் இருந்தான். குள்ளமாய் இல்லை. அதிகமாய் பேசும் பழக்கம் உள்ளவன் போலிருந்தது. காரில் லொடலொடவென்று பேசிக்கொண்டே இருந்தான்.

“நான் கண்டுபிடித்த டிவைஸ் உங்களுக்கு எவ்வளவு உபயோகப் படும் தெரியுமா? எந்த ராடாருமே உங்கள் விமானத்தைப் பிடித்து விட முடியாது. பத்து நிமிஷத்தில் இந்த டிவைஸ் உதவியால் நாடு முழுவதையுமே நாசம் பண்ணிவிட முடியம் நீங்கள்.”

“குட்!”

“இதைக் கண்டு பிடிப்பதற்கு எனக்குப் பத்து வருஷம் பிடித்தது. இதை அமெரிக்கா போன்ற நாட்டிற்கு விற்றால் பத்து லட்சம் டாலர்கள் கிடைக்கும்.”

“என் எஜமானர் உங்களுக்கு கோடி டாலர்கள் தருவார் மிஸ்டர் சோ.”

“அதனால்தான் உங்களுக்கு விற்கத் துணிந்தேன். உங்களோடு சேர்ந்துக்கொள்ளவும் துணிந்தேன்” என்றான் சோ.

நேத்ரா மிகச் சாதாரணமாய், “எங்கள் ஆட்கள் யாருமே உங்களை இதுக்கு முன்னாடி பார்த்ததில்லை என்று நினைக்கிறேன்” என்றான்.

“இல்லை. ஹாங்காங்கில் உள்ள உங்கள் ஏஜெண்ட் என்னைச் சந்தித்தான். இந்தச் செய்தியைச் சொன்னதுமே ஆச்சரியமடைந்து விட்டான்.”

“உலகத்தில் எங்கே யார் நல்ல பரிசோதனைகளைப் பண்ணினாலும், எங்கள் பிளாக் ஈகிளுக்குத் தெரிந்து விடும் மிஸ்டர் சோ. உடனே அதை விலை கொடுத்து வாங்கி விடுவார்.”

“நானே நேரில் பார்த்துப் பேசலாம் என்றுதான் வருகிறேன். புரோக்கர்கள் எனக்குப் பிடிக்காது.”

“ரொம்ப நல்ல தீர்மானம் இது.”

“இந்த உலகத்தையே தன் கையில் எடுத்துக் கொண்டதுமே அமெரிக்காவைப் பரிசாக கேட்கலாம் என்று இருக்கிறேன்.”

“கண்டிப்பாக கேளுங்கள். தனக்கு உதவி புரிந்த சயின்டிஸ்டுகளை சுவர்க்கத்திற்கும் மேம்பட்ட

உன்னதமான சிகரத்திற்கு அனுப்பி வைப்பது பிளாக் ஈகிளின் வழக்கம்” என்று நேத்ரா காரை நிறுத்தினான்.

இருவரும் உள்ளே போனார்கள். உள்ளே பிரதிமா நேத்ராவிடம் தமிழில் சொன்னாள். “எல்லா விஷயத்தையும் கண்டுபிடித்து விட்டேன். இந்த போன் நம்பர் போர்ட் ஸ்டேஷன் நம்பர் இல்லை. அங்கிருந்து கப்பலுக்கு கனெக்ஷன் இருக்கிறது. அந்த கப்பலின் பெயர் வாட்டர் டெவில்! நான் ஊகிப்பது என்னவென்றால் அதுதான் அவர்களின் இருப்பிடமாய் இருக்கும் என்று. இன்றைக்கு அவர்கள் புறப்பட்டுப் போகப் போவது கூட அந்த கப்பலில்தான் என்று நினைக்கிறேன்.”

“ஆமாம். நமக்கு அதிக நேரமில்லை. எங்கே அந்த இன்ஜெக்ஷன்?”

அவள் தந்தாள். அதுவரை அவ்விருவரின் உரையாடலையும், நடவடிக்கைகளையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த சோ ,”இதெல்லாம் என்ன?” என்று கேட்டான்.

“அக்காலத்து சீக்ரெட் ஏஜெண்டுகள் ஆபத்தான சூழ்நிலைகளில் எதிரிகளின் கையில் சிக்கிக்கொள்ள விரும்பாத போது சயனைடை விழுங்கி இறந்து போவார்களாம். இப்போது சயின்ஸ் முன்னேறிவிட்ட பிறகு இந்த இஞ்சக்ஷன்கள் வந்து விட்டன. இதைப் போட்டுக்கொண்டால் கடந்த காலம் எதுவுமே ஞாபகம் இருக்காது. நரம்புகளில் துரிதமாய் வேலை பண்ணக் கூடிய மருந்து இது. ஒருக்கால் எதிரிகளின் கையில் சிக்கிக்கொண்டாலும் அவர்களுக்கு எந்த லாபமும் இராது. அதற்குள் சீக்ரெட் ஏஜெண்ட் நடைபிணமாய் மாறிப் போயிருப்பான். அனாவசியமாய் சீக்ரெட் ஏஜென்டின் உயிரை எடுக்க வேண்டாம் என்று ஏதாவது ரகிசய காரியங்களுக்காக எதிரி நாட்டிற்கு அனுப்பி வைக்கும்போது இந்த இஞ்சக்ஷனைக் கையோடு வைத்துகொள்ளச் சொல்லி கொடுத்து அனுப்புவாங்க.”

“ஆமாம். நான் சயின்டிஸ்ட் தான். எனக்கு இந்த இஞ்சக்ஷன் விஷயம் தெரியும். ஆனால் இதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்றீங்க?”

“எங்கள் நாடு எனக்குத் தந்த இந்த இன்ஜெக்ஷனை உங்கள் மீது பயன்படுத்த வேண்டியிருப்பதற்கு வருந்துகிறேன்.”

“வாட்... யார் நீ?’

“எந்த நாடு எதிரியின் உயிர்களுக்குக் கூட மதிப்பளிக்குமோ அந்த நாட்டின் சீக்ரெட் ஏஜெண்ட் நான். என் பெயர் நேத்ரா” என்றான், சோ வின் கைகளை அழுத்தமாய்ப் பிடித்துக்கொண்டே. சோ திமிறிக் கொண்டிருந்தான்.

“புத்திசாலித்தனத்தை மனித அழிவுக்காகப் பயன்படுத்துகிற உன்னைப் போன்றவனைக் கண்ட இடத்திலேயே கொல்ல வேண்டும். ஆனால் எனக்கு இஷ்டமில்லை. உன் புத்திசாலிதனத்தைக் கொல்லுகிறேன். என்னை மன்னித்துவிடு” என்று இன்ஜெக்ஷனைத் தந்தான். இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு சோ விற்கு நினைவு தப்பி விட்டது. திரும்பி நினைவு வந்தாலும் தான் யார் என்று கூட அவனுக்குத் தெரியாது.

பிரதிமா அவனை இரக்கத்துடன் பார்த்தாள். அவனது தீய ஆசைக்குத் தூக்கில் ஏற்ற வேண்டியது. ஆனால் கேசு போடுவது கஷ்டம். வேறு யாராவதாக இருந்தால் அவனைக் கொன்று போட்டிருப்பார்கள். ஆனால் நேத்ரா அவன் ஃபார்முலா காகிதங்களை எடுத்துக்கொண்டு அவனை மூளையை மட்டும் செயலிழக்கச் செய்தான்.

“வா, என்னை வாட்டர் டெலிலுக்கருகில் இறக்கி விடு” என்றான் நேத்ரா.

பிரதிமா திடுக்கிட்டு, “நீ போகிறாயா?” என்றாள்.

“ஆமாம். சோ உருவில் நான் போகிறேன்.”

“ஆனால்...”

“இனி வாதாட நேரமில்லை பிரதிமா. உன் சந்தேகம் எனக்குத் தெரியும். அந்தக் கப்பலில் பூஷணமாவது, க்யூவாவது இருந்தால் என்னைக் கொன்று விடுவார்கள். அங்கே யாராவது இதற்கு முன்பே புரொபசரைப் பார்த்திருந்தால்கூட என் உயிருக்கு ஆபத்துதான். இதெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் இன்னும்

கொஞ்ச நேரத்தில் இந்த நாட்டை விட்டுப் புறப்படப் போகிற வாட்டர் டெவிலைப் பார்த்துகொண்டு சும்மாயிருந்து விட முடியாது என்னால். வா, போவோம்.”

## 40

“கோட் ப்ளீஸ்.”

“ஹெயில் பிளாக் ஈகிள்”

“யார் நீங்க?’

“புரொபசர் சோ.”

“உள்ளே வாங்க.”

விசாலமான கப்பல் அது நேத்ரா மரப்படிகளில் ஏறி உள்ளே நுழைந்தான். உள்ளே மிக நவீனமாய் இருந்தது.

“வெல்கம் புரொபசர் சோ” என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். ஆஜானுபாகுவான ஒரு ஆள் கையை நீட்டிக்கொண்டே வந்தான். “நான்தான் பிளாக் ஈகிள்.”

நேத்ரா அவனை ஏற இறங்கப் பார்த்தான். அவன் முகமெல்லாம் வெந்து போய் விகாரமாய் இருந்தது. சிரிக்கும் கண்களுக்குப் பின்னால் குரூரம் தெரிந்தது. ஜேபியிலிருந்து துப்பாக்கியை எடுத்து அவனை அவ்விடத்திலேயே சுட்டுத்தள்ளிவிட வேண்டும் என்ற எண்ணத்தை வலுகட்டாயமாக அடக்கிக்கொண்டான். அவன் நேத்ராவின் கையைக் குலுக்கிவிட்டு உள்ளே அழைத்துச் சென்றான். அதிர்ஷ்டவசமாய் அவனை அடையாளம் தெரிந்து கொள்வதற்கு ஏஜெண்ட் க்யூவோ, பூஷணமோ அவ்விடத்தில் இல்லை.

*****

அம்சரேகாவுக்கு நடந்தது கனவா நினைவா என்று புரியவில்லை. அவள் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. எங்கே தொடங்கிய வாழ்க்கை எங்கே முடியப் போகிறதோ அவளுக்கே தெரியவில்லை.

அரைமணி நேரத்திற்கு முன்னால் நடந்த சம்பவம் இன்னும் கண் முன்னால் நிழலாடிக் கொண்டே இருந்தது.

“என் தந்தை உன்னைப் போல் சுயநலக்காரர் இல்லை” என்று அவள் சொன்னதால் வந்து சேர்ந்தது இந்தச் சிக்கல்கள் எல்லாம். அதைக் கேட்டுவிட்டு பிளாக்

ஈகிள், பெரியதாய்ச் சிரித்தான். அவனுக்கு இந்த உலகத்தின் மீதும் மனிதர்களின் மீதும் மிக தாழ்வான உணர்வு இருந்து வந்தது போலும். தன் நம்பிக்கையை அவ்வப்பொழுது உறுதிபடுத்திக் கொண்டே இருந்தான்.

அவள் தனக்கு நான்காம் மாதம் என்று சொன்ன பிறகு அவள் தந்தைக்கும் அவனுக்கும் வாதவிவாதம் நிகழ்ந்தது. அவர்கள் இருவரும் உள்ளே போய் விட்டார்கள். கொஞ்ச நேரம் கழித்து அவன் வெளியே வந்து, “உன் தந்தை சுயநலமில்லாதவர் என்று சொன்னாய் அல்லவா. அப்படி வந்து வெளியே நின்று எங்கள் உரையாடலைக் கேள்” என்று சொல்லிவிட்டு உள்ளே போனான்.

அவளுக்குப் புரியவில்லை. வெளியேயிருந்து அவர்கள் உரையாடலை கேட்டுக் கொண்டிருந்த அவளுக்கு வியர்த்துக் கொட்டிற்று.

“நீ எங்களோடு சேர்ந்துக்கணும் என்றால் பந்தங்களிலிருந்து விடுபடணும். உன் மகளை நீயே சுயமாய் அப்புறப்படுத்த வேண்டும்” என்று சொல்லிக் கொண்டிருந்தான் அவன்.

அவள் நடுங்கிவிட்டாள். தன் மரணத்தைப் பற்றி பயந்து அல்ல. தந்தை என்ன முடிவு எடுக்கப் போகிறாரோ என்று.

பூஷணம் துப்பாக்கியைக் கேட்டார்.

உண்மையான வியாபாரப்புள்ளி நொடிப்பொழுதில் முடிவை எடுப்பானாம். எப்படியும் இரண்டு உயிர்களும் போகவிருக்கும் போது இரண்டாவதை தக்கவைத்து கொள்வதற்காக முதலாவதை இழப்பது நல்லதென்று பாவித்துவிட்டார். அது தன் மகளின் உயிராக இருந்தாலும் பரவாயில்லை என்றெண்ணிவிட்டார். துப்பாக்கியை கேட்டார்.

இதயத்தின் அடிவாரத்திலிருந்து சுயநலம் வெளிவந்துவிட்டால் நீ இல்லை நானும் இல்லை. தன்னை பின் தொடர்ந்தால் பேய் மகிழ்ச்சியடையும். தன்னை வேண்டிக்கொண்டால் தெய்வம் மகிழ்ச்சி அடையும். பிரார்த்தனையிலும் பாவத்திலும் சுயநலமே தென்படும் தருணம் அது! சத்தியம் உருவாக வேண்டுமானால்

விலங்குகள் விலக வேண்டும். தளைகளிலிருந்து வெளியேற வேண்டுமானால் இதயம் வெடித்துப் போக வேண்டும். அதிருப்தியோடு தொடங்கி, அதிருப்தியைப் போய் அடைவதே வாழ்க்கை என்றால், கடவுளே! என்னை முதல் மைல் கல்லிலேயே மரணமடையும்படிச் செய்.

பிளாக் ஈகிள் வெளியே வந்து அவளைப் பார்த்துச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஆணவம் தென்பட்டது. மனித உறவுகளின் மேல் எனக்குள்ள அபிப்பிராயம் எவ்வளவு சரியானது என்று பார்த்துக் கொண்டாயா என்ற ஆணவம் தெரிந்தது.

“வா” என்றான்.

கசாப்புக் கடைக்கரனை அனுசரித்து செல்லும் ஆட்டுக்குட்டியைப் போல் அவள் உள்ளே போனாள். அவள் உள்ளே அடியெடுத்து வைத்ததுமே தந்தை துப்பாக்கியை உயர்த்தி இவள் நெற்றிப்பொட்டில் குறி பார்த்துச் சுட்டதைக் கவனித்தாள்.

ஆனால் அந்தத் துப்பாக்கி வேடிக்கவ்லலை.

தந்தையின் முகம் வெளிறிவிட்டது. திரும்பவும் குறி பார்த்தபோதும் எந்த மாற்றமும் இல்லை. இம்முறை பிளாக் ஈகிள் பெரிதாய் சிரித்தான்.

“உன் மகளுக்கு உன் மேல் ரொம்ப நம்பிக்கை பூஷணம்! இதெல்லாம் நீ அவளுக்காகத்தான் பண்ணுகிறாய் என்றும், அவள்மேல் உனக்கு உயிர் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறாள். நீ எவ்வளவு சுயநலவாதி என்று உன் மகளுக்குத் தெரியாது. அதைச் சொல்லுவதற்குத்தான் உன் துப்பாக்கியில் குண்டுகளை எடுத்து விட்டு நாடகமாடினேன். நான் உயர்ந்தவனா இல்லையா?”

பூஷணத்தின் முகம் சிவந்தது. சாதாரணமாய் உயிர் போயிருந்தாலும் அவர் இவ்வளவு அவமானம் அடைந்திருக்க மாட்டார். “யூ ... யூ” என்று கத்திக்கொண்டே பிளாக் ஈகிள் மேல் பாய்ந்தார்.

ஆனால் அதை முன்பே ஊகித்துவிட்ட ஏஜெண்ட் க்யூ காலைக் கொஞ்சம் முன்னுக்கு நீட்டினான். பூஷணம் அந்த வேகத்தைச் சமாளிக்க முடியாமல் தடுக்கி குப்புற

விழுந்தார். அவர் நெற்றி கப்பலின் மரக்கட்டை மீது பட்டது.

தந்தையைத் தூக்கி நிறுத்துவதற்குக்கூட கைகளில் பலமில்லாதவளாய் அப்படியே நின்றுவிட்டாள் அம்சரேகா.

“என்னைப் பற்றி நீ என்னதான் எண்ணிக்கொண்டு இருக்கிறாய் பிளாக் ஈகிள். உன் கூட்டாளியை இம்மாதிரி அவமானப் படுத்துவதற்கு உனக்கு உரிமையில்லை” என்றார் பூஷணம் கோபமாய்.

“கூட்டாளியா?” என்று அலையலையாய் சிரித்தான் ஈகிள். “என்னோடு கைகோர்த்து கொள்வதற்காக வளர்ப்பு மகளைக் கொன்றாய். உன் கையாலேயே பெற்ற மகளைக் கொல்லத் துணிந்தாய். உன்னைப் போன்ற விஷப்பாம்புடன் கூட்டா?”

அம்சரேகா பதறிவிட்டாள்.

தன் அக்கா மரணமடைந்து விட்டாள்! தன் தந்தை அவளைக் கொன்று விட்டார்.

நினைக்க நினைக்க அவளுக்கு துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது. மனிதர்களில் இப்படிப்பட்ட அரக்கர்களும் உண்டு என்பது அவள் நினைத்தும் பார்த்திராத ஒன்று. சுவர்க்கத்திற்கு மேலான இடத்தில் உன்னை நிற்க வைக்கிறேன்” என்று தந்தை சொன்ன வார்த்தைகளுக்கு அர்த்தம் இதுதானா? அவள் இவ்விதமாய் கலங்கிய மனதுடன் யோசித்துக் கொண்டிருக்கையில் அவள் தந்தை சொன்னார்.

“பார் பிளாக் ஈகிள். இந்த ஆபரேஷனில் உனக்கும் புரொபசர் சோ வுக்கும் எவ்வளவு பங்கு உண்டோ அவ்வளவு எனக்கும் உண்டு. கோடிக்கணக்காயச் செலவழித்து அந்த ஃபார்முலாவைத் தயாரிக்கும்படிச் செய்தவன் நான்! புரொபசர் சோ என்ன செய்து விட்டான் பெரிதாய்? ராடரால் பிடிக்க முடியாத காட்ஜெட்டைக் கண்டு பிடித்ததுதானே. நீ பண்ணியது என்ன? பி.ஜி. கியாஸை அனுப்பி வைக்கும் வாகனத்தைத் தயாரித்தது தானே? இதை வைத்துப் பார்த்தால் உங்களிருவரையும் விட என்னுடையதுதான் முக்கிய பங்கு. இந்த நாட்டு அரசாங்கத்தின் ஆதரவு உனக்கு இருக்கிறது என்றுதான்

நாங்கள் இருவரும் இங்கே வந்ததே. அதைக் காரணமாய் வைத்து நீ எங்களை அதிகாரம் பண்ணுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது.”

பிளாக் ஈகிள் பதில் பேசவில்லை. அருகில் வந்து பூட்ஸ் காலை நாற்காலி விளிம்பில் தூக்கி வைத்துக்கொண்டு, “பாலிஷ்!” என்றான். பூஷணம் சரேலென்று நிமிர்ந்தார். “பாலிஷ்!!” என்றான் அவன் திரும்பவும். அந்த கேபினில் பயங்கரமான நிசப்தம் ஏற்பட்டது. பூஷணம் புரியாதவரைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“நீ என் கால் பூட்சுக்கு பாலிஷ் போடப் போகிறாய். ஐந்து வினாடிகள் உனக்கு டயம் தருகிறேன். என் தலைமையை ஒப்புக்கொண்டு, நான் என்ன சொன்னாலும் செய்யத் தயாராக இருக்கிறேன் என்று நிரூபிப்பதற்காக ஐந்து வினாடிக்குள் நீ என் பூட்ஸை பாலிஷ் போடப் போகிறாய்.”

பூஷணம் நகரவில்லை.

“நான்கு” என்றான். அவன் குரல் கேபினில் எதிரொலித்தது.

அம்சரேகா தந்தையை நோக்கி அடியெடுத்து வைக்கப் போனவள் நின்றுவிட்டாள்.

“மூன்று.”

ஏஜெண்ட் க்யூ சிரித்துக் கொண்டிருந்தான்.

“இரண்டு” பிளாக் ஈகிளின் கை கீழே நகர்ந்தது.

பூஷணம் எழுந்து நின்றார்.

“ஒன்று.” மெதுவாய் பூஷணம் ஜேபியிலிருந்து கைக்குட்டையை வெளியே எடுத்து அவன் பூட்ஸை துடைக்கத் தொடங்கினார். அம்சரேகா சிலையாய் நின்றபடி தந்தையையே பார்த்துக் கொண்டிருந்தாள். ரசமான நாடகம் முடிந்து விட்டாற்போல் ஏஜெண்ட் க்யூ சிரித்துக்கொண்டே அங்கிருந்து நகர்ந்தான்.

ஆனால் கடைசி திருப்பம் அவ்விடத்தில்தான் எஞ்சியிருந்தாற்போல், பூஷணம் சற்றும் எதிர்பாராத விதத்தில் எதிரேயிருந்தவனின் கையிலிருந்து துப்பாக்கியை பிடுங்கிக்கொண்டு தன் நெற்றிப்பொட்டில் குறிவைத்துக்கொண்டார்.

“டுமீல்!” என்ற சப்தத்தோடு மரத்தாலான அந்த அறை அதிர்ந்தது.

“அப்பா!” என்று கத்திக்கொண்டே அம்சரேகா தந்தையிடம் ஓடினாள்.

ஏஜெண்ட் க்யூ அருகில் வந்து அவனைப் பரிசோதித்துவிட்டுத் தன் தந்தையை நோக்கித் திரும்பி, ‘செத்து விட்டான்’ என்பது போல் தலையாட்டிவிட்டு அங்கிருந்து போய் விட்டான்.

அவன் மரணம் அம்சரேகாவைத் தவிர வேறு யார் மனதையும் நெகிழ்த்தவில்லை.

அரசாங்கத்தைத் தன் உள்ளங்கைக்குள் வைத்துக் கொண்டிருந்தவரும், அரசாங்கத்திற்கு சமமாக இன்னொரு அரசாங்கத்தை நடத்தி வந்தவரும், கோடிக்கணக்கான சொத்துக்கள் இருந்தும் இன்னொரு படியில் ஏற ஆசைப்பட்டு, தாய் நாட்டையே மயானமாய் மாற்றிவிடத் துணிந்தவருமான அந்த வியாபார மேதை தவறான வழியில் போய் அதலபாதாளத்திற்கு நழுவி விழுந்தார்.

சலனம் ஒடுங்கிப் போன அவர் கணகள் சூனியத்தை வெறித்துக் கொண்டிருந்தன. அவை மகளை கவனிக்கும்படி கேட்டுக் கொண்டிருந்ததோ, அல்லது படபடத்துக் கொண்டிருந்த மூவர்ணக் கொடிக்கு முன்னால் தலைகுனிந்து கொண்டிருந்ததோ தெரியாது. ஆனால் அவர் கையில் கைக்குட்டை அப்படியே இருந்தது. என்றாவது நீதிக்கு முன்னால் சுயநலம் காட்டும் வெள்ளைக் கொடியைப் போல் இருந்தது அது.

இரு கையாட்கள் வந்து அம்சரேகாவைப் வலுகட்டாயமாக அழைத்துக்கொண்டு போனார்கள். பிறகு அவர் உடலோடு சங்கிலியைப் பிணைத்துகட்டி கடலில் இறக்கினார்கள்.

இனி அது மேலே வராது. எலும்புகள் கூட சிதைந்து போக வேண்டியதுதான்.

“அவன் ஆன்மாவுக்கு சாந்தி கிடைக்கட்டும்” என்றான் பிளாக் ஈகிள் கையை உயர்த்தி.

அதற்குள் அங்கே ஏஜெண்ட் க்யூ திரும்பி வந்தான். அவன் முகத்தில் கலவரம் தென்பட்டது.

“புரொபசர் சோ பிடிபட்டுப் போய் விட்டான்” என்றான் பதற்றத்துடன்.

“எப்படி?”

“ஆல்பர்ட் மூலமாய் நம் கோட் வார்த்தை நேத்ராவுக்குத் தெரிந்து போய் விட்டது என்று சந்தேகப்படுகிறேன். விமான நிலையத்தில் புரொபசர் சோவை யாரோ காரில் ஏற்றிக்கொண்டு போனதாய் நம் ஆட்கள் சொன்னார்கள். ஒருக்கால் நேத்ராவாகத்தான் இருக்க வேண்டும்.”

பிளாக் ஈகிள் யோசனையில் ஆழ்ந்தான். சோ முக்கியமில்லை. அவன் கொண்டு வரும் காட்ஜெட்தான் முக்கியம். அது நேத்ராவின் கையில் சிக்கிவிட்டால் எல்லா திட்டமும் வீணாகிவிட்டாற்போல்தான்.

அதற்குள் இண்டர் காம் டி.வி.யில் “பீப் பீப்” என்று அறிவிப்பு கேட்டது. அதற்குப் பிறகு கப்பலில் நுழைந்து கொண்டிருந்த ஆள் தென்பட்டான்.

“அட அவன்தான் நேத்ரா” என்றான் க்யூ. “இவனுக்கு நம் இருப்பிடம் கூட தெரிந்திருக்கிறது என்றால் நாம் எண்ணிக்கொண்டு இருப்பதைக் காட்டிலும் துரிதமாகவே நெருங்கி வந்துவிட்டான் என்று தோன்றுகிறது. இந்தக் கப்பலை அவன் எப்படித்தான் கண்டுபிடித்தானோ தெரியவில்லையே?”

“அவன் புத்திசாதுரியத்தைப் பார்த்து பாராட்டாமல் இருக்க முடியவில்லையடா பையா.”

“அந்தப் புத்திசாதுரியத்துக்கு இப்போது முற்றுபுள்ளி வைத்து விடுகிறேன். ஒரே ஒரு குண்டு போதும்.”

“வேண்டாம் பையா! இவ்வளவு நாட்களுக்குப் பிறகு இந்த பிளாக் ஈகிளோடு மோத சரிசமமான ஆள் கிடைத்திருக்கிறான். வந்து நாலு நாள்கூட ஆகவில்லை. அதற்குள் நம் இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டு விட்டான். நமக்காக வந்த புரொபசரைத் தன்னோடு கூட்டிக்கொண்டு போய்விட்டான். இப்போது புரொபசர் வேஷத்தில் வருகிறான். நீயோ அந்த பூஷணமோ அடையாளம் கண்டுக்கொள்ளக் கூடும் என்று பயம்கூட இல்லாமல் வருகிறான். இந்தக் கப்பல் விஷயத்தைத்

தெரிந்து கொண்டுவிட்டான். ஆதலால் நம்மைக் கொல்லணும் என்றால் ஒரே ஒரு குண்டு போட்டால் போதும். ஆனால் அவனே வருகிறான் என்றால் காரணம் என்னவாயிருக்கும் என்கிறாய்? நம் கோல்டன் ஜலாண்டைப் பற்றித் தெரிந்துக் கொள்வதைத் தவிர வேறு காரணம்கூட இருக்கும் என்கிறாயா? இதோப்பாரு. இதுதான் அவனிடம் எனக்கு பிடித்திருகிறது. அப்படிப்பட்டவனை ஒரே குண்டில் சாகடிப்பதாவது? வேண்டாமடா பையா. நல்ல தாகத்தில் இருக்கிறேன். இந்த பூஷணத்தோடு மோதலாம் என்று பார்த்தேன். அவனே சுட்டுக்கொண்டு செத்துத் தொலைத்தான். எனக்காகவே கடவுள் இந்த நேத்ராவை அனுப்பியிருகிறார். நீ ஒதுங்கிப் போய் விடு. கப்பல் கோல்டன் ஜலண்டைப் போய்ச் சேரும் வரையில் அவன் கண்ணில் படாதே. புரொபசர் சோ வைப் போல் சீன பாஷையில்தான் பேசுகிறானா, அல்லது அவன் தந்தை அமெரிக்கன் என்பதால் ஆங்கிலத்தில் தான் பேசுகிறானா என்று பார்ப்போம். இந்த புரொபசர் சோவுக்கு அம்சரேகாவைப் அறிமுகம் பண்ணி வைக்கப் போகும் காட்சியை நினைத்தாலே எனக்குப் புரை ஏறுவதுபோல் சிரிப்பு பொத்துகொண்டு வருகிறது. அந்தப் பெண்ணோ வியப்படைந்து போய் நேத்ரா என்று சொல்லப் போகிறாள். அவனோ எங்கே அது என் காதில் விழுந்துவிடப் போகிறதோ என்று கலங்கிப் போய் விடுவான். நானோ அதொன்றும் காதில் விழாதது போல் தலையைத் திருப்பிக்கொண்டு விடுவேன். எவ்வளவு நன்றாக இருக்கும் அது! பசியோடிருக்கும் புலிக்கு ரத்த வாசனை காட்டினாற்போல் இருக்கு எனக்கு" என்று வெளியே நடந்தான்.

நேத்ரா உள்ளே வந்து கொண்டிருந்தான்.

"வெல்கம் மிஸ்டர் சோ" என்று கையை நீட்டினான் பிளாக் ஈகிள்.

"கிளாட் டு மீட் யூ."

இருவரும் உள்ளே வந்ததை டி.வி.யில் க்யூ பார்த்துக் கொண்டிருந்தான். கூண்டுக்குள் நுழைந்த எதிரியை உடனுக்குடன் கொன்று போடாமல் இதென்ன

தாமதம் என்று எரிச்சலடைந்தான் அவன். ஆனால் அவனுக்குத் தந்தையைப் பற்றித் தெரியும், உயிர் எடுக்க மாட்டார். உயிரோடு விளையாடுவார்.

“நீங்கள் பரிசோதித்துத் தயாரித்த காட்ஜெட்டைக் கொண்டு வந்தீர்களா மிஸ்டர் சோ?” கேட்டுக் கொண்டிருந்தான் பிளாக் ஈகிள்.

“கொண்டு வந்திருக்கிறேன்.” நேத்ரா சொன்னான்.

க்யூ நிம்மதியாய் மூச்சு விட்டுக்கொண்டான்.

புரொபசர் சோவை நேத்ரா ஒளித்து வைத்திருந்தாலும் சரி. கொன்றிருந்தாலும் சரி. ஆனால் காட்ஜெட்டை மட்டும் கொண்டு வந்து விட்டான். அதுதான் முக்கியம்.

பிளாக் ஈகிள் பட்டனை அழுத்தி வேலைகாரனுக்கு ஆணையிட்டான். “புரொபசர் கூட வந்து விட்டார். இனி நாம் புறப்படலாம் கப்பலை நகர்ந்துங்க.”

சரியாய் அரைமணி கழித்து வாட்டர் டெவில் நகர்ந்தது.

கோல்டன் ஐலண்டை நோக்கி மெதுவாய் போகத் தொடங்கியது.

## 41

நேத்ரா போன பிறகு பிரதிமாவுக்கு என்ன பண்ணுவதென்று புரியவில்லை. அவன் மளமளவென்று காரியங்களைப் பண்ணிகொண்டே ஒவ்வொரு ரகசியமாய் துப்புத் துலக்கிகொண்டு வந்த போது, இதுநாள் வரையில் அவள் நேத்ராவுக்கு உதவி பண்ணிக்கொண்டிருந்தாள்.

கடைசி கட்டமாய் அவன் கப்பலுக்குப் போகிறேன் என்ற போது அவள் பயந்து தடை விதித்தாள். ஆனாலும் அவன் கேட்டுக்கொள்ளவில்லை. அவன் சொன்னதில் தர்க்கம் இருந்தது. பயந்து உட்கார்ந்து விட்டால் வேலை நடக்காது.

ஆனால் காதல் என்றாலே அதில் லாஜிக் இராது அல்லவா. அவள் மனம் கேட்காததால், சக்தி வாய்ந்த படகு ஒன்றினை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு

கப்பலுக்குக் கொஞ்ச தூரத்தில் காவல் காத்துக் கொண்டிருந்தாள்.

கப்பல் புறப்பட கொஞ்ச நேரம் இருந்தபோது அதிலிருந்து ஒரு உடலை கொண்டு வந்து நீரில் தள்ளியதை அவள் பார்த்தாள். அவள் நடுங்கிவிட்டாள். கலவரத்துடன் நீருக்குள் மூழ்கி அந்த உடலை அரும்பாடுபட்டு வெளியே கொண்டு வந்தாள்.

அவ்வுடல் பூஷணத்துடையது.

அவர் ஏன் இறந்து போனார் என்று அவளுக்குப் புரியவில்லை. அதைப்பற்றி யோசிப்பதற்குக் கூட நேரமில்லை. கப்பல் புறபட்டது. கடைசி நிமிஷத்தில் போர்ட் ஸ்டேஷன் பிரிட்ஜின் மேலிருந்து கப்பலுக்குள் போய்க் கொண்டிருந்த ஏஜெண்ட் க்யூ தென்பட்டான். மாடியிலிருந்து கால் நழுவி திடீரென்று கீழே விழுந்து விட்டாற்போல் இருந்தது அவளுக்கு. பூஷணம் இறந்துவிட்டார். நேத்ராவை அடையாளம் கண்டுகொள்ளக் கூடியவன் க்யூ ஒருத்தன்தான். அவனோ இப்போழுது உள்ளே போய் கொண்டிருக்கிறான். பிறகு என்ன நடக்கும்? நேத்ராவைக் கண்டுபிடித்துச் சூழ்ந்துகொண்டு சிறைப்படுத்தி... அதற்குப் பிறகு?

அவன் உடலைக் கூட கடலுக்கு அடியிலிருந்து வெளியே கொண்டுவர அவள் தயாராக இல்லை. அவள் யோசனையில் ஆழ்ந்தாள். கப்பல் வேகத்தை மேற்கொண்டது.

சில மாதங்களுக்கு முன்னால் அமிலங்களைக் கொண்டு வந்து கொண்டிருந்த கப்பலுக்குள் படகிலிருந்து நேத்ரா போனது நினைவுக்கு வந்தது. அவள் தன் படகை கப்பலைத் தாண்டி முன்னுக்குக் கொண்டு போனாள்.

அங்கே நீருக்குள் குதித்துவிட்டாள்.

பிறகு ஒரு நிமிஷம் கழித்து கப்பல் அவள் இருந்த இடத்திற்கு வந்தது. லைஃப் போட் பக்கத்திலிருந்து அவள் மேலே ஏறினாள். அவள் ஆடையிலிருந்து நீர் கடலில் வழிந்து கொண்டிருந்தது. தான் எவ்வளவு ரிஸ்க் எடுத்துக்கொள்கிறோம் என்றுகூட அவளுக்குத்

தெரியவில்லை. நேத்ராவைப் பார்ப்பது ஒன்றுதான் அவள் லட்சியம்.

கப்பலின் காவல் நிறைய இருந்தது. ஆனால் காவலர்களின் கண்ணில் படாமல் ஒளிந்து கொள்வது ஒன்றும் கஷ்டமாயில்லை. இன்டர்போல் சர்வீசில் அந்தப் பயிற்சியை மிக நன்றாகச் சொல்லித் தருவார்கள். அவ்வாறு இருட்டிலேயே சந்தர்ப்பம் கிடைக்கும் வரையிலும் காத்திருந்து, அதற்குப் பிறகு அவள் மேற்கூரை வழியே உள்ளே நுழைந்தாள்.

இரண்டாவது தளத்தில் வரிசையாய் கேபின்கள் இருந்தன. நேத்ரா எந்த கேபினில் இருந்தான் என்றுகூட அவளுக்குத் தெரியாது. அந்த வரிசையெல்லாம் ஆளரவமில்லாமல் நிசப்தமாயிருந்தது.

கீழ்த் தளத்திலிருந்து மட்டும் இன்னும் பேச்சுக் குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. அங்கே யார் இருக்கிறார்கள் என்று அவள் ரெயிலிங் மேலிருந்து குனிந்து பார்க்க முயன்றாள்.

அந்த முயற்சியில் அவள் காலில் பட்டுவிட்ட ட்யூப் பெருத்த ஓசையுடன் படியிலிருந்து கீழே சென்று விழுந்தது. “யாரது?” என்ற குரலும், தொடர்ந்து நாலைந்து பேர் படியேறி வந்து கொண்டிருந்த ஓசையும் கேட்டது.

அவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

ஒளிந்து கொள்வதற்கு எங்குமே இடமில்லை. பின்னாலிருந்து காலடியோசை கேட்டது. அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. எந்தப் பக்கமாய்ப் போவதென்றும் புரியவில்லை. மேலே கதவை எப்போதோ மூடிவிட்டார்கள்.

மரணம் துரத்தி வந்தாற்போல் காலடியோசை நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் மான் போல் ஓடினாள். ஒவ்வொரு கேபின் கதவுகளையும் தள்ளிக்கொண்டே ஓடத் தொடங்கினாள். எல்லாம் உட்புறமாகவோ, வெளியேவோ தாழிடபட்டு இருந்தன.

அதிர்ஷ்டவசமாய் கடைசி கேபினின் கதவு திறந்திருந்தது. அவள் உள்ளே நுழைந்ததும், பின்னாலிருந்து வந்தவர்கள் கடைசி படியேறி மேலே வந்ததும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன.

உள்ளே நுழைந்ததுமே அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள், கேபின் காலியாய் இருந்தது. அவள் நிம்மதியாய் மூச்சு விடப் போனபொழுது பின்னாலிருந்து தலையில் ஓங்கி அடி விழுந்தது.

*****

“உங்களைப் பார்த்தால் சீனரைப் போல் இல்லை” என்றான் பிளாக் ஈகிள்.

“ஆமாம். நான் ஆங்கிலோ சைனீஸ் கலவையில் பிறந்தவன்” என்றான் நேத்ரா டின்னர் சாப்பிடத் தொடங்கியபடி.

“நீங்கள் மட்டும் உங்கள் பெயரை சோ என்று சொல்லி இருக்காவிட்டால் நான் உங்களை இந்தியன் என்று தவறாய் புரிந்து கொண்டிருப்பேன்.”

நேத்ரா சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, பிளாக் ஈகிளைப் பார்த்தான். அவன் முகம் சாதாரணமாய் இருந்த போதிலும் கண்களில் மெலிதாக சிரிப்பு தவழ்ந்து கொண்டிருந்ததை நேத்ரா கவனித்தான். ஏதோ சங்கடமான உணர்வு. தன்னை ஆயிரம் கண்கள் பரிசீலித்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வு. ஏஜெண்ட் க்யூ என்ன ஆனான் என்ற சந்தேகம் இன்னொரு பக்கம் துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது.

“விஷவாயுவை எடுத்துச் செல்கிற விமானத்தை ராடார்கள் கண்டுபிடிக்க முடியாதவாறு நீங்கள் கண்டுபிடித்துள்ள காட்ஜெட் எந்த விஞ்ஞானம் சம்பந்தப்பட்டது மிஸ்டர் சோ?”

“உங்கள் கேள்வி எனக்குப் புரியவில்லை.

“பிசிக்ஸா? கெமிஸ்ட்ரியா? எலெக்ட்ரானிக்ஸா?’

“ஆஸ்ட்ரோ ஃபிசிக்ஸ்”

“குட்! உங்களுக்கு விஞ்ஞான அறிவு ரொம்பத்தான் இருக்கும் போலிருக்கே?”

“நான் சயின்டிஸ்ட். எனக்கு விஞ்ஞான அறிவு இல்லாமல் எப்படி இருக்கும்?”

“இப்பொழுதெல்லாம் பல பேருக்குத் தம் சப்ஜெக்ட்டைத் தவிர மீதி எல்லாவற்றிலும் ரொம்ப ஞானம் இருக்கிறது. என்னைப் பாருங்கள். ராணுவத்தில் வேலை பார்த்து வந்தேன். ஆனால் எனக்கு உளவுத்துறை

என்றால் ரொம்பவும் ஆர்வம். உளவாளிகளைப் பார்த்தால் என் ரத்தம் சந்தோஷத்தால் பொங்கத் தொடங்கிவிடும். என் மகனை அதனால்தான் உளவாளி அதாவது சீக்ரெட் ஏஜெண்ட் ஆக்கினேன். அதுசரி, என் மகனை உங்களுக்கு அறிமுகம் செய்யவில்லையே? அவன் உண்மை பெயரை நானே மறந்து போய் விட்டேன். எல்லோரும் அவனை ஏஜெண்ட் க்யூ என்பார்கள். அவனும் நீங்களும் சந்திக்கப் போகிற பொன்னான தருணத்திற்காகக் காத்திருக்கிறேன். நீங்கலும் அந்த நேரத்தை நன்றாய் நினைவில் வைத்துக் கொள்வீர்கள்.”

“எங்கே இருக்கிறார் உங்கள் மகன்?” டின்னர் முடிந்ததும் கேட்டான் நேத்ரா.

“இங்கேதான், இந்தக் கப்பலிலேயே. தன் கேபினில் தூங்கி கொண்டிருப்பான்” என்று எழுந்திருதான்.

இருவரும் பக்கத்து அறைக்குள் நுழைந்தார்கள். அங்கே கண்ணாடிக் குடுவைக்குள் ஒரு மலைப்பாம்பு இருந்தது. “ஏஜெண்ட் க்யூ கூட இதேபோலத்தான் தூங்கிக்கொண்டு இருப்பான் தன் கேபினுக்குள். இந்த பாம்புக்கும் அவனுக்கு நெருங்கிய ஒற்றுமை இருக்கிறது மிஸ்டர் சோ! எழுந்திருந்ததுமே இரண்டு பேருக்குமே ஆகாரம் வேண்டும்” என்று பக்கத்தில் சிறிய கூண்டிற்குள் இருந்த முயல் குட்டி ஒன்றை வெளியே எடுத்து குடுவைக்குள் போட்டான்.

இரண்டடி அகலமும் நாலடி நீளமும் உள்ள அந்த குடுவைக்குள் முயல்குட்டி அங்குமிங்கும் சுற்றுச்சுற்றி வந்தது. அதன் பயம் நன்றாக புலப்பட்டது.

“இந்த பாம்பால்தான் எனக்கு பிளாக் ஈகிள் என்ற பெயரே வந்தது மிஸ்டர் சோ. இந்தப் பாம்புக்கும் என் மகனுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருக்கு என்று சொன்னேன் இல்லையா? கரெக்ட்! பசியோடு இருக்கும் பாம்பு தன் ஆகாரத்தைச் சாப்பிடும் விதத்தைப் பார்ப்பது எனக்கு ரொம்ப உற்சாகத்தைத் தரும். அந்த முயலைப் பாருங்கள். இன்றிரவு விடிவதற்குள் தன் உயிர் போகப் போவது உறுதி என்று அந்தப் பாம்பைப் பார்த்ததுமே அதுக்குத் தெரிந்து விட்டது. பாம்பு எப்போது எழுந்திருக்குமோ அதற்குத் தெரியாது. எப்பொழுது

தன்னைச் சாப்பிடுமோ அதுவும் தெரியாது. இரவெல்லாம் பயத்தால் நடுங்கிக்கொண்டு இருக்கும். அதுவே மனிதர்களாய் இருந்தால் அந்த நடுக்கம் வெளியே தெரியாதபடி மறைத்துக் கொண்டு மேலுக்கு தைரியமாய் இருப்பது போல் காண்பித்துக் கொள்வார்கள். பாவம், முயலால் அப்படிப் பண்ண முடியாது அல்லவா. என்னை எல்லோரும் சாடிஸ்ட் என்பார்கள். அதோ பாருங்க."

மலைப்பாம்பு விழித்தெழுந்து முயலைப் பிடித்துக் கொண்டது. உடல் வெடவெடவென்று நடுங்க ஆதரவிலாமல் பாம்பில் வாயில் நுழைந்து கொண்டிருந்தது முயல்.

"உலகத்தில் நிறையப் பேர் பார்க்க முடியாத காட்சி இது. பாருங்கள், எவ்வளவு அபாரமாய் இருக்கிறது!"

நேத்ரா கண்களை மூடிக்கொண்டான், பயத்தால் அல்ல வேதனையால்.

"உங்கள் படுக்கையை இங்கேயே ஏற்பாடு பண்ணியிருக்கிறேன் மிஸ்டர் சோ. நாளைக்கு விடிந்ததுமே நம் கப்பல் தீவுக்குப் போய்ச் சேர்ந்து விடும். ஏஜெண்ட் க்யூவும் நீங்களும் சந்தித்துக் கொள்வதற்கு விடியற்காலை ஐந்து மணிக்கு ஏற்பாடு பண்ணி இருக்கிறேன். ஒவ்வொரு நாள் இரவும் இதுதான் கடைசி இரவு என்பது போல் உறங்குவது என் வழக்கம். நீங்களும் அதுபோல் நிச்சிந்தையாய் உறங்குவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு கதவு வரை போனவன் நின்றான்.

"அந்த பாம்பைப் பார்த்துகிட்டே தூங்குங்கள். நல்ல கனவுகள் வரும்." கதவைச் சாத்திவிட்டுப் போய் விட்டான். வெளியே தாழிட்ட சப்தம் கேட்டது.

*****

பொலபொலவென்று விடிந்து கொண்டிருந்தது. கப்பல் கோல்டன் ஐலண்டை நெருங்கி விட்டது.

பிளாக் ஈகிளும் ஏஜெண்ட் க்யூவும் சிற்றுண்டி சாப்பாட்டு மேஜைக்கு முன்னால் உட்கார்ந்திருந்தார்கள்.

"அவனைக் கூப்பிடுவோமா பையா."

க்யூ தலையை அசைத்தான். அடியாள் போய் கதவைத் தட்டினான்.

“பாத்ரூமில் இருக்கிறேன். கொஞ்ச நேரம் இருங்கள்” என்று கேட்டது.

வந்து அந்த விஷயத்தைச் சொன்னான்.

“அவன் உன்னைப் பார்த்ததுமே என்ன செய்வான் என்று நினைக்கிறாய்?”

“வியப்படைந்து போவான். துப்பாக்கியை எடுக்க முயற்சிப்பான். இருவரும் ஒரே சமயத்தில் துப்பாக்கியை எடுத்து வெடிக்கும்படி நேர்ந்தால் கண்டிப்பாய் நான்தான் ஜெயிப்பேன். இந்தப் போட்டி எங்களுக்கிடையே கடைசி போட்டியாய் இருக்கணும் என்று விரும்புகிறேன் நான்” என்றான் க்யூ.

“தான் சோ என்று நான் நம்பி விட்டதாய் எண்ணிவிட்டான். பாவம்! நீ இந்தக் கப்பலில்தான் இருக்கிறாய் என்று சொன்னதுமே அவன் முகம் போன போக்கைப் பார்க்கணுமே. இரவு முழுவதும் தூங்கியே இருக்க மாட்டான். இன்னும் கொஞ்ச நேரம் விளையாட்டு காட்டலாமா?”

“வேண்டாம். கோல்டன் ஐலண்டுக்குப் போய்ச் சேர்ந்ததுமே நமக்கு நிறைய வேலைகள் இருக்கு,”

“பார், வந்து விட்டானா என்று.”

அடியாள் போய் கதவைத் தட்டினான்.

“பாத்ரூமில் இருக்கிறேன் கொஞ்ச நேரம் இருங்கள்” என்று கேட்டது.

பத்து நிமிஷம் கழித்து திரும்பவும் அதே வார்த்தைகள்!

க்யூவிற்கு சந்தேகம் ஏற்படவே தானே சென்றான். சந்தேகம் உண்மையாகிவ்ட்டது. கதவை உடைத்துக்கொண்டு உள்ளே போனான். ஆட்டோமேடிக் எலெக்ரானிக் டேப் ரிக்கார்டரிலிருந்து வார்த்தைகள் ஒலித்துக் கொண்டிருந்தன. “பாத்ரூமில் இருக்கிறேன். கொஞ்ச நேரம் இருங்கள்” என்று.

நேத்ரா கேபினில் இல்லை.

“க்விக். அம்சரேகா இருக்கிறாளா இல்லையா என்று பார்க்கணும். வாங்க போகலாம்” என்று ஓடினான் க்யூ.

அவளையும் காணோம்.

க்யூவின் முகம் சிவந்தது. தந்தையை கடுகடுப்பாய்ப் பார்த்தான். “நீ தன்னை கண்டுபிடித்து விட்டாய் என்று நேத்ராவுக்குத் தெரிந்து விட்டது. கோல்டன் ஐலண்டு எங்கே இருக்கிறது என்று தெரிந்துகொள்வதற்காகவே உன்னோடு இவ்வளவு தூரம் பயணம் பண்ணியிருக்கிறான். நீ உன் சாடிஸத்தால் அவனை இருபொருள்பட பயமுறுத்தியிருக்கிறாய். அவன் தன் காரியத்தை முடித்துக்கொண்டு விட்டான். என் ஊகம் சரியாயிருந்தால், அவன் அம்சரேகாவுடன் கடலில் நீந்தி நமக்கும் முன்பே அந்தத் தீவுக்குப் போய்ச் சேர்ந்திருப்பான்” என்றான்.

பிளாக் ஈகிள் ஆவேசத்தால் நடுநடுங்கி விட்டான். தான் பேசிக்கொண்டிருந்த போதெல்லாம் நேத்ரா ஏன் அவ்வளவு மௌனமாய் இருந்தான் என்று அப்பொழுதுதான் புரிகிறது. ஒருக்கால் அவ்வளவு நேரமும் தனக்குள் சிரித்துக்கொண்டே இருந்திருப்பான். மிக நாசூக்காய் பலமான அடியைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டான்.

தந்தையின் முகபாவத்தைப் பார்த்துவிட்டு க்யூ அருகில் வந்தான். அதற்குள் ஒரு அடியாள் வந்து, “சின்ன படகு ஒன்றைக் காணவில்லை சார்” என்றான்.

“அப்படி என்றால் படகில் தப்பி போயிருகிறார்கள் போலிருக்கு” என்றான் க்யூ. “ஓ.கே. அப்பா! இதை நானும் ஒரு சவாலாய் எடுத்துக் கொள்கிறேன். நாம் குறிப்பிட்ட நேரத்துக்கு தீவிலிருந்து பிரளயத்தைத் தோற்றுவிக்க வேண்டியதுதான். உலகமே நமக்கு அடிமையாக வேண்டியதுதான். விஷவாயுவுடன் விமானம் புறப்படப் போவது எத்தனை மணிக்கு?”

“ஒன்பது மணிக்கு.”

“அப்படியானால் இன்னும் நாலு மணி நேரம் டயம் இருக்கு. இன்னும் ஒரு மணியில் வெளிச்சம் வந்து விடும். நேத்ராவும், அம்சரேகாவும் நம் தீவைப் போய்ச் சேரணும் என்றால் அந்தச் சின்ன படகில் எப்படியும் இன்னும் இரண்டு மணி நேரம் ஆகும். இந்த கடலில் அண்மையில் வேறு தீவு கூட இல்லை. நேத்ரா விஷயம் எனக்கு

நன்றாய்த் தெரியும். அவன் எதிரி பக்கமாகவே வேகமாய் வந்துகொண்டு இருப்பான். இவை எல்லாவற்றையும் காட்டிலும் முக்கியமாய் சுறா மீன்கள்.... சுறா மீன்கள் அந்த சின்ன படகை விட்டு வைக்காது. நம் தீவைச் சுற்றிலுமுள்ள சுறா மீன்களைப் பற்றி ஒருக்கால் நேத்ராவுக்குத் தெரிந்திருக்காது.”

அந்த விஷயம் நினைவுக்கு வந்ததுமே பிளாக் ஈகிள் முகத்தில் வெகு நேரத்திற்குப் பிறகு லேசாய் முறுவல் தென்பட்டது.

க்யூ தொடர்ந்தான்.

“ஒருக்கால் தீவு வரைக்கும் வந்தாலும் அங்கே வரவேற்பு கொடுப்பதற்கு நான் இருப்பேன். மூன்று பக்கங்களிலிருந்தும் எப்படியும் உள்ளே வந்து விட முடியாது அவனால். ஒன்பது மணி தாண்டிய பிறகு வந்தாலும் லாபமில்லை. அரக்கர்களைப் போன்ற ஆட்களோடும், மிஷின் கன்களோடும் நான் அங்கே எதிர்பார்த்து கொண்டிருப்பேன். படகில்தான் வருவானோ, நீருக்கடியிலிருந்துதான் வருவானோ தெரியாது. எப்படி வந்தால் தான் என்ன, என் பார்வையிலிருந்து எப்படி தப்பித்துக்கொண்டு போய்விடுவான் என்று பார்த்து விடலாம். இட்ஸ் எ ஃபைனல் சேலஞ்ச பிட்வீன் நேத்ரா அண்ட் ஏஜெண்ட் க்யூ.”

## 42

நேத்ராவும் அம்சரேகாவுடன் சேர்ந்து அந்தக் கப்பலிலிருந்து வெளியேறுவதற்குக் கொஞ்சம் முன்னால் அங்கே ஒரு அபூர்வ சங்கமம் நிகழ்ந்தது.

அது பிரதிமாவுக்கும், அம்சரேகாவுக்கும் இடையே.

நேத்ரா என்ன ஆனானோ என்ற பரபரப்பில் கப்பலுக்குள் நுழைந்த பிரதிமா இரண்டாவது மாடியின் வராண்டாவிற்கு வந்தாள்.

வராண்டாவின் இருட்டில் நின்றபடி, நேத்ராவிற்கும் பிளாக் ஈகிளுக்கும் இடையே நடந்த உரையாடலைக் கேட்டுகொண்டிருந்த பிரதிமா, யாரோ வந்த காலடியோசையைக் கேட்டுவிட்டு ஓடி வந்தாள்.

திறந்திருந்த கேபினுக்குள் நுழைந்ததுமே தலையில் விழுந்த அடியைத் தாங்கிக்கொள்ள ஒரு வினாடி பிடித்தது.

ஆனால் அது அவ்வளவு பலமான அடியாய் இல்லாததால் அவள் சமாளித்துக்கொண்டு, மின்னலாய் கையைப் பின்னுக்கு வீசினாள். அந்த அடி மூலமாய் காதில் விழுந்த ஓலம் ஒரு பெண்ணின் குரலாய் இருந்தது. அவள் இன்னொரு முறை கையை வீசப் போனவள் அரும்பாடுபட்டுக் கையைக் கீழே போட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

பீர் பாட்டிலை உயரே தூக்கிக்கொண்டு அம்சரேகா நின்று கொண்டிருந்தாள். நேத்ரா வந்து கொண்டிருக்கிறான் என்று தெரிந்ததுமே அம்சரேகாவுக்குத் தன் கேபினில் இருப்புகொள்ளவில்லை. மகுடியின் இசையைக் கேட்டு கூடையில் இருக்கும் பாம்பு நெளிவது போல் அவள் அவ்வறையை விட்டு வெளியே வருவதற்கு முயன்று கொண்டிருந்தாள். கதவை இழுத்துப் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும். ஆனால் அவள் சீக்ரெட் ஏஜென்ஸியைச் சேர்ந்தவள் இல்லையாதலால் அந்த கேபின் கதவு திறந்தே இருந்த விஷயத்தை அவளால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

அதற்குள் வெளியேயிருந்து யாரோ வந்த ஓசை கேட்டது. அங்குமிங்கும் பார்த்தபோது யாரோ குடித்துவிட்டு போட்டிருந்த பீர் பாட்டில் அவள் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்துக்கொண்டு ஜான்சி ராணியைப் போல் அவள் கதவை நோக்கி வந்து கொண்டிருந்த அந்த சமயத்தில் பிரதிமா உள்ளே வந்து கொண்டிருந்தாள். யார் என்று கவனிக்காமல் அம்சரேகா பிரதிமாவின் தலையிலும், பிரதிமா அம்சரேகாவின் கழுத்திலுமாய் அடித்துக் கொண்டார்கள்.

அதிர்ஷ்டவசமாய் இருவரும் பின்னாலிருந்து அடித்துக் கொண்டதால் பெரிதாய் அடிபடவில்லை.

“நீயா?” என்றாள் பிரதிமா தலையைத் தடவிக்கொண்டே.

“நீங்களா?” என்றாள் அம்சரேகா கழுத்தைத் தடவிக்கொண்டே.

“நான் எவ்வளவு தடுத்தபோதும் கேட்காமல் நேத்ரா இங்கே வந்திருக்கிறான். உன்னையும், நேத்ராவையும் காப்பாற்றுவதற்காக நான் இந்த சாகசத்தை பண்ண வேண்டியிருந்தது. தற்போது கப்பல் எந்த இடத்தில் இருக்கிறதென்று சொல்ல முடியுமா உன்னால்?”

“சொல்ல முடியும்.”

பிரதிமா உற்சாகத்துடன், “எங்கே?” என்றாள்.

“நீரில்.”

“கப்பல் நீரில் இல்லாமல் காற்றிலா இருக்கும்?” எரிச்சலுடன் சொன்னாள்..

“ஏர்ஷிப் ஆக இருந்தால் காற்றில் இருக்கும் இல்லையா?” அப்பாவியாகக் கேட்டாள் அம்சரேகா.

அந்தப் பதிலுக்கு பிரதிமா கோபமாய் ஏதோ சொல்லப் போனவள், சட்டென்று ஏதோ தோன்றவே, “மை காட்! நாம் ரொம்ப தவறு செய்துகொண்டு இருக்கிறோம்” என்றாள்.

“ஆமாம்.”

பிரதிமா சந்தேகத்தோடு பார்த்து, “உனக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டாள்.

“கதவைத் தாழிடாமல் பேசிக்கொண்டு இருக்கிறோம். அதானே?”

“உன் மூஞ்சி! அதில்லை நான் சொன்னது. வில்லனின் இருப்பிடத்தில் ஒவ்வொரு அறையிலும் ரகசிய மைக்குகள் இருக்கும். தன் அறையில் உட்கார்ந்து கேட்டுக்கொண்டே இருப்பான். நாம் பேச வேண்டியதையெல்லாம் வாயால் பேசாமல் காகிதத்தில் எழுதிக்கொண்டு உரையாடுவோம். இல்லாவிட்டால். அவங்களுக்கு நான் இங்கே இருப்பது தெரிந்து போய் விடும்.”

அம்சரேகா காகிதத்தைத் தேடிக்கொண்டே, “நாம் இதுவரையிலும் பேசிக் கொண்டதை எப்படி அழிப்பது?” என்றாள்.

இவ்விருவரும் இந்த உரையாடலில் ஆழ்ந்திருந்த அதே சமயத்தில் அங்கே கேபினில் நேத்ரா தன் பிரீப்

கேசைத் திறந்தான். எதிரிகள் அதை மிக நுட்பமாயப் பரிசோதிப்பார்கள் என்று தெரியும் அவனுக்கு. அதனால் தான் அதில் எந்த கருவிகளையும் வைத்துக்கொள்ளவில்லை. டூரிஸ்ட் ஒருவனிடம் இருக்கும் டேப் ரிகார்ர்டர். சில துணி மணிகள். இதுபோன்ற சாமான்களை மட்டுமே வைத்திருந்தான். ஒரு சயின்டிஸ்ட் போல் சில புரியாத காகிதங்கள் அடங்கிய ஃபைல் ஒன்றையும் வைத்துக் கொண்டான்.

பிளாக் ஈகிள் தன்னை அடையாளம் தெரிந்து கொண்டுவிட்டான் என்று புரிந்தது நேத்ராவுக்கு. அவன் எப்படிப்பட்ட சாடிஸ்ட் என்றும் தெரிந்தது. கோல்டன் ஐலண்டு எங்கே இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுதான் அவன் வேலை. எஞ்சியதை இந்திய ராணுவம் பார்த்துக்கொள்ளும். இன்னும் இரண்டு அல்லது மூன்று மணி நேரங்களில் கப்பல் அந்தத் தீவைப் போய்ச் சேர்ந்து விடும். அதற்குள் அதிலிருந்து வெளியேறி விட வேண்டும். தீவிற்குள் கைதியாய் இறங்கினால் தப்பித்துக்கொள்வது கஷ்டம்.

யோசித்தவாறே அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். கேபின் காலியாய் இருந்தது. அறைக்கு நடுவில் மலைப்பாம்பும், கண்ணாடிக் கூண்டும், தொலைவில் தனக்காக கட்டிலும் படுக்கையும் இருந்தன. அவ்வளவே! ஜன்னலுக்கப்பால் கார்டு காவல் காத்துக் கொண்டிருந்தான்.

நேத்ரா காலருக்கு அடியிலிருந்து ஒரு சிறிய கத்தியை வெளியே எடுத்தான். கூண்டின் கண்ணாடிகளுக்கு இடையே அதைக் குத்தி, கண்ணாடியை உடைத்தான். பாம்பு சோம்பலுடன் எழுந்திருந்தது.

கட்டிலை நெருங்கினான். தலையணை மேல் போர்வையச் சுற்றி ஒரு ஆள் படுத்திருப்பது போல் தயார் பண்ணினான். தன்னிடமிருந்த டேப் ரிகார்டரைப் போட்டான். பிறகு வாசற்கதவிற்குப் பின்னால் நின்று கொண்டான்.

மலைப்பாம்பு மிக சோம்பேறியான பிராணி. அதுவும் ஒரு மணி நேரத்திற்கு முன்னால்தான் முயலைத்

தின்றிருந்தது வேறு. ஆனால் நொடிப் பொழுதில் அது விழிப்படைந்து விட்டது. காரணம் டேப் ரிகார்டர்.

அதிலிருந்து வெளிவந்த மிருதங்க ஓசையைப் பாம்பு சட்டென்று உணர்ந்து கொண்டது. பாம்புக்குக் காது கேட்காது. ஆனால் மிக லேசான அதிர்வுகளைக் கூட நுட்பமாய் உணரவல்லவை. லயப்பிரகாரம் வந்து கொண்டிருக்கும் தொனியை அதனால் சகித்துக் கொள்ள முடியாது.

ஒரே ரிதம் ஆக வெளி வந்து கொண்டிருந்த அந்த மிருதங்க ஓசைக்கு எரிச்சலடைந்த மலைப்பாம்பு சரசரவென்று படுக்கையில் ஏற்றிற்று. சரியாக அதே சமயத்தில் நேத்ரா லேசாய் கத்தினான். பாம்பு பட்பட்டென்று தலையணைமீது அடித்துக் கொண்டிருந்தது. வாலைக் கட்டிலைச் சுற்றி வளைத்துக்கொண்டிருந்தது. அந்த தொனியைப் பிடித்து விட வேண்டும் என்ற பரபரப்பில் இருந்தது. நேத்ராவில் கத்தலைக் கேட்ட கார்டு ஜன்னல்வழியே உள்ளே பார்த்தான். உள்ளே தென்பட்ட காட்சி பயங்கரமாய் இருந்தது. கட்டிலின் மேல் ஆளும், அவனைச்ச் சுற்றிக் கொண்டிருந்த மலைப் பாம்பும்...

கார்டு சட்டென்று கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான். உள்ளே தென்பட்ட காட்சியைப் பார்த்து பயந்து நின்று விட்டான். அதைத்தான் நேத்ராவும் எதிர்பார்த்தான். உள்ளே வந்தவனை நினைவு தப்பச் செய்து, பாத்ரூமிற்குள் போட்டுவிட்டு, டேப் ரிகார்டரில் தன் குரலை ரிகார்டு பண்ணிவிட்டு அங்கிருந்து வெளியேறினான்.

இனி எஞ்சியிருப்பது, அந்த கப்பலில் அம்சரேகா எங்கேயிருகிறாள் என்று தேடித் பிடிப்பதுதான். அது அவ்வளவு கஷ்டமில்லை.

இரு பெண்கள் ஒன்று கூடிவிட்டால் எப்படிப் பேசத் தொடங்கி விடுவார்களோ, அந்த நிலையில் பிரதிமாவின் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

“வில்லனின் இருப்பிடத்தில் ரகசிய மைக் இருக்கும்” என்று சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.

நேத்ரா கதவைத் தள்ளிக்கொண்டே உள்ளே வந்தவன், “நீ இத்தனை உரத்த குரலில் பேசினால் பிறகு மைக் எதற்கு? கப்பல் முழுவதுமே உன் குரல் கேட்கிறது” என்றான்.

திடீரென்று அவனைப் பார்த்து ஒரு வினாடி திகைப்படைந்து போய் விட்டாலும், உடனே வேகமாய் அவனை நோக்கி ஓடி வந்தாள் அம்சரேகா. கொடியாய் அவனைச் சுற்றிக்கொண்டு விட்டாள். பிரதிமா உடைந்த பீர் பாட்டிலைப் பார்த்து வெறுப்போடு அதைக் கையிலெடுக்கப் போனவள், தன் மனதில் ஏற்பட்ட உணர்வுகளை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டாள்.

“நீ இங்கே எப்படி வந்தாய்?” நேத்ரா பிரதிமாவைக் கேட்டான்.

“கடைசி நிமிஷத்தில் ஏஜெண்ட் க்யூ இந்தக் கப்பலுக்குள் நுழைந்ததைப் பார்த்துவிட்டு, அந்த விஷயத்தை உன்னிடம் சொல்லணும் என்று பின்னாடியே படகில் வந்து இதில் ஏறிக்கொண்டேன்” என்றாள்.

அது எத்தனைக் கடினமானது என்று அவனுக்குத் தெரியும். அவன் நன்றியோடும் அன்போடும் அவளைப் பார்த்தான். சிலர் பண்ணும் காரியத்தால் பின்னால் எந்த பயன் இல்லாமல் போகலாம். ஆனால் அவை, ‘உன்னைப் பற்றி நான் யோசித்துக்கொண்டே இருப்பேன்’ என்ற உணர்வை வெளிப்படுத்தக் கூடியவை.

“நாம் இங்கிருந்து சீக்கிரமாய் வெளியேறணும். நாம் தப்பித்துக்கொண்டது அவர்களுக்குத் தெரிவதற்கு அதிக நேரம் பிடிக்காது. அதற்குள் போய் விட வேண்டும்.”

“எப்படி தப்பித்துக்கொண்டு போகலாம் என்று எண்ணுகிறாய்?” கேட்டான் நேத்ரா.

“இந்த கப்பலோடு இரண்டு சிறிய படகுகள் ஒன்று சேர்க்கப் பட்டிருக்கின்றன அல்லவா? அதில் ஒன்றை எடுத்துக்கொண்டு போவோம்.”

“எங்கே? நாம் புறப்பட்ட இடத்திற்கா?” சிரித்துக்கொண்டே கேட்டான்.

“இல்லை. இவ்வளவு தூரம் வந்துவிட்டு இந்த ஆபரேஷனை முடிக்காமல் எப்படிப் போவது?” என்றவள் சட்டென்று ஏதோ சந்தேகம் வந்தவளாய், “ஆனால்

இதையெல்லாம் என்னை ஏன் கேட்கிறாய்?” என்று கேட்டாள்.

“எதிர்காலத்தில் இந்த மாதிரியான காரியங்களை நீயே தனியாய் பண்ண வேண்டியிருக்கும். இந்த நிலையில் நீ மட்டும் தனியாய் இருந்தால் என்ன பண்ணுவாய் என்றுதான் கேட்கிறேன்.

அவள் அதை ஒரு சவாலாய் எடுத்துக்கொண்டு, “அதான் சொன்னேனே, திரும்பிப் போகிற பேச்சே இல்லை” என்றாள்.

“அந்தப் பேச்சு எப்படியும் இல்லைதான். நாம் கப்பலில் ஏறக்குறைய எட்டுமணி நேரமாய் பிரயாணம் பண்ணிகொண்டு இருக்கிறோம். அவ்வளவு தூரம் இந்தச் சின்ன மோட்டார் படகில் திரும்பிப் போக முடியாது.”

பிரதிமா நாக்கைக் கடித்துக்கொண்டு தன் யோசனையிலிருந்த தவறை வெளிகாட்டிக் கொள்ளாமல் “ஆமாம். அதைகூட நான் ஊகித்துவிட்டேன் அதனால்தான் நாம் கோல்டன் ஐலண்டை நோக்கிப் போகணும் என்கிறேன்” என்றாலள்.

நேத்ரா அப்பாவியாய், “அது எங்கே இருக்கு என்று நமக்குத் தெரியாது இல்லையா?” என்றான்.

“அதனால்தான் இந்தக் கப்பலை நாம் திருட்டுத்தனமாய் பின் தொடர வேண்டும்.”

“அவ்வளவு வேகமாய் நம் சின்ன படகால் போக முடியாதே.”

பிரதிமாவுக்கு திக்கென்றது. சட்டென்று சமாளித்துக் கொண்டு, “அவ்வளவாவது ரிஸ்க் எடுத்துக் கொண்டு தீர வேண்டியதுதான். அந்தத் தீவு ஒருக்கால் அண்மையிலேயே இருந்தால் அது நம் அதிர்ஷ்டம்தானே” என்றாள்.

“ஆனால் இந்த எல்லையில் எல்லாம் சுறாமீன்கள் அதிகம். சுறாமீன்களுக்கு மோட்டார் படகின் சப்தம் ரொம்பும் அலர்ஜி. நம் படகைத் தூள் தூளாக்கி விடும்.”

பிரதிமா பயந்தால் தலையை சிலிர்த்துக்கொண்டு, “ஊஹும். நான் இந்த சர்வீசுக்கு லாயக்கு இல்லாதவள்” என்றாள்.

“ஏன்?”

“மோட்டார் படகில் எட்டு மணி நேரம் பிரயாணம் பண்ணித் திரும்பிப் போக முடியாது என்று என்னால் யோசித்து பார்க்க முடியவில்லை. கப்பலை அவ்வளவு வேகத்துடன் பின் தொடர்ந்து போக முடியாது. அதையும் யோசித்துப் பார்க்க முடியவில்லை என்னால். கப்பல் நம் பார்வையிலிருந்து தப்பிவிட்டால் இந்த கடலில் சுறாமீன்களுக்கு நடுவில் எந்த திசையில் போகணும் என்று தெரியாமல் குழப்பமடைந்து விடுவோம். அதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை என்னால். அப்படியிருக்கும் போது சீக்ரெட் ஏஜெண்ட் ஆக எப்படி என்னால் தொடர முடியும்?”

“ஏஜெண்ட் க்யூ கூட இதையெல்லாம் நன்றாய் யோசித்துப் பார்க்க கூடியவன் என்று நான் நம்பவில்லை. பலத்தில் அவன் முழுமையானவனாய் இருந்தாலும் சாமர்த்தியத்தில் அவ்வாறு இல்லை. அவனும் உன்னைப் போலவே யோசித்திருந்தால்....”

“ஊம். யோசித்திருந்தால்?”

“கரையில் நின்றுகொண்டு நம் படகை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பான்.”

“அப்போ நாம் எப்படி செயல்படலாம்?”

“நீ சொன்னது போல் படகை கடலுக்குள் விட்டு விடுவோம். அதன் உதவியால் கரையை நோக்கி நாம் வந்து கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் நினைத்துக்கொள்ளட்டும். நாம் மட்டும் இந்த கப்பலிலேயே இருப்போம். பைனாகுலர் மூலமாய் அவர்கள் கடல் நீரில் தேடுவார்களே தவிர இதே கப்பலில் நாம் இருப்போம் என்று நினைத்துப் பார்க்க மாட்டார்கள் இல்லையா?”

ஒரு அற்புதத்தை பார்ப்பது போல் அம்சரேகா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். நிமிட நேரத்தில் அவன் எஞ்சிய ஏற்பாடுகளைப் பண்ணி முடித்தான். கப்பலுக்கு அடியில் கட்ட பட்டிருந்த படகு ஒன்றின் கயிற்றை அறுத்து நீரில் விட்டார்கள். பிறகு எஞ்சின் அறைக்கு மேல் இருந்த சிறிய அறை போன்ற இடத்திற்கு மூவரும் வந்தார்கள். இதெல்லாம் நிசப்தமாயும் இரண்டாம்பேர் அறியாதவாறும் நடந்து முடிந்தது.

வெகுநேரம் கழிந்தது.

திடீரென்று சலசலப்பு கேட்டது. “நாம் தப்பித்துக்கொண்டது. அவங்களுக்குத் தெரிந்து விட்டது போலிருக்கு” என்றான் நேத்ரா ரகசியமாய்.

அவர்கள் இருந்த இடத்திற்குப் பக்கத்தில்தான் ஹால் இருந்தது போலிருந்தது. பேச்சுக்குரல்கள் தெளிவாய்க் கேட்டதன.

மிகச் சிறிய இடம் அது. நேத்ராவும், அவனுக்குப் பக்கத்தில் அம்சரேகாவும், எதிர் திசையில் பிரதிமாவும் குறுக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அந்தப் பக்கத்தில் பரபரப்புத் தொடங்கிவிட்டது.

“நம் சின்ன படகைக் காணவில்லை சார்.” யார் குரலோ கேட்டது.

“ஓ.கே. அப்பா நானும் இதை சவாலாய் எடுத்துக் கொள்கிறேன்.” க்யூ சொல்லிக் கொண்டிருந்தான்.

“அந்த சின்ன படகில் அவர்கள் வருவதற்கு எப்படியும் இன்னும் இரண்டு மணி நேரமாகும். அரக்கர்களைப் போன்ற ஆட்களும், மிஷின் கன்களுடனும் நான் அங்கே காத்துக்கொண்டு இருப்பேன்.”

“ஹுர்ரே” என்று கத்திவிட வேண்டும் போலிருந்த சந்தோஷத்தை பலவந்தமாய் அடக்கிக் கொண்டாள் பிரதிமா. அம்சரேகா இருட்டில் சந்தடி கேட்காமல் நேத்ராவின் கழுத்தில் முத்தமிட்டாள்.

நேத்ரா அதிர்ச்சியடைந்தான். சட்டென்று அந்த அதிர்ச்சியை பிரதிமா தெரிந்துகொண்டு விடாமலிருப்பதற்காக ஏதோ ஒன்றை பேச எண்ணி, “எல்லாம் நாம் நினைத்தது போலவே நடக்கிறது பார்த்தாயா?” என்றான் பிரதிமாவிடம்.

பிரதிமா அவன் காலின் மேல் கோட் மொழியில் எழுதினாள். “அந்தப் பக்கமாய் இருக்கிற அம்சரேகா அப்பாவியாயிருக்கக் கொண்டு சரியாயிற்று. நானாக இருந்திருந்தால் இவ்வளவு சரியாக ஊகிதத்தற்கு இந்த

இருட்டில் உன்னைக் கண்டிப்பாய் முத்தமிட்டு இருப்பேன்.”

*****

ஒரு மணி நேரத்திற்கு பிறகு கப்பல் நங்கூரம் பாய்ச்சினாற்போல் நின்றது. கப்பல் சம்பந்தப்பட்டவர்களைத் தவிர எஞ்சிய எல்லோரும் கரையில் இறங்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

“நானும் போகிறேன்” என்றான் நேத்ரா.

“எங்கே?” இருவரும் ஏக காலத்தில் வியப்படைந்தவர்களாய் கேட்டார்கள்.

“தீவுக்கு” என்றான். “இவ்வளவு தூரம் வந்தது இந்த கப்பலைக் காவல் காப்பதற்கு இல்லை.”

அம்சரேகா பயந்து போய் பார்த்தாள். பிரதிமா மட்டும் நிலைமையைப் புரிந்துகொண்டு, “அப்போ நாங்கள்?” என்று கேட்டாள்.

“அம்சரேகா இங்கேயே மறைவாக இருப்பாள். நீ மட்டும் இன்டர்போல் ஏஜெண்ட் என்பதை நிரூபித்துக் கொள்ளணும். நாங்கள் எல்லோரும் போன பிறகு கப்பலில் க்ரூ மெம்பர்கள் சிலர் மட்டும் இருப்பார்கள். அவர்களை எப்படி நீ உன் வசப்படுத்திக் கொள்வாயோ உன்னிஷ்டம். இந்தத் தீவிலிருந்து நாம் நம் ஊருக்கு திரும்பிப் போகணும் என்றால் இந்தக் கப்பலின் தேவை மிக முக்கியம்.”

“அந்த விஷயத்தை என்னிடம் விடு.”

“ஜாக்கிரதையாய் பண்ணு. ரொம்ப ரிஸ்க்.”

“அந்த விஷயத்தை என்னிடம் விடு என்று சொல்லவில்லையா?”

“போய் வருகிறேன். பெஸ்ட் ஆஃப் லக்.”

அவன் ஒரு முறை அம்சரேகாவைப் பார்த்துவிட்டு அங்கிருந்து அகன்றான். அவள் ஏதோ சொல்ல எண்ணியவள் நின்றுவிட்டாள். அவ்விருவரும் மளமளவென்று எடுத்துக்கொண்ட முடிவுகளையும், பண்ணிய காரியங்களையும் பார்த்தவள், தான் இடையில் புகுந்து ஏதாவது சொன்னால் நன்றாயிருக்காது என்றெண்ணி பேசாமலிருந்து விட்டாள். தான் மட்டுமே அங்கே வேற்று மனுஷி என்றெண்ணினாள்.

*****

சுமார் ஐநூறடி தூரத்தில் கப்பல் நின்று இருந்தது. கார்டுகள் படகில் கரையைச் சேர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் பிளாக் ஈகிளுடன் சேர்ந்து பிளாண்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

கரையில் சுமார் நூறு பேர் செக்யூரிடி கார்டுகள் இருந்தார்கள். ஏஜெண்ட் க்யூ தன்னோடு அழைத்துக்கொண்டு வந்த சிலரை அவர்களோடு சேர்த்து கும்பல் கும்பலாய் பிரித்து யார் யார் எங்கெங்கே காவல் இருக்க வேண்டும் என்று சொன்னான்.

எட்டு மணி ஆயிற்று.

அடுத்த ஒரு மணி நேரத்தில் விமானம் கிளம்பி விடும்.

பிளாக் ஈகிளுடன் சேர்ந்து பிளாண்ட்டிற்குள் நுழைந்தவர்களுள் நேத்ராவும் ஒருவன். அவன் கார்டு உடையில் இருந்தான்.

*****

இந்திய பிரதமரின் சீஃப் செகரெட்ரி தன் கையிலிருந்த செய்தியைக் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

“இன்னும் இரண்டு மணி நேரத்தில், அதாவது சரியாய், பத்து மணிக்கு இந்திய வரைபடத்திலிருந்து தமிழ்நாடு, கேரளா, ஆந்திரபிரதேஷ் மாநிலங்கள் நீக்கபட்டு விடும். அவற்றில் உயிர்வாழும் சகல ஜீவராசிகளும் பூண்டோடு அழிக்கப்பட்டு விடும். இது ஒரு சாம்பிள் மட்டும்தான். இன்று மாலை ஐந்து மணிக்குள் நாட்டின் முப்படைகளும், அரசாங்கமும் எங்களுக்குக் கட்டுப்பட்டு விட்டதாய் அறிவிக்க வில்லை என்றால், ஆறரை மணிக்கு மேலும் மூன்று மாநிலங்களை இவ்விதமாய் நாசம் பண்ணுவோம். அது இரண்டாவது எச்சரிக்கை. எங்கள் பலத்தைத் தெரிந்து கொள்வதற்குப் பத்து மணி வரையிலும் காத்திருங்கள்.

பிளாக் ஈகிள்.

அது எவனோ பைத்தியக்காரன் எழுதிய கடிதம் இல்லை என்று தெரிந்து விட்டது பிரதமரின்

செகரெட்ரிக்கு. பரபரப்புடன் பிரதமரிடம் போனார்.

சரியாய் ஐந்து நிமிஷங்களுக்கு பிறகு இன்டர்போல் சீஃப். ஹோம் மினிஸ்டர், பிரதமர் மூவரும் கூடிப் பேசினார்கள். முப்படை தலைவர்கள் கூட அதில் கலந்து கொண்டார்கள்.

“இது எளிதாய் எடுத்தெறிந்து விடக்கூடிய விஷயம் மட்டுமில்லை.” இன்டர்போல் சீஃப் சொன்னார்.

“அந்த ஃபார்முலா அவர்களின் கையில் அகபட்டுவிட்டது. அதைப் பரிசோதித்துப் பார்க்க நம் நாட்டைத் தேர்தெடுத்து இருக்கிறார்கள். அதில் மாற்று கருத்து இல்லை.”

“அந்த சயின்டிஸ்ட் எப்படி இருக்கிறாள்?” சுவர்ணரகாவைப் விசாரித்தார் ஹோம் மினிஸ்டர்.

“நன்றாய்த் தேறிவிட்டாள். இன்னும் ஆஸ்பத்திரியில்தான் இருக்கிறாள். அந்த விஷவாயு எவ்வளவு ஆபத்தானது என்று அவளே விவரித்து விட்டாள்” என்று அந்த விவரங்களை எல்லாம் சொன்னார் சீஃப்.

ஹோம் மினிஸ்டரின் முகம் தீவிரமாயிற்று. முப்படை வீரர்களும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிரதமர் சொன்னார்.

“நீங்கள் சொன்னது எல்லாம் உண்மையாக இருந்தால், ஆட்டம் பாம்பைக் காட்டிலும் மிக அபத்தானது இந்த பி.ஜி. கியாஸ். இனி நியூக்ளியர் வெடிக்காக எந்த நாடும் செலவு பண்ண வேண்டிய தேவையில்லை. ஸ்டார் வார்ஸ் இராது. இந்த கியாஸை நிரப்பி வைத்துக் கொண்டிருந்தாலே போதும். உலகத்திற்கே தலைமை தாங்க முடியும்.”

“பிளாக் ஈகிளின் உத்தேசம் கூட அதுதான் சார். அவன் தீவிற்கு வெகு சமீபமுள்ள பெரிய நாடு நம்முடையதாக இருப்பதால் முதலில் நம் நாட்டைத் தேர்ந்தெடுத்து இருக்கிறான். என் ஊகம் சரியானால் இந்தியாவைச் சேர்ந்த மூன்று மாநிலங்களிலும் உள்ள மக்கள் நாசமாகி விடுவார்கள். ஃபார்முலா வெற்றி அடைந்து விட்டதாய்த் தெரிந்ததுமே அவன் அமெரிக்கா,

ரஷியா, ஃபிரான்சு போன்ற வெளிநாடுகளுக்குக் கூட இவ்விதமாய் மிரட்டல் நோட்டீஸ் அனுப்புவான்.”

“அதற்குள் நாம் அவன் தீவை குண்டு வைத்து நாசம் பண்ணிவிட்டால் என்ன?” ஆர்மி சீஃப் கேட்டார்.

“அவன் அவ்வளவு முட்டாளில்லை. இரண்டு மணி நேரம்தான் டயம் தந்திருக்கிறான். அதற்குள் நம் விமானத்தால் அந்த தீவைக் கண்டுபிடித்துவிட முடியாது. வேறு ஏதோ நாடுகூட உலகத் தலைமைக்கு ஆசைப்பட்டு அவனுக்கு கை கொடுப்பதாய்த் தோன்றுகிறது. அவனால் தன்னந்தனியாய் இவ்வளவு பெரிய காரியத்தைப் பண்ண முடியாது. நாம் அவனுக்குக் கட்டுப்பட்டு விட்டதாய் ஒப்புக்கொண்டு விட்டால், உடனே தன் அஸ்திவாரத்தை அந்தத் தீவிலிருந்து நம் நாட்டிற்கு மாற்றிக்கொண்டு வந்து விடுவான். இங்கிருந்த படியே உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்குமே தன் மிரட்டலை அனுப்பி வைப்பான். அல்லது கோடிக்கணக்கான தங்கத்துக்ககாக பேரம் பேசுவான்” என்றார் ஹோம் மின்ஸ்டர்.

“எது என்னவானாலும், சுமார் இருபது கோடி மக்களின் உயிர் நாம் எடுத்துகொள்ளப் போகும் முடிவின் மீது ஆதாரபட்டிருக்கிறது. போபால் கியாஸ் சம்பவம் நடந்தபோதே எவ்வளவு குழப்பங்கள் உண்டாயிற்று என்று உங்களுக்கே தெரியும். அப்படியிருக்கும்போது இருபது கோடி மக்களின் உயிரைப் பற்றிய முடிவானால்... மை காட்! என்ன செய்வது என்று எனக்கே புரியவில்லை.” பிரதமர் சொன்னார்.

“இந்த விஷயத்தில் இன்டர்போல் இதுவரைக்கும் என்ன பண்ணிற்று?”

“இதற்குப் பின்னால் இருக்கும் இரண்டு ஆட்கள் பூஷணமும், ஏஜெண்ட் க்யூவும். பூஷணம் ரகசியமாய் நாட்டைவிட்டு ஓடிப்போய் விட்டார். இந்த கேஸில் ஈடுபட்டிருக்கும் நம் சீக்ரெட் ஏஜெண்டின் பெயர் நேத்ரா. அவன் கூட பூஷணத்தைப் பின் தொடர்ந்து போனான். நமக்கு அவனிடமிருந்து கிடைத்த கடைசிச் செய்தியின் படி வாட்டர் டெவில் என்ற கப்பலில் அந்த ரகசியத் தீவுக்குப் பயணம் ஆகியிருக்கிறார்கள் எல்லோருமாய்.

புரொபசர் சோ என்பவர் ஒரு காட்ஜெட்டைக் கண்டு பிடித்திருக்கிறார். அதன் மூலமாய் எந்த ராடாராலும் அந்த விஷவாயுவைத் பிரயோகிக்கும் விமானத்தை கண்டு பிடித்து விட முடியாது. அந்த புரொபசரை நேத்ரா கைப்பற்றி செயலிழக்க வைத்துவிட்டான். எஞ்சிய விவரங்களைப் பற்றித் தெரியாது” என்றார் விமானப் படைத் தலைவர்.

“அந்த வாட்டர் டெவிலைப் பிடித்து விட்டால்?”

“நேற்றிரவு நம் நீர்மூழ்கிக் கப்பல்கள் கிழக்குத் திசையை நோக்கி வங்காள விரிகுடாக் கடலில் பயணம் பண்ணத் தொடங்கி இருக்கின்றன. ஆனால் அந்தக் கப்பலைத் தேடி கண்டுபிடிப்பதற்கு இன்னும் பத்து மணி நேரமாவது ஆகும்” என்றார் கப்பல் படைத் தலைவர்.

“அதற்குள் நடக்க வேண்டியதெல்லாம் நடந்து முடிந்து விடும்.அந்த மூன்று மாநிலங்களிலும்.”

“இந்த மூன்று மாநிலங்களுக்கும் ரெட் சிக்னல் அனுப்பினால் என்ன?”

“என்னது? மூன்று மாநிலதுள்ள மக்களையும் அரைமணி நேரத்திற்குள் வெளியேற்றி மத்தியப்பரதேசம், ஒரிசா மாநிலங்களில் கொண்டு போய்ச் சேர்ப்பதா? அது எப்படி முடியும்? அனாவசியமாக அல்லோல கல்லோலம்தான் ஏற்படுமே தவிர எந்த பயனும் இருக்காது.”

திரும்பவும் நிசப்தம்.

சுமார் இருபது கோடி மக்கள் துடிதுடித்துக்கொண்டே இறப்பதையும், உயிருக்கு அஞ்சி ஓட்டம் பிடிப்பதையும், அதற்குப் பிறகு ஏற்படப் போகும் நிலைமையையும் ஊகித்துக் கொண்டிருந்தார்கள் எல்லோரும்.

“அவர்களுக்குத் தேவையானது என்ன வென்று கேட்கவில்லையா? அவர்களுக்கு நம் பதிலை எப்படி அனுப்புவது என்று சொல்லவில்லையா?”

“தங்களுடைய பலத்தை நமக்குக் காட்டுவதற்காகவே இவ்வளவு கொடுமையான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறான் பிளாக்

ஈகிள். பேச்சு வார்த்தை நடத்துவது எல்லாம் அதற்கடுத்துதான்.”

“அப்படி என்றால்” என்றார் பிரதமர். “எல்லா விமானங்களையும் கடல் எல்லையில் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள். கப்பல் படையை விழிப்புடன் இருக்கும்படி செய்யுங்கள். அநேகமாய் கிழக்குப் பக்கத்திலிருந்துதான் நம் நாட்டுக்குள் நுழையக் கூடும். அதை வானத்திலேயே தகர்த்து விட்டால் கொஞ்சமாவது வெற்றியடையலாம்.”

ராடாரின் உதவியின்றி அது சாத்தியமாகாது என்று அங்கிருந்த எல்லோருக்குமே தெரியும். தற்போது இந்த நிலைமையில் வேறு வழியில்லை என்றும் தெரியும்.

*****

கப்பலில் சந்தடி முற்றிலும் ஓய்ந்து விட்டது. அதற்குள் அவர்கள் அந்தக் கப்பலை விட்டுப் போய் அரைமணி நேரம் ஆகி விட்டிருந்தது. எலி தன் வளையத்திலிருந்து வெளியே எட்டிப் பார்த்தாற்போல் பிரதிமா அந்த குட்டி அறையிலிருந்து மேலே வந்து அங்குகிங்கும் பார்த்தாள். எங்கும் அரவம் இல்லாமல் இருந்தது.

அம்சரேகாவை அங்கேயே இருக்கும்படி சொல்லிவிட்டு அவள் தைரியமாய் வெளியே அடியெடுத்து வைத்தாள். மேலே யாருமே இல்லை. அவள் துப்பாக்கியை இன்னொரு முறை தொட்டுப் பார்த்துவிட்டு படிகளில் இறங்கினாள். சமையலறையில் மூவர் தென்பட்டார்கள். ரெயிலிங்கிற்குப் பக்கத்தில் மேலும் இருவர் பீர் குடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். என்ன செய்யலாம் என்று அவள் ஒரு வினாடி யோசனையில் ஆழ்ந்தாள்.

அதற்குள் அவளுக்குப் பின்னால் ஒரு நிழல் நீளமாய்ப் படர்ந்தது. மிக மெல்லியதாய் காலடியோசை. அவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். பின்னால் அம்சரேகா! பயந்தவளாய், “எனக்குத் தன்னந்தனியாய் அங்கே உட்கார்ந்திருக்க பயமாயிருக்கு” என்றாள்.

அவள் ஏதோ சொல்ல வந்தவள், மனதை மாற்றிக்கொண்டு, “சரி. என்னோடயே இரு” என்றாள்.

திடீரென்று அவளுக்கு இதெல்லாம் வியப்பாய்த் தோன்றியது. அம்சரேகாவைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தான் எடுத்துக்கொள்ள வேண்டி வந்ததற்கு. இதுவரை எதிரியாய் பாவித்த அவளைத் தானே காப்பாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டதற்கு.

அம்சரேகாவுக்கு மட்டும் இந்த ஆபத்திலிருந்து மீண்டு வெளியேற முடியும் என்ற நம்பிக்கையே இல்லை. இவர்கள் எத்தனைப் பேர் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒவ்வொருவரும் அரக்கன் போல் இருந்தார்கள். இவர்கள் பிடியில் தம்மை விட்டுவிட்டுத் தன் போக்கில் தான் போய் விட்டான் நேத்ரா. இந்த பிரதிமாவோ தன் நிழலைப் பார்த்துத் தானே பயப்படும் நிலையில் இருக்கிறாள்.

அதற்கு பிரதிமா அங்கிருந்து மேதுவாய் நகர்ந்தாள். அம்சரேகா அவளைப் பின் தொடர்ந்தாள். இருவரும் திரும்பவும் மேல் மாடிக்கு வந்தார்கள். அவ்விடமெல்லாம் பார்த்துவிட்டுத் திரும்பவும் போனார்கள்.

அம்சரேகாவுக்குப் பூனைதான் நினைவுக்கு வந்தது. குட்டி போடும் முன்னால் அது இப்படித்தான் அலையுமாம்.

“என் உடம்புகூட சரியாயில்லை. இந்த மாதிரி மேலுக்கும் கீழுக்குமாய் என்னால் அலைய முடியாது” என்றாள் அம்சரேகா.

அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தது பிரதிமாவுக்கு. இன்னும் தான் அவளிடம் உண்மையான விஷயத்தைச் சொல்லவில்லை என்று. அவள் ஏதோ சொல்ல வந்தபோது பக்கத்திலிருந்து சந்தடி கேட்டது. சட்டென்று அம்சரேகாவை மேஜைக்கு அடியில் இழுத்துவிட்டுத் தானும் குனிந்து கொண்டாள்.

இரு கார்டுகள் அவர்களைத் தாண்டிக்கொண்டு போய்ச் சேர்ந்தார்கள். இத்தகு முன்னால் அவர்களைப் பார்த்ததில்லை. அவர்களிடம் துப்பாக்கிகள் கூட இருந்தன.

பிரதிமா கப்பலில் மேலுக்கும் கீழுக்குமாய் ஏன் அலைந்தாள் என்று அப்பொழுதுதான் புரிந்தது

அம்சரேகாவுக்கு. அவ்வளவு சிறிய விஷயம் தனக்குத் தோன்றாததற்கு வெட்கமடைந்தாள்.

அரைமணிக்குள் அந்தக் கபளில் இருந்தவர்களைக் கணக்கிட்ட போது கப்பலில் மொத்தம் பன்னிரண்டு பேர் இருந்தார்கள் என்று தெரிந்து விட்டது. அவர்களிடம் ஆயுதங்கள் இருந்தன. எஞ்சியவர்கள் க்ரூ மெம்பர்களும், சமையல் வேலை செய்பவர்களும்தான்.

“எல்லோரையும் ஒரே இடத்தில் ஒன்று சேர்த்தால் ஒழிய ஒன்றுமே பண்ண முடியாது” என்றாள் பிரதிமா.

“ஆமாம். எப்படி ஒன்று சேர்ப்பது?”

பிரதிமா துப்பாக்கியை எடுத்துக் கொண்டாள்.

“நீ அந்தப் பக்கமாய்ப் போ. கை முழுவதும் தெரியாமல் மேனேஜ் பண்ணு. உன்னிடம்கூட துப்பாக்கி இருக்கும் என்று எண்ணிக்கொள்வார்கள். இருவரும் இரண்டு பக்கமாய் போய் முற்றுகை இடுவோம்.”

அம்சரேகா பயந்தபடி தலையாட்டினாள்.

அதற்குள் ரெயிலிங்கிற்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்களுள் ஒருத்தன் குடித்த பீர் பாட்டிலை கடலில் எறிந்துவிட்டு பாட்டுபாடத் தொடங்கினான். கொச்சையான ஆபாசப் பாட்டு.

பிரதிமா ஓரடி முன்னோக்கி வைக்கப் போனாள். பின்னாலிருந்து தோளில் கை படிந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்துவிட்டு, “நீ இன்னும் இங்கேதான் இருக்கிறாயா?” என்றாள். “பின்னே அவன் அந்த மாதிரி ஆபாசமாக பாடி கொண்டிருக்கும் போது அத்தனைபேர் ஆண்களுக்கு நடுவில் எப்படிப் போவேன்? அசிங்கமாய் இருக்காதா? கீழே போய் விட்டு அப்புறமாய் வரலாம். வாங்க. என்னால் கேட்க சகிக்கவில்லை ப்ளீஸ்.”

“கீழே போனதும் நான் ஓர் கவிதை பாடுவேன். அதையாவது கேட்பாயா?”

“அதென்னது?”

“உன் மூஞ்சி.” அலுத்துப்போய் சொன்னாள்.

அம்சரேகா தன்னையே தான் நொந்துகொண்டு, “ஐயோ... ஐ யாம் சாரி” என்றாள்.

பிரதிமாவும் தான் அவ்வளவு கடுமையாய் பேசியிருக்கக் கூடாது என்றெண்ணிக்கொண்டாள்.

“சீக்ரெட் ஏஜெண்டுகள் இதைவிட சங்கடமான சூழ்நிலைகளைக் கூட சமாளிக்க வேண்டியிருக்கும். எதிரி முழு சூட் அணிந்திருக்கிறானா அல்லது கட் டிராயருடன் இருக்கிறானா என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தால் வேலை நடக்காது” என்றாள்.

அதற்குள் இன்னொரு ஆள் இன்ஜின் அறையிலிருந்து வெளியே வந்து கும்பலுடன் சேர்ந்துகொண்டான்.

அம்சரேகாவும் பிரதிமாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ஏதோ அதிர்ஷ்டம் நன்றாக இருந்ததால் அம்சரேகா தடுத்தாள். அவள் போட்டிருந்த கணக்கில் அவன் இல்லை. இன்னும் அதுபோல் எத்தனை பேர் இருந்தார்களோ தெரியாது. பிரச்சினை திரும்பவும் பழைய இடத்திற்கே வந்து விட்டது.

“இதுவே சினிமாவாக இருந்தால் ஹீரோயின் அவர்களுக்கு நடுவே ஒரு பாட்டு பாடி டான்ஸ் பண்ணுவாள். எல்லோரும் கூடி விடுவார்கள்.”

“அப்பொழுது ஹீரோ மாறுவேடத்தில் வந்து எல்லோரையும் சிறை பிடிப்பான். இங்கே அது போன்ற ஹீரோ யாருமில்லாததால் வேறு பிளானை யோசிக்க வேண்டும்.” வெறுப்போடு சொன்னாள் பிரதிமா.

நேத்ரா தன்னிடம் ஒப்படைத்துப் போயிருந்த வேலை ஒன்றும் சாதாரணமானது இல்லை என்று தெரியும் அவளுக்கு, ஒரு துப்பாக்கி, ஆறு குண்டுகளின் உதவியால் மட்டுமே ஒரு கப்பலையே கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். ஒரு விதத்தில் இது அவளுக்கு ஒரு சோதனை.

அவ்விடத்திலேயே நின்றபடி என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது தோளில் கை படிந்தது.

“இம்முறை என்னவாச்சு?” என்று கேட்டாள் திரும்பிப் பாராமலேயே. பின்னாலிருந்து பதில் இல்லை. பிரதிமா திரும்பிப் பார்த்தாள்.

பயமே உருவெடுத்தவளாய் கண்கள் அகல விரிய பார்த்துக் கொண்டிருந்தாள் அம்சரேகா. அவள் கை அல்ல பிரதிமாவின் மேல் பட்டது. மேற்கூரையிலிருந்த மலைப்பாம்பு.

கண்ணாடிக் கூண்டுக்குள்ளே இருந்து வெளியே வந்ததும், இரவெல்லாம் எங்கே இருந்ததோ தெரியாது. ஆனால் காலை வெளிச்சத்தில் அது வெளியே வந்தது. மேற்கூரையிலிருந்து அவள் மேல் தாவி சுற்றிக்கொள்ள முயன்று கொண்டிருந்தது.

அதன் பருத்த உடலின் வழுவழுப்பையும், அதன் மேலிருந்து வந்த நாற்றத்தையும், அதன் கண்களின் குரூரத்தையும் அவ்வளவு கிட்டேயிருந்து பார்க்கும் யாராக இருந்தாலும் அப்பொழுதே இதயம் நின்று போய் செத்திருப்பார்கள். ஆனால் என்ன இருந்தாலும் அவள் ஒரு சீக்ரெட் ஏஜெண்ட்.

பாம்பு மேற்கூரையை விட்டுவிட்டு அவள்மீது தாவியதும், அவள் மின்னல் வேகத்தில் ஒடுங்கிக்கொண்டதும் ஒரே சமயத்தில் நிகழ்ந்து முடிந்தன. அவள் ஒரு பக்கமாய் ஒதுங்கிக்கொண்டதால் அது தரையில் விழுந்தது. தலை செங்குத்தாய் கீழே இருந்த கட்டையில் மோதிக் கொண்டதால் தற்காலிகமாய் சலனமில்லாமல் கிடந்தது.

அவள் மனதில் ஒரு யோசனை மின்னலாய் பளிச்சிட்டது. பக்கத்தில் இருந்த இரும்புக் கழியால் அந்தப் பாம்பை ரெயிலிங் இருந்த பக்கமாய்த் தள்ளினாள்.

பாம்பு காற்றில் பத்தடி தூரம் பிரயாணம் பண்ணி பீர் குடித்துக் கொண்டிருந்த ஆட்களுக்கு நடுவில் தொபீரென்று விழுந்தது. பாட்டுப் பாடிக் கொண்டிருந்தவனின் குரல் ஓலமாய் மாற்றிற்று. கத்தலும் கூச்சலும் கேட்டன. நான்கு பக்கங்களிலிருந்தும் கார்டுகளும், எஞ்சிய ஊழியர்களும் ஓடி வந்தார்கள். மொத்தம் பதினேழு பேர் இருந்தார்கள். அவர்கள் எண்ணியிருநத்தை விட இரண்டு மூன்று பேர் அதிகப்படியாக இருந்தார்கள். இந்த யோசனை வராமல் அவசரப்பட்டிருந்தால் மேலும் கஷ்டமாகி விட்டிருக்கும்.

கார்டுகள் மலைபாம்பைச் சுட்டுக் கொன்றார்கள். வேரோடு சாய்ந்த மரம் போல் குறுக்கே விழுந்து கிடந்தது அது. அதைச் சுற்றிலும் சூழ்ந்து நின்று பேசிக்

கொண்டிருந்தார்கள் எல்லோரும். விநோதமாய் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

“அப்படியே நின்று கையைத் தூக்குங்கள். யாரும் நகரக் கூடாது.” பின்னாலிருந்து துப்பாக்கியோடு வந்து கொண்டே சொன்னாள் பிரதிமா.

இந்த திடீர் சூழ்நிலைக்கு எல்லோரும் தடுமாறிப் போய் விட்டார்கள்.

“ஊம். சீக்கிரமாய். ரைஃபில்களைக் கீழே போடுங்கள்.” உறுமினாள் பிரதிமா.

கேட்டது பெண் குரலாயிருந்ததால் அவர்கள் உடனே கட்டுப்படவில்லை. அதற்காக நகரும் துணிச்சலையும் மேற்கொள்ளவில்லை. அவர்கள். அவர்களுடைய குழப்ப நிலையைக் கவனித்தவள், “டிராப் த கன்ஸ். இல்லாவிட்டால் சுட்டுவிடுவேன்” என்றாள்.

## 44

ஆனால் அவளுடைய சங்கடமான நிலையை அவர்கள் கவனித்து விட்டார்கள். அவள் குரலிலிருந்த மென்மை அவர்களுக்கு அதைரியமாய்த் தென்பட்டது. நாலைந்து பேர் திரும்பிப் பார்த்தார்கள். அவள் கையில் துப்பாக்கி பளபளத்துக் கொண்டிருந்தது. அவளுக்குப் பின்னாடியே அம்சரேகா நின்றிருதாள்.

இரண்டு பெண்கள் மட்டுமே இருந்ததால் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவள் ஒருத்தி. தாமோ பதினேழு பேர். அதுவும் அவள் குரல் மிடுக்குடன் வெளிப்பட்டதே தவிர அதில் அதிகாரம் இல்லை. அதனால் இரண்டு கார்டுகள் வேகமாய் அவளை நோக்கித் துப்பாக்கியைத் தூக்கினார்கள். மேலும் இருவர் அவளை நெருங்கி வந்தார்கள். அம்சரேகா வீலென்று கத்தினாள்.

அந்தக் கத்தலை உள்ளடக்கிக்கொண்டு பிரதிமாவின் கையிலிருந்த துப்பாக்கி நெருப்பைக் கக்கிற்று. எவ்வளவு மின்னல் வேகத்தில் அவள் சுட்டாள் என்றால் முதல் குண்டு துப்பாக்கியிலிருந்து வெளி வருவதற்கு முன்பே இரண்டாவது குண்டு வெடித்து

விட்டதோ என்று சொல்லும்படி இருந்தது. அவ்வளவு வேகத்திலும் அவள் குறி தவறவில்லை.

ஓடி வந்துகொண்டிருந்தவர்கள் பின்னால் போய் பொத்தென்று விழுந்தார்கள். அவளை நோக்கி துப்பாக்கியை உயர்த்திய இரு கார்டுகளும் கீரையாய் துவண்டு சரிந்தார்கள். ஒரு பெரிய அலை வந்து கரையைத் தாக்கிவிட்டுத் திரும்பிப் போனாற்போல் நிகழ்ந்தது அந்த சம்பவம்.

அம்சரேகா திக்பிரமை அடைந்தவளாய் அவளைப் பார்த்தாள். பிரதிமாவின் கவனம் திசை திரும்பவில்லை. அவர்களை நோக்கி துப்பாக்கியைக் குறி வைத்துக்கொண்டு நின்றிருந்தாள். கீழே விழுந்த நால்வரையும் கூட திரும்பிப் பார்க்கவில்லை. ப்ரொபஷனல் கில்லர்ஸ் யாருமே கீழே விழுந்தவர்களைப் பார்க்க மாட்டார்கள். உயிரோடு இருந்தவர்களின் மேலிருந்து பார்வையைத் திருப்பிக்கொள்ளாமல் நிற்பார்கள்.

தம்மை அறியாமல் கார்டுகள் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டார்கள்.

“போய் அவற்றைக் கொண்டு வா” என்றாள் பிரதிமா.

அம்சரேகா நகரவில்லை. அவள் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை மேலும் போகும் வழியில் பிணங்கள் விழுந்து கிடந்தன.

“தாமதிக்காதே போ” திரும்பவும் சொன்னாள்.

கடலிலிருந்து வந்து வீசிய குளிர்ந்த காற்றின் தீவிரம் குறைந்தது. சூரியன் இன்னும் கொஞ்சம் மேலே வந்திருந்தான். அந்த ஒளியில் கடல் பளபளவென்று மின்னிற்று.

அம்சரேகா ஓரடி முன்னோக்கி வைத்தாள். மெதுவாய் நகர்ந்து அவர்களைத் தாண்டி துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டிருந்த போது, ஒருவன் சட்டென்று ரெயிலிங்கின் மேலேயிருந்து கீழே நீரில் குதித்து விட்டான். பிரதிமா துப்பாக்கியால் சுடவில்லை.

அதைப் பார்த்துவிட்டு மேலும் இருவர் ஓடினார்கள். அடுத்த நிமிஷத்திற்குள் அத்தனைப் பேரும் கடலுக்குள்

குதித்து விட்டார்கள். அவள் அவ்வாறு இருந்து விட்டதற்கு இரண்டு காரணங்களிருந்தன. துப்பாக்கியில் இரண்டே குண்டுகள்தான் இருந்தன என்பது முதல் காரணம். ஓடிப் போய்க் கொண்டிருந்தவர்களைக் கொல்லுவது மனிதத்தன்மை இல்லை என்பது இரண்டாவது காரணம்.

அவ்விரண்டு காரணங்கள்தான் ஆபத்திற்கு வழிகோலிட்டது.

*****

ஏஜெண்ட் க்யூ தரையில் நின்று கொண்டு பைனாகுலர் மூலமாய் கடலையே பார்த்துக் கொண்டிருந்தான். தீவுக்கு இன்னொரு வழி கிடையாது என்று தெரியும் அவனுக்கு. அவன் மோட்டார் படகைப் பார்த்துக் கொண்டிருந்தான். படகைக் கொஞ்சம் தொலைவில் விட்டுவிட்டு, கடலில் நேத்ரா நீந்தி வரக்கூடும் என்றெண்ணி தன் ஆட்களைப் புதர் மறைவில் நிறுத்தி வைத்திருந்தான்.

பைனாகுலாரில் முதலில் ஒருவன் நீந்திக்கொண்டு வருவது தென்பட்டது. அவன் முகம் மலர்ந்தது. ஆனால் அதற்குள் தொடர்ந்து மேலும் நால்வர் தென்பட்டார்கள். அவன் ஆட்கள் புதர் மறைவிலிருந்து துப்பாக்கியால் சுடத் தயாராய் இருந்தார்கள். க்யூவுக்கு ஏதோ சந்தேகம் வரவே தன் ஆட்களை இருங்கள் என்று சைகை காட்டினான். வந்து கொண்டிருந்தவர்கள் தம் ஆட்களே என்று புரிந்து விட்டது.

வந்தவர்கள் கப்பலில் நிகழ்ந்ததை எல்லாம் சொன்னார்கள். அவன் முகம் கோபத்தால் சிவந்தது. தான் எவ்வளவு சுலபமாய் முட்டாளாகி விட்டோம் என்று எடுத்துச் சொல்வது போல் இருந்தது அவனுக்கு. காலால் தரையில் ஓங்கி அறைந்தான். அவன் வெளியே தேடிக் கொண்டிருக்கிறான். நேத்ராவோ தீவிற்குள்ளே இருந்திருக்கிறான். பி.ஜி. கியாஸ் செலுத்தப்படும் இடத்திலேயே இருக்கிறான்.

அவன் கைக்கடியாரத்தை பார்த்துக்கொண்டான். எட்டரை ஆயிற்று. கடைசியாய் இன்னும் இருபது நிமிஷங்கள் நேரமிருந்தது.

“படகைத் தாக்கலாமா?’ என்று கேட்ட உதவியாளரிடம், தேவையில்லை என்று பதிலல்லித்தான்.

“அதை நாம் எப்போது வேண்டுமானாலும் நம் சுவாதீனத்திற்குக் கொண்டு வந்து விட முடியும். நேத்ரா எங்கே இருக்கிறான் என்று தெரிந்து விட்டது. நமக்கு அந்த விஷயம் தெரிந்து விட்டதென்று அவனுக்குத் தெரியாது.” சிரித்துவிட்டுத் தொடர்ந்தான். “விமானம் புறப்படப் போகும் சமயத்தில் அவ்விடத்தில் இல்லையே என்று நீங்கள் வருத்தப்பட வேண்டிய தேவையில்லை. இப்பொழுது இரண்டு அதிசயங்களை நீங்கள் ஒரே சமயத்தில் காணப் போகிறீர்கள். முதலாவது உங்களுக்குத் தெரியும். இரண்டாவது நேத்ராவின் மரணம்.”

*****

நேத்ரா தன் கண்களையே நம்ப முடியாதவனானான். அண்டர் கிரவுண்டிற்குள் அவ்வளவு பெரிய ரன்வேயை அவன் கண்டதுமில்லை. ஊகித்திருக்கவும் இல்லை. பிளாக் ஈகிளின் நடவடிக்கையைப் பற்றி இவ்வளவு நாளாய் வெளியுலகத்திற்கு எப்படித் தெரியாமல் இருந்தது என்றும், அந்தத் தீவு ஒன்று இருந்ததைப் பற்றி வெளியுலகத்திற்கு ஏன் தெரியவில்லை என்றும் இப்பொழுது புரிந்தது.

கார்டுகளுள் ஒருத்தனாய் அவனும் நின்றுகொண்டு அந்த விமானத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு அபூர்வ காட்சியைப் பார்ப்பது போலிருந்தது அவனுக்கு.

பத்தடி நீளமும், ஆறடி அகலமும் உடைய அந்த விமானம் மணிக்கு இரண்டு ஆயிரம் மைலகள் வேகத்தில் பயணம் செய்யுமென்றால் குறைந்தது ஐந்து கோடி ரூபாய்களுக்குக் குறையாமல் இருக்கும் அதன் விலை. அப்படிப்பட்ட விமானங்கள் அங்கு சுமார் பத்து இருந்தன. இவ்வளவு பணத்தை பிளாக் ஈகிள் எப்படி சம்பாதித்தான் என்பது அதிசயம்தான். இப்பொழுது அந்த யோசனைகூட அனாவசியம். ஒரு சிறிய எலெக்ட்ரானிக் ஆபரேஷன் மூலமாய் அந்த பத்து

விமானங்களும் காற்றில் எழும்பப் போகின்றன. உலகத்தின் நான்கு மூலைகளுக்கும் போய்விட்டுத் திரும்பி விடும். அந்த விமானங்கள் போய் விட்டு வந்த நாடுகள் எல்லாம் சுடுகாடாக மாறிவிடும். முதலாவது இந்தியாவின் கடல் பிரதேசத்திலிருந்து தொடங்கப் போகிறது. இதுதான் அவன் சொன்னது.

விமானம் புறப்படுவதற்கு இன்னும் பதினைந்து நிமிட நேரம் இருந்தது. எல்லா இடங்களிலும் க்ளோஸ் சர்க்யூட் டி.வி.க்கள் இருந்தன. பி.ஜி. கியாஸ் சிலிண்டர் விமானத்திற்குக் கீழே நீளமாய் தென்பட்டுக் கொண்டிருந்தது.

நேத்ரா அங்கிருந்து நிசப்தமாய் நழுவினான்.

ரன்வேக்கு ஐம்பது அடி தூரத்தில் வரிசையாய் கேபின்கள் இருந்தன. எந்தெந்த கேபின்கள் எதன் எதனுடன் சம்பந்தப்பட்டவை என்று அவைகளின் மேல் பெயர் இருந்தன. காட்ஜெட் என்று எழுதியிருந்த கேபினுக்குள் நுழைந்தான் அவன். அவ்விடத்தில் ஒரு சயின்டிஸ்ட் உட்கார்ந்திருந்தான்.

சோ உருவிலிருந்த தன்னிடமிருந்து பிளாக் ஈகிள் பெற்றுக் கொண்டிருந்த காட்ஜெட்டைப் பரிசோதித்துக் கொண்டிருந்தான்.

சந்தடி கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான். நேத்ராவின் கை காற்றில் எழுந்தது. இரண்டு நிமிஷத்தில் நேத்ரா அவன் இடத்திற்கு மாறினான்.

அதற்குள் பிளாக் ஈகிள் ரன்வே அருகில் வந்தான். நேரம் எட்டு ஐம்பது ஆயிற்று. விமானம் புறப்படுவதற்கு இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன. பிளாக் ஈகிள் மெயின் கம்ப்யூட்டருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

பைலட் கடைசி பரிசோதனையைப் பண்ணிக் கொண்டிருந்தான்.

“ரன் வே கிளியரென்ஸ்?” கேட்டான் பிளாக் ஈகிள்.

“பாஸ்.” முதல் கேபினெட்டிலிருந்து பதில் வந்தது. ஒருவன் வந்து கேபின் கதவைத் தட்டினான்.

“கமின்” என்றான் நேத்ரா.

அவன் உள்ளே வந்துமே காட்ஜெட்டை நீட்டினான். அது விமானத்துடன் பொருத்தப்பட்டது.

“பி.ஜி. கியாஸ் பிரெஷர்?” பிளாக் ஈகிள் மைக்கில் கேட்டுக் கொண்டிருந்தான்.

“பாஸ்.” இரண்டாவது கேபினின் பதில்.

“காட்ஜெட் சேப்டி.”

“பாஸ்” என்றான் நேத்ரா. வேலை முடிந்து விட்டது அவன் எழுந்திருந்தான். அவ்வளவு பதற்றத்தை அவன் என்றுமே அனுபவித்ததில்லை. இன்னும் எட்டு நிமிஷங்கள் இருந்தன. எட்டு நிமிஷத்தில் எட்டு கிலோ மீட்டர் தூரம் போய்விட வேண்டும்.

நேத்ரா கேபினுக்கு வெளியே வந்தான். அவரவர்கள் தம் வேலையில் இருந்தார்கள் வாசலுக்கருகில் வந்தான். அந்திருந்து மேலே போகப் படிகள் இருந்தன. வேகமாய் படியேறினான்.

“ஏய்? எங்கே?” கேட்டான் அங்கிருந்த கார்டு. நேத்ரா யோசிக்கவில்லை. திரும்பவும் ஒரு அடி! கார்டு நிசப்தமாய் தரையோடு சரிந்தான். நேத்ரா ஓடி வெளியே வந்தான். வரிசையாய் வாகனங்கள் இருந்தன. ஜீப்பில் ஏறி உட்காரப் போனவன் அப்படியே சிலையாய் நின்று விட்டான்.

எதிரே மிஷின் கன்னுடன் க்யூ நின்று கொண்டிருந்தான்.

நேத்ராவைப் பார்த்துவிட்டு லேசாய் சிரித்தான்.

நேத்ரா சிலையாகி விட்டான்.

ஆனால் அது ஒரு வினாடி நேரம்தான். அவன் விரல்களுக்கு இடையே இக்நீஷன் சுழன்றதும், ஜீப் முன்னோக்கிப் பாய்ந்ததும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. க்யூவைத் தாண்டிக்கொண்டு அவனுடைய ஜீப் போய்ச் சேர்ந்தது. ஆனால் க்யூவின் கையில் இருந்த மிஷின்கன் வெடிக்கவில்லை. க்யூவின் முகத்திலிருந்த புன்னகை மாறவில்லை.

கூண்டுக்குள் முயல் விழுந்ததும் மலைப்பாம்பு சட்டென்று அதை கொல்லாது. எப்படியும் கைக்கு அகப்பட்டதுதானே என்று கருதி மெதுவாய் வேட்டையாடும். க்யூவின் சுபாவமும்

அப்படிப்பட்டதுதான். அந்தத் தீவில் ஒவ்வொரு அணுவைப் பற்றியும் அவனுக்குத் தெரியும். சதுரங்கக் கட்டங்களுக்கு இடையே காயை வெட்டுவது போல் நேத்ராவைக் காட்டிற்கு நடுவில் கொல்ல வேண்டும் என்பது அவன் விருப்பம்.

அவன் வேறொரு ஜீப்பில் ஏறிக்கொண்டான். தன் ஆட்களிடம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு தானே அதை ரிவர்ஸ் செய்து கொண்டு நேத்ராவைப் பின்தொடர்ந்தான். உண்மையில் லாஞ்சிங் ஸ்டேஷனிலிருந்து கடல் கரைக்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது. எஞ்சிய மூன்று பக்கமும் அருவிகளும் மலைகளும், அடர்த்தியான காடும்தான் இருந்தன.

விமானம் புறப்படுவதற்கு இன்னும் ஆறு நிமிஷங்கள் இருந்தன. வேகமாய் ஒட்டிக்கொண்டிருந்த க்யூ திடீரென்று பிரேக் போட்டு வாகனத்தை நிறுத்தினான். மலையின் திருப்பத்தில் நேத்ராவின் ஜீப் நின்றிருந்தது.

நேத்ரா அதில் இல்லை. ஜீப் காலியாய் இருந்தது.

க்யூ தன் ஜீப்பிலிருந்து இறங்கினான.

நேத்ராவின் முன் யோசனைக்குத் தனக்குள் வியந்து கொண்டான் க்யூ. நேத்ரா கடல் பகுதி வரை போயிருந்தால் அவன் மரணத்தை அவனே வலிய வரவழைத்துக் கொண்டது போலத்தான். கடல் பகுதி முழுவதும் மணல் மயமாகத்தான் இருக்கும். தன் கையிலுள்ள மிஷின்கன் அவன் உடலைத் துளைத்தெடுத்து விடும். அவ்விடத்தில் ஒதுங்குவதற்கு எதுவும் இராது என்பதால். அல்லது நேத்ரா வேறு ஏதாவது படகில் கப்பலை நோக்கிப் போனாலும், இருவருக்கும் இடையே தூரம் அதிகம் இல்லாததால் கரையில் இருந்துகொண்டு தான் படகைத் துப்பாக்கியால் துளைத்தெடுப்பான்.

நேத்ரா பாதி வழியிலேயே இறங்கிக்கொண்டு காட்டிற்குள் ஓடியது அவன் உயிரைத் தற்காலிகமாய் காப்பாற்றி விட்டது.

தற்காலிகமாய் என்றால் மேலும் ஐந்து நிமிஷம் அல்லது பத்து நிமிஷம். கொரில்லா முறையில்

நடுக்காட்டில் ஒரு ஆளை வேட்டையாடுவதற்கு தனக்கு அவ்வளவு நேரம் போதும். காட்டு யுத்தத்தில் தன்னை நேத்ரா என்ன, இந்த உலகத்தில் யாராலுமே எதிர்த்து நிற்க முடியாது. அந்த விஷயம் அவனுக்குத் தெரியும்.

நேத்ராவுக்கும் அது தெரியும். அதனால் அந்தக் காட்டில் இன்னும் ஐந்து நிமிஷங்களுக்கு மேல் இருக்க முடியாது. க்யூ சிறுத்தைப் புலியைப் போன்றவன். மோப்பம் பிடித்து விடுவான். அதோடு அவன் கையில் மிஷின் கன் இருந்தது. அந்தக் காடெல்லாம் அவனுக்கு அத்துப்படி. ஒவ்வொரு சீக்ரெட் ஏஜெண்டுக்கு சில துறைகளில் நல்ல பயிர்ச்சி இருக்கும். எந்தத் துறையில் தன்னை விட தன் எதிரி உயர்ந்தவனாய் இருப்பானோ, அந்த துறையில் அவனை எதிர்க்காமல் இருப்பதே நல்ல ஏஜென்டின் லட்சணம். இவ்விடத்தில் ஈகோ பிரச்சினை வரக் கூடாது.

நேத்ரா வேகமாய் நடந்தான்.

காய்ந்த சுள்ளிகள் அவன் காலடியில் உடைந்து கொண்டிருந்தன. மரக்கிளைகள் உடம்பைக் கீறிக் கொண்டிருந்தன. செடி கொடிகள் கால்களில் சுற்றிக் கொண்டன. ஆனாலும் அவன் நிற்கவில்லை. ஓட்டமும் நடையுமாய்ப் போய்க் கொண்டே இருந்தான்.

க்யூ குனிந்து தரையில் காதைப் பொருத்திக்கொண்டான். கண்களை மூடிக்கொண்டு இரண்டு வினாடிகள் சலனமில்லாமல் அப்படியே இருந்தான்.

இப்பொழுது நேத்ரா எந்த திசையில் எந்த வழியாய்ப் போகிறான் என்று மயிரிழை கூட பிசகாமல் அவனால் சொல்ல முடியும். அவன் எழுந்து நின்று மூச்சை இழுத்து விட்டுக் கொண்டான். அவன் உதட்டில் புன்னகை இன்னும் மாறவில்லை.

காட்டைப் பற்றி முழுவதும் தெரியாத நேத்ரா அந்தத் திசையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். அங்கே பள்ளத்தில் ஒரு நதி ஓடிக்கொண்டிருந்தது. அமேஜான், நைல் நதிகளைவிட பயங்கரமான நதி. அந்த நதிக்கு வலது பக்கத்திலிருந்து இன்னொரு கிளை நதி வந்து அதில் கலந்து கொண்டிருந்தது.

மலையடிவாரத்தில் சுமார் இருநூறடி ஆழத்தில் இவ்விரண்டும் ஓடிக்கொண்டிருந்தன. அவற்றைத் தாண்டிக்கொண்டு மறுபக்கத்திற்குப் போவது சாதாரண விஷயமல்ல. அதனால் நேத்ரா வேறு வழியில்லாமல் இடது பக்கமாகவே சென்றான்.

க்யூ அந்தப் பக்கமாய் கிளம்பினான்.

கொரில்லா முறை வேட்டையில் இந்த விதமான லாஜிக்தான் எல்லாவற்றையும் விட முக்கியமான பங்கு வகிக்கும். நேத்ரா அந்தக் காட்டிலேயே ஓரிடத்திலோ அல்லது மரத்தின் மீதோ இருந்து விட்டால் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டாற்போலத்தான். ஆனால் அவன் அவ்வாறு செய்ய மாட்டான் என்று க்யூவுக்குத் தெரியும். இன்னும் ஐந்து நிமிஷத்தில் விமானம் கிளம்பியதும் கார்டுகள் கிளம்புவார்கள். வேட்டை நாய்களுடன் அவ்வெல்லை எல்லாம் சல்லடைப் போட்டு சலித்துப் பார்த்து விடுவார்கள். அதற்கு அப்புறம் தப்பித்துக்கொள்வது கஷ்டம். கொஞ்சமாவது ரிஸ்க் எடுத்துக் கொள்ள வேண்டுமானால் தான் ஒருத்தன் மட்டும் இருக்கும் போதே எடுத்துக் கொண்டு விட வேண்டும். க்யூ நடக்கத் தொடங்கினான்.

அவனுக்கு மிக சந்தோஷமாய் இருந்தது. இந்தக் கடைசி போராட்டத்தைத் தாமிருவர் மட்டுமே தனியாய் நடத்த வேண்டி வந்ததற்கு சந்தோஷம் அடைந்தான்.

மேலும் ஒரு நிமிஷம் பயணம் பண்ணிய பிறகு அவன் நின்று பைனாகுலர் வழியாய்ப் பார்த்தான். தொலைவில் மரங்களுக்கு இடையே சலசலப்பு கேட்டது. ஜந்துக்களின் நடமாட்டத்திற்கும் மனிதனின் சந்தடிக்கு வித்தியாசம் தெரிந்துகொள்வது தனி ஒரு கலைதான். நேத்ரா நதியின் பக்கமாய்ப் போய்க் கொண்டிருந்தான்.

விமானம் புறப்படுவதற்கு இன்னும் நான்கு நிமிஷங்கள் இருந்தன.

க்யூ ஒரு பெரிய மரத்தின் மேல் மளமளவென்று ஏறினான்.

தான் போகும் வழியில் நதி குறுக்கே வந்ததும் நேத்ரா எப்படிச் செயலிழந்து போவான் என்பதைக் காணத் தவித்தான் க்யூ. மரத்தின் உச்சியில் உட்கார்ந்து

கொண்டு நேத்ராவை பார்த்துக் கொண்டிருந்தான். பைனாகுலரில் நேத்ரா தெளிவாகத் தென்பட்டுக் கொண்டிருந்தான். இன்னும் பத்தடி மேலே போய் விட்டால் மலையுச்சியை அடைந்து விடுவான். அங்கிருந்து மறுபக்கத்திற்கு வழியில்லை. இருநூறடி கீழே அதலபாதாளத்தில் ஓடிக் கொண்டிருக்கும் நதி. க்யூ சிரிப்பை அடக்கிக்கொண்டே பார்த்துக் கொண்டிருந்தான்.

நேத்ரா மலையுச்சியை அடைந்தான். குனிந்து கீழேயிருந்த நதியைப் பார்த்தான். ஆனால் அவன் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை. ஆழ்ந்து பெருமூச்சு விட்டுவிட்டு, இரு கைகளையும் மேலே நீட்டிக்கொண்டே ஒரு முறை நதியில் டைவ் செய்தான்.

தொலைவிலிருந்து பைனாகுலர் வழியாய் பார்த்துக் கொண்டிருந்த க்யூவின் முகத்தில் அதுவரை தவிழ்ந்து வந்த சிரிப்பு மாயமாகி விட்டது. வேகமாய் மரத்திலிருந்து இறங்கினான். நேத்ராவுக்கு நிச்சயமாக பைத்தியந்தான் பிடித்திருக்கிறது என்றெண்ணினான். அவ்வளவு வேகமாய் ஓடிக்கொண்டிருந்த நதிக்குள் அவ்வளவு உயரத்திலிருந்து குதிப்பது உண்மையிலேயே சாகசம்தான். கூரிய பாறையின் மேல் விழுந்திருந்தால் உயிர் போவது உறுதி. ஒருக்கால் பாறையின் மேல் விழாமல் அதிர்ஷ்டவசமாய் நீரில் விழுந்திருந்தாலும். கொஞ்ச தூரத்தில் ஒரு அருவி இருந்தது. அவ்விடத்திலாவது சாகப் போவது உறுதி. அங்கிருந்து கடல் வரையிலும் சுமார் பதினைந்தடி நீளமுள்ள முதலைகள் எப்படிப்பட்ட பிராணியாக இருந்தாலும் தம் பற்களால் கிழித்தெறியத் தயாராய் காத்திருக்கும். எல்லாத் தடைகளையும் மீறிக்கொண்டு கரை வரையிலும் போய்ச் சேருவதற்கு எந்த சக்தியாலும் முடியாது.

இருந்தும் ஏஜெண்ட் க்யூ நேத்ராவின் சாவையும் வாழ்வையும் விதிவசம் ஒப்படைத்துவிட்டுப் போய் விடவில்லை. அவன் சாவைக் கண்ணாரக் கண்டு மகிழவேண்டும் என்பது அவன் எண்ணம்.

க்யூ ஓட்டமாய் ஓடினான். காற்றினும் வேகமாய் ஓடினான். நேத்ராவின் உடல் அந்த நீரின் வேகத்திற்கேற்ப எவ்வளவு துரிதமாய் பயணம் பண்ணக் கூடும் என்றறிவான் அவன். பாறையில் மோதி உடல் கிழிந்தாலும், அருவியில் விழுந்து சிதறினாலும் குறைந்தது சிறு துண்டாவது நீரில் அடித்துக்கொண்டு வராமல் போகாது.

அவன் கரைக்கு வந்து சேர்ந்தான். உண்மையான கடல் சங்கமம் அது. நதி வேகம் தணிந்து கடலோடு கலந்து கொண்டிருந்தது.

கரையின் இரு பக்கங்களிலும் முதலைகள் மணலில் சோர்ந்து படுத்துக் கிடந்தன. சந்தடி கேட்டு மெதுவாய் நீருக்குள் இறங்கிப் போய் விட்டன. வெட்டி வீழ்த்திய பனை மரத்தின் அடிபாகத்தைப் போலிருந்தன அவை.

க்யூ நீரையே பார்த்துக் கொண்டிருந்தான். தொலைவிலிருந்து நீரில் வெள்ளையாய் ஏதோ அடித்துக்கொண்டு வருவது தென்பட்டது. அது நேத்ராவின் ஷர்ட்.

## 45

மேல் விளிம்பைப் பிடித்துக்கொண்டே, கீழேயிருந்த பாறையின் மேல் காலை ஊன்றி வைத்துக்கொண்டு மெல்ல மேலே வந்தான் நேத்ரா. அவன் உண்மையில் நீருக்குள் குதிக்கவில்லை.

ஓட்டமாய் ஓடி மலையுச்சியைப் போய்ச் சேர்ந்ததுமே அவன் நதியின் பேரிரைச்சலைக் கேட்டான். தான் வசமாய் மாட்டிக்கொண்டு விட்டோம் என்றெண்ணிக்கொண்டான். கீழே நதியைப் பார்த்ததுமே, அதில் குதித்தால் தன் மரணம் உறுதியென்று தெரிந்துவிட்டது. பின்னாலிருந்து க்யூ தன்னைப் பார்த்துக்கொண்டே இருப்பான் என்று தெரியும் அவனுக்கு. அவன் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. நிற்காமல் அதே வேகத்தில் மலையுச்சிக்குப் போய் கைகள் இரண்டையுமே மேலே தூக்கி காற்றில்

டைவ் செய்தான். நீரில் குதிக்கவில்லை. மூன்றடிகள் கீழே இருந்த பாறையின் மீது குதித்தான்.

இரண்டு நிமிடம் அவ்விடத்திலேயே இருந்துவிட்டு, மெதுவாய் தாலையைத் தூக்கிப் பார்த்தான்.

க்யூ மரத்திலிருந்து இறங்கி கரையை நோக்கி ஒடுவது தென்பட்டது. அவன் போய் விட்டான் என்று சந்தேகமின்றித் தெரிந்து கொண்டதும் ஷர்ட்டைக் கழற்றி நீருக்குள் போட்டான். வளைந்து ஓடிய நதியில் அது கரையைப் போய்ச் சேருவதற்கு இரண்டு மூன்று நிமிஷங்கள் பிடிக்கலாம் க்யூவின் ஆர்வத்தைத் தூண்டிவிட்டு அவனை அந்த விதமாய் தவறான வழியில் யோசிக்கும்படி செய்வதுதான் அவன் உத்தேசம். சுறுசுறுப்பு, ஆயுதபலம் இதெல்லாம் சீக்ரெட் ஏஜெண்டுகளுக்கு உடைமையாய் இருக்கலாம். ஆனால் எதிரியின் மனதில் உள்ளதை சரியாய் ஊகித்துக்கொண்டு, அந்த வழியிலேயே அவனை வீழ்த்தக் கூடிய விதத்தில் யோசிப்பது ஒன்றுதான் தொழிலில் முதல் இடத்தில் நிற்க வைக்கும்.

க்யூ ஓடிக் கொண்டிருந்த காலடிச் சத்தத்தோடு தன் நடை சப்தம் ஒன்றறக் கலந்து விடும் என்றறிவான் அவன். அவனுக் கரைக்கு வந்து சேர்ந்தான். விமானம் புறப்படுவதற்கு ஒரே ஒரு நிமிஷம்தான் இருந்தது. பிரளயம் வருவதற்கு முன்னால் ஏற்படும் நிசப்தத்தைப் போலிருந்தது அந்தப் பிரதேசம்.

தொலைவிலிருந்து நதியில் ஷர்ட் மிதந்து வந்து கொண்டிருந்தது தென்பட்டது. க்யூவின் பார்வை முழுவதும் அந்தச் சட்டையின் மீதே நிலைத்திருப்பதைக் கவனித்த நேத்ரா அடியெடுத்து வைத்துக்கொண்டே அவனை நெருங்கத் தொடங்கினான். அவன் கையில் மிஷின்கன் இருக்கும் வரையிலும் படகு மூலமாகவோ அல்லது காட்டு வழியாகவோ அவனிடமிருந்து தப்பித்துக்கொண்டு போவது முடியாத காரியம்! நேத்ரா இதையெல்லாம் செய்தது அவனை நிராயுதபாணியாக்கி விட வேண்டும் என்ற எண்ணத்தில்தான்.

தொலைவில் கப்பல் தென்பட்டது. அவனை நிராயுதபாணியாக்கி விட்டு கப்பலைப் போய்க் சேர்ந்து

விட வேண்டும்.

க்யூவை நெருங்க நெருங்க நேத்ராவின் இதயம் வேகமாய்த் துடித்தது.

நத்தையைப் போலப் பதுங்கி நிசப்தமாய் அடி மேலடி எடுத்து வைத்துக்கொண்டே இருந்தான்.

நதியை நோக்கித் திரும்பிய க்யூ திடீரென்று விழிப்படைந்தான். மணலில் நடந்து கொண்டிருந்த சப்தம் அவன் செவிகளில் பட்டது. எதிர்பாராத வேகத்தோடு சட்டென்று திரும்பினான். அதனால் சரியாய் அதே சமயத்தில் அவன் மேல் பாயவிருந்த நேத்ரா அப்படியே நின்று விட்டான்.

அவன் போட்ட திட்டம் தோற்று விட்டது. அவ்வளவு கிட்டத்தில் எதிரியைப் பார்த்து க்யூ கலக்கமடைந்தான். ஆனால் அது இமைக்கும் நேரம் மட்டுமே. மிஷின்கன்னால் குறிபார்த்தபடி, “குட்... வெரிகுட். கொரில்லா யுத்தத்தில் என்னை மிஞ்சியவர்கள் யாருமில்லை என்று எனக்கு ஒரு கர்வம் இருந்து வந்தது. இப்பொழுது அது போய் விட்டது. ஹாட்ஸ் ஆஃப் டு யுவர் பிளான்” என்றான் க்யூ. அவன் முகத்தில் உண்மையாகவே நேத்ரா தன்னை டிராப் பண்ணிய விதத்தால் வியப்பு கலந்த பாராட்டு தென்பட்டது.

“தாங்க்ஸ்! நீயும் இவ்வளவு ஜாக்கிரதையாய் இருப்பாய் என்று ஊகிக்கவில்லை நான்” என்றான்.

“பரஸ்பரம் பாராட்டிக் கொண்டாகி விட்டதல்லவா? இனி முற்றுப்புள்ளி வைப்போமா, உன் வாழ்க்கைக்கு?” சிரித்தான் க்யூ.

விமானம் புறப்பட்டுக் கொண்டிருந்த ஓசை கேட்டது. இம்முறை க்யூ பெரிதாய்ச் சிரித்தான்.

“பிளாக் ஈகிளின் வம்சம் உலகத்திற்கே தலைமை தாங்கப் போகிற நாள் நெருங்கி விட்டது. சரித்திரத்தில் புதிய திருப்பம் தொடங்க விருக்கிறது. இனிமேல் நாங்கள்தான் ராஜாக்கள்! சர்வாதிகாரிகள்! உங்கள் புராணத்தில் சுதர்சன சக்கரம் புறப்பட்டாற்போல் எங்கள் விமானம் இந்தியாவை நோக்கிப் புறப்படுகிறது. பின்னால் திரும்பி வானத்தில் பார். எந்த ஆபரேஷனுக்காக நீ வந்தாயோ, எதைக்

காப்பாற்றுவதற்காக நீ இவ்வளவு கஷ்டப்பட்டாயோ அந்த முயற்சியெல்லாம் புழுதியில் இரைத்த பன்னீராகப் போகிறது. அதைப் பார்த்துவிட்டு உயிரை விடலாம். திரும்பிப் பார்.”

நேத்ரா திரும்பி பிளாக் ஈகிள் இருத்த இடத்தை நோக்கிப் பார்வையைச் செலுத்தினான். அங்கிருந்து விமானம் மேலே எழும்பிக் கொண்டிருந்தது மரத்திற்கு மேலாகத் தெரிந்தது.

தனக்குப் பின்னால் நின்ற் கொண்டிருந்த க்யூ அந்த விமானம் இருந்த திசையில் பார்வையைச் செலுத்தவில்லை என்றும், தன்னையேதான் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்றும் தெரியும் நேத்ராவுக்கு. எதிரியிடமிருந்து பார்வையைத் திருப்புவது எந்த நிலையிலும் ஆபத்துதான். அதுவும் க்யூவைப் போன்றவர்கள் எந்த நிலையிலும் அப்படிப்பட்ட காரியங்களை மட்டும் பண்ண மாட்டார்கள். ஆனால் க்யூவும் சாதாரண மனிதன்தான். அடுத்த நிமிஷம் நிகழப் போகும் அந்த சம்பவத்திற்காக நரம்புகளை எல்லாம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு தயாராய்க் காத்திருந்தான் நேத்ரா.

*****

இங்கே இது நடந்து கொண்டிருந்த அரை நிமிடத்திற்கு முன்னால்...

“த்ரீ ... டூ... ஒன்..... ஜீரோ”

என்று எண்ணி முடித்ததும் விமானம் ரன்வேயில் புறப்பட்டது. ரன் வே இருந்ததால்தான் அதை விமானம் என்று சொல்லலாமே தவிர இல்லாவிட்டால் அது ராக்கெட்டைப் போலத்தான் இருந்தது. சாதாரண ஜெட் விமானங்களைப் போல் காற்றை இழுத்துக்கொள்வதோடு மட்டுமின்றி, ராக்கெட்டை வெடிப்பதன் மூலமாகவும் வேகத்தைக் கட்டுப்படுத்தும் மினி சூப்பர்சானிக் விமானம் அது. ஒலி வேகத்தை விட சுமார் ஒன்றரை மடங்கு வேகத்துடன் பிரயாணம் பண்ணும் அந்த விமானத்தோடு காட்ஜெட் கூட சேர்ந்து விட்டதால் இனி அது இருக்குமிடத்தை யாராலுமே கண்டுபிடிக்க முடியாது. பிளாக் ஈகிள் டி.வி.யில்

விமானம் கிளம்பிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தான். எல்லா ஆணைகளையும் தந்துவிட்டான். உலகத்தையே தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்குத் தன் சார்பில் தூது போய்க் கொண்டிருந்த அந்த விமானத்தையே திருப்தியோடு பார்த்தபடி விமானத்தை ஒட்டிக்கொண்டிருந்த நபருக்கும் கண்ட்ரோல் டவருக்கும் இடையே நிகழ்ந்து கொண்டிருந்த உரையாடலை கேட்டுக் கொண்டிருந்தான்.

“ஸ்பீட்-300 கிலோ மீட்டர். உயரே கிளம்பிக் கொண்டிருக்கிறேன்.”

“கோ அஹெட்.”

விமானம் உயரே எழுந்தது. மரத்தின் மேலாகப் பறந்தது. அதைத் தான் கடற்கரையிலிருந்து நேத்ரா பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு இரண்டடிகள் பின்னால் க்யூ நின்று கொண்டிருந்தான்.

“கடவுளைத் தொழுதுகொள் நேத்ரா. இன்னும் ஒரே ஒரு நிமிஷம்தான் இருக்கு உன் உயிர் போவதற்கு.”

நேத்ரா மூச்சை இழுத்து விட்டுக்கொண்டான். விமானம் புறப்பட்டது. அவனுக்குக் கூட இன்னும் அரை நிமிஷந்தான் நேரம் இருந்தது.

விமானத்தின் கீழ்ப்பாகத்தில் விஷவாயு சம்பந்தப்பட்ட சிலிண்டர் இருந்தது. மறுபக்கத்தில் ராடாரின் காட்ஜெட் இருந்தது. சோ வின் உருவத்தில் பிளாக் ஈகிளுக்கு நேத்ரா வழங்கிய காட்ஜெட் அது.

விமானம் காற்றில் எம்பியதுமே அவ்விரண்டும் மிகத் தெளிவாய் தென்பட்டன.

“அன் கவர் தி காட்ஜெட்” கண்ட்ரோல் ரூமிலிருந்து ஆணை போயிற்று.

பைலட் சுவிட்சைப் போட்டான். காட்ஜெட்டின் மேலேயிருந்த கவசம் திறந்து கொண்டது.

“ஆக்டிவேட் தி காட்ஜெட்.”

பைலட் இன்னொரு பட்டனை அழுத்தினான்.

அப்பொழுதுதான் வெடிப்பு உண்டாயிற்று!

பூமியே நடுநடுங்கிப் போனாற்போலவும், தீவிலுள்ள சக ஜீவராசிகளும் ஒடுங்கிப்

போனாற்போலவும், பெருத்த ஓசையுடன் விமானம் வெடித்துச் சிதறிற்று. காட்ஜெட்டைப் பரிசீலித்துவிட்டு, அது சரியானதுதான் என்ற முடிவிற்கு வந்து, சயின்டிஸ்ட் வேஷத்தில் நேத்ரா தந்த வெடிகுண்டு, விமானத்தோடு சேர்ந்து பயணம் பண்ணி அதைத் தூள் தூளாக்கி விட்டது.

அந்த சப்தம் வானத்தில் கேட்டதுமே நேத்ரா விருட்டென்று திருபினான். தன் சக்தியை எல்லாம் திரட்டிக்கொண்டு சப்தத்தைவிட வேகமாகவும், பார்வையை விட துரிதமாகவும் சரேலென்று திரும்பி அதே வேகத்துடன் க்யூவின் கையிலிருந்த மிஷின் கன்னைத் தட்டி விட்டான்.

உண்மையில் நேத்ரா அதுவரை அந்த நேரத்திற்காகத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். காற்றில் எழும்பியதுமே வெடித்துவிடும் என்று தெரியும். எப்படிப்பட்ட நபராய் இருந்தாலும் சரி, அந்த மாதிரி வெடி ஒன்றை நிமிர்ந்து ஒரு வினாடியாவது பார்க்காமலிருந்து விட முடியாது. அதனால்தான் நேத்ரா வானத்திலிருந்து அந்த வெடிச் சத்தம் கேட்டதுமே, திரும்பி மின்னல் வேகத்துடன் செயல்பட்டான்.

சீக்ரெட் ஏஜெண்டாக தன் சர்வீசிலேயே க்யூ செய்த தவறு அதுதான். எதிரியின் மீதிருந்து பார்வையைத் திருப்பிக்கொண்டது.

அவன் கையிலிருந்து மிஷின்கன் துள்ளி மணலில் விழுந்தது. நேத்ரா அதைக் கையில் எடுக்கப் போனான். க்யூ காலால் அதை தொலைவிற்குத் தள்ளிவிட்டு, அவன் மேல் பாய்ந்தான். மணலில் புரண்டு கொண்டே இருவரும் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டார்கள். அங்கிருந்து உயிருடன் வெளியேறும் அவகாசம் யாரோ ஒருவருக்கு மட்டுமே இருக்கிறது என்று இருவருக்குமே தெரியும். உயிருக்காக உயிரையும் பொருட்படுத்தாமல் இருவரும் போராடிக் கொண்டிருந்தார்கள்.

இங்கே இந்த யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்த அதே சமயத்தில் அங்கே சூழ்நிலை அல்லோல கல்லோலமாய் இருந்தது. விமானம் வெடித்த சப்தத்திற்கு பிளாக் ஈகிள் அதிர்ந்து விட்டான். ஒவ்வொரு பொருளாய் காற்றில்

பறந்து பூமியில் விழுந்து கொண்டே இருந்தது. கத்தலும் கூச்சலும் தோன்றின.

இத்தனை நாளாய் தான் பட்ட பாடெல்லாம் தன் கண் முன்னாடியே இவ்வாறு ஆகி விட்டதற்கு அவன் ஆவேசத்தால் பதறினான். தவறு எப்படி நடந்தது என்றுதான் புரியவில்லை அவனுக்கு. கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அந்த நஷ்டத்தைப் பற்றிக்கூடக் கவலைப்படவில்லை. இன்னொரு விமானத்தை அனுப்பி ஈடுகட்டிக்கொண்டு விடலாம். இந்திய கப்பற்படையும், விமானப் படையும், இந்தத் தீவைக் கைப்பற்றிக் கொள்ளும் முன்பே அது நிகழ்ந்து விட வேண்டும்.

தன்னுடைய ஆட்களுக்கு ஆணையிடுவதற்கு அவன் ரன்வே நோக்கி வந்தான். அங்கிருந்து இன்னும் நூறடி தூரத்தில் இருக்கும்போது சட்டென்று நின்று விட்டான்.

தொலைவில் மக்கள் ஸ்லோ மோஷனில் சினிமாவில் வருவது போல் சோர்ந்து விழுந்து கொண்டிருந்தார்கள். அவன் அதிர்ச்சியடைந்தான். அந்த விஷயம் அதுவரைக்கும் அவன் புத்திக்கு எட்டவே இல்லை.

விமானத்தோடு விஷவாயு சிலிண்டர் கூட வெடித்து விட்டது!

அவன் பின்னால் திரும்பி ஓடத் தொடங்கினான். பலத்தை எல்லாம் திரட்டிக்கொண்டு ஓடத் தொடங்கினான். பின்னாலிருந்து விஷவாயு அவ்வெல்லை எல்லாம் பரவிக்கொண்டே வந்து கொண்டிருந்தது. அவன் ஆட்களும், சயின்டிஸ்ட்டுகளும், பிறரும் சருகாய் துவண்டு விழுந்து கொண்டிருந்தார்கள். ஆண்டுகணக்காய் பாடுபட்டு தான் ஏற்படுத்தியிருந்த சாம்ராஜ்ஜியம் கண்முன்பாகவே சிதைந்து போய்க் கொண்டிருக்கையில் அவன் ஓடிக்கொண்டே இருந்தான்.

இன்னும் பத்தடி தூரத்தில் ஏர் டைட் சேம்பர் இருந்தது. அதற்குள் நுழைந்து சீல் பண்ணிக்கொண்டு, அத்தீவிலிருந்து வாயுப் பிரபாவம் தொலைவாக போய்ச் சேரும் வரையிலும் அதிலேயே இருந்துகொண்டால்

பிழைக்கலாம். அவன் மேலும் நாலடி எடுத்து வைத்தான். அவனோடு கூட இன்னும் நாலைந்து பேர், அந்த கண்ணாடிச் சேம்பரை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார்கள். உயிர் பயம் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் பார்க்காது. அவர்கள் அவனைப் பின்னுக்குத் தள்ள முயன்றார்கள். ஆனால் அவர்கள் அவன் பலத்தைக் குறைவாய் எடை போட்டு விட்டார்கள். இரண்டு அடி கொடுத்து அவர்களை வீழ்த்தித் தள்ளினான். அதனால் இன்னும் இரண்டு வினாடிகள் தாமதமாகி விட்டன. எழுந்து திரும்பவும் கண்ணாடிச் சேம்பரை நோக்கி ஓட்டம் பிடித்தான். சேம்பர் இன்னும் ஓரடி தூரத்தில் இருந்தது.

அவன் அதன் கதவிலிருந்த பிடியைப் பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்த போதுதான் அது நடந்தது. முதலில் தலை சுற்றுவது போலவும், பிறகு தாங்க முடியாத சோர்வும், இதயத்திலிருந்து திடீரென்று காற்றையெல்லாம் வெளியே உறிஞ்சி எடுத்து விட்டாற் போலவும் இருக்க, அவன் கண்கள் மூடிக் கொண்டன.

மேலும் ஓரடி... ஒரே ஒரு அடி... மூச்சை இழுத்து அடக்கிக்கொண்டு கைப்பிடியைப் பிடித்து இழுத்தப் போனபொழுது அதற்குக் கூட ஆயிரம் யானை பலம் வேண்டும் போலிருந்தது.

அந்தச் சோர்வில் அவன் அப்படியே முழங்காலிட்டுச் சரிந்து விட்டான். இதெல்லாம் இரண்டே வினாடிகளில் நடந்து முடிந்து விட்டன.

இமைகள் முற்றிலுமாய் மூடிக்கொள்ளவில்லை. கண்கள் நிலை குத்தினாற்போல் பார்த்துக்கொண்டே இருந்தன. உயிர் மட்டும் இருக்கவில்லை. உலகத்தையே தன் ஆதீனத்தின் கீழ் கொண்டு வருவதற்காக மனிதநேயத்தை விடுத்து, பிரளய கால அழிவை உருவாக்க முயன்ற அந்தக் கொடியவன், அவ்விதியின் கைகளிலேயே உயிரை விட்டான். அவனை விழுங்கிய விஷவாயு, எஞ்சியவர்களை நாடி உள்ளே நுழைந்தது.

இங்கே இவ்விதமாய் இந்த மரண ஹோமம் நிகழ்ந்து கொண்டிருந்த சமயத்தில் அங்கே க்யூவுக்கும் நேத்ராவுக்கும் இடையே உயிருக்காக இன்னும் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. மிஷின் கன்னைக் கையில் எடுத்துக் கொள்வதற்காக இருவரும் போராடிக் கொண்டிருந்தார்கள். மணலில் புரண்டு கொண்டிருந்தார்கள். க்யூவின் கைகள் நேத்ராவின் கழுத்தைச் சுற்றி நெரித்துக் கொண்டிருந்தன. நேத்ராவின் கை அவனைத் தடுத்துக் கொண்டிருந்தது. கடலில் கரையோரத்தில் இருந்த முதலைகள் கூட அசல் தம் போராட்டத்தைப் போலவே நிகழ்ந்து கொண்டிருந்த அந்த யுத்தத்தைக் கண்கூடாய்ப் பார்த்துக் கொண்டிருந்தன.

அதற்குள் நேத்ரா தன் கையைத் தளர்த்தினான். க்யூ அதைப் பயன்படுத்தி அவன் கழுத்தை மேலும் பலமாய் அழுத்தப் போனான்.

நேத்ரா கையைத் தரையில் ஊன்றி வேகமாய் மண்ணை மேலுக்குத் தள்ளினான். க்யூவின் கண்களில் மண் விழுந்தது. அந்த மயிரிழை நேரத்தில் நேத்ரா அவன் முகத்தின் மீது மின்னலாய் ஒரு குத்து விட்டான். க்யூ கீழே சரிந்தான். அடுத்த வினாடி நேத்ராவின் கைக்கு வந்தது மிஷின்கன். சட்டென்று எழுந்து நின்றான்.

க்யூ இன்னும் தரையில் விழுந்து கிடந்தான். இருவர் பார்வையும் கலந்தன.

“கொன்றுவிடு” என்றான்.

நேத்ரா பதில் பேசவில்லை. அவனை அப்படியே குறி வைத்தபடியே கடலை நோக்கி நடந்தான். அவன் கையிலிருந்து மிஷின்கன் திடீரென்று முழங்கியது. படகுகள் அத்தனையும் உடைந்து விழுந்தன. ஒரே ஒரு படகு மட்டுமே எஞ்சி நின்றது. க்யூ புரியாமல் விழித்தான்.

நேத்ரா படகில் ஏறி அதைக் கிளப்பினான். “குட் பை மிஸ்டர் க்யூ.”

க்யூ இன்னும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிய சந்தேகம் அவன் மனதில் முனைவிட்டு, காற்றைப் போலப் பரவிற்று. திரும்பிப் பார்த்தான்

பின்னால்.

விமானம் வெடித்த இடத்திலிருந்து கரிய நிறப் புகை மேலே சூழ்ந்து கொண்டிருந்தது. அது அவ்வளவு ஆபத்தானது இல்லை. நிறமற்ற ஆபத்து முன்னோக்கி வந்து கொண்டிருந்தது அவ்விடத்திலிருந்துதான். அவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

நேத்ரா கையை ஆட்டி, “நான் போகிறேன் க்யூ. காற்று உனக்கு உதவி புரிய எண்ணினால் இந்தத் திசையை நோக்கி வராது. வந்துவிட்டாலோ..” என்று நிறுத்தினான். “நீ எங்கள் மரணத்தைப் பற்றி நிறையவே பேசினாய். பிரம்மாஸ்திரம் என்றாய். சுதர்ஷன சக்கரம் என்றாய். நீ மகா பாரதத்தை முற்றிலும் படித்தாயா இல்லையா என்று எனக்குத் தெரியாது. கடைசியாய் துரியோதனன் ஜலஸ்தம்பன வித்தை கைப்பற்றினான். அந்த விதமாய் நீ காற்றின் தேவையில்லாமல் இந்தத் தீவில் கொஞ்ச நாள் இருந்தால்தான் முடியும். அதற்காக விஷவாயு தீவை விட்டுப் போகும் வரையில் கடலில் ஒளிந்து கொண்டிருக்க வேண்டியிருக்கும். சுறா மீன்கள், முதலைகள் இவற்றின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டியிருக்கும். அல்லது அதற்குள்ளாகவே ஆக்சிஜன் சிலிண்டர் தேடிக்கொள்ள வேண்டியிருக்கும். பிழைத்திருந்தால் திரும்பவும் சந்தித்துக் கொள்வோம். போய் வருகிறேன்.”

“நோ... நோ...” கத்திக்கொண்டிருந்தான் க்யூ. ஏதோ ஆபத்தை ஊகித்துக்கொண்டாற்போல் முதலைகள் நீருக்குள் நழுவிக் கொண்டிருந்தன. நேத்ராவின் படகு கப்பலை நோக்கி மெதுவாய் போகத் தொடங்கிற்று.

*****

பைனாகுலர் வழியாய் கடலையே பார்த்துக் கொண்டிருந்த பிரதிமா, தொலைவிலிருந்து படகு வருவது தென்படவே, நீருக்குள் கயிற்றுப் பாலத்தைப் போட்டாள். நேத்ரா அதைப் பிடித்துக்கொண்டு, “கிவிக்!” என்று கத்திக்கொண்டே ஓடினான்.

“என்னவாச்சு?” பிரதிமா கேட்டுக் கொண்டே இருந்தாள்.

அவன் பதில் சொல்லாமல் ஸ்டோர் ரூமிற்குள் நுழைந்தான். அவ்விடத்தில் ஆக்சிஜன் மாஸ்க்குகள் இருந்தன. இரண்டை எடுத்து அவ்விருவருக்கும் கொடுத்துவிட்டு தானும் ஒன்றைப் போட்டுக்கொண்டு மிஷினிடம் போனான்.

இரண்டு நிமிஷத்தில் கப்பல் புறப்பட்டது.

தீவை விட்டு தொலை தூரத்திற்கு அதை செலுத்திக்கொண்டே அவன் யோசித்தான். உடைந்த விஷவாயு சிலிண்டருக்கு எவ்வளவு கொள் அடர்த்தி இருந்திருக்கும்? காற்று எவ்வளவு வேகத்துடன் எந்தத் திசையாய் வீசுகிறது? ஆபத்தான எல்லை எவ்வளவு தூரம் வரைக்கு பரவியிருக்கும்?

கணக்கிட முயன்றான். முடியவில்லை.

சுமார் நான்கு மணி நேரம் பயணம் செய்தது கப்பல். நேத்ரா தான் இருந்த இடத்தைப் பதறித் தெரிவித்த பிறகு ஒயர்லெஸ் மூலமாய் செய்தி வந்தது. இந்தியாவின் கப்பல் படையைச் சேர்ந்த நீர் மூழ்கிக் கப்பலிலிருந்து, “நாங்கள் இதற்கு வெகு அன்மையில்தான் இருக்கிறோம். கண்கிராசுலேஷனஸ்!” என்று.

“நடந்தது எல்லாம் உங்களுக்கு தெரிந்து விட்டதா?” டெலிகிராஃபிக் கோட் மூலமாய்க் கேட்டான்.

“நீங்கள் இனி அந்த ஆக்சிஜன் மாஸ்கை எடுத்து விடலாம்.”

“அந்த விஷவாயு?”

“அது தென்திசையாய் போய்க் கொண்டிருகிறது. அந்தப் பக்கத்தில் ஆயிரம் கிலோ மீட்டர்கள் தூரம் வரையிலும் எந்த தீவும் இல்லை. அதற்குள் அதன் கடுமை முற்றிலும் குறைந்து போய் விடும்.”

மூவரும் மாஸ்குகளைக் களைந்தார்கள்.

“நீங்கள் தீவுக்கருகில் எப்படி வந்தீங்க?’ எப்பொழுதும் போல் சாதாரணமாய் அவர்களுடன் ஒயர்லெஸ்ஸில் பேசத் தொடங்கினான் நேத்ரா.

“பிளாக் ஈகிள் நம் நாட்டிற்கு மிரட்டல் கடிதம் அனுப்பினான். எங்களோடு கூட சயிண்டிஸ்டுகளும் வந்தார்கள். அவன் விமானத்தை தகற்பதற்காக

புறப்பட்டோம். நாங்கள் இங்கே வந்து சேருவதற்கு இவ்வளவு நேரமாயிற்று. அதற்குள் நீங்களே வேலையை முடித்து விட்டீர்கள். நீங்கள் மட்டும் இந்த ஆபரேஷனை முடித்திருக்காவிட்டால் இதற்குள் இந்தியா அவன் வசமாகி விட்டிருக்கும். அதுசரி, எங்களோடு சேர்ந்து வந்த சயின்டிஸ்களுள் சுவர்ணரேகாவும் இருக்கிறாள். சமீபத்தில்தான் அவள் ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆனாள். அவள் உங்களோடு பேச விரும்புகிறாள்."

"ஹலோ!"

"சுவர்ணா! உடல்நிலை எப்படி இருக்கிறது?"

"சௌக்கியமாய் இருக்கிறேன். உங்களுக்கு என் நன்றியை எப்படித்தான் தெரிவித்துக் கொள்வது என்று புரியவில்லை. பிளாக் ஈகிள் மட்டும் வெற்றியைச் சாதித்திருந்தான் என்றால் அந்தக குற்ற உணர்வு, உலகத்திற்கு நான் பண்ணிவிட்ட துரோகம் என்னை வாழ்நாளெல்லாம் துளைத்தெடுத்துக்கொண்டே இருந்திருக்கும்."

"நான் என்ன பண்ணி விட்டேன் சுவர்ணா?"

"ஆணின் மேல் நம்பிக்கை ஏற்படும்படி பண்ணியது! அது போதாதா? பை தி பை, அம்சரேகா எங்கே இருக்கிறாள்?"

"எனக்குப் பக்கத்தில்தான் நின்றுகொண்டு இருக்கிறாள்."

"மை காட்! உங்கள் பக்கத்திலா? ஒரு முறை போனை அவளிடம் சகொடுங்கள். அதுசரி, அவளிடம் எல்லாவற்றையும் சொல்லிட்டீர்களா?"

"இல்லை."

"இன்னும் கர்ப்பவதி என்றுதான் நினைத்துக் கொண்டு இருக்கிறாளா?" உணர்ச்சி பரபரப்போடு கேட்டாள், ஒயர்லஸ் செட் உடைந்து விடும்போல்.

"ஆமாம்."

"ஒரு தடவை அவளிடம் கொடுங்கள்."

அம்சரேகாவின் செவிகளில் ஹெட்போன் பொறுத்தப் பட்டது. நேத்ரா பிரதிமாவுடன் வெளியே வந்தான்.

கடல் அமைதியாய் இருந்தது. இலேசான அலைகள் ஷிஃபான் புடவையின் மடிப்புகளைப் போல் இருந்தன. நடுப்பகல் சூரியன் அழகான பெண்ணின் கோபத்தைப் போல் இருந்தான். நீரிலிருந்து வந்து வீசிய காற்று, கலையைப் பற்றித் தெரிந்த இளைஞன் ஒருவனின் கவிதையைப் போல் இருந்தது. இந்தப் பக்கத்தில் ஒரு அலை, நடுவில் படகு. இரு பெண்களுக்கு நடுவில் இருக்கும் இளைஞனைப் போல் அப்படியும் இப்படியுமாய் ஆடிக்கொண்டிருந்தது.

“ஒயர்லெஸ்ஸில் இரண்டு பேரும் இவ்வளவு நேரமாய் என்னதான் பேசிகொண்டு இருக்கிறார்கள்?” ரெயிலிங்கில் சாய்ந்து கொண்டே கேட்டாள் பிரதிமா.

“கர்ப்பத்தைப் பற்றி, அதன் வரலாற்றினை பற்றி, அதற்காகப் மேற்கொள்ள வேண்டிய விரதங்களைப் பற்றியெல்லாம் ஆயிரம் மைல்கள் தொலைவில் உள்ள நீர்மூழ்கி கப்பலிலிருந்து ஒயர்லஸ் மூலமாய் தங்கைக்கு சாவதானமாய் அக்கா விவரித்துச் சொல்லிகொண்டு இருக்கிறாள்” என்று சொல்லிவிட்டு உள்ளே போனான் நேத்ரா.

அம்சரேகா அப்பொழுதுதான் பேசி முடித்திருந்தாள். உள்ளே நுழைந்த நேத்ராவைப் பார்த்தாள்.

அவள் கண்களில் நீர்.

“அக்கா எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள்” என்றாள்.

“அதற்கு அவ்வளவு துக்கம் எதற்கு? அது ஒன்றும் அவ்வளவு கஷ்டமான காரியம் இல்லை” என்றான்.

அவள் அந்த ஜோக்கைக் கேட்டுச் சிரிக்கவில்லை. அருகில் வந்து அவன் கைகளை தன் கையில் எடுத்துக்கொண்டாள்.

“உண்மையில் மனிதர்களுக்குள் இவ்வளவு உயர்ந்தவர்கள்கூட இருப்பார்கள் என்றும், காதல் என்பது இவ்வளவு உயர்ந்தது என்றும் எனக்கு இப்பொழுதுதான் தெரிந்தது” என்றாள்.

அதகுள் கப்பலின் சைரன் ஓசை காதைப் பிளக்குமாறு கேட்டது. அவன் திடுக்கிட்டுக் கீழே

ஓடினான்.

இஞ்சின் அறைக்குள் பிரதிமா இருந்தாள்.

“நீயா?’ என்றான்.

“ஆமாம். நான்தான். வேற்றுப்பெண் ஒருத்தி உன் கைகளை அப்படிப் பிடித்துக் கொண்டிருப்பதை என்னால் காண சகிக்கவில்லை. அதனால்தான் டிஸ்டர்ப் பண்ணினேன்.”

“வேற்றுப்பெண்ணா?”

“நம்மிருவருக்கும் சீன சம்பிரதாயப்படி திருமணம் நடந்த விஷயத்தை மறந்து விட்டாயா?”

அவன் பதில் பேசவில்லை. அவள் அவனிடம் நெருங்கி வந்து, “இந்த விஷயத்துக்கு இப்பொழுதாவது ஒரு முடிவு கட்டாமல் இருக்க முடியாது. உன் மனதில் என்னதான் இருக்கு என்று சரியாய் சொல்லு” என்றாள்.

“இந்த விஷயத்தைப் பற்றி நான் கூட யோசித்தேன். எனக்கும் எதுவுமே புரியவில்லை. அதனால் தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டேன்.” அப்பாவியாய்ச் சொன்னான்.

“சீக்ரெட் ஏஜெண்ட் தெய்வத்தைப் பிரார்த்திப்பதா?”

“நான் ஒன்றும் ஜேம்ஸ்பாண்ட் இல்லையே? பாட்டி, தாத்தா, கண்ணீர்கள், கொஞ்சம் செண்டிமெண்டுகள் இதெல்லாம் உள்ள சாதாரண மனுஷன். ஆபரேஷன் பிளாக் ஈகிளுக்காக வரும் போது ரிவால்வருடன் கூட பாட்டிலில் பருப்புப் பொடியும் ஊறுகாயும் கொண்டு வந்தவன்.”

“சரி தெய்வத்தை வேண்டிக்கொண்டாய். ஒப்புக் கொள்கிறேன். இத்தனைக்கும் உன் பிரச்சனை தான் என்ன?”

“யாரைப் பண்ணிப்பது என்று. இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும்படி கடவுளையே கேட்டேன். மூன்று வழிகள் இருப்பதாய் சொன்னார். அவற்றுள் ஒன்று, இந்த விவகாரம் முடிவடைவதற்குள் எடுத்துச் சொல்லுவதாய் சொன்னார். முதலாவது இந்த ஆபரேஷனில் நான் தோற்றுப் போய் இறந்து போவது.”

“அமங்களம் நடக்காமல் போகக் கடவதாக!”

“நான் இறந்து விட்டால் யாரை பண்ணிக்கொள்வது என்ற கேள்விக்கு இடமில்லை அல்லவா? ஆனால் கடவுளுக்கு அதில் விருப்பமில்லை. அதான் என்னைக் காப்பாற்றி விட்டார். இனி இரண்டாவது, உங்களிருவரில் ஒருத்தர் தியாகம் பண்ணுவது.”

“அல்லது சாவது.” வெறுப்போடு சொன்னாள்.

“நீ என்ன வேண்டுமானாலும் நினைத்துக்கொள். அதுகூட கடவுளுக்குப் பிடிக்கவில்லை. அவருக்குப் பிடித்தது மூன்றாவது வழிதான்.”

“அதென்னது?”

“கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் உனக்கே புரியும்,”

பிரதிமாவுக்குப் புரிந்துகொள்ள இரண்டு வினாடிகளும், கதவுக்கு மறைவில் நின்று கொண்டிருந்த அம்சரேகாவுக்குப் புரிவதற்கு இரண்டு நிமிஷங்களும் பிடித்தன. புரிந்து கொள்வதற்கு ஆகும் நேரம் அவரவர்களின் ஐ க்யூ வின் மீது ஆதாரப்பட்டிருக்கும்.

நிறைவு பெற்றது